# நாமக்கல் கவிஞர் பாடல்கள்

(தொகுப்பும் குறிப்பும்)



தொகுப்பாசிரியர் :

**புலவர். சிவ. கன்னியப்பன்,** எம்.ஏ.,பிலிட்.,

# நாமக்கல் கவிஞர் பாடல்கள்

(தொகுப்பும் குறிப்பும்)

தொகுப்பாசிரியர் :

*புலவர். சிவ. கன்னியப்பன்,* எம்.ஏ.,பி.எட்.,

பூம்புகார் பதிப்பகம்
63, பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை - 600 108.
தொலைபேசி : 5267543

விலை ரூ. **100/-**

பூம்புகார் வெளியீட்டு எண் : 489
முதற் பதிப்பு : ஆகஸ்ட் 2001
உரிமை : பூம்புகார் பதிப்பகத்தார்

அச்சிட்டவர்கள் : ஈகிள் பிரஸ், சென்னை - 600 013.



கவிஞர் நாமக்கல் இராமலிங்கம்

# முன்னுரை

உலகில் பல்வேறு இயக்கங்கள் தோன்றித் தத்தம் கொள்கைகளை நிறைவேற்றியுள்ளன. அவற்றுள் இந்திய வரலாற்றில் திலகர் சகாப்தம் என்பது ஒன்று; காந்தி சகாப்தம் என்பது மற்றொன்று. அந்நாளில் இவ்விரு சகாப்தங்கள் உருவாயின. காந்தி சகாப்தமானது விடுதலை இயக்கத்தோடு சேர்ந்து கிளை இயக்கங்கள் பல தோன்றின. அவை கதர் வளர்ச்சி இயக்கம், தீண்டாமை ஒழிப்பு இயக்கம், அகிம்சை பிரசார இயக்கம் என்பனவாகும். இவை அத்தனைக்கும் பாடல்களைப் புனைந்து அளித்த பெருமை கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களையே சாரும்.

பிள்ளை அவர்கள் மக்கள் கதர் அணிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பல பாடல்களைப் பாடியுள்ளார். கதர்சேலையைப் பெண்கள் அணியாததற்குக் காரணம் அது மிகவும் தடிப்பாகச் சால்வையைப்போல் இருந்தது. அவற்றை விற்பதற்காகக் கவிஞர் ஒரு பாடலும் எழுதிக் கொடுத்தார்.

கதர்த்துணி வாங்கலையோ ஐயா அம்மா
கதர்த்துணி வாங்கலையோ?
ஏழைகள் நூற்றது எளியவர் நெய்தது
கூழும் இல்லாதவர் குறைபல தீர்ப்பது
கதர்த்துணி வாங்கலையோ?

என்பது அப்பாடலாகும்.



1934இல் காந்தியடிகள் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை விடுதலை இயக்கத்தோடு இணைத்தபோது அதற்கெனவும் பாடல்கள் புனைந்து அளித்தார் நாமக்கல் கவிஞர்.

வேதத்தில் இல்லை கீதையில் இல்லை
வேறுள சாத்திரம் யாருக்கினி?
சாதித்து யாரையும் சண்டாளன் என்றிடும்
சாத்திரம் சத்தியச் சம்மதமோ?

எனத் தீண்டாமை ஒழிப்பைப் பற்றிப் பாடியுள்ளார்.

அகிம்சையைப் பற்றிப் பாடும்போது காந்தியடிகள் என்னும் தலைப்பின்கீழ் காந்தி வழி என்னும் பகுதியில் கூறியிருப்பதாவது,

கொல்லா(து) இருப்பது ஒன்றேதான்
கூறும் அகிம்சை என்றல்ல
எல்லாச் சொல்லும் நன்னோக்கம்
இணைந்த(து) அகிம்சை தன்னோக்கம்

எனப் பாடிப் போந்துள்ளார்.

"அவளும் அவனும், தமிழன் இதயம், சங்கொலி, காந்தி அஞ்சலி" போன்ற பாடல்கள் படித்து இன்புறத் தக்கன.

மகாகவி பாரதியார்மீது "படித்தறியா மிக ஏழைக் கிழவனேனும்" என்று தொடங்கும் பாடலானது பாரதியின் தரத்தையும் திறத்தையும் அளந்து காட்ட வல்லதாகும்.

"மடமையதோ பிறநாட்டார் மயக்கந்தானோ?" என்ற தொடக்கத்தைக் கொண்ட வ.உ.சி. பற்றிய பாடல் தொகுப்பானது அவரது புகழைப் பரப்புவதாகும்.

"காந்தி வழி பழசா?" என்று தாமே வினா எழுப்பி அதற்கு விடையளிக்கும் வகையிலே பல பாடல்கள்

புனைந்தளித்தார். "பெற்றெடுத்த தாய் மிகவும் பழசாய்ப் போனாள்" என்றும் தொடங்கும் இருவேறு பாடல்கள் சிறப்பு வாய்ந்தன.

இந்நூல் தொகுப்பினை நன்முறையில் அச்சிட்டு உதவிய பூம்புகார் பதிப்பகத்தார்க்கும் இந்நூல் வெளியிடுவதற்குப் பல்லாற்றானும் உதவிபுரிந்த அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பாடல் தொகுப்பில் கூறப்பட்டுள்ள சீரிய கருத்துகள் அனைத்தும் நாட்டின் நலங்கருதிப் பாடப்பட்டுள்ளனவாகும். அவற்றைத் தெளிந்து கற்றுணர்ந்து நற்பயன் பெறுவீராக!

**சிவ. கன்னியப்பன்**

# நாமக்கல் கவிஞர் வாழ்க்கை வரலாறு

தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவிலூர் அருகிலுள்ள பரனூர் என்ற கிராமத்தில் வெங்கட்ராமப் பிள்ளை பிறந்தார். அங்கே கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அதனால் பிழைப்புக்காகச் சேலத்துக்கு வந்தார். சேலத்தில் பல உறவினர்கள் இருந்தனர். சூரமங்கலம் இரயில்வே போர்ட்டர் வீரப்பப் பிள்ளை என்பவருடைய மனைவி அங்கம்மாள் மிகவும் நெருங்கிய உறவு. அங்கம்மாளின் அன்பான ஆதரவினால் வெங்கட்ராமப் பிள்ளையின் வாழ்வு மலர்ந்து விளங்கியது.

வெங்கட்ராமப் பிள்ளை 'ஏட்டாக'ப் பணிபுரிந்து கொண்டிருந்த காலத்தில்தான் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை எட்டாவது ஆண் குழந்தையாகப் பிறந்தார். முதல் மூன்று பெண் குழந்தைகள் அடுத்து நான்காவது ஆண் குழந்தை பிறந்தவுடன் இறந்துவிட்டது. பிறகு பிறந்த மூன்று குழந்தைகளும் பெண்களே! "ஐந்து பெண் குழந்தைகளைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவன்" என்றால் ஆறு பெண்களைப் பெற்ற வெங்கட்ராமப் பிள்ளையும் அம்மணி அம்மாளும் என்ன செய்வார்கள்! ஓர் ஆண் குழந்தை பிறக்கவில்லையே என்ற ஏக்கம் அவர்களது உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. பல தெய்வங்களை வேண்டி விரதம் இருந்தனர். அவர்கள் செய்யாத தருமம் இல்லை.

காவிரியாற்றின் வடகரையில் உள்ள தம் கிராமமாகிய மோகனூரில் உள்ள கருப்பண்ணசாமியிடம்

அம்மணியம்மாள் தம் வயிற்றில் ஓர் ஆண் குழந்தை பிறந்தால் கறுப்பண்ணசாமி பெயரையே வைப்பதாக வேண்டிக்கொண்டார். ஒரு பிராமணக் கிழவரும் அவருடைய மனைவியும் இராமேசுவரத்துக்குத் தீர்த்த யாத்திரை போய்த் திரும்பி வருகின்றனர். அவர்கள் ஏட்டைப் பார்த்து அக்ரகாரத்துக்குப் போகும் வழி கேட்டனர். அக்ரகாரத்துக்கு அவர்களை அழைத்துச் சென்றார். அங்கே ஆசாரசீலரான ஓர் அந்தணர் வீட்டில் ஆகாரம் செய்வித்து அவர்கள் முகம் கோணாதபடி உபசரித்தார்.

பிள்ளையவர்களுக்கு ஆண் சந்ததி இல்லாக் குறையைக் கேள்வியுற்று, தாம் இராமேசுவரத்தில் இருந்து கொண்டுவந்த பூ, விபூதி, குங்குமம் முதலிய பிரசாதங்களில் கொஞ்சம் தனியே எடுத்து மடித்துக் கொண்டு, ஏதோ மந்திரம்போல் தமக்குள் உச்சரித்துவிட்டு, "இந்தாருங்கோ பிள்ளைவாள்! இது இராமேசுவரப் பிரசாதம். நான் சொல்லுவது இராமநாதனுடைய வாக்கு. தெய்வ வாக்கு. உங்கட்கு இந்தப் பிரசவத்தில் நிச்சயமாக ஆண் குழந்தை பிறக்கப் போகிறது; சிறந்த அறிவாளியாகவும் நிறைந்த ஆயுள் உடையவனாகவும் விரிந்த புகழ் உடையவனாகவும் உம் மகன் விளங்குவான். அவனுக்கு நீங்கள் இராமலிங்கம் அல்லது இராமநாதன் என்று பெயரிட்டு மிகவும் நலமாக வளர்த்துச் சிறப்படையுங்கள்" என்று வாழ்த்துரைத்துப் பிரசாதத்தையும் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்ட வெங்கட்ராமப் பிள்ளை மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

அங்ஙனமே வெங்கட்ராமப் பிள்ளைக்கும் அம்மணி அம்மாளுக்கும் அருந்தவப் புதல்வராகச் சர்வதாரி ஆண்டு ஐப்பசி மாதம் ஐந்தாம் நாள் (19-10-1888) வெள்ளிக்கிழமை சுக்லபட்சம் பௌர்ணமி இரவு 12.22½ மணிக்கு அழகியதோர் ஆண் குழந்தை பிறந்தது. பிராமணப்



பெரியவர் வாக்குப்படிப் பிறந்த அக்குழந்தை என்று கருதிய 'ஏட்' தம் மகனுக்கு இராமலிங்கம் என்று பெயரிட்டார். ஆனால் அம்மணியம்மாவோ கருப்பண்ணன் என்றே பெயரிட்டு அழைத்து வரலானார்.

தாய் தந்த உபதேசமாவது, "சாமி நீ என்ன வேணுமானாலும் செய்; ஆனால் பொய் மட்டும் சொல்லாதே! போக்கிரி என்று பேர் எடுக்காதே. இந்த இரண்டைத் தவிர நீ எது செய்தாலும் பரவாயில்லை" என்பார்கள். இந்த உபதேசம் ஒன்றே கவிஞரின் முன்னேற்றத்திற்குக் காரணமாகும்.

'சித்திரமும் கைப்பழக்கம்' என்பர். கவிஞர் இராமலிங்கம் சிறுவயதிலிருந்தே சித்திரம் எழுதும் பழக்கம் உண்டு. ஒரு நாள் கல்லூரி முதல்வர் எலியட் துரை மகனார் "நாகரிகப் பழக்க வழக்கங்கள்" என்பதைக் குறித்துக் கட்டுரை ஆங்கிலத்தில் வரையுமாறு மாணவர்களைப் பணித்தார்.

பின்னர் கல்லூரி முதல்வர் ஏதோ ஒரு நூலை நாற்காலியில் சாய்ந்தவாறு படித்துக் கொண்டிருந்தார். கட்டுரை எழுதி முடித்த இராமலிங்கம் அவர் நாற்காலியில் சாய்ந்திருக்கும் உருவத்தை மிக அழகாக வரைந்தார். கல்லூரி முதல்வரின் மனத்தை அந்த ஓவியம் கவர்ந்தது. கல்லூரித் தலைவரான எலியட் துரை அவர்கள் இராமலிங்கம் கட்டுரை எழுதும் திறமையையும் ஓவியம் வரையும் ஆற்றலையும் பாராட்டி பைபிளையும் கட்டுரை எழுதுவது எப்படி என்ற ஒரு நூலையும் பரிசாகத் தந்தார்.

பத்தொன்பது வயதில் மெட்ரிகுலேஷன் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். பின்னர் பிஷப்ஹீபர் என்ற கல்லூரியில் இண்டர் மீடியட் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். டில்லியில் நடைபெற்ற ஐந்தாம் சார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்டு மன்னனது ஓவியத்தைக்

கொடுத்து அவரிடமிருந்து தங்கப் பதக்கம் பெற்றார். திருச்சி காங்கிரசு கமிட்டிச் செயலாளராகப் பணியாற்றினார். மகாகவி பாரதியாரைச் சந்தித்துப் பாடல் ஒன்றைப் பாடிக் காட்டிப் புலவன் எனப் பாராட்டப் பெற்றார்.

மகாகவி, காந்தியின் மிதவாதக் கொள்கைக்கு ஆதரவளித்தார். 1921 முதல் 1930 வரை நாமக்கல் காங்கிரசுக் கட்சியின் வட்டச் செயலாளராகப் பணியாற்றினார். 1924இல் முதல் மனைவி முத்தம்மாள் காலமானார். இரண்டாம் மனைவி சௌந்தரம்மாளைத் திருமணம் செய்து கொண்டு நல்லறம் நடத்தி வந்தார்.

ஒரு சமயம் காந்தியடிகள் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தொடங்கினார். அதுபோது தேசபக்தியை வளர்க்கத் தகுந்தவாறு நாமக்கல் கவிஞர் பெருமான் பாடிக்கொடுத்த பாடல்களை மிகவும் உற்சாகத்துடன் பாடிச் சென்றனர். அப்பாடல்,

கத்தி யின்றி ரத்தம் இன்றி
யுத்தம் ஒன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர்.

இந்தப் பாடல் நாமக்கல் கவிஞரைத் தேசியக் கவிஞர் என்ற சிறப்பான இடத்தைப் பெறச் செய்தது.

தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு;
அமிழ்தம் அவனுடை வழியாகும்;
அன்பே அவனுடை மொழியாகும்;

தமிழன் என்று சொல்லடா!
தலைநிமிர்ந்து நில்லடா!



இப் பாடல்களில் எத்தனை ஓட்டம்! எத்தனை பொருட்செறிவு! கவிஞரின் பாடல்கள் எல்லாமே இப்படித்தான். இன்றைய இளங்கவிஞர்களுக்குக் கவிஞரின் பாடல்கள் வழிகாட்டியாக விளங்குகின்றன.

1934 முதல் 1944 வரை சேலம் மாவட்டக் கழக உறுப்பினராகப் பணியாற்றினார். 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு 10ஆம் நாள் சென்னை மாநகராட்சி மன்றம் வரவேற்பளித்துப் பணமுடிப்பு வழங்கியது. 1949ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ஆம் நாள் சென்னை அரசாங்கத் தாரால் ஆஸ்தானக் கவிஞராக நியமனம் செய்யப்பெற்றார். 1954இல் டில்லி சாகித்திய அகாடமியின் நிர்வாகக்குழு உறுப்பினராக நியமனம் பெற்றார். 1956இல் சென்னை அரசாங்கத்தால், எம்.எல்.சி.யாக நியமிக்கப்பெற்றார். 1971இல் இந்திய அரசாங்கத்தின் "பத்ம பூஷன்" பட்டம் பெற்றார்.

## அண்ணாவும் நாமக்கல் கவிஞரும்

1947ஆம் ஆண்டு கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் நாகர்கோவிலில் காந்தியடிகள் நினைவாக நினைவுத் தூண் ஒன்று நிறுவி அதனை அந்நாளைய தமிழக முதல்வர் திரு. குமாரசாமிராசா அவர்களைக் கொண்டு திறக்கச் செய்தார். அன்று மாலை நிகழ்ச்சிக்கு நாமக்கல் கவிஞரைத் தலைமை வகிக்கச் செய்து அவரது தலைமையில் பேரறிஞர் அண்ணா அவர்களைச் சொற்பொழிவு ஆற்றச் செய்தார். பேரறிஞர் அண்ணாவும் நாமக்கல் கவிஞரும் அன்றுதான் நேருக்கு நேர் சந்தித்து அளவளாவினர். "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் நாமக்கல் கவிஞருக்குப் புகழாரம் சூட்டினார்.

1953ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி முதல் கூட்டத்தில் நாமக்கல் கவிஞரை நேருவுக்கு அறிமுகப் படுத்தியபோது டாக்டர் எஸ். இராதாகிருட்டிணன் கூறியதாவது: "நாமக்கல் கவிஞர் ஓர் அரிய கலைஞர்; தலைசிறந்த தேசபக்தர்; தேசத்துக்காகத் தியாகம் பல செய்தவர்; சிறைவாசம் புரிந்தவர்; ஒழுக்கத்தில் உயர்ந்தவர்; நண்பர்களின் அன்பைக் கவர்ந்தவர்; கள்ளங்கபடம் அற்ற உள்ளத்தினர்; புகழுக்கும் பொருளுக்கும் ஆசைப்படாதவர்; ஆடம்பரத்தை அடியோடு வெறுத்தவர்; "ஆடு ராட்டே சுழன்று ஆடு ராட்டே!" என்று பாடித் தமிழ் நாட்டையே சுழன்று ஆடச் செய்தவர்" எனக் கூறினார்.

திரைப்பட உலகில் இவரால் பாராட்டும் வாழ்த்தும் பெற்றோர் இருவர். ஒருவர் எம்.ஜி.ஆர்; மற்றொருவர் என்.டி. ராமாராவ். மலைக்கள்ளன் என்ற படத்தில் எம்.ஜி.ஆர். கதாநாயகி பானுமதியோடு நடித்தார். அதேபோன்று என்.டி. ராமராவ் அக்கிராமுடு என்ற படத்தில் கதாநாயகி பானுமதியோடு நடித்தார். இவர்கள் இருவருமே முதல் அமைச்சராக இருந்து நாட்டை ஆண்டு வந்ததை நாம் கண்கூடாகக் கண்டுள்ளோம்.

சுமார் 85 ஆண்டுகள் நிறைவான வாழ்வு வாழ்ந்த கவிஞர் அவர்கள் 1972ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22ஆம் நாள் இரவு 3 மணிக்குத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. சில நிமிடங்களில் அவருடைய ஆன்மா பிரிந்தது.

மனிதப் பிறவி எடுத்ததன் பயனைக் குறைவறப் பெற்றவர் நாமக்கல் கவிஞராவார். தேசியக் கவிஞர், காந்தியக் கவிஞர், காங்கிரசு புலவர், அரசவைக் கவிஞர் என்றெல்லாம் மக்களால் பாராட்டப்பட்டவர்; கள்ளங்கபடமற்றவர்; சிறந்த சிந்தனையாளர்; அன்னார் பாடல்களைப் படித்து இன்புறுவோமாக.

# பொருளடக்கம்


| | | பக்க எண். |
|---|---|---|
| I. | கடவுள் வாழ்த்து ... .. | 15 |
| II. | தமிழ் அமுதம் ... .. | 31 |
| III. | சான்றோரைப் போற்றுதல் ... .. | 68 |
| IV. | இசைப் பாடல்கள் ... .. | 124 |
| V. | சொல்லின் பெருமை ... .. | 188 |
| VI. | திருநாட் சிறப்பு ... .. | 216 |
| VII. | தீண்டாமை ஒழிப்பு ... .. | 242 |
| VIII. | சமுதாயப் பாடல்கள் ... .. | 293 |
| IX. | தேசியப் பாடல்கள் ... .. | 337 |
| X. | காந்தியடிகள் பெருமை ... .. | 382 |
| XI. | பல்சுவைப் பாடல்கள் ... .. | 445 |

# I. கடவுள் வாழ்த்து

## *1. பரமன்*

உலகெலாம் படைத்துக் காத்தே
    உருவிலா தழித்து நாளும்
உண்மையாய் எண்ண மாளா
    ஒருவனாய் அருவ னாகிச்
சலமிலா தெண்ணு வோர்க்குச்
    சத்திய மயமே யாகித்
தனித்தனி பிரிந்த போதும்
    தானதிற் பிரியா னாகி
மலரின்மேல் தேவ னாகி
    மாதொரு பாக னாகி
மாலொடு புத்த னாகி
    மகமதாய் ஏசு வாகிப்
பலபல தெய்வ மாகிப்
    பற்பல மதங்க ளாகிப்
பக்குவப் படியே தோன்றும்
    பரமனார் பெருமை போற்றி.

## *2. கடவுள்*

இல்லாத கால மில்லை
    இருக்கின்ற பொருள்ஒன் றில்லை
எண்ணாத எண்ண மெல்லாம்
    எண்ணியும் எட்ட வில்லை
சொல்லாத வேத மெல்லாம்
    சொல்லியும் சொன்ன தில்லை

சூட்டாத நாமம் இல்லை
தோன்றாத உருவமில்லை
அல்லாவாய்ப் புத்த னாகி
அரனரி பிரம்ம னாகி
அருளுடைச் சமணர் தேவும்
அன்புள்ள கிறித்து வாகிக்
கல்லாத மனத்திற் கூடக்
காணாமல் இருப்பா ரந்தக்
கடவுள்என் நுலகம் போற்றும்
கருணையைக் கருத்தில் வைப்பாம்.

## 3. இறைவன்

அன்பினுக் கன்பாய் வந்தும்
அறிவினுக் கறிவாய் நின்றும்
அறிந்தவர்க் கெளிய னாகி
அல்லவர்க் கரிய னாகி
முன்பினும் நடுவொன் றின்றி
முதுமறை தனக்கு மெட்டான்
மூடர்கள் மனத்திற் கூட
மூலையில் ஒதுங்கி நின்று
செம்பினும் கல்லி னாலும்
செய்தவை எல்லா மாகிச்
சிலந்திபோற் கூடு கட்டிச்
சிலுவையில் மறைத்தான் போல
என்பினுக் கென்பா யென்றும்
எம்முனே விளங்கு கின்ற
எழுசுடர் சோதி யான
இறைவனை இறைஞ்சி நிற்பாம்.

## 4. சக்திதனைத் தொழுதிடுவோம்

இல்லையென்று சொல்வதற்கும்
இருக்கின்ற ஒரு பொருளாய்



இருப்பதென்பார் ருசுப்படுத்த
இல்லாத தும்அதுவாய்
அல்லவென்று மறுப்பதிலும்
அங்கிருந்து பேசுவதாய்
ஆம்என்ற மாத்திரத்தில்
அறிந்துவிட முடியாதாய்
வல்லமென்று அகங்கரித்தால்
பலங்குறைக்கும் வல்லமையாய்
வணங்கி அதைத் தொழுவார்க்கு
வலுவில்வரும் பெருந்துணையாய்ச்
சொல்லையொத்துச் செயல்மனமும்
தூயவர்க்கே தோற்றுவதாய்ச்
சொல்வதற்கு முடியாத
சக்திதனைத் தொழுதிடுவோம்.

## 5. சூரியன் வருவது யாராலே?

சூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவதும் எவராலே?
காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணிற் படுவன அவைஎன்ன?
பேரிடி மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வதும் எவராலே?
யாரிதற் கெல்லாம் அதிகாரி?
அதைநாம் எண்ணிட வேண்டாவோ? 1

தண்ணீர் விழுந்ததும் விதையின்றித்
தரையில் முளைத்திடும் புல்ஏது?
மண்ணில் போட்டது விதையொன்று
மரஞ்செடி யாவது யாராலே?
கண்ணில் தெரியாச் சிசுவை எல்லாம்
கருவில் வளர்ப்பது யார்வேலை?
எண்ணிப் பார்த்தால் இதற்கெல்லாம்
ஏதோ ஒருவிசை இருக்குமன்றோ? 2

எத்தனை மிருகம்! எத்தனைமீன்!
எத்தனை ஊர்வன பறப்பனபார்!
எத்தனை பூச்சிகள் புழுவகைகள்!
எண்ணத் தொலையாச் செடிகொடிகள்!
எத்தனை நிறங்கள் உருவங்கள்!
எல்லா வற்றையும் எண்ணுங்கால்
அத்தனை யும்தர ஒருகர்த்தன்
யாரோ எங்கோ இருப்பதுமெய். 3

அல்லா வெண்பார் சிலபேர்கள்
அரன்அரி என்பார் சிலபேர்கள்;
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை யென்பார்கள்
சொல்லால் விளங்கா 'நிர்வாணம்'
என்றும் சிலபேர் சொல்வார்கள்;
எல்லா மிப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே! 4

அந்தப் பொருளை நாம்நினைத்தே
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்
எந்தப் படியாய் எவர்அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போம்அதை வணங்கிடுவோம்;
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம். 5

## 6. தேவி பராசக்தி

நூறென்று மனிதர்க்கு நீதந்த வயசினில்
கூறென்று பலநோய்கள் பங்கிட்டுக் கொள்ளுதையோ?
ஆரெம்மைக் கரப்பவர் அன்னையே உன்னையன்றி?
பாரெம்மைக் கடைக்கண்ணால் தேவி பராசக்தி!



நீதந்த உடல்கொண்டு நின்புகழ் துதிக்குமுன்
நோய்வந்து புகுந்தெம்மை நொடிக்குள் மடிப்பதென்றால்
தாய்தந்தை நீயன்றித் தஞ்சம் பிறிதுமுண்டோ?
வாய்தந்து வாவென்று வரமருள்வாய் தேவீ!

தாயை மறந்திருக்கும் குழந்தைகள் சகஜந்தான்!
சேயை மறந்தவளைச் செகமின்னுங் கண்டதில்லை.
நீயே எமைமறந்தால் நிலையெமக் கேதுவேறே?
நோயே மிகநலிய நொந்தனம், வந்தருள்!

நித்தம் உனைநினைந்து நியம முடன்வசிக்கச்
சுத்த மனநிலையும் சொல்லும்செய லும்தந்து
சுற்றும் பலபிணிகள் தொடரா தருள்புரியாய்
சத்திய மாய்விளங்கும் தேவீ பராசக்தி!

## 7. மாயக் கண்ணன்

கண்ணன் பக்தி சேர்ந்திடில்
கவலை யாவும் தீர்ந்திடும்
மண்ணை வாரித் தின்றவன்;
மலையைத் தூக்கி நின்றவன். (கண்) 1

வீட்டில் திருடும் வெண்ணெயை
வெளியில் தானம் பண்ணுவான்;
நாட்டில் சிறுவர் யாவரும்
நன்மை கொள்ளக் கூவுவான். (கண்) 2

பெண்ணைக் காணில் ஓடுவான்;
பிறரைக் காணில் வாடுவான்
எண்ணம் என்ன தீயதோ!
இல்லை; முற்றும் தூயதே. (கண்) 3

எண்ணி றந்த கோபிகள்
இவனு டன்சல் லாபிகள்!
பெண்ணில் காமம் அல்லவே
பிள்ளை பெற்ற தில்லையே. (கண்) 4

தூய அன்புக் காதலைத்
துலங்க வைக்கும் ஜோதியான்
நேய மாகும் கண்ணனை
நிந்தை நீக்கி எண்ணுவோம். (கண்) 5

என்றும் என்றும் பாலனாய்
இன்பக் கேலி லோலனாய்க்
கன்று காலி மேய்ப்பதில்
களித்து லோகம் காப்பவன். (கண்) 6

புலனை வெல்லும் கீதையைப்
புகலும் கண்ணன் மேதையை
நலனி லாத காமியாய்
நாம்நி னைத்தல் தீமையாம். (கண்) 7

ஆண்மை என்ற வன்மையும்
அன்புப் பெண்மை மென்மையும்
மாண்பிற் சேர்ந்த வேலையே
மாயக் கண்ணன் லீலையே. (கண்) 8

## 8. எங்கள் கண்ணன்

கண்ணன் என்றுஒரு சிறுவன் - என்
கருத்தைக் கொள்ளைகொண்ட ஒருவன்
எண்ண எண்ண அவன்பெருமை - தனை
என்ன சொல்லுவேன் அருமை! 1

சிறுவன் என்றுநினை யாமல் - அவன்
செயலைக் கூர்ந்துநினைப் போமேல்
திறமை யோடுசெயல் புரியும் - நல்ல
தீரம் நம்மனதில் விரியும். 2

அன்பு என்றஒரு எண்ணம் - தரும்
அழகு வடிவமே கண்ணன்
துன்பம் நேருகிற போது - எண்ணித்
துயரம் தீரஒரு தோது. 3



சூது போலப்பல புரிவான் - உலகச்
சூதை வெல்லவழி தருவான்
தீது போலஒன்று செய்வான் - அதில்
திகழும் நன்மைபல செய்வான். 4

ஆணின் அழகுமிக வருவான் - பெண்கள்
ஆவிசோர மயல் தருவான்.
நாணிப் பெண்அருகில் செல்வான் - அவன்
நகைத்துப் பெண்வடிவு கொள்வான். 5

பெண்ணின் வடிவழகில் வந்தே - ஆண்கள்
பித்து கொள்ள மயல்தந்து
கண்ணைச் சிமிட்டுவதற் குள்ளே - ஒரு
காளை ஆண்வடிவு கொள்வான். 6

தாயைப் போல்எடுத்தே அணைப்பான் - உடனே
தந்தை போற்கடிந்து பணிப்பான்
மாயக் காரமணி வண்ணன் - வெகு
மகிமைக் காரன்எங்கள் கண்ணன். 7

கலகப் பேச்சும் அவன்வேலை - மாற்றும்
கருணை வீச்சும்அவன் லீலை
உலகம் முழுதும் அவன் ஜாலம் - அதை
உணர்ந்து கொள்வதே சீலம். 8

## 9. ஆயன்கண்ணன்

கண்ணன் உறவைப் பிரியாதே
காரியம் இன்றித் திரியாதே
எண்ணம் தூயது என்றானால்
எதுசெய் தாலும் நன்றாகும். 1

ஊக்கமும் உறுதியும் உண்டாகும்
உழைப்பிலும் களைப்பெதும் அண்டாதே,
ஆக்கமும் ஆற்றலும் பெறலாகும்
ஆயன் கண்ணன் உறவாலே. 2

துன்பம் எதையும் தாங்கிடலாம்
துயரம் உடனே நீங்கிடலாம்
அன்பும் அறிவும் பெரிதாகும்
அச்சம் என்பதும் அரிதாகும். 3

சிரிப்பும் களிப்பும் நிறைந்துவிடும்
சிடுசிடுப் பெல்லாம் மறைந்துவிடும்
விருப்பம் எதுவும் சித்திபெறும்
வித்தகக் கண்ணன் பக்தியினால். 4

மாடுகள் மேய்க்கும் வேலையிலும்
மகிழ்ந்திடும் கண்ணன் லீலைகளால்
பாடுபட் டுழைத்திட அஞ்சோமே
பாரில் யாரையும் கெஞ்சோமே. 5

தூதுவன் ஆகித் துணைவருவான்
தொழும்பனைப் போலும் பணிபுரிவான்
ஏதொரு தொழிலும் இழிவல்ல
என்பது கண்ணன் வழிசொல்லும். 6

எல்லா உயிரும் இன்பமுறும்
இன்னிசை பரப்பித் தென்புதரும்
புல்லாங் குழலை ஊதிடுவான்
பூமியில் கடமையை ஓதிடுவான். 7

பக்தருக் கெல்லாம் அடைக்கலமாய்ப்
பாதகர் தங்களை ஒடுக்கிடுவான்
சக்திகள் பலவும் தந்திடுவான்
சங்கடம் தீர்த்திட வந்திடுவான். 8

ஆடலும் பாடலும் மிகுந்துவிடும்
அழகன் கண்ணன் புகுந்தஇடம்
ஓடலும் ஒளித்தலும் விளையாட்டாம்
ஒவ்வொரு செயலும் களியாட்டே. 9



## *10. கண்ணன் திருவருள்*

கண்ணன் வருகிற இந்நாளே
களிப்புகள் தருகிற நன்னாளாம்.
திண்ணம் அவனருள் உண்டானால்
தீங்கெதும் நம்மை அண்டாது. 1

அசுரத் தனங்களை இகழ்ந்திடவும்
அன்புக் குணங்களைப் புகழ்ந்திடவும்
விசனம் என்பதை ஒழித்திடவும்
வித்தகக் கண்ணன் வழித்துணையாம். 2

அரசரின் குலத்தில் பிறந்தாலும்
ஆயர்தம் குடிசையில் வளர்ந்தவனாம்
ஒருசிறு பேதமும் எண்ணாமல்
ஒற்றுமை காட்டும் கண்ணாளன். 3

எங்கும் எதிலும் வேடிக்கை
இழைப்பது கண்ணன் வாடிக்கை
இங்கும் நாம்அதைக் கடைப்பிடித்தால்
இன்பம் வாழ்க்கையில் தடைப்படுமா? 4

அடுக்குப் பானையை உருட்டிடுவான்:
அதட்டப் போனால் சிரித்திடுவான்.
துடுக்குக் கண்ணனைக் கண்டவுடன்
தோன்றிய கோபம் சுண்டிவிடும். 5

ஒன்றும் தெரியாப் பாலன்போல்
உலகை நடத்தும் லோலன்காண்
என்றும் இளமை குறையாமல்
எல்லாப் பொருளிலும் உறைவான்காண். 6

நம்பின மெய்யரைத் தாங்கிடுவான்;
நடிக்கும் பொய்யரை நீங்கிடுவான்.
வம்புகள் செய்தால் செல்லாவாம்;
வாதுகள் அவனிடம் வெல்லாவாம். 7

கல்வியில் தேறிச் சிறந்திடலாம்
கலைகளின் ரசனை நிறைந்திடலாம்;
பல்வித நன்மைகள் பெறலாகும்;
பாலன் கண்ணன் உறவாலே. 8

பண்ணும் காரியம் முற்றிலுமே
பழுதில் லாமல் வெற்றி பெறும்
கண்ணன் திருவருள் சூழ்ந்திடுவோம்;
கவலையில் லாமல் வாழ்ந்திடுவோம். 9

குறிப்புரை :- லோலன் - உலகை நடத்தும் கண்ணன்.

## 11. வடிவேல் முருகா

வாவா முருகா! வடிவேல் முருகா!
காவாய் முருகா! கடிதே முருகா!
தேவா உனையே தினமும் தொழுவேன்
தீவாய் பிணியைத் தீரித் தினமே. 1

அழியா அழகா! அறிவாம் முருகா!
கழியா இளமைக் கடலே முருகா!
மொழியா இன்பம் அடையும் முறையை
ஒளியா தருள்வாய் ஒருவா முருகா! 2

குறையா அழகே! குமரா முருகா!
மறையா வையம் அறியா ஒருவா!
சிறைவா யுலகில் சிறுகும் எளியேன்
சிறுகா விதமுன் திறமே தருவாய்! 3

தளரா உடலும் சலியா உயிரும்
குளரா உரையும் குறையா அறிவும்
வளரா வாடா வடிவம் உடையாய்!
எளியாய்! அடியார்க் களியே! ஒளியே! 4

நரையும் திரையும் நணுகா முருகா!
கரையும் பிணியும் களையொன் றறியாய்
விரியும் உலகின் விரையே முருகா!
வருவாய் முருகா! வரமே தருவாய்! 5



## 12. அன்பனந்த முருகன்

முருகனென்ற சிறுவன்வந்து
முணுமுணுத்த சொல்லினான்
முன்னிருந்த எண்ணம் யாவும்
பின்னமுற்றுப் போனதே!
அருகுவந்து மனமுவந்தே
அவனுரைத்த ஒன்றினால்
அடிமையென் மனத்திருந்த
அச்சமற்றுப் போனதே! 1

இளமையந்த முருகன்வந்து
என்னோடொன்று சொல்லவே
என்னுளத்தி ருந்தபந்தம்
ஏதுமற்றுப் போனதே!
வளமையுற்ற இளமைபெற்று
வலிமிகுந்த தென்னவே
வந்ததே சுதந்திரத்தில்
வாஞ்சை யென்ற ஞானமே! 2

அழகனந்த முருகன்வந்தென்
அருகிருந்த போதிலே
ஐம்புலன்க ளுக்கொடுங்கி
அஞ்சியஞ்சி அஞ்சிநான்
பழமையென் உடற்கண்வைத்த
பற்றுயாவும் அற்றதால்
பாரிலென்னை யாருங்கண்டு
பணியுமாறு செய்ததே! 3

அன்பனந்த முருகன்வந்
தழைத்திருத்தி என்னையே
அஞ்சல்அஞ்சல் அஞ்சலென்
றகங்குழைந்து சொன்னதால்
துன்பமிக்க அடிமை வாழ்வில்
தோய்ந்திருந்த என்மனம்
சோகம் விட்டு விடுதலைக்கு
மோகமுற்று விட்டதே! 4

## 13. துணைபுரி முருகன்

முருகனென்றபெயர் சொன்னால் - தோழி
உருகு தென்றனுளம் என்னே!
பெருக நீர்விழிகள் சோர - மனம்
பித்துக் கொள்ளுதுள் ளூர! (முரு) 1

கந்த னென்றுசொல்லும் முன்னே - என்
சிந்தை துள்ளுவதும் என்னே?
உந்தும் பேய்ச்சுரைகள் உளறி - வாய்
ஊமை யாகுதுளம் குளிர! (முரு) 2

வேல னென்றபெயர் கேட்டே - ஏனோ
வேர்வை கொட்டுதுதன் பாட்டில்!
கால னென்றபயம் ஓடிப் - புதுக்
களிசிறக்குதடி சேடி (முரு) 3

குமர னென்றஒரு சத்தம் - கேட்டுக்
குளிர வந்ததடி சித்தம்!
அமர வாழ்வுபெறல் ஆனேன் - இனி
அடிமை யார்க்குமிலை நானே! (முரு) 4

குகனெனச் சொல்வதற் குள்ளே - நான்
அகம்ம றந்தேன்அது கள்ளோ!
தகதக வென்றொரு காட்சி - உடனே
தண்ணென முன்வரல் ஆச்சு! (முரு) 5

ஆடும் மயிலில்வரக் கண்டேன் - சொல்ல
அழகும் அதைவிடஒன் றுண்டோ?
வீடு வாசல்பொருள் எல்லாம் - துச்சம்
விட்டு மறந்தனடி நல்லாள்! (முரு) 6

பச்சைக் குழந்தையவன் மேலே - என்றன்
பற்று மிகுந்ததெத னாலே?
இச்சை யாரமிகத் தழுவி - நானும்
இணங்கி யிருந்த தனின்பம் முழுகு!(முரு) 7



கள்ளங் கபடமற்ற பாலன் - மேலே
காதல் கொண்டஎன்னை ஞாலம்
எள்ளி ஏளனம்செய் தாலும் - நான்
எதற்கும் அஞ்சிலன்எக் காலும்! (முரு) 8

முருகன் கந்தன்வடி வேலன் - ஞானத்
திருக்கு கன்குமரன் சீலன்
சிறுகு ழந்தையா னாலும் - அன்னைத்
திரும ணம்புரிவன் மேலும்! (முரு) 9

வேறு பெயரைச்சொன் னாலும் - சற்றும்
விரும்ப மாட்டெனெந்த நாளும்!
நூறு பேசுவதை விட்டே - எனக்குத்
துணைபுரி முருகனைக் கட்ட. (முரு) 10

## 14. எழிலுடைச் சோதி

உலகெலாம் காக்கும் ஒருதனிப் பொருளே!
உன்னருள் நோக்கி இன்னுமிங் குள்ளோம்.
இந்திய நாட்டை இந்தியர்க் கென்று
தந்தனை யிலையோ? தவறதில் உண்டோ?
காடும் மலைகளும் கனிதரும் சோலைகள்.

ஓடும் நதிகளும் உள்ளன எவையும்
இங்கே பிறந்தவர் எங்களுக் கிலையோ?
எங்கோ யாரோ வந்தவர் துய்க்கச்
சொந்த நாட்டினில் தோன்றிடும் செல்வம்
எந்த நாட்டிலோ எங்கோ போய்விடக்

கஞ்சியு மின்றிக் கந்தையும் இன்றி
அஞ்சிய வாழ்வின் அடிமையிற் கிடந்து
நொந்தனம் கொள்ளை நோய்களாற் செத்து
காட்டிடை வாழும் விலங்கினுங் கேடாய்க்
நாட்டிடை யிருந்தும் நலிந்தனம் ஐயோ!

யாருடை நாடு? யாருடை வீடு?
யாருடைப் பாடு? யார்அனு பவிப்போர்!
பிறந்த நாட்டினிற் பிறவா தவரிடம்
இரந்து நின்(று)அவர் ஏவலே செய்தும்
உடலே பெரிதென உயிரைச் சுமந்திடும்

ஊனமில் வாழ்வினை ஒழித்திடத் துணிந்தோம்!
ஞான நாயகா! நல்லருள் காத்தே
ஆண்மையும் அறிவும் அன்பும் ஆற்றலும்
கேண்மையும் பிறர்பால் கேடிலா எண்ணமும்
அடிமை ஒருவருக் கொருவர்என் றில்லாக்

குடிமை நீதியின் கோன்முறை கொடுத்துச்
சோறும் துணியும் தேடுவ தொன்றே
கூறும் பிறவியின் கொள்கை யென் றின்றி
அளவிலா உன்றன் அருள்விளை யாட்டின்
களவியல் போன்ற கருணையின் பெருக்கின்

உளவினைத் தேடி உணர்ந்திட வென்றே
வளமும் எங்கள் வாழ்நாட் போக்கி
மங்களம் பாடி மகிழ்ந்திடத் தருவாய்
எங்கும் இருக்கும் எழிலுடைச் சோதி!

## *15. ஆன்ம ஜோதி*

ஆற்றல்கள் அனைத்தும் நீயே
அருளுவாய் எனக்கும் ஆற்றல்;
போற்றிடும் வீரி யம்நீ
எனக்கதைப் புகட்ட வேண்டும்;
மாற்றரும் பலங்கள் நீயே
மற்றெனைப் பலவா னாக்கு
சாற்றரும் ஜீவ சத்தே
சத்தினை எனக்குத் தாராய். 1



தீமையை வெறுத்து நீக்கும்
தீரமாய்த் திகழ்வாய் நீயே
வாய்மையில் எனக்கும் அந்த
வலிமையை வழங்க வேண்டும்;
தாய்மையின் சகிப்பு நீயே
தந்தருள் சகிப்புத் தன்மை;
தூய்மைசேர் ஒழுக்க வாழ்வில்
துலங்கிடும் ஆன்மஜோதி. 2

உடலினும் உயிருக் கப்பால்
உயர்ந்தொளிர் ஆன்மசக்தி!
கடலினும் பெரிதாம் உன்றன்
கருணையில் மூழ்கச் செய்வாய்!
அடைவரும் அமைதி தந்தே
அன்பெனும் அமுத மூட்டி
மடமைகள் யாவும் மாற்றி
மங்களம் அருள்வாய் போற்றி. 3

## *16. ஏழை நெஞ்சே!*

எண்ணரிய நெடுங்காலம் இடைய றாமல்
எண்ணியெண்ணித் தவவலிமை உடைய ராகித்
திண்ணியமெய் யறிவறிந்து தெளிந்த முன்னோர்
பண்ணியநற் பழக்கமெல்லாம் பழித்தாய் நெஞ்சே! 1

எத்திசையும் பிறநாட்டார் ஏற்றிப் பேசும்
பத்திமிகும் இலக்கியத்தின் மணமே வீசும்
முத்தமிழின் வழிவந்தும் முன்னோர் தம்மைப்
பித்தரென்றே எண்ணுகின்றாய் பேதை நெஞ்சே! 2

நாத்திகர்தான் நாகரிகச் சின்னம் போல
மூத்தறிந்த முன்னோரைப் பின்னம் பேசிச்
சூத்திரத்தில் ஆடுகின்ற பொம்மை யேபோல்
சொந்தபுத்தி இழந்துவிடல் நன்றோ? சொல்வாய். 3

ஆத்திசூடி நல்லறிவு அழித்து விட்டாய்
ஆசாரக் கோவைதன்னை இழித்து விட்டாய்
பார்த்திதனை அன்னியரும் பரிக சித்தார்
பாவமிதைப் புண்ணியம்போல் மிகர சித்தாய். 4

தள்ளரிய தெய்வத்தின் நினைவு கூட்டும்
பிள்ளையார் சுழிபோட்டுக் கடிதம் தீட்டும்
தெள்ளறிஞர் நமதுமுன்னோர் செயலைக் கூட
எள்ளிநகை யாடுகின்றாய் ஏழை நெஞ்சே! 5

# II. தமிழ் அமுதம்

## 17. என்றும் உள்ள தென்றமிழ்

அமிழ்தம் எங்கள் தமிழ்மொழி
அன்னை வாழ்க வாழ்கவே.

வைய கத்தில் இணையி லாத
வாழ்வு கண்ட தமிழ் மொழி
வான கத்தை நானி லத்தில்
வரவ ழைக்கும் தமிழ்மொழி
பொய்அ கந்தை புன்மை யாவும்
போக்க வல்ல தமிழ்மொழி
புண்ணி யத்தை இடைவி டாமல்
எண்ண வைக்கும் தமிழ்மொழி
மெய்வ குத்த வழியி லன்றி
மேலும் எந்தச் செல்வமும்
வேண்டி டாத தூய வாழ்வைத்
தூண்டு கின்ற தமிழ்மொழி
தெய்வ சக்தி என்ற ஒன்றைத்
தேடித் தேடி ஆய்ந்தவர்
தெளிவு கண்ட ஞான வான்கள்
சேக ரித்த நன்மொழி. 1

உலகி லுள்ள மனிதர் யாவரும்
ஒருகு டும்பம் என்னவே
ஒன்று பட்டு வாழும் மார்க்கம்
தொன்று தொட்டுச் சொன்னது;
கலக மற்ற உதவி மிக்க
சமுகவாழ்வு கண்டது;
கடமை கற்று உடைமை பெற்ற
கர்ம ஞானம் கொண்டது
சலுகை யோடு பிறமொ ழிக்கும்
சரிச மானம் தருவது;

சகல தேச மக்க ளோடும்
சரச மாடி வருவது;
இலகும் எந்த வேற்று மைக்கும்
ஈசன் ஒன்றே என்பதை
இடைவி டாமல் காட்டும் எங்கள்
இனிமை யான தமிழ்மொழி. 2

கொலைம றுக்கும் வீர தீரக்
கொள்கை சொல்லும் பொன்மொழி!
கொடியவர்க்கும் நன்மை செய்யக்
கூறுகின்ற இன்மொழி;
அலைமிகுந்த வறுமை வந்தே
அவதி யுற்ற நாளிலும்
ஐய மிட்டே உண்ணு கின்ற
அறிவு சொல்லும் தமிழ்மொழி;
கலைமி குந்த இன்ப வாழ்வின்
களிமி குந்த பொழுதிலும்
கருணை செய்தல் விட்டி டாத
கல்வி நல்கும் மொழியிது;
நிலைத ளர்ந்து மதிம யங்க
நேரு கின்ற போதெலாம்
நீதி சொல்லி நல்லொ ழுக்கம்
பாது காக்கும் தமிழ்மொழி. 3

அன்பு செய்தும் அருள் அறிந்தும்,
ஆற்றல் பெற்ற அறமொழி;
அறிவ றிந்து திறமை யுற்றே
அமைதி மிக்க திருமொழி;
இன்ப மென்ற உலக றிந்த
யாவு முள்ள கலைமொழி;
இறைவ னோடு தொடர்ப றாமல்
என்று முள்ள தென்றமிழ்.
துன்ப முற்ற யாவ ருக்கும்
துணையி ருக்கும் தாயவள்;



துடிது டித்தே எவ்வு யிர்க்கும்
நலம ளிக்கும் தூயவள்;
தென்பு தந்து தெளிவு சொல்லும்
தெய்வ மெங்கள் தமிழ்மொழி;
திசைக ளெட்டும் வாழ்த்து கின்ற
இசைப ரப்பச் செய்குவோம். 4

பழிவ ளர்க்கும் கோப தாப
குரோத மற்ற பான்மையும்
பகைவ ளர்க்கும் ஏசு போக
ஆசை யற்ற மேன்மையும்,
அழிவு செய்யக் கருவி செய்யும்
ஆர்வ மற்ற எண்ணமும்,
அனைவருக்கும் தன்மை காணும்
வித்தை தேடும் திண்ணமும்
மொழிவ ளர்ச்சி யாக்கு மென்ற
உண்மை கண்டு முந்தையோர்
முறைதெ ரிந்து சேர்த்த திந்த
நிறைமி குந்த முதுமொழி.
வழிய றிந்து நாமும் அந்த
வகைபு ரிந்து போற்றுவோம்;
வஞ்ச மிக்க உலக வாழ்வைக்
கொஞ்ச மேனும் மாற்றுவோம். 5

## *18. தமிழ் வாழ்க நாளும்*

தமிழென்று தருகின்ற தனியந்தப் பெயரில்
அமிழ்தென்று வருகின்ற அதுவந்து சேரும்.
நமதிந்தப் பெயர்கொண்ட மொழியென்ற எண்ணம்
தமிழர்க்குப் புகழ்மிக்கத் தருமென்றல் திண்ணம். 1

பயிருக்கு நீர்என்ற பயன்மிக்க வழியே
உயிருக்கு வெகுநல்ல உணர்வுள்ள மொழியே.
துயருற்ற மனதிற்குத் துணைநின்றே உதவும்;
அயர்வற்ற ஞானத்தை அடைவிக்கும் அதுவே. 2

2 நா.க.பா. பூ.வெ. எ. *489*

அன்பென்று அதைமிக்க அறிவிக்க நின்று
துன்பங்கள் தருகின்ற துயரத்தை வென்றே
இன்பத்தின் நிலைசொல்ல இணையற்ற வழியாம்;
தென்புள்ள தமிழென்று திகழ்கின்ற மொழியாம். 3

அருளென்ன உலகத்தின் அறிவாள ரெல்லாம்
பொருள்கொள்ளும் பொருள்தன்னைப் புரிவிக்கும் சொல்லாம்;
இருள்கொண்ட உள்ளத்தில் இயல்பான பழியைத்
தெருள்கொள்ள ஒளிதந்து திகழ்கின்ற மொழியே. 4

அறிவென்று பெயர்கொண்ட அதைமட்டும் நாடும்;
குறிகொண்டே உலகெங்கும் குறைவின்றித் தேடும்;
வெறிகொண்ட இனம்என்று வெகுபேர்கள் போற்றும்
நெறிகொண்ட தமிழ்மக்கள் நிறைகண்ட மாற்றம். 5

கலையென்ற கடலுக்குக் கரைகண்ட புணையாம்
நிலைகொண்ட அறிவுக்கு நிகரற்ற துணையாம்;
அலைபட்ட மனதிற்கு அமைதிக்கு வழியாம்;
மலையுச்சி ஒளியன்ன மறைவற்ற மொழியாம். 6

அறமன்றிச் செயலொன்றும் அறியாத மொழியாம்;
மறமென்ற செயல்என்றும் மதியாத மொழியாம்;
நிறமென்று மதமென்று நிந்தித்தல் அறியாத்
திறமுள்ள தமிழென்று திசைமெச்சும் நெறியாம். 7

குணமென்ற அதைமட்டும் கும்பிட்டு நாளும்
பணமென்ற பலமென்ற பயமின்றி வாழும்
இணையற்ற உறுதிக்கு இசைமிக்க வழியாம்
மணமிக்க தமிழென்று மதிமிக்க மொழியாம். 8

பலகாலம் பலநாடும் பரிவோடு சுற்றி
உலகோரின் பலசொல்லை உறவோடு கற்று
விலகாத நட்பிற்கு வெகு கெட்டி வேராம்;
தலையாய அறிவிற்குத் தமிழென்று பேராம். 9



எந்தெந்த நாட்டின்கண் எதுநல்ல தென்றே
அந்தந்த மொழிதந்த அறிவின்கண் நின்று
முந்துள்ள இவையென்ற முறையுள்ள எல்லாம்
தந்துள்ள தொகைபோலும் தமிழென்ற சொல்லாம். 10

விரிகின்ற அறிவோடு விரிகின்ற நிலையால்
திரிகின்ற உலகத்தைத் தெரிகின்ற கலையால்
சரியென்ப தொன்றன்றிப் பிறிதொன்றில் சலியாப்
பெருமைத்து தமிழென்ற பெயர்தந்த ஒலியாம். 11

சீலத்தை இதுவென்று தெரிவிக்கும் நூலாம்;
காலத்தைத் தூரத்தைக் கருதாது மேலாம்
ஞாலத்தை அண்டத்தை நாமாக எண்ணும்
மூலத்தின் உணர்வெங்கள் மொழி உண்டு பண்ணும்.12

பிறநாடு பிறர்சொத்து பிறர்சொந்தம் எதையும்
உறநாடிச் சதிசெய்தல் உன்னாத மதியும்
இரவாமல் எவருக்கும் ஈகின்ற நயனும்
அறமோதும் தமிழ்கற்று அடைகின்ற பயனாம். 13

விஞ்ஞானம் அதனோடும் விளையாடி நிற்கும்;
மெய்ஞ்ஞானம் அதைமட்டும் மிகநாடி கற்கும்;
மெய்ஞ்ஞானம் வாதித்துப் புனிதத்தை இகழும்
அஞ்ஞானம் இல்லாமை அதுபெற்ற புகழாம். 14

கொல்லாமை பொய்யாமை எனுமிவ்விரண்டில்
எல்லாநல் அறமுற்றும் இடைநிற்றல் கண்டு
சொல்லாலும் செயலாலும் மனதாலும் தொழுதோர்
நல்லோர்கள் பணிதந்த தமிழ்வாழ்க நாளும். 15

*குறிப்புரை :- பணி - சொல், வார்த்தை (15);*
*'மெய்ஞ்ஞானம்' எதிர்சொல் அஞ்ஞானம் (14);*
*இணையற்ற - தனக்கு நிகரில்லாத (8);*
*இரவாமல் - ஒளிக்காமல், மறைக்காமல்.*

## 19. தமிழன் பெட்பு

தமிழன் என்றோர் இனமுண்டு;
தனியே அவற்கொரு குணமுண்டு;
அமிழ்தம் அவனுடை வழியாகும்;
அன்பே அவனுடை மொழியாகும். 1

அறிவின் கடலைக் கடைந்தவனாம்;
அமிழ்தத் திருக்குறள் அடைந்தவனாம்;
(1)பொறியின் ஆசையைக் குறைத்திடவே
பொருந்திய நூல்கள் உரைத்திடுவான். 2

கவிதைச் சுவைகளை வடித்தெடுத்தான்
கம்பன் பாட்டெனப் பெயர்கொடுத்தான்;
புவியில் இன்பம் பகர்ந்தவெல்லாம்
புண்ணிய முறையில் நுகர்ந்திடுவான். 3

'பத்தினி சாபம் பலித்துவிடும்'
பாரில் இம்மொழி ஒலித்திடவே
சித்திரச் சிலப்பதி காரமதைச்
செய்தவன் துறவுடை ஓரரசன். 4

சிந்தா மணி,மணி மேகலையும்,
பத்துப் பாட்டெனும் சேகரமும்,
(2)நந்தா விளக்கெனத் தமிழ் நாட்டின்
நாகரி கத்தினை மிகக்காட்டும். 5

தேவா ரம்திரு வாசகமும்
திகழும் சேக்கி ழார்புகழும்
ஓவாப் பெருங்கதை-ஆழ்வார்கள்
உரைகளும் தமிழன் வாழ்வாகும். 6

தாயும் ஆனவர் சொன்னவெலாம்
தமிழன் ஞானம் இன்னதெனும்;
பாயும் துறவுகொள் பட்டினத்தார்
பாடலும் தமிழன் பெட்பெனலாம். 7



நேரெதும் நில்லா ஊக்கமுடன்
நிமிர்ந்திட அச்சம் போக்கிவிடும்
பாரதி என்னும் பெரும்புலவன்
பாடலும் தமிழன் தரும்புகழாம். 8

கலைகள் யாவினும் வல்லவனாம்
கற்றவர் எவர்க்கும் நல்லனாம்
நிலைகொள் பற்பல அடையாளம்
நின்றன இன்னும் உடையோனாம். 9

சிற்பம் சித்திரம் சங்கீதம்
சிறந்தவர் அவனினும் எங்கே சொல்?
வெற்பின் கருங்கல் களிமண் போல்
வேலைத் திறத்தால் ஒளிபண்ணும். 10

உழவும் தொழிலும் இசைபாடும்
உண்மை; சரித்திரம் அசைபோடும்;
இழவில் அழுந்திடும் பெண்கூட
இசையோ டழுவது கண்கூடு. 11

யாழும் குழலும் நாதசுரம்
யாவுள தண்ணுமை பேதமெலாம்
வாழும் கருவிகள் வகைபலவும்
வகுத்தது தமிழெனல் மிகையலவாம். 12

கொல்லா விரதம் பொய்யாமை
கூடிய அறமே மெய்யாகும்;
எல்லாப் புகழும் இவை நல்கும்;
என்றே தமிழன் புவிசொல்லும். 13

மானம் பெரிதென உயிர்விடுவான்;
மற்றவர்க் காகத் துயர்படுவான்;
தானம் வாங்கிடக் கூசிடுவான்;
'தருவது மேல்' எனப் பேசிடுவான். 14

ஜாதிகள் தொழிலால் உண்டெனினும்
சமரசம் நாட்டினில் கண்டவனாம்;
நீதியும் உரிமையும் அன்னியர்க்கும்
நிறைகுறை யாமல் செய்தவனாம். 15

உத்தமன் காந்தியின் அருமைகளை
உணர்ந்தவன் தமிழன்; பெருமையுடன்
சத்தியப் போரில் கடனறிந்தான்;
சாந்தம் தவறா துடனிருந்தான். 16

*குறிப்புரை:-*[1]*பொறியின் ஆசை - ஐம்பொறிகளின் விருப்பம். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகள்.*
[2]*நந்தா விளக்கு - அணையா விளக்கு (5); பெட்பு - ஆசை, அன்பு, பெருமை (7); நேர் - ஒப்பு (8); வெற்பு - மலை; சாந்தம் - அமைதி.*

## *20. இளந்தமிழனுக்கு*

இளந்த மிழா! உன்னைக் காண
இன்ப மிகவும் பெருகுது!
இதுவ ரைக்கும் எனக்கிருந்த
துன்பம் சற்றுக் குறையுது!
வளந்தி கழ்ந்த வடிவி னோடும்
வலிமை பேசி வந்தனை.
வறுமை மிக்க அடிமை நிற்கு
வந்த ஊக்கம் கண்டுநான்
தளர்ந்தி ருந்த சோகம் விட்டுத்
தைரி யங்கொண் டேனடா!
தமிழர் நாட்டின் மேன்மை மீளத்
தக்க காலம் வந்ததோ!
குளிர்ந்த என்றன் உள்ளம் போலக்
குறைவி லாது நின்றுநீ
குற்ற மற்ற சேவை செய்து
கொற்ற மோங்கி வாழ்குவாய்! 1



பண்டி ருந்தார் சேர சோழ
பாண்டி மன்னர் நினைவெலாம்
பாயுமேடா உன்னை யின்று
பார்க்கும் போது நெஞ்சினில்!
கொண்ட கொள்கை அறம்வி டாமல்
உயிர்கொ டுத்த வீரர்கள்
கோடி கோடி தமிழர் வாழ்ந்த
கதைகள் வந்து குத்துமே!
மண்ட லத்தே இணையி லாத
வாழ்வு கண்ட தமிழகம்
மகிமை கெட்டே அடிமைப் பட்டு
மதிம யங்கி நிற்பதேன்?
செண்டெ ழுந்தா லென்னப் பாய்ந்து
தேச முற்றும் சுற்றிநீ
தீர வீரம் நம்முள் மீளச்
சேரு மாறு சேவைசெய். 2

அன்பி னோடும் அறிவு சேர்ந்த
ஆண்மை வேண்டும் நாட்டிலே;
அச்ச மற்ற தூய வாழ்வின்
ஆற்றல் வேண்டும் வீட்டிலே.
இன்ப மான வார்த்தை பேசி
ஏழை மக்கள் யாவரும்
எம்மு டன்பிறந்த பேர்கள்
என்ற எண்ணம் வேண்டும்.
துன்ப மான கோடி கோடி
சூழ்ந்து விட்ட போதிலும்
சோறு தின்ன மானம் விற்கும்
துச்ச வாழ்வு தொட்டிடோம்!
என்ப தான நீதி யாவும்
இந்த நாட்டில் எங்கணும்
இளந்த மிழா! என்றும் நின்றே
ஏடெ டுத்துப் பாடுவாய்! 3

பணமி ருந்தார் என்ப தற்காய்ப்
பணிந்தி டாத மேன்மையும்
பயமு றுத்தல் என்ப தற்கே
பயந்தி டாத பான்மையும்
குணமி ருந்தார் யாவ ரேனும்
போற்று கின்ற கொள்கையும்
குற்ற முள்ளார் யாரென் றாலும்
இடித்துக் கூறும் தீரமும்
இனமி ருந்தார் ஏழை யென்று
கைவி டாத ஏற்றமும்
இழிகு லத்தார் என்று சொல்லி
இகழ்ந்தி டாமல் எவரையும்
மணமி குந்தே இனிமை மண்டும்
தமிழ்மொ ழியால் ஓதி நீ
மாநி லத்தில் எவருங் கண்டு
மகிழு மாறு சேவை செய். 4

ஓடி ஓடி நாட்டி லெங்கும்
உண்மை யைப்ப ரப்புவாய்;
ஊன மான அடிமை வாழ்வை
உதறித் தள்ள ஓதுவாய்;
வாடி வாடி அறம்ம றந்து
வறுமைப் பட்ட தமிழரை
வாய்மை யோடு தூய்மை காட்டும்
வலிமை கொள்ளச் செய்குவாய்;
கூடிக் கூடிக் கதைகள் பேசிச்
செய்கை யற்ற யாரையும்
குப்பை யோடு தள்ளி விட்டுக்
கொள்கை யோடு நின்றுநீ
பாடிப் பாடித் தமிழின் ஓசை
உலக மெங்கும் பரவவே
பார்த்த யாரும் வார்த்தை கேட்டுப்
பணியு மாறு சேவைசெய். 5



தமிழ னென்ற பெருமை யோடு
தலைநி மிர்ந்து நில்லடா!
தரணி யெங்கும் இணையி லாஉன்
சரிதை கொண்டு செல்லடா!
அமிழ்த மென்ற தமிழி னோசை
அண்ட முட்ட உலகெலாம்
அகில தேச மக்க ளுங்கண்
டாசை கொள்ளச் செய்துமேல்
கமழ்ம ணத்தின் தமிழில் மற்ற
நாட்டி லுள்ள கலையெலாம்
கட்டி வந்து தமிழர் வீட்டில்
கதவி டித்துக் கொட்டியே
நமது சொந்தம் இந்த நாடு
நானி லத்தில் மீளவும்
நல்ல வாழ்வு கொள்ளச் சேவை
செய்து வாழ்க நீண்டநாள்! 6

*குறிப்புரை:- நானிலம் - பூமி; (6) சேவை - தொண்டு; (6) ஏழை - வறுமை; (4) துச்சம் - இழிவு (3) தரணி - உலகம் (6) பண்டு - முற்காலம் (2) மண்டும் - நிரம்பும் (4)*

## 21. தமிழன் குரல்

'தமிழன் குரல்'எனும் தனிஓசை
தருமம் உணர்ந்திட நனிபேசும்;
அமிழ்தம் போன்றுள அழிவில்லா
அறிவே அதுதரும் மொழியெல்லாம். 1

கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைத்திடும் அன்பறமே. 2

அருள்நெறி அறிவைத் தரலாகும்;
அதுவே தமிழன் குரலாகும்;

பொருள்பெற யாரையும் புகழாது;
போற்றா தாரையும் இகழாது. 3

அன்பும் அறமும் ஊக்கிவிடும்;
அச்சம் என்பதைப் போக்கிவிடும்;
இன்பம் பொழிகிற வானொலியாம்;
எங்கள் தமிழெனும் தேன்மொழியே. 4

குற்றம் கடிந்திடக் கூடாது;
கொச்சை மொழிகளில் ஏசாது;
முற்றும் பரிவுடன் மொழிகூட்டி
முன்னோர் நன்னெறி வழிகாட்டும். 5

தமிழின் பெருமையை மறந்துவிடின்
தாரணி மதிப்பில் குறைந்திடுவோம்;
தமிழன் குரலொடு ஆர்த்திடுவோம்;
தமிழக உரிமையைக் காத்திடுவோம். 6

## *22. தமிழகம் வாழ்க*

தமிழா! உனக்கிது தருணம் வாய்த்தது
தரணிக் கெல்லாம் வழிகாட்ட
அமுதாம் என்மொழி; அறமே என்வழி;
அன்பே உயிர்நிலை என்று சொல்லும் (தமிழா) 1

சைவமும் வைணமும் சமணமும் பவுத்தமும்
தழைத்தது செழித்தது தமிழ்நாட்டில்
வையகம் முழுவதும் வணங்கிடும் குணங்களை
வாழ்ந்தவர் உன்னுடை முன்னோர்கள் (தமிழா) 2

எங்கோ பிறந்தவர் புத்தர் பெருமையை
ஏத்திப் பணிந்தவர் தமிழ்நாட்டார்;
இங்கே அங்கே என்ற வுரைவுகளை
என்றும் பிரிந்திலர் தமிழ்நாட்டார். (தமிழா) 3



ஏசு தமிழரலர் என்றகா ரணத்தால்
இகழ்ந்து விடுவதில்லை தமிழ்நாட்டார்;
பேசும் தமிழருள் கிறித்துவைப் போற்றும்
பெருமை யுடையவர்கள் பலபேர்கள். (தமிழா) 4

மகமது பிறந்தது மற்றொரு தேசம்அவர்
மகிமை விளங்குமிந்தத் தமிழ்நாட்டில்;
அகமகிழ்ந் தனுதினம் நாகூர் ஆண்டவனை
ஆரார் தொழுகிறார் அறியாயோ? (தமிழா) 5

உலகின் மதமெலாம் ஒவ்வொரு காலத்தில்
ஓடிப் புகுந்ததிந்தத் தமிழ்நாட்டில்;
கலகம் சிறிதுமின்றிக் கட்டியணைத் தவற்றைக்
காத்து வளர்த்தவர்கள் தமிழ்நாட்டார். (தமிழா) 6

தன்னுயிர் நீப்பினும் பிறர்கொலை அஞ்சிடும்
தருமம் வளர்த்தவர்கள் தமிழ்நாட்டார்;
மன்னுயிர் யாவையும் தன்னுயிர் என்றிடல்
மண்டிக் கிடப்பதுன்றன் தமிழ்மொழியே. (தமிழா) 7

கொல்லா விரதமே நல்லார் வழியென்று
கூறி நடந்தவுன்றன் குலமுன்னோர்
எல்லா விதத்திலும் எவரும் மதித்திடும்
ஏற்ற முடையதுன் இல்லறமாம். (தமிழா) 8

உலகம் முழுவதும் கலகம் உறுதுபார்!
உன்பெருங் கடமைகள் பலவுண்டு;
விலகும் படிசெய்யும் வெறிகொண்ட பேச்செல்லாம்
விலக்க விழித்தெழு வாய்தமிழா! (தமிழா) 9

இந்திய தாய்மனம் நொந்து கிடக்கையில்
இனமுறை பேசுகின்றார்! இழிவாகும்;
அந்தப் பெரியவளின் அடிமை விலங்கறுத்துன்
அன்பை நிலைநிறுத்(து) அகிலமெல்லாம். (தமிழா) 10

தமிழகம் வாழ்கநல் தமிழ்மொழி வளர்ந்தெம்மைத்
தாங்கிடும் இந்தியத்தாய் தவம் பலிக்க
குமிழும் நுரையும்என்னக் கூடி மனிதரெலாம்
கொஞ்சிக் குலவிடுவோம் குவலயத்தில். (தமிழா) 11

## *23. தமிழ் நாடு எது? தமிழன் யார்?*

வலைவீச ஆசைதரும் அலைவீசும்
வயலும்மற்ற வளங்க ளாலோ
விலைவாசிக் கவலையின்றி விருந்தோம்ப
எதிர்பார்க்கும் விருப்பத் தாலோ
தலைவாசற் கதவினுக்குத் தாள்பூட்டே
இல்லாத தமிழ்நாடென்று
பலதேசம் சுற்றிவந்த மகஸ்தனிசும்
புகழ்ந்துரைத்த பழைய நாடு! 1

பற்றொழித்த பெரியவரே பகுத்துரைக்கும்
அரசுமுறை பணிந்து போற்றிக்
கற்றறிந்த அரசர்களே காவல்செய்த
சரித்திரமே காணும் நாடு;
மற்றெரிந்த வீரனென்று மமதையுள்ள
மன்னவரை மதிக்கா நாடு;
சற்றுஒருவர் வருந்திடினும் தாம்வருந்தும்
அரசாண்ட தமிழர் நாடு. 2

வேங்கடமும் குமரியிடை விரிகடல்சூழ்
நிலப்பரப்பை வேறாய் ஆண்டு
வாங்குகிற வரிப்பணத்தின் வரையறுக்க
அரசமுறை வகுத்த தல்லால்
ஈங்குவட இமயம்வரை இந்தியரின்
நாகரிகம் ஒன்றே யாகும்;
தாங்கள்ஒரு தனியென்று நடைபோட்டுத்
தருக்கினவர் தமிழர் அல்லர். 3



விசைச்சொல்லும் உலகநடை வெவ்வேறு
நாடுகளில் விரியும் ஞானம்
பசைச்சொல்லும் பலபாஷை அறிவெல்லாம்
தமிழ்மொழியில் பலக்க வென்றே
திசைச்சொல்லும் கென்றுதனி இடங்கொடுத்தார்
இலக்கணத்தில் தெரிந்த முன்னோர்
இசைச்சொல்ல இதைப்போல வேறுமொழிக்
கிலக்கணநூல் எங்கே? காட்டு? 4

எந்தமொழி வந்திடினும் தமிழ்மொழியை
என்னசெய்யும்? என்றே முன்னோர்
வந்தபிற மொழியையெலாம் வரவேற்றுத்
தமிழ்மொழியை வளரச் செய்தார்;
செந்தமிழின் சரித்திரத்தைத் தெரியாமல்
மக்களுக்குத் திரித்துக் கூறி
இந்திமொழி வந்ததென்றே இகழ்ந்துரைப்போர்
தமிழ்நாட்டின் பெருமை எண்ணார். 5

பூச்சிபுழு உயிர்களையும் சமமென்று
போற்றினவர் தமிழ ராவார்.
பேச்சிலுள்ள வேற்றுமைக்கு மனிதர்களைப்
பிரித்துவிடத் தமிழர் பேசார்;
ஏச்சிலொரு இன்பமுள்ளோர் எக்காலும்
தமிழர்களின் இனத்தைச் சேரார்;
கூச்சலிட்டு வசையுரைப்போர் கொச்சைகளே
அதற்குநல்ல சாட்சி கூறும். 6

வேறெவரும் நுழையாமல் வேலியிட்டுத்
தமிழ்நாட்டார் வாழ்ந்த தில்லை;
கூறுபடும் பலநாட்டார் கூடிநலம்
குலவியதித் தமிழர் நாட்டில்;
மாறுபடும் பலமதமும் மருவிமனம்
கலந்ததெங்கள் தமிழன் மாண்பு;
தேறிமனம் தெளிவடைவோம்; தமிழர்களின்
பெருங்குணத்தைத் தெய்வங் காக்கும். 7

## *24. எம்மதமாயினும் சம்மதம்*

கோபமும் கொதிப்பும் குமுறிடும் படிபல
கொடுமைகள் நடக்குது வடநாட்டில்
தாபமும் தவிப்பும் தந்திடும் ஆயினும்
தமிழா! உன்குணம் தவறிடுமோ? 1

அன்னிய மதமென அடிக்கடி பழகிய
அயலுள மக்களைக் கொல்லுவதை
என்னென உரைப்பது ஏதென வெறுப்பது
எண்ணவுங் கூடத் தகுமோதான்? 2

வேறொரு மதமென அண்டையில் வசிப்பவர்
வீட்டினைக் கொளுத்துதல் வீரமதோ?
ஆறறி வுடையவர் மனிதர்கள் என்றிடும்
அழகிது தானோ? ஐயையோ! 3

பிறிதொரு மதமெனப் பெண்மையைக் கெடுப்பதும்
பிள்ளையை மடிப்பதும் பேய்செய்யுமோ?
வெறிதரும் நெறிகளை விலக்கிய உன்குணம்
விட்டிடப் படுமோ? தமிழ் மகனே! 4

அங்குள வெறியர்கள் அப்படிச் செய்ததில்
அவசரப் படுத்திடும் ஆத்திரத்தால்
இங்குள சிலர்எதிர் செய்ய நினைப்பதை
எப்படித் தமிழ்மனம் ஒப்பிடுமோ? 5

தீமையைத் தீமையால் தீர்க்க நினைப்பது
தீயினைத் தீயால் அவிப்பதுபோல்
வாய்மையின் தூய்மையின் வழிவரும் தமிழா!
வஞ்சம் தீர்ப்பதை வரிப்பாயோ? 6

அடைக்கலம் புகுந்தன அன்னிய மதம்பல
அன்புள்ள நம்தமிழ்த் திருநாட்டில்
கொடைக்குணம் மிகுந்தநம் குலத்தவர் காத்தனர்
கொள்கையை நாம்விடக் கூடாது. 7



வேற்றுமை பலவிலும் ஒற்றுமை கண்டிடும்
வித்தையிற் சிறந்தது தமிழ்நாடு.
மாற்றொரு மதத்தையும் போற்றிடும் பெருங்குணம்
மதமெனக் கொண்டவர் தமிழர்களே. 8

எம்மதம் ஆயினும் சம்மதம் என்பதை
ஏந்தி நடப்பது தமிழ்நாடு.
அம்மன உணர்ச்சியை அறமெனக் காப்பதில்
அசைந்திட லாமோ தமிழறிவு? 9

மதமெனும் பெயரால் மக்களை வதைப்பதை
மாநிலம் இன்னமும் சகித்திடுமோ?
விதவிதம் பொய்சொல்லி வெறுப்பினை வளர்த்திடும்
வெறியரைத் தமிழர்கள் முறியடிப்போம். 10

*குறிப்புரை:- தாபம் - துன்பம்; மடிப்பது - மோசம், வஞ்சம்; வித்தை - கல்வி.*

## *25. தமிழ் மக்கள்*

நிலைபெற்ற அறிவென்ற
நிதிமிக்க நல்கும்
நிறைவுற்ற அருள்கொண்ட
நிகரற்ற தெய்வம்
கலைமிக்க தமிழன்னை
கழல்கொண்டு பாடிக்
கனிவுற்ற மனமொத்த
களிகொண்டு கூடி
அலையற்ற கடலென்ன
அமைவுற்று நாளும்
அகிலத்தின் பலமக்கள்
அனைவர்க்கும் உறவாய்த்
தலைபெற்ற புகழ்கொண்டு
தவமிக்க ராகித்

தயவொன்றிப் பயமின்றித்
தமிழ்மக்கள் வாழ்வோம்;
தமிழ்மக்கள் வாழ்வோம்.

*குறிப்பு :- கழல் - திருவடி; களி - மகிழ்ச்சி; அகிலம் - உலகம்; தயவு - பக்தி, அருள்.*

## *26. பாரதி பாட்டு*

அச்சமிகும் பேடிகையின் அடிமை வாழ்வில்
அடங்கியிருந்து அறம்மறந்த தமிழர் நாட்டைப்
பச்சைமரத் தரணியெனப் பதியும் சொல்லால்
பாட்டிசைத்துப் பாலர்களும் நிமிர்ந்து நின்று,
நிச்சயமெந் தாய்நாட்டின் அடிமை வாழ்வை
நீக்காமல் விடுவதில்லை!' எனமுன் வந்து
துச்சமெனச் சுகத்தையெல்லாம் துறந்து நிற்கத்
தூண்டியது பாரதியின் சொல்லே யாகும். 1

படித்தறியா மிகஏழைக் கிழவனேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பா னாகில்
துடித்தெழுந்து தன்மெலிந்த தோளைக் கொட்டித்
துளைமிகுந்த கந்தலுடை சுருக்கிக் கட்டி,
'எடுத்தெறிய வேண்டுமிந்த அடிமை வாழ்வை
இப்பொழுதே இக்கணமே!' என்றெ‌ன் றார்த்திங்கு;
அடித்துரைத்தே ஆவேசம் கொள்வான் என்றால்
அப்பாட்டின் பெருமைசொல யாரே வல்லார்; 2

புத்தொளியிற் பழந்தமிழ்க்கோர் புதுமை பூட்டிப்
புத்துயிரும் புதுமணமும் புகுத்தி ஞானச்
சத்தியொளி மிகவிளங்கும் சொற்க ளாலே
தாய்நாட்டின் தளையறுக்கும் தவமே பாடி
எத்திசையும் இளந்தமிழர் இன்று கூடி
'இறந்தேனும் ஈன்றவளை மீட்போம்!' என்று
பத்தியொடும் அறப்போரில் முனைந்து நிற்கப்
பண்ணினது பாரதியின் பாட்டே யாகும். 3



எத்தாலும் பணம்தேடி இன்பம் நாடி
உண்டுடுத்தே இறப்பதனை இகழ்ந்து தள்ளிப்
பித்தாகித் தான் பிறந்த பரத நாட்டின்
பிணிவீட்டில் ஒன்றினுக்கே பாடிப் பாடி
முத்தாதி மணிகளேனும் சொற்க ளோடு
முப்பழத்தில் சுவைகூட்டி முனிவி லாது
சத்தான வீரத்தின் சாறும் சேர்த்துக்
கவிசமைத்த பாரதியின் தகைமை என்னே! 4

கடித்தொழுகித் துதிபாடி நலங்கள் நாடி
நரைத்திறந்து மறைந்திடும்நா வலர்போ லன்றி
வெடித்தெழுந்த பக்தியோடு பரத நாட்டின்
விடுதலைக்குப் பாடுவதே வெறியாய்க் கொண்டான்
இடித்தெழுந்து தேன்பொழியும் சொற்க ளோடும்
இளங்கதிரும் முழுமதியும் இணைந்தா லென்னப்
பொடித்துடலம் புளகமுற அச்சம் போக்கிப்
புகழ்புரியும் பாரதியின் புலமை தானே. 5

'மேனாட்டுப் புதுமொழிகள் வளர்ந்து நாளும்
மிகக்கொழுத்துப் பளபளத்து மேன்மை மேவ
மிக்ககதைப் பழந்தமிழ்த்தாய் மெலிந்தா'ளென்றும்
தாய்நாட்டைத் தமிழ்மொழியை மறந்தீர் ஐயோ!
தமிழர்களே! தளதளத்து மூச்சு வாங்கித்
தலைவணங்கி உடல்சுகித்தீர் தவத்தால் மிக்க
வானாட்டுத் தேவர்களும் அறிந்தி டாத
வளமிகுத்துச் செழு செழுத்து வாழ்ந்த நாட்டை
வறுமைதரும் அடிமையினில் வைத்த ரென்று
பாநாட்டிப் பலவழியிற் பாடிப் பாடிப்
படித்தவுடன் பதைபதைக்க வீரமூட்டும்
பாரதியின் பாடல்களின் பண்தான் என்னே! 6

"பாலொழுகும் சிறுகுதலை மகனைப் பார்த்துப்
'படையெடுத்தார் பகையாளர்; மகனே! நீபோய்
வேலொழுகும் போர்க்களத்தில் வெல்வா யன்றேல்
வெம்படையை மருமத்தில் வாங்கென்'றேவும்

சீலமிகும் பெண்மணிகள் திகழ்ந்த நாட்டைச்
சிற்றடிமைக் கொப்பிவிற்றுத் தின்றீர்!" என்று
தாலுழுது பறைசாற்றித் தமிழ்ப்பா வோதித்
தட்டியெழப் பாரதிதான் கவிசெய் தானே! 7

"அருமகனைத் தேர்க்காலில் அரைத்த வேந்தும்
பழியஞ்சித் தன்கையை அரிந்த கோனும்
தருமமிலை கோவலனைக் கொன்ற தென்று
தானறிந்த அக்கணமே சவமாய் வீழ்ந்த
பெருமையுள்ள திறல்வேந்தர் பின்னே வந்தீர்
பித்தடிமைக் குற்றேவல் பிழைத்தீர்' என்றே
உருகிமனம் விரிந்துயரும் கவிக ளாலே
உணவளித்த பாரதியின் உரைதான் என்னே! 8

பாரிமுதற் சடையப்ப வள்ள லென்று
பாவலர்கள் நாவிலுறை பலபேர் வாழ்ந்து
சீரிலகும் தமிழ்மொழியின் இனிய ஓசை
திசையனைத்தும் போயொலிக்கச் செய்த நாட்டில்
ஊறியநற் சுவையொழுகும் கவிக ளாலே
ஊக்கமிகத் தமிழ்நாட்டிற் குணர்வைத் தந்த
பாரதியார் மிகக்கொடிய வறுமை மேவப்
பார்த்திருந்த தமிழருற்ற பழிதான் என்னே! 9

சோற்றினுக் கறிவை விற்றுத்
தூர்த்தரைப் புகழ்ந்து பாடிச்
சோம்பரைச் செல்வ ரென்று
தொழுதுடல் சுகித்து வாழ்ந்து
கூற்றினுக் குடலம் போகக்
குப்பையிற் கவிகள் சோரக்
குறிவிடா திறந்து போகும்
கவிகளின் கூட்டம் சேரார்
வேற்றவர்க் கடிமை நீங்கும்
விடுதலை வரமே வேண்டி
வீரமும் ஞானம் பொங்கச்
சக்தியின் வேள்வி பாடி



நாற்றிசைத் தமிழ ரெங்கும்
நாட்டினைப் பணியச் செய்த
நாவலர் சுப்ர மண்ய
பாரதி நாமம் வாழ்க! 10

*குறிப்புரை:- குற்றேவல் - அடித்தொண்டு; கோன் - அரசன்; திறல் - வெற்றி; சவம் - பிணம்; தூர்த்தரை - கொடியோரை, வஞ்சகரை.*

## 27. தமிழ் எனத் துலங்க வைப்போம்

தமிழன்னை திருப்பணி செய்வோமே
தரணிக்கே ஓரணி செய்வோமே
அமிழ்தம் தமிழ்மொழி என்றாரே!
அப்பெயர் குறைவது நன்றாமோ? 1

அன்பு நிறைந்தவள் தமிழன்னை
அருளை அறிந்தவள் தமிழன்னை
இன்பக் கலைகள் யாவையுமே
ஈன்று வளர்த்திடும் தேவியவள். 2

பக்தி நிறைந்தது தமிழ் மொழியே
பரமனைத் தொடர்வது தமிழ் மொழியே
சக்தி கொடுப்பவள் தமிழ்த் தாயே
சமரசம் உரைப்பவள் தமிழ்த்தாயே. 3

வண்ணம் மிகுந்திடும் மனமுடையாள்
வாய்மையை வணங்கும் இனமுடையாள்
தண்மை அளித்திடும் இலக்கியத்தாள்
தாரணி புகழ்ந்திடும் இலக்கணத்தாள். 4

மாநிலம் முழுதும்ஓர் சமுதாயம்
மக்களுக் கெல்லாம் ஒருநியாயம்
தானென அறிஞர்கள் தலைவணங்கும்
தருமம் வளர்த்தவள் தமிழணங்கே. 5

அந்நிய மொழிகளை அருவருக்கும்
அற்பத் தனங்களை அவள் வெறுக்கும்
நன்னயம் மிகுந்தவள் தமிழ் மாதா
நாகரி கத்தின் தனித் தூதாம். 6

பற்பல மொழிகளைப் பகுத்தறிந்தாள்
பாருள அறிவினைத் தொகுத்துரைப்பாள்
அற்புத மாகிய மனப்பெருமை
அடங்கிய தேதமிழ்த் தனிப்பெருமை 7

மன்னுயிர் அனைத்தையும் தன்னுயிர்போல்
மதிப்பது தமிழ்மொழி முன்னுரையாம்
தன்னலம் துறந்திடும் தகவுடையாள்
தவநெறி வாழ்க்கையின் புகழுடையாள். 8

அந்நிய வாழ்க்கையின் ஆசையினால்
அன்னையை மறந்தோம் நேசர்களே!
முன்னைய பெருமைகள் முற்றிலுமே
முயன்றால் தமிழகம் பெற்றிடுமே 9

புதுப்புது ஒளிகளில் அலங்கரிப்போம்
பூரணம் தமிழ்எனத் துலங்கவைப்போம்
மதிப்புடன் படித்தவர் மகிழ்ந்திடுவார்
மாநிலத் தறிஞர்கள் புகழ்ந்திடுவார். 10

அன்னிய மொழியே தினம்பேசி
அன்னையைப் பணிந்திட மனம்கூசி
இன்னமும் இருந்தால் தமிழ்மொழியே
இறந்திடும் உனக்கது பெரும்பழியே. 11

தமிழன் என்பதை மறக்காதே
தாய்மொழிப் பெருமையைத் துறக்காதே
'அமிழ்தம் தமிழ்மொழி' ஐயமில்லை
அகிலம் நுகர்ந்திடச் செய்திடுவோம். 12

*குறிப்புரை:- தகவு - உரிமை (8); நேசம் - அன்பு; (9) அகிலம் - நிலவுலகம், பூமி. (12)*



## 28. தமிழிசையின் தத்துவம்

'இசை' எனல் கருத்துடன் ஓசையும் இசைவதாம்
'கற்றலில் கேட்டலே நன்றெ'னும் கட்டுரை
படிப்பிற்கு மட்டுமா? பாட்டிற்கும் உண்டு.
படித்துக் கற்றிடும் அறிவைப் பார்க்கினும்
கேட்டுக் கற்றிடும் அறிவே கெட்டியாம்.

என்னும் தத்துவம் இசையினால் பலம்பெறும்
செவிவழி நுழைந்தே உணர்ச்சியைத் திரட்டி
அறிவைத்தேடும் ஆவலுண் டாக்கி
எண்ணச் செய்கிற ஓசையே இசையாம்.
ஓசைகள் மட்டுமே உணர்ச்சிஉண் டாக்கலாம்.

அழுவதற் கென்றோர் ஓசையை அறிவோம்;
சிரிப்பதைக் காட்டும் சத்தமும் தெரிவோம்;
அச்சம் குறிக்கிற ஒலியையும் அறிவோம்;
அதிசயப் பட்டால் அதற்கொரு தனிஒலி;
ஐயம் வினாக்களும் ஓசையால் அறியலாம்;

அபயக் குரலையும் ஓசையால் அளக்கலாம்;
எல்லா உணர்ச்சியும் ஓசையால் எழலாம்;
எனினும் ஓசையே இசை ஆகாது.
'சங்கீதம்' என்பது ஓசையின் சங்கதி.
சப்த சுரங்களைச் சமர்த்தாய்க் கலந்து

நீட்டலும் குறுக்கலும் தெளித்தலும் செய்து
நீரவல் செய்து பரவல் நிரப்பிக்
கற்பனை மிகுந்த ஓசைகள் காட்டவே
சாமான்ய மாகச் 'சங்கீதம்' என்பது.
அதிலே மட்டுமோர் ஆனந்த மிருக்கலாம்.

நாதப் பிரம்மமும் அதிலே நாடலாம்;
அதைப்பற்றி இங்கே ஆராய்ச்சி இல்லை;
ஓசையை மட்டும் ரசிப்பவர் உண்டு.

ஆனால் அவர்கள் அதற்கெனப் பழகினோர்.
அப்படிப் பழகினோர் மிகச்சிலர் ஆவர்;

அவர்களைப் பற்றியும் அக்கறை இல்லை.
பொதுஜன மனத்தில் அறிவைப் புகட்ட
இனிய ஓசையால் உணர்ச்சியை எழுப்பப்
'பாடுவோன்' கருத்தைக் 'கேட்போன்' பருக
எண்ணமும் ஓசையும் இசைவதே 'இசை'யாம்

இசைப்பவன் கருத்தும் கேட்பவன் எண்ணமும்
ஒன்றாய்க் கலப்பது ஓசையால் அன்று.
சொல்லே அதற்குத் துணையாய் நிற்பது.
அந்தச் சொல்லும் சொந்தச் சொல்லாம்;
தாய்மொழி ஒன்றே தனிச்சுவை ஊட்டும்.

அவரவர் மொழியில் அவரவர் கேட்பதே
'இசை' எனப்படுவதன் இன்பம் தருவது.
புரியாத மொழியில் இசையைப் புகட்டல்
கண்ணைக் கட்டிக் காட்சி காட்டுதல்
தமிழன் சொந்தத் தாய்மொழிச் சொல்லில்

இசையைக் கேட்க இச்சை கொள்வதே
'தமிழிசை' என்பதன் தத்துவ மாகும்.
தத்துவம் இதனை மனத்தில் தாங்கி,
புதுப்புது 'மெட்டை'யும் இசையில் புகுத்திப்
பழைய 'சிந்துகள்' 'பதங்கள்' 'வண்ணமும்'

தமிழின் சொந்தச் சந்தம் பலவும்
அழிந்துபோ காமல் அவற்றையும் போற்றித்
'தமிழிசை' வளர்ப்பது தமிழன் கடமையாம்.
சங்கீ தத்தையும் தமிழன் கைவிட்டான்.
சரித்திரம் அறிந்த சத்தியப் படிக்கு

யாழின் விதங்களும், குழலினம் அனைத்தும்,
வாத்தியக் கருவிகள் வகைகள் பலவும்,



ஏழு சுரங்களை இயக்கும் விதமும்,
'கர்நாடகத்துச் சங்கீதம்' என்றே
அழைக்கப் படுகிற அந்தக் கலையும்

தமிழன் ஆதியில் வளர்த்துத் தந்ததே.
இன்றைய தினத்திலும் இந்தக் கலைகளில்
தலைசிறந் துள்ளவன் தமிழனே யல்லவா?

## 29. செழித்து நிற்பது செந்தமிழ்

"தன்குஞ்சு ஒன்றே பொன்குஞ்சு என்று
கன்னங் கறுத்த காக்கையும் கருதும்"
என்னும் பழமொழி இயல்புக் கிணங்க
அவரவர் மொழியே அவரவர்க் குயர்ந்ததாம்.
ஆயினும் தமிழை அதற்காய்ப் புகழ்ந்திடோம்.

பழமை மிக்க தமிழெனும் மொழியாம்.
ரசங்கள் நிறைந்த ராமா யணத்தை
வான்மீகி முனிவன் வரைந்த போதே
தமிழர் நாட்டைத் தனியே புகழ்ந்தான்;
ஆட்சியின் சிறப்பையும் அதிலே சொன்னான்.

வான்மீகி காலம் வரையறை அற்றது;
அதற்கும் முன்னால் ஆண்டனர் தமிழர்;
இலக்கண அமைப்பிலும் இலக்கியச் சிறப்பிலும்
தனிப்பட்டுயர்ந்தது தமிழ்மொழி என்றே
ஆராய்ந்தறிந்த அனைவரும் சொல்லுவர்.

எந்த மொழியையும் இகழ்ந்திடாத் தமிழன்
பற்பல பாஷைகள் நன்றாய்ப் படித்தும்
அறிவையே நாடி அலசிப் பார்த்தும்
உலகத்தி லுள்ள உயர்ந்த கருத்துகள்
எல்லாம் நிறைந்த இலக்கியம் உள்ளதாய்ச்

சேர்த்து வைத்த செல்வம் தமிழ்மொழி
இன்று நேற்று ஏற்பட்ட தன்று;

மூவேந்தர் ஆட்சிக்கு முன்னா லிருந்தே
இந்திய நாட்டிலும் அந்நிய இடத்திலும்,
திரவியம் தேடித் திரைகட லோடியும்,

கப்பல் ஓட்டிக் கடலைக் கடந்தும்,
அந்நிய மன்னர் அழைப்புக் கிணங்கியும்,
எவரும் மதித்தே எதிர்கொளும் இனமாய்,
எங்கும் சென்றே எவரொடும் பழகி
ஆண்டுகள் பற்பல ஆயிர மாக

வாழ்ந்த தமிழர் வருந்திச் சேர்த்தது.
உலக வழக்குடன் ஒட்டியே நின்று
'கன்னித் தமி'ழென இன்னும் களிக்கப்
புதுப்புது அறிவுகள் புகுதற் கிடந்தர
எண்ணிச் செய்த இலக்கணம் உள்ளதாய்,

உண்மை அறிவில் ஊன்றிய வேருடன்
பருத்துப் படர்ந்த பற்பல கிளையுடன்
விழுதுகள் எண்ணில வெவ்வேறு தாங்க
ஊழிக் காற்றே உரத்தடித் தாலும்
அசைக்க முடியா ஆல மரம்போல்

நேர்ந்தவர்க் கெல்லாம் நிழலே கொடுத்தும்
அலுப்பைத் தீர்த்தும் அமைதியைத் தந்தும்
கவிதையும் காட்டி, களிக்கச் செய்திடச்
செழித்து நிற்பது செந்தமிழ்ச் சிறப்பு;
தமிழைப் போற்றுதல் தமிழரின் கடமை.

தமிழின் வளர்ச்சியை மனத்தில் தரித்தும்
அந்நியர் அறிவையும் தமிழில் ஆக்கியும்
அவசிய மானால் அருவருப் பின்றிப்
பிறமொழிப் பதங்களைத் தமிழில் பிணைத்தும்
தொழில்முறை அறிவுகள் தமிழில் தொகுத்தும்



ஏனைய நாட்டின் எல்லா அறிவும்
தமிழில் உண்டெனத் தருக்கும் படியாய்ச்
செய்து வைப்பதே தமிழ் மொழிச் சேவை.

குறிப்புரை:- எண்ணில - அளவற்ற; தருக்கு - ஆணவம்; பாஷைகள் - மொழிகள்.

## 30. கவிதை என்றால் என்ன?

அசதியைக் கிள்ளி, அறிவைக் கிளப்பி,
அலையும் மனத்தை அடக்கி, நிறுத்தி,
இன்ப துன்ப உணர்ச்சிகள் எழுப்பி,
நன்மை தீமையை நன்றாய் விளக்க
இல்லாத ஒன்றையும் இருப்பதைப் போலவே

மனக்கண் முன்னால் மலரச் செய்தே
இருக்கிற ஒன்றையும் இல்லாத தேபோல்
மனத்தை விட்டு மறையச் செய்து,
வாழ்க்கைக் குதவும் நல்ல வழிகளில்
ஊக்கம் கொல்லும் உறுதியை ஊட்டப்

பாடுபடாமல் பாடம் பண்ணவும்
நினைவில் எளிதாய் நிற்கவும் தக்கதாய்
இணைத்த சொற்களே 'கவிதை' எனப்படும்.
'கவிதை' என்பது கற்பனை உள்ளது;
கூட்டியும் பேசும்; குறைத்தும் கூறும்;

பொய்மையும் வாய்மையே போலப் பொலிவுற
அறங்களைப் புகட்டலே அதனுடை நோக்கம்.
எதுகை மோனை இலக்கணம் பார்த்தும்
பதங்களை அடுக்கிப் பாட்டெனச் செய்தும்
உள்ளதை உள்ளதே போல உரைக்கும்

கதையோ பாட்டோ கற்பனை யில்லையேல்
ஐந்தும் மூன்றும் ஆறு என்கிற
கணக்கே யாகும்; கவிதை யாகாது.

கற்பனை மிகுந்த கவிதைகள் மிகுந்தது
தமிழ்மொழிக் குள்ள தனிப்பெரும் சிறப்பு!

## 31. தமிழைப் பேணுவோம்

பாஷைக ளெல்லாம் பசையற நாணிக்
கூசிக் கூசிக் குறைபடச் செய்யும்
வாசத் தமிழை வரையிலாத் தொன்மையை
வீசும் தமிழை விரிந்த கடலினைத்
தேனினும் பாகினும் தெள்ளிய அமுதினும்

எனினும் எதனினும் இனித்திடும் தமிழைத்
தின்னத் தின்னத் தெவிட்டாத் தமிழைப்
பன்னப் பன்னப் பலக்கும் தமிழைக்
கொள்ளக் கொள்ளக் குறையாத் தமிழைக்
கள்ளக் கபடுகள் இல்லாத் தமிழைப்

படிக்கப் படிக்கப் பயனேதந்து
குடிக்கக் குடிக்கக் குறையா அமுதை
என்தாய் மொழியினை என்னுடைத் தமிழை
உன்தாய் மொழியினை உம்முடைத் தமிழை
எம்மையும் உம்மையும் மற்றுமிங் கெவரையும்

செம்மையாம் நம்முடைச் சிறுபிரா யத்தினில்
தொட்டிலில் விட்டுக் கட்டிலில் வைத்துத்
தோளிலும் மார்பிலும் தூக்கித் திரிந்து
பாலூட்டி வளர்த்த பாவையாம் தமிழைத்
தாலாட்டி வளர்த்த தாயாம் தமிழைச்

சீராட்டி வளர்த்த சீர்பெறும் தமிழைப்
பாராட்டி வளர்த்தப் பழையதோர் தமிழைக்
கோவண முடுத்துப் பாவாடை தந்த
தேவியாம் தமிழைத் தெய்வநற் றமிழை
ஆசையாம் மனைவியை அகத்தினில் விட்டு



வேசியை விரும்பும் வெறியரைப் போன்ற
பாஷையை மறந்த பாதகர் பிறந்து
தேசமிந் நாட்டின் தீவினை யாலே
சீச்சீத் தமிழெனச் சீறிப் பழித்து
நாசியை நீட்டி நாய்போல் விழுந்து.

ஏசித் திரியும் இழிவுடை மாக்கள்
பேசவும் கூசிடும் பேயர்கள் பிறந்து
தன்னை வளர்த்த தமிழைப் பேசுதல்
குன்றுந் தொழிலெனக் கூசியே நின்று
பன்னப் பன்னப் பல்லைக் காட்டிடும்

சின்னஞ் சிறியவர் பிறந்தத னாலே
தாயை மறந்த தடியர்கள் போல
வாயைத் திறந்தொரு வார்த்தை சொல்லவும்
உரிமையாம் பாஷையைத் தெரியா திருப்பது
பெருமையென் றெண்ணும் பேயெனு மாக்கள்

குங்குமம் சுமந்த கழுதையே போலத்
தம்முடைப் பாஷையைத் தாமுண ராமல்
அத்துடன் அதனை அவமதித் தேசும்
பித்தரும் பதரெனும் சுத்தநிர் மூடர்கள்
பிறந்தத னாலே பெருமை மறந்து

சிறந்த நாளும் சீரும் குறைந்து
மண்ணிற் கிடக்கும் மணியே போலும்
எண்ணெயிற் றோய்த்த எழுத்தே போலும்
அற்பரை அண்டிய விற்பனர் போலும்
ஆதர வில்லா வித்தையே போலும்

அணைப்பவ ரில்லாக் குழந்தையே போலும்
அநுபவ மில்லா அறிவே போலும்
மங்கிக் கிடக்கும் மருவிலாத் தமிழை
இங்கிதத் தமிழை இனிமையாம் தமிழை
அந்த நாளினிற் சந்திர முடியோன்

சுந்தரப் படுத்த வந்துநின் றருளி
விருத்தியே செய்யக் கருத்தினி லெண்ணிப்
பெருத்த கேள்வியர் பெரியவர் சபையெனச்
சங்கரன் தானே அந்தத் தலைவனாய்த்
தங்கியே நடத்திய தனிப்பெரும் சபையெனச்

சுத்தரும் சித்தரும் பக்தரும் துதிக்க
இத்தரை யெல்லாம் இசைகொண்டு நின்றே
உலகெலாம் அழியினும் விலகிடாப் புகழொடும்
அலகிலாக் கல்விக் களஞ்சிய மாகித்
தெய்வப் பலகையைத் தன்னிட மடக்கி

ஐயமில் லாத அருந்தமி ழளித்த
சித்திரச் சபையாம் மெய்த்திருச் சபையாம்
முத்தமிழ்ச் சங்கம் விளங்கிய தமிழைத்
தாயெனப் பேணித் தமிழர்கள் யாவரும்
ஓயா துழைத்தே ஒப்பிலா மொழியெனப்

புதுப்புதுக் கவியும் புகழ்பெரு நூல்களும்
விதவிதம் படைத்து வேறுள நாட்டவர்
யாவரும் வியக்க அரியா சனத்தில்
மேவிடச் செய்ய விரைகுவம் இன்றே.

*குறிப்புரை:- மங்குதல் - ஒளியின்மை; மகுவிலா - கலத்தவிலா; இங்கிதம் - இனிமை.*

## *32. தமிழ் பாடி வாழ்வோம்*

தன்நாட்டுத் தாய்மொழியில் எவரும் கேட்கத்
தமிழ்நாட்டில் தமிழ்ப்பாட்டு வேண்டுமென்ற
நன்னாட்டத் துடன்ராஜா நம்சர் அண்ணா
மலையவர்கள் அதற்காகப் பரிசு நாட்டத்
தென்னாட்டுச் சிதம்பரத்தில் அறிஞர் கூடித்
தமிழ்மொழிக்குத் தேவையென்று தீர்மானித்தால்
எந்நாட்டு யாராரோ எங்கோ கூடி
ஏசுவதும் பேசுவதும் என்ன வித்தை 1



வந்தளந்தப் பிறமொழிக்கும் வரவு கூறி
வகைசெய்து வாழ்வளித்து வரிசை யெல்லாம்
தந்தவர்கள் தமிழரைப்போல் வேறு யாரும்
தாரணியில் இணைசொல்லத் தருவா ருண்டோ?
அந்தப்பெருங் குணத்திலின்னும் குறைவோ மில்லை;
ஆனாலும் தமிழினங்கள் வாழ வேண்டின்
சொந்தமொழிக் கலைகளெல்லாம் சுருங்கித் தேயப்
பார்த்திருந்தும் சோம்புவதும் அறிவோ சொல்லீர். 2

முக்கிமுக்கிப் பயின்றுபல முயற்சி செய்து
முக்காலும் வாக்குரைத்து மூச்சு வாங்கத்
திக்குமுக்க லாடுகின்ற பாஷைக் கெல்லாம்
சிறப்பாகும் சங்கீதத் திறமை யென்றும்
சிக்குமுக்காம் உச்சரிப்பு சிறிதும் வேண்டாச்
சீரிலகும் எழுத்தியல்பு சேர்ந்த தாகித்
தக்கமிக்கோர் இனிமையெனும் தமிழில் நாதச்
சங்கீதம் குறைவென்றால் தரிக்க லாமோ? 3

நாதமெனும் பிரமத்தைப் பணிவோம், ஆனால்
நாமறியா மொழியில்நமக் கேது நாதம்?
கீதமென்று புரியாத பாட்டைக் கேட்டுக்
கிளர்ச்சிபெறா உணர்ச்சியிலே கீதம் ஏது?
வாதமென்ன? இதிலெவர்க்கும் வருத்தம் ஏனோ?
வாய்மணக்கப் பிறமொழியை வழங்கி னாலும்
ஓதியதும் உணர்ந்ததுவும் தாய்ப்பா லோடும்
ஊட்டியதாம் தாய்மொழிபோல் உதவா தொன்றும். 4

கலையென்றால் உணர்ச்சிகளைக் கவர வேண்டும்;
களிப்பூட்டி அறிவினைப்போய் கவர வேண்டும்;
நிலைகொள்ளார் சிந்தனையை நிற்கச் செய்து
நீதிநெறி தெய்வத்தினைப் பூட்டற் கன்றோ?
விலையில்லாப் பெருமைபல உடைய தேனும்
விளங்காத பாஷையிலே பாட்டைக் கேட்டுத்
தலையெல்லாம் சுளுக்கேற அசைத்திட் டாலும்
தனக்கதுவோர் கலையின்பம் தருவ துண்டோ? 5

'சங்கீதம் பாடுதற்கும் மொழிக்கும் என்ன
சம்பந்தம்?' என்றெவரும் சாதிப் பாரேல்,
இங்கேதும் தடையில்லை; ஏற்றுக் கொள்வோம்;
எல்லாமே தமிழ்ப்பாட்டா யிருந்தா லென்ன?
சிங்கார வாதங்கள் பலவும் பேசிச்
சிறப்பான முயற்சியிதைச் சிதைக்க லாமோ;
தங்காமல் தயங்காமல் தளர்ந்தி டாமல்
தமிழ்நாட்டார்; இச்செயலைத் தாங்க வேண்டும். 6

கேட்டிருந்தார் பாடினவர் எல்லாம் சேர்ந்து
கெடுத்துவிட்ட காரியத்தைக் கிண்டிக் கிண்டி
நாட்டிலின்னும் இதற்குமொரு சண்டை யின்றி
நல்லஒரு தமிழ்ப்பண்ணை நடத்த வேண்டும்;
பாட்டினுடன் இலக்கியமும் படியப் பாடிப்
பருந்தோடு நிழல்செல்லும் பான்மை காப்போம்;
கூட்டமிட்டுப் பேசிவிட்டு மறந்திடாமல்
குற்றமிதைத் தமிழ்நாட்டிற் குறைக்க வேண்டும். 7

பலநாட்டுச் சங்கீதம் நமக்கு வேண்டும்;
பற்பலவாம் முறைகளையும் பழக வேண்டும்;
விலைகூட்டிக் கலையறிவை வாங்கி யேனும்
விதம்விதமாய்த் தமிழ்மொழியில் விரிக்க வேண்டும்;
அலைநீட்டும் கடல்கடந்த அறிவா னாலும்
அத்தனையும் தமிழ்வழியில் ஆக்க வேண்டும்;
நிலைநாட்டித் தமிழ்க்கலைகள் வளர்ச்சிக் கென்றே
நிச்சயமாய் உழைக்கஒரு நிலையம் வேண்டும். 8

ஆதலினால் தமிழ்நாட்டில், தமிழ்ப்பாட்டிற்கே
ஆதரவிங் ககத்தியமாய் அதிகம் வேண்டும்;
காதலினால் தாய்மொழியைக் காப்ப தன்றிக்
கடுகளவும் பிறமொழிமேற் கடுப்ப தல்ல;
தீதல்லா திம்முயற்சி சிறப்புற் றோங்கத்
திருவருளைத் தினந்தினமும் தொழுது வாழ்த்தி



வாதெல்லாம் விலக்கி, கலைவாண ரெல்லாம்
வல்லநல்ல தமிழ்பாடி வாழ வேண்டும். 9

*குறிப்புரை:- சிக்கு - தடை; வாதம் - சண்டை, சபதம்; அகத்தியம் - கட்டாயம், அவசியம்.*

## *33. திருக்குறள் பெருமை*

அமிழ்தமென்று மிகமகிழ்ந்தே
அறிஞர்யாரும் போற்றிட
அறிவறிந்த மொழிஇதென்றே
அகிலமெங்கும் ஏற்றிடும்
தமிழ்மொழிக்கிங் கழிவிலாத
நன்மைகூட்டி வைத்ததும்
தரணியெங்கும் இணையிலாத
இல்லறத்தை தந்திடும். 1

அமைதிமிக்க ஜனசமுகம்
தமிழரென்ற கீர்த்தியும்
அடிமையற்ற குடிமைபெற்ற
அரசுகண்ட நேர்த்தியும்
இமையவர்க்கும் நெறிபுகட்டும்
எங்கள் தெய்வ வள்ளுவன்
இங்குரைத்த குறள்களென்ப
ஈந்தநன்மை அல்லவோ! 2

காடுசென்று குகையடைந்து
கண்கள்மூடி எண்ணியும்
காவிகட்டி ஓடெடுத்துக்
கஷ்டவாழ்க்கை பண்ணியும்
தாடிவைத்து மொட்டைதட்டித்
தவசியென்ற பேருடன்
தரணிமெச்ச ஊர்கள்சுற்றித்
தருமபோதம் கூறியும். 3

கூடுவிட்டுக் கூடுபாயும்
சித்துசெய்யக் கோரியும்
கோடிகாலம் வாழ எண்ணிக்
காயகற்பம் தேரியும்
தேடுகின்ற உண்மையாவும்
ஓடி வந்து நிற்குமே
தெய்வவாக்கு வள்ளுவன்
திருக்குறள்கள் கற்கவே. 4

அன்புதந்த அருள்விளக்கி
அறிவுசொல்லும் அறமொழி
ஆன்மஞானம் என்றுசொல்லும்
அதையும்சேரப் பெருவழி
துன்பமென்ற உலகவாழ்வில்
துயரம்ஏதும் வந்திடில்
துணைபுரிந்தே அருகிருந்து
தோதுசொல்லும் மந்திரி. 5

இன்பம்என்று தவறுசெய்து
நோய்கள்சேரக் கண்டதும்
இடைபுகுந்து மாற்றுரைத்தே
இடரைநீக்கும் பண்டிதம்.
தென்புமிக்க தூயவாழ்வின்
தெளிவுகாட்டும் வண்பதாம்
தெய்வஞான வள்ளுவன்
திருக்குறள்கள் என்பவாம். 6

## 34. காத்திடலாம் தமிழ் மொழியை

சீர்சிறந்த தமிழர்களின் புத்தாண் டிந்தச்
சித்திரையில் தொடங்குகிற திறத்தால் இன்று
பார்புரந்த மனுநீதிச் சோழன் பண்டோர்
பசுவினுக்கும் சமதர்மம் பரிவாய்ச் செய்தான்!



ஏர்சிறந்த ஒருமகனை ஈடாய்த் தந்தான்;
இணையறியாப் பெரும்புகழைத் தமிழுக்கு ஈந்தான்
தேர்சிறந்த தியாகேசன் திருவா ரூரில்
திகழுமிந்தச் சபைதனிலோர் சபதம் செய்வோம்! 1

அமிழ்தமென எவ்வுயிர்க்கும் அன்பு செய்தே
அருள்நெறியைப் புகட்டுவதே அறமாய்க் கொண்ட
தமிழ்மொழியின் பெருங்குணத்தின் தாரா ளத்தைத்
தடுக்கவரும் துடுக்குகளைத் தவிர்க்க வேண்டும்.
நமதருமை முன்னோர்கள் நெடுநா ளாக
நடத்திவந்த நன்னெறியை நலியப் பேசி
அமைதிமிக்க தமிழ்வாழ்வைக் குலைக்க எண்ணும்
அநியாயம் முழுவதையும் அகற்ற வேண்டும். 2

பாண்டியரும் சோழர்களும் சேர மன்னர்
பாடுபட்டுப் பயிர்செய்த நாக ரீகம்
நீண்டுயர்ந்து கோபுரங்கள் வடிவாய் நின்று
நிரந்தரமாம் பரம்பொருளின் நினைவு கூட்டித்
தூண்டியநல் லுணர்ச்சிகளின் தொகுப்பே யன்றோ
தொன்றுதொட்டு இன்றளவும் தொடரும் நூல்கள்?
ஈண்டிவைகள் யாவினையும் இகழ்வோ மானால்
என்னமிச்சம் தமிழ்வளர்ச்சி இனிமை உண்டோ? 3

கோயில்களின் பெரும்பயனைக் குறைத்துப் பேசிக்
கும்பிடுவோர் நம்புவதைக் குலைத்தும் ஏசித்
தூயவழி வாழ்வதற்கு நல்லோர் கண்ட
துறவுமனப் பொறையறிவைத் தோஷம் சொல்லி
வாயில்வந் தகொச்சைகளால் வசைகள் வீசி
வகுப்புகளில் வெறுப்புகளே வளரச் செய்யும்
ஞாயமற்ற பேச்சுகளை நீக்கா விட்டால்
நம்முடைய தமிழ்வாழ்வு நாச மாகும். 4

முன்னோர்கள் யாவரையும் மூடரென்றும்
மூவேந்தர் பரம்பரையும் அமைச்சர் முற்றும்

சொன்னவர்கள் சூழ்ச்சிகளைச் செய்தா ரன்றிச்
சொந்தபுத்தி இல்லாத வீணர் என்றும்
பொன்னாலும் புகழாலும் மயக்க வொண்ணாப்
புலவர்களின் இலக்கியங்கள் பொய்க ளென்றும்
என்னேரம் பார்த்தாலும் இகழ்வே யானால்
எப்படிநம் தமிழ்மொழிக்கு வளர்ச்சி ஏறும்? 5

ஏனென்று கேட்பதற்கோ எவரும் இன்றி
எழில்மிகுந்த தமிழ்வாழ்வை இகழ்ந்து பேசிக்
கோனென்ற யாவரினும் குணமே மிக்க
மூவேந்தர் நெறிமுறைக்கும் குற்றம் கூறும்
நானென்ற அகங்காரம் நம்மைச் சூழ
நல்லதமிழ் வளர்ச்சியினி நமக்கும் உண்டோ?
தேனென்ற நமது மொழி வாழவேண்டின்
தீவிரமாய் இந்நிலையைத் தீர்க்க வேண்டும். 6

நித்தியமாம் சத்தியமே நெறியாய்க் கொண்டு
நெற்றிக்கண் ஈசனுக்கும் குற்றம் காட்டும்
சுத்தமுள்ள பெரும்புலவர் வழியில் தோன்றிச்
சுகபோக ஆசைகளைத் துறந்து வாழ்ந்த
எத்தனையோ பெரியவர்கள் இசைத்த நூல்கள்
ஏளனத்தால் இழிவடைய விட்டோம் இந்நாள்
அத்தனையும் அழித்தொழிய விடுவோ மானால்
அதன்பிறகு தமிழ்வளர்ச்சி ஆசை என்னாம்? 7

புதுமையென்றும் புரட்சியென்றும் புனைந்து கூறிப்
புவியறிந்த உண்மைகளைப் பொருள்செய் யாமல்
முதுமொழிகள் யாவையுமே மோசம் செய்யும்
மூடபக்தி யாகுமென முரண்டு சொல்லிச்
சதிபுரியத் துணிந்து விட்டோம்; தமிழ்த்தாய் நொந்து
தவிக்கின்றாள்; தான்வளர்த்த தருமம் எல்லாம்
கதியிழந்து போகுமெனக் கண்ணீர் கொட்டிக்
கதறுகின்றாள் அவள்பெருமை காப்போம் வாரீர்! 8



விஞ்ஞானக் கலைகளெல்லாம் விரிந்திட் டாலும்
வேறெவர்க்கும் அழிவுசெய்ய விரும்பி டாத
மெய்ஞ்ஞானக் கருணைவழி காக்கும் மேன்மை
மிகப்படைத்த தமிழ்மனசை மிகவும் தூற்றி
அஞ்ஞானப் பொய்களையே அடுக்கிக் கொண்டிங்
கருந்தமிழின் பெருவாழ்வை அழிக்க எண்ணும்
பொய்ஞ்ஞானத் தீமைகளைப் போக்க வேண்டும்
புத்தாண்டுச் சபதமிதைப் புனைவோம் இன்று. 9

தெள்ளியநல் அறங்களையே தெளிவாய்ச் சொல்லித்
தினையளவும் பிசகாமல் நடந்து காட்ட
வள்ளுவனே மறுபடியும் வந்தான் என்ன
வழிகாட்டித் திருக்குறளை வாழ்ந்த வள்ளல்
பிள்ளைமனப் பேரறிஞன் பெம்மான் காந்தி
பெருநெறியே தமிழ்த்தாயின் பேச்சா மென்று
கள்ளமற நாமறிந்து கொள்வோ மானால்
காத்திடலாம் தமிழ்மொழியை வளர்ச்சி காணும். 10

குறிப்புரை:- *எழில்மிகுந்த - பேரழகு; (6) மூவேந்தர் - சேர, சோழ, பாண்டியர்; தினையளவு - கடுகளவு; பிசகாமல் - தவறாமல் (10); தோஷம் - குற்றம் (4); பரிவாய் - பக்குவமாய் (1); நான் என்ற அகங்காரம் - நான் என்கின்ற ஆணவ முனைப்பு (செருக்கு) இது மனிதனுக்குக் கூடாது. "யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கும் உயர்ந்த உலகம் புகும்" என்பது வள்ளுவர் வாக்கு.*

# III. சான்றோரைப் போற்றுதல்

## 35. இளங்கோவடிகள்

முத்தமிழும் தித்திக்க முழங்கும் காதை
மூவேந்தர் ஆட்சிமுறை அளக்கும் செங்கோல்
'பத்தினியென் றொருசொல்லைப் பகரும் போதே
பாரெங்கும் வேறெவரும் அல்ல வென்னும்
உத்தமிஅக் கண்ணகியின் ஒளிஉண் டாக்கி
உள்ளத்தில் தெள்ளறிவை ஊற்றும் செஞ்சொல்,
இத்தகைய காவியத்தை எமக்குத் தந்த
இளங்கோவை உளங்குளிர எண்ண வேண்டும். 1

'நெடுங்காலம் அறம்வழுவாப் பாண்டி நாட்டில்
நீதிகொன்ற நீதானோ மன்னன்?' என்று
கடுங்கோபம் கனல்பறக்கக் கடிந்து சொல்லிக்
கற்பரசி தன்பிழையைக் காட்டக் கண்டான்;
அடங்காத மானம்வந்(து) அழுத்திக் கொள்ள
அக்கணமே அரியணையில் உயிரை நீத்த
இடங்காணும் தமிழரசின் இயல்பைக் காட்டும்
இளங்கோவை மறப்போமோ எந்த நாளும். 2

பண்டிருந்த தமிழர்களின் பரந்த வாழ்வில்
பலகலையும் பரிமளித்த உண்மை பாடிக்
கொண்டிருந்த அறநெறியின் சிறப்பும் கூறி,
'கொடுங்கோலை எதிர்த்தகற்றும் திறமும் கொண்ட
பெண்டினத்தின் வழிவந்தோம் நாங்கள்' என்னும்
பெருமையையும் தமிழ்மக்கள் பெறுவ தாக்கி
எண்டிசையும் புகழ் ஒலிக்கும் சிலம்பைச் சொன்ன
இளங்கோவின் திருநாமம் என்றும் வாழும். 3

## 36. கம்பன்

எண்ணிஎண்ணித் திட்டம்போட் டெழுதி னானோ!
எண்ணாமல் எங்கிருந்தோ கொட்டி னானோ!



புண்ணியத்தால் உடன்பிறந்த புலமைதானோ!
போந்தபின்னர் ஆய்ந்தறிந்து புகன்ற தாமோ?
தண்ணியல்சேர் தமிழணங்கின் தவமே தானோ!
தயரதனும் சனகனுமே தரித்த நோன்போ!
விண்ணமுதின் சுவைகெடுத்த கம்பன் பாடல்
விரிந்தவிதம் என்றென்றும் வியப்பே ஆகும்! 1

சாதிமத விலங்கினம்வாழ் காட்டை மாற்றிச்
சமனாக்கிச் சமரசமாம் தளத்தின் மேலே
நீதிநெறி கருணையெனும் நிலைகள் நாட்டி
நித்தியமாம் சத்தியத்தின் சிகரம் நீட்டிக்
காதல்அறம் வீரம்எனும் கொடியைத் தூக்கிக்
கம்பனென்பான் கட்டிவைத்த கனக மாடம்
ஆதிமுதற் பரம்பொருளின் சக்தி யாகும்
அன்னையெங்கள் தமிழ்த்தெய்வம் அமரும் கோயில். 2

ஏழையென்று செல்வனென்று பேதம் எண்ணார்
எல்லோரும் எச்சுகமும் எளிதே பெற்றுக்
கோழையென்ற குடிசனங்கள் எவரும் இன்றிக்
கொடுங்கோலும் கடுங்காவல் இல்லா நாட்டில்
வாழுதற்கு வேண்டும் எல்லா வளமும் தாங்கி
வந்தபகை நொந்து விழும் பொறிகள் வைத்தே
ஆழியுடன் தமிழ்த்தாயார் அரசு காக்கும்
அற்புதமாம் கோட்டையன்றோ கம்பன் பாட்டு? 3

வேந்தருக்கும் குடிகளுக்கும் பொருத்தம் சொல்லி
வேற்றரசர் படையெடுக்கா வீரம் கூறித்
தேர்ந்தபல கலையறிவின் இன்பம் தேக்கித்
தெய்வபக்தி நட்பிவற்றின் திறமும் சேர்த்துக்
காந்தனுக்கும் காதலிக்கும் கற்பைக் காட்டிக்
கட்டாயப் படுத்தாமல் கடமை பேசிச்
சாந்தமுள்ள சமுதாய அமைப்புக் காக்கும்
சாத்திரமாம் கம்பனென்பான் தந்த பாட்டு. 4

கம்பனென்ற பெரும்பெயரை நினைக்கும் போதே
கவிதையென்ற கன்னிகைதான் வருவாள் அங்கே;
அம்புவியில் கண்டறியா அழகினோடும்
அமரருக்கும் தெரியாத அன்பி னோடும்
இன்பமென்று சொல்லுகின்ற எல்லாம் ஏந்தி
இன்னிசையும் நன்னயமும் இணைத்துக் காட்டித்
துன்பமென்ற மனத்துயரைத் துடைத்து விட்டுத்
தூங்காமல் தூங்குகின்ற சுகத்தை ஊட்டும். 5

## 37. கம்பனும் வான்மீகியும்

கரையறியாக் காட்டாற்று வெள்ளம் போலக்
கவிபொழிந்து வான்மீகி உலகுக் கீந்த
திசையறியா ஓட்டத்தைத் தேக்கிக் கட்டித்
திறமிகுந்த கால்வாய்கள் செய்து பாய்ச்சித்
தரையறியா இலக்கியக்கா வணத்தைத் தந்தான்
தனிப்புலமைக் கம்பனெனும் கவிதைத் தச்சன்
உரையறியாப் பயனளிக்க உதவும் பாட்டை
உலகமெலாம் அனுபவிக்க உழைப்போம் வாரீர்! 1

வானத்திலுள்ள மலர்வகைகள் எல்லாம் கொய்து
வாசனைவேர் பச்சிலைகள், பலவும் சேர்த்துக்
கனத்தஒரு பூப்பொதியாம் ராமன் காதை
வான்மீகி யெனும் தவசி கட்டோ டீந்தான்.
இனத்தையெல்லாம் ஆய்ந்தறிந்தான் இணைத்துக் கோத்தான்
இடைகிடந்த மாசுமறு யாவும் நீக்கித்
தனித்தமணம் அறந்திகழும் மாலை யாக்கித்
தரணிக்கே சூட்டிவைத்தான் கம்பன் தானே. 2

மால்கடிந்த தவமுனிவான் மீகி என்பான்
வனத்திடையே தான்கண்டு கொண்டு வந்த
பால்படிந்து, முள்ளடர்ந்து, பருத்து, நீண்டு
பரிமளிக்கும் பலவின்கனி பாருக் கீந்தான்



மேல்படிந்த பிசினகற்றி, மெல்லக்கீறி
மெதுவாகச் சுளைஎடுத்துத் தேனும் வார்த்து
நூல்படிந்த மனத்தவர்க்கு விருந்து வைத்தான்
கம்பனென்ற தமிழ்த்தாயார் நோற்ற மைந்தன். 3

*குறிப்புரை:- சிகரம் - உச்சி; வனம் - காடு; மால் - திருமால்.*

## 38. இராமகிருஷ்ண தேவர்

முன்னையோர் நமது நாட்டின்
முனிவரர் தேடி வைத்த
முழுமுதல் ஞான மெல்லாம்
மூடநம் பிக்கை யென்றும்,
பொன்னையே தெய்வ மென்றும்,
போகமே வாழ்க்கை யென்றும்,
புனிதரைக் கொன்று வீழ்த்தும்
போரையே வீர மென்றும்
தன்னையே பெரிதா யெண்ணித்
தனக்குமேல் இருக்கும் வேறோர்
சக்தியின் நினைப்பே யின்றித்
தருக்கியே பிறப்பின் மாண்பைத்
தின்னுமோர் மயக்கம் நீங்கித்
தெளித்திட எழுந்த ஞான
தீபமே! ராம கிருஷ்ண
தேவனே! போற்றி போற்றி! 1

மனிதரின் பாவம் போக்க
மகிழ்ச்சியோ டுயிரைத் தந்த
மாபெரும் த்யாக மூர்த்தி
ஏசுவின் அன்பாம் நெய்யைத்
தனிவரும் துறவி யென்று
தரணியோர் யாரும் போற்றும்
சாந்தனாம் புத்த தேவன்
தவமெனும் தட்டில் ஊற்றி,

இனியொரு மனிதர்க் கில்லை
இத்தனைப் பொறுமை 'என்னும்
எம்பிரான் மகமத் நீட்டும்
சமரசக் கைகள் ஏந்த,
சினமெனும் அரக்கர் கூட்டம்
திரியென எரியும் ஞான
தீபமே! ராம கிருஷ்ண
தேவனே! போற்றி போற்றி! 2

பேயென்றும் மாயை யென்றும்
பெண்களை இகழ்ந்து பேசிப்
பெருந்துற வடைந்த பேரும்
பிழைபுரிந் தவரே யன்றோ!
தாயென்றும் துணைவி யென்றும்
தன்னுடை நோக்கம் காக்கும்
சகதர்ம சக்தி யென்றும்
சாரதா தேவி தன்னை
நீயென்றும் மகிழ்ந்து கொண்ட
நிர்மல வாழ்க்கை தன்னை
நிலைத்திடுந் தோறும் நெஞ்சம்
நெக்குநெக் குருகும் ஐயா!
தீயென்னப் புலனைக் காய்ந்த
தீரனே! ஞான வாழ்வின்
தீபமே! ராம கிருஷ்ண
தேவனே! போற்றி போற்றி! 3

'ஜாதியில் உயர்ந்தோம்' என்னும்
சனியனாம் அகந்தை நீங்கத்
தாழ்ந்தவர் குடிசை தோறும்
தலையினால் பெருக்கி வாரும்
சேதியைத் தெரிந்த அன்னார்
திகைத்துனைத் தடுத்த தாலே
தெரியாமல் இரவிற் சென்று
தினந்தினம் அதனைச் செய்தாய்



ஆதியின் அருளைத் தேடும்
அந்தணர்க் கரசே! ஐயா!
ஆணவம் அழிந்தா லன்றி
ஆண்டவன் அணுகான் என்றாய்.
தீதுகள் உலகில் நீங்கித்
திக்கெலாம் ஒளிரும் ஞான
தீபமே! ராம கிருஷ்ண
தேவனே! போற்றி போற்றி. 4

இரும்பினால் சதையும் நல்ல
எஃகினால் நரம்புங் கொண்ட
இந்திய இளைஞர் தோன்றி
உழைத்திட வேண்டும்' என்று
விரும்பினோன் மதனரூப
விவேகா னந்த ஞானி
வேடிக்கை யாக வந்து
'கடவுளைக் காட்டும்' என்ன,
அரும்பினாய் முறுவல் அங்கே
அதன்பொருள் அறிவார் யாரோ
அன்றேஉன் அடிமை யாகி
அதுமுதல் உன்னை விட்டுத்
திரும்பிடான் விட்டில் போலத்
திளைத்தவன் விழுந்த ஞான
தீபமே! ராம கிருஷ்ண
தேவனே! போற்றி போற்றி! 5

'காவியை உடுத்தி டாமல்
கமண்டலம் எடுத்தி டாமல்
காட்டிடை அலைந்தி டாமல்
கனலிடை நலிந்தி டாமல்
பூவுல கதனைச் சுத்தப்
பொய்யென்றும் புகன்றி டாமல்
புறத்தொரு மதத்தி னோரைப்
புண்படப் பேசி டாமல்

சேவைகள் செய்தாற் போதும்;
தெய்வத்தைத் தெரிவோம்; என்று
தெளிவுறக் காட்டி னாய்உன்
தினசரி வாழ்க்கை தன்னால்;
தீவினை இருட்டைப் போக்கிச்
செகமெலாம் விளங்கும் ஞான
தீபமே! ராம கிருஷ்ண
தேவனே! போற்றி போற்றி! 6

*குறிப்புரை:- சகமெலாம் - உலகலொம். (6) புண்பட - வருத்தப் படும்படி; புகன்றிடாமல் - சொல்லாமல் (6); மதன ரூபம் - அழகிய வடிவம். (5) அகந்தை - செருக்கு, கர்வம். (5)*

## 39. ஊனொடு உயிர் கலந்த ஒழுக்கம்

எல்லா மதத்தினரும் கூடுவோமே
ஏகம் கடவுளென்று பாடுவோமே;
நல்லார் உலகிலெங்கும் சொன்னதொன்றே
ராமகிருஷ்ணர் வாழ்க்கையால் கண்டோ மின்றே. 1

இற்றைக்கு நூறாண்டு முன்னம்ஒருநாள்
இந்நாட்டின் தெய்வீகத் தன்மைகளெல்லாம்
புத்தம்புதுஉருவில் தேவையறிந்தே
போந்ததென ராமகிருஷ்ண தேவர்பிறந்தார். 2

பள்ளிப் படிப்பெதுவும் இல்லாமலும்
பாடமும் வேறொருவர் சொல்லாமலும்
வெள்ளம் பலநிறைந்த கடலேபோல்
வெவ்வேறு மதங்களுக் கிடமானார். 3

தானே நினைத்தறியும் படிப்பன்றோ
தன்னைத் தேற்றுவித்த முடிப்பாகும்?
ஊனோ டுயிர்கலந்த ஒழுக்கமன்றோ
உண்மை ராமகிருஷ்ணர் வழக்கமெல்லாம்? 4



ஏட்டுப் படிப்பைமட்டும் கற்றோமே!
ஏழைக் கிரங்குமன்பைப் பெற்றோமா?
நாட்டில் நலிந்தவர்க்காய் அழுதுருகும்
ராமகிருஷ்ணர் தம் கருணை தொழுதிடுவோம்! 5

சோறும் துணியும்மட்டும் தேடினோமே!
துன்பம் குறைக்குமருள் கூடினோமா?
கூறும் ராமகிருஷ்ணர் கதைபடிப்போம்
கூடும் கவலைகளின் முனைஒடிப்போம். 6

வீடும் மனையும்மட்டும் கட்டினோமே!
விமலன் அருளைக்கொஞ்சம் கிட்டினோமா?
பாரும் ராம கிருஷ்ணர் சரித்திரத்தைப்
படித்து ஜெயித்திடுவோம் தரித்திரத்தை! 7

மக்கள் மனைவிபொருள் நல்லதேதான்
மற்றும் பெரியசுகம் இல்லையோதான்?
மிக்க பெரியஇன்பம் கொண்டபெரியார்
மேலோர் ராமகிருஷ்ணர் கண்டுதெரிவோம். 8

உடலுக் கணிகள்பல பூண்டோமே!
உயிருக் கழகுசெய்ய வேண்டாமோ?
கடனுக் கமுதுசெய்யும் பூசனையெல்லாம்
கட்டாது ராமகிருஷ்ணர் பேசினதுகேள். 9

*குறிப்புரை:- சுகம் - நலம் (8); கட்டாது - அருள் - கருணை (7); நலிந்தவர் - வறுமையுற்றவர் (5); ஏகம் - ஒன்று (1).*

## 40. நற்றவசி ரமணரிஷி

சித்தர்களும் முத்தர்களும் செரிந்து வாழ்ந்து
சேர்த்துவைத்த தவப்பயனின் சிறப்பே யாகும்
எத்திசையும் இவ்வுலகில் எங்கும் காணா
எழில்மிகுந்த தமிழ்நாட்டின் அமைதி என்றும்

அத்தகைய மாரபினுக்கிங் காக்கம் தந்தே
அருணகிரி நாதனுடை அருளைத் தேக்கி
முத்திநெறி காட்டுகின்ற மோன ஞான
முழுமதியாம் ரமணமகா முனிவன் ஜோதி 1

வெற்றியென்றும் வீரமென்றும் வெறிகள் மூட்டி
வேற்றுமையே மக்களிடை விரியச் செய்து
கற்றுணர்ந்த பெரியவரைக் கசக்கப் பேசும்
கசட்டறிவின் தலையெடுப்பைக் காணும் இந்நாள்
பற்றொழித்த மெய்ஞ்ஞானி இவரே யென்று
பலகோடி பக்தர்மனம் பரவச் செய்த
நற்றவசி ரமணரிஷி வாழ்ந்த வாழ்வே
நம்நாட்டின் பெரும்புகழின் ஜீவநாடி. 2

அணுவினுடன் அணுமோதி அழியச் செய்தே
ஆருயிர்கள் பதைபதைக்க அவதி மூட்டப்
பணவெறியும் பார்வெறியும் பற்றித் தூண்டும்
பாதகமே சாதனையாய்ப் படிக்கும் இந்நாள்
அணுவினுடன் அணுசேர அணைத்து நிற்கும்
ஆண்டவனின் திருவருளை அறியச் செய்த
குணமலையாம் ரமணரிஷி மோன வாழ்வே
கொடுமைகளை நம்மிடையே குறைக்கும் போதம். 3

இன்றிருந்து நாளைக்குள் மறைந்து போகும்
இச்சிறிய உடலினுக்குள் புகுந்து கொண்டு
நன்றிருந்து பேசுகின்ற 'நான்யார்?' என்று
நாளில்ஒரு தரமேனும் நாடிப் பார்த்தால்
'என்றிருந்தோம்? எங்கு வந்தோம்? எதுநாம்' எல்லாம்
எளிதாகக் கண்டுகொள்வாய் என்றே சொல்லிக்
குன்றிருந்த விளக்கேபோல் திசையைக் காட்டும்
குறிக்கோளாம் ரமணமகா குருவின் வாழ்க்கை. 4

இந்திரியச் சுகங்களுக்கே ஓடி யாடி
இழிவடைந்து துறவடைந்தோர் பலபே ருண்டு



வந்தகடன் தீர்ப்பதற்கு வழியில் லாமல்
வைராக்கியம் பூண்டவர்கள் வகையும் உண்டு
கந்தையற்றுத் தரித்திரத்தின் கவலை மாற்றக்
காவியுடை அணிந்தவரைக் காண்ப துண்டு
வந்துதித்த நாள் முதலாய்ப் பரத்தை நாடும்
வைராக்யம் ரமணரிஷி வாழ்வாய் நிற்கும். 5

சக்திகளில் மிகச்சிறந்த சக்தி யாகும்
துன்பங்கள் சகிப்பதையே சாதித் திட்டான்.
வித்தைகளில் மிகப்பெரிய வித்தை யாகும்
விருப்புவெறுப் பில்லாத வேள்வி செய்தான்.
உத்திகளில் உச்சநிலை உள்ள தாகும்
உள்ளத்தில் பொய்யாமை உடைய னானான்
சித்திகண்ட ரமணரைநாம் சிந்தித் திட்டால்
சித்தசுத்தி பெற்றுமிகச் சிறந்து வாழ்வோம். 6

## *41. அண்ணல் விவேகானந்தர்*

ஆண்மை உருக்கொண்ட அந்தணன் - எங்கள்
அண்ணல் விவேகா னந்தனின்
மாண்பை அளந்திட எண்ணினால் - இந்த
மண்ணையும் விண்ணையும் பண்ணலாம். 1

காமனைப் போன்ற அழகினான் - பொல்லாக்
காமத்தை வென்று பழகினான்;
சோமனைப் போலக் குளிர்ந்தவன் - ஞான
சூரியன் போலக் கிளர்ந்தவன். 2

வீரத் துறவறம் நாட்டினான் - திண்ணை
வீணர்வே தாந்தத்தை ஓட்டினான்.
தீரச் செயல்களை நாடினான் - இந்தத்
தேச நிலைகண்டு வாடினான். 3

கர்மத் தவநெறி காட்டினான் - நல்ல
காரியம் வீரியம் ஊட்டினான்;
மர்மம், பலிதரும் பூசைகள் - இந்து
மதமல்ல என்றுண்மை பேசினான். 4

'உலகை வெறுத்துத் துறந்தவர் - தெய்வ
உள்ளக் கருத்தை மறந்தவர்
கலக நடுவிலும் தங்குவேன்' - என்று
கர்ஜனை செய்திட்ட சிங்கமாம். 5

பெண்ணின் பெருமையைப் போற்றினான் - ஆண்கள்
பேடித் தனங்களைத் தூற்றினான்
மண்ணின் சுகங்களை விட்டவன் - ஏழை
மக்களுக் காய்க்கண்ணீர் கொட்டினான். 6

ஏழையின் துன்பங்கள் போக்கவும் - அவற்(கு)
எண்ணும் எழுத்தறி வாக்கவும்
ஊழியம் செய்வதே ஒன்றுதான் - தேவை
உண்மைத் துறவறம் என்றுளாம். 7

தேசத் திருப்பணி ஒன்றையே - உண்மை
தெய்வத் திருப்பணி என்றவன்;
மோசத் துறவுகள் போக்கினான் - பல
மூடப் பழக்கத்தைத் தாக்கினான். 8

அடிமை மனத்தை அகற்றினான் - உயர்
அன்பின் உறுதி புகட்டினான்
கொடுமை அகற்றிட முந்திடும் - தவக்
கூட்டத்தை நாட்டுக்குத் தந்தவன். 9

ஐம்பது வருடங்கள் முன்னமே - செல்வ
அமெரிக்கச் சிக்காகோ தன்னிலே
நம்பெரும் இந்திய நாட்டவர் - கண்ட
ஞானப் பெருமையைக் காட்டினான். 10



வெள்ளையர் பாதிரி மாரெல்லாம் கேட்டு
வெட்கித் தலைகுனிந் தார்களே!
தெள்ளிய ஞானத்தைப் போதித்தான் - அவர்
திடுக்கிட உண்மைகள் சாதித்தான். 11

சத்திய வாழ்க்கையைப் பேசினான் - அருள்
சாந்தத் தவக்கனல் வீசினான்;
யுத்தக் கொடுமையைச் சிந்திப்போம் - அந்த
உத்தமன் சொன்னதை வந்திப்போம். 12

*குறிப்புரை:-வீணர் - பயனற்றவர்; வெட்கி - நாணி; பேடி - அலி. (ஆணும் அல்லாதவன் பெண்ணும் அல்லாதவன் அலி)*

## 42. இயேசு கிறிஸ்து

தூயஞான தேவன் தந்தை பரமன் விட்ட தூதனாய்த்
துன்பம்மிக்க உலகினுக்கே அன்புமார்க்க போதனாய்
மாயமாக வந்துதித்த மறிகள்சேரும் பட்டியில்
மானிடக் குழந்தையாக மேரிகண்ணில் பட்டவன்
ஆயனாக மனிதர்தம்மை அறிவுகாட்டி மேய்த்தவன்
அன்புஎன்ற அமிர்தநீரின் அருவிகாண வாய்த்தவன்
நேயமாக மாந்தர்வாழ நெறிகொடுத்த ஐயனாம்
நித்தமந்த ஏசுநாதன் பக்திசெய்தே உய்குவோம். 1

நல்ல ஆயன்; மந்தைபோக நல்லபாதை காட்டினான்;
நரிசிறுத்தை புலிகளான கோபதாபம் ஓட்டினான்;
கல்லடர்ந்து முள்நிறைந்து கால்நடக்க நொந்திடும்
காடுமேடு யாவும்விட்டுக் கண்கவர்ச்சி தந்திடும்
புல்லடர்ந்து பசுமைமிக்க பூமிகாட்டி மேய்த்தவன்
புத்திசொல்லி மெத்தமெத்தப் பொறுமையோடு காத்தவன்
கொல்லவந்த வேங்கை சிங்கம் கூசநின்ற சாந்தனாம்
குணமலைக்குச் சிகரமான ஏசுதேவ வேந்தனே. 2

ஏசுநாதன் என்றபேரை எங்கிருந்தே எண்ணினும்
ஏழைமக்கள் தோழனாக அங்குநம்மை நண்ணுமே
தேசுமிக்க த்யாகமேனி தெய்வதீப ஜோதியாய்த்
தீமையான இருளைநீக்கி வாய்மை அன்பு நீதியாய்ப்
பாகமாகப் பரிவுகூறிப் பக்கம் வந்து நிற்குமே
பகைவருக்கும் அருள்சுரக்கும் பரமஞானம் ஒக்குமே
ஈசனோடு வாழவைக்கும் ஏசுபோத இச்சையை
இடைவிடாத யாவருக்கும் எதிலும்வெற்றி நிச்சயம்! 3

*குறிப்புரை:- தேசு - அழகு; கீர்த்தி நேயமாக - அன்பாக (1); நித்தம் - நாள்தோறும். மேனி - உடல், வடிவம்.*

## *43. திலகர்பிரான்*

***(திலகர் இறந்த சேதியைக் கேட்ட தினம் பாடியவை)***

இடியது விழுந்த தோதான் இரும்பினைப் பழுக்கக் காய்ச்சி
இருசெவி நுழைத்த தோதான்!
தடியது கொண்டே எங்கள் தலையினில் அடித்த தோதான்
தைரியம் பறந்த தோதான்!
கொடியது சாய்ந்த தோதான் கொடுவிஷம் உச்சிக்கேறிக்
குறைந்திடுங் கொள்கை தானோ.
திடமுள தீர வீரர் திலகனார் மாண்டா ரென்ற
தீயசொற் கேட்ட போது! 1

'என்னுடைய பிறப்புரிமை சுயராஜ்யம்' என்னுமொரு
மந்திரத்தை எங்கட் கீந்த
மன்னவனே! திலகமுனி மகாராஜா எம்முடைய
மராட்டியர்தம் மடங்க லேறே!
உன்னுடைய பெருஞ்சேனை யுத்தத்தி லணிவகுத்தே
உத்தரவை எதிர்பார்த் திங்கே
இன்னவழி போவதெனத் தெரியாமல் திகைக்கின்ற
இச்சமயம் இறக்க லாமோ! 2



அன்னியர்கள் தொட்டிழுக்க அவமானம்
நேர்ந்ததென அழுது நின்றாள்
அன்னை யுன்றன் பாரதத்தாய்; அவள்மானம்
காப்பதற்கே அவத ரித்தாய்;
சின்னஉன்றன் வயதுமுதல் இதுகாறும்
அப்பிடியைத் தளர்த்து விட்டாய்
இன்னுமவள் சிறைநீங்கி வருவதற்குள்
எம்மைவிட்டே ஏகி னாயே! 3

பகையென நினைத்த பேரும்
பக்தியோ டஞ்சி நிற்பார்;
மிகையெனச் சொல்லு வோரும்
மெய்சிலிர்த் திருவர் கண்டால்;
நகைமுகங் கண்ட போதும்
நடுங்குவார் வெள்ளைக் காரர்;
தகையவன் பிறிந்து போகத்
தரிக்குமோ இந்த நாடு? 4

வசைகூறி உனையிழந்த வாலண்டைன் சிர்ரலெனும்
வகையி லோனை
வழிகூற அவன்மேலே நீதொடுத்த
வழக்கிற்பல வஞ்ச மாற்றி,
அசைகூறி ஆங்கிலர்கள் அவன்பக்கம் தீர்ப்பளித்த
அவதி நோக்கி,
அங்கவர்கள் நீதிதனில் வைத்திருந்த நம்பிக்கை
அறவே நீங்கி,
இசைகூற உலகமெலாம் இருந்தாலும்
பெருங்கடவுள் இருமன் றத்தில்
எடுத்துரைப்போம் இக்குறையும் இந்தியர்கள்
பலகுறையும்; என்று சொல்லிப்
பசைகூறித் தேவரிடம் பண்ணினையோ
விண்ணப்பம் பரிவு கூறிப்

பாங்குடனே அவர்விடுத்த ஓலைக்குப்
பதிலுரைக்கப் போயி னாயோ! 5

நிலையிழந்து பரிதவிக்கும் நீபிறந்த
இந்நாட்டின் நிலைமை நோக்கு,
நீபட்ட கொடுந்துயரம் இன்னொருவர்
படுவரென நினைக்கப் போமோ?
கலையிழந்த மதியானோம்; கண்ணிழந்த
முகமெனவே கலங்கி நின்றோம்!
காரிழந்த பயிரெனவே சோறிழந்த
வயிறெனவே சோர்ந்து விட்டோம்?
தலையிழந்த உடலமெனத் தவிக்கின்றோம்
இது உனக்குத் தருமந் தானா?
தஞ்சமென முன்னின்று தைரியத்தோ
டுழைக்குமுன்றன் சத்த மோய
அலையிழந்த கடலேபோல் ஆட்டிழந்த
பம்பரம்போல் அடங்கி வீழ்ந்தோம்!
ஆரினிமேல் எங்களையிங் கன்னையென
முகந்துடைத்தே அறிவு சொல்வார்! 6

'இருப்பாய்நீ சிறைவாசம் இருமூன்று
வருடம்'என இசைந்து கூறி,
இதுபோதா துன்றனக்கு; மிகக் குறைத்தேன்
நானிதனை' என்ற, உன்றன்
சிறப்பறியப் போதாத தேவாரென்
றொருஜட்ஜு செப்புங் காலை,
சிரித்தமுகம் கோணாமல் சினத்தஅகம்
காட்டாமல் செப்ப லுற்று
மறுப்பதுண்டு; குற்றமிலேன், மகிதலத்தை
ஆளுகின்ற சக்தி வேறே
மறைந்திருந்து நானடையும் கஷ்டத்தின்
பயனான மர்ம மாகச்



சிறப்பென்றன் தேசமென்று தெய்வத்தின்
திருவுள்ளத் தீர்ப்போ? என்று
செப்பினசொல் அழியாமல் எம்மனத்தில்
பச்செனவே திகழு மென்றும். 7

அஞ்சாத நெஞ்சம் வேண்டின்
அசையாத ஞானம் வேண்டின்
அடாத கொள்கை வேண்டின்
ஓடாத உறுதி வேண்டின்
கெஞ்சாத வாழ்க்கை வேண்டின்
கேடிலா எண்ணம் வேண்டின்
கேளாத கலைகள் வேண்டின்
மாளாத உழைப்பு வேண்டின்
நஞ்சான பேர்கள் யாரும்
நடுங்குமோர் நடத்தை வேண்டின்
நாணாத செயல்கள் வேண்டின்
கோணாத குணங்கள் வேண்டின்
செஞ்சாறு வார்த்தை வேண்டின்
திலகனார் சரிதை தன்னில்
தெரியாத நீதி யெல்லாம்
தெரியலாம் தெளிவா யங்கே. 8

கருத்ததெல்லாம் நீராமோ? வெளுத்ததெல்லாம்
பாலாமோ? கண்ணிற் கண்ட
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லே யாமோ?
பருத்ததெல்லாம் கரியாமோ? பாய்ந்த தெல்லாம்
சிங்கமாமோ? பளப ளப்பாய்ப்
பளுவிருந்தால் தங்கமெனப் பகர லாமோ?
விரித்தநிலாக் கதிர்பரப்பி வெள்ளியொடு
பலமீன்கள் விளங்கி னாலும்
வெய்கதிரோன் வந்ததென விளம்ப லாமோ?
தெருத்தெருவாய் மேடையிட்டுத் திசைமுழங்கப்
பலபேசித் திரிந்திட் டாலும்
திலகர்பிரா னாவரெனச் செப்ப லாமோ? 9

கருமமது செய்தல் வேண்டும்
கலங்காமல் உழைத்தல் வேண்டும்
கண்ணபிரான் கீதையிலே
சொன்னமொழி கடைப்பி டித்த
பெருமையுள்ள திலக ரைநீ
பிரித்தாயே யெம்மை விட்டு!
பெம்மானே! ஒருவ ரம்நீ
பிழையாது தருதல் வேண்டும்;
தருமமது குறையும் போதும்
தப்பிதங்கள் நிறையும் போதும்
தப்பாம லவத ரிப்பேன்
தரணி யில்நா னென்றபடி
அருமறைகள் அறிய மாட்டா
அரும்பொருளே வருதல் வேண்டும்,
அன்பு டன்நீ அப்போதும்
திலகருரு அடைதல் வேண்டும். 10

குறிப்புரை:- கருமம் - செயல்; செப்பு - சொல்லு.

## *44. தாதாபாய் நவரோஜி*

நேற்றுதித்த தேசமெல்லாம் நிலைத்தபடி
பலபேசி நிந்தை கூறி
நின்றிடவே குன்றிடநாம் நெஞ்சுருகிப்
பஞ்சையராய் நித்த மேங்க
வேற்றரசர் நேசரெல்லாம் வேடிக்கை
பார்த்தவராய் விந்தை பேச
வெட்கமதால் தலைகுனிந்து வெருண்டுமன
மருண்டஎமை வெருளே லென்றும்
'ஆற்றலுள்ள முன்னோர்கள் அவர்வழியில்
பிறந்தநமக் கவதி யுண்டோ?
அடைந்திடுவோம் சுயராஜ்யம்; அஞ்சாதீர்!'
எனமொழிந்தும் அன்பினாலே



தேற்றிடவே முன்னின்றாய் தெளிவுடையாய்
தாதாபாய் நவரோ ஜியே!
தேவருடன் கலந்தனையோ எங்குறையை
அங்கவர்க்குச் செப்ப வேண்டி? 1

'இருங்கிழவி பெருந்தேவி இந்தியநா
டெம்மையெலாம் ஈன்ற தாயின்
உறுங்கிழமை சுதந்தரங்கள் ஒன்றேனும்
குறையாமல் வந்தா லன்றி
நெருங்கிய நோய் பஞ்சங்கள் ஒருபோதும்
நீங்கா' வென்றுறுதி சொன்ன
பெருங்கிழவா! தாதாபாய் நவரோஜி!
உன்பெருமை பெரிதே யாகும். 2

'பேசுவதால் பெறுவதில்லை பிதற்றுவதால்
பெருமையில்லை பிறரை நொந்தே
ஏசுவதால் நேசமில்லை இழிந்ததனால்
களித்ததில்லை என்று சொல்லித்
தாசனென உழைத்திடவே வேண்டுமென்று
தளராமல் உழைத்துக் காட்டி
ஆசையுடன் நீயுரைத்த அம்மொழியை
எக்காலும் மறவோம் ஐயா! 3

உடலமது தளர்ந்தாலும் உன்னுறுதி
தளராமல் உழைத்து நின்றாய்;
சடலமது மானிடராய்ப் பிறந்தவர்கள்
இதைவிடவும் சாதித் தாரோ?
கடலுலகில் பிறந்தவர்கள் கணக்கற்றா
ரென்றாலும் கருதில் நீயே
அடைவரிய சென் மத்தின் அரும்பயனை
அறிந்தவரை அடைந்தாய் ஐயா! 4

பணமிருந்தும் பெருமையில்லை; பந்துஜன
மித்திராகள் பறந்து சூழ்ந்தும்

கணமிருந்தும் கண்டதில்லை; காட்டிருந்தும்
வீடிருந்தும் கனதை யுண்டோ?
குணமிருந்து பொறுமையுடன் குறையிரந்தார்
ஏழைகளைக் குறித்து வாடும்
மனமிருந்தார் அடைந்திடுமோர் மாட்சிமைக்கு
நீயுமொரு சாட்சி யானாய். 5

*குறிப்புரை:- கனதை - பெருமை; மாட்சிமை - பெருமை.*

## 45. கோபாலகிருஷ்ண கோகலே

படிப்பெனும் கடலை நீந்திப்
பணமெனும் ஆசை போக்கிக்
கடிப்புடன் மமதை யென்னும்
கலையிலா தொழுகி நின்று
துடிப்புடன் இந்து தேசத்
தொண்டனாம் தலைமை பூண்டு
கொடிப்படை யில்லா தாண்டான்
கோகலே என்னும் வேந்தன். 1

ஜாதிமத பேதமெல்லாம் கடந்து நின்றான்
தனிப்பெரிய குலத்துதித்த தகைமை யுள்ளோன்
'மேதினியில் உடன்பிறந்த உயிர்க ளெல்லாம்
மெலிவின்றிப் பசிநீக்கிக் களிப்ப தொன்றே
ஊதியமாம்' எனக்கருதி உழைப்ப தற்கே
உடலோடு பொருளாவி, உதவி நின்றான்
கோதிலனாம் கோபால கிருஷ்ண னெங்கள்
கோகலே யவன்பெருமை கூறப் போமே! 2

தன்சுகமாம் தன்னாட்டார்சுகமே யென்றும்
தன்னறிவாம் தன்னாட்டார் அறிவே யென்றும்
தன்பெருமை தன்னாட்டார் பெருமை யென்றும்
தன்சிறுமை தன்னாட்டார் சிறுமை யென்றும்



மன்பெரிய சபைதனிலும் மறவா னாகி
மலைபோல நிலையாகப் பாடு பட்டான்
என்சொலுவோம் கோகலே பெருமை தன்னை
இறந்தாலும் இறவாதான் இவனே யாவான். 3

தருமமும் கரும மெல்லாம்
தனித்தனி மறந்து மிக்க
தரித்திரம் பிணிக ளெல்லாம்
தங்கியே இங்கு நிற்கப்
பெருநிலக் கிழவி யிந்தப்
பேதையாம் இந்து தேசம்
பலபல துன்ப முற்றுப்
பஞ்சையாய் வாடி நிற்க
வெறுமனே யிருந்து நாங்கள்
வீணரா யலைந்து கெட்டோம்
வேண்டினோம் தேச பக்தி
விமலனார் எமக்குத் தந்த
பெருமானே! கோக லேநீ
பின்னையும் பிறந்து வந்து
பெற்றதாய் இந்து மாதின்
பிணியெலாம் அறுத்து வைப்பாய். 4

*குறிப்புரை:- பிணி - நோய்; தரித்திரம் - வறுமை.*

## 46. வ.வே.சு. ஐயர்

தமிழ்மொழியின் பெருமைதன்னை உலகறிய எடுத்தறைந்த
தனிப்பறையின் பேரோசை தணிந்த தேயோ!
துமியுரைத்த கவியரசன் சுவைவிளக்கக் கம்பனுக்காய்த்
தூதுவந்த பாதமவை துவண்ட வேயோ!
அமிழ்ந்துறங்கும் தமிழர்களை அடிமைஇருள் அகன்றதென
அழைத்தெழுப்பும் கோழிகுரல் அடைத்த தேயோ?

குமிழ்நுரையின் மலையருவிச் சுழல்விழுந்து குருகுலத்துச்
சுப்ரமண்ய ஐயருடல் மறைந்த கொள்கை. 1

சுழிந்தோடி மடுக்கள்மிகும் உலகநடைச்
சுழல்கள்பல நீந்தி ஏறி
வழிந்தோடும் மலையருவிச் சுழல்விழுந்து
கரையேற மாட்டாய் ஏனோ!
கொழுந்தோடிப் படர்கலையின் குளிர்ஞானக்
குன்றே! ஓர் குன்றி னின்றும்
ஒழிந்தோடி மறைந்தனையே! உடன்போந்த
சிறுவர்களின் உணர்ச்சி ஓட. 2

தேனூட்டும் தென்மொழியும் தெருளூட்டும்
வடமொழியும் தெளியத் தேர்ந்து
மேனாட்டுப் பன்மொழியும் மிகக்கூட்டிக்
கடைந்தெடுத்த அறிவை யெல்லாம்
தாய்நாட்டின் விடுதலைக்கே தனிநாட்டித்
தவம்புரிந்த தகைமை யாளா!
வானாட்டிற் சிறந்ததென்பாய் தமிழ் நாட்டை
விட்டுப்போய் வாழ்வ தெங்கே? 3

'ஐயரெனில் அந்தணராய் அனைத்துயிர்க்கும்
செந்தண்மை அருள்வோர்', என்று
செய்யதிரு வள்ளுவனார் செய்தமொழித்
திருக்குறளின் சீல னாகி
மெய்யறிவைப் பெறநாடி மெய்வருந்திப்
பொய்வெறுத்த மேன்மை யாலோ
'ஐயா' என்று தனியுரைத்தால் உனையன்றித்
தமிழுலகம் அறியா தையா! 4

முழுமதி மயிர்த்தா லன்ன
முகந்திகழ் கருணை நோக்கும்
மூர்க்கரும் நேரிற் கண்டால்
முகந்திடும் சாந்த வீச்சும்



குழலினும் இனிய தான
குழந்தையின் மழலைப் பேச்சும்
குவிந்திடும் உதட்டிற் கூடக்
கூத்திடும் சிரிப்பின் கூட்டும்
தழலினும் தூய வாழ்வும்
தாயினும் பெரிய அன்பும்
சத்திய நிலையும் முன்னாள்
தவமுனி இவனே என்னப்
பழகிய பேயும் போற்றும்
படித்தொரு வடிவம் தன்னைப்
பாரிடை இனிமேல் வேறு
யாரிடைப் பார்ப்போம் ஐயா! 5

*குறிப்புரை:- தழல் - நெருப்பு; மழலைப்பேச்சு - பொருள் விளங்காத பேச்சு.*

## 47. கவி தாகூர்

கலைமகள் கண்ணீர் சோரக்
கவிமகள் கலங்கி வீழத்
தலைமகள் இறந்தா ளென்றே
இந்தியத் தாய்த விக்க
அலைகடற் கப்பா லுள்ள
அறிஞர்கள் யாரும் ஏங்க
மலைவிளக் கவிந்த தென்ன
மறைந்தனன் கவிதா கூரே. 1

சந்திரன் கிரணத் தோடு
சூரியன் ஒளிசேர்ந் தென்ன
செந்தணல் நெருப்பில் நல்ல
சிலுசிலுப் பிணைந்த தென்ன
அந்தணர் அமைதி யோடே
அரசரின் ஆண்மை கூட்டும்

சுந்தரக் கவிகள் பாடும்
சொல்வள முடையோன் தாகூர். 2

கருணையின் உருவு காட்டும்
கவிரவீந் திரநாத் தாகூர்
அருணனாய் உலகுக் கெல்லாம்
அறிவொளி பரப்பி வாழ்ந்தான்
மருணெறி மாற்ற இந்த
மாநில மக்கட் கெல்லாம்
பொருணெறி சாந்தி சொல்லும்
புத்தக மாக நிற்பான். 3

அரசியல் போராட் டத்தில்
ஆழ்ந்திலன் என்றிட் டாலும்
புரைசெயும் அடிமை வாழ்வின்
புண்ணையே எண்ணி எண்ணிக்
கரைசெய முடிந்தி டாத
கவலையால் கண்ணீர் பொங்க
உரைசொலி அடிமைக் கட்டை
உடைத்திடத் துடித்தோன் தாகூர். 4

'ஒத்துழை யாமை' என்று
காந்தியார் உரைக்கும் முன்னால்
இத்துரைத் தனத்தார் தம்மோ
டிணங்கிடப் பிணக்கி விட்டோன்.
பற்றுகள் அவர்முன் தந்த
பட்டமும் பரிசும் வீசித்
சுத்தியை முதலிற் செய்த,
சுதந்தர தீரன் தாகூர். 5

காந்தியும் 'குருதேவ்' என்று
கைகுவித் திறைஞ்சும் தாகூர்
மாந்தருள் பலநாட் டாரும்
மதங்களும் மருவி வாழ்ந்து



தேர்ந்த நல்லறிவை அன்பைச்
செகமெலாம் பரப்ப வென்றே
'சாந்திநிகேதன்' என்ற
சமரச சங்கம் தந்தோன். 6

கலைகளின் வழியே தெய்வக்
கருணையைக் காண்ப தென்னும்
நிலையினைப் படிக்க வென்றும்
நிறுவிய நிலையம் ஈதாம்
சிலைதரல் ஆடல் பாடல்
சித்திரம் நடிப்ப ரங்கம்
பலவித வித்தை எல்லாம்
பயிலுதற் கிடமாய் நிற்கும். 7

தாய்மொழிப் பற்றும் தங்கள்
கலைகளைத் தாங்கி நிற்கும்
ஆய்மையும் வங்கா ளிக்கே
அதிகமாம்; அதனால் எல்லாச்
சீமையும் தாகூர்ப் பாட்டைச்
சிறப்புறப் பரப்பி னார்கள்;
வாய்மையைத் தமிழர் போற்றி
வளர்ப்பரோ தமிழின் மாண்பை? 8

*குறிப்புரை:- சீமை - தேசம் (8); வித்தை - தந்திரத் தொழில்; மாசாலம்; போற்றி - வணங்கி.*

## *48. தேசிக விநாயகம் பிள்ளை*

தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பதென்றன் செவிப்பெருமை;
ஆசிய ஜோதியெனும் புத்தர்போதம்
அழகுத் தமிழில்சொன்னான் அதுபோதும் 1

கோழி குலவிவரும்; கிளிகொஞ்சும்;
குழந்தை எழுந்துதுள்ளிக் களிமிஞ்சும்;

ஏழை எளியவர்கள் யாவர்க்கும்.
இன்பம் கொடுக்கஅவன் பாவிருக்கும். 2

உழுது தொழில்புரியும் பாட்டாளி
உழைப்பில் ஓய்வுதரும் பாட்டாகும்;
தொழுதே அடிமைப்படும் துயரமெல்லாம்
தூரத் தள்ளமனம் உய்குமடா! 3

படித்துப் பழகாத பாமரருக்கும்
பாடிப் பருகஅதில் சேம மிருக்கும்;
ஒடித்துப் பொருள்பிரிக்கும் சந்திகளில்லை;
ஊன்றிப் பதம்கூட்டும் பந்தனமல்ல. 4

காடும் மலையும்அதில் கலைபேசும்;
கடலும் ஞானமதிர அலைவீசும்;
பாடும் தேசிகவி நாயகத்தின்
பழமை பாடிடஎன் நாஉவக்கும். 5

நோய்நொடி யாவையும் விட்டோடி
நூறு வயதும்சுகக் கட்டோடு
தாய்மொழி வளர்த்தவன் கலிகாணும்
தனிவரம் தெய்வம் தரவேணும். 6

## *49. வ.உ. சிதம்பரம் பிள்ளை*

சிதம்பரம் பிள்ளையென்று பெயர்சொன்னால் - அங்கே
சுதந்தர தீரம்நிற்கும் கண்முன்னால்;
விதம்பல கோடிதுன்பம் அடைந்திடினும் - நாட்டின்
விடுதலைக் கேயுழைக்கத் திட்ந்தருமே. (சிதம்)

அடிமை விலங்கையெல்லாம் அறுத்தெறியும் - நல்ல
ஆற்றல் கொடுக்கும்அவன் சரித்திரமே;
கொடுமை பலசகிக்கும் குணம்வருமே - நாம்
கோரும் சுதந்தரத்தை மணந்திடுவோம். (சிதம்)



திலக மகரிஷியின் கதைபாடும் - போது
சிதம்பரம் பிள்ளை வந்து சுதிபோடும்;
வலது புயமெனவே அவர்க்குதவி - மிக்க
வாழ்த்துக் குரிமை பெற்றான் பெரும்பதவி. (சிதம்)

திருக்குறள் படித்திட ஆசைவரின் - புதுச்
சிதம்பரம் பிள்ளைஉரை பேசவரும்;
தருக்கிடத் தக்கபெருந் தமிழ்ப்புலமை - கற்றார்
தலைவணங் கிப்புகழும் தனிநிலைமை. (சிதம்)

சுதேசிக் கப்பலிட்ட துணிகரத்தான் - அதில்
துன்பம் பலசகித்த அணிமனத்தான்;
விதேச மோகமெல்லாம் விட்டவனாம் - இங்கே
வீரசு தந்தரத்தை நட்டவனாம். (சிதம்)

நாட்டின் சுதந்தரமே குறியாக - அதை
நாடி உழைப்பதுவே வெறியாக
வாட்டும் அடக்குமுறை வருந்துயரை - வெல்ல
வாழும் சிதம்பரத்தின் பெரும்பெயராம். (சிதம்)

குறிப்புரை:- தருக்கு - செருக்கு, கர்வம்.

## *50. சிதம்பரம் பிள்ளை நினைவு*

மடமையதோ பிறநாட்டார் மயக்கந் தானோ
மக்களெல்லாம் சுதந்தரத்தை மறந்தா ராகி
அடிமைஇருள் நள்ளிரவாய் அனைத்தும் மூடி
யாரும் தலைநீட்டவெண்ணா அந்த நாளில்
திடமனத்துச் சிதம்பரப்பேர் பிள்ளை யாவான்
செய்திருக்கும் அச்சமற்ற சேவை சொன்னால்
உடல்சிலிர்க்கும் உயிர்நிமிர்ந்தே உணர்ச்சி பொங்கும்
உள்ளமெல்லாம் நெக்கு நெக்காய் உருகு மன்றோ? 1

எல்லாரும் தேசபக்தர் இந்த நாளில்;
எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க் காண்பார்

சொல்லாலும் எழுத்தாலும் விளக்க வொண்ணாத்
துன்பமெல்லாம் சிறைவாசம் அந்த நாளில்;
வல்லாளர் சிதம்பரனார் சிறையிற் பட்ட
வருத்தமெலாம் விரித்துரைத்தால் வாய்விட்டேங்கிக்
கல்லான மனத்தவரும் கண்ணீர் கொட்டிக்
கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும். 2

சாதிகுலச் சமயமெலாம் கடந்த தக்கோர்
சமரசமும் சன்மார்க்கம் தழுவும் சான்றோர்
நீதிநெறி மிகப்பயின்ற பலபேர் சேர்ந்து
நிறுவியநம் காங்கிரசை நிதமும் போற்றிப்
பேதமுற்றுப் பிணங்கிவிட நேர்ந்த போதும்
பெரியசபை அதைஇகழ்ந்து பேசா நேசன்
ஓதிஅதன் வளர்ச்சியையே விரும்பி வாழ்த்தி
உள்ளளவும் சிதம்பரந்தான் உவப்பான் உள்ளம். 3

பேசிவிட்டே சுயராஜ்யம் பெறலாம் என்று
பெரியபல தீர்மானக் கோவை செய்து
காசுபணம் பெருமையினால் தலைவ ராகிக்
காங்கிரசை நடத்தியதைக் கண்டு நொந்து
'தேசநலம் தியாகமின்றி வருமோ?' என்று
திலகர்பிரான் செய்தபெருங் கிளர்ச்சி சேர்ந்தே
ஓசைபடா துழைத்தசில பெரியோர் தம்முள்
உண்மைமிக்க சிதம்பரனும் ஒருவ னாகும். 4

'உழுதுபல தொழில் செய்தே உழைப்போ ரெல்லாம்
உணவும்உடை வீடின்றி உருகி வாடப்
பழுதுமிக அன்னியர்க்குத் தரக ராகிப்,
பசப்புகின்ற வீணருக்கோ சுகங்கள்! என்றே
அழுதுருகித் தொழிலாளர் இயக்கம் கண்டே
அந்நாளில் சிதம்பரன்முன் நட்ட வித்தாம்.
விழுதுபல விட்டபெரு மரமாய் இன்று
வெவ்வேறு கிளைகளுடன் விளங்கக் காண்போம். 5



கள்ளமற்றுக் கலகலத்த பேச்சுக் கேட்டும்;
கறுப்பெனினும் சிரிப்புமுகம் கருணை காட்டும்;
குள்ளமென்னும் ஓர்உருவம் இருகை கூப்பிக்
குண்டெடுத்துக் கடைந்ததெனக் கலங்க நிற்கும்;
வெள்ளையன்றி வேறுநிறம் அறியா ஆடை
வேதாந்த சித்தாந்த ஒளியே வீசும்;
கொள்ளைகொள்ளை சிறையிருந்த குறிகள் தோன்றும்
குலவுபிள்ளைச் சிதம்பரத்தை நினைவு கூர்ந்தால். 6

*குறிப்புரை:- சித்தாந்தம் - சாத்திரத்தின் முடிந்த முடிவு; குலவு - கொண்டாடுகின்ற; கொள்ளை - மிகுதி, கூட்டம்.*

## *51. பாரதி ஓர் ஆசான்*

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளிப்
பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையே நீக்க
உற்றடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
வுலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
'கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய்' என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வகவி பாரதிஓர் ஆசான் திண்ணம். 1

அஞ்சியஞ்சி உடல்வளர்க்கும் ஆசை யாலே
அடிமைமனம் கொண்டிருந்த அச்சம் போக்கி
வெஞ்சமரில் வேல்பகைவர் வீசி னாலும்
விழித்தகண்ணை இமைக்காத வீரன் போல
நெஞ்சுறுதி உண்டாக்கும் கவிகள் பாடி
நேர்மையுடன் சுதந்தரத்தை நினைக்கச் செய்து
விஞ்சைமிகும் மனப்புரட்சி விரவச் செய்த
வித்தகனாம் பாரதிஓர் ஆசான் மெய்தான். 2

சாதிமதச் சழக்குகளைப் பற்றிக் கொண்டு
சமுதாயம் சீரழியும் தன்மை போக்க

நீதிநெறி நிறைந்தகுண ஒழுக்க வாழ்க்கை
நீங்காது நிற்பவரே மேலோர் என்னும்
போதனையே மூச்சாகப் பொழுதும் பாடிப்
புதுயுகத்தை நம்முளத்தில் புகுத்தி வைத்த
சாதனையால் எப்போதும் எல்லாருக்கும்
சத்தியமாய்ப் பாரதிஓர் ஆசான் தானே! 3

கண்ணிரண்டில் ஒருகண்ணைக் கரித்தாற் போலும்
கைகால்கள் இரண்டிலொன்றைக் கழித்தாற் போலும்
பெண்ணினத்தை ஆணினத்திற் குறைந்த தாகப்
பேசிவந்த நீசகுணம் பெரிதும் நீங்கப்
பண்ணிசைக்கும் மிகப்புதுமைக் கவிகள் பாடிப்
பாவையரைச் சரிநிகராய்ப் பாராட் டும்நல்
எண்ணமதை நம்மனத்தில் இருக்கச் செய்த
ஏற்றத்தால் பாரதிஓர் ஆசான் என்போம். 4

'மனைவிமக்கள் சுற்றத்தார் மற்றும் இந்த
மாநிலத்தில் காணுகின்ற எல்லாம் மாயை'
எனவுரைக்கும் கொள்கைகளின் இழிவைக் காட்டி
இல்லறத்தில் தெய்வஒளி இருக்கச் செய்தால்
நிலையிலுறும் முத்தியின்பம் தானே வந்து
நிச்சயமாய் நம்மிடத்தில் நிற்கும் என்ற
புனிதமுள்ள தமிழறிவைப் புதுக்கிச் சொன்ன
புலவன்அந்த பாரதிநாம் போற்றும் ஆசான். 5

உழைப்பின்றி உண்டுடுத்துச் சுகித்து வாழும்
ஊதாரி வீண்வாழ்க்கை மிகுந்த தாலே
பிழைப்பின்றி வாடுகின்ற ஏழை மக்கள்
பெருகிவிட்டார் நாட்டிலெனும் உண்மை பேசித்
தழைப்பின்றிப் பலதொழிலும் தடைப்பட் டேங்கத்
தானியங்கள் தருகின்ற உழவும் கெட்டுச்
செழிப்பின்றி வாழ்கின்றோம் இதனை மாற்றும்
செய்கை சொன்ன பாரதிஓர் சிறந்த ஆசான். 6



கொலைமேவும் போர்வழியை இகழ்ந்து கூறிக்
கொல்லாமை பொய்யாமை இரண்டும் சேர்ந்த
கலைவாணர் மெய்த்தொண்டர் கருதிப் போற்றும்
காந்திஎம்மான் அருள்நெறியைக் கனிந்து வாழ்த்தும்
நிலையான பஞ்சகத்தைப் பாடித் தந்து
நித்தம்நித்தம் சன்மார்க்க நினைப்பைக் கூட்டும்
தலையாய தமிழறிவை நமக்குத் தந்த
தவப்புதல்வன் பாரதிஓர் ஆசான் தானே! 7

தமிழரென்ற தனிப்பெயரைத் தாங்கி னாலும்
தனிமுறையில் அரசாளத் தலைப்பட் டாலும்
இமயமுதல் குமரிமுனை இறுதி யாகும்
இந்தியத்தாய் சொந்தத்தில் இடைய றாமல்
அமைதிதரும் ஒற்றுமையை அழுத்திச் சொல்லி
அன்புமுறை தவறாத அறிவை ஊட்டி
அமிழ்தமொழி தமிழினத்தின் ஆக்கம் காக்கும்
ஆற்றல்தரும் பாரதிஓர் ஆசான் என்றும். 8

குறிப்புரை:- *முத்தி இன்பம் - பேரின்பம்; சரிநிகர் - சமம்; பாவையர் - பெண்கள்; சுகித்து - அனுபவித்து; ஊதாரி - வீண் செலவுக்காரன்.*

## 52. பாரதிக்கு வெற்றி மாலை

சுப்பிரமணிய பாரதிக்கு வெற்றிமாலை சூட்டுவோம்
சொன்னவாக்குப் பின்னமின்றிச் சொந்தஆட்சி நாட்டினோம்
இப்ரபஞ்ச மக்கள்யாரும் இனியவாழ்த்துக் கூறவே
இன்றுநந்தம் பரததேவி ஏற்றபீடம் ஏறினாள். 1

சுத்தவீர தீரவாழ்வு சொல்லித்தந்த நாவலன்
சூதுவாது பேதவாழ்வு தொலையப்பாடும் பாவலன்
சக்திநாடிப் புத்திசெல்லச் சாலைகண்ட சாரதி
சத்தியத்தில் பற்றுக்கொண்ட சுப்ரமண்ய பாரதி. 2

ஆடுமாடு போலவாழ்வு அடிமைவாழ்வு என்பதை
அரிவரிக்கு வழியிலாத அனைவருக்கும் தென்படப்
பாடிநாடு வீடுதோறும் வீறுகொள்ளப் பண்ணினான்
பாரதிக்கு வேறொருத்தர் நேருரைக்க ஒண்ணுமோ? 3

அஞ்சிஅஞ்சி உடல்வளர்க்கும் அடிமைப்புத்தி நீக்கினான்.
அன்புமிஞ்சும் ஆண்மைவாழ்வில் ஆசைகொள்ள ஊக்கினான்
கெஞ்சிக்கெஞ்சி உரிமைகேட்கும் கீழ்மை எண்ணம் மாற்றினான்
கேடிலாது மோடிசெய்யும் காந்தி மார்க்கம் போற்றினான். 4

அமைதிமிக்க தமிழ்மொழிக்கிங் காற்றல்கூட்ட நாடினான்
அறிவுமிக்க தமிழர்தங்கள் அச்சம்போக்கப் பாடினான்
சமதைகண்டு மனிதருக்குள் ஜாதித்தாழ்வை ஏசினான்
சமயபேதம் இல்லையென்ற சத்தியத்தைப் பேசினான். 5

*குறிப்புரை:- சமயபேதம் - சமய வேறுபாடு; வீறு - வெற்றி, பெருமை; ப்ரபஞ்சம் - இவ்வுலகம்.*

## 53. பாரதி நினைவு

சுப்ரமண்ய பாரதியை நினைந்திட் டாலும்
சுதந்தரத்தின் ஆவேசம் சுருக்கென் றேறும்;
இப்ரபஞ்சம் முழுதும்நமக் கினமாய் எண்ணும்;
'இந்தியன்நான்' என்றிடும்நல் லிறுமாப் புண்டாம்;
எப்பெரிய காரியமும் எளிதாய்த் தோன்றும்;
எல்லையற்ற உந்சாகம் எழுந்து பொங்கும்
ஒப்பரிய 'தமிழன்' எனும் உவகை ஊறும்;
உள்ளமெல்லாம் துள்ளியெழும் ஊக்கம் உண்டாம். 1

அச்சமெனும் பெரும்பேயை அடித்துப் போக்கும்;
அடிமைமன விலங்குகளை அறுத்துத் தள்ளும்;
துச்சமென வருதுயரம் எதையும் தாங்கிச்
சுதந்தரத்தை விட்டுவிடாத் துணிவு தோன்றும்;



கொச்சைமிகும் பிறநாட்டு மயக்க மெல்லாம்
கூண்டோடு விட்டொழிக்கத் தெளிவு கூட்டும்;
மெச்சிடுநம் தாய்நாட்டின் நாக ரீகம்
மென்மையெல்லாம் பாரதியார் பாட்டால் மேவும். 2

தரித்திரத்தின் கொடுமையெல்லாம் சேர்ந்து வாட்டத்
தன்வீட்டில் உணவின்றித் தவித்த நாளும்
சிரித்தமுகம் மாறாமல் செம்மை காத்துத்
தேசத்தின் விடுதலையே சிறப்பா யெண்ணித்
தெருத்தெருவாய்த் தேசீய பஜனை பாடிச்
சென்னையிலும் உணர்ச்சிவரச் செய்த தீரன்
உருத்தெரியா திப்போதும் இங்கே நம்மை
ஊக்குவதும் பாரதியின் உரைக ளேயாம். 3

பெண்ணுலகம் புதுமைபெறப் பழமை பேசிப்
பெருமையவர் உரிமைகளைப் பெரிதும் போற்றி
மண்ணிலவர் இழிவுபெறச் செய்து வைத்தோர்
மடமைமிகும் கொடுமைகளை மறுத்துப் பாடிக்
கண்ணியத்தைப் பிற்காலக் கவிஞர் தம்முள்
காத்ததுநம் பாரதியின் கவியே யாகும்;
எண்ணஎண்ணத் தமிழ்மொழிக்கோர் ஏற்ற மாகும்;
பாரதியின் திருநாமம் என்றும் வாழ்க! 4

எங்கேயோ எட்டாத உலகம் தன்னில்
இருப்பரென நாம்படித்த தெய்வம் எல்லாம்
இங்கேயே எம்முடனே எங்கும் காண
ஏழைமக்கள் குடிசையிலும் இருப்பதாக்கும்.
சிங்காரப் புதுக்கவிகள் பாடி பலவும்
தேவரெல்லாம் தமிழ்நாட்டில் திரியச் செய்தோன்
மங்காதாம் பாரதியின் நினைவைப் போற்றி
மறவாமல் தமிழ்நாட்டார் வாழ்த்த வேண்டும். 5

*குறிப்புரை:- விலங்கு - கட்டு; ஒப்பரிய - ஈடு இணை இல்லாத; துச்சம் - கீழ்மை; இழிவு; சிங்காரம் - அழகு; மங்காது - அழியாது.*

## 54. பாரதி எனும் பெயர்

பாரதி எனும் பெயரைச் சொல்லு - கெட்ட
பயமெனும் பகைவனை வெல்லு.
நேரினி உனக்குநிகர் இல்லை - உடன்
நீங்கும் அடிமைமனத் தொல்லை. 1

சுப்ரமண்ய பாரதியின் பாட்டு - பாடிச்
சோம்பல், மனச் சோர்வுகளை ஓட்டு,
ஒப்பரிய தன்மதிப்பை ஊட்டும் - அதுவே
உன்பலத்தை நீஉணரக் காட்டும். 2

துள்ளிக் குதித்துவரும் சந்தம் - செயல்
தூண்டித் துணைபுரியும் சொந்தம்
அள்ளிக் கொடுத்தபெரும் உறவோன் - நம்
அருமைப் பாரதியை மறவோம். 3

அன்பு நிறைந்ததமிழ் மொழியில் - செயல்
ஆண்மை குறைந்ததெனும் வழியில்
தென்பு மறைந்துழன்ற போதில் - நல்ல
தீரம் கொடுக்கவந்த தூதன். 4

அமைதி குலவும்தமிழ்ச் சொல்லில் - பல
ஆற்றல் புகுத்திவிட்ட வல்லன்
நமது பாரதியின் பாட்டே - தமிழ்
நலத்தைக் காக்கும் ஒரு கோட்டை. 5

இனிமையான தமிழ்ப் பாஷை - அதில்
'இல்லை வேகம்' எனும் ஓசை.
முணகிப் பேசும்ஒரு வகையை - வென்று
முழங்கும் பாரதியின் இசையே. 6

முன்னோர் பெருமைமட்டும் பேசிப் - புது
முயற்சி ஒன்றுமின்றிக் கூசிச்
சின்னா பின்னமுற்று வாடும் - நாம்
சீர்தி ருந்தக்கவி பாடும். 7



அடிமைப் படுகுழியில் வீழ்ந்தோம் - வெறும்
அரிசிப் புழுக்களெனத் தாழ்ந்தோம்.
கொடுமை கண்டுமனம் கொதித்தான் - கவி
கொட்டி வீரியத்தை விதைத்தான். 8

ஊனைப் பெரியதெனக் கொண்டோம் - ஆன்ம
உணர்வை விற்றுருசி கண்டோம்.
மானம் போகும்என்ற நிலைமை - தனை
மாற்றும் பாரதியின் புலமை. 9

பண்டைச் சிறப்புகளைப் பாடிக் - கிழப்
பாட்டிகள் கூட்டமெனக் கூடி
அண்டிப் பதுங்கிவிட்ட நாட்டில் - நவ
ஆர்வம் வளர்த்தவன் பாட்டே. 10

தீரன் அறிவுரையை இகழ்ந்து - வெறும்
திவசம் நடத்திமட்டும் மகிழ்ந்து,
பேரைக் கெடுத்துவிட மாட்டோம் - எனும்
பிரதிக்ஞை பூண்டுவரம் கேட்போம். 11

கவிஞன் வாக்குறுதி பலிக்கும் - நம்
கவலை தீர்ந்துநலம் ஜொலிக்கும்
புவியில் கீர்த்தியுடன் வாழ்வோம் - வெகு
புதுமை யாகஅர சாள்வோம். 12

வாழ்க பாரதியின் அருமை - அதில்
வளர்க தாய்மொழியின் பெருமை.
வாழ்க வையகத்தில் யாரும் - பிணி
வறுமை அச்சமற்று வாழ்க. 13

*குறிப்புரை:- கீர்த்தியுடன் - புகழுடன்; புவி - பூமி; பிரதிக்ஞை - உறுதி.*

## 55. வல்லபாய் பட்டேல்

இல்லாத காந்திமகான் இருந்தாற் போல
எப்பொழுதும் காந்திவழி எடுத்துக் காட்டிக்
கொல்லாத விரதமதே குறியாய்க் கொண்டு
குற்றமற்ற சத்தியமே நெறியாய்க் கூடிக்

கல்லான மனமுடையோர் எதிர்த்த போதும்
கலங்காத தெளிவுடைய கர்ம வீரன்
வல்லாளன் வல்லபாய் பட்டேல் மாண்ட
வருத்தமதை விரித்துரைக்க வார்த்தையுண்டோ? 1

காந்தியென்ற தவநெருப்பில் காய்ச்சிக் காய்ச்சிக்
கசடொழிய மாற்றுயர்ந்த கனக மாகும்.
சாந்தியென்ற குளிர்மதியின் தன்மை யோடும்
சத்தியத்தின் வாளேந்தும் சர்தா ராகும்.
மாந்தருக்குள் தீயவரை அடக்கி யாளும்
மந்திரியின் தந்திரத்தின் மார்க்க மெல்லாம்
வாய்ந்திருந்த வல்லபாய் பட்டேல் மாண்ட
வருத்தமதைப் பொறுத்திருக்க வலிமை வேண்டும். 2

அன்புமுறை தவறாத அமைச்ச னாகும்;
அரசுகுறையாத ஆற்ற லுள்ளோன்;
துன்பநிலை பலகோடி சூழ்ந்திட் டாலும்
துளங்காமல் துணிவுரைக்கும் துணைவனாகும்
இன்பசுகம் தனக்கெதுவும் வேண்டா னாகி
இந்தியத்தாய்த் திருப்பணிக்கே எல்லா மீந்தான்;
நம்பகத்தின் வடிவெடுத்த வல்ல பாயை
நாமிழந்த பெருந்துயரில் நாதன் காக்கும். 3

காந்தியண்ணல் மறைந்திடித்த கலக்கம் தீர்ந்து
கண்திறந்து புண்மறையக் காணு முன்னால்
சாந்தனவன் நமக்களித்த காவ லாளன்
சர்தார்நம் வல்லபாய் பட்டேல் சாக
நேர்ந்துவிட்ட இத்துயரால் நமது நெஞ்சம்
நெக்குவிடத் தக்கதுதான் என்றிட் டாலும்
சோர்ந்துவிடக் கூடாது பட்டேல் போலச்
சுதந்தரத்தைக் காந்திவழி தொடர்ந்து காப்போம். 4



பிறந்தவர்கள் எல்லோரும் இறந்தே போவார்
பின்னிருக்கும் தலைமுறையார் பெருமை கொள்ளும்
அறந்தெரிந்து வாழ்ந்தவரே அறிஞராவர்
அன்னவர்க்கே மக்களெல்லாம் அருமை செய்வார்
திறந்தெரிந்து காந்திமகான் ஜோதி யான
திருவிளக்கு மங்காமல் தினமுங் காத்து
மறைந்துவிட்ட வல்லபாய் நமக்குத் தந்த
மணிவிளக்கை நாம்காத்து வாழ வேண்டும். 5

*குறிப்புரை :- குளிர்மதி - சந்திரன், நிலா; மங்காமல் - அழியாமல்; பலகோடி - அளவில்லாமல், எண்ணற்ற*

## *56. உ.வே. சாமிநாத ஐயர்*

பேச்செல்லாம் தமிழ்மொழியின் பெருமை பேசிப்
பெற்றெதெல்லாம் தமிழ்த்தாயின் பெற்றி யென்று
மூச்செல்லாம் தமிழ்வளர்க்கும் மூச்சே வாங்கி
முற்றும்அவள் திருப்பணிக்கே மூச்சை விட்டான்.
தீச்சொல்லும் சினமறியாச் செம்மை காத்தோன்
திகழ்சாமி நாதஐயன் சிறப்பை யெல்லாம்
வாய்ச்சொல்லால் புகழ்ந்துவிடப் போகா துண்மை;
மனமாரத் தமிழ் நாட்டார் வணங்கத் தக்கோன். 1

அல்லுபகல் நினைவெல்லாம் அதுவே யாக
அலைந்தலைந்தே ஊரூராய்த் திரிந்து நாடிச்
செல்லரித்த ஏடுகளைத் தேடித் தேடிச்
சேகரித்துச் செருகலின்றிச் செப்பம் செய்து
சொல்லரிய துன்பங்கள் பலவும் தாங்கிச்
சோர்வறியா துழைத்தஒரு சாமிநாதன்
இல்லையெனில் அவன்பதித்த தமிழ்நூ லெல்லாம்
இருந்த இடம் இந்நேரம் தெரிந்தி டாதே. 2

சாதிகுலம் பிறப்புகளாற் பெருமை யில்லை;
சமரசமாம் சன்மார்க்க உணர்ச்சி யோடே
ஓதிஉணர்ந் தொழுக்கமுள்ளோர் உயர்ந்தோர் என்னும்
உண்மைக்கோர் இலக்கியமாய் உலகம் போற்ற
ஜோதிமிகும் கவிமழைபோல் மொழிமீ னாட்சி
சுந்தரனாம் தன்குருவைத் தொழுது வாழ்த்தி
வேதியருள் நெறிபிசகாச் சாமி நாதன்
விரித்துரைக்கும் சரித்திரமே விளங்கி நிற்கும். 3

மால்கொடுத்த பிறமொழிகள் மோகத் தாலே
மக்களெல்லாம் பெற்றவளை மறந்தார்; ஞானப்
பால்கொடுத்த தமிழ்த்தாயார் மிகவும் நொந்து
பலமிழந்து நிலைதளர்ந்த பான்மை பார்த்துக்
கோல்கொடுத்து மீட்டுமவள் கோயில் சேர்த்துக்
குற்றமற்ற திருப்பணிகள் பலவும் செய்து
நூல்கொடுத்த பெருமைபல தேடித் தந்த
நோன்பிழைத்த தமிழ்த்தவசி சாமி நாதன். 4

குறிப்புரை:- *பலமிழந்து - சக்தியற்று; பிசகாமல் - தவராமல்; நெறி - அறவழி.*

## *57. கலியாணசுந்தர முதலியார் வாழ்க*

சலியாத சேவையும் தளராத ஊக்கமும்
தணியாத ஆர்வ முள்ளோன்;
நலியாத சொற்களால் நவசக்தி யூட்டிடும்
நயமிக்க தேச பக்தன்;
நிலையான கல்வியின் தெளியாத கொள்கையின்
நேரான நெறியில் நிற்போன்;
கலியாண சுந்தரமுதலியார் தமிழன்பர்
கண்ணான ஒருவ னாகும். 1



பாடெலாம் தான்பட்டுப் பலனெலாம் பிறர்கொள்ளப்
பங்கின்றி உதவு பண்பன்;
ஏடெலாம் மேல்எனும் 'என்கடன் பணிசெய்தல்'
என்பதே எண்ணி யெண்ணி
நாடெலாம் வாழவே நாளெலாம் தன்சுகம்
நாடாது பாடு படுவோன்;
வீடெலாம் தமிழ்மக்கள் கலியாணசுந்தரன்
வெற்றிகொண் டாட வேண்டும். 2

கொல்லாமை பொய்யுரை கூறாமை என்பதே
குறியாகக் கொண்ட தமிழைக்
கல்லாத பேர்களும் களிகொள்ளத் தந்திடும்
கலியாண சுந்த ரத்தின்
செல்லான அறுபதாம் ஆண்டுதிரு நாளிலே
தெய்வத்தைச் சிந்தை செய்து
வல்லாண்மை குறையாமல் நூறாண்டும் அவன்வாழ
மனமார வாழ்த்து கின்றோம். 3

குறிப்புரை:- *சலியாத - வெறுப்பில்லாத; மனமார - மனம் பொருந்த மகிழ்சியுடன்; தளராத - சோர்வில்லாத; பாடு - துன்பம்.*

## *58. உள்ளங் கவர்ந்த பண்டிதர் கலியாணசுந்தரனார்*

'பண்டிதர்' என்றால் பள்ளிக் கூடப்
பையன் களுக்குப் பரிகா சச்சொல்
ஆங்கிலப் பாடத்(து) ஆசான் மாரும்
கணக்குப் போடக் கற்பிப் பவரும்
பூகோள சாத்திரம் புகட்டு வோரும்

விஞ்ஞான அறிவை விளக்கு பவரும்
சரித்திரம் சொல்லித் தருகிற பேரும்
சித்திரம் வரையச் செய்கிற வாத்தியும்
தேகப் பயிற்சி 'டிரில்மாஸ்டர்' கூட
ஓட்டமும் நடையும் உருட்டும் பிரட்டுமாய்க்

கண்டிப்பு தண்டிப்புக் கடுபிடி காட்டி
வருவார் போவார் வார்த்தைகள் பேசுவார்
பார்த்த உடனே பயபக் தியோடு
மாணாக்கர் அவர்களை மதித்து வணங்குவர்;
ஆனால்,

பண்டித ரிடத்தில் மாத்திரம் பயப்படார்.
வடமொழிப் பண்டிதர் வைதீக மானவர்;
அநித்திய உலகில் அசட்டை போலத்
தம்முடைக் கடமையைத் தாம்முடித் திட்டே
எவரென்ன செய்யினும் ஏனென்றும் கேளார்;

அவரைப் பற்றிநான் அதற்குமேல் அறியேன்.
தமிழ்மொழிப் பண்டிதர் தண்மையே உருவாய்
'அடக்கம்' என்பதன் அறிகுறி யாமென
'அமைதி' என்னும் சொல்லின் அர்த்தமாய்ச்
சாந்த மயமாய்ச் சந்தடி யின்றி

இருக்கிற இடமே தெரியா திருப்பார்.
சிறியோர் பெரும்பிழை செய்திட் டாலும்
அடிக்கவோ பிடிக்கவோ அவர்கை கூசும்.
வழுக்கியும் அவருடை வாயி லிருந்தோர்
இழுக்குடை வார்த்தை எதுவும் வராது.

சொற்பொழி வென்று சொல்லவந் தாலும்
'பண்டிதர்' பேச்சுப் பழங்கதை யாகவே
பக்தியைக் குறித்தும் முத்தியைப் பற்றியும்
ஞானம் என்றும் மோனம் என்றும்
அன்பைப் பற்றியும் அருளைப் பற்றியும்

சத்தியம் என்றும் சாந்தம் என்றும்
இளைஞர் காதுக் கின்பம் தராது.
அதனால் தானோ, என்னவோ அறியேன்.
பண்டிதர் என்றால் பயமற்றுப் போனது!
நான் படித்திட்ட நாளில்நான் அறிந்த



பண்டிதர் அனைவர்க்கும் பான்மை இன்னதே.
இப்போது பண்டிதர் எப்படி என்றிட
அவர்களைப் பற்றிநான் சிறிதும் அறியேன்.
மற்ற மாணவர் மரியாதை குறையினும்
பண்டித ருக்குநான் பணிந்தே பயின்றேன்.

எனினும்; பண்டித ரென்றால் இளக்கமாய்
ஏளனம் செய்பவர் இடையே வளர்ந்தவன்.
ஆகையி னாலே, தீயஅப் பழக்கம்
எனக்கும் தெரியாமல் இருந்தது போலும்!
அப்படி யிருக்க,

உலகுக் கெல்லாம் உணவு கொடுத்து
வந்தவர்க் கெல்லாம் வடித்துக் கொட்டி
ஞானமும் ஊட்டி நல்வழி காட்டிக்
கல்வியும் கலைகளும் கற்கச் செய்து
வீரமும் தீரமும் வெற்றியும் கண்டே

அன்பின் முறைகளில் அரசு புரிந்து
சாந்தி மிகுந்த தனிச்சிறப் புள்ளதாய்,
வந்து பார்த்தவர் வாழ்த்தி வணங்கும்
நாடா வளந்திகழ் நாடா யிருந்தும்
பேரும் புகழும் பெருமையும் கெட்டுத்

தன்னர சிழந்து தரித்திரம் மிஞ்ச
அன்னிய நாட்டுக் கடிமைப் பட்டும்,
அறிவும் ஆற்றலும் ஆண்மையும் மறைந்து
நொந்து கிடக்கும் இந்தியத் தாயின்
சுதந்தரப் போரைத் தொடங்கிய தூயோன்.

தெய்வத் திருக்குறள் திருவாய் மலர்ந்த
வள்ளுவ முனிவனே வந்துவிட் டதுபோல்
உழவும் உழைப்புமே உயர்ந்த தொழிலாய்
வாழ்ந்து காட்டும் நவீன வள்ளுவன்,
ஏழையின் துயரம் என்துயர் என்போன்

நல்லற மாகிய இல்லறத் தவசி
பக்தருக் கெல்லாம் பக்த சிகாமணி
ஐம்புலன் வென்ற அருந்தவ சித்தன்.
ஞாலத் துக்கொரு ஞான ஜோதியாய்
அறந்தரு வாழ்க்கை அந்த ணாளனாம்.

காந்தி அடிகள்எம் கருணா மூர்த்தி -
சத்தியம் சாந்தமே கத்திகே டயமாய்க்
கொல்லா விரதமே வில்லாய் வளைத்திட்(டு)
அன்பே அதற்கோர் அம்பாய்ப் பூட்டி
அறப்போர் தொடுத்தஅவ் வாரம்ப நாளில்,

அன்னவன்,
சேனையில் ஒருவனாய் யானும் சேர்ந்தேன்
காந்தி மகானின் கருத்தைச் சொல்லிப்
பாமர மக்களின் படைப்பலம் திரட்ட
ஒவ்வோர் ஊராய் ஓடித் திரிந்து

வீடு வாசல் வேலைகள் விட்டு
அதுவே பணியாய் அலைந்த நாட்களில் -
"அயலூர் ஒன்றில் அரசியற் கூட்டம்.
பெருத்த கூட்டம் பெரியகொண் டாட்டம்;
பட்டண மிருந்தொரு பண்டிதர் வருகிறார்;

செந்தமிழ் நடையில் தித்திக்கப் பேசுவார்;
போவோம் அதற்குப் புறப்படுங்கள்"என,
என்னையும் சிலரையும் எனக்கொரு நண்பர்
கந்த சாமியார் கனிவுடன் அழைத்தார்.
இதனைக் கேட்டார் இன்னொரு நண்பர்;

"பண்டிதர் பேச்சா? பழைய சோறுதான்.
சளசள சளவென்று சப்பிட் டிருக்கும்.
வெண்டைக் காயும் விளக்கெண் ணெயுமாய்
வழவழ வென்றுதான் பேச்சு வளரும்.
நேற்றொரு பண்டிதர் நீளமாய்ப் பேசினார்.



போதும் போதும் போதுமென் றாச்சு"
என்று சொல்லி ஏளனம் செய்தார்.
என்னுடன் இருந்த ஏழெட்டுப் பேரும்
ஆங்கிலப் பள்ளியின் அனுபவ முள்ளோர்
பண்டிதர் பேச்சைப் பரிகாசம் பண்ணிய

அந்தக் கேலியை ஆமோ தித்தனர்.
கூடச் சேர்ந்து குறைசொலா விடினும்
பண்டிதர் என்பதைப் பரிகாசம் செய்ததைக்
கண்டிக் காமல்நான் கம்மென் றிருந்தேன்.
சேர்ந்து கொஞ்சம் சிரித்து விட்டேன்.

அதனால் என்னிடம் அதிக மதிப்புடன்
கூவி யழைத்தவர் கோபம் கொண்டார்.
அதன்மேல் எனக்கும் அறிவு பிறந்தது.
பண்டிதர் என்றால் பரிகாசம் செய்வதைக்
கண்டனம் செய்து கனிந்து பேசிக்

கந்த சாமியின் கருத்தின் படிக்கே
எல்லோரும் சேர்ந்து போய்வர இசைந்தோம்.
போனோம்.
பண்டிதர் அவர்களைப் பார்த்தேன்; பார்த்தால்,
தாட்டிகம் இல்லை; தடபுடல் காணோம்!

உயரமும் இல்லை; உருவமும் ஒல்லி;
மாநிற மென்ன மதிக்கத் தகுந்தவர்
கல்வித் தெய்வம் கலைமகள் வண்ணமாய்
வெள்ளை வெள்ளேரென வெளுத்த வேட்டியும்
அதனிலும் வெளுத்த அங்கச் சட்டையும்

அங்கியின் மேலொரு அங்கவஸ் திரமும்,
தலையில் துல்லிய வெள்ளைத் தலைப்பா
கண்ணாடி மூடிய கனற்பொறி போன்று
குளிர்ச்சியும் கூடிய கூர்ந்த கண்கள்.
மகிழ்ச்சி ஊட்டும் மலர்ந்த முகத்துடன்

'பண்டித' ராகவே பண்டிதர் இருந்தார்.
இடக்கை விரல்கள் இரண்டை நீட்டி
கருத்துக் கேற்பக் கையை ஆட்டி
வலக்கைத் தலத்தில் அடித்து வைத்துச்
சங்கீத மத்தியில் சாப்புப் போல

அடித்துப் பேசி அழுத்தம் திருத்தமாய்ச்
சுளைசுளை யாகச் சொற்களைச் சொல்லிப்
பதம்பத மாகப் பதியும் படிக்கே
அணியணி யாக அடுக்கிய கருத்தொடும்
இயக்கி விட்டதோர் எந்திரம் போலத்

தங்கு தடையெனல் எங்குமில் லாமல்
எத்தனை தூரம் எட்டநின் றாலும்
கணீர்க ணீரெனக் காதிலே விழும்படி
செவிவழி இனிக்கும் செந்தேன் போலக்
கற்பனை மிகுந்த கவினுடைக் கவிதையாய்க்

காதாற் காணும் கனவே போலத்
தொல்காப் பியத்தின் சூத்திரம் தொடரச்
சங்க நூல்களின் சாறு வடித்துச்
சிலப்பதி கார ஒலிப்பும் சேர்த்துத்
திருக்குறள் ஞானப் பெருக்கம் திகழத்

திருமந் திரத்தின் பெருமை திரட்டிக்
கம்பன் பாட்டின் செம்பொருள் பெய்து
தேவார த்தின் திருவருள் கூட்டித்
திருவா சகத்தின் தேன்சுவை நிறைத்துத்
திருவாய் மொழியின் தெளிவையும் ஊட்டி

எம்மத மாயினும் சம்மதம் என்னும்
சமரச சுத்தசன் மார்க்கம் தழுவிப்
பண்டைய அறிவைப் புதுமையிற் பதித்துப்
பண்டிதர் பிறரிடம் பார்த்தறி யாத
அரசியல் சரித்திர அறிவுகள் பொருத்திக்



கள்ளமில் லாத உள்ளத் தெளிவுடன்
அன்பு ததும்பிட ஆர்வம் பொங்கக்
கற்றவர் மனத்தை முற்றிலும் கவர்ந்து
பாமர மக்களைப் பரவசப் படுத்தி,
'காந்தீயத்தின் கருத்துகள் எல்லாம்

தமிழன் இதயம் தழுவிய வாழ்வே'
என்பதைத் தெளிவாய் எடுத்துக் காட்டிய
அற்புதம் மிகுந்த சொற்பொழி வதனைக்
கேட்டேன்; இன்பக் கிறுகிறுப் புற்றேன்
இரண்டரை மணியும் இப்படிப் பேசிக்

கடைசியில் பேச்சின் கருத்துரை யாக,
முறைபிற ழாமல் உரைதள ராமல்
சொன்னதை யெல்லாம் சுருக்கிச் சொல்லி
இறைத்த முத்தை எடுத்துச் சேர்த்துத்
தொடுத்த மாலைபோல் தொகுத்துக் கூறிக்

கேட்டவர் நெஞ்சில் கிடந்து புரளக்
கூப்பிய கையுடன் குனிந்து கொடுத்து
உரையை முடித்து உட்கார்ந்து விட்டார்.
சொப்பன இன்பத் தொடர்ச்சி நிற்கவே,
திடுக்குற விழித்துத் திகைப்பவன் போலும்,

சங்கீதம் மத்தியில் தடைப்பட் டதுபோல்,
ஓடின சினிமா ஒளிப்படம் கேடுற்(று)
இடையில் அறுத்தே இருட்டித் ததுபோல்
என்னுடை உணர்ச்சிகள் இடைமுறிந் தேங்கினேன்.
இன்னான் எனவெனை ஏதும் அறியாப்

பண்டிதர் அவரையே பார்த்துப் பார்த்துப்
புருடனைக் கண்ட புதுப்பெண் போல -
அன்போ ஆசையோ அடக்கமோ ஒடுக்கமோ
அச்சமோ நாணமோ மடமையோ அறியேன் -
என்னையும் மறந்து என்னுடை மனது

பண்டிதர் இடத்தில் படிந்து விட்டது.
இன்பத் தமிழ்மொழி இலக்கியம் சொல்வதே
காந்தீ யத்தின் கருத்துகள் என்பதை
என்னைப் போலவே எண்ணிய பண்டிதர்
என்னிலும் அழகாய் இணைத்துச் சொன்னதை

எண்ணிக் கொண்டே தலைகுனிந் திருந்தேன்.
சிறிது நேரம் சிந்தனை செய்தபின்.
பண்டிதர் அவர்களைப் பார்க்கும் ஆசையால்
மீண்டும் நிமிர்ந்து மேடையைப் பார்த்தேன்.
அந்தப் பண்டிதர் அங்கே இல்லை.

எவரோ பேசுதற்(கு) எழுந்து நின்றார்.
"எங்கே? பண்டிதர் எங்கே?" என்றுநான்
பக்கத்தி லிருந்த பலரையும் கேட்டேன்.
பிரிதோர் ஊரிற்பேசுதற் கருதி
அவசர மாக அவர்போய் விட்டார்"

என்றொரு நண்பர் என்னிடம் சொன்னார்.
கூட்டம் முடிந்தபின் கொஞ்சிக் குலவிக்
கலந்துபேசிக் களிப்பெலாம் சொல்லிப்
பண்டித ரோடு பழக நினைத்தஎன்
ஆசை கெட்டதால், அவதி மிகுந்தது.

மற்றவர் பேச்சில் மனங்கொள் ளாமல்
உடனே புறப்பட்(டு) ஊருக்கு வந்தேன்.
கண்ட பண்டிதர் கண்ணி லிருந்தார்.
கேட்ட பேச்சும் நெஞ்சில் கிளர்ந்தது.
அந்தப் பண்டிதர் அவரே அவர்தாம்

கலியாண சுந்தர முதலியார் காண்க.
அவரை முதல்முதல் பார்த்த(து) அப்படி.
அந்நாள் தொடங்கி இந்நாள் அளவும்
என்னுடை நினைவில் என்றும் நின்றுள்ளார்.
எண்ணும் போதெலாம் இன்பம் ஊறும்.



நினைக்கும் பொழுதெலாம் நெஞ்சம் குளிரும்.
பத்தாண்டுகள் தாம் பரந்தபிற் பாடு
பட்டணம் சென்றுநான் நேரிற் பழகினேன்.
அதன்மத் தியிலே அவரும் நானும்
கடிதத் திலேதான் கலந்து மகிழ்ந்தோம்.

என்னுடைப் பாட்டென எதுபோ னாலும்
'தேசபக்தன்' தினசரி அதனிலும்
'நவசக்தி' தன்னிலும் நன்றாய் அமைத்துச்
சிறப்புடன் வெளிவரச் செய்வரச் செம்மல்.
பக்கத்தில் அவருடன் பழகிய போதுதான்

சீலம் நிறைந்த செம்மனக் குன்றாம்
ஒழுக்கம் உயர்ந்த உத்தம சீலர்
முதலியார் பெருமையை முற்றிலும் அறிந்தேன்.
தமிழ்நாடு தந்த தலைவர்கள் தம்முள்
காந்தீயத்தின் உட்பொருள் கண்ட

சிலருள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர்
முதலியார் என்பது முற்றிலும் உண்மை.
'தேசபக்த'னில் அவர்செய்த சேவையும்
'நவசக்தி' மூலமாய் நாட்டிற் குழைத்ததும்
புகழ்ந்தால் அதுபெரும் புத்தக மாகும்.

தமிழிலே எண்ணித் தமிழிலே பேசித்
தமிழருக் காகவும் தனித்தொண் டாற்றுவார்
சந்தி விகாரச் சந்திடைச் சிக்கிய
வழக்கற்றுப் போன வார்த்தைகள் மலியப்
'பழந்தமிழ்' என்று பலபேர் பேசின

அந்தத் தமிழையும் அழகுறச் செய்து
புத்தம் புதுப்பல சொற்றொடர் புகுத்திக்
கேட்கக் கேட்கக் கிளர்ச்சி யுண்டாகும்
தனியொரு தமிழ்நடை தந்தவர் சுந்தரர்.
இந்தியத் தாயின் விடுதலை எண்ணமே

நிறைந்த அவருடை நெஞ்சம் குமுற
காந்தீ யத்தையே கடைப்பிடித் தவராய்ச்
சாது வாகவே தம்கடன் தாங்கி
அச்சுத் தொழிலும் அச்சாணி போலவே
கண்ணிற் படாமல் கடமையைச் செய்து

பழமையும் புதுமையும் படியும் சந்தியாய்ப்
பாட்டாளி மக்களின் பக்கத் துணையாய்ப்
பெண்குலப் பெருமைக்கு பெருத்த காவலாய்ச்
சைவ நெறிக்கொரு சமரசத் தூதனாய்ப்
பட்டணத் திருந்தும் பாட்டில் லாமல்

ஓசையில் லாமல் ஓய்வற உழைக்கிறார்.
முத்தமிழ்க் கலியாண சுந்தர முதலியார்
அவருடை அறுபதாம் ஆண்டு நிறைவைப்
பரவிப் புகழ்ந்து பல்லாண்டு பாடி
நலம்குறை யாமல் இன்னமும் நாற்ப(து)

ஆண்டுக ளேனும் அவர்வாழ்ந் திருக்கச்
சிவத்தைக் கோரித் தவத்தைச் செய்வோம்.
நந்தமிழ் மக்கள் நல்வாழ்வு பெறவே.
வாழ் கல்யாண சுந்தரன் வாழி!
வாழிபல் லூழி வாழிவா ழியவே!

குறிப்புரை:- ஊழி - பல ஆண்டுகள்; ஓசையில்லாமல் - அமைதியாய் இருந்து; சிக்கி - தடைபட்டு; அவசரமாக - விரைவாக, துரிதமாக; வார்த்தைகள் - சொற்கள்; முத்தமிழ் - இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்; சிவத்தைக்கோரி - சிவபெருமானை நினைந்து.



## 59. சத்தியமூர்த்திக்கு வரவேற்பு

நித்திய அறங்கள் நாட்டில் நிலைத்திட உலகம் வாழ
உத்தமன் காந்தி காட்டும் ஒருவழி ஒன்றே உண்டு;
சத்திய சாந்த நோன்பின் தவச்சிறை யிருந்து வந்தாய்
சத்திய மூர்த்தி எங்கள் தலைவனே! வருக! ஐயா! 1

உடல்நலம் குறைந்தி ருந்தும் ஒருசிறு தயக்கமின்றிக்
கடன்என ஓடி அண்ணல் காந்தியின் ஆணை தாங்கித்
திடமுடன் தேச சேவை தீரர்கள் இனத்தைச் சேர்ந்தே
இடரிடைக் காத்தாய் பெற்ற இந்தியத் தாயின் மானம். 2

ஏழைகள் துயரம் போக எளியவர் களைப்பு நீங்கப்
பாழ்பட உவகை வாட்டும் பகைமைகள் குறைய வென்றே
வாழிய காந்தி சாந்த வாய்மையின் வழியில் நின்று
ஊழியம் செய்யு முங்கள் உதவியை உலகம் போற்றும். 3

தீனரை வதைத்து வாட்டித் தின்றுடல் சுகித்து வாழும்
மானமில் லாத வாழ்க்கை மலிந்த(து) உலகில்; மற்ற
ஞானநல் வழியில் செல்ல நடத்திடும் காந்தி சாந்தச்
சேனையில் சேர்ந்தபேரைச் செகமெலாம் சிறப்புச் செய்யும் 4

தஞ்சம்வந் தவரை நம்பித் தன்னர சிழந்து நொந்து
பஞ்சமும் பிணியும் வாட்டப் பலதுயர் பட்டா ளேனும்
எஞ்சிய 'சாந்தி' ஞானம் இன்னமும் குறைவி லாத
வஞ்சியாம் பார தத்தாய் வாழ்த்துவள் வாரித்தூக்கி. 5

பணத்தினை இழந்திட் டாலும் பலத்தினிற் குறைந்திட்டாலும்
குணத்தினிற் குறையக் கூசும் குலத்தினிற் பிறந்தோ மன்றோ?
கணத்தொடும் சிறையில் நொந்தும் கண்ணியம் குறைந்தி டாத
மணத்தொடும் வருவீர் தம்மை மாநிலம் மறவா தென்றும். 6

வள்ளுவன் குறளும் வேத வடமொழி வகுத்த யாவும்
தள்ளரும் 'சாந்தி' என்ற தனிப்பதக் கருத்தே யாகும்
கள்ளமில் லாமலெண்ணின் காந்தி சொல் அதுவே; காண்போம்
எள்ளரும் அதுவே யாகும் இந்திய நாகரீகம். 7

வருகவே சத்தியமூர்த்தி! வாழ்கஉன் இனத்தோ ரெல்லாம்
பெருகிநம் சாந்தி சேனை பெற்றதாய் நாட்டை மீட்கும்
அருகிலே அடையும் சொந்த அரசினை அழைத்துக் கொள்ளத்
தருகஉன் திறமைமுற்றும் தமிழகம் பெருமை கொள்ளும். 8

*குறிப்புரை:- துயரம் - துன்பம், வறுமை; தஞ்சம் - அடைக்கலம்;*
*பஞ்சம் - வறுமை; பிணி - நோய்.*

## 60. யோக சமாஜ குரு

பள்ளியில் மாணவனாய்ப் படிக்கும் போதே
பரமார்த்த சிந்தனைகள் பற்றிக் கொள்ளத்
துள்ளிவரும் வாலிபத்தின் துடிப்ப டக்கித்
துறவறமே மேற்கொள்ளத் துணிவு கொண்டோன்
தள்ளரிய ஆசைகளைத் தணிப்ப தற்காயித்
தமோராஜத்தாம் உணவுகளைத் தளைக் கற்றோன்
உள்ளமதை ஒருநிலையில் ஒடுங்கச் செய்ய
உப்பின்றி உண்டவனாம் சுத்தா னந்தன். 1

தென்மொழியும் வடமொழியும் தெளியக் கற்றான்
திசைமொழியாம் ஆங்கிலத்தில் திறமை மிக்கான்
மென்மைமிகும் பிரெஞ்சுமொழி விரும்பிக் கொண்டான்
மேதினியில் இலக்கியத்தின் மேன்மை யுள்ள
பன்மொழிகள் பரிந்தொளிரும் சுத்தா னந்த
பாரதியார் மெய்ஞ்ஞானப் பண்பில் மிக்க
தன்மொழியே தலைசிறந்த மொழியா மென்று
தமிழுக்கே பணிபுரியும் தவசி யானான். 2

கானகத்தே மறைந்துவிடத் துறந்தா னல்லன்
கண்மூடிக் கருத்தடக்கும் மௌனி யல்லன்
ஞானமொழி மக்களுக்கு நாளும் சொல்லி,
நாட்டிற்குச் சேவை செய்யும் நாட்டம் ஒன்றே
ஊனெடுத்த பயன்என்னும் உறுதி கொண்டான்
ஓயாமல் உழைத்துவரும் சுத்தா னந்தன்



தேனிருக்கும் தமிழுக்கோர் கவிஞ னாகித்
திகழ்கின்ற இலக்கியங்கள் பலவும் செய்தான். 3

இல்லறமோ துறவறமோ எதற்கா னாலும்
எல்லார்க்கும் யோகமுறை இருக்க வேண்டும்
அல்லல்தரும் பிணியேதும் அணுகா வண்ணம்
ஆரோக்ய வாழ்க்கைபெறும் அறிவை யூட்டும்
நல்லதொரு யோகநெறி சமாஜம் தன்னை
நடத்திடவே நாடிநிற்கும் சுத்தா னந்தன்
வல்லமைகள் மிகச்சிறந்து மெய்ஞ்ஞா னத்தின்
வழிகாட்ட நீடூழி வாழ்க மாதோ. 4

*குறிப்புரை:- அல்லல் - துன்பம்; சேவை - தொண்டு; ஊன் - உடம்பு.*

## 61. வாழ்க ராஜாஜி

சாதிமதச் சழக்குகளைக் கடந்து நிற்போன்
சமதர்ம சன்மார்க்க சாந்த சீலன்
நீதிநெறி முறைதெரிந்த நேர்மை யாளன்
நிந்தையற்ற வாழ்க்கைதரும் நியம முள்ளோன்
ஓதிஉணர்ந் தச்சமற்ற உண்மை கூறி
உலகநலம் காப்பதற்கே உழைக்கும் யோகி
மேதினியில் அறிவறிந்த மக்கள் யாரும்
மெச்சுமெங்கள் ராஜாஜி மேதை வாழ்க!

கூரிய அறிவால் கொண்ட
கொள்கையின் உயர்வால் கூறும்
சீரிய ஒழுக்கம் காத்த
சிறப்பினால் எதையும் செய்யக்
காரியத் திறமை வாய்ந்து
கடனறி கார ணத்தால்
யாரினும் ராஜா ஜீயை
அறிஞர்கள் போற்று வார்கள். 1

நஞ்சினில் மிகவும் தோய்ந்து
நாசமே கருதிப் பாய்ச்சி

வெஞ்சின வசைகள் கோத்து
விட்டன பாணம் எல்லாம்
பஞ்சினிற் பட்ட வேல்போல்
பயனற, ராஜா ஜீயோ
கொஞ்சமும் கோப தாபக்
குறியிலாக் குணக்குன் றானான். 2

பொதுநலம் ஒன்றே யன்றிப்
புகழ்ச்சியில் மயங்க மாட்டான்;
எதுநலம் என்ற பேச்சில்
எதிர்ப்புகள் எதற்கும் அஞ்சான்;
மதிநலத் தெளிவு கொண்ட
மாபெரும் கர்ம யோகி
துதிபெறத் தமிழர் மேன்மை
துலக்கினோன் ராஜா ஜீயே. 3

வேங்கைகள் சூழ்ந்த மான்போல்
விடுபட வழியில் லாமல்
தீங்குகள் சுற்றி நின்று
திடுக்கிடச் செய்த போதும்
ஆங்குமான் கல்லோ! என்ன
அசைவிலா உறுதி காட்டும்
பாங்குளான் ராஜா ஜீயே;
பகைவரே பணியும் பண்பன். 4

தாழ்ந்தவர் உயர்ந்தோர் என்று
ஜாதியால் குறித்தல் பாபம்
மாந்தருள் தீண்டல் என்றல்
மடைமையுள் மடமை என்று
காந்தியை நாமெல் லாரும்
காண்பதன் வெகுநாள் முன்பே
சாந்தமாய் வாழ்க்கை தன்னில்
சாதித்தோன் ராஜா ஜீயே. 5



பழுதிலா வாழ்க்கை தந்த
பயமிலா நெஞ்சத் தாலே
எழுபது வயதின் மேலே
இன்னமும் இளைஞ னேபோல்
எழுதரும் மேலோன் காந்தி
இடையறாப் பக்த னாக
வழுவிலா அரசு காட்டும்
ராஜாஜி வாழ்க வாழ்க! 6

## 62. காமராஜர் வாழ்க

ஒருவருக்கும் பொல்லாங்கு நினையா நெஞ்சன்
உரிமையுள்ள யாவருக்கும் உதவும் பண்பன்
அருவருக்கும் வாதுகளில் அலையாச் சொல்லன்
அமைதியுடன் பணிபுரியும் அன்புத் தொண்டன்
திருவிருக்கும் காந்திமகான் கொள்கை தாங்கும்-
தேசபக்தன் உழைப்பதனால் உயர்ந்த செம்மல்
மறுவிருக்கும் ஆசைகளால் மனம்கெ டாத
முதலமைச்சர் காமராஜர் மகிழ்ந்து வாழ்க.

## 63. ஜவஹர்லால் மன்னன்

மன்னுயிரைப் போர்க்களத்தில் கொன்று வீழ்த்தி
மலைமலையாய்ப் பிணக்குவியல் குவித்த தாலே
மன்னரெனப் பலர்வணங்கத் தருக்கி வாழ்ந்தோர்
மாநிலத்தில் எத்தனையோ பேரைக் கண்டோம்;
தன்னுயிரை மன்னுயிர்காத் தத்தம் செய்து
தருமநெறி தவறாத தன்மைக் காக
இன்னுயிர்கள் மணங்குளிர் இளங்கோ என்றே
எதிர்கொள்ளும் மன்னனெங்கள் ஜவஹர் லாலே. 1

பணம்படைத்த சிலபேர்கள் தனியே கூடிப்
பட்டாளம் சுற்றிநின்று பாரா செய்ய
மணம்படைத்தாம் வரவளிக்க மகிழ்ந்து போகும்
மன்னரென்பார் எத்தனையோ பேர்கள் உண்டு;

குணம்படைத்துக் கருணைமிகும் கொள்கைக் காகக்
கோடானு கோடிமக்கள் எங்கும் கூடிக்
'கணம்பொறுங்கள்! கண்டாலும் போதும்' என்று
களிசிறக்கும் மன்னனெங்கள் ஜவஹர் லாலே. 2

எச்சிலுண்ணும் சிறுமனத்தார் பலபேர் கூடி
இல்லாத பெருமைகளை இசைத்துக் கூறும்
இச்சகத்தால் மதிமயங்கி இருமாப் புற்ற
இருள்மனத்தார் எத்தனையோ அரசர்கண்டோம்;
மெச்சுகின்ற பிறர்மொழியை மிகைசெய் யாமல்
மெய்யறிவும் பொய்வெறுப்பும் துணையாய் மேவ
அச்சமற்ற நல்லொழுக்கம் அதற்கே மக்கள்
ஆசைசெய்யும் அரசனெங்கள் ஜவஹர் லாலே. 3

சேனைகளை முன்செலுத்திப் பின்னால் நின்று
'ஜெயித்துவிட்டேன்!' என்றுசொல்லிச் செருக்கி வாழும்
ஊனமுள்ள பெருமையினால் அரச ரென்போர்
உலகத்தில் எத்தனையோ பேரைக் கண்டோம்;
தீனர்களின் துயர்துடைக்க முன்னால் நின்று
தீரமுடன் பிறர்க்குழைக்கும் சிறப்புக் காக
மானமிகும் வீரரென எங்கும் வாழ்த்த
மன்னனென விளங்கிடுவான் ஜவஹர் லாலே 4

கஞ்சியின்றி உயிர்தளர்ந்த ஏழை மக்கள்
காலில்வந்து விழுவதையே களிப்பாய் எண்ணிப்
பஞ்சணையில் படுத்திருந்த படியே இந்தப்
பாரளிக்கும் மன்னவர்கள் பலரைப் பார்த்தோம்;
தஞ்சமின்றித் தரித்திரத்தின் கொடுமை வாட்டத்
தவித்துழலும் பலகோடி மக்கட் கெல்லாம்
அஞ்சலென்ற மொழிகூறி ஆண்மை யூட்டும்
அன்புருவாம் மன்னனெங்கள் ஜவஹர் லாலே. 5

ஆயுதத்தின் அதிகாரம் அதற்கே அஞ்சி
அடிபரவும் பலபேர்கள் அருகே சூழப்



பேயுதித்துக் கொலுவிருக்கும் பெற்றி யேபோல்
பிறர்நடுங்க அரசாண்டார் பலபேர் உண்டு;
போயுதித்த இடங்களெல்லாம் புதுமை பூட்டிப்
புதையல்வந்து கிடைத்ததுபோல் பூரிப் பெய்தித்
தாயெதிர்த்த குழந்தைகள்போல் ஜனங்கள் பார்க்கத்
தாவிவரும் மன்னனெங்கள் ஜவஹர் லாலே. 6

ஏழைகளின் குடிமுழுக வரிகள் வாங்கி
இந்திரியச் சொந்த சுகங்களுக்கே வீசிக்
கோழையராய்ப் பிறர்உழைப்பில் கோலங் கொள்ளும்
கோமான்கள் குவலயத்தில் பலபேர் உண்டு;
வாழையைப்போல் பிறர்க்குதவி வருத்தம் தாங்கி
வறியவர்க்கே கனிந்துருகும் வரிசைக் காக
வாழிஜவார் வாழிஜவார் வாழி யென்று
வாழ்த்திசைக்கும் மன்னனெங்கள் ஜவஹர் லாலே. 7

## *64. ஜவஹர் நினைவு*

நேருவை நினைத்தவுடன்
நேர்மைக் குணம் என்னும்
மேருவை நிகர்த்தஒளி
மின்னிவரும் முன்னால்
பாரிலுள்ள யாவரும்நம்
பந்துஜன மென்றே
கோரும்ஒரு மெய்யுணர்வின்
கொள்கைவரும் அன்றே? 1

ஜவஹரை நினைத்தவுடன்
ஜாதிநிற பேதம்
அவனியில் அழித்தொழிய
ஆர்வம்நம தாகும்.
நவநவ உணர்ச்சிகளின்
நன்னெறியை ஊட்டும்
நல்லதுணை வல்லனென
நம்மறிவு காட்டும். 2

தீமையை எதிர்க்கும்ஒரு
தீரனுளன் என்றும்
வாய்மையை வளர்க்குமொரு
வள்ளலிவன் என்றும்
தூய்மைதவ றாத முறை
சொல்வளவன் என்றும்
சீமைதொறும் வாழ்த்துஜவ
ஹர்அரிய சீலன். 3

சொந்தமுள தன்னுடைய
சொத்துசுக மெல்லாம்
வந்தநில மக்கள்சுக
வாழ்வுபெற வென்றே
தந்தைதர மைந்த னிவன்
தானமெனத் தந்தான்
எந்தமொழி எந்தக்கதை
ஈடுசொல உண்டு? 4

தன்னல மறுப்பினுயிர்
தன்மையிது வென்ன
இன்னல்களை இன்பமென
ஏற்க ஒளிமின்னும்
பொன்னில்மணி வைக்க உயிர்
பெற்றசிலை போலும்
என்னசொலிப் போற்றிடுவோம்.
எம்ஜவஹர் லாலை! 5

ஏழையின் மனக்குறைகள்
இன்னவெனக் காட்டிக்
கோழைகளைக் கண்டுகொதி
கொண்டதுயர் கூட்டி
ஊழ்வினையை வெல்லுமொரு
ஓவியமும் ஆகும்.



வாழிஜவ ஹர்மதிபன்
வாழிநெடுங் காலம்! 6

குறிப்புரை:- மகிபன் - அரசன், ஊழ்வினை - பழவினை உழுவலன்பு. வினை மூவகைப்படும்.

1. சஞ்சித வினை - நாம் முற்பிறவியில் செய்தது.
2. பிராப்த வினை - இந்தப் பிறவியில் முற்பகலில் சேர்த்து பிற்பகலில் பலனைக் கொடுக்கிறது.
3. ஆகாம்ய வினை - இந்தப் பிறவியில் செய்தவை அடுத்த பிறவியில் பலன்களை அளிப்பது.

நெடுங்காலம் - நீண்ட நாள்; ஈடு சொல - ஒப்புகூற; இன்னல் - துன்பம்; சீமைதொறும் - தேசந்தோறும்.

# IV. இசைப் பாடல்கள்

## *65. சத்தி தோத்திரம்*

**பல்லவி**

சத்தி எனக்கே அருள்வாய் - பரா
சத்தியென் தாயுனை நித்தமும் தொழுதனன். (சத்தி)

**அநுபல்லவி**

பத்தியோ டுன்றனைப் பணிந்திடல் மறந்தேன்
பாரினிற் சுகமெல்லாம் நீயெனத் தெரிந்தேன்
இத்தின முதலுன்றன் இணையடி புரிந்தேன்
இனிமேற் பிணியில்லை கவலைகள் துறந்தேன்! (சத்தி)

**சரணங்கள்**

நோய்களைத் தடுத்திட நுண்ணிய அறிவும்
நொந்தவர் தங்களைக் காத்திடப் பரிவும்
மாய்வதைக் குறைத்திட மருந்துகள் முறிவும்
மந்திர தந்திர மணியவை தெரியும். (சத்தி) 1

கல்லினும் கட்டுடைய தேகம்எற் கருள்வாய்
காலனை ஜெயித்திடும் கருணையும் தருவாய்
சொல்லிலும் செயலிலும் தூய்மையைத் தருவாய்
சோம்பலை யோட்டிடிதற் சுகமெனக் கருள்வாய். (சத்தி) 2

புண்ணிய பாவமென்றன் இச்சையிற் கடந்தே
பூதங்கள் ஐந்துமென் சொற்படி நடந்தே
எண்ணிய யாவுமென்றன் இஷ்டப்படி முடிய
ஈன்றவ ளேஉன்றன் அருள்வரத் தடையோ? (சத்தி) 3

## *66. ஒரு நாளைக்கு ஒரு தரம்*

**பல்லவி**

ஒரு நாளைக்கு ஒருதரம்
ஒருநொடிப் பொழுதேனும்



உன்னைப் படைத்தவனை
எண்ணிச் சுகித்த துண்டோ? மனமே! (ஒரு)

**அநுபல்லவி**

திருநாளும், தேரும்என்று தேடி யலைந்தல்ல
சிந்தனை அலையாமல் தியானத்தில் நிறுத்தியே (ஒரு)

**சரணங்கள்**

விடியுமுன் விழித்தனை
வெளுக்குமுன் வீட்டை விட்டாய்
வெவ்வேறாம் இடத்துக்கு
வௌவால்போல் ஓட்டமிட்டாய்
உடலும் மனமும் சோர்ந்து
ஓய்ந்திட வீடுவந்தும்
உண்ணும் பொழுதுங்கூட
எண்ணம் நிலைப்பதில்லை. (ஒரு) 1

அரைக்காசுக் கானாலும்
ஒருநாள் முழுதுங்காப்பாய்
ஆயிரம் பேரையேனும்
அலுப்பின்றிப் போய்ப்பார்ப்பாய்
உரைப்பார் உரைகட்கெல்லாம்
உயர்ந்திடும் செல்வனை
உன்னுள் இருப்பவனை
எண்ணிட நேரமில்லை! (ஒரு) 2

சிலநாளைக் கதிகாரம்
செய்யும் ஒருவர்க்கஞ்சிச்
செய்யச்சொல் வதையெல்லாம்
செல்வாய்நீ பல்லைக் கெஞ்சி;
பலநாளும் ஜென்மமெல்லாம்
பாவிக்கும் அதிகாரி
பரமனை நினைக்கவும்
ஒரு கணம் உனக்கில்லை (ஒரு) 3

'நாளும் கிழமை' யென்று
நல்லவர் உரைத்தாலும்
'நாளைக்கு ஆகட்டும்
வேலை அதிகம்' என்பாய்!
பாழும் பணத்தைத் தேடிப்
படும்பாடு கணக்கில்லை.
பகவானை எண்ணமட்டும்
அவகாசம் உனக்கில்லை (ஒரு) 4

குறிப்புரை:- படும்பாடு - படுகின்ற துன்பம்; பகவான் - இறைவன்;
அவகாசம் - போதிய நேரம்.

## 67. இந்தியத் தாய் தோத்திரம்

### பல்லவி

தாயே வந்தனம்! - இந்தியத்
தாயே வந்தனம்.

### அநுபல்லவி

தாரணி தன்னில் வேறிலை இணையெனப்
பூரண வளந்திகழ் புண்ணிய பூமியெம் (தாயே)

### சரணங்கள்

நிலவளம் நீர்வளம் நிறைந்ததுன் நாடு;
நீண்டஉன் பரப்பிலும் வேறிலை ஈடு;
விலையிலும் விளைவிலும் மலிந்ததுன் தேசம்;
வேண்டிய யாவும்உன் எல்லையில் வாசம். (தாயே) 1

முப்பதும் பத்துமாம் கோடிஉன் மக்கள்;
மூவுலகத்தையும் ஆண்டிடத் தக்கார்;
அற்புத மாகிய ஆற்றல்கள் நிறைந்தாய்
அறியாத் தனத்தால் அடிமையில் இருந்தோம்.(தாயே) 2

படையெடுத் தவரும் பசியெடுத் தவரும்
பற்பல நாட்டார் உனையடுத் தவரை



அடைவுடன் அத்தனை பெயரையும் தாங்கி
ஆதரித் தாண்டஉன் அருங்குணம் ஓங்க (தாயே) 3

பாஷைகள் பற்பல படித்தவள் நீயே
படித்ததன் பயன்பெறும் நடத்தையுள் ளாயே
ஆசைகள் அகற்றிய அறங்களிற் சிறந்தாய்
அன்பின் வழிகளை அனைத்தையும்
அறிந்தாய். (தாயே) 4

ஞானமும் கலைகளுக் கிருப்பிட மாவாய்
நாகரி கத்தின் பிறப்பிட மாவாய்
தானமும் தவங்களைத் தாங்கின துன்கை
தருமம் யாவையும் தழைத்தது மிங்கே. (தாயே) 5

மதவெறிக் கொடுமையை மாற்றும்உன் பொறுமை
மற்றவர் மதத்தையும் போற்றுமுன் பெருமை
சதமெனும் சத்திய சாந்தியை உரைப்பாய்
சன்மார்க் கத்தவர் சிந்தையில் இருப்பாய். (தாயே) 6

குறிப்புரை:- தானம் - நன்கொடை, பெருங்கொடை, ஈகை;
தருமம் - அறம், நற்செயல், நல்லொழுக்கம்;
சதமெனும் - நிலைமையெனும்; இறுதியெனும் சாந்தி
- குற்ற நீக்கத்திற்குச் செய்யும் செயல்; மூவுலகு -
இம்மை, மறுமை, பாதாளம்.

## 68. கடவுளை அறிந்தவர்

### பல்லவி

அவரே கடவுளை அறிந்தவராவர்
அனைவரும் மதித்திடத் தகுந்தவராவர் (அவரே)

### அநுபல்லவி

துன்பப் படுவோர் துயரம் சகியார்
துடிதுடித் தோடி துணைசெயப் புகுவார்
இன்பம் தனக்கென எதையும் வேண்டார்
யாவரும் சுகப்பட வேலைகள் பூண்டார் (அவரே)

**சரணங்கள்**

பசியால் பாடின எவரையும் பார்த்துப்
பட்டினி தமக்கெனப் பரிதபித் தார்ந்து
விசையாய் முடிந்ததை விருப்புடன் கொடுப்பார்
வீண்உபசாரம் விளம்புதல் விடுப்பார் (அவரே) 1

நோயால் வருந்திடும் யாரையும் கண்டு
நோன்பெனச் செய்வார் எல்லாத் தொண்டும்
தாயாம் எனவே தம்சுகம் எதையும்
தள்ளிவைத் தருகினில் தானிருந் துதவும். (அவரே) 2

*குறிப்புரை:- நோன்பு - விரதம்; நோயால் - துன்பத்தால்; விளம்புதல் - சொல்லுதல்.*

## *69. சத்தியம் மறந்தனை*

**பல்லவி**

சத்தியம் மறந்தனை சாந்தம் குறைந்தனை
சத்தியாக்ரஹம் விட்டு மனமே!

**அநுபல்லவி**

உத்தம வழியினை உலகினுக் குணர்த்திட
உன்னை யன்றோ நம்பி யிருந்தேன்?

**சரணங்கள்**

உடல்பொருள் ஆவியும் உண்மைக்குத் தத்தம் என்றே
ஓயாமல் உரைத்தனை மனமே!
கடல்பெரும் பயன்வந்து கைகூடும் சமயத்தில்
கைவிட நினைந்தனை மனமே! 1

அதிகார அகந்தையை அகற்றிட வேண்டுமென்றே
அதற்கென்றே முன்வைத்தாய் மனமே!
சதிகார ருடன் சேர்ந்தே அதிகார வெறிகொண்டு
சங்கற்பம் மறந்தனை மனமே! 2



அன்பின் வழிநடந்தே அறங்கள் நிலைநிறுத்த
அர்ப்பணம் நான்என்றாய் மனமே!
துன்பம் மிகக்கொடுக்கும் ஆசைகள் தூண்டிட
தூய்மையிற் குறைந்தனை மனமே! 3

*குறிப்புரை:- அர்ப்பணம் - உரியதாக்கல், ஒப்பித்தல்; சங்கற்பம் - மனவுறுதி, துணிவு; அகந்தை கர்வம்; தூய்மை - சுத்தம்.*

## *70. உண்மை வளர்ந்திடாமல்*

**பல்லவி**

உண்மை வளர்ந்திடாமல் ஒழுக்கம் உயர்ந்திடாமல்
உண்டோ சுதந்தரமே? (உண்)

**அநுபல்லவி**

பெண்மை நிறைந்தவெறும் பேதைகள் பக்தியென்ற
பேச்சுக்கோ அளவில்லை சீச்சீஇதென்ன தொல்லை (உண்)

**சரணம்**

அதிகாரம் செலுத்திடும் ஆசை மிகவுமுண்டு
அதனாலே பணம்சேர்க்கும் ஆத்திரமே கொண்டு
எரிகின்ற வீட்டிலே எடுத்தது லாபமென்னும்
எண்ணமுடையவர்க்கு நண்ணுமோ சுதந்தரம் (உண்) 1

நாவினிற் சுதந்தரம் நாட்டம் பணத்தில்குறி
நல்லதோ பொல்லாதோ வந்தவரையில்சரி
பாவபுண் ணியமெல்லாம் பண்டைக்கா லத்துப்பேச்சு
பாதகம் குறையாமல் பாவனை எதற்காச்சு? (உண்) 2

சாத்திரம் வேதமெல்லாம் நாத்திகத் தாடுது
சாமிகள் கோவிலிலே தாமங்கே வாடுது
மாத்திரை அளவேனும் மனதில் நினைவில்லார்க்கு
மங்கள சுதந்தரம் எங்கே வருமவர்க்கு? (உண்) 3

*குறிப்புரை:- பாதகம் - பெருந்தீவினை.*

## 71. தருணம் இதுவே

**பல்லவி**

தருணம் இதுவே, தருமம் இதுவே,
தமிழா! எழுந்திரடா.

**அநுபல்லவி**

கருணையின் வடிவாம் கலைகளின் முடிவாம்
காந்தியென் றொருமுனி 'சாந்தி'யென் றழைக்கிறார். (தரு)

**சரணங்கள்**

வள்ளுவர் வாழ்க்கையும் திருக்குறள் வகுத்ததும்
தள்ளருள் தாயுமா னவருடல் தகித்ததும்
வள்ளலி ராமலிங்க சுவாமிகள் வடித்ததும்
கள்ளமில் பட்டினத்தார் கவலையும் இதற்கே. (தரு) 1

சைவர்கள் பூண்டதும் சமணர்கள் மாண்டதும்
வைணவர் வருத்தமும் புத்தர்கள் வாட்டமும்
மையற ஏசுநாதன் சிலுவையில் மரித்ததும்
மஹம்மது நபியவர் மகிழ்ந்ததும் இதற்கே. (தரு) 2

கம்பன் கவித்திறமும் வில்லியின் சந்தமும்
செம்பொருள் சேக்கிழார் தேடத் தெரிந்ததுவும்
பைம்பரஞ் சோதியார் பாடிப் பகர்ந்ததுவும்
நம்பின யாவரும் நவின்றதும் இதுவே. (தரு) 3

மூவர் தேவாரமும் ஔவைநன் மொழிகளும்
ஆழ்வா ராதியர் அனுபவ உரைகளும்
பால்வரும் திருப்புகழ் ஆதிய பனுவலும்
மேல்வரும் கதிக்கென விளம்பிய திதுவே. (தரு) 4

யாகங்கள் முயன்றதும் யோகங்கள் பயின்றதும்
மோகங்க ளைவிடுத்த முனிவரர் பற்பலர்
சாகங்க ளைப்புசித்துத் தவங்கிடந் துழன்றதும்
ஆகமம் பற்பலவும் அலைந்ததும் இதற்கே. (தரு) 5

குறிப்புரை:- *சாகங்களைப்புசித்து - இலையுணவு கொள்ளும் உயிர்களைப் புசித்து.*



## 72. சுதந்தரச் சூரிய உதயம்

**பல்லவி**

சுதந்தரச் சூரியன் உதிக்கிற நேரம்
தூங்காதே தமிழா! (சுதந்)

**அநுபல்லவி**

விதம்வித மாகிய புதுமணம் விரிந்திடும்
விண்ணொளி தனிற்பல வண்ணங்கள் தெரிந்திடும். (சுதந்)

**சரணங்கள்**

அடிமை கொடுத்தஇருள் அகன்றிடப் போகுது
ஆசைப்ப டிநடக்க வெளிச்சமும் ஆகுது
கொடுமை விலங்கினங்கள் குகைகளுக் கோடிடும்
கொஞ்சும் பறவைக்குலம் வானத்தில் பாடிடும். (சுதந்) 1

ஒடுக்கும் தரித்திரத்தால் உடலும் குறுகிநின்று
உள்ளவர் முன்னிருந்தே உளறும் எளியரைப்போல்
நடுக்கும் குளிர்ப்பயமும் நம்மைவிட் டகன்றிடும்
நாட்டினில் இச்சைப்படி நம்குடித் தனம்செய்வோம். (சுதந்) 2

உரிமை சிறிதுமின்றி ஊரைப்ப றித்துஉண்டே
உழைப்பின்றிச் சுகித்திடும் ஊனரைப் போல்இருட்டில்
திரியும் திருடர்பயம் தீர்ந்திடும் நேரம்இனித்
தீனரும் அச்சம்விட்டே ஆன சுகங்கள்பெறும். (சுதந்) 3

குறிப்புரை:- *சுகி - சுகானுபவம். தீனர் - இரப்போர், தீம்பர், இச்சை - விருப்பம்.*

## 73. சும்மா கிடைக்குமோ?

**பல்லவி**

சும்மா கிடைக்குமோ சுதந்தர சுகமது - மனமே!

**அநுபல்லவி**

சுத்தமும் பக்தியும் சத்தியம் இல்லாமல்
சூரமும் வீரமும் சொல்லுவ தால்மட்டும் (சும்மா)

**சரணங்கள்**

உழுது பயிரிடாமல் உணவுகள் கிடைக்குமோ?
உழைப்பும் களைப்புமின்றி உரிமைகள் அடுக்குமோ?
அழுது அழுதுருகி அன்பின்கண் ணீர்பெருக
ஆர்வத்தால் அனைவர்க்கும் சேவைகள்
செய்யாமல் (சும்மா) 1

என்னுடைச் சுகங்களில் இம்மியும் குறையாமல்
எல்லாரும் தியாகம்செய்ய இல்லையென் றேசுவேன்
'சொன்னதைச் செய்வதும் செய்வதே சொல்வதும்'
சுலபமோ நான்அந்தச் சுத்தத்தில் குளிக்காமல் (சும்மா) 2

ஒற்றுமை பேசுவேன் உடன்கூடி நிற்காமல்
ஒவ்வொரு சமயத்தில் வெவ்வேறு சொல்லுவேன்
கற்றஎன் வித்தையைக் காட்டின தேயன்றிக்
கசிந்து கசிந்துருகிக் காரியம் செய்யாமல் (சும்மா) 3

சத்தியம் சாந்த மென்பேன் சட்டென் றதைவிடுத்துச்
சரித்திரப் படிஅது சரியல்ல வென்றுசொல்வேன்
வைத்தஎன் கொள்கையில் வைராக்கிய மில்லாமல்
வார்த்தைக்கும் செய்கைக்கும் வேற்றுமை
விலகாமல் (சும்மா) 4

*குறிப்புரை:- சரித்திரப்படி - வரலாற்றுப்படி - சட்டென்று விரைந்து; உடனே.*

## *74. திருமுடி சூட்டிடுவோம்*

**பல்லவி**

திருமுடி சூட்டிடுவோம் - தெய்வத் தமிழ்மொழிக்கு! (திரு)

**அநுபல்லவி**

வருமொழி எவருக்கும் வாரிக் கொடுத்துதவி
வண்மை மிகுந்ததமிழ் உண்மை உலகறிய (திரு)



**சரணங்கள்**

பெற்றவ ளைஇகழ்ந்து மற்றவ ரைத்தொழுத
பேதைமை செய்துவிட்டோம் ஆதலினால் நம்அன்னை
உற்ற அரசிழந்தே உரிமை பெருமை குன்றி
உள்ளம் வருந்தினதால் பிள்ளைகள் சீர்குலைந்தோம்! (திரு) 1

அன்னையை மீட்டும்அவள் அரியணை மீதிருத்தி
அகிலம் முழுதும்அவள் மகிமை விளங்கச் செய்வோம்!
முன்னைப் பெருமைவந்தே இன்னும் புதுமைபெற்று
முத்தமிழ்ச் செல்வியவள் சித்தம் குளிர்ந்திடவே! (திரு) 2

தாயின் மனம் குளிர்ந்தால் தவம் அதுவே நமக்கு
தாரணி தன்னில் நம்மை யாரினிமேல் இகழ்வார்?
நோயும் நொடியும்விட்டு நுண்ணறி வோடுநல்ல
நூலும் கலைகளெல்லாம் மேலும்மேலும் வளர்ப்
போம். (திரு) 3

## *75. கோலாட்டம்*

**பல்லவி**

கொஞ்சும் கிளிமொழிக் கோதைய ரேநாம்
கூடி யாடுவோம் கோலாட்டம்.

**அநுபல்லவி**

மிஞ்சும் பலவித நோய்களைத் தடுத்திட
மெல்லிய ரேவழி சொல்லிடுவோம். (கொஞ்)

**சரணங்கள்**

நோய்கள் மிகுந்தது எதனா லேயென்று
நுண்ணறி வோடதை எண்ணிடுவோம்
தாய்கள் குழந்தையை வளர்த்திடும் வழிகளைச்
சரிவரச் செய்திடத் தெரிவதில்லை (கொஞ்) 1

பிஞ்சில் வெம்பிய காய்கறி யென்றும்
பெரிதாய்ச் செழித்ததைக் கண்டதுண்டோ?
அஞ்சில் கெட்டது ஐம்பது வயதிலும்
அழியா திருப்பினும் செழியாது. (கொஞ்) 2

தாயும் தந்தையும் தவறுசெய் தாவது
தனையரைச் சேர்வது பொய்யாமோ?
சேயைச் சிசுவினில் கவனிக் காவிடில்
சென்மத் தால்வரும் நன்மையுண்டோ? (கொஞ்) 3

கருவில் வளர்ப்பார் கடவுள்; பூமியைக்
கண்டபின் வளர்ப்பது நாமன்றோ?
அறிவின் நாமதை அறிந்தே வளர்ந்திடில்
ஆயுள் நீண்டிடும் நோயுமில்லை. (கொஞ்) 4

விதியாற் சாவதும் இருந்தா லும்பலர்
வீணாய்ச் சாவதும் உண்டென்றும்
மதியால் நாமதை மாற்றிட லாமென்ற
மாமுனி யவர்மொழி இகழாதே. (கொஞ்) 5

## 76. சுகாதாரக் கும்மி

கும்மி யடிபெண்ணே கும்மிய டிகுல
தெய்வத்தைக் கும்பிட்டுக் கும்மியடி
நம்முடைத் தேசத்தில் நோய்களில் லாமலே
நாடு செழித்திட வேணுமென்று. 1

செத்தவர் தம்மை எழுப்பித் தரவல்ல
சித்த ரிருந்த திருநாட்டில்
எத்தனை யெத்தனை நோய்களினால் மக்கள்
ஈசலைப் போல மடிவதென்ன! 2

ஈசனளித்த அறிவிருந் தும்நல்ல
இயற்கை விதிகளை விட்டுவிட்டு



மோச மிகுந்த பகட்டுடை வாழ்க்கையில்
மோகம் வைத் தேஇந்த மோசமுற்றோம்! 3

சுத்த உணவிலும் சுத்த உடையிலும்
சொன்ன விதிகளை விட்டு விட்டோம்;
நித்தங் குளிப்பதும் பத்தியங் காப்பதும்
மெத்தக் குறைந்தது தேசத்திலே. 4

காலையி லெழுந்து நீராடல் கொஞ்சம்
கர்த்தனை யெண்ணித் துதிபாடல்
மாலையி லோடி விளையாடல் இந்த
மார்க்கத்தை விட்டனர் மக்களெல்லாம். 5

அளவை யறிந்து புசிப்பதில்லை தங்கள்
அளவை யளந்து வசிப்பதில்லை
களவுக்குப் பின்னால் கதவை அடைப்பவர்
காரியம் போலடி கண்மணியே! 6

நல்ல வழக்கங்கள் உள்ளவர் தங்களை
நாடுமோ நோய்களும் எந்நாளும்?
நல்ல வழக்கங்கள் நாளும் வளர்ந்திட
நாடு செழித்திட வேணுமடி. 7

## 77. தீர்க்கதரிசி

### பல்லவி

தீர்க்க தரிசிசொன்ன மார்க்க மதனைவிட்டுத்
திரும்புவ தென்ன மனமே! (தீர்க்க)

### அநுபல்லவி

பார்க்குள் பெரியவர்கள் பார்த்த அனுபவத்தைக்
காக்கும் படியுதித்த காந்தி யெனும்பெரிய. (தீர்க்க)

**சரணங்கள்**

ஆண்மை மறந்தவர்க்கும் ஆளும் திறமையுண்டோ?
அன்பைத் துறந்தவர்க்கும் இன்ப நிலையுண்டோ?
பான்மை அறிந்திருந்தும் மேன்மை வழியைவிட்டுப்
பற்பல எண்ணி எண்ணி அற்பத் தனத்திற்பட்டு. (தீர்க்க) 1

அன்பிற் குயிர்விடுதல் ஆண்மை யதுவேயாகும்;
ஆசை அதிகப்பட்டால் ஆளும் திறமைபோகும்;
துன்பம் சகித்துப்பெற்ற தூய்மை மிகுந்திடும்
துறவி உனக்குச்சொன்ன அறவுரை இகழ்ந்தனை. (தீர்க்க) 2

உண்மை யுறுதியின்றி உண்டாசு தந்தரம்?
உயர்ந்த ஒழுக்கமின்றி வேறுள்ள தந்திரம்
என்னென்ன செய்திடினும் ஏதும் பலித்திடுமோ?
என்னும் பொய் யாமொழியைச் சொன்ன பெருந்தவசி.
(தீர்க்க) 3

*குறிப்புரை:- பான்மை - தன்மை; அறவுரை - புத்திமதி.*

## *78. நல்ல வழி*

**பல்லவி**

நல்ல வழியிருக்க அல்லல் வழிநினைத்து
நாளும் அலைந்தாய் நெஞ்சமே! (நல்ல)

**அநுபல்லவி**

தொல்லை முனிவரர்கள் சொல்லிய வழியது
சுதந்தர நாட்டிற்குச் சொல்லுதற் கெளியது. (நல்ல)

**சரணங்கள்**

கடியும் புலிகரடி கொடிய மிருகமில்லை
கள்ளர்கள் பயமில்லை பள்ளம்மே டுள்ளதல்ல
குடியுங் கொலைகளவும் அடியும் வழிப்பறியும்
கொஞ்சமும் அதிலில்லை நெஞ்சமே நீசெல்ல (நல்ல) 1



கோபமென் னும்வெயிலின் தாபமங் கடிக்காது
குரோதமெ னும்பனியின் குளிர்வந்து நடுக்காது
சாபம் பிறக்குச் சொல்லும் தாகமும் எடுக்காது
சங்கடப் பேய்கள்நம்மை அங்கேதும் தடுக்காது. (நல்ல) 2

நாடும் மதங்களெல்லாம் கூடும்அவ் வழிசென்று
நாலிரு வழிகட்கும் நடுவா னத்துவொன்று
பாடும் மறைகளெல்லாம் தேடும் அதனையென்றும்
பத்தி யுடையவர்க்குப் பாதை மிகவும் நன்று. (நல்ல) 3

ஆய்ந்த பெரியவர்கள் தேர்ந்ததும் அவ்வழி
ஆனந்த சுதந்தரம் போனவர்க் கங்குவெளி
காந்தி முனிவன் சொல்லும் சாந்தமென் றொரு மொழி
காட்டிய வழி சென்றால் வீட்டை யடைவாய் தெளி. (நல்ல) 4

## *79. தேசத் தொண்டு*

**பல்லவி**

தேசத் தொண்டுகள் செய்திடுவோம்
தெய்வம் துணைவரக் கைதொழுவோம் (தேசத்)

**அநுபல்லவி**

நம்முடை நாட்டை நாம் ஆள
நன்மைகள் முன்போல் இனிமீள
எம்முடைய ராஜ்ஜியம் இதுவென்றே
இந்தியர் மகிழ்ந்திடச் சொந்த மென்றால் (தேசத்)

**சரணங்கள்**

பஞ்சக் கொடுமையை ஒழித்திடவும்
பாரத நாடினிச் செழித்திடவும்
அஞ்சும் அடிமைத் தனம்நீங்கி
அன்பின் ஆண்மை வேண்டுமென்றால் (தேசத்) 1

சோறும் துணியும் இல்லாமல்
சோம்பியிங் கெவரும் நில்லாமல்
வீறும் புதுமைப் பொதுவாழ்வின்
விடுதலை யின்பம் கொண்டுமென்றால் (தேசத்) 2

பட்டினி கிடப்பவர் இல்லாமல்
படிக்கா தவரெனச் சொல்லாமல்
எட்டின மட்டிலும் எல்லாரும்
இன்புறும் ராஜ்ஜியம் தென்படவே (தேசத்) 3

இந்தியர் எல்லாம் ஒருஜாதி
யாருக்கும் இங்கே ஒருநீதி
நெந்தவர் ஒருவரும் இல்லாத
நூதன அரசியல் உண்டாக்க (தேசத்) 4

ஜாதிக் கொடுமைகள் நீங்கிடவும்
சமரச உணர்ச்சிகள் ஓங்கிடவும்
நீதிக் கெல்லாம் இருப்பிடமாம்
நிற்குமோர் அரசியல் உருப்படவே (தேசத்) 5

வரிகளை யெல்லாம் குறைத்திடவே
வரும்படி விளைவுகள் நிறைத்திடவே
விரிகிற பொதுப்பணச் செலவையெல்லாம்
வெட்டிச் சிக்கனம் தொட்டிடவும் (தேசத்) 6

பணத்தின் பெருமையைப் போக்கிவைப்போம்
பண்டங் களின்விலை தூக்கிவைப்போம்
குணத்தின் பெருமைகள் இல்லாத
குலமும் விறிதினிச் செல்லாது. (தேசத்) 7

மனிதனை மனிதன் ஏய்ப்பதையும்
மக்களைப் போரில் மாய்ப்பதையும்
தனியொரு வழியில் தடுத்திடஓர்
தருமம் உலகினில் தழைத்திடவே. (தேசத்) 8

சத்திய வாழ்வினை நாடுதற்கும்
சாந்தப் பெருமைகள் கூடுதற்கும்
உத்தமக் காந்தியின் உபதேசம்
உலகுக் கோதும் நம்தேசம். (தேசத்) 9



தாழ்ந்தவர் என்பவர் இங்கில்லை;
தரித்திரம் நமக்கினிப் பங்கில்லை;
வாழ்ந்திடும் வரையிலும் புகழ்செய்வோம்
வானிலும் உயர்வாய் வாழ்ந்திடுவோம். (தேசத்) 10

*குறிப்புரை:- சத்திய வாழ்வு - உண்மையான வாழ்வு; சாந்தம் - அமைதி.*

## *80. கண்டதுண்டோ சொல்லுவீர்?*

**பல்லவி**

கண்டதுண்டோ சொல்லுவீர் - எங்கள்
காந்தியைப் போல்ஒரு சாந்தனை இவ்வுலகம் (கண்)

**அநுபல்லவி**

எண்டிசை எங்கணும் மண்டலம் முழுதிலும்
இந்தச் சரித்திரம்போல் எந்தக் கதையும் உண்டோ? (கண்)

**சரணங்கள்**

பண்டைக் கதைஎதிலும் படித்திலம் இவர்போல்
பக்தி வைராக்கியம் சுத்தச் செயல்படைத்தோர்
தொண்டர் குலத்துக்கெல்லாம் துணைதரும் பெருந்தவம்
துறந்தவர் யாவரினும் சிறந்திடப் பிறந்தவர். (கண்) 1

சித்தத்தைச் சுத்திசெய்ய மெத்தச் சிறந்தவழி
சித்தன்இக் காந்தியின் பக்தி புரிவதுதான்
நித்தம் ஒருதடவை காந்தியை நினைத்திடில்
நிச்சயம் இப்பிறப்பின் அச்சம் அகன்றுவிடும். (கண்) 2

ராமன் பெயரைச் சொல்லி எமனை எதிர்த்தவர்
ரகுபதி ராகவரின் வெகுமதி பலித்தவர்
தேமொழி ராமபக்தன் த்யாகைய சாமியைப்போல்
திவ்விய பகுளபஞ்சமிதனில் தேகம் விட்டார். (கண்) 3

*குறிப்புரை:- தேகம்விட்டார் - பூதவுடலை நீத்தார்.*

## 81. எம்மான் காந்தியை மறப்போமோ!

### பல்லவி

எண்ணிய தவங்களை எடுத்தது முடித்துள
எம்மான் காந்தியை மறப்போமா!

### அநுபல்லவி

புண்ணிய நதிகளும் கண்ணிய மடைந்தன
புனிதன் அஸ்திகள் புகுந்ததனால். (எண்)

### சரணங்கள்

வானமும் வையமும் வணங்கிடும் ஐயன்
வரந்தரும் தேவரும் வரம்பெறும் மெய்யன்
ஞானமும் தவங்களும் நயம்பெறும் துறவி
நால்வகை யோகமும் சால்புறும் பிறவி. (எண்) 1

அண்டமும் சிறிதெனும் அமைதியின் பெருமை
அதைவிடப் பெரிதெனும் அருள்புரி அருமை
கண்டில தாகிய கடவுளின் நிலையை
காட்டிடும் காந்தியின் தெய்வீகக் கலையை (எண்) 2

மன்னுயிர் வாழ்ந்திடத் தன்னுயிர் கொடுத்தான்
மாபெரும் கருணையன் பரமனை அடுத்தான்
பொன்னுடல் சுமந்ததும் தீமையைப் போக்க
புகழுடம்பு இறந்ததும் அறங்களைக் காக்க. (எண்) 3

## 82. பகைவனுக்கருள் செய்

### பல்லவி

பகைவனுக் கருள்தர மிகமகிழ் காந்தியைப்
பாடுவ தேதவ மாம். (பகை)

### அநுபல்லவி

தகைபெரும் சால்பினை அகமுறப் போற்றிடில்
தரணியில் பகைமை உண்டோ. (பகை)



### சரணங்கள்

மனிதப் பிறவிகளை மிருகங்கள் ஆக்கிவிட்ட
மாச்சரி யங்களெல்லாம் மறையத்தன் தேகம்விட்ட
புனிதப் பிறவியந்தப் புண்ணியன் காந்தி எண்ணம்
போற்றுவ தேதவங்கள் ஆற்றுவ தாகும் திண்ணம். (பகை) 1

ஆற்றி வுள்ளதென்று கூறும் மனிதர் குலம்
அறிவைப் பறிகொடுத்துப் பகைமை வெறிபிடித்துச்
சீறி விழுந்தழியும் சின்னத் தனம் ஒழியும்
சிந்தையில் காந்தியைநாம் வந்தனை செய்துவரின். (பகை) 2

கொஞ்சிக் குலவினர் அஞ்சிப் பதைப் பதைக்கக்
கூடி வசித்தவரைத் தேடிக் கொலைபுரியும்
நஞ்சிற் கொடியபகை நெஞ்சைவிட் டகன்றிட
நல்லதுணை நமக்கு வல்லவன் காந்தியின் பேர். (பகை) 3

## 83. கண்ணில் மறைந்து கருத்தில் நிறைந்தவர்

### பல்லவி

கண்ணில் மறைந்து மக்கள் கருத்தில் நிறைந்துவிட்ட
காந்தியை மறப்போமா. (கண்)

### அநுபல்லவி

மண்ணில் மனிதர்குலம் எண்ணில் நலம் அடைய
மார்க்கம் கொடுக்கும் இந்த தீர்க்க தரிசிகதை (கண்)

### சரணங்கள்

உன்னும் பொழுதிலெல்லாம் உள்ளம் மகிழ்ச்சி பொங்கும்
உண்மையின் அச்சமற்ற தன்மை நிலவித்தங்கும்
பொன்னும் புகழும் பெற பொறுமை இழந்தலையும்
புத்திக் குறைவுகளும் மெத்தத் திருந்தலுறும் (கண்) 1

பேசும் பொழுதிலெல்லாம் ஈசன் நினைவு தரும்
பேதைமை விட்டொழியும் பேரருள் கிட்டிவரும்

பாசமும் பந்தம் அற்ற பணிகளில் பக்திநண்ணும்
பாரில் மனிதரெல்லாம் யாரும் சமமென் றெண்ணும். (கண்) 2

கேட்ட வுடன்மனத்தின் வாட்டம் அகன்றுவிடும்
கீழ்மைக் குணங்களெல்லாம் ஓட்டம் பிடித்துக்கெடும்
ஆட்டம் அலைச்சல்தந்த ஆசைகள் ஓய்ந்துவிடும்
ஆண்டவன் சந்நிதியின் ஆனந்த சாந்திதொடும். (கண்) 3

## 84. வள்ளல் காந்தி மகான்

### பல்லவி

வள்ளுவன் குறள்களை வாழ்க்கையில் நடத்திய
வள்ளல் காந்தி மகான். (வள்ளு)

### அநுபல்லவி

தெள்ளிய அறிவெனும் திருக்குறள் அறங்களைச்
செய்தவர் யாரெனும் ஐயம் அகன்றுவிட (வள்ளு)

### சரணங்கள்

ஒன்றாய் நல்லது கொல்லா விரதமும்
உயர்வால் அடுத்தது பொய்யாச் சரதமும்
என்றார் அதன்படி இவர்போல் நடந்தவர்
எவரும் இலரெனப் புவனம் வியந்திட (வள்ளு) 1

இன்னா செய்தவர்க்கும் இனியவை புரிந்தவன்
இறப்பினும் பிறஉயிரை எடுப்பதை மறந்தவன்
பொன்னே கொடுப்பினும் புகழே கிடைப்பினும்
புண்ணியம் நீங்கின எண்ணமும் விடுபவன் (வள்ளு) 2

துறவறம் வியந்திட இல்லறம் தொடர்ந்தவன்
துன்பங்கள் இடையிலும் இன்பங்கள் அடைந்தவன்
பெறவரும் வெற்றிகளைப் பிழையற்ற நல்வழியில்
பெற்றவர் காந்தியைப்போல் மற்றவர் இல்லையென
(வள்ளு) 3



## 85. சபதம் செய்துகொள்வோம்

### பல்லவி

சபதம் செய்து கொள்வோம் - காந்தி
சந்நிதி முன் இந்த (சபதம்)

### அநுபல்லவி

சத்திய சோதனை மெய்த்தவம் ஆற்றிய
உத்தமன் காந்தியின் பக்தியின் நித்தமும் (சபதம்)

### சரணங்கள்

ஜாதியில் எவரையும் தாழ்வெனக் கருதோம்
சமமுற யாவரும் சுகமுறத் தருவோம்
போதைகள் எதையும் பொருளெனத் தீண்டோம்
பூமியில் எவருக்கும் தீமையை வேண்டோம். (சபதம்) 1

உண்மைகள் அல்லன உரைத்திட மாட்டோம்.
உயிர்க்கொலை செய்வதைப் பொறுத்திட மாட்டோம்
பெண்மையின் பெருமையைக் கெடுப்பதும் எண்ணோம்
பிறமத தூஷணை தொடுப்பதும் பண்ணோம். (சபதம்) 2

உழவையும் தொழிலையும் உயிரெனக் காப்போம்
உழைப்பின்றிச் சுகிப்பதைப் பழிப்புடன் பார்ப்போம்
தொழுதுண்டு வாழ்வதைத் துச்சமென் றிகழ்வோம்
தோட்டியின் வேலையும் மேலெனப் புகழ்வோம். (சபதம்) 3

## 86. கவலைகள் சிதையும் கதை

### பல்லவி

காலையும் மாலையும் காந்தியின் கதையைக்
கருத்துடன் படிப்பவர் கவலைகள் சிதையும். (காலை)

### அநுபல்லவி

மேலுள்ள பரம்பொருள் மீதுளம் பொருந்தும்
மீறிய வெறிகளும் ஆறிடத் திருந்தும். (காலை)

**சரணங்கள்**

நூலுரை கல்வியும் நுணங்கிய கேள்வியும்
நோக் கிடும் நலங்களைச் சீக்கிரம் அடைந்திட
மாலுறும் மதவெறி மமதைகள் தெளியும்
மரணம் என்பதன் அச்சமும் ஒழியும் (காலை) 1

ஒழுக்கமும் சீலமும் உயர்ந்திடும் தினமும்
உத்தம நெறிகளை உகந்திடும் மனமும்
வழக்கிலும் தீயவை வாயில் வராது.
வைவது கேட்பினும் வருத்தம் தராது. (காலை) 2

ஏழைகள் எனச்சொல்லி இழிவுகள் புரியார்
ஏறிய செல்வரும் அழிவுகள் தரியார்
வாழிய யாவரும் வாழ்ந்திட என்றே
வையகம் முழுதையும் வாழ்த்துவர் நன்றே. (காலை) 3

## 87. நினைக்க நினைக்க உளம் இனிக்கும்

**பல்லவி**

நினைக்க நினைக்க உள்ளம் இனிக்க இனிக்க இன்பம்
நிறைந்திடுமே எங்கள் காந்தியை நாம் (நினை)

**அநுபல்லவி**

பனிக்கப் பனிக்கக் கண்கள் ஆனந்த பாஷ்யம் வர
பரமன் தரிசனத்தைச் சிரமமின்றிப் பெறுவோம் (நினை)

**சரணங்கள்**

மூப்பெனும் காந்தியிடம் முருகன் இளமை கொஞ்சும்
முன்வர யாவருக்கும் மின்னெனச் சக்தி விஞ்சும்
தாய்ப்பெரும் அன்புசிவம் தாண்டவம் புரிந்திடும்
தரித்திரம் காமனைப்போல் பார்வையில் எரிந்திடும்.(நினை) 1

கர்மபலன் கருதா கண்ணன் நினைவு வரும்
காரிய முயற்சியில் மாருதி ஊக்கம் தரும்
தர்மபலன்க ளெல்லாம் தானம் செய்து துயிர்விட்ட!
தன்னிகர் அற்ற அந்த கர்ணன் பெருமை கிட்டும். (நினை) 2



தந்தை சொல் மிக்கதொரு மந்திரம் இல்லையென்ற
தசரத ராமபிரான் நிசமிகும் நேமம் ஒன்றும்
சிந்தையில் கஸ்தூரிபாய் சீதை சிறப்பு பொங்கும்
சிறுமைகள் விட்டொழியும் பெருமை நிரம்பித்
தங்கும். (நினை) 3

## 88. நிலைகொண்ட மெய்ஞ்ஞானக் கலை தந்தவர்

**பல்லவி**

நிலைகொண்ட மெய்ஞ்ஞானக் கலைதந்த காந்திக்குச்
சிலைவைத்து விட்டால்மட்டும் சிறப்பாமோ? (நிலை)

**அநுபல்லவி**

அலைகொண்ட நம்மனத்தில் அவன்கொண்ட செம்மைதங்கி
அதன்படி நடப்பது அதுவன்றோ இனிவேண்டும்? (நிலை)

**சரணங்கள்**

அச்சிட்டுப் புத்தகத்தில் மெச்சிப் புகழ்ந்துகொட்டி
ஆலயம் கட்டிவைத்துக் கோலங்கள் செய்துவிட்டு
நச்சிட்ட ஆசைகளால் நாளும் அலைந்துழன்றால்
நமக்குத்தான் பயன்என்ன? நாட்டுக்கும் என்ன
நன்மை? (நிலை) 1

பொன்னால் உருவம் செய்து மணிகள் புதைத்திழைத்து
பொழுதுக்கும் முன்நின்று தொழுதாலும் பயன்என்ன?
எந்நாளும் காந்தி வாழ்வை இதயத்தில் வைத்துயார்க்கும்
இம்சை செய்யாதிருந்தால் நம்செயல் அதுபோதும். (நிலை) 2

குணங்கள் உயரவன்றே கோயில்கள் கட்டினோம்
கும்பிட்டு விட்டுநித்தம் வம்பிட்டு வாழ்வதுபோல்
குணமென்னும் நலமெல்லாம் குடிகொண்ட இந்நாட்டில்
குலதெய்வம் காந்திக்குச் சிலைமட்டும் போதாது. (நிலை) 3

## 89. மனிதப் பிறப்பின் புதுமை

### பல்லவி

மனிதப் பிறப்புக்கொரு புனிதப் புதுமைதந்த
மாதவன் காந்தி மகான்

### அநுபல்லவி

நினைதற் கரியஒரு மிகவும் புதியநெறி
நித்திய நல்லொழுக்க சத்திய சோதனையால் (மனித)

### சரணங்கள்

காட்டில் தனித்திருந்து காய்கனி மூலம்உண்டு
கடுந்தவம் தமக்கென்றே புரிந்த கதைகளுண்டு
நாட்டில் வசித்துப்பிறர் நலத்துக்கென்றே உழைத்த
நற்றவம் காந்தியைப் போல் மற்றவர் யாரிழைத்தார்? (மனித) 1

உலகைத் துறந்த பின்னும் உடலிற் பிரியம் வைத்தே
ஓடுவர் காயகற்பம் தேடுவர் காட்டைச் சுற்றிச்
சலுகைப் பிறஉயிர்க்கே; தன்னுயிர் ஆசைவிட்டு
சாதித்த நன்னெறியால் போதித்த பொன்மொழியால். (மனித) 2

உணவில் கிடைப்பதல்ல உடைகள் கொடுப்பதல்ல
உடலைப் பொறுத்ததல்ல உணர்வைக் கடைப்பிடித்து
மணலில் நதிஅடியில் மறைந்துள்ள ஊற்றினைப்போல்
மக்களுக் குள்ளிருக்கும் சக்தியைப் போற்றினதால். (மனித) 3

## 90. காணாத அற்புதங்கள் கண்டது

### பல்லவி

காணாத அற்புதங்கள் கண்டதே இவ்வுலகம்
காந்தி மகான் வாழ்வில் (காணா)

### அநுபல்லவி

காணாத நல்லறிவைக் கொடுக்கும் அவர்வழியைக்
கொள்ளா விடில்உலகில் கொடுமைகள் குறையாது. (காணா)



### சரணங்கள்

பொறுக்கி எடுத்த சொல்லைப் புதுக்கி அமுதம்பூசிப்
புளித்த செவிகள்கூடக் களித்து வியக்கப் பேசி
முறுக்கி எதிர்த்தபேரும் செருக்கை மறந்துஐயன்
முன்வந்து பொன்தந்து சொன்னபடிக்குச் செய்யும் (காணா) 1

உண்ணா விரதம் கொண்டே உலகை நடுங்கச் செய்தும்
ஒவ்வொரு மனிதரும் உள்ளம் திருந்தச் செய்தும்
கண்ணாரக் கண்ட தெய்வம் காந்தி ஒருவரென்று
கைகுவித் துலகெல்லாம் மெய்சிலிர்த் திறைஞ்சிட (காணா) 2

கொடுமையை எதிர்த்திடச் சிறைவாசம் சென்றவன்
கொலைஎண்ணப் போர்செய்து கொடுங்கோலை வென்றவன்
மடமையில் இறுகிய தீண்டாமை மறைந்தது
மதுஎன்ற அரக்கனும் முதுகிட்டுப் பறந்தனன். (காணா) 3

## 91. காந்தியை நினை

### பல்லவி

காந்தியை நினைப்பதே கடவுளை நினைப்பதாம்
கருத்தினில் இருந்திடுவோம்.

### அநுபல்லவி

சாந்தமில் லாமல் சமரசம் இல்லை
சமரசம் இலையேல் சந்தோஷம் ஏது? (காந்தி)

### சரணங்கள்

சாந்தத்தின் சாகரம் காந்தியின் சரிதம்
சத்திய சேகரம் காந்தியின் விரதம்
நேர்ந்திடில் இதைவிட வேறெது தெய்வம்
தினந்தினம் காந்தியை நினைத்திடில் உய்வோம் (காந்தி) 1

ஊணிலும் உடையிலும் உரையிலும் சுத்தன்
உள்ளும்புறமும் ஒன்றாம் உண்மையின் பக்தன்
காணரும் கடவுளைக் காட்டிலும் துணைவன்
காந்தியின் வழியன்றிக் கதிஎது இணையாம். (காந்தி) 2

கொடுமையை வெறுக்கவும் கொலைவழி மறுக்கவும்
கோபக் குரோதங்களின் கூட்டுறவு அறுக்கவும்
கடுமொழி விலக்கவும் கபடத்தைத் தொலைக்கவும்
காந்தியின் நினைவன்றி மாந்தரின் இலக்கெது? (காந்தி) 3

குறிப்புரை:- கடுமொழி - வன்மொழி, திண்மொழி; குரோதம் - உட்பகை.

## 92. கருணை வளர்க்க வேண்டும்

பல்லவி

காந்தி உகுத்த ரத்தம் மாந்தர் அகத்திருந்து
கருணை வளர்க்க வேண்டும்.

அநுபல்லவி

ஆழ்ந்து குமுறுகின்ற போர்வெறிச் சூதுகளைத்
தூரத் தொலைத்து மக்கள் ஈரம் இறக்கம் பெற (காந்தி)

சரணங்கள்

மோகம் வெறித்தயுத்த மேகப்படலம் நம்மை
மூடிக் கழுத்தறுக்கத் தேடித் திரிகின்றதன்
வேகம் குறைக்கவென்றே தேகம் விடுத்த ஐயன்
வீரரும் தீரர்களும் விழுந்து வணங்கும் துய்யன். (காந்தி) 1

விஞ்ஞானத் திமிர்உந்த வெற்றிக்கு வெறிவந்து
விண்பட்ட கொலைசெய்யும் நாண்கெட்ட மனிதர்க்கே
அஞ்ஞானம் விட்டொழித்த மெய்ஞ்ஞானம் காட்டஎன்றே
அல்லும் பகலும் எண்ணிச் சொல்லும் செயலும் தந்த (காந்தி) 2

இதந்தரும் என்றுநம்பிச் சுதந்தரம் நொந்து பெற்றும்
இம்சைமிகுந்து மக்கள் துவசம் புரிதல்கண்டு
மதந்தரும் வெறிகளை நிதந்தரப் பார்ப்பதிலும்
மாறுதல் நல்லதென்றே ஆறுதல் சொல்லிமாண்ட. (காந்தி) 3



## 93. தெய்வத்தின் நாதம்

பல்லவி

காந்தியின் போதம் கருணைசங் கீதம்!

அநுபல்லவி

தேர்ந்திடில் அதுதான் தெய்வத்தின் நாதம்! (காந்தி)

சரணங்கள்

ராகமும் தாளமும் ரகுபதி அமைப்பு
ரஸனையும் பாவமும் ராகவன் சமைப்பு
வேகமும் கதிகளும் வித்தைபர சண்டம்
விரவலும் பரவலும் விஸ்தார அண்டம் (காந்தி) 1

களைத்தவ ரெல்லாம் செழித்திடும் ஓசை
களித்தறம் மறந்தவர் விழித்திடும் பாஷை
களித்தவர் யாவரும் சிரித்திடும் பாட்டு
சூதர்கள் உள்ளமும் தீதறும் கேட்டு (காந்தி) 2

கல்வியும் கேள்வியும் களித்துளம் குளிரும்
கலைகளும் புதுப்புது கிளைதரத் துளிரும்
செல்வமும் வறுமையும் சேர்ந்துகொண் டாடும்
சிறுமையும் பெருமையும் செயல்மறந் தாடும். (காந்தி) 3

குறிப்புரை:- சூதர்கள் - சூதாடுபவர்கள், புகழ்வோர்.

## 94. தேவருள் தெய்வம்

பல்லவி

மனிதருள் தேவன் தேவருள் தெய்வம்
காந்தியை மறக்காதே!

அநுபல்லவி

புனிதருள் புனிதன் பூமியின் விந்தை
பொய்யா நெறிப் புதுமை. (மனித)

**சரணங்கள்**

நினைவுறும் போதே நெஞ்சம் குளிரும்
நிறைந்தநம் அகந்தைகள் நீங்கிடும் எளிதில்
சினமெனும் பகைமை இனமற மறையும்
சீலமும் ஒழுக்கமும் மேலுற நிறையும் (மனித) 1

வம்புகள் துன்புசெய் வாதுகள் மறப்போம்
வறியவர் நொந்தவர் வாழ்வுறப் புரப்போம்
அன்புகள் செய்திடும் ஆசைஉண் டாகும்
அழிவுகள் செய்திடும் இழிகுணம் போகும். (மனித) 2

உலகினர் யாவரும் ஒருகுலம் என்னும்
உண்மையை அடிக்கடி உணர்ந்திடப் பண்ணும்
பலவித வெறிகளின் பயித்தியும் தெளியும்
பகவான் விளங்கிடும் காந்தியின் ஒளியால். (மனித) 3

## *95. மறந்திடுவாயோ?*

**பல்லவி**

மறந்திடுவாயோ மனமே காந்தியை
மறந்திடுவாயோ?

**அநுபல்லவி**

அறந்தரும் அண்ணலவன்
மறைந்தனன் கண்ணிலென (மறந்)

**சரணங்கள்**

பெருந்தவத் தோர்என
அறிந்துள யாரினும்
அருந்திறல் நிறைந்தவன்
அற்புதம் புரிந்தவன். (மறந்) 1

அவன்பெயர் மொழிந்திடில்
எமன்பயன் ஒழிந்திடும்
தவம் தரும் நலங்களைச்
சுயம்பெற பலம்வரும் (மறந்) 2



தீமையின் இடையிலும்
வாய்மையும் நடுநிலை
நேர்மையும் நினைப்பினில்
தூய்மையும் பலித்திடும் (மறந்) 3

பணபலம் நடுங்கிடப்
படைபலம் ஒடுங்கிடக்
குணநலம் கொடுத்துநம்
குலப்புகழ் நிறுத்தினான். (மறந்) 4

## *96. நடை தரும் வேதம்*

**பல்லவி**

கடவுளின் தூதன் காந்தி மகாத்மா!

**அநுபல்லவி**

நடைதரும் வேதம் - ஞான சங்கீதம்!

**சரணங்கள்**

நினைத்திடும் பொழுதே மனத்துயர் தீரும்
நெருங்கிட உணர்ந்தால் பெருங்குணம் சேரும்
அனைத்துள நேரமும் அவன்கதை ஓதின்
அன்பையும் அருளையும் அறிந்திடப் போதும். (கடவு) 1

கல்வியும் கேள்வியும் கருதிடும் பயனும்
கருணையின் நிலை சொல்லும் கலைகளின் நயனும்
பல்வித வேள்வியின் பலன்கள் கைகூடும்
பரம்பொருள் தூதன்நம் காந்தியைப் பாடின் (கடவு) 2

கோபமும் தாபமும் கூண்டோடு மறையும்
கொடுமையும் வணங்கிடும் குணநலம் நிறையும்
மாபெரும் காந்தியின் மகிமையைத் தொழுதால்
மண்டலம் எங்கணும் சண்டைகள் ஒழியும். (கடவு) 3

## 97. அருட்பெருஞ் சோதி

**பல்லவி**

அருட்பெருஞ் ஜோதியின் தனிப்பெரும் சுடராம்
அண்ணல் காந்தி மகான்

**அநுபல்லவி**

பொருட்பெரும் அவன்அருள் பொன்னெறி போற்றிடில்
பூமியில் நிறைந்துள தீமைகள் மறைந்திடும். (அருட்)

**சரணங்கள்**

பஞ்சமும் பட்டினியும் பஞ்சாய்ப் பறந்திடும்
பாதகம் செய்யச் சொல்லும் தீதுகள் குறைந்திடும்
கொஞ்சமும் இன்பமில்லாக் கோடானு கோடிமக்கள்
கும்பி எரிச்சலெல்லாம் அன்பின் குளிர்ச்சிபெறும். (அருட்) 1

ஜாதி மதக்கலகம் சண்டைகள் தீர்ந்திடும்
சமுதாயங்களில் சமரசம் சேர்ந்திடும்
நிதி நெறிதவறா நினைவுகள் வளர்ந்திடும்
நித்திய வஸ்துஉண்மை பக்தியும் கிளர்ந்திடும் (அருட்) 2

அரசியல் துறையிலும் ஆட்சியின் முறையிலும்
அயலெந்தக் காரியம் முயல்கிற நெறியிலும்
உரைசெயில் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும்
உண்மையின் ஒளிதொடும் நன்மையின் வழி
சொலும். (அருட்) 3

## 98. தியாகராஜன்

**பல்லவி**

தெய்வத்தின் ஒரு பெயர் தியாகராஜன் என்பதனைத்
தெரிவிக்க வந்த காந்தி தேவதூதன்

**அநுபல்லவி**

வையத்தில் காந்தியைப்போல் பிறர்க்கென்றே வாழ்ந்திட்ட
வண்மையில் தியாகத்தில் உண்மையில் யாருமில்லை (தெய்)



**சரணங்கள்**

இந்நிலத் துயரெல்லாம் தன்னலம் தருவது
இல்லாமை என்பதெல்லாம் ஈயாமல் வருவது
மன்னுயிர் வாழ்ந்திடத் துன்னுயிர் கொடுப்பது
மனிதர் குலத்துக்கெல்லாம் புனிதர்க்கே அடுப்பது (தெய்) 1

காவியும் உடுக்காமல் காட்டுக்கும் செல்லாமல்
கர்மத்தில் தனக்கென்றோர் கர்மமும் இல்லாமல்
பூவுல கினில்மக்கள் துன்பத்தைப் போக்கிடப்
பொன்னுயிர் கொடுப்பவர் தன்னரும் பக்தரெனும் (தெய்) 2

சின்ன வயதுமுதல் தந்நலம் மறந்தவர்
தீமையுற் றவர்க்கெல்லாம் தாய்மையே புரிந்தவர்
இன்னுயிர் பிறர்வாழ விருப்புடன் ஈந்தவர்
இவரெனத் தியாகராஜன் இறைவனைச் சேர்ந்தவர். (தெய்) 3

## 99. தமிழின் சாரம்

**பல்லவி**

தமிழ்மொழி சாரம் காந்தியின் தீரம்
தமிழா மறக்காதே!

**அநுபல்லவி**

அமிழ்தென நிரந்தரம் அறிவினை வாழ்த்திடும்
அன்பின் பணிபுரிந்தே அருளின் நெறிதெரிந்த
(தமிழ்)

**சரணங்கள்**

கொல்லா விரதமும் பொய்யாக் கொள்கையும்
குலமுறை அறம்எனக் கொடுப்பது தமிழே
எல்லா விதத்திலும் உலகம் கெட்டதெல்லாம்
இந்த இரண்டறத்தின் சிந்தனை விட்டதனால். (தமிழ்) 1

தன்னுயிர் இழப்பினும் பிறஉயிர் அழிப்பதைத்
தவிர்ப்பது ஒன்றே தவங்களிற் சிறப்பெனச்
சொன்னதும் செய்ததும் தொடர்ந்ததைப் பணிவதும்
தொல்குலத் தமிழரின் நல்வழக் காகும். (தமிழ்) 2

காமமும் கோபமும் கபடமும் நீங்கிக்
கசடறக் கற்றதனை நடத்தையில் தாங்கி
ஏமமும் ஜாமமும் ஈசனை வணங்கி
எல்லாம் அவன் செயல் என்பதில் இணங்கும். (தமிழ்) 3

## *100. இலக்கிய இலக்கணம்*

**பல்லவி**

இலக்கணம் மிகப்புது இலக்கணம் பெற்றது
இலக்கணம் புதியதோர் இலக்கியம் கற்றது
எம்மான் காந்தியினால்.

**அநுபல்லவி**

புலைக்குணம் மிகுந்துள பூமியைச் சீர்திருத்த
புண்ணியர் பற்பலபேர் எண்ணி எழுதிவைத்த (இலக்)

**சரணங்கள்**

சத்தியம் தெய்வமென்று சாதித்த பேர்கள்உண்டு;
சாந்தத்தைப் பற்றிநின்று போதித்த தீரர்உண்டு;
உத்தமன் காந்தியைப் போல் மெத்தப் புதுமுறையில்
உழைத்தவர் யாருமில்லை உலகில்இது வரையில் (இலக்) 1

உயிரைத் திரணம் என்றே உண்மைக் குழைத்த துண்டு;
உடலை மறந்து நன்மை ஊருக் கிழைத்த துண்டு;
உயிரைப் பணயம்வைத்தே உலகுக் குதவிசெய்ய
உரைசொல்லிச் சொன்னபடி உயிர்தந்த காந்திமெய்மையால்
(இலக்) 2

சொல்லில் இனிமைவார்த்துச் செயல்களில் சுத்தம்பார்த்துச்
சொல்லுக்கும் செயலுக்கும் பேதம்வராமல் காத்துக்
கல்லும் கனியச்செய்யும் காந்தியின் வாழ்க்கை யன்றோ
கல்விக்கும் இலக்கியம் கருணைக்கும் இலக்கணம்?(இலக்) 3

*குறிப்புரை:- பேதம் - வேறுபாடு; பணயம் - ஈடாக வைத்த பொருள், அடகு.*



## *101. இறவாமல் இருக்க*

**பல்லவி**

இறவாமல் என்றென்றும் காந்தி இருக்க வேண்டின்
மறவாமல் அவர்தந்த மார்க்கம் நடக்கவேண்டும்.

**அநுபல்லவி**

பிறவாப் பெரும்பிறவி பிரிந்தாரே காந்தியென்று
பறவாய்ப் பறந்ததெல்லாம் பாசாங்கு அல்லவென்றால் (இற)

**சரணங்கள்**

எல்லா மதங்களுக்கும் இறைவன் ஒருவனேதான்
எந்தெந்த ஜாதியாரும் வந்திருக்கும் ஜோதிஅது
அல்லாவும் ஈசுவரனும் அனைத்தும் அவனேஎன
அனுதினம் பிரார்த்தித்தே அறிவிக்கும் காந்தி
அண்ணல் (இற) 1

இன்பமும் துன்பமும் எல்லார்க்கும் ஒன்றேதான்
இம்சை பிறர்க்குமட்டும் என்றேனும் நன்றாமோ?
அன்புசெய் வாழ்க்கைதான் அறிவாகும் தமக்கென்
அனுவேனும் பொய்யன்றி அனுஷ்டிக்கும் காந்தி
ஐயன் (இற) 2

உழைப்பின்றிச் சுகிப்பதும் சுகமின்றி உழைப்பதும்
உலகத்தில் என்றென்றும் கலகத்தை விளைவிப்பது.
இளப்பமாய் நினைக்காமல் எல்லாரும் உழைத்திடில்
இம்சை குறைக்கவந்த காந்தீயம் செழித்திடும். (இற) 3

*குறிப்புரை:- அனுதினம் - நாள்தோறும்; ஐயன் - தலைவன்; இம்சை - துன்பம்.*

## *102. மகிமை மனிதன்*

**பல்லவி**

புனிதன் காந்தியை நினைக்கும் பொழுதே
புலன்களுக் கெட்டாப் புதுமைகள் தோன்றும்.

**அநுபல்லவி**

மனிதன் என்று மண்ணில் உதித்தவருள்
மற்றவர் யாவர்இந்த மகிமை படைத்தவர்கள்?

**சரணங்கள்**

கல்வி நிறைந்தவர்கள் கலைகள் சிறந்தவர்கள்
காமம் உகந்தவர்கள் தர்மம் மிகுந்தவர்கள்
நல்வழி நின்றவர்கள் நானிலம் எங்குமுண்டு
நாமம் நினைத்தவுடன் ஏமன் பயமகற்றும் (புனி) 1

தவசு புரிந்தவருள் தானம் சொரிந்தவருள்
தந்நலம் முற்றும்விட்டுப் பன்னலம் தந்தவருள்
இவர்வழி வாழ்ந்தவர்கள் எண்ணற்ற பேர்களிலும்
எவர்க்குமில் லாதஏதோ இவர்க்குள் இருந்ததென (புனி) 2

போதிக்க என்றுவந்த புண்ணிய வான்களுக்குள்
பூமியிற் கண்டபல அவதார புருஷருள்
சாதித்துச் சத்தியத்தைச் சோதித்தும் ஆத்மபல
சக்தியைக் காட்டினவர் மற்றில்லை என்னத்தகும். (புனி) 3

*குறிப்புரை:- மகிமை - பெருமை; உதித்தவர் - தோன்றியவர்; சோதித்து - ஆராய்ந்து.*

## 103. அமுத வழி

**பல்லவி**

அறிவைக் கடைந்தெடுத்தே அருளைக் கலந்துதரும்
அமுதன்றோ காந்தி வழி.

**அநுபல்லவி**

உறவைக் கெடுத்துமக்கள் உயிரை வதைத்தே இந்த
உலகை நலித்துவரும் கலகக் கொடுமைதீர (அறி)

**சரணங்கள்**

இறுகிக் கிடக்கும்பல இழிவான வழக்கங்கள்
இளகும் படிக்கேயோர் இனிமையை அளிக்கவும்
குறுகிக் கிடந்தமனம் குமுறிப் புரட்சி கொண்டு
கொடுமையை எதிர்க்கவும் மடமையை உதிர்க்கவும். (அறி) 1



மதமென்றும் நிறமென்றும் மொழியென்றும் வழியென்றும்
மக்களைப் பிரித்தென்றும் துக்கத்தைப் பொழிகின்ற
சதிகார ஆசைகளின் அதிகாரம் தொலைக்கவும்
சன்மார்க்க சமரசம் நமதென்றும் நினைக்கவும். (அறி) 2

வீரத்தின் பேரைச்சொல்லி வெறிதந்து போரை மூட்டும்
வீணுரை சூழ்ச்சியெல்லாம் நாணுறச் செய்(து) ஓட்டும்
தீரத்தின் சாத் விகத்தைத் தியாகத்தின் தெய்வீகத்தைத்
திடமான மெய்யுணர்வைத் தெரிவித்தே
உய்யவைக்கும். (அறி) 3

## 104. நலம் பெற உழைப்போம்

**பல்லவி**

இந்தியத் தாயின் இயல்பாகும்
எம்மான் காந்தியின் செயல்யாவும்.

**அநுபல்லவி**

முந்தினன் உலகினில் யாவரினும்
முப்பகை வென்றநல் மூதறிவின் (இந்திய)

**சரணங்கள்**

அந்தமில் இறைவனின் அருள்நாடும்
அன்பே அறிவெனத் தினம்தேடும்
செந்தமிழ் மொழிதரும் சீலமெலாம்
சேர்ந்தது காந்தியின் வேலையெல்லாம் (இந்திய) 1

இமயம் மலைமுதல் ஈழம்வரை
எண்ணரும் த்யாகிகள் இன்றுவரை
தமதரும் தவத்தால் தரும்ஞானம்
தரணியில் இன்றுள மெய்ஞ்ஞானம் (இந்திய) 2

அந்தமெய்ஞ் ஞானத்தின் ஒளியாகும்
அற்புதன் காந்தியின் வழியாகும்
இந்தநம் உரிமையை இழப்போமோ?
இப்புவி நலம்பெற உழைப்போமே. (இந்திய) 3

*குறிப்புரை:- அந்தமில் - முடிவில்லாத; தரணியில் - உலகில்*

## *105. அச்சங்கள் நீங்கும்*

**பல்லவி**

நித்தமும் ஒருதரம் காந்தியை நினைத்தால்
நிச்சயம் நம்முடை அச்சங்கள் நீங்கும்

**அநுபல்லவி**

சத்தியம் வலுத்திடும் சாந்தியம் பலித்திடும்
நித்திய ஒழுக்கங்கள் நேர்மையில் நிலைத்திடும் (நித்த)

**சரணங்கள்**

மானிடப் பிறவியின் மகத்துவம் விளங்கும்
மன்னுயிர் யாவிலும் தன்னுயிர் துலங்கும்
யான்என தென்றிடும் அகந்தைகள் கருகும்
ஆண்டவன் நினைவுடன் அன்புகள் பெருகும் (நித்த) 1

சுதந்தரம் என்பது சுத்தசன் மார்க்கம்
சூழ்ந்துள யாவர்க்கும் சுகந்தரப் பார்க்கும்
இதந்தரும் பணிசெயல் என்கடன் என்னும்
இங்கிதப் பெருங்குணம் தங்கிடப் பண்ணும். (நித்த) 2

*குறிப்புரை:- மகத்துவம் - பெருமை; மன்னுயிர் - நிலைபெற்ற உயிர்*

## *106. குளிர்ந்திடும் செழுங்கனல்*

**பல்லவி**

காந்தியை நினை மனமே - உண்மைச்
சாந்தியைப் பெற தினமும். (காந்தி)

**அநுபல்லவி**

மாந்தருள் அற்புதம் மாநிலப் பெருந்தவம்
கூர்ந்திடும் அறிவினுள் குளிர்ந்திடும் செழுங்கனல் (காந்தி)

**சரணங்கள்**

சோர்ந்திடும் பொழுதெல்லாம் சோகத்தைப் போக்கவும்
சுழன்றிடும் அறிவினைத் தெளிந்திடத் தேக்கவும்
நேர்ந்திடும் கவலையை நீக்கவும் மருந்தாம்
நினைத்திடும் பொழுதே இனித்திடும் நறுந்தேன் (காந்தி) 1



மோகன தாசன் கரம்சந்த் காந்தி
முத்தரும் சித்தரும் முயன்றிடும் சாந்தி
சாகரம் நாணுறும் சற்குணப் பெருமை
சமரச உணர்ச்சியின் கற்பகத் தருவாம். (காந்தி) 2

வேறுதவம் நமக்கு வேண்டிய தில்லை.
வித்தகன் காந்திபெயர் விருப்புடன் சொல்ல
கூறும் தவப்பலனைக் கொடுத்திடும் அதுவே
குறைவற்ற வாழ்க்கையும் நடத்திடல் பெறுவோம். (காந்தி) 3

## *107. அன்பிற்கு உயிர் தந்தோன்*

**பல்லவி**

பிறர்க்கென்றே தம்முயிரைப் பிரியத்துடன் கொடுத்தோர்
பிறருண்டோ காந்தியைப் போல்!

**அநுபல்லவி**

மறக்கொலை போரிற்சிக்கி பிரிப்பவர் எங்குமுண்டு
மற்றும் பலவழியில் மனமின்றிச் சாவதுண்டு. (பிறர்)

**சரணங்கள்**

உயிரைப் பணையம்வைத்தே உண்மைக் குழைப்பதுவே
உத்தம சேவையென்று நித்தநித் தமும்சொல்லி
அயர்வின்றி மரணத்தில் அச்சத்தை இகழ்ந்தேசி
அன்பிற்கே உயிர்தரும் ஆற்றலின் புகழ்பேசி (பிறர்) 1

நமனும் நடுங்கிட்ட நவகாளி பிணக்காட்டில்
நடையாய் நடத்துகாந்தி நலிந்திட்ட குணம்காட்டும்
சமனும் உயர்வுமில்லார் சன்மார்க்கம் வகுத்ததன்
சாதனைக் கேபல வேதனை சகித்ததை, (பிறர்) 2

உண்ணா விரதம் கொண்ட ஒவ்வொரு தடவையும்
உயிர்தந்து உயிர்வந்த உண்மை உலகறியும்
கண்ணாரக் கண்டதெய்வம் காந்தியின் தியாகத்தில்
கட்டோடு விட்டொழிப்போம் மதவெறி மோகத்தை. (பிறர்) 3

## 108. ஊனுடல் கொண்ட ஒரு தெய்வம்

**பல்லவி**

மானிட வர்க்கம் கண்டறியா ஒரு
மாபெரும் புதுமை காந்தி மகான்!

**அநுபல்லவி**

வானுறை தெய்வம் ஊனுடல் கொண்டு
வையகத் தேபுது வழிகாட் டியதென (மானிட)

**சரணங்கள்**

இந்திய நாட்டினில் இப்பெரும் அற்புதன்
எம்மிடை பிறந்ததும் ஒப்பரும் நற்பதம்
நம்திரு நாடே நானிலம் முழுதிலும்
ஞான ஒளிபரப்பும் மோனம் அறிந்ததென (மானிட) 1

அன்பும் அருளும் அறிவும் ஆற்றலும்
அறநெறி வழுவா ஒழுக்கம் போற்றலும்
இன்பம் தருகிற எல்லாக் குணங்களும்
இப்படிச் சிறிதும் தப்பற இணங்கிட (மானிட) 2

சத்திய சாந்தம் உத்தமம் என்று
சாதனை புரிந்தவர் மெத்தவும் உண்டு
நித்தமும் வாழ்க்கையில் எல்லா நிலையிலும்
நிறைகுறை யாதவர் இவர்போல் இலையென. (மானிட) 3

## 109. பண்பை வளர்க்கும் காந்தி

**பல்லவி**

உயிரைக் கொடுத்துநமக் குரிமை கிடைக்கச் செய்த
உத்தமன் காந்திநம் உயிரன்றோ!

**அநுபல்லவி**

பயிரை வளர்க்கும் நீர்போல் பண்பை வளர்க்கும் காந்தி
பக்தி கெடா திருந்தால் பெற்றச் சிறப்படை வோம். (உயிரை)



**சரணங்கள்**

அரசியல் சுதந்தரம் அடைந்தது பெரிதல்ல
ஆன்ம சுதந்தரத்தை அழித்துவிடவும் வல்ல
பரிசுடை மோகம் நம்மைப் பற்றிக் கொள்ளாதபடி
பரமார்த்த எண்ணங்கள் பழுதுபடாமல் காத்து (உயிரை) 1

அந்நிய நாடுகள்போல் அயலாரைச் சுரண்டிட
ஆதிக்கம் தேடுகின்ற நீதிக்குறை செய்யாமல்
இன்னுயிர் கொடுத்தேனும் இந்தியத் தாய்நாட்டின்
இணையற்ற நன்னெறியைத் துணைகொள்ளும்
வழிகாட்டி. (உயிரை) 2

ஆண்சிங்கம் அதைப்போல ஆற்றல் வளரச்செய்தே
அத்துணை சக்தியையும் அன்பின் கிளரச்செய்து
வீண்சங்கம் உட்பகை யாவும் விளங்கச் செய்து
விஞ்ஞானத் தீமைநீக்க மெய்ஞ்ஞான
வேள்விக்காக. (உயிரை) 3

## 110. ஏற்ற மருந்து

**பல்லவி**

சாந்தியைக் கொடுப்பது காந்தியின் திருப்பேர்
சந்ததமும் அதனைச்சிந்தனை செய்திடுவோம்

**அநுபல்லவி**

மாந்தருள் பகைமையை மதவெறிக் கொடுமையை
மாற்றி விடுவதற்கே ஏற்ற மருந்ததுவே (சாந்தி)

**சரணங்கள்**

கோபத்தை அடக்கவும் குரோதத்தை ஒடுக்கவும்
குற்றத்தைத் தடுக்கவும் குணநலம் கொடுக்கவும்
பாபத்தை ஒதுக்கவும் பரமனைத் துதிக்கவும்
பயமற்று வாழ்ந்திடும் பரிசுத்தம் பலிக்கவும். (சாந்தி) 1

சமதர்ம உணர்ச்சியின் சந்தோஷம் வளர்ந்திடும்
சாதி மதங்களென்னும் சழக்குகள் தளர்ந்திடும்

அமைதிகள் நிறைந்துள்ள சமுதாயம் நிலவிடும்
அக்கம்பக் கங்களெல்லாம் அன்போடு குலவிடும். (சாந்தி) 2

*குறிப்புரை:- சழக்குகள் - அறியாமையாளர்கள்; சந்தோஷம் - மகிழ்ச்சி.*

## *111. எளியவர்க்குழைத்தவர்*

**பல்லவி**

சுகபோ கங்களின் சூழ்ச்சியில் மயங்கா
சுகிர்தன் காந்தி மகான்!

**அநுபல்லவி**

இகபோ கங்களைத் துறந்தவர் தமக்குள்
இவர்போல் எளியவர்க் குழைத்தவர் எவரே! (சுக)

**சரணங்கள்**

ஏழைகள் குடிசையே இறைவன் கோயில்
என்றவர் தரித்திர நாராயணர் என
வாழியென் றவர்களை வாழ்த்திட வாழ்ந்து
வறுமையின் கொடுமையை வீழ்த்திடச் சூழ்ந்து (சுக) 1

எளியவர் நலமுறச் செல்வரை இகழான்
ஏழைகட் குதவா எவரையும் புகழான்
பழிசெய்து பெறுகிற சுகங்களைப் பழித்தான்.
பக்தியின் வருகிற சக்தியை அளித்தான் (சுக) 2

தீனர்கள் பணியே திருப்பணி என்று
தினந்தினம் அதற்கே மனந்தர நின்ற
வானுயர் காந்தியை வணங்குதல் ஒன்றே
வறுமையின் கொடுமையைப் போக்கிடும் நன்றே! (சுக) 3

*குறிப்புரை:- தீனர்கள் - இரப்போர்கள், யாசிப்பவர்கள்.*

## *112. கடமையும் கருணையும்*

**பல்லவி**

கடமையும் கருணையும் இப்படிக் கலங்கிட
காந்தியைப் போலிங்கு வாழ்ந்தவர் யார்?



**அநுபல்லவி**

உடைமையும் உரிமையும் கடமைகள் தருமென
உணர்ந்திடச் செய்தவர் காந்தியன்றோ? (கடமை)

**சரணங்கள்**

கடமை உணர்ந்தவனே உடைமைக் குரியவனாம்
கருணை சிறப்பதுவும் கடமை தெரிவதனால்
மடமை பெருகுவதும் கடமை மறப்பதனால்
மாநிலத் தவர்க்கிந்த ஞானம் பிறப்பதற்கே (கடமை) 1

சத்தியக் குறியே கடமையைக் காட்ட
சாத்விக நெறியே உரிமையைக் கூட்ட
நித்திய சேவையால் பொதுநலம் நாடி
நெடுநிலம் முழுவதும் உடைமைகொண் டாடி (கடமை) 2

கடமைகள் புரிவதில் கருணையை மறவான்
கருணையென் றறநெறி கடமையைத் துறவான்
உடைமைகள் இழப்பினும் உரிமையைப் பிரியான்
உரிமைகள் மறுப்பினும் உயிர்க்கொலை புரியான். (கடமை) 3

## *113. கடவுளைக் காட்டும்*

**பல்லவி**

கல்வியினால் வரும் நல்லறி வூட்டும்
காந்தியின் வாழ்வே கடவுளைக் காட்டும்.

**அநுபல்லவி**

செல்வமும் கீர்த்தியும் செருக்குகள் ஒழியும்
சீரியன் காந்தியின் சிந்தனை வழியே (கல்வி)

**சரணங்கள்**

தன்பலம் அல்லது பிறர்வசம் தணியான்
தன்னுடல் சுசிகரம் பொன்னெனப் புணைவான்
என்னொரு விஷயமும் உணர்ந்திடும் இயல்பான்
எதையும் முற்றிலும் அறிந்தபின் முயல்வான். (கல்வி) 1

இயல்புடை பாசங்கள் ஏதும்அவற் கில்லை
இரக்கமும் ஈகையும் எண்ணரும் எல்லை
முயல்வதன் ஆற்றலில் முடிவிலன் காந்தி
முற்றிலும் பேரின்பக் கடலெனும் சாந்தி (கல்வி) 2

எண்குணத் தோன்எனும் இறைவன் இயல்பை
எளிதினில் காட்டும் காந்தியின் செயல்கள்
விண்ணகத் தோரெனும் தேவரும் வியக்கும்
விந்தைநம் காந்தியார் தந்தநல் இயக்கம். (கல்வி) 3

## *114. கலகக் கலி தீர்க்கும் வழி*

**பல்லவி**

கலகங்கள் இல்லாமல் உலகெங்கும் வாழ்ந்திட
காந்தியின் வழிதான் கலிதீர்க்கும்.

**அநுபல்லவி**

விலங்குகள் மக்களெல்லாம் விஞ்ஞான வெறிவிட்டு
வித்தகன் காந்திசொல்லும் சத்தியம் வழிபட்டு (கலக)

**சரணங்கள்**

அரக்கரின் கதைபோல அழிக்கவே பலம்தேடி
ஐயையோ மனிதர்கள் அலைகின்றார் கொலைநாடி
இரக்கம் புரிவதற்கே ஈசன்கொடுத்த ஜன்மம்
இப்படி அழிவதைத் தப்பிட வேணும் என்னின் (கலக) 1

அன்பை மறந்துவரும் அறிவினால் பயனில்லை
அருளைத் துறந்துபெறும் ஆற்றல் மிகவும்தொல்லை
இன்பம் குலைவதெல்லாம் எந்திர மோகத்தால்
என்பதை அறிந்திடில் துன்பங்கள் குறைந்திடும். (கலக) 2

## *115. கருணை வழி*

**பல்லவி**

காந்தியை விட்டால் கதிவேறில்லை
கருணையின் வழிகாட்ட



**அநுபல்லவி**

சாந்தியை போதிப்பவர் சங்கோப சங்கமுண்டு
சாதித்துக் காட்டினவர் ஏதிந்தக் காந்தியல்லால் (காந்தி)

**சரணங்கள்**

வேதமும் சாத்திரமும் வீதியிற் பின்தொடர
வேள்வியும் தவங்களும் ஆள்செய்து முன்படர
போதனை செய்வதிலும் சாதனை வேண்டுமென்று
பொழுதும் பிறர்க்குழைத்த முழுதும் கருணைவள்ளல்
(காந்தி) 1

கொன்றிட எண்ணித் தன்மேல் குண்டொன்றை வீசிவிட்ட
கொடியனை மன்னிக்கவும் இடைசென்று பேசிவிட்ட
கன்றுடைப் பசுவைப்போல் கரைந்து கரைந்து மக்கள்
கலிதர வேண்டுமென்று பலியாகத் தன்னைத்தந்த (காந்தி) 2

ஏழைக் குருகினவர் எவருண்டு இவர்போல
எங்கெங்குச் சென்றாலும் என்றென்றும் அதுவேலை
பாழுக் குழைத்தாரென்று பழிவரப் பொறுப்போமா
பாரெங்கும் காந்தியத்தை ஊரெங்கும் பரப்புவோம்.(காந்தி) 3

## *116. ஒன்றை உணர்விக்க வாழ்ந்த ஒரு காந்தி*

**பல்லவி**

உடலுக்கும் உயிருக்கும் உள்ளே இருக்கும் ஒன்றை
உணர்விக்க வாழ்ந்தவர் ஒரு காந்தி

**அநுபல்லவி**

கடலுக்குள் அலைபோல் உலகத்தில் நிலைக்கெட்டுக்
கரையேறத் தவிக்கின்ற கணக்கற்ற நமக்கெல்லாம் (உட)

**சரணங்கள்**

உணவும் உடையுமின்றி உறுபொருள் இல்லையென்று
ஓய்வின்றி அலைந்துபின் மாய்கின்ற மனிதர்கள்
பணமும் பதவிக்கென்று பாதகம் பலசெய்து
பாவத்தை வளர்க்கின்ற தாபத்தை விலக்கிட (உட) 1

இன்றுள்ளார் நாளைக்கில்லை என்பதைத் தினம்கண்டும்
இச்சைப் படிக்குச்சென்று கொச்சை யின்பமும்கொண்டும்
என்றென்றும் உள்ளவர்போல் கொன்றும்தன் நலந்தேடி
இம்சையில் உழல்கின்ற நம்செயல் திருந்திட (உட) 2

உயிருக்கும் மேலுள்ள ஒருசத்தை மெய்ப்பிக்க
உடலைச் சுமந்திருந்தார் உலகத்தை உய்விக்க
பெயருக்கு உணவுண்டு பிறருக்காய் உடைகட்டிப்
பெரும்பாலும் மக்களைப்போல் அரும்பாடு
பட்டாரேனும். (உட) 3

## 117. கருணாமூர்த்தியின் பரிணாமம்

**பல்லவி**

கருணா மூர்த்தியின் பரிணாமம் திரு
காந்தி மகான் வாழ்க்கை

**அநுபல்லவி**

அருணோதய மெனஅருள் ஒளி உதிக்கும்
அண்ணல் காந்தியை எண்ணிடில் நமக்கும் (கருணா)

**சரணங்கள்**

உவமை தனக்கென ஒருபொருள் வேண்டான்
உயிரையும் பிறர்க்கென உதவுதல் பூண்டான்
கடமை என்பது கருணையைப் புரிகிற
காரியம் அல்லது வேறிலை எனும்ஒரு (கருணா) 1

விருப்பும் வெறுப்பும் தொடரா விரதன்
வேற்றுமை யாவிலும் ஒற்றுமை கருதும்
சிரிப்பும் மகிழ்ச்சியும் பரப்பிடும் செல்வன்
சினமெனும் தீமையைச் சிறைசெய வல்லன் (கருணா) 2

தரணியில் யாவரும் தன்இனம் என்றே
தயையொடு அணைத்திடும் குணப்பெரும் குன்றாம்
மரணமும் துன்பமும் மருட்டா வித்தன்
மாநிலம் முழுவதும் வணங்கிடும் சுத்தன். (கருணா) 3



## 118. சொல்லவொண்ணாப் பெருமை

**பல்லவி**

சொல்லில் அடங்குமோ காந்தியின் பெருமை?
சொன்ன வரைக்கும் சுகிர்தம்?

**அநுபல்லவி**

கல்லும் புல்லும் கனிந்து கசிந்து ருகும்
கருணையின் வடிவென அருள்நெறி காட்டிய (சொல்)

**சரணங்கள்**

அன்பினை விட்டொரு இன்பமும் இல்லை
அகிலம் கண்டுள அறிவின் எல்லை
துன்பம் செய்வதைத் தொழிலெனத் தொடரும்
தூர்த்தரும் வியந்திடும் கீர்த்திகள் படரும். (சொல்) 1

பொய்யும் வஞ்சமும் புலையும் கொலையும்
போர்வெறிக் கொடுமையும் சீர்குலைந் தலையும்
வையம் திருந்திடும் வழிதர என்றே
வாழ்த்துதன் உயிரையும் ஈந்தனன் அன்றோ! (சொல்) 2

நற்குணம் என்பன யாவையும் கூடி
நானிலம் முழுவதும் நலம்பெற நாடி
அற்புதப் புதுமுறை அறவழி காட்டும்
அமரரும் அறிய அன்பினை ஊட்டும். (சொல்) 3

## 119. காந்தி ஜயந்தி

**பல்லவி**

காந்தியின் திருநாள் இது கண்டீர்
கடமைகள் நமக்கெலாம் மிகஉண்டு.

**அநுபல்லவி**

சாந்தியைக் கோரிச் சகலமும் துறந்த
சத்துவபோதன் புத்தனும் பிறந்த (காந்தி)

**சரணங்கள்**

சாந்தத்தின் பலன்களும் சத்திய நலன்களும்
சமரச வாழ்க்கையின் அமைதியும் துலங்கிட
வாழ்ந்துநன் னெறிகளை வகுத்துத் தொடுத்தவர்கள்
வடித்துக் கொடுத்ததெல்லாம் நடத்தி முடித்த
வள்ளல். (காந்தி) 1

அன்பின் கலைபுரிந்து அருளின் நிலை தெரிந்து
அச்சமும் ஆசைகளும் மிச்சமில்லா தகற்றி
இன்ப நிலையுரைத்த எண்ணரும் யோகிகள்
எண்ணிய நல்லறங்கள் பண்ணிமுடித்த எங்கள் (காந்தி) 2

தானமும் தருமமும் தவங்களும் மதங்களும்
தாரணி முயன்றுள வேறுள நெறிகளும்
ஞானம் பெறமுயலும் நல்வழி யாவையும்
நாடும் குணங்களெல்லாம் கூடிநிறைந்த எங்கள். (காந்தி) 3

## *120. ஸ்ரீ சுப்பிரமண்ய பாரதி*

**பல்லவி**

சுதந்தர ஞானத்தின் சுடரொளி தீபம்
சுபஸ்ரீ சுப்பிரமண்ய பார்தி நாமம்.

**அநுபல்லவி**

நிதந்தரும் கவலையை நீக்கிடும் சூத்திரம்
நிச்சய புத்திதரும் அட்சய பாத்திரம் (சுதந்)

**சரணங்கள்**

அச்சம் எனும்பிணியை அகற்றிடும் மருந்து
ஆற்றலைக் கொடுத்திடும் அமுதத்தின் விருந்து
கொச்சை வழக்கங்களைக் கொளுத்திடும் நெருப்பு
கொடுமையை எதிர்த்திடக் கூரிய மறுப்பு. (சுதந்) 1



தெய்வத் தமிழ் மொழியில் புதுமைகள் சேர்த்துத்
தீரம் விளங்கச்சுத்த வீரமும் வார்த்து
வையம் முழுதும்அதை வணங்கிடச் செய்யும்
வாய்மையும் தூய்மையும் வளர்த்திடும் ஐயன்! (சுதந்) 2

பெண்ணின் பெருமைகளைக் காத்திடும் கோட்டை
பேதையர் என்பதைக் கடிந்திடும் சாட்டை
உண்மை அறிவுகளை உணர்த்திடும் போதம்
உத்தம தத்துவங்கள் ஒளித்திடும் கீதம்! (சுதந்) 3

## *121. சுதந்தர தினம்*

**பல்லவி**

விடுதலை அடைந்து விட்டோம் - உலகம்
வியந்திடும் படிக்கொரு நயந்திகழ் விதத்தினில் (விடு)

**அநுபல்லவி**

நடுநிலை தாங்கிடும் நம்மர சோங்கிட
நானிலம் முழுதுக்கும் ஞானப் பணிபுரிய (விடு)

**சரணங்கள்**

பாரதி மெய்ப்புலவன் வாக்குப் பலித்ததென
பண்டுநம் தாதாபாய் கண்ட கனவிதென
தீரன் திலகரிஷி த்யாகம் திகழ்ந்திடவும்
தெய்விக காந்திதவம் வையம் புகழ்ந்திடவும். (விடு) 1

அந்நியப் பிடிப்புகள் அகன்றத னால்மட்டும்
ஆனந்த சுதந்தரம் அடைவது வெகுகஷ்டம்
உன்னத லட்சியங்கள் ஓங்கிட வேண்டும்அதில்
உத்தமன் காந்திவழி தாங்கிட வேண்டும்இனி. (விடு) 2

கிடைத்த விடுதலையைக் கெடுத்து விடாதபடி
கீழான ஆசைகட்குக் கொடுத்து விடாமல்இடம்
அடுத்திடும் யாவரையும் அன்பின் வழிமதித்தே
அகிலம் முழுதும்காந்தி அருளைப் பரப்புதற்கே. (விடு) 3

*குறிப்பு :- நானிலம் - குறிஞ்சி நிலம், முல்லை நிலம், மருதநிலம், நெய்தல் நிலம்.*

## 122. நல்ல சமயம்

### பல்லவி

நல்ல சமயமடா - இதை - நழுவவிடலாமோ!

### அநுபல்லவி

நாட்டிற் சுதந்தரம் நாட்டி மனிதருள்
தீட்டுத்தீண் டாமையும் தீர்ந்து விடுதற்கு (நல்ல)

### சரணங்கள்

காந்தியைப் போல்தலைவர் - வந்தக் - காலத்திற்கிட்டுமடா?
வாய்ந்த தருணமிதை - நீ - வழுவியிழப்பாயோ?
சூழ்ந்திடும் துன்பங்கள் - வீழ்ந்திட நாமினி
வாழ்ந்திட வும்மனச் சாந்தி யடையவும் (நல்ல) 1

வேதம் ஒலிக்குதடா - காந்தி - ஓதும்மொழிகளிலே
கீதை ஜொலிக்குதடா - அவர் - செய்யும் கிரியையெல்லாம்
வேற்றுமை யில்லாமல் நாட்டின் நலத்தினைப்
போற்றின யாரையும் - கூட்டி உழைத்திட (நல்ல) 2

பண்டைய காலந்தொட்டு - நம்முள் - பாசம் பிடித்தபல
வண்டை வழக்கங்களை - இனி - வாரியெறிந்துவிட்டு
பத்தி வளர்த்தினிச் - சுத்த வழிகளில்
நத்தி அனைவரும் - ஒத்துச் சுகித்திட (நல்ல) 3

## 123. சாந்தியே காந்தி

### பல்லவி

சாந்தியின் விரிவுரை காந்தியின் சரித்திரம்
தமிழா மறவாதே.

### அநுபல்லவி

தேர்ந்தவர் ஞானமும் தெளிந்தவர் மோனமும்
செந்தமிழ் நூல்களெல்லாம் சந்ததம் கோருகின்ற (சாந்தி)



### சரணங்கள்

நாட்டைத் துறந்தவரும் வீட்டை மறந்தவரும்
நானா விதம்பல தானம் புரிந்தவரும்
ஏட்டைத் தினம்புரட்டி எண்ணிப் படிப்பவரும்
எல்லா விதத்திலும் நல்லோர் விழைந்திடும் (சாந்தி) 1

வேதங்கள் தேடுவதும் கீதங்கள் பாடுவதும்
வேள்வி முயன்றதுவும் கேள்வி பயின்றதுவும்
காதம் பலநடக்கும் காவடி யாத்திரையும்
கற்றவர் மற்றவரும் முற்றும் விரும்புகின்ற (சாந்தி) 2

முந்திநம் முன்னவர் நொந்து தவம்புரிந்து
முற்றும் அறங்களினால் பெற்ற பெரும்பயனாம்
இந்திய நாட்டினுக்கே சொந்தப் பெருமையென்றே
எந்தெந்த நாட்டவரும் வந்து பயிற்சிபெறும். (சாந்தி) 3

## 124. ஆடு ராட்டே

### பல்லவி

ஆடுராட்டே சுழன் றாடுராட்டே!

### அநுபல்லவி

சுழன்று சுழன்று சுழன் றாடுராட்டே - இனிச்
சுகவாழ்வு வந்ததென்று ஆடுராட்டே!

### சரணங்கள்

பாபம் குறையுமென்று ஆடுராட்டே - இனிப்
பயங்கள் மறையுமென்று ஆடுராட்டே
கோபம் குறையுமென்று ஆடுராட்டே - நல்ல
குணங்கள் மிகுந்ததென்று ஆடுராட்டே! 1

மேலான ஜாதியென்று மிகப்பேசி - மிக
மாறான காரியங்கள் செய்துவாழும்
மாலான ஜனங்களின் வஞ்சனை எல்லாம் - இனி
மாண்டு மடியுமென்று ஆடுராட்டே! 2

பட்டணத்து வீதிகளில் சுற்றியலைந்து - மிகப்
பாடுபடும் கிராமத்துப் பத்தினிப் பெண்கள்
இஷ்டமுடன் தம்குடிசை நிழலிருந்து - நூல்
இழைத்துப் பிழைப்பதென்று ஆடுராட்டே! 3

கள்ளுபீர் சாராயம் காமவகைகள் - கெட்ட
கஞ்சா அபின்க ளெல்லாம் ஓடியொளிக்க
பிள்ளைகுட்டிப் பெண்ஜாதி வயிறார - உண்ணப்
பெற்றதே சுதந்தரமென் றாடுராட்டே! 4

உழுது நெய்துபல தொழில்செய்து - பொருள்
உதவும் வாணிபமும் முயல்வதல்லால்
தொழுது பணிபுரியும் தொழில்களெல்லாம் - இனித்
தோல்வி யடையுமென் றாடுராட்டே! 5

வம்பளந்து வீண்பொழுது போக்கமாட்டார் - பெண்கள்
வாசலிலே கூட்டமிட்டுப் பேசமாட்டார்
துன்பமில்லை சோம்பியவர் தூங்கமாட்டார் - குடி
சுத்தப்படு மென்று சொல்லி ஆடுராட்டே! 6

ஜாதிஜனக் கட்டுகளை மதிக்காமல் - நித்தம்
தானடித்த மூப்பாக வாழ்ந்ததெல்லாம்
நீதிநெறி தெய்வவழி நினைத்தினிமேல் - சுகம்
நிரம்பத் திரும்புமென்று ஆடுராட்டே! 7

ஆங்கிலம் படித்தோமென் றகங்கரித்துச் - சொந்தம்
அக்கம்பக்கம் யாரெனிலும் மதியாமல்
தாங்களே பெரியரென் றிருந்ததெல்லாம் - இனித்
தலைகுனிந் தோடுமென்று ஆடுராட்டே! 8

சர்க்கார் மனிதரென்று மதிமயங்கிக் - குணம்
தக்கா ரெனினும்அவ மதித்தவர்கள்
சர்க்கார் ஜனங்களென்று மதிதெளிந்து - இனித்
தாழ உரைப்பரென்று ஆடுராட்டே! 9



படித்தோம் படித்தோமென்று பட்டங்காட்டி - ஏழைப்
பாமரரை ஏய்த்து வாழ்ந்தவ ரெல்லாம்
நடித்த நாடகங்கள் தவறென்பதைக் - கண்டு
நல்வழி நடப்பரென்று ஆடுராட்டே! 10

அந்நியர்கள் நூல்கொடுத்தும் ஆடைகொடுத்தும் - நம்
அங்கத்தை மூடுகின்ற பங்கமொழியும்
கன்னியர்கள் நூற்கப்பல காளைகள் நெய்ய - நாம்
காத்துக் கொள்வோம் மானமென்று ஆடுராட்டே! 11

## *125. சுக வாழ்வு*

சுதந்தரம் இல்லாமல் இருப்பேனோ? - வெறும்
சோற்றுக் குயிர்சுமந்தே இறப்பேனோ? (சுத) 1

விடுதலை யடையாமல் விடுவேனோ? - என்னை
விற்றுடல் வளர்ப்பதில் கெடுவேனோ? (சுத) 2

மானத்தைப் பெரிதென்று மதிப்பேனோ? - அன்றி
மாற்றவர்க் குழைத்துடல் நசிப்பேனோ? (சுத) 3

தொழுதுடல் சுகிப்பதைத் தொலைப்பேனோ? - இன்றித்
தொழும்பனென் றேபெயர் நிலைப்பேனோ? (சுத) 4

பயமின்றித் தருமத்திற் குழைப்பேனோ? - விட்டுப்
பாவங்க ளுக்கொதுங்கிப் பிழைப்பேனோ? (சுத) 5

ஞான சுதந்தரத்தை அடைவேனோ? - இந்த
ஊனுக்கு ழைத்தடிமை தொடர்வேனோ? (சுத) 6

## *126. கர்ப்பிணிகளை நடத்தும் முறை*

### பல்லவி

கர்ப்பிணிப் பெண்டுகளைக் கருணை யுடன்மிகவும்
கவனிக்க வேண்டுவமே.

### அநுபல்லவி

அற்பமென் றவர்களை அசட்டைசெய் வீரெனில்
ஆண்டவன் சாபமுண்டு

### சரணங்கள்

கொஞ்சும் மொழிகள்சொல்லிக் கோதை யிளங்கொடியைக்
குதூகலப் படுத்திவைப்பீர்
அஞ்சும் படிக்குச்செய்து அடிப்பதும் திட்டுவதும்
ஐயையோ ஆகாது. (கர்ப்) 1

குற்றங்கள் செய்திடினும் முற்றும் மனம்பொறுத்துக்
குணமுடன் வார்த்தைசொல்வீர்
சற்றும் அவர்மனதில் சஞ்சலம் ஒன்றுமின்றிச்
சந்தோஷம் புரிவீர். (கர்ப்) 2

நல்ல கதைகள்தினம் சொல்லிய வர்மனதை
நயம்படச் செய்துவைப்பீர்.
அல்லும் பகலும்அவர் ஆண்டவ னைத்துதித்து
அறஞ்செய வரந்தருவார். (கர்ப்) 3

## 127. கொடியைப் போற்றிக் கும்பிடு

### பல்லவி

கொடியைப் போற்றிக் கும்பிடு
கொடுமை தீரும் நம்புநீ

### அநுபல்லவி

அச்சம் போக்கும் கொடிஇது;
ஆண்மை நல்கும் கொடிஇது;
இச்செகத்து வாழ்வினை
இன்பமாக்கும் கொடிஇது. (கொடி)

### சரணங்கள்

பரத நாட்டின் கொடி இது;
பழமையான கொடிஇது;
விரத மாகப் போற்றினால்
விருப்பம் யாவும் சித்தியாம் (கொடி) 1



சத்தியத்தின் கொடிஇது;
சக்தி தந்த கொடிஇது;
புத்தி மிக்க ஞானிகள்
பூஜைசெய்த கொடிஇது. (கொடி) 2

மரணமென்ற எண்ணமே
மனத்தி லின்றிச் செய்திடும்
திரண மாக எதையுமே
தியாகம் செய்யத் தந்திடும். (கொடி) 3

கட்டு விட்ட மக்களை
அன்பு கொண்டு கட்டியே
ஒற்று மைப்ப டுத்தவே
உறுதியான கொடிஇது. (கொடி) 4

ஜாதி பேதத் தீமையைச்
சாம்ப லாக்கும் கொடிஇது;
நீதி யான எதையுமே
நின்று காக்கும் கொடிஇது. (கொடி) 5

ஊழி தோறும் புதியதாம்
உறுதி கொண்ட கொடிஇது;
வாழி வாழி நம்கொடி!
வாழ்க வாழ்க நாடெல்லாம்! (கொடி) 6

## 128. வைஷ்ணவன் என்போன் யார்?

### பல்லவி

வைஷ்ணவன் என்போன் யாரெனக் கேட்பின்
வகுப்பேன் அதனைக் கேட்பீரே! (வைஷ்)

### சரணங்கள்

பிறருடைத் துன்பம் தமதென எண்ணும்
பெருங்குணத் தவனே வைஷ்ணவனாம்;
உறுதுயர் தீர்த்தத்தில் கர்வங் கொள்ளான்
உண்மை வைஷ்ணவன் அவனாகும்;

உறவென மனிதர்கள் உலகுள யாரையும்
வணங்குவன் உடல்மனம் சொல்இவற்றால்
அறமெனத் தூய்மை காப்பவன் வைஷ்ணவன்
அவனைப் பெற்றவள் அருந்தவத்தாள். (வைஷ்) 1

விரும்பும் வெறுப்பும் விலக்கிய நடுநிலை
விளங்கிட ஆசைகள் விட்டவனாய்
ஒருப்புடன் அன்னிய மாதரைத் தாயென
உணர்வோன் வைஷ்ணவன் தன்நாவால்
உரைப்பதிற் பொய்யிலன் ஒருபோ தும்அவன்
ஊரார் உடைமையைத் தொடமாட்டான்
வரைப்புள குணமிவை வகிப்பவன்எவனோ
அவனே உண்மை வைஷ்ணவனாம். (வைஷ்) 2

மாயையும் மோகமும் அணுகா தவனாய்
மனத்தினில் திடமுள வைராக்கியன்
நாயக னாகிய ஸ்ரீரா மன்திரு
நாமம் கேட்டதும் மெய்ம்மறந்து
போயதில் பரவசம் அடைகிற அவனுடைப்
பொன்னுடல் புண்ணிய தீர்த்தங்கள்
ஆயன யாவையும் அடங்கிய க்ஷேத்திரம்
ஆகும்அவனே வைஷ்ணவனாம். (வைஷ்) 3

கபடமும் கோபமும் இல்லாதவனாய்க்
காமக் குரோதம் களைந்தவனாய்த்
தபசுடை அவனே வைஷ்ணவன் அவனைத்
தரிசிப் பவரின் சந்ததிகள்
சுபமடை வார்கள் எழுபத் தோராம்
தலைமுறை வரையில் சுகமுறுவர்
அபமறப் புனிதம் அடைகுவர் பிறப்பெனும்
அலைகடல் நீந்திக் கரைச் சேர்வார். (வைஷ்) 4

குறிப்பு :- நாயகன் - தலைவன்; உறுதுயர் - மிக்க துன்பம்.



## 129. கொடி பறக்குது

**பல்லவி**

கொடிபறக்குது கொடிபறக்குது
கொடி பறக்குது பாரடா!
கோணலற்ற கோலில் எங்கள்
கொடிபறக்குது பாரடா!

**சரணங்கள்**

சிறைகிடந்து துயரமடைந்த
தேசபக்தர் நட்டது
தீரவீர சூரரான
தெய்வபக்தர் தொட்டது.
முறைகடந்து துன்பம் வந்து
மூண்டுவிட்ட போதிலும்
முன்னிருந்து பின்னிடாமல்
காக்கவேண்டும் நாமிதை! (கொடி) 1

வீடிழந்து நாடலைந்து
வினையிழந்த நாளிலும்
விட்டிடாத தேசபக்தர்
கட்டிநின்று காத்தது;
மாடிழந்து கன்றிழந்து
மனையிழக்க நேரினும்
மானமாக நாமுமிந்தக்
கொடியைக்காக்க வேண்டுமே! (கொடி) 2

உடலுழைத்துப் பொருள்கொடுத்தும்
உயிரும்தந்த உத்தமர்
உண்மையான தேசபக்தர்
ஊன்றிவைத்த கொடிஇது;
கடல் கொதித்த தென்னமிக்க
கஷ்டம் வந்த போதிலும்
கட்டி நின்று விட்டிடாமல்
காக்கவேண்டும் நாமிதை! (கொடி) 3

மனமுவந்திங் குயிர்கொடுத்த
மானமுள்ள வீரர்கள்
மட்டிலாத துன்பமுற்று
நட்டுவைத்த கொடியிது!
தனமிழந்து கனமிழந்து
தாழ்ந்துபோக நேமம்
தாயின்மானம் ஆனஇந்தக்
கொடியை யென்றும் தாங்குவோம்! (கொடி) 4

## *130. நானோ சண்டாளன்!*

***சண்டாளன் என்று விவக்கப்பட்டவன் கேள்வி***

**பல்லவி**

நானோ சண்டாளன்! - சரி
தானோ உங்களுக்கு?

**சரணங்கள்**

தாயை யிகழ்ந்தவன் சண்டாளன்;
தந்தையை நொந்தவன் சண்டாளன்.
தூயவர் நல்லோர் பெரியோரைத்
தோஷ முரைத்தவன் சண்டாளன்;
தீயவை செய்தே பலர்ஏசத்
தின்றுழல் கின்றவன் சண்டாளன்
ஏவின செய்வேன் குற்றமிலேன்
எளியவ னானேன் என்பதற்கே. (நானோ) 1

வீட்டை மறந்தவன் சண்டாளன்;
வேசியர்க் கலைபவன் சண்டாளன்;
நாட்டைக் காட்டிக் கொடுத்ததனால்
லாப மடைந்தவன் சண்டாளன்;
பாட்டைத் தனிவழி வந்தோரைப்
பதுங்கி யடிப்பவன் சண்டாளன்;
ஓட்டைக் குடிசையில் வாழ்கின்றேன்
ஒருசிறு பாபமும் அறியாத (நானோ) 2



நன்றி மறந்தவன் சண்டாளன்;
நயமுறை வஞ்சகன் சண்டாளன்;
கொன்று சுகித்தவன் சண்டாளன்;
கோப மிகுந்தவன் சண்டாளன்;
கன்று நலிந்திடப் பாலெல்லாம்
கறந்து புசித்தவன் சண்டாளன்;
ஒன்றும் தெரியேன் "ஏழை" எனும்
ஒன்றே என்குறை; அதற்காக (நானோ) 3

கள்ளைக் குடிப்பவன் சண்டாளன்;
காமத் தலைவன் சண்டாளன்;
கொள்ளை அடிப்பவன் சண்டாளன்;
கூடிக் கெடுப்பவன் சண்டாளன்;
'அள்ளித் தெறிக்காப் பணக்காரன்
ஆபத் துதவான் சண்டாளன்
வெள்ளைத் துணியொன் றில்லாமல்
வேலைசெய்வேன்; அதற்காக (நானோ) 4

தெய்வ மிகழ்ந்தவன் சண்டாளன்;
தீனரைக் கெடுத்தவன் சண்டாளன்;
பொய்யுரை பேசிப் பிறர்கேடே
புரிந்து பிழைப்பவன் சண்டாளன்;
'ஐயா அடைக்கலம்' என்றோரை
ஆதரிக் காதவன் சண்டாளன்;
வெய்யில் மழையென் றில்லாமல்
வேண்டிய செய்வேன்; அதற்காக (நானோ) 5

ஆலயத் துள்ளே அபசாரம்
அறிந்தே புரிந்தவன் சண்டாளன்;
கூலியை மறைத்தவன் சண்டாளன்;
கோள்சொலிப் பிழைப்பவன் சண்டாளன்;
வேலியைக் கடந்தே பிறன்பயிரை
வேண்டுமென் றழித்தவன் சண்டாளன்;
காலையும் மாலையும் இல்லாமல்
கஷ்டப் படுவேன் கள்ளமிலேன். (நானோ) 6

வட்டிபெ ருக்கி ஏழைகளின்
வாழ்வு கெடுத்தவன் சண்டாளன்;
பட்டினி எளியவர் ஆசையுடன்
பார்த்திட உண்பவன் சண்டாளன்;
ஒட்டிய வழக்கில் பணத்திற்கா
ஓரஞ் சொன்னவன் சண்டாளன்;
அட்டியில் லாமல் சொன்னதெலாம்
அடியேன் கேட்டேன்; அதற்காக (நானோ) 7

தானங் கொடுப்பதைத் தடுப்போனும்
தவத்தைப் பழிப்பவன் சண்டாளன்;
மானங் கெடுத்தவர் சோறுண்டு
வயிறு வளர்ப்பவன் சண்டாளன்;
கானுங் காடும் உங்களுக்கா
கல்லிலும் முள்ளிலும் பாடுபடும்
ஏனிங் கென்னைச் 'சண்டாளன்'
என்பது? சரியோ உங்களுக்கே? (நானோ) 8

## *131. கேள்விகள்*

### பல்லவி

கதர்த் துணியுடுத்தச் சித்தமில் லாதநீ
கத்தி யெடுத்தென் செய்குவாய்?

### அநுபல்லவி

பித்தரைப் போலவே மெத்தப் பிதற்றுகின்றாய்
சற்று நினைத்தே உய்குவாய் (கதர்)

### சரணங்கள்

கள்ளுக் கடைகளிலே உள்ளம் மயங்கினநீ
கஷ்டங்கள் சகிப்பாயோ!
வெல்லும் சமர்க்களத்தில் கொல்லென முன்னின்று
வீரமும் வகிப்பாயோ! (கதர்) 1



சாதி மதக்கலகப் பேதம்வி டாதநீ
தைரிய மடைவாயோ!
ஓதும் சமர்முனையில் ஏதும் கவலையின்றி
உயிரதை விடுவாயோ! (கதர்) 2

சத்தியம் பேசவும் மெத்தப் பயந்திடும்நீ
சண்டையிற் செய்வதென்ன?
சுத்தமும் வீரனைப்போல் யுத்தமே பேசுகிறாா்
சூதனு முய்வதுண்டோ? (கதர்) 3

உஷ்ண ஜலம்படவும் கஷ்டம் பொறாதவர்
உடன்கட்டை ஏறுவரோ!
இஷ்ட முனக்கிருந்தால் நஷ்டமில் லாவழி
இதைவிடக் கூறுகிறேன். (கதர்) 4

## *132. கதர்த்துணி வாங்கலையோ!*

### பல்லவி

கதர்த்துணி வாங்கலையோ - அம்மா!
கதர்த்துணி வாங்கலையோ - ஐயா! (கதர்)

### சரணங்கள்

ஏழைகள் நூற்றது; எளியவர் நெய்தது;
கூழுமில் லாதவர் குறைபல தீர்ப்பது. (கதர்) 1

கன்னியர் நூற்றது; களைத்தவர் நெய்தது;
அன்னதா னப்பலன் அணிபவர்க் களிப்பது.
(கதர்) 2

கூனர்கள் நெய்தது; குருடர்கள் நூற்றது;
மானமாய்ப் பிழைக்க மார்க்கம் தருவது. (கதர்) 3

தாழ்ந்தவர் நூற்றது; தளர்ந்தவர் நெய்தது;
வாழ்ந்திடும் உங்கட்கும் வாழ்த்துகள்
சொல்வது (கதர்) 4

## 133. தமிழன் பாட்டு

பல்லவி

தமிழ னென்று சொல்லடா!
தலைநி மிர்ந்து நில்லடா! (தமிழ்)

சரணங்கள்

அமுத முறும் அன்பு கொண்டிங்
கரசு செய்த நாட்டிலே
அடிமை யென்று பிறந்த கைக்க
முடிவ ணங்கி நிற்பதோ!
இமயம் தொட்டுக் குமரிமட்டும்
இசைப ரந்த மக்கள்நாம்
இனியும் அந்தப் பெருமை கொள்ள
ஏற்ற யாவும் செய்குவோம். (தமிழ்) 1

குஞ்சைக் காக்கும் கோழி போலக்
குடியைக் காத்த மன்னர்கள்
கோல்நடந்த அச்சமின்றி
மேல்நி னைப்புக் கொண்டநாம்
பஞ்ச பூத தத்து வங்கள்
பக்தி யோடு முக்தியைப்
பார்சி றக்கச் சொன்ன நாமும்
சீர்கு றைந்து போவதோ? (தமிழ்) 2

உலகி லெங்கும் இணையி லாத
உண்மை பாடும் புலவர்கள்
உணர்ச்சி தன்னை வானைத் தாண்டி
உயரச் செய்யும் நாவலர்
கலக மற்றுக் களிசி றக்கக்
கவிதை சொன்ன நாட்டிலே
கைகு வித்துப் பெயர்கள் பாடிக்
காலந் தள்ளல் ஆகுமோ? (தமிழ்) 3



கங்கை யோடு பெருமை கொண்ட
காவி ரிப்பொன் னாட்டிலே
கவலை யின்றிச் சோறி ருக்கக்
கலைக ளெண்ணி வாழ்ந்த நாம்
மங்கி மங்கி வறுமை மிஞ்ச
மதிமயங்கி மாய்வதோ!
மாநி லத்தில் சோற்றுப் பஞ்சம்
மறையு மாறு மாற்றுவோம். (தமிழ்) 4

சித்தி ரத்தில் மிகஉ யர்ந்த
சிற்ப நூலின் அற்புதம்
சின்னச் சின்ன ஊரிற் கூட
இன்னு மெங்கும் காணலாம்;
கைத்திறத்தில் ஈடிலாத
கல்வி தந்த தமிழர்நாம்
கைந்நெறித்து வேலை யின்றிக்
கண்க லங்கி நிற்பதேன்? (தமிழ்) 5

எண்ண மற்றும் விசன மற்றும்
எங்கும் செல்வம் பொங்கவே
எந்த நாளும் ஆடல் பாடல்
எழில ரங்கம் ஓவியம்
பண்ண மைந்த குழலும் யாழும்
பக்க மேளம் யாவையும்
பாருக் கீந்து மகிழ்ச்சி யின்றி
நாமி ருத்தல் பான்மையோ! (தமிழ்) 6

விண்ம றைக்கும் கோபுரங்கள்
வினைம றக்கும் கோயில்கள்
வேறு எந்த நாட்டி லுண்டு
வேலை யின்வி சித்திரம்?

கண்ணி றைந்த காவ ணங்கள்
கனிகள் மிக்க சோலைகள்
கண்ட போது பண்டை யெங்கள்
நாக ரீகம் காட்டுமே. (தமிழ்) 7

மனித வாழ்வில் இன்ப மென்று
சொல்லு கின்ற யாவையும்
மற்ற வாழ்வில் உதவு மென்று
நம்பு கின்ற ஞானமும்
தனிமை யான முறையில் யார்க்கும்
தந்த திந்தத் தமிழகம்
தட்டி டாது தெய்வ மின்னும்
கிட்டி நம்மைக் காக்கும். (தமிழ்) 8

## *134. புது வாழ்வு*

**பல்லவி**

புதுவாழ்வு வரவேணும்
வரவேணும் எங்கள்
பொதுவாழ்வு பலமுற்றுத்
தரவேணும் புகழே! (புது)

**சரணங்கள்**

தமிழ்நாட்டின் மனைதோறும்
புதுவாழ்வு வந்து
தனியான தருமத்தின்
சுகமுற்றும் தந்தே
அமிழ்தான மொழிபேசி
அகிலத்தில் காணும்
அனைவோரும் உறவாக
அதுசெய்ய வேணும்.
நமதான இந்நாடு
தமதாக வென்றே



நாணோடு கோணாத
பணிசெய்து நின்றே
சமமாக எல்லாரும்
நல்வாழ்வு பெறவே
சரியான வழிகாண
உபகாரம் அதுவாம். (புது) 1

புவிமீது வெகுகாலம்
புகழோடு நின்றோம்
புலவர்கள் துதிபாடும்
பெருவாழ்வு கண்டோம்
தவமாதி அறமான
தரணிக்குத் தந்தோம்
தலையாய கலைவாணர்
வமிசத்தில் வந்தோம்.
அவமானம் மிகுகின்ற
அடிமைத் தனத்தால் காடி
அநியாய சிறுமைக்குள்
அடைபட் டிளைத்தோம்
நவஜீவன் அதுசேர
புதுவீறு கொள்வோம்
'நாமார்க்கும் குடியல்லோம்'
எனுமாறு சொல்வோம். (புது) 2

அதிகாலை எழுகின்ற
கதிரோன்தன் உறவால்
அலர்கின்ற மலர்போல
புதுவாழ்வு பெறுவோம்
புதிதான உணர்வோடும்
உலகத்தில் எங்கும்
புலனாகும் கலையாவும்
நிலையாக இங்கும்
விதிகூட வழிவிட்டு
விலகிற்று எனவே

விதமாக விதமாக
விரிகின்ற நினைவால்
இதமாக எல்லாரும்
இனிதாக வாழ்வோம்
என்கின்ற கலைசொல்லும்
மன்றங்கள் சூழ்வோம். (புது) 3

மரணத்தில் அஞ்சாத
மனவீரம் வேண்டும்
மனதுக்குள் மருளாத
மதிசாந்தம் வேண்டும்
இரணத்தை எண்ணாமை
எவருக்கும் வேண்டும்
இழிவான மொழிபேசிக்
களியாமை வேண்டும்.
திரணத்தின் அளவாகப்
போகங்கள் எண்ணித்
தேசத்தின் பொதுவாழ்வின்
சேவைகள் பண்ணும்
அரண்ஒத்த நிலையான
அறமின்னும் வளர
அறிவான புதுவாழ்வு
வரவேணும் குளிர. (புது) 4

அறிவோடும் திறனோடும்
அன்போடும் கூடி
அருளொடும் உறவான
புதுவாழ்வை நாடி
செறிவோடு நிறைவாக
இந்நாட்டில் யாரும்
சிறுவாழ்வு இதுபோக
பெருவாழ்வு சேரும்
துறவோடு பொதுவாழ்வின்
துயர்நீங்க மிக்கத்



துணிவோடு பணிசெய்து
துணையாக நிற்கும்
குறியோடு புதுவாழ்வு
அதுபெற்று விட்டால்
குறையேதும் இனியில்லை
சுகமுற்று விட்டோம். (புது) 5

### *135. வாழிய கொடியே!*

**பல்லவி**

கொடியைக் கும்பிடுவோம் - நம்முடை நாட்டின்
கொடியைக் கும்பிடுவோம்.

**சரணங்கள்**

எந்தக் கடவுளை எவர்தொழு தாலும்
எத்தனை வேற்றுமை நமக்கிருந் தாலும்
இந்தியர்க் கெல்லாம் பொதுவாம் தெய்வம்
இந்தக் கொடியே இதிலென்ன ஐயம்! (கொடி) 1

சத்தியப் பாறையில் வேர்ஊன் றியகொடி
சாந்தக் கோலின் உச்சியில் மணிமுடி
நித்திய மாகிய சுதந்தர வாழ்வினை
நித்தமும் நினைத்திட நின்றெமை ஆள்வது. (கொடி) 2

சமரசம் காட்டிடும் துகிலினை வீசிக்
சச்சர வாறிடத் தென்றலிற் பேசி
அமைதியும் அன்புடன் அனைவரும் பொதுவாம்
அரசியல் நடத்திட அறிகுறி இதுவாம். (கொடி) 3

காற்றொடு பெருமழை கலந்தடித் தாலும்
கடுத்தவர் இருந்திடில் படையெடுத் தாலும்
போற்றிஇக் கொடியினை உயிரெனக் காப்போம்!
பூதலம் வியந்திடும் புகழொடு பூப்போம்! (கொடி) 4

ஏழையும் செல்வனும் எனதென தென்றே
எல்லோ ரும்தொழ நடுவினில் நின்றே
வாழிய வையகம் வாழ்ந்திட வேண்டி
வாழிய கொடியே! வாழ்கபல் லாண்டு! (கொடி) 5

# V. சொல்லின் பெருமை

## *136. மகனுக்கு*

என்மகனே! உன்வாழ்வு சிறக்க வேண்டின்
எப்போதும் தெய்வபக்தி இருக்க வேண்டும்.
நன்மகன்என் றுனையாரும் புகழச் செய்யும்.
நானும்உன் நற்றாயும் மகிழச் செய்யும். 1

தெய்வபக்தி தீமைசெய்ய இடந்த ராது
தீங்குவர நேர்ந்தாலும் இடிந்திடாது.
தெய்வநினைப் பில்லாத நெஞ்சி னோரே
தீங்கிழைக்க ஒருசிறிதும் அஞ்சி டாதார். 2

பலநாமம் அத்தெய்வம் அணிந்திட் டாலும்
பார்க்கின்ற கோயிலெல்லாம் பணிந்திட்டாலும்
குலதெய்வம் நமக்குண்டு குறிப்பாய் ஒன்று
கொள்கையுடன் பூசித்தல் சிறப்பாம் என்றும். 3

குடும்பத்தில் நற்பெயரைக் காக்க வேண்டும்
கூடுமெனில் சிறப்பின்னும் சேர்க்க வேண்டும்
இடும்பைக்கே ஆளாக நேர்ந்திட் டாலும்
இழிவான செயல்எதிலும் சேர்ந்தி டாதே. 4

உழைப்புக்கிங் கொருபோதும் அஞ்ச வேண்டாம்
ஊனுடைக்கே எவரையும்நீ கெஞ்ச வேண்டாம்
பிழைப்புக்கா எத்தொழிலும் இழிந்த தன்றாம்
பின்தொடரும் பழிபாவம் ஒழிந்த தென்றால். 5

மூத்தவர்கள் யார்வரினும் பணிவு காட்டி
முறையோடு பேசுவதில் தணிவு கூட்டி
ஆர்த்தழைத்தே ஆசனம்தந் தமரச் செய்வாய்
அதுவாகும் நற்குடியின் குமரன் செய்கை. 6

நகைமுகம் இனிய சொலும் நல்ல செல்வம்
நஞ்சமன்ன வஞ்சரையும் நயந்து வெல்லும்
பகைஎவரும் ஆகாமல் பார்த்துக் கொள்க
பகைநேரில் சமரசமாய்த் தீர்த்துக் கொள்க. 7



எச்செலவும் வருவாய்க்குள் பண்ண வேண்டும்
எதிர்காலத் தேவைகளை எண்ண வேண்டும்
மிச்சமென்று சிறிதேனும் சேர்த்து வைத்தால்
மீறிஒரு துன்பம்வரின் தீர்த்து வைக்கும். 8

கடமைகளைத் தயங்காமல் புரிய வேண்டும்
கடமையின்றி உரிமையில்லை தெரிய வேண்டும்
உடைமைகளைப் பெருக்க வென்றும் அலைய வேண்டாம்
உள்ளத்தின் அமைதிகெட்டுக் குலைய வேண்டாம். 9

செல்வத்தில் பெருகிவிட்டால் செருக்க வேண்டாம்
சேர்ந்தவரை எளியரென்று வெறுக்க வேண்டாம்
எல்லைக்குள் ஏழைகளுக் குதவி செய்தல்
என்பதுதான் ஆறறிவின் பதவி எய்தல். 10

## *137. மாணவனுக்கு*

கல்விபெறும் மாணவனாம் பருவம் கண்டீர்
கவலையற்ற களிசிறந்த கால மாகும்;
தொல்லைமிக்க உலகநடைச் சுழலில் நேரும்
துன்பங்கள் துயரங்கள் தோன்றாக் காலம்;
எல்லையற்ற ஆர்வமுள்ள இக்கா லந்தான்
எக்கலையும் பயில்வதற்கும் ஏற்ற காலம்
நல்வழியில் பயன்படுத்தும் மாண வர்க்கே
நாமகளின் திருவருளின் நலங்கள் கூடும். 1

ஆசானைத் தந்தையென வணங்க வேண்டும்
அவர்சொல்லும் அறிவுரைக்கும் இணங்க வேண்டும்
கூசாமல் தன்கருத்தைக் கூற வேண்டும் ,
குற்றமுண்டேல் ஒப்பிமனம் மாற வேண்டும்
மாசான வார்த்தையெதும் ஆசான் மாட்டு
மறந்தேனும் ஒருபோதும் பேசான் என்ற
ஆசாரம் உள்ளவனே நல்ல சீடன்
அறனறிந்த நல்வாழ்விற்(கு) அருக னாவான். 2

பட்சிகளின் சிறுகுஞ்சுச் சிறகில் லாமல்
பறக்கவெண்ணிக் கூட்டைவிட்டுப் பாய்வ தேபோல்
சிட்சை பெற்றுக் கல்விநலம் சேர்வதற்குள்
சிறுவயதில் மாணவர்கள் சிந்திக் காமல்
கட்சிகட்டும் அரசியலின் விவகாரத்தில்
கலந்துகொள்ளக் கூடாது; கண்டிப்பாகப்
பட்சமுடன் அதைத்தடுக்கும் ஆசான் மாரைப்
பரிகசிப்போர் சிறகில்லாப் பறவைக் குஞ்சே. 3

குருபக்தி இல்லாத காரணத்தால்
குழப்பங்கள் பள்ளிகளில் குமுறக் கண்டோம்
தருபுத்தி ஆசானைத் தாக்கிப் பேசித்
தமக்கேதோ உரிமையெனத் தருக்கிக் கொண்டு
கருமத்தைக் கல்விதனைக் கருதி டாமல்
கடமைமறந் துரிமைபுகல் கட்சிகட்டும்
சிறுபுத்தி மாணவரைச் சேர்த்து விட்டால்
சீரழியும் பள்ளிகளின் சிறந்த சேவை. 4

ஓதலினும் மிகச்சிறந்த(து) ஒழுக்கம் என்ற
உண்மைதனை மாணவர்கள் உணர வேண்டும்.
மேதினியில் சிறப்படைந்த மேலோ ரெல்லாம்
மேன்மையுற்ற காரணம் நல்லொழுக்க மேதான்
வேதனைகள் வந்தாலும் விலகிப் போகும்
வெற்றிகளும் நல்லொழுக்கம் விரவி னோர்க்கே;
ஆதலினால் மாணவர்நல் லொழுக்கம் தன்னை
ஆருயிர்போல் கருதிஅதைக் காக்க வேண்டும். 5

பெற்றோர்கள் மிகப்பெரிதும் வறிய ரேனும்
பெற்றமகன் கல்விகற்றால் போதும் என்ற
வற்றாத ஆசையினால் வாடித் தேடி
வயிறார உண்ணாதும் வருந்திச் சேர்த்துப்



பற்றோடும் அனுப்புகின்ற பணத்தை யெல்லாம்
பட்டணத்துப் பகட்டுகளில் பாழாக் காமல்
சிற்றாசை களிற்களித்துச் சீர்கெடாமல்
சிந்தனையைக் கல்விக்கே செலுத்த வேண்டும். 6

## 138. மோட்டார் ஓட்டிகளுக்கு

மோட்டார் ஓட்டுகிற அண்ணா! - கொஞ்சம்
மெள்ள ஓட்டினால் என்னா?
கேட்டால் வருத்தமேன் இதிலே? - வந்தால்
கெடுதி உனக்குத்தான் முதலே. 1

அகத்தியம் நேர்ந்துவிட்டாலும் - வேகம்
அடக்கி ஓட்டலே சீலம்.
மிகத்திறம் வாய்ந்துள பேரும் - வேக
மிடுக்கில் அசந்துவிட நேரும். 2

'டயர்கள்' சரியில்லை யென்றால் - வழியில்
துயரம் பெரிதாகும் சென்றால்,
டயர்கள் மிகப்புதிய வேனும் - ஸ்டெப்னி
தனியே கையோடு வேணும். 3

போதை ஊட்டுகிற எதையும் உண்டால்
போகும் வழியறிவு சிதையும்;
காதைக் கண்ணைமிக அடைக்கும் - காரைக்
கவிழ்த்து மண்டைகளை உடைக்கும். 4

காரை ஓட்டுகிறபோது - கவனம்
வேறு எதிலும்செலல் தீது.
ஊரை நெருங்கிவிட்ட உடனே - தெருவின்
ஓரம் பார்த்துச்செலல் கடனே. 5

காரில் பலவிதங்கள் அவற்றுள் - இரவில்
'லாரி' ஓட்டுபவர் தவற்றை
நேரிற் கண்டபடிதம்பி! நான்
கூறு கின்றேன்மனம் வெம்பி. 6

இரவில் ஓட்டுகிற வழக்கம் - அதுதான்
விரவும் 'லாரிகளின்' பழக்கம்
உரிய பொறுப்புணர்ச்சி இல்லை - அதனால்
உயிரை இழந்தவர்கள் கொள்ளை. 7

'லாரி' ஓட்டிவரும் நண்பா - வெளிச்சம்
மாறக் காட்டுவதில் வம்பா?
நேரில் நெருங்கிவிழி கூசும் - விளக்கை
நிறுத்தி உதவாமை மோசம். 8

பின்னால் வந்த 'பிளஷர்' மோட்டார்-அது
முன்னால் போகவழி கேட்டே
என்ன சத்தம்போட் டாலும் - 'லாரி'
ஏதும் கேளாது போலும். 9

வேடிக்கை காட்டுவதும் உண்டு - லாரி
விலகி வழிவிட்ட தென்றே
ஓடிக் கடக்க எண்ணும் நேரம் - மீண்டும்
உடனே வழிமறைக்கும் லாரி. 10

மோட்டார் விபத்துகளின் கணக்கில் - லாரி
ஓட்டும் தவறுகளே கனக்கும்.
வீட்டை இடித்தகதை சிலவும் - லாரி
ஓட்டி நிகழ்ந்ததென நிலவும். 11

லாரி ஓட்டுகிற ஐயா - நான்
கூறும் இக்குறைகள் பொய்யா?
கோரிக் கேட்டுக்கொள் கின்றேன் - இந்தக்
குறைகள் நீக்கிவிடில் நன்றாம். 12

## *139. காவலர்களுக்கு*

பயிரை காக்கும் வேலி போற்கண்
பார்வைகாக்கும் இமைகள்போல்
வெயிலை நீக்கக் குடையும் தண்ணீர்
வேட்கை தீர்க்க அமைவபோல்



உயிரைக் காக்க உடைமை காக்க
ஊரைக் காக்கும் போலீசின்
பெயரைக் காக்கும் அறிவைப் பேசப்
பெரிதும் அதன் மேலாசை. 1

துஷ்டர் யாரும் நடுந டுங்கித்
துடுக்கு விட்டு வாழவும்
இஷ்டம் போல மற்ற மக்கள்
இனிய வாழ்க்கை சூழவும்
கஷ்ட மான கடமை செய்யும்
காவ லாளர் வாயினால்
அட்டி யின்றிப் பயமு றுத்தல்
அவசி யந்தான் ஆயினும், 2

குற்ற வாளி யைப்பி டிக்கக்
கோரித் தேடும் காவலர்
குற்ற முள்ள பேரைக் கூடக்
கொடுமை செய்தல் கேவலம்.
முற்று மிந்தத் தீமை தன்னை
விட்டொ ழிக்க முடியுமேல்
வெற்றி யோடு போலீ சாரை
வேண கீர்த்தி அடையுமே. 3

உதைகொ டுத்தும் அடிய டித்தும்
உள்ளே தள்ளிப் பூட்டியும்
வதைபு ரிந்தே ஒப்புக் கொள்ளும்
வாக்கு மூலம் கேட்டிடும்
கதைகள் நித்தம் காவ லாளர்
கண்ணி யத்தைத் தேய்க்குமே.
இதையு ணர்ந்து கடமை பூண்டு
இம்சை செய்தல் நீக்குவீர். 4

7 நா.க.பா. பூ.வெ. எ. 489

எந்த நாட்டில் போலீஸ் வேலை
இழுக்கி லாமல் வதியுமோ
அந்த நாட்டில் குற்ற மற்ற
அமைதி யின்பம் அதிகமாம்;
இந்த நாட்டின் காவல் வேலை
இசைப டைத்த துண்மையே.
நிந்தை யுண்டு சிலவி டத்தில்
நீக்கி விட்டால் நன்மையே; 5

## 140. ஆசானுக்கு

தாயென அன்பு செய்து
தந்தைபோற் பரிந்து சொர்ந்தச்
சேயென அணைத்துப் பேசிச்
செவ்விய அறிவு கூறித்
தூயநன் னடத்தை கற்கத்
துணையென நடந்து காட்டும்
ஆயநற் குணமு ளோனே
"ஆசான்" என் றழைக்கத் தக்கோன். 1

தப்பிதம் கண்ட போதும்
தண்டிக்க முனைந்தி டாமல்
நட்புடைத் தோழன் போல
நயமாக எடுத்துக் காட்டி
ஒப்புற வாகப் பேசி
உள்ளத்தை உருக்க வல்ல
அப்பெருந் தகைமை யேநல்
லாசானுக் கமைய வேண்டும். 2

மாணவன் நினைக்குந் தோறும்
மகிழ்தரும் வடிவ மாகக்
காணுறும் போதே நெஞ்சக்
கசடறு காட்சி யாகி



நாணுதல் இன்றிச் சீடன்
நண்ணுதற் கெளிய னாகும்
ஆணவம் அற்ற தன்மை
அமைந்தவன் அவனே ஆசான். 3

மன்னிய தனது கீர்த்தி
மறைந்திட நேர்ந்திட் டாலும்
தன்னிலும் தனது சீடன்
தகுதிகள் மிக்கோன் என்ன
மன்னவை மதிக்கு மாறு
மாநிலம் வாழ்த்தக் கண்டால்
அன்னையின் உவகை யென்ன
ஆனந்தம் அடைவான் ஆசான். 4

ஊதியம் குறைந்து நெஞ்சில்
உளைச்சலே மிகுவ தேனும்
பூதலத் திளைஞ ருக்கு
நல்வழி புகட்டு கின்றோம்
ஆதலின் ஆசான் வேலை
அறந்தலை சிறந்த தென்ற
காதலால் கடமை செய்யும்
கண்ணிய வானே ஆசான். 5

## 141. கடன் வாங்குதல்

கடன்பட்டே இன்புறுதல் சுவர்க்க மேனும்
கடன்வாங்கும் துன்பத்தைத் தவிர்க்க வேண்டும்
கடன்தீர்க்கும் வழிவகையை எண்ணி டாமல்
கடன்பட்டிங் கழிவடைந்தோர் எண்ணி லாதார்
உடன்பட்ட நிபந்தனைக்கும் இழுக்கில் லாமல்
உற்றகடன் தீர்ப்பதுதான் ஒழுக்க மாகும்
திடம்பட்ட கொள்கையுடன் கடனைத் தீர்க்கும்
திறமையின்றிக் கடன்வாங்கல் தீமை சேர்க்கும். 1

தவணைக்குள் கடன்தீர்க்கத் தவறும் என்றால்
தானேபோய்க் காரணத்தின் விவரம் சொன்னால்
கவனிப்பார் கடன் கொடுத்தோர் கடுக்க மாட்டார்;
காலத்தை நீட்டிடவும் தடுக்க மாட்டார்;
அவராகக் கடன்கொடுத்தோர் அதட்டிக் கேட்கும்
அந்தநிலை நாணயத்தை அழிப்பதாகும்
தவணைக்குள் வட்டிமுற்றும் கட்டினாலும்
கடன்வாங்கும் தகுதிசற்றும் கெட்டி டாது. 2

## 142. உலகப் போக்கு

உலகப் போக்கைப் பாருங்கள்
ஊரைக் காக்கச் சேருங்கள்
கலகப் பேய்பு குந்திடும்
கவலை யேமி குந்திடும் (உலக) 1

அடிமை வாழ்வு விட்டுநாம்
ஆண்மை வாழ்வு கிட்டினோம்
கடமை யோடும் எல்லையைக்
காக்க வேண்டும் அல்லவா? (உலக) 2

நாடு முற்றும் நம்மது
நன்மை தீமை நம்மது
வீடு பெண்டு மக்களை
வேறு காக்கத் திக்குயார்? (உலக) 3

படைஎ டுக்கும் யாரையும்
பயமு றுத்து வோரையும்
நடுந டுங்கச் செய்குவோம்
நாட்டை மீட்டு உய்குவோம். (உலக) 4

சாந்த வாழ்வை மிஞ்சிடோம்;
சாவ தற்கும் அஞ்சிடோம்;
மாந்த ருக்குள் பீதியை
மாற்ற வேண்டும் பீதியால் (உலக) 5



சண்டை யென்றே அஞ்சினும்
சரணம் என்று கெஞ்சினும்
மண்டை உள்ள மட்டிலும்
மரணம் நம்மை விட்டதோ? (உலக) 6

ஏழை என்ற போதிலும்
என்ன துன்பம் மோதினும்
கோழை என்று வாழ்ந்திட்டோம்;
கொடிய ருக்குத் தாழ்ந்திட்டோம்; (உலக) 7

ஊர்கள் தோறும் கூடுவோம்;
ஒற்று மைகொண் டாடுவோம்;
சீர்கு லைக்க எண்ணுவோர்
சிந்தை நோகப் பண்ணுவோம். (உலக) 8

வீதி தோறும் காவலாய்
வீடு தோறும் ஏவலாய்ச்
சாதி பேதம் தள்ளுவோம்;
சமர சத்தைக் கொள்ளுவோம். (உலக) 9

அன்னி யர்க்கி டங்கொ டோம்;
அரசை யார்க்கும் இனிவிடோம்;
மன்ன ராகி ஆளுவோம்.
மாநி லத்தில் வாழுவோம். (உலக) 10

## 143. கைத்தொழில்

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்;
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்;
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ? (கை) 1

உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது;
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ? (கை) 2

காட்டிலும் மேட்டிலும் களைப்போடு
கஷ்டப் படுவோர் உழைப்பின்றி
வீட்டினில் சாதம் வெந்திடுமோ?
வேறெதும் உணவைத் தந்திடுமோ? (கை) 3

நெசவுக் காரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்வார்கள்?
குசவன் செய்திடும் பாண்டமன்றோ
குடித்தனம் நடந்திட வேண்டுமென்றும்? (கை) 4

கொல்லரும் தச்சரும் கூடாமல்
கூடமும் மாடமும் வீடாமோ?
கல்லடி சிற்பியும் தச்சருமே
காரியம் பலவினுக் கச்சாணி (கை) 5

சலவை சவரம் செய்தாலும்
சாக்கடை கழுவுதல் செய்தாலும்
உலகுக் கதனால் உபகாரம்
ஒன்றும் தெரியார் வெறும்பாரம். (கை) 6

வேந்தர்கள் வரிப்பணம் வாங்குவதும்
வீரர்கள் வெற்றிகள் தாங்குவதும்
மாந்தர்கள் செய்யும் எத்தொழிலும்
மண்ணில் சிறப்பதும் கைத்தொழிலால் (கை) 7

எந்திர வேலைகள் சிறந்திடவும்
ஏற்றவன் கைத்தொழில் தெரிந்தனவே;
மந்திரத் தால்எதும் வந்திடுமோ?
மனிதன் செய்ததே எந்திரமும். (கை) 8

வேலையில் லாதவர் திண்டாட்டம்
விளைத்திடும் கலகக் கொண்டாட்டம்;
ஆலைகள் எந்திரச் சாலைகளால்
அதிகப் படுவதை அறிவோமே. (கை) 9



கைத்தொழில் காத்திடும் ஒருநாடே
கலகம் குறைந்துள திருநாடாம்;
எத்தனைக் கெத்தனை எந்திரமோ
அத்தனைக் கத்தனை தொந்தரவே. (கை) 10

கைத்தொழில் தம்மைக் காத்திடுவோம்;
கலகம் பற்பல தீர்த்திடுவோம்;
பொய்த்தொழில் யாவும் குறைந்திடவே
பூமியில் நாமே சிறந்திடுவோம். (கை) 11

ஏழை செல்வன் என்றுவரும்
எல்லாப் பிணக்கும் நின்றுவிடும்;
வாழிய வாழிய கைத்தொழில்கள்!
வாழிய நித்திய சத்தியமும்! (கை) 12

## *144. சத்திய விரதம்*

சத்திய விரதம் சாதிப்போம்;
சமரச வாழ்க்கை போதிப்போம்;
உத்தம சேவை இதுவாகும்;
உலகத் துக்கே பொதுவாகும். 1

அன்பின் பெருமையை எடுத்துரைப்போம்;
ஆயுதக் கொடுமையைத் தடுத்துரைப்போம்;
துன்பம் யாவையும் சகித்திடுவோம்;
தூயநன் னடைத்தைகள் வகித்திடுவோம். 2

பொய்யும் இம்சையும் வஞ்சனையும்
பூதலம் எங்கும் மிஞ்சினதால்
மெய்யும் கருணையும் தழைத்திடவே
வேண்டிய விதங்களில் உழைத்திடுவோம். 3

வீரம் என்பது கொலையன்று
வெற்றியும் அதனால் நிலையன்று;
தீரம் என்பது திடசாந்தம்;
தெரிவிப் பதுநம் சித்தாந்தம். 4

ஜாதியும் மதங்களும் வீட்டோடு
சமத்துவம் யாவரும் நாட்டோடு
நீதியும் அறங்களும் உலகெங்கும்
நிலைத்திடத் தவம்புரி கிறசங்கம். 5

சாந்தியைப் படித்தது நம்நாடு;
சத்தியம் கொடுத்தது நம்நாடு;
காந்தியைத் தருவது நம்தேசம்;
கடமை நமதே உபதேசம். 6

## 145. உலக சமாதானம்

கைத்தொழில் களைநாம் மெத்தவும் பரிவுடன்
காப்பது நம்முடைக் கடனாகும்;
எத்தனை ஏழையின் நித்திய ஜீவனம்;
எண்ணுவ தேவெகு புண்ணியமாம். (கை) 1

கைத்தொழில் குறைந்தது பொய்த்தொழில் நிறைந்தது
கஷ்டங்கள் யாவையும் அதனாலே
எத்திசை எங்கணும் யுத்தமென் றுரைப்பதும்
எதனால் என்பதை எண்ணிப்பார்! (கை) 2

எந்திரம் புகுந்தது தந்திரம் மிகுந்தது
ஏழைகள் பிழைத்திட வழியில்லை;
மைந்தர்கள் வேலையை எந்திரம் செய்திட
மக்களின் வேலை மனத்தாபம். (கை) 3

'எந்திரம் குவித்திடும் அந்தமி'ல் சரக்கினை
எங்கே விற்பது? என்பதற்கே
சொந்தமல்லாப் பிற நாடுகள் மேற்படை
தொடுப்பதும் நடப்பனபார்! (கை) 4

ஆலையும் எந்திரச் சாலையும் வந்ததில்
ஆயிரம் ஆயிரம் தொழிலாளர்
வேலைகள் போனவர் ஓலமிட் டலைந்திடும்
வேதனை தினந்தினம் விரிவாக்க. (கை) 5



ஆலைகள் மறுத்தலும் வேலைகள் நிறுத்தமும்
அங்கே அடைந்திடும் தொழிலாளர்
சாலையை வளைப்பதும் சங்கடம் விளைப்பதும்
சத்தியம் கைத்தொழில் குறைந்த தனால் (கை) 6

ஆதலி னால்ஒரு போதனை கொள்ளுவாய்
அன்புரை இன்பத் தமிழ்மகனே!
வேதனை கள்பல போதலை விரும்பிடின்
விதியெனக் கைத்தொழில் விருத்திசெய்வாய். (கை) 7

பற்பல பொருள்களை அற்புத யந்திரம்
படைப்பதைத் தடுப்பது பழியெனினும்
சிற்சில பொருள்களை முற்றிலும் கையால்
செய்திடச் சட்டம் செய்திடுவாய். (கை) 8

சோறும் துணியும் யாரும் இனிமேல்
சுத்தமும் கைத்தொழில் பொருள்வாங்கக்
கூறும் சட்டக் கட்டளை யின்றேல்
கொடுமையும் பஞ்சமும் குறையாவே. (கை) 9

பஞ்சம் குறைந்திட வஞ்சம் மறைந்திட
பட்டினி கிடப்பவர் இல்லாமல்
அஞ்சும் படிபல ஆயிரம் ஜனங்களை
ஆலையில் அடைப்பதை அளவாக்கும். (கை) 10

## 146. தேறிய தெளிவு

துன்பம்எனும் பேயே! - நீ
தூரத் தொலைந் தொழிவாய்
இன்பத்தைக் கண்டு கொண்டேன் - உனக்கே
இங்கென்ன வேலையினி? 1

துக்கம்எனும் இருட்டே! - ஞான
சூரியன் தோன்றி விட்டான்
பக்கம் வருவதற்கும் - இனிப்
பாத்தியம் ஏதுனக்கு? 2

காமக் கடுங்குறும்பே! - நெற்றிக்
கண்ணை யடைந்து விட்டேன்
தாமதம் செய்வாயேல் - வெந்து
சாம்பல் கதியடைவாய்! 3

கோபக் கொடுங்குணமே! - உன்றன்
கொட்டம் அடக்கிடுவேன்
தாபத்துக் கெட்டாத - தெய்வ
சன்னதி என்னதுபார்! 4

சோம்பல்எனும் பிணியே! - உன்றன்
சொந்தத்தை விட்டுவிட்டேன்.
தேம்பித் திரிபவரை - இனித்
தேடிப் பிடித்துக் கொள்ளு. 5

அச்சம்எனும் பகையே! - இனி
அண்டையில் நிற்பாயா?
பச்சைக் குழந்தையைப்போல் - மனப்
பான்மை யடைந்துவிட்டேன். 6

ஆசைமனக் குரங்கே - உன்றன்
ஆட்சி ஒழிந்தது பார்?
காசு பணங்களெல்லாம் - வெறும்
காகிதக் குப்பை கண்டேன். 7

சூதுபொய் வஞ்சனைகாள்! - உங்கள்
சூழ்ச்சி பலிக்காது!
நீதிமெய் நேர்மைகளே - கொண்ட
நிச்சய ஞானமுற்றேன். 8

வெற்றிஎனும் வெறியே! உன்னை
வென்று விழுங்கிவிட்டேன்!
மற்றொரு யாரினிமேல் - என்
மனத்தைக் கலைத்திடுவார்? 9



ஆறி அமர்ந்துவிட்டேன் - அருள்
ஆண்டவன் சன்னதிமுன்
தேறித் தெளிந்த என்னை - எந்தத்
தீவினை என்னசெய்யும்? 10

## *147. ஆண்மை*

அஞ்சாத நிலையே ஆண்மை
அஞ்சினோர்க் கருளல் ஆண்மை
கெஞ்சாத வாழ்வே ஆண்மை
கெஞ்சினோர்க் கிரங்கல் ஆண்மை
மிஞ்சாத கோபம் ஆண்மை
மிஞ்சினால் காத்தல் ஆண்மை
துஞ்சாத ஊக்கம் ஆண்மை
துன்பத்தில் துணையாம் ஆண்மை. 1

பொய்யாத நிலையே ஆண்மை
புகுந்தாருக் கபயம் ஆண்மை
வையாத பேச்சே ஆண்மை
வருந்தாமல் இருத்தல் ஆண்மை
எய்யாத சொல்லே ஆண்மை
இகழாமல் இடித்தல் ஆண்மை
பொய்யாது கொடுத்தல் ஆண்மை
கோள்சொல்லாக் குணமே ஆண்மை. 2

உள்ளதை உரைத்தல் ஆண்மை
ஒளிப்பதை ஒழித்தல் ஆண்மை
கள்ளத்தைக் கடிதல் ஆண்மை
கயமையைக் காய்தல் ஆண்மை
எள்ளொத்த துன்பம் கூட
எவருக்கும் இழைக்கா தாண்மை
வெள்ளத்தைப் போன்ற அன்பின்
வெற்றியே விரும்பும் ஆண்மை. 3

## 148. சொல்லின் பெருமை

பேச்ச ழிந்து போனால் - அறிவின்
பெருமை என்ன வாகும்?
மூச்சி ழக்கு மானால் - தேகம்
முன்னி ருந்த தாமே?
கூச்ச மில்லை யென்றால் - பெண்மை
குறைவு பட்ட தன்றோ?
நீச்ச மற்ற மீன்போல் - சமூகம்
நிலைகு லைந்து போகும். 1

சொன்ன சொல்ல ழிந்தால் - வாழ்க்கை
சுகமி லாத தாகும்.
சின்ன ஏழைக் கேனும் - சொல்லே
ஜீவ நாடி யாகும்.
மன்ன ரான பேரும் - பேச்சை
மாறி மீறி விட்டால்
சின்ன பின்ன மாவார் - அதிலே
சிறிதும் ஐய மில்லை. 2

வாக்க ழிந்து விட்டால் - பின்னர்
வாழ்வு தாழ்வ தாகும்
மூக்க றுந்து போனால் - நல்ல
முகவி லாச மெங்கே?
நோக்கி லாது போனால் - கண்கள்
நோகும் புண்க ளாகும்
காக்க வேணும் சொல்லை - அதுவே
கர்ம வீர மாகும். 3

வார்த்தை மாறி விட்டால் - மனிதன்
வாசம் அற்ற மலரே.
கீர்த்தி யென்ப தெல்லாம் - சொல்லில்
கெட்ட பேருக் கேது?



பூர்த்தி தவறி னாலும் - வாக்கில்
புரட்டு செய்தி டாமை
நேர்த்தி யான தாகும் - என்று
நினைவில் வைக்க வேணும். 4

## 149. அச்சமில்லாமை

அச்சமில் லாமை அஃதுஎது என்றால்
இச்சைப் படிக்கே எதையும் செய்யச்
சுதந்தரம் தனக்குச் சொந்தமாய் நிற்கக்
குணமே நாடிக் குற்றம் கடிந்து
தன்னைத் தானே தண்டிப் பவனாய்.

ஏவல் சொல்லவும் ஏனென்று கேட்கவும்
தன்மனச் சாட்சியே தனக்குத் தலைவனாய்
பதுங்கிக் கொள்ளப் பகையில் லாமல்
நடுங்க வேண்டிய ஞாயமில் லாமல்
தண்டனை பயக்கும் தப்பித மென்னத்

திடுக்கிடச் செய்யும் தீமைபண் ணாமல்
வாய்மையும் தூய்மையும் வழுவா நெறியில்
அனைத்துள உயிர்க்கும் அன்பே செய்தும்
அருள்மனம் நிறைந்த அமைதி ஒன்றே
அச்சமில் லாமை அளிக்க வல்லது.

அச்சமில்லாமை அரும்பெரும் செல்வம்
அப்படிப் பட்டதோர் அச்சமில் லாமை
காந்தி மகானிடம் மட்டும் காண்கிறோம்.

## 150. ராம ராஜ்யம்

ஏ! ராம ராம!வென ஜெபிப்போ ரெல்லாம்
ஏமனெனும் பயம்அணுகா இன்பம் சூழ்வார்
மாராமன் திருப்புகழைச் சொல்வோ ரெல்லாம்
மாருதிபோல் அவனருளின் மகிழ்ச்சி ஆள்வார்.

ஸ்ரீராமன் சீதைகதை கேட்போ ரெல்லாம்
ஸ்ரீதேவி வாசமுறத் திகழ்ந்து வாழ்வார்
ஆராமன் பெயரைஅவ மதிப்போர் தம்மை
'அக்காளே' எக்காலும் ஆட்சி கொள்வன். 1

இமயமுதல் தென்கோடி இலங்கை ஈறாய்
இருந்தவர்கள் எல்லாரும் என்றும் கேட்டுச்
சமயமொழி வேற்றுமையின் நடைகள் தாண்டிச்
சமரசமாய் ஒருகுலமாய்ச் சல்லா பித்த
அமுதமெனும் ராமகாதை அறிவைப் போற்றி
அந்நியரும் தலைவணங்கி ஆதரித்தார்
நமதுமனம் அதைமறந்த நடத்தை யாலோ
நாம் இன்று நலங்குன்றி நலிந்து போனோம். 2

வீடுதொறும் சீதைஒளி விளங்க வேண்டும்
விதிதொறும் ராமகதை முழங்க வேண்டும்
நாடுமுற்றும் அனுமன்வழி நாட வேண்டும்
நற்றவசி பரதனையே பாட வேண்டும்
கேடுதரும் காமமெனும் உண்மை கேட்டுக்
கேண்மைமிகும் ஆண்மையெனும் கிளர்ச்சி கொண்டால்
பாடுபெறும் காந்திமகான் பரிந்து சொன்ன
பதவிவரும் பார்அதுதான் ராம ராஜ்யம். 3

## *151. மக்களின் அணிகலம்*

அறிவே மக்களின் அணிகலமாம்
அன்பே அதில் ஒளிர் மணியெனலாம்
குறிவே றெதையும் கொள்ளாதே
குணமிகும் இவ்வுரை தள்ளாதே. 1

உண்மையை நாடுதல் அறிவாகும்
உயிர்களுக் கன்பே நெறியாகும்.
புண்ணியம் என்கிற பணிகளையே
பூண்பது வேறல் அணிகலமாம். 2



அன்பெனும் அணிகலம் ஒளிவீசும்
ஆதர வாகிய மொழிபேசும்
புன்சிரிப் பங்கே பொங்கிவரும்
பூரிப் பங்கே தங்கிடுமே. 3

அறிவெனும் அணிகலம் அழகினோடும்
அச்சமற் றெங்கணும் பழகிவிடும்
பறிமுதல் செய்திட முடியாது
பகைவர் என்பதும் கிடையாது. 4

கல்வியும் கேள்வியும் பொன்னாகும்
கருணையின் மெருகே மின்னாகும்
நல்லின நட்புகள் நவமணிகள்
நகைமுக அணிகலம் தவமெனலாம். 5

பூண்டவர் தமக்கொரு தென்புதரும்
புறத்துள எவர்க்கும் இன்புதரும்
ஆண்டவன் நினைவொடு பணிபுரியும்
அன்புடை அறிவே அணிகலமாம். 6

## *152. அன்பு*

அன்பு என்ற ஒன்றைநாம்
அறிந்து கொள்ளக் கூடுமேல்
துன்பம் என்ற யாவையும்
தூர மாக ஓடுமே
வம்பு வாது வார்த்தைகள்
வாய டங்கிப் போகுமே.
இன்ப மாக நாமெலாம்
இங்கிருந்து வாழலாம். 1

ஜாதி பேதச் சண்டையும்
சமய பேதக் கொடுமையும்
மோதி மோதிமக்கள் தம்மை
மூடராக்கும் மடமையும்

நாதி யற்றுப் போகுமிந்த
நானி லத்தின் மீதிலே
ஆதிநாள்நம் அன்னை செய்த
அன்பை எண்ணும் போதிலே 2

அன்பு கொண்ட பேர்களுக்கே
அச்ச மில்லை எங்கனும்
முன்பு யாரும் கண்டிராத
மூர்க்க ரோடும் தங்கலாம்.
துன்ப முற்ற மக்கள்யாரும்
துணைவ ரென்று போற்றவே
செம்பு கொண்ட தங்கமென்ன
சேர்ந்த தீமை மாற்றுவார். 3

வெல்ல வந்த சேனைகூட
வேகமற்ற தாகுமே
சொல்லுமிந்த அன்பை மட்டும்
சுத்த மாகப் பேணினால்
கொல்லும் வேலும் வாளுங்கூடக்
கூர்ம மூங்கிப் போகுமே
கல்லும் கூடப் புல்லைப்போலக்
கனிவு கொண்டு காணுமே
சொல்லுமிந்த அன்பை மட்டும்
சுத்த மாகப் பேணினால். 4

கூழுமின்றிக் குடிசையின்றிக்
கோடி கோடி உலகினில்
ஏழை மக்கள் பரதவித்தே
ஏங்க நேரும் கலகமும்
கோழைப் பட்ட செல்வம் செய்யும்
கொடுமை முற்றும் குறையுமே
வாழி இந்த அன்புமட்டும்
வைய மெங்கும் நிறையுமே. 5



பஞ்ச மென்ற ஏக்கமும்
பகைமை யென்ற கொச்சையும்
நஞ்சை யொத்த கோபமும்
நாச மூட்டும் இச்சையும்
கெஞ்சி நின்று சோறுதின்னும்
கீழ்மை யான எண்ணமும்
அஞ்சி அஞ்சி அன்பினுக்கே
அடிமை வேலை பண்ணுமே. 6

முக்தி என்ற ஆசையும்
மோட்ச மென்று பேசலும்
பக்தி என்ற பாசமும்
பரமன் என்ற நேசமும்
சத்தி யத்தின் மேன்மையும்
சாந்தி என்ற வெற்றியும்
அத்த னைக்கும் மூலமாம்
அன்பு என்ற ஒன்றுதான். 7

போழ்ந்து நம்மை நீக்கிவைக்கும்
பேத புத்தி போகவும்
சூழ்ந்து நின்று மதிகெடுக்கும்
சூது பொய்கள் ஏகவும்
ஆழ்ந்த கல்வி யின்றிக்கூட
அன்பு என்ற ஒன்றினால்
வாழ்ந்தி ருக்க லாகும் அன்பு
வளர்க வாழ்க என்றுமே. 8

நேய மற்ற மதவெறிக்கு
நிலைய மான நேசமாம்
பேயுங் கூட நடுநடுங்கிப்
பேத வித்துக் கூசுமாம்
நாய்ந ரிக்கும் அச்சமூட்டும்
நவக ளிக்குள் காந்தியார்
போய்ந டந்த யாத்தி ரைக்குள்
புனித அன்பு சேர்ந்ததாம். 9

தெய்வ மென்று உலகம்நித்தம்
தேடு கின்ற ஒன்றுதான்
வைய கத்தில் அன்பா மென்ற
வார்த்தை யாகி நின்றதே
ஐயன் எங்கள் காந்தி வாழ்வின்
அற்புத தத்தை நாடியே
மெய்யு ணர்ந்தே அன்புசொல்லும்
மேன்மை யாவும் கூடுவோம். 10

## *153. தியாக புத்தி*

போகம் மிக்க இன்ப வாழ்வை
புவியி லெங்கும் நாட்டலாம்
பொறுமை போக்கும் வறுமை தன்னைப்
பூமி விட்டே ஓட்டலாம்
சோக முற்று வாடு மக்கள்
சுகம டுக்கப் பண்ணலாம்
சூது வாது பொய்கள் விட்டுச்
சுத்த மாக்க எண்ணலாம்
வேக மூட்டும் 'பகைமை' யென்னும்
வெறியை முற்றும் போக்கலாம்
வேறு ஜாதி சமயம் என்னும்
வெட்டிச் சண்டை நீக்கலாம்
'தியாக புத்தி' ஒன்றை மட்டும்
சிறிது நாமும் போற்றினால்
தெய்வ லோகம் நாண இந்த
வைய கத்தை மாற்றலாம். 1

அடிமை யென்ற சொல்லுங் கூட
அவனி விட்டு ஓடுமே
ஆணும் பெண்ணும் சமதை யென்ற
அறிவு வந்து கூடுமே



கடமை யென்று கருணை செய்யும்
காலம் வந்து சேருமே
கட்சி கட்டும் பட்ச மற்ற
காரி யங்கள் மாறுமே
உடமை சொத்தம் ஒன்று மின்றி
உடல்சு கிக்க வாழலாம்
உலகி லெங்கும் கலக மின்றி
உரிமை கொள்ளச் சூழலாம்.
கொடுமை யாற்ற ராஜ ரீகம்
குலவி யாளக் காணலாம்
கொஞ்ச மிந்தத் 'தியாக புத்தி'
மட்டும் மக்கள் பேணினால். 2

## *154. அரும்பெரும் செல்வம்*

துறவிக்கு மட்டுமா அன்பின் தொடர்பு?
இல்லறம் முற்றலும் அன்பின் இயக்கமே
அன்பின் திறங்களை யாரே அறிவார்!
அன்பின் சிறுமையே ஆசை என்பதாம்
அன்பின் பெருமைதான் காதல் ஆவதும்.

அன்பின் விகாரமே காமமாய் அலர்வதாம்,
அன்பின் விரிவுதான் அருளாய் மலர்வது.
மனைவியும் மக்களும் மற்றுள சுற்றமும்
நண்பரும் என்பதாய் நம்மையே நாடும்
பற்றுள் ளவரிடம் பட்சமே அன்பாம்.

பற்றிலா எவர்க்கும் பற்றுவிட் டவர்க்கும்
பகைமையே நம்மிடம் பாராட்டு வோர்க்கும்
அன்பே செய்தல் அருள்எனப் படுவது.
துறவறம் அருள்செயத் துணைதரும் எனினும்
இல்லற வாழ்விலும் அருளோடு இருப்பதே.

ஆன்றோர் வகுத்த அறநெறிப் பொருளாம்
அன்பின் ஒழுக்கமே இல்லறம் ஆவதாம்
அன்பிற் பெருக்கிய அருள்சேர் வாழ்க்கையே
துறவறம் என்பதன் துலக்கம் என்பது.
அன்பைப் போன்ற அரும்பெரும் செல்வம். 20

மனிதன் பெறுவது மற்றெதும் இல்லை
அறிந்தவர்க் கெல்லாம் அன்பே தெய்வம்
அன்பை உணர்வதே ஆனந்தம் எனக்கு.

## *155. வெற்றி எது?*

வெட்டி வெட்டிக் கொல்லுவார்
வீரம்என்று சொல்லுவார்
சுட்டுச் சுட்டுத் தள்ளுவார்
சூரம் என்று துள்ளுவர். 1

திட்டித் திட்டி ஏசுவார்
தீரம் என்று பேசுவார்
கட்டு வார்த்தைத் தீரும் ஓர்
காலம் வந்து சேருமோ! 2

வீரம் மூட்டி விட்டவர்
வீட்டில் நின்று விட்டவர்.
தீரம் சொல்லித் தந்தவர்
தெருவில் பேச வந்தவர். 3

சூரம் கூறிச் சென்றவர்
சொன்ன தோடு நின்றவர்
நேரிற்போரில் சிக்கினோர்
நிரப ராதி மக்களே. 4

கண்ணைக் காலைப் போக்குவார்
கருணை பேசித் தூக்குவார்
புண்ணை ஆறப் பண்ணுவார்
புண்ணி யத்தை எண்ணுவார். 5



வெண்ணெய் ரொட்டி ஊட்டுவார்
வேறே அன்பும் காட்டுவார்
மண்ணில் இந்த மடமைகள்
மாறும் காலம் அடைவமோ? 6

மண்டை வந்த நாளிலே
மரணம் உண்டு தோளிலே
சண்டை போடத் தூண்டித்தான்
சாகச் சொல்ல வேண்டுமா? 7

குண்டு போட யுத்தமா?
கொல்லக் கூட வித்தையா?
மண்ட லத்தில் போரையே
மறந்து போக நேருமா? 8

வெற்றி வெற்றி என்பரேல்
வெற்றி பெற்ற தென்னவோ?
சுற்று முற்றும் பாரெலாம்
சூரை யான ஊர்களும் 9

பெற்ற தாய்கள் ஓலமும்
பேய்பு குந்த கோலமும்
இற்றொ ழிந்த சுற்றமும்
இவைக ளேநம் வெற்றிகாண்! 10

துன்பம் வெற்றி பெற்றது
துயரம் வெற்றி பெற்றது
வம்பு தும்பு சூதுகள்
வறுமை வெற்றி பெற்றன. 11

அன்பின் வெற்றி அல்லவே
அறிவின் வெற்றி அல்லவே
இன்ப மென்று நாமறிந்த
எதுவும் வெற்றி பெற்றதா? 12

யுத்தம் என்ற மோகமும்
உலகை விட்டுப் போகுமா?
பித்தர் என்று நம்மையே
பேசு வார்கள் பேசின்என்? 13

புத்தர் வந்து போனதும்
புனிதன் காந்தி வந்ததும்
பொய்த்துப் போக ஒண்ணுமோ?
புவனி ஓங்கி வாழுமே! 14

## 156. வீரமும் தீரமும்

ஆயுதம் தாங்கி அரண்களில் மறைந்தே
ஏமாந் திருக்கும் எதிரியைக் கொல்வதும்
சீவனம் செய்யச் சேனையில் சேர்ந்தும்
உடைகள் தரித்து நடைகள் பயின்றும்
எந்திரம் போல ஏவல் கேட்டும்

கொடுமை புரிவதும் கொல்வதும் சாவதும்
வீரமும் அன்று; தீரமும் அன்று.
வீரமோ தீரமோ விரும்பிப் பழகும்
செயற்கை அன்று இயற்கை சேர்ந்தது.
வீரமும் தீரமும் வெவ்வேறு அல்ல.

இரண்டும் நெருங்கி இணைந்த குணங்கள்.
வீரம் என்பது வீட்டையும் நாட்டையும்
அக்கம் பக்கம் யாரையும் காக்கும்.
அன்போ டியைந்த ஆண்மையே வீரம்
எதிரி யிடத்திலும் இரக்கமே காட்டும்.

காதல் என்பதைக் கண்ணெனப் போற்றும்,
கற்பெனும் சொல்லின் நற்பொருள் நாடும்.
நட்பெனும் பதத்தின் உட்பொருள் உணரும்.
துன்பம் என்றால் துணைசெயத் துடிக்கும்.
வஞ்சனை செய்து வாழ்வதை வெறுக்கும்.



பொய்யுரை பேசும் புன்மையில் லாதது
நடுநிலை விட்ட நலங்களைத் துறக்கும்
இம்சையால் வருகிற இன்பம் இகழும்
உடலை வளர்க்க ஊறுசெய் யாது.
உயிரையும் கொடுத்தே உதவிகள் புரியும்.

பிறர்குறை பேசிப் பிழைக்க எண்ணாது
சிறுமை எதையும் சீறித் தள்ளும்
இனிய சொற்களே இயல்பாய்ப் பேசும்
பொன்னே வரினும் புறஞ்சொல் லாது
கொள்கை விடாமல் கொடுமை சகிக்கும்.

தன்னலச் செலவில் பிறநலம் தாங்கும்
நீதி இல்லாத வழிகளை நீக்கிய
வெற்றி விருப்பமே வீரம் என்பது.
தீரம் என்பது தெய்வீக வீரம்.
உலகம் முழுதையும் ஒன்றாய்க் கருதி

விருப்பு வெறுப்பு விகாரம் விலக்கிச்
சாந்தம் என்பதன் சாரம் சேர்ந்தது.
கொல்லா விரதமே கொள்கையாக் கொண்டு
கொல்லப் படினும் கொலைபு ரியாத
தெளிந்த வீரமே தீரம் என்பதாம்.

மகாத்து மாக்களே தீர மரபினர்
விவேகா னந்தரை வீரம் என்றால்
இராம கிருஷ்ணரைத் தீரம் எனலாம்.

# VI. திருநாட் சிறப்பு

## *157. புத்தாண்டு தமிழ்த் தெய்வம்*

சித்திரை மாதத்தில் புத்தாண்டு தமிழ்த்
தெய்வம் திகழும் திருநாட்டில்,
இத்தினம் அந்தத் திருநாள் ஆதலின்
ஈசனைப் போற்றி வரம்கேட்போம். 1

கொல்லா நோன்புடன் பொய்யா விரதம்
கொண்ட தமிழ்க்குணம் குன்றாமல்
எல்லா மக்களும் இன்புறக் கோரிடும்
எண்ணம் வளர்த்திடப் பண்ணிடுவோம். 2

வீரப் படைகளின் தோள்வலியும் முன்னே
வெற்றிகள் கண்டிட்ட வாள்வலியும்
போரில் பயன்பட மாட்டா என்கிற
புத்தியை எங்கும் புகட்டிடுவோம். 3

கோபத்தை மூட்டிடும் பேச்சுகளும் வெறும்
குற்றங்கள் சாட்டிடும் ஏச்சுகளும்
தாபத்தை நீடிக்கச் செய்யுமல் லால்வேறு
தந்திடும் நன்மைகள் ஒன்றுமில்லை. 4

வள்ளல் மகாத்மா காந்தியின் வாழ்வே
வள்ளுவன் தந்த திருக்குறளாம்.
தெள்ளிய உண்மையைத் தேர்ந்து நடத்திடத்
தெய்வத் திருவருள் நாடிடுவோம். 5

உலகத்தில் போர்ப்பயம் நீங்கிடவும் மக்கள்
உள்ளத்தில் அன்பறம் ஓங்கிடவும்
சுலபத்தில் கண்டு சுகம்பெறக் காந்தியைச்
சுபதினத்தில் வாழ்த்தித் தொழுதிடுவோம். 6



## *158. தொண்டு செய்ய முந்துவோம்*

நாக ரீக மென்று சொல்லி
எந்தி ரத்தை நம்பியே
வேக மாக யுத்த மென்ற
குழியில் வீழ்ந்து வெம்பினோர்
போக வாழ்வை எண்ணி எண்ணிப்
போட்டி யிட்டு முண்டியே
சோக முற்றே உலக மெங்கும்
வறுமை மிஞ்சத் தண்டினோம். 1

உண்டு டுத்துக் குடிவெ றித்திங்
குலகை ஆளும் ஆசையே
கண்டு விட்ட இன்ப மாகக்
கால முற்றும் பேசியே
சண்டை யிட்டுக் கொன்று வீழ்த்தச்
சக்தி தேடும் ஒன்றையே
கொண்டு விட்ட கொள்கை யாக்கிக்
கொடுமை சூழ நின்றுளோம். 2

ஒருவர் நாட்டை ஒருவர் பற்றி
உரிமை பேசி ஆள்வதும்
இருவர் மூவர் சேர்ந்து கொண்டும்
இம்சை காட்டி வாழ்வதும்
பெருமை என்று எண்ணி வந்த
பித்துக் கொண்ட கொள்கையால்
தரும மற்று மனித வர்க்கம்
தலைகு னிந்து வெள்கினோம். 3

எந்த வேளை என்ன வென்று
ஏது சண்டை கூடுமோ!
எந்த நாட்டில் எந்தத் தேசம்
எந்தக் குண்டைப் போடுமோ!

வந்த தீமை தப்பி வாழ
வழியைத் தேடி மாநிலம்
சிந்தை நொந்து மனித வாழ்வு
சீர்கு லைந்து போனதே. 4

உலகில் உள்ள மக்கள் யாரும்
ஒருகு டும்ப மாகவே
கலக மற்று யுத்த மென்ற
கவலை விட்டுப் போகவே
குலவி வாழ இந்த நாட்டின்
கொள்கை யாகும் சாந்தியே
சுலப மான மார்க்க மென்று
சுத்த மாக ஏத்துவோம். 5

உயிரி ருக்கும் உடல னைத்தும்
ஈசன் வாழும் உறையுளாம்
அயர்வி லாத ஞான மூட்டும்
அருளறிந்த அறிவுளோம்
பெயர்ப டைத்த நமது நாட்டின்
பெருமை யாகும் மந்திரம்
துயர றுக்கும் 'சாந்தி' சொல்லித்
தொண்டு செய்ய முந்துவோம். 6

*குறிப்புரை:- வெள்கி - அஞ்சி, கூசி.*

## *159. புத்தாண்டு வாழ்த்துகள்*

புகுந்தது நமது வாழ்வில்
புதியதோர் ஆண்டிந் நாளே
பூசனை புரிந்து போற்றி
ஈசனை வணங்கி நிற்போம்.
உகுந்திடும் தீமை யாவும்
ஒழிந்திடும் துன்ப மெல்லாம்
உயர்ந்திடும் நிலைமை; கீர்த்தி
ஓங்கிடும்; காரி யத்தில்



மிகுந்திடும் இன்பம்; நெஞ்சில்
மிதந்திடும் அன்பும் பண்பும்;
மேவிடும் தருமம் தானம்;
மேவிய சுற்றம் சூழ
மகிழ்ந்திடும் உள்ளத் தோடு
மனையறம் சிறக்க நீங்கள்
மங்களம் பெருகி வாழ
மனமார வாழ்த்து கின்றேன். 1

சத்தியமும் சாந்தமுமே துணைக ளாகச்
சன்மார்க்க வழிநடக்கும் கொள்கை தந்த
உத்தமனாம் காந்தியரை உள்ளத் தெண்ணி
உலகாளும் பரம்பொருளை வணங்கி நின்று
சித்திரையாம் புத்தாண்டுத் திருநாள் காணும்
சீர் மிகுந்த தமிழ்த்தாயின் புகழைப் பாடி
மெத்தநலம் பெருகிஉங்கள் குடும்ப வாழ்க்கை
மேன்மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றோம். 2

*குறிப்புரை:- சன்மார்க்கம் - தூயவழி; பரம்பொருள் - மேலான பொருள்.*

## *160. புனித நன்னாள்*

தமிழ் நாட்டின் தனிப்பெருந் திருநாள்
பொங்கல்' என்னுமிப் புனிதநன் னாள்முதல்
வையகம் முழுவதும் மெய்யறம் ஓங்கி
வறுமையும் பகைமையும் வஞ்சமும் நீங்கி
உங்கள் குடித்தனச் சிறப்புகள் உயர்ந்து
பண்டம் பலவும் பணமும் நிறைந்து
மக்களும் மனைவியும் மற்றுள சுற்றமும்
இன்பம் பெருகிட இல்லறம் நடத்திப்
பல்லாண்டு வாழ்ந்திடப் பரமனார் அருளும்
வாழிய உங்கள் வளமனைப் பொங்கல்.

## 161. பொங்குக பால்

பொங்கல் எனும்பொழுதில் - இன்பம்
பொங்குது துன்பங்கள் மங்கி மறைந்திடும்
மங்களச் சொல்அதிலோர் - தெய்வ
மந்திரம் உண்டெனச் சிந்தை களித்திட
எங்கள் தமிழ்நாட்டில் - மிக்க
ஏழையும் செல்வரும் தோழமை எய்திடும்
இங்கிதம் கண்டிடும்நாள்! - பலர்
எங்கும் புகழ்ந்திட உங்கள் குடித்தனம்
பொங்குக பொங்குக பால்! 1

வெள்ளை அடித்திடுவோம் - எங்கள்
வீடுகள் வாசலில் கூடிய மாசுகள்
அள்ளி எறிந்துவிட்டு - மிக
அற்புதச் சிந்திரம் பற்பல வர்ணங்கள்
புள்ளிகள் கோலமிட்டுத் - தெய்வ
பூசனைத் தீபங்கள் வாசனைத் தூபங்கள்
உள்ளத்தி லும்புகுந்தும் - அங்கே
ஊறிய தீமைகள் மாறுதல் செய்திடும்
சீருடைப் பொங்க லிதாம்! 2

மாடுகள் நாய்குதிரை - ஆடும்
மக்களைப் போலவே ஒக்கும் உயிரென்று
நாடும் நினைவுவந்து - பொங்கல்
நாளில் அவைகளின் தாளில் தளையின்றித்
தேடும் உரிமைதந்து - முற்றும்
தேய்த்துக் குளிப்பாட்டி நேர்த்தி யுறமலர்
சூடின தாகச்செய்வோம் - அதில்
தோன்றும் கருணையை ஊன்றி நினைந்திட
ஏன்றது இந்தப் பொங்கல்! 3



அஞ்சும் மனத்தவரும் - கொஞ்சம்
ஆண்மை தருமனப் பான்மை யடைந்திட
மஞ்சு விரட்டிடுவோம் - துஷ்ட
மாட்டையும் அடக்கும் தாட்டிகம் காட்டுவம்
வஞ்சனை மோகங்களும் - தங்கள்
வாடிக்கை விட்டந்த வேடிக்கை பார்த்துடன்
கொஞ்சி மகிழ்ந்திடும்நாள்! - மைந்தர்
கூட்டமும் பந்தய ஓட்டமும் மங்களப்
பாட்டும் மிகுந்த பொங்கல்! 4

மங்கள வாழ்வுபெற்று - மக்கள்
மாச்ச ரியம்தரும் ஏச்சுக ளைவிட்டு
எங்கள் திருநாட்டில் - இனி
ஏழ்மையும் யாருக்கும் தாழ்மையும் நீங்கிடச்
செங்கை சிரங்கூப்பித் - தெய்வ
சிந்தனை யிற்பல வந்தனை பாடிஇப்
பொங்கலை வாழ்த்திடுவோம் - இந்தப்
பூதலம் யுத்தத்தின் வேதனையாற் படும்
தீதறப் பொங்குக பால். 5

*குறிப்புரை:- தாட்டிகம் - பலம்; இங்கிதம் - இனிமை; மாசு - குற்றம்.*

## 162. சுதந்தரப் பொங்கல்

அடிமை விலங்குகள் அகன்றன இனிமேல்
கொடுமை பிறர்பால் கூறுதற் கில்லை
திடமுடன் சத்தியத் தீயினை வீட்டி
மடமை மதவெறி மமதையை எரித்துப்
பொய்யும் மோசமும் புலையும் பொசுங்க

வையம் முழுவதும் வாழ்ந்திடத் துணிந்திங்
கன்பெனும் பாலை அடுப்பகத் தேற்றித்

துன்பெனும் துர்நீர் சுண்டித் தொலைந்திடக்
காய்ச்சித் திரட்டிய கருணைப் பொங்கல்
பாய்ச்சும் சுதந்தரப் பரிமளம் கமழ

அமிழ்தம் இதுவென அழியா வரந்தரும்
தமிழன் தெய்விகத் தனிரசம் சேர்த்துப்
புத்தம் புதியதோர் சுவைதரப் புசித்து
நித்தமும் மகிழ்வுடன் நெடுநாள் வாழ்வீர்!

*குறிப்புரை:- பரிமளம் - மிகுமணம்; மமதை - எனது என்ற மமதை.*

## *163. பொங்குக புதுவளம்*

பொங்குக பொங்கல் பொங்குகவே
பொங்குக புதுவனம் பொங்குகவே
திங்களில் மும்முறை மழைபொழியத்
தினம்இது முதல்நம் குறைஒழிய
மங்குக போர்வெறி மாச்சரியம்
மதவெறி நிறவெறி தீச்செயல்கள்
தங்குக சத்திய சன்மார்க்கம்
தரணியில் மாந்தர்கள் எல்லார்க்கும். (பொங்) 1

மாநில உயிர்கள் நலமுறவும்
மக்கள் உடல்வளம் பலமுறவும்
ஞானமும் கல்வியும் சிறந்திடவும்
நல்லன உணர்ச்சிகள் நிறைந்திடவும்
தானியக் கதிர்வளம் உயர்ந்திடவே
தக்கன உழவுகள் முயன்றிடுவோம்
போனதிங் குணவுப் பஞ்சமெனப்
புதுவளம் எங்கணும் மிஞ்சிடவே (பொங்) 2

இயற்கையின் வளம்பல இருந்தாலும்
இன்பம் யாவையும் பொருந்தாவாம்
செயற்கைப் பொருள்கள் சேராமல்
சிறப்புள வாழ்வெனும் பேராமோ?



வியக்கும் பொருள்களைச் செய்திடுவோம்
வேண்டிய திறமைகள் எய்திடுவோம்
நயக்கும் தொழில்பல பெருகவென
நமக்கதில் ஊக்கம் வருகவென. (பொங்) 3

உழவும் தொழிலும் மலிந்துவிடில்
ஊரில் செல்வம் பொலிந்துவிடும்
விழவும் தினந்தினம் விருந்துகளும்
வீட்டிலும் நாட்டிலும் இருந்துவரும்
பழகும் அன்னிய நாடுகளும்
பரிவுடன் எதையும் ஈடுதரும்
செழுமை பெற்றிடும் வாணிபங்கள்
சேமித் திடுவோம் நாணயங்கள். (பொங்) 4

பொலிவுறச் செல்வம் சேர்ந்தவுடன்
புதுப்புது உணர்ச்சிகள் ஊர்ந்துவரும்
இலக்கிய வாழ்க்கையில் இச்சைதரும்
இன்பச் செயல்களை மெச்சவரும்
நலிதரும் ஆசையை ஓட்டுவதாய்
நன்னெறி இன்பம் ஊட்டுவதாய்க்
கலைகள் யாவையும் திகழ்ந்திடவும்
கண்டவர் கேட்டவர் புகழ்ந்திடவும் (பொங்) 5

கொள்ளை கொள்ளை தானியமும்
கோரும் பலதொழில் மானியமும்
வெள்ளிபொன் செல்வம் மிகுந்திடினும்
வேண்டிய கலைத்திறம் திகழ்ந்திடினும்
கள்ளமும் பொய்யும் அமிழ்ந்திடவும்
கருணை நறுமணம் கமழ்ந்திடவும்
உள்ளம் மலர்ந்திடல் இல்லாமல்
உன்மை வளமெதும் நில்லாது. (பொங்) 6

தனிநாயகன்ஒரு பரம்பொரு ளால்
தரணியை ஆள்வதும் அவன் அருளாம்
மனநா யகம்இதில் மலர்ந்துவிடில்
மற்றுள வேற்றுமை உலர்ந்து விடும்
ஜனநா யகமுறை ஓங்கிவிடும்
சச்சர வென்பன நீங்கிவிடும்
இனமாய் யாவரும் வாழ்ந்திடலாம்
இன்பப் புதுவளம் சூழ்ந்திடவே! 7

*குறிப்புரை:- சச்சரவு - கலம், சண்டை; பரிவு - அன்பு, இன்பம்; தரணி - உலகம்*

## 164. தமிழர் கண்ட பொங்கல்

ஏர்தரும் விளைபொருள் யாவையும் நிறைந்தே
ஏழைகள் படுந்துயர் எங்கணும் குறைந்து
போர்வெறிக் கொடுமைகள் புரிவதை மறந்து
பொய்நெறி விடுத்தறம் மெய்ந்நெறி சிறந்து
சீர்தரும் கல்வியும் கலைகளும் செழிக்கச்
செம்மையும் இன்பமும் நாட்டினில் கொழிக்கப்
பார்புகழ் உழவினைப் பணிந்திட என்றே
பண்டைய தமிழர்கள் கண்டதிப் பொங்கல். 1

### வேறு

பொங்குக பொங்கல் பொங்கிட இன்பம்
ஏரைத் தொழுதால் சீரைப் பெறலாம்
என்பதைப் புகட்டும் இங்கிதப் பொங்கல்
நன்னாள் ஆகிய இந்நாள் தொடங்கிக்
கோழை படாத மேழிச் செல்வம்
வேண்டிய மட்டிலும் வீட்டில் நிறைந்தே
இன்பம் குறையா இல்லறம் நடத்தி



மனைவியும் மக்களும் மற்றுள சுற்றமும்
குலவிட உங்கள் குடித்தனம் சிறந்து
காந்தியை எண்ணிக் கடவுளை நம்பிச்
சத்திய சாந்த சன்மார்க்க நெறியில்
பல்லாண்டு வாழ்வீர் பரமன் அருளும். 2

### வேறு

பொங்கி வழிந்திடும் அன்போடு
பொங்கல் திருநாள் கொண்டாடி
திங்கள் மும்மாறி பொழிந்திடவும்
தீமைகள் யாவும் ஒழிந்திடவும்
எங்கும் மாந்தர்கள் எல்லாரும்
ஏதொரு குறையும் இல்லாமல்
இங்கித முற்றிட வேண்டுமென
ஈசன் மலரடி பூண்டிடுவோம். 3

ஏரைத் தொழுதால் சீராகும்
என்கிற அறிவே நேராகும்
பாரில் இதனை மறந்ததனால்
பஞ்சம் என்பது நிறைந்ததுவே.
ஊரும் நாடும் உயிர்வாழ்தல்
உழவன் காக்கிற பயிர்வாழ்வால்
தேரும் படிவரும் ஒருநாளே
தெய்விகப் பொங்கல் திருநாளாம். 4

வேலும் போரும் வெற்றிகளும்
வேறுள எவ்வித பெற்றிகளும்
சீலம் மிக்குள உழவேபோல்
சேமம் தருகிற தொழிலாமோ?
பாலும் நெய்யும் பசுவாலே
பகடுகள் எருதின் இசைவாலே
சாலும் உழவும் சரியானால்
சங்கடப் பஞ்சம் வருமோ தான்? 5

ஏற்றத் தாழ்வுகள் எண்ணாமல்
எவ்விதப் பிசகும் பண்ணாமல்
போற்றும் அன்பே நெறியாகப்
பொதுநல வாழ்வே குறியாகச்
சாற்றும் படிவரும் பொன்னாளே
சமரசப் பொங்கல் நன்னாளாம்
ஆற்றல் பற்பல எய்திடினும்
அறமே எதிலும் செய்திடுவோம். 6

மைந்தரும் உங்கள் மனைவியுடன்
மற்றுள சுற்றம் அனைவருமே
சுந்தரப் பொலிவுடன் களிகொண்டு
சுவைமிகும் பொங்கல் அமுதுண்டு
சிந்தையில் தெய்வம் தங்கிடவும்
சிறப்புடன் மங்களம் பொங்கிடவும்
வந்தனை பொங்கும் மனத்தோடு
வணங்கி உங்களை வாழ்த்துகிறோம். 7

*குறிப்புரை:- இங்கிதம், - கருத்து, இனிமை, குறிப்பு; ஆற்றல் - சக்தி; பொலிவு - அழகிய தோற்றம்; பகடு - யானை, எருமை.*

### *165. உழவுப் பொங்கல்*

பொங்குக பொங்கல் பொங்குகவே
புதுவளம் நிறைந்தறம் தங்குகவே!
எங்கணும் யாவரும் இன்பமுற
ஏர்த்தொழில் ஒன்றே தென்புதரும். 1

உணவுப் பொருள்கள் இல்லாமல்
உயிரோடு இருப்பது செல்லாது;
பணமும் அதுதரும் நலனெல்லாம்
பயிர்கள் விளைப்பதன் பலனேயாம். 2



உழவுத் தொழில்தான் உணவுதரும்
உடையும் அதனால் அணியவரும்
பழகும் மற்றுள தொழில் யாவும்
பயிர்த்தொழில் இன்றேல் விழலாகும். 3

தங்கமும் வெள்ளியும் இருந்தாலும்
தானியம் ஒன்றே விருந்தாகும்
இங்கிதன் உண்மையை உணர்ந்திடுவோம்
ஏர்த்தொழில் மிகுந்திடத் துணிந்திடுவோம். 4

உழவே செல்வம் உண்டுபண்ணும்
உழைப்பே இன்பம் கொண்டுவரும்
உழவைத் தொழுதிட வருநாளே
உற்றஇப் பொங்கல் திருநாளாம். 5

ஏழையும் செல்வரும் இங்கிதமாய்
இசைந்துளம் களித்திடும் பொங்கல்இது
வாழிய பயிர்த்தொழில் வளம்பெருகி
வையகம் முழுவதும் வாழியவே. 6

*குறிப்புரை:- வையகம் - உலகம்; எங்கணும் - எவ்விடத்தும்.*

### *166. சமரசப் பொங்கல்*

மனிதர் யாவரும் ஒரு ஜாதி
மாநிலம் எங்கணும் ஒருநீதி
இனிதிவ் வெண்ணம் செழிந்திடவே
இம்சையும் பொய்யும் ஒழிந்திடவே
தனிவழி அறமுறை தமிழேபோல்
தளர்விலன் சத்திய அமுதூட்டும்
புனிதன்அக் காந்தியின் பொய்யறியாப்
பொக்கைச் சிரிப்புகள் பொங்குதல்போல்
பொங்குக! பொங்கல்! பொங்குகவே!!
புதிதொரு சுவைதரப் பொங்குகவே!

*குறிப்புரை:- தளர்வு - சோர்வு; இம்சை - துன்பம்.*

## *167. பொங்கல் படைப்பு*

முத்தமிழ்ப் பண்பெனும் முதுபெருங் கற்கள்
மூன்றையும் அடுப்பென முன்றிலில் கூட்டி
அந்தமிழ் விளைத்துள அறம்பொருள் இன்பம்
அடங்கிய பானையை அடுப்பினில் ஏற்றி
மெய்த்தவ நெறியெனும் நெருப்பினைப் பொருத்தி
மேவிய துயர்களை விறகென எரித்துச்
சத்திய சாந்தநற் பொங்கலைச் சமைத்துச்
சன்னதி ஆண்டவன் முன்அதைப் படைத்து. 1

தீமைகள் யாவையும் தீர்ந்திட நாட்டில்
திங்கள்மும் மாரிக்குத் திருவருள் கூட்ட
வாய்மையும் தூய்மையும் வளர்ந்திடும் படிக்கோர்
வரந்தர வேண்டுமென் றிறைஞ்சிடு வோமே;
நோய்மையும் பஞ்சமும் நொடியினில் விலகும்
நுண்ணிய நலந்தரும் புண்ணியம் பெருகும்
தாய்மையின் அன்புடன் தழைத்திடும் தருமம்
தமிழ்ப்பெரும் பொங்கலில் தாரணி மகிழும். 2

*குறிப்புரை:- திங்கள் - மாதம்; இறைஞ்சிடுவோம் - வணங்கிடுவோம்.*

## *168. பொங்கல் பிரார்த்தனை*

சக்திதரும் சூரியனைத் தொழுது நின்று
சர்வேசன் திருவருளை மனத்தில் எண்ணிப்
புத்தரிசிப் பொங்கலுண்ட பூரிப் போடும்
புத்தாடை புனைந்தொளிரும் பொலிவி னோடும்
எத்துணையும் எவர்க்கேனும் இடைஞ்ச லின்றி
எவ்வெவரும் அவ்வவர்தம் மனம்போல் வாழ
ஒத்துதவும் சமுதாயம் உலகில் ஓங்கும்
ஒருவரத்தைத் திருவருள்பால் உவக்கக் கேட்போம். 1



பொங்கிவரும் விஞ்ஞானப் புதுமை கண்டு
புத்திகெட்டு மெய்ஞ்ஞானம் போய்விடாமல்
எங்கள்திருத் தமிழ்நாட்டின் தெய்வ பக்தி
என்றென்றும் குன்றாமல் இருக்கு மாறும்
எங்குமிந்த உலகிலுள்ள மக்களெல்லாம்
இன்பமுற அன்புடனே குலவு மாறும்
பொங்கலென்று போற்றுமிந்தப் புனித நாளில்
புண்ணியத்தை நாடுகின்ற எண்ணம் கொள்வோம். 2

மேதினியில் வேற்றுமைகள் இருந்தே தீரும்
மெய்இதனை ஐயமறத் தெளியச் செய்து
சாதிமத வேற்றுமையை மிகைப் படுத்திச்
சண்டைகளை முட்டுவதைத் தவிர்க்கு மாறும்
ஓதிஉணர்ந் தறிவதறிந்த முன்னோர் கண்ட
ஒற்றுமையை வேற்றுமையில் உணரு மாறும்
ஆதிபரம் பொருளிடத்தில் வரங்கள் கேட்போம்
அதுவேநாம் பொங்கலிலே அடையும் நன்மை. 3

*குறிப்புரை:- மேதினியில் - உலகில்; குலவு - கொண்டாடு; சர்வேசன் - முழுமுதற்கடவுள், எங்கும் நிறை இறைவன்.*

## *169. வாழிய பொங்கல்*

பழையன கழியப் புதியன மலியத்
தழைத்துப் பூத்துத் தருமம் கனிந்து
விழவுகள் பாடி விருந்தொடும் உண்டு
முழவொலி மனைதொறும் முழங்கிடும் பொங்கல்! 1

சத்தியம் நிலவச் சாந்தமே குவை
உத்தம போதனை ஒப்பிலாச் சமரசம்
இத்தரை முழுதும் எங்கணும் பரவப்
பத்தியில் பரமனைத் தொழுதிடப் பொங்கல்! 2

யுத்தமே என்னும் ஒருபெரும் பேச்சால்
இத்தினம் எங்கும் யாவரும் ஏங்கிப்
பித்தரே யாகிப் பேதுறும் நிலையைச்
சற்றுநாம் மறக்கச் சாந்தியாம் பொங்கல்! 3

நினைவுகள் சிறந்து நிதிபல நிறைந்து
சினவகை சேர்ந்த சிறுமைகள் தீர்ந்து
மனைதொறும் மனைதொறும் மங்களம் தங்க
அனைவரும் இன்புறும் அன்பே பொங்கல்! 4

ஏழையென்று எவரும் ஏங்குதல் நீங்கி
மேழியின் சிறப்பில் செங்கோல் மின்னும்
வாழ்வினைக் காட்ட வருவதே பொங்கல்
வாழிய பொங்கல்! வாழிய உலகம். 5

## *170. கண்ணன் தந்த தீபாவளி*

தீபாவளிப்பெரிய திருநாள் - நாம்
தெய்வப் பணிபுரிய வருநாள்
பாபாதி தீவினைகள் ஒழியத் - திடம்
பண்ணித் தொலைத்துதலை முழுகித்
தூபாதி கற்பூரம் ஏற்றி - மலர்
தூவித் தோத்திரங்கள் சாற்றி
பாபாவி நரகனை வென்றோன் - கண்ணன்
மலரடி யைத்தொழுது நின்றால். 1

கன்னங் கருநீலக் கண்ணன் - நாம்
காட்சிக் கழகுமிகு வண்ணம்
மின்னும் பல அணிகள் பூண்டு - புவி
மெச்சும் கட்டழகில் நீண்டு
சின்னஞ் சிறியவர்கள் உள்ளம் - அந்தச்
சிங்காரம் கண்டுகளி கொள்ள
முன்னம் நம்மிடத்தில் வருவான் - குறை
முற்றும் நீக்கிநலம் தருவான். 2



புத்தம் புதியஉடை தரித்தே - எழில்
பொங்கும் மலர்மணங்கள் விரித்தே
சித்தம் வியக்கஒளி வீசிப் - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி
மெத்தப் படித்தவரும் கேட்டுப் - பயன்
மேவும் மெய்யறிவு கூட்டும்
தித்திக்கும் கீதங்கள் பாடி - வந்த
தெய்வக் கண்ணனிடம் ஓடி. 3

கண்ணன் அறிவுரைகள் கேட்போம் - ஒருக்
காலும் சோர்ந்திருக்க மாட்டோம்
பண்ணும் எந்தஒரு செயலும் - சுய
பாசம் அற்றிருக்க முயலும்
எண்ணம் மிகத்தெளிவு கொண்டோம் - அவன்
என்றும் பணிபுரியக் கண்டோம்
திண்ணம் கண்ணனுடை உறவால் - நாம்
தீரச் சிறப்புகளைப் பெறுவோம். 4

## *171. தீபாவளி எனும் திருநாள்*

தீபாவளிஎனும் திருநாளே
தெய்வம் அன்பென வருநாளாம்
கோபா வளிகளைக் கொளுத்திடும்நாள்.
கொஞ்சிக் குலவிக் களித்திடும்நாள். 1

தனித்தனி வீட்டின் தரைமெழுகி,
தரித்திரப் பீடையைத் தலைமுழுகி,
மனத்துயர் யாவையும் மறந்திடுவோம்;
மகிழ்வுடன் உள்ளதை விருந்திடுவோம். 2

உதவாப் பழசாம் வழக்கமெல்லாம்
உதறித் தள்ளுதல் ஒழுக்கமெனப்
புதிதாம் ஆடைகள் புனைந்திடுவோம்,
புதுப்புது வழிகளில் நினைந்திடுவோம். 3

கட்சிச் சண்டைகள் பட்டாரைக்
கட்டுக் கட்டாய்ச் சுட்டபேபின்
பட்சம் வந்த மனத்துடனே
பழகுவம் எல்லாம் இனத்துடனும். 4

ஒவ்வொரு வீட்டிலும் பலகாரம்;
ஒருவருக் கொருவர் உபகாரம்;
இவ்வித வாழ்வே தினந்தோறும்
இருந்திட வேண்டிநம் மனம்கோரும் 5

ஈயாப் பத்தரும் ஈந்திடும்நாள்
ஏகிடும் அடிமையும் ஓய்ந்திடும்நாள்
நோயால் நொந்தே இளைத்துவரும்
நோன்பெனக் கொஞ்சம் செழித்திடுவார். 6

'ஐயா பசி'யென் பாரில்லை
'அப்புறம் வா'யென் பாரில்லை
மெய்யே அன்பு மிகுந்திடும் நாள்
வேற்றுமை விட்டு மகிழ்ந்திடும் நாள். 7

மாச்சரி யங்களும் மறைந்திடும்நாள்
மனிதன் இயல்பு சிறந்திடும்நாள்
ஆச்சரி யம்போல் எல்லோரும்
ஆடலும் பாடலும் சல்லாபம். 8

## 172. சுதந்தரத் திருநாள்

இந்திய நாட்டின் சுதந்தரத் திருநாள்
இன்பம் யாவையும் இனிமேல் தரும்நாள்;
செந்தமிழ்த் தாயின் திருப்புகழ் பாடித்
தெய்வம் தொழுவோம் யாவரும்கூடி. 1

அன்னிய ஆசைகள் அனைத்தையும் ஒழித்தோம்;
'அடிமை' என்னும் சொல்லையும் அழித்தோம்;
பொன்னையும் சுகத்தையும் செலவழித் தேனும்
பூரண சுதந்தரம் அடைந்திட வேணும். 2



அன்பின் ஆண்மையும் ஆற்றலும் வளரும்;
அன்னை பாரதத் தாய்மனம் குளிரும்;
துன்பம் யாவையும் தொலைந்திட முடியும்
சோற்றுத் தரித்திர மாவது விடியும். 3

முச்சுடர் ஒளிதரும் நம்கொடி நிழலில்
முற்றிலும் சத்திய சாந்தநல் வழியில்
மெச்சிடும் நன்மைகள் மிகமிகக் கொடுப்போம்;
மேதினி எங்கணும் கொடுங்கோல் தடுப்போம். 4

எல்லா தேசமும் எமக்கினி உறவாம்;
எவரும் செய்திடும் நன்றியை மறவோம்;
நல்லார் யாரையும் நலமுறக் காப்போம்
நலிப்பவர் எவரும் நடுங்கிடப் பார்ப்போம். 5

சுதந்தரம் சுதந்தரம் சுதந்தரம் ஒன்றே
சுகந்தரும் சுகந்தரும் சுகந்தரும் என்றும்;
பதந்தரும் பலந்தரும்; பரமனைக் காணும்
பக்தியென் பவருக்கும் சுதந்தரம் வேணும். 6

## 173. குடியரசுத் திருநாள்

இந்தியத்தாய் குடியரசுத் திருநாள் இந்நாள்
இந்நாட்டின் அயலுறவு சிறப்புற் றோங்கி
வந்திடுமோ எனநடுங்கும் அணுகுண் டுப்போர்
வாராமல் தடுத்துலகை வாழ வைக்கும்
மந்திரமாம் காந்திமகான் மார்க்கம் தன்னை
மற்றெல்லா நாடுகளும் மதிக்கச் செய்யச்
சொந்தமுள்ள நாம் அதற்குத் தொண்டு செய்யத்
துணைபுரியத் திருவருளைத் தொழுவோம் வாரீர். 1

அமிழ்தமெனும் தமிழ்வளர்த்த அறிவிற் கேற்ப
அன்புமுறை தவறாத ஆற்றல் கூட்டித்
தமிழரெனும் தனிப்பெருமை தாங்கி நின்று
தனிமுறையில் செயல்புரியத் தலைப்பட் டாலும்

இமயமுதல் குமரிமுனை இறுதி யாரும்
இந்தியத்தாய் சொந்தமதை இகழ்ந்தி டாமல்
அமைதியுடன் ஒற்றுமையை உறுதி யாக்கும்
அதுதான்நம் குடியரசின் ஆக்கம் காக்கும். 2

சாதிமத பேதமெல்லாம் மறந்து விட்டுச்
சமமாகப் பலதுன்பம் சகித்துக் கொண்ட
சாதனையின் பயனன்றோ இன்று நம்மைச்
சார்ந்திருக்கும் சுதந்தரத்தின் சக்தி யெல்லாம்?
ஆதலினால் வேற்றுமையை வளர்த்தி டாமல்
அன்புருவாம் காந்தி அண்ணல் நமக்குத் தந்த
போதனையைத் தொடர்ந்துசெயல் புரிவோ மானால்
புகழோடு குடியரசில் இன்பம் பொங்கும். 3

ஆண்டானுக் கடிமையெனும் அவலம் நீக்கி
அரசாட்சி நமதுடைமை ஆக்கிக் கொண்டோம்
பூண்டோடு வறுமையறப் பொருளா தாரப்
புதுமுறைகள் திட்டமிட்டுப் பூர்த்தி செய்வோம்
தீண்டாமை ஒன்றைமட்டும் ஒழித்து விட்டால்
சாதிமதக் கொடுமையெல்லாம் தீர்த்த தாகும்;
தூண்டாத மணிவிளக்காய் நமது நாட்டின்
குடியரசில் காந்திஒளி துலங்க வாழ்வோம்! 4

எந்திரத்தால் சந்திரன்போல் பொம்மை செய்தே
எட்டாத பெருவெளியில் சுற்றச் செய்த
விந்தைமிகும் விஞ்ஞான வித்தை தன்னை
விதவிதமாய்ப் பாராட்டி வியந்திட் டாலும்
சிந்தனையில் தெய்வபயம் இருக்க வேண்டும்
செய்வதெல்லாம் கருணையுடன் செய்ய வேண்டும்
மந்திரமாம் காந்திமகான் உபதே சத்தை
மறவாமல் குடியரசில் வளர்க்க வேண்டும். 5



## *174. காந்தி பிறந்த நாள்*

கத்திய வார்தன்னில் - காந்தி
கதைதரும் போர்பந்தர்
புத்திலி பாய் அன்னை - செய்த
புண்ணிய மேஎன்ன
உத்தமன் பிறந்ததினம் - அறிஞர்
உவந்திடும் சிறந்ததினம்
இத்தினம் மகிழ்வோடு - காந்தி
எம்மான் புகழ்பாடு. 1

ஆர்வங் குன்றாமல் - காந்திய
அறவழி நின்றோமேல்
போர்ப்பயம் மறைந்துவிடும் - உலகில்
புலைகொலை குறைந்துவிடும்
பார்தனில் எல்லோரும் - மனிதப்
பண்புள நல்லோராய்ச்
சீர்பெற வாழ்ந்திடலாம் - தெய்வச்
சிறப்புகள் வாழ்ந்திட லாம். 2

### *வேறு*

காந்தி மகானைப் பணிந்திடுவோம்
காட்டிய அகிம்சை அணிந்திடுவோம்
சாந்தியின் இன்பம் நிறைந்திடுவோம்
சண்டைகள் மிகவும் குறைந்திருப்போம்
மாந்தர் பிறப்பின் சிறப்படைவோம்
மதவெறி இனவெறி அறப்பெறுவோம்
தாழ்ந்தவர் யாரையும் தாங்கிடுவோம்
தன்னலக் கொடுமைகள் நீங்கிடுவோம். 3

தன்னுயிர் இழந்திட நேர்ந்திடினும்
தான்பிற உடலொடு சேர்ந்திருக்கும்

இன்னுயிர் நீக்கும் வினைபுரியா
திருப்பவ ரேதாம், மிகப்பெரியார்
பொன்னுரை இதன்படி வாழ்ந்தவனாம்
புண்ணிய மூர்த்திநம் காந்திமகான்
அன்னவன் புகழே பாடிடுவோம்
அஹிம்சா வழியே நாடிடுவோம். 4

ஒன்றாய் நல்லது கொல்லாமை
ஒத்தது பொய்யுரை சொல்லாமை
என்றான் வள்ளுவன் திருக்குறளில்
எம்மான் காந்திதன் உருக்குறளில்
நின்றான் அம்மொழி நிலைநாட்ட
நீங்காப் பெரும்புகழ் மலைகாட்டி
நன்றாய் நாமிதை உணர்ந்துவிடின்
நானிலம் போர்வெறி தணிந்துவிடும். 5

## *175. கம்பன் திருநாள்*

கம்பன் திருநாள் கொண்டாடிக்
கவிதா தேவியின் அருள்கூடி
அன்பின் வாழ்க்கையைக் கடைப்பிடிப்போம்
அனைவரும் இன்புறும் படிநடப்போம். 1

கற்றவர்க் கெல்லாம் பொதுவாகும்
கம்பன் திருநாள் இதுவாகும்
மற்றுள பற்பல நாட்டாரும்
மதித்துளம் மகிழ்ந்திடும் பாட்டாகும். 2

தமிழ்மொழி தனக்கொரு தவச்சிறப்பைத்
தந்தது கம்பனின் கவிச்சிறப்பே
'அமிழ்தம் தமிழ்மொழி' என்பதுவும்
அழியா திருப்பதும் கம்பனதாம். 3



கம்பனை மறந்தால் தமிழ்ஏது?
கவிதை என்பதும் கமழாது!
அம்புவிக் கவிஞருள் அரசாகும்
அவனே தமிழ்மொழிப் பரிசாகும். 4

கற்பனை சிறந்தது கம்பன்சொல்
கலைத்திறம் நிறைந்தது கம்பன்சொல்
அற்புதச் சித்திரம் அவன்பாட்டு
அறிவுக் கினிப்பதிங் கவன்பாட்டு 5

சத்தியம் மிளிர்வது கம்பன்சொல்
சாந்தியைத் தருவது கம்பன்சொல்
நித்தியம் பெற்றதும் அவன்வாக்கு
நிந்தனை அற்றதும் அவன்வாக்கு. 6

இயல்பாம் வழிகளில் கதைபேசி
இசைமிகும் மொழிகளில் கவிவீசி
நயமிகும் நாடகம் நடப்பதுபோல்
நாவலர் வியந்திடத் தொடுப்பவனாம். 7

கலைமொழி நயங்களைக் காட்டிடவும்
கல்வியில் தெளிவினை ஊட்டிடவும்
நிலைதரும் ஊற்றெனத் தமிழ்நாட்டில்
நின்றிடும் கம்பன் அரும்பாட்டு. 8

கன்னித் தமிழெனும் பெருமையெலாம்
கம்பன் கவிதையின் அருமையினால்
இன்னொரு கம்பனும் வருவானோ?
இப்படி யும்கவி தருவானோ! 9

துயரம் நேர்ந்திடில் துணையாகும்
துன்பம் நீந்திடப் புணையாகும்
அயர்வுறும் வேளையில் அலுப்பகற்றும்
அச்சம் நீங்கிட வலுப்படுத்தும் 10

குணங்களில் உயர்ந்திட நலங்கொடுக்கும்
கொடுமையை எதிர்த்திடப் பலங்கொடுக்கும்
வணங்கிய வாயுரை மொழிகூட்டும்
வாழ்க்கையின் பயன்பெற வழிகாட்டும். 11

சாதியை மதங்களை மறந்திடவும்
சமரச உணர்ச்சிகள் நிறைந்திடவும்
நீதியை அறங்கள் நினைப்பூட்ட
நிரந்தரக் களஞ்சியம் அவன்பாட்டு. 12

பண்டிதர் புகழ்ந்திடல் போதாது
பாமரர் மகிழ்ந்திடத் தோதாகப்
பெண்டிரும் பிள்ளையும் அதைப்படித்துப்
பெருமைக ளடைந்திடும் விதம் கொடுப்போம். 13

ஆராய்ச் சிகளால் மயங்காமல்
அவைதரும் சண்டையில் தயங்காமல்
நேராய்க் கம்பனைப் படிப்பவரே
நிச்சயம் கவிரசம் குடிப்பவராம். 14

திருநாள் நட்புடன் நில்லாமல்
தினந்தினம் படித்திட எல்லோரும்
வருநாள் கண்டு களித்திடவே
வாழிய தமிழுக் குழைத்திடுவோம். 15

## 176. கம்பன் விழா

செம்பொருளும் சொற்பெருக்கும் தெளிந்த ஞானம்
தேடுகின்ற இலக்கியமும் செறிந்த தாகும்
நம்பெரிய தமிழ்மொழிக்குப் பெருமை நாட்டி
நானிலத்தில் கவிஞருக்குள் தலைவன் என்றே
அப்புவியின் பலமொழிகள் படித்தா ராய்ந்த
அறிஞர்களில் பெரும்பாலார் ஆமோ திக்கும்
கம்பனுடைத் திருநாளில் கலந்தோர்க் கெல்லாம்
கைகூப்பி வரவேற்போம்; கடவுள் காக்கும்! 1



அன்னியர்கள் தமிழ்மொழியை அறிந்தோர் பார்த்தே
அதிசயத்தில் காசைகொள்ளும் கவியாம் கம்பன்
தன்னையிந்தத் தமிழுலகம் மறக்க லாமோ?
சரியாகப் போற்றாத தவறே போலும்!
என்னவிதம் எங்கிருந்தான் என்றும் கூட
ஏற்பதற்காம் சரித்திரங்கள் ஏனோ காணோம்!
இன்னமும்நாம் இப்படியே இருக்க லாமோ?
இழிவன்றோதமிழ ரெனும் இனத்துக் கெல்லாம். 2

நிதிபடைத்தோர் கலைவளர்க்கும் நெறியைக் காட்டி
நீங்காத புகழினுக்கோர் நிலைய மாகி
மதிபடைத்த புலமையுள்ளோர் எவரும் வாழ்த்த
மங்காத பெருவாழ்வு தமிழுக் கீந்து
துதிபடைத்த ராமகதை தோன்றச் செய்த
சோழவள வெண்ணெய் நல்லூர்ச் சடையன் சேரும்
கதிபடைத்த சொல்வலவன் கம்பன் பேரும்
கடல்கடந்த நாடெல்லாம் பரவக் காணபோம். 3

## 177. வன மகோத்ஸவம்

வனம கோத்ஸவ வைப வத்தினை
வான்ம கிழ்ந்திட வாழ்த்துவோம்
ஜனம கோத்ஸவ மாக வேயிதைத்
தமிழ கத்தினில் எங்கணும்
மனம கோத்ஸவ மங்க ளத்துடன்
மக்கள் யாவரும் செய்திடில்
தினம ஹோத்ஸவ இன்ப மெய்திடத்
திங்கள் மும்மழை பெய்திடும். 1

மரம டர்ந்துள வனமி ருப்பதன்
மகிமை சொல்லவும் கூடுமோ?
வரம டைந்தென வளமை யாவையும்
வலிய நம்மிடை நாடுமே

திறம றிந்திதன் தெய்வ சக்தியைத்
தேசம் முற்றிலும் ஓதினால்
உரம்மி குந்திடும் பயிர்செ ழித்திடும்
உணவி லாக்குறை ஏதினி? 2

கடவுள் ஆணையை மீறு கின்றநம்
கபட நாடக வாழ்வினால்
அடவி தந்திடும் பகைமை முற்றிலும்;
அழிவு செய்துள தாழ்வினால்
கடுமை யாகிய பஞ்சம் மிஞ்சிடக்
காலம் மாறின பருவமும்
மடமை விட்டிடக் கடமை கண்டினி
மரம் வளர்ப்பது கருதுவோம். 3

நிழல்கொ டுத்திடும் மரம னைத்தையும்
விறகெ ரித்துள நிந்தையால்
தழல்பு குந்துநம் சமையல் செய்திடச்
சாண முற்றிலும் வெந்ததால்
தழையி லாமலும் எருவி லாமலும்
தகுதி யற்றுள மண்ணிலே
விழல்மு ளைக்கவும் சார மில்லைபின்
விளைவு எப்படி எண்ணலாம்? 4

வனமி ருந்திடில் மழைபொ ழிந்திடும்
வான நீதியின் சத்தியம்
வனம ழிந்தது மழைகு றைந்தது
வாய்மை கண்டனம் இத்தினம்
மனமு வந்தினி நாட்டி லெங்கணும்
மரம டர்ந்திட செய்குவோம்.
தினமி குந்திடும் தானி யக்குறை
தீர்ந்தி டும்படி உய்குவோம். 5



பசும ரங்களில் தெய்வ முண்டெனப்
பழைய முன்னவர் போற்றினார்
இசைமி குந்திட ஆயுள் நீண்டிட
இன்ப இல்லறம் ஆற்றினார்
வசையொ ழிந்திட நாமும் அப்படி
வனம ரங்களை எண்ணுவோம்
திசைய னைத்திலும் புகழ்ச்சி றந்திடத்
தீர வாழ்க்கையும் பண்ணுவோம். 6

வாழ்க இத்திரு வாரம் முழுவதும்
மரம்வ ளர்ந்திட நட்டவர்
வாழ்க அம்மரம் வேர்வ லுக்கிற
வரையில் நீர்தினம் விட்டவர்
வாழ்க நம்முடை நாட்டி லெங்கணும்
வான ளாவிடும் சோலைகள்
வாழ்க சத்திய சாந்த நல்வழி
வந்த இந்தச் சுதந்தரம். 7

# VII. தீண்டாமை ஒழிப்பு

## *178. ஸ்ரீ சங்கராச்சாரியார் அருளிச்செய்த பஜகோவிந்தம்*

வாழி கோவிந்தன் வாழி
    கோவிந்தன் என்ப தல்லால்
மதிகெட்ட மனமே! வேறு
    வழியில்லை; வாய்மை சொன்னேன்.
ஏழையே! மரணம் எய்தி
    உன்னுயிர் ஏகும் வேளை
ஏதுனைக் காக்கும் அந்த
    கோவிந்தன் சரணம் இன்றேல்
கோழையே! காலன் வந்து
    வாவெனக் கூவும் போது
கோ!என அழுது நொந்தே
    ஆ!என அலறு வாயே!
காளையே! சுற்ற தொன்றும்
    சுவைக்குத வாது கண்டாய்!
காத்திடும் பஜகோ விந்தம்
    கதிதரும் பஜகோ விந்தம். 1

செல்வமே செல்வம் என்னும்
    தீயபேய்த் தோ்தா கத்தை
வெல்வதே வேண்டும்; இன்றேல்
    வேதனை மிகுந்த நோயாம்;
ஒல்வதோர் தொழிலில் சொந்த
    உழைப்பினால் உரிமை யாகும்
நல்லதோர் பொருளே போதும்
    எனுமன நிறைவே நன்று. 2



மாதர்தம் உடலைக் கண்டு
    மதிமோசம் போக வேண்டாம்
ஓதிடும் அழகும் மார்பும்
    ஒய்யார இடையும் எல்லாம்
பேதுறும் தசையே யன்றிப்
    பிறிதொன்றும் இல்லை; இந்தத்
தீதறும் உண்மை ஓர்ந்து
    தீர்மானத் தெளிவு கொள்வாய். 3

பிறந்தன உயிர்களெல்லாம்
    நிச்சயம் பிணமாய்ப் போகும்
உறைந்துதா மரைஇ லைமேல்
    உருளு நீர்த் துளியே போல
நிறைந்துள உலக ஜாலம்
    நிலையற்ற நீர்மைத் தாகும்;
வெறுந்துயர், பற்றும் நோயும்
    விள்ளவன்றி வேறொன் றில்லை. 4

வருமானம் உள்ள மட்டே
    பரிவாரம் வந்து சேரும்
விரிவாகும் க்ஷேம லாப
    விசாரணை வெளிவே ஷம்தான்;
பருமானப் பலமுண் டாகில்
    பந்துபாத் தியமும் உண்டாம்
உருமாறிக் கிழமாய் விட்டால்
    உன்னையார் கேட்பார் பிள்ளை? 5

பேச்செல்லாம் பேசி மிக்க
    பெருமிதம் அடைவ தெல்லாம்
மூச்சுள்ள வரையே; தேகம்
    முடங்கிய பிணமாய் விட்டால்
கூச்சின்றி உன்னை முன்னே
    சுயம்வரம் கொண்ட காதல்
நாச்சியும் அச்சம் கொள்ளாள்
    நாறுடல் அதனைக் கண்டே. 6

விளையாடித் தீரும் வேறு
வினையிலாக் குழந்தைக் காலம்;
வளையாடும் கையார் மையல்
வாலிபப் பருவம் எண்ணும்
திளைவாடித் தீர்ந்த பின்னும்
தீராத சித்தாக் ரந்தம்;
களையாமெய்ப் பொருளை சற்றே
கருதுவார் ஒருவ ரில்லை. 7

மனைவி என்பது யார்? மற்றும்
மக்கள்என் பவர்தாம் யாவர்?
வினைதரும் உலகம் முற்றும்
விசித்திரம்; சொந்தம், பந்தம்
அனையன யாவை? நீதான்
யார்? இங்கே எதனின் வந்தாய்?
இனியும்நீ எங்கே போவாய்?
எண்ணிப்பார் அண்ணே! இன்னே. 8

நல்லவர் தமையே நாடி
நல்லவர் உறவே கொள்வாய்;
அல்லலை வளர்க்கும் பற்றை
அறுத்திட அதுவே மார்க்கம்!
மொல்லையாம் பற்று விட்டால்
மோகமே தீர்ந்து சித்தம்
ஒல்லையில் நிலைத்து வீட்டை
உயிருடன் அடைவாய் நெஞ்சே. 9

நீரற்றுப் போன பின்பு
நீர்நிலை உருவம் நீங்கும்;
வீரற்றுப் போயும் காம
விகாரங்கள் விடாத தேனோ!



சீருற்ற செல்வம் போனால்
சேர்ந்தசுற் றந்தார் எங்கே?
நேர்வுற்ற ஞானம் பெற்றால்
தீர்ந்திடும் உலக மாயை. 10

செருக்கடை யாதே உன்னைச்
சேர்ந்துள சுற்றத் தாரின்
பெருக்கமும் பணமும் தேகப்
பெலனுடன் மேக மெல்லாம்
பொருக்கென மறையும்; வாழ்வு
பொய்மானின் வேட்டை போலும்;
சுருக்கென மடநெஞ் சேநீ
மெய்ஞ்ஞான மார்க்கம் சூழ்வாய். 11

காலையும் சந்தி யென்றும்
கடும்பகல் உச்சி யென்றும்
மாலையும் மறைதல் என்றும்
மதிமீனின் இரவாம் என்றும்
கோலமாம் கோடை என்றும்
குளிர்என்றும் கால தேவி
வேலையால் ஆயுள் தேய்ந்தும்
தணிந்திலை ஆசை வேட்கை. 12

புத்திகெட்ட மூடா! உன்றன்
புகலிடம் நாதன் அன்றோ!
சொத்துசுகம் மனைவி சாரம்
சூழ்ந்திட இதுவோ காலம்?
செத்துவிடும் பொழுதி லேனும்
அறத்தவர் சேர்க்கை கொண்டால்
தத்துகடல் பிறவி நீந்தத்
தக்கதோர் நாவாய் ஆமே! 13

மயிர்ச்சடை முடியும் முற்றும்
மழித்ததாம் தலையும் மற்றும்
பயிற்சிகொள் காவி ஆடை
பலவேறு வேஷ மெல்லாம்
வயிற்றினை வளர்ப்ப தற்கே
வழியெனக் கண்டும் ஞான
முயற்சிமேற் கொள்ள மாட்டாய்
முழுமட மதியே! நீதான். 14

நரம்பெலாம் தளர்ந்து நைந்தும்
மயிரெல்லாம் நரைத்த பின்னும்
குரங்குபோல் முகமும் பற்கள்
குடிபோன மடிவா யோடும்
கரங்களால் கோலை ஊன்றிக்
கால்கள் தள் ளாடினாலும்
நிரம்பிய பழைய ஆசை
ஆணிவேர் நெகிழ வில்லை. 15

குளிர்தனைப் பொறுக்க மாட்டான்
கூறுடைக் கிழவன் நொந்து
குறுகியே இரவு முற்றும்
மறுகியே குளிரைத் தாங்க,
தளர்வுடன் மோவாய்க் கட்டை
தன்முழங் காலில் முட்ட,
தரைதனில் சுருண்டு தூங்கித்
தள்ளிய இரவு நீங்க,
வெளியிடை வெயிலிற் காய்ந்து
விருப்புடன் கால்கள் நீட்டி
விறகிடைத் தீயிற் காய்ந்து,
விருந்தெனப் பிச்சைச் சோற்றை
அளிமர நிழலில் உண்பான்;
அம்மரத் தடியே வாசம்;
அந்நிலை அவனும் கூட
வீட்டின் ஆசா பாசம். 16



கங்கையில் குளித்திட் டாலும்,
கதிபெற விரும்பிச் சேது
கடலிடை முழுகி னாலும்,
கருதிய படிக்கு வேறு
எங்குப்போய் எந்த நோன்பை
எப்படி தோற்றிட் டாலும்
என்னென்ன தாளம் ஈந்து
புண்ணியம் எய்தி னாலும்
துங்கமாம் ஞானம் இன்றி
விடுதலை வழிதோன் றாது;
தூய்மையாம் பத்தி ஒன்றே
துலங்கிடும் ஞான மூட்டும்
இங்கிதை நன்கு தேர்வாய்;
இசைந்திடும் மார்க்க மெல்லாம்
இவ்வொன்றை அன்றி வேறு,
எவ்வொன்றும் சொன்ன தில்லை. 17

ஆசையாம் ராக மோகம்
அழித்தலே சிறந்த போகம்;
அமளிபுல் தரை; மெய்போர்த்த
ஆவது மான்தோல் கோயில்
மாசிலா மண்ட பம்தான்
மனக்குறை மாற்றும் இல்லம்
மாயத்தைத் தீர்க்க அங்கோர்
மரத்தடி விடுதி யாகும்;
தேசுலாம் செல்வத் தாலும்
தேடரும் சுகம்யா தென்றால்
தீர்க்கமாய் 'வேண்டாம்' என்னும்
திடமனம்; மகனே! தேர்வாய்
நீசமாம் ராகம் என்னும்
மனவிகா ரத்தை நீக்கின்
நிலவிடும் சுகத்தின் இன்பம்
நிகரற்ற இன்ப மாகும். 18

யோகத்தில் இருந்திட் டாலும்,
ஒருசுக உலக இன்ப
போகத்தில் இருந்திட் டாலும்,
கூட்டத்தில் உறைந்திட் டாலும்
ஏகத்தில் தனிய னாக
இருந்திடும் போதும் எங்கும்
எப்பொருள் எதற்கும் எட்டா
மெய்ப்பொருள் என்ப தோர்ந்து
தேகத்தைக் கடந்த ஞானத்
தெளிவுகண் டதிலே நின்று
நினைத்திடும் மகிழ்ச்சி ஒன்றே
தெவிட்டாத மகிழ்ச்சி யென்ற
பாகத்தை அறிந்து நெஞ்சே!
பாடுக பஜகோ விந்தம்!
பயனுற பஜகோ விந்தம்
பற்றுக பஜகோ விந்தம்! 19

கண்ணனின் கீதைச் சாரம்
கங்கைநீர்த் துளியோ டுண்டுபாய்
எண்ணிலோர் கணப்போ தேனும்
அப்பனைத் துதிப்பாய் என்னில்
திண்ணிய எருமை ஏறித்
திசைவரும் காலன் உன்னைப்
பண்ணுவ தொன்று மில்லை
பகர்ந்திடப் பேச்சு மில்லை. 20

மறுபடி ஜனனம் கொண்டு
மறுபடி மரணம் கண்டு
மறுதர மாறி மாறி
மாதாவின் வயிற்றில் தோன்றித்
துறுதர வளர்தல் துக்கம்;
துயர்கடல் கடக்கச் செய்யும்
திறமுறத் திருமா லேநீ
திருவருள் புரிய வேண்டும். 21



இவன்உடை குப்பைக் கந்தல்
துணியன்றி இல்லை வேறு;
பவவினை நன்மை தீமை
பற்றற விட்ட பண்பன்;
கவல்அறக் கண்ண னோடு
கலந்துநிற் கின்ற சித்தம்,
அவனுளம் குழந்தை உள்ளம்
ஆனந்தம் வெறியாட் டத்தான். 22

அன்னையார்? அப்ப னும்யார்?
அவைவிட்டு நீதான் யாவன்?
என்னும்ஈ தெல்லாம் எண்ணி
எந்தநாள் சிந்தை செய்வாய்?
மன்னிய பொருள்ஒன் றில்லா
உலகினை மகனே! விட்டுத்
துன்னிய கனவின் துன்பம்
துடைத்தெழுந்(து) அறிவைத் தேடு. 23

என்மேல்உன் கோபம் வீணாம்;
இகழ்வதேன் தன்னைத் தானே?
எவ்வுயிர் எதுவும் ஈசன்
கோயிலாம் என்ப தோர்வாய்
என்மேனி மூச்சும் நான்;
எதிராம்உன் உயிரே ஆகி
எல்லாம்ஓர் உயிராய் நிற்கும்
இறைவனே உறைவான் உன்னுள்.
பின்னேஏன்? நீயும் நானும்
பிரிந்திட முடியா ஒன்றே;
பேதமாம் மருளை நீக்கிப்
பிறிதுள உயிரில் எல்லாம்
அன்னானே இருக்கும் உண்மை
அண்ணே! நீ அறிந்து விட்டால்
அந்நாளே அப்போ தங்கே
அஞ்ஞானம் அற்றுப் போகும். 24

பகையென்றும் நட்பாம் என்றும்
பார்க்காதே; மகனே! யாதும்
மிகைசெய்யும் மோகங் கொள்ளேல்;
சிவனடி விரைவின் மேவத்
தகையென்றும் சேர்க்க வேண்டாம்.
தள்ளென்றும் விலக்க வேண்டாம்
நிகரென்று யாவர் மாட்டும்
ஒன்றேபோல் நிற்க வேண்டும். 25

க்ஷேமமே உனக்கு வேண்டின்
சேர்ந்தஉட் பகைவ ரான
காமமே க்ரோத லோப
மோகாதி கடிந்து நீக்கி
நேமமாய் உள்ளே நோக்கி,
'நான்' எது? நினைத்துப் பார்ப்பாய்
பூமியே நரகம் ஆன்மப்
பொருள்பெறா மடையர் வாழ்க்கை. 26

பாடுவாய் கீதை யோடு
பரமன்ஆ யிரநா மங்கள்
தேடுவாய் இடைய றாமல்
ஈசனார் இருக்கை நேர;
கூடுவாய் நல்லோர் மாட்டும்
குலையாத நிலையில் நிற்க
வாடுவோர் வறியார்க் கீய
வரும்எனில் செல்வம் நன்றே. 27

தொடங்கலில் சுகமாய்த் தோன்றும்
தீநெறிச் சுகபோ கங்கள்
அடங்கலும் பின்னால் துன்பம்;
ஆறாத துயரம் சோகம்;
ஒடுங்கிஇத் தேகம் சாகும்
என்பதை உணர்ந்து நெஞ்சம்



நடுங்கியும் பாவச் செய்கை
நம்மைவிட் டகலா தேனோ? 28

நன்றிது தேர்வாய் நெஞ்சே!
நலமெதும் பணத்தில் இல்லை;
ஒன்றிது சத்யம் இன்பம்
ஒருதுளி பணத்தில் இல்லை;
தன்றுணை மகனைக் கூடக்
கள்ளனாய்த் தனவான் அஞ்சும்
என்றிடும் இயல்பே எந்த
ஊரிலும்; ஐயம் இல்லை. 29

மெய்ப்பொருள் யாது? மாயப்
பொய்ப்பொருள் தானும் யாது?
மேதுறப் பிரித்தே, ஓர்ந்து
மீதுறும் அமைதி மேவி,
செப்பிய தியானத் தோடு
ஜெபமுறை ப்ராணா யாமம்
செய்துபின் சித்தம் ஓய்ந்து,
மெய்ப்பொருள் அதனைச் சேரப்
பைப்பயப் பயின்றுவந்த
பலத்துடன் புலன்க ளென்ற
பயங்கர மூர்க்கர் உன்னைப்
பணிந்திட அடக்கி ஆள்வாய்;
கைப்பொருள் காப்ப தேபோல்
மனமெனும் கோயில் தன்னைக்
காப்பதில் கவனம் வைப்பாய்;
மிகமிகக் கவனம் வேண்டும். 30

குருவுடைக் கமலத் தாளில்
குறையாத பக்தி பூண்டால்
துருசிறைப் பிறவி நீங்கித்
துரிதமாய் மீள்வாய் திண்ணம்

உருபுலன் மனஒ ழுங்கால்
உன்னுளே உலகாள் தேவன்
வரும்வரும் பஜகோ விந்தம்;
வலியவே பஜகோ விந்தம். 31

குறிப்புரை:- துரு - உபாயம், களிம்பு; துரிதமாய் - விரைவாய்; மூர்க்கர் - கீழ்மக்கள், இழிஞர்; பேதம் - வேறுபாடு; மேது - அறிவு; பகர்ந்திட - சொல்ல.

## *179. ஸ்ரீ பகவத் கீதை : ஸாங்கிய யோகம் இரண்டாம் அத்தியாயம்*

**அர்ச்சுனன் கேட்கிறான் :**

கோவா விளங்கச் சொல்வாய்
கெட்டியாம் அறிவு பெற்றோன்
பேசுமா றெவ்வா(று) அன்னான்
பிறரிடம் என்ன சொல்வான்?
ஆசிலா அவனுக் குள்ளே
அடையாளம் யாது? அந்தத்
தேசுளான் எதனைச் செய்வான்?
தேர்ந்திடும் பலன்தான் என்ன? 1

**ஸ்ரீபகவான் சொல்லுகிறார் :**

பார்த்த! கேள் சொல்லு கின்றான்,
பலமுள்ள அறிஞன் தன்மை;
ஆர்த்தெழு மனத்தில் தோன்றும்
ஆசைகள் அனைத்தும் நீக்கித்
தீர்த்தபின் ஆத்மா தோன்றும்
தெரிந்துளே மகிழ்வா னாயின்
நீத்தவன் அவனே என்ப
நிச்சய புத்தி பெற்றோன். 2



துன்பங்கள் வந்திட் டாலும்
துணுக்குற மாட்டான்; மற்றும்
இன்பங்கள் எய்தி னாலும்
இச்சித்து மயங்க மாட்டான்;
பின்பவன் ஆசை, அச்சம்
பிணைந்துள்ள சினமும் நீங்கும்;
தென்புள்ள முனிவ னாகித்
திடமுற்ற அறிஞன் ஆவான். 3

நல்லது வந்த போதும்
நகைதரும் மகிழ்ச்சி கொள்வான்;
அல்லது கெடுதி வந்தால்
அருவருப் படைய மாட்டான்;
தொல்லைய விருப்பி னோடு
வெறுப்பையும் துறந்தோன் என்னும்
வல்லவன் அவனே யாகும்
வலிவுள்ள அறிவு வந்தோன். 4

தலைஒன்று, கால்கள் நான்கு,
ஐந்தையும் தனக்குள் ளேயே
நிலைபெற இழுத்துக் கொள்ளும்
ஆமைபோல் நினைத்த வாறே
அலைதரும் புலன்கள் ஐந்தும்
தன்னுளே அடக்கி ஆளும்
கலைதெரிந் தவனே யாகும்
கலங்கிடா அறிவு கண்டோன். 5

தம்மிடம் மோகம் கொள்ளா
ஜீவரை விட்டுத் தாமே
வெம்மைய விஷயம் எல்லாம்
விலகிடும் எனினும் முன்னே

அம்மனம் சுவைத்த இன்ப
ஆசையின் சபலம் தங்கும்;
மெய்மையன் பரமாத் மாவை
மேவினால் அதுவும் நீங்கும். 6

குந்தியின் மகனே! கேளாய்;
குறைவற முயலும் யோக
சிந்தனை யுடைய நல்ல
தவசியின் திடத்தைக் கூட
இந்திரி யங்கள் வேகம்
தம்முடன் இழுத்துச் செல்லும்;
நிந்தனை சேரப் புத்தி
நிலைதடு மாற நேரும் 7

அப்படிப் பட்ட அந்தப்
பொறிகளை அடக்கி வைத்துத்
தப்பற யோகம் தன்னில்
தன்மனம் ஊன்றி நிற்பாய்.
எம்பொருள் எதையும் விட்டிங்
கென்னையே பரனாய்க் கொண்டு
வெப்புறும் புலனை வென்றோன்
மேவுவன் நிலைத்த ஞானம். 8

மனிதர்கள் விஷயம் தம்மை
மனத்தினில் மருவும் போது
பனிதரும் ஆசை தோன்றிப்
பற்றுகள் பற்றிக் கொள்ளும்.
வினைதரும் பற்றுண் டாகி
விளைத்திடும் மோகந்தானே.
சிவமெனும் தீமை தோன்றிச்
சிந்தனை கெட்டுப் போகும். 9



சினமது வந்த பின்னர்ச்
சிந்தனை மயக்கம் கொள்ளும்;
மனமது மயங்கும் போதில்
எண்ணத்தில் மாசுண் டாகும்;
நினைவது மாசு பட்டால்
நிச்சயம் புத்தி நாசம்;
அனையதாய் அறிவு கெட்டால்
அதன்பின்பு அழிவே திண்ணம். 10

அருப்புடைப் புலன்கள் தம்மை
அடக்கிய அறிஞன் என்போன்
இருப்புள உலகத் தோடே
இணங்கிஊ டாடினாலும்
விருப்பொடு வெறுப்பு மின்றி
விஷயங்கள் நுகர்வோ னாகத்
திரிப்பிலன் ஆகி உள்ளத்
தெளிவுடன் அமைதி சேர்வான். 11

தெளிவுடன் அமைதி சேர்ந்த
சித்தத்தில் ஒளிஉண் டாகும்
ஒளிபெறும் போது புத்தி
விரைவினில் உறுதி கொள்ளும்;
அளிதரும் சாந்தி பெற்ற
அறிவுதான் நிலைப்ப தாகும்.
இளிதரும் துன்பம் என்ப
திவனுக்கிங் இல்லை யாகும். 12

யோகமில் லாத பேர்க்கே
உறுதியாம் புத்தி யில்லை;
ஆகவே அவர்கள் ஆத்ம
சிந்தனை அடைய மாட்டார்.

சேகெனும் அந்த ஆத்ம
சிந்தனை இல்லை யானால்
பாகெனும் சாந்தம் இல்லை;
பகர்ந்திட இன்பம் ஏது? 13

இந்திரி யத்தின் வேக
இழுப்பினில் சிக்கிக் கொண்டு
சிந்தனை விஷயத் தோடு
பின்பற்றிச் செல்லு மாயின்
அந்தரக் கடலில் காற்றில்
அலைபடும் படகே போல
மைந்தரின் அறிவு மங்கி
மலைத்திடும் ஆசை மோத. 14

ஆதலால் வலிய தோளாய்!
அத்தகை விஷயம் தம்மைக்
காதலால் தொடரா வண்ணம்
பொறிகளைக் கட்டிக் காத்து
வாதனைக் கிடமில் லாமல்
வசமாக்கி வைக்கத் தக்க
சாதனை உடையோன் புத்தி
சலனமில் லாத தாகும். 15

மற்றுள உயிர்கள் தூங்கும்
மடமையின் இரவே யாகும்.
சுற்றுள யோகி ஞானக்
கண்ணுறங் காத நேரம்;
உற்றுள உலகத் தோர்கள்
உழல்கின்ற பகற்கா லத்தை
நற்றவ யோகி சாந்த
நள்ளிர வாகக் கொள்வான். 16



ஆறுகள் பாய்ந்து தண்ணீர்
அடிக்கடிப் புகுந்திட்டாலும்
மாறுகொள் ளாது நிற்கும்
மாபெரும் கடலே போல
வீறுகொள் காமம் பாய்ந்தும்
விருப்புறா நிலையே சாந்தி;
சாறுற விருப்ப முற்றோன்
காந்தியை அடைய மாட்டான். 17

இச்சையை ஒழித்தே எல்லா
இன்பமும் துறந்தோ னாகி
எச்சரிப் போடு காத்திங்
கிடைதடு மாறி டாமல்
நச்சிடும் மமதைக் கூட்டும்
'நான்என' தென்ப தற்றோன்
நிச்சயம் பரம சாந்த
நிலையினை அடைந்தோன் ஆவான். 18

அந்நிலை அதுவே ப்ரம்ம
ஆனந்த நிலைமை யாகும்;
இந்நிலை பெற்றோன் பின்னர்
எதிலுமே மயங்க மாட்டான்;
பொய்ந்நிலை யான தேகம்
போய்விடும் போது கூடச்
செந்நிலை மாறி டாமல்
முத்தியைச் சேர்வான் திண்ணம். 19

குறிப்புரை:- இச்சை - விருப்பம்; திண்ணம் - உறுதி; முத்தி - மோட்சம்; தேகம் - உடல்.

## 180. வாக்குமூலம்

**(மகாத்மா காந்தி, விசாரணையின்போது நீதி மன்றத்தில் கூறியதன் சாரம்)**

'ஆங்கில அரசியல் அதுமிக நல்லது
ஈங்கற் கொன்றும் இணையிலை'யென்றே
எண்ணியே இருந்த என்மன முடைந்து
மண்ணிலே அதுமிக மயக்குடைத் தென்று
கண்ணிய முடையோர் கலந்திடார் அதிலெனத்

திண்ணமாய் நம்பித் திரும்பிய காரணம்
ஈங்குள யாவரும் இந்திய ரனைவரும்
ஆங்கில மக்களும் அரசியல் அதிபதி
தாங்களும் அறியச் சத்தியம் தெரிய
ஓங்கிய கடமையில் உரைத்திட நின்றேன்.

ஆதிநாள் தென்னாப் பிரிக்கா தன்னில்
நீதியும் எங்கள் நிலைமையும் கண்டேன்
இந்திய னாகவே இருந்தத னாலே
சொந்தமென் னுரிமை சொல்லுதற் கொன்றும்
இந்தமா உலகில் எமக்கிலை யென்பதை.

அங்கே முதலில் அறிந்திட லானேன்
என்கிற போதும் ஏகாதி பத்யம்
போய்விடும் போலப் போரில் எதிர்த்த
போயர் சமரிலும் ஜுலுவர் போரிலும்
அந்தநா டாளும் ஆங்கிலே யருக்கே.

என்னா லான உதவிகள் புரிந்தேன்
சொற்பொரு ளுடலும் சோர்விலா துதவி
பற்பல விதமாய்ப் பட்டமும் பரிசும்
ஏட்டினில் கூட என்னைப் புகழ்ந்து
காட்டியே எழுதும் கனதையும் பெற்றேன்



ஜெர்மனி சண்டை செய்திடும் போதும்
தர்மம் இதுவெனத் தளரா துழைத்தேன்.
ஆனஎன் தேகம் அசதியுற் றிருந்தும்
சேனையும் பணமும் சேர்த்துக் கொடுத்தேன்
சண்டையின் பின்பு தருமம் தழைக்கும்.

அண்டிய எங்கள் ஆசிய நாடும்
மாநிலத் துள்ள மற்றநா டுகளெனத்
தானிமிர்ந் துயரத் தயவுசெய் வாரென
நம்பியே நானும் நாளும் உழைத்து
வெம்பினேன் எண்ணமும் வீணாய்ப் போனதே!

அடிமேல் அடியென அஞ்சியே பதைத்திட
இடிமேல் இடிவிழ இற்றது நெஞ்சமும்
முதலடி 'ரௌலட்' சட்ட மூலமாய்
முதுகினில் விழுந்தது சுதந்தரம் முறியப்
பதைத்துநா னெழுந்து பலவிதத் தாலும்.

அதைத்தடுப் பதற்கே அலைந்திடும் நாளில்
தயங்கிய என்மனம் தைரிய மடையுமுன்
பயங்கர மாகிய பஞ்சாப் படுகொலை!
கூர்மையாம் இடியது மானமுங் குறைய
மார்பினில் விழவே மயங்கினன் ஐயோ!

இந்திய முசல்மான் மக்களுக் கென்று
மந்திரி யுரைத்த உறுதியை மறந்தும்
அன்னவர் குருவின் ஆதி பீடமாம்
மன்னிய கிலாபாத் மதவிஷ யத்திலும்
சொன்னதம் வாக்கினைச் சோரவிட் டார்கள்.

எண்ணமும் இல்லை யென்பதை யுணர்ந்தேன்
இத்தனைக் கொடுமைகள் இழைத்தனர் தெரிந்தும்
சித்தமும் அவர்க்குச் சீக்கிரம் திரும்புமென்
றாசையே கொண்டு அடக்கினேன் துக்கமே.
ஏசிய என்னை எதிர்த்தவ ராகி

எச்சரித் திட்ட என்னுடைய நண்பர்கள்
உச்சரித் திட்ட உரைகளை விடுத்தே
இந்தியர் குறைகளை எடுத்துரைத் திடவென
வந்திடும் பெரிய வாக்குடை காங்கிரசில்
அத்தினம் நானும் அமிர்த சரசினில்

ஒத்துழைப் பதையே உறுதியாய்க் கொண்டு
தாங்கியே நின்றேன் தருமந்தானென
ஏங்கினேன் ஐயோ ஏமாந் தவனாய்!
மகம்மதி யர்க்குரை வார்த்தையும் பொய்த்தது.
தருமெனப் பஞ்சாப் தருக ணாளரை.

அடிப்பது போலும் அழுவது போலும்
நடிப்பினைச் செய்து ஞாயமும் மழுப்பித்
தீங்கிழைத் தவர்க்கே உதவிசம் பளமும்
பாங்குடன் கொடுத்துப் பரிசுகள் அளித்தார்.
இதையெலாங் கண்டபின் இந்தியர்க் களித்த

உதவாக் கரையாம் சீர்திருத் தங்களும்
என்னுடை நாடு இன்னமுங் குறைந்து
குன்றிட வென்றே கொடுத்தனர் என்று
கண்டனன் நானும் கருத்திழந் தவனாய்ப்
பண்டைய இந்தப் பாரத நாட்டிடம்.

அரசியல் செய்பவர்க் கன்பிலை யென்றும்
உரிமையெம் பணத்தை உறிஞ்சிட வென்றே
அறிந்திட நின்றேன் ஆங்கில ஆட்சியில்
சிறந்தஎன் நேரம் சீர்குலைந் ததுவே!
அன்றியும் இந்த ஆட்சியின் முன்னால்.

மாசிலா அவனுடைச் சன்னதி மன்றினில்
ஆங்கில தேசமும் அதனுடன் எண்ணிய
பாங்கின ராகிய இந்தியர் பலரும்
உத்தரம் சொல்ல ஒதுங்கிடும் காலம்
சத்தியம் ஒருநாள் வந்திடும் சத்தியம்.



பற்பல விதமாய்ப் பார்த்துப் பார்த்தே
அற்புத உண்மையை அறிந்தனன் தானும்
அறிந்தோ அன்றோ அன்னியர் தமக்கே
பரிந்தே நிற்கும் பாருமிவ் வாட்சியை
நல்லதே என்று நம்பின ராகி.

நல்லதோர் துரைகளும் நாட்டினர் பலரும்
மயங்கியே நிற்கும் மகிமையே மகிமை!
முயங்கியே அவர்கள் செய்திடும் முறையில்
ஆண்மையை இழந்திங் கழுந்திடும் தேசம்
பான்மையை உணரார் பாவமும் அறியார்.

ஆதலா லிந்த அரசியல் மாறத்
தீதிலா வழியில் திரும்பினேன் உழைக்க,
அரசியல் செலுத்தும் அதிகா ரிகளாம்
ஒருவ ரிடத்தும் நான் உள்ளம் கசந்திலன்
மன்னவ னிடத்துள மதிப்பிலும் குறையேன்.

என்னினும் இந்த இயல்பிலா முறைமை
இதுவரை கண்ட எல்லா முறையிலும்
இதுமிகக் கெடுதிகள் இழைத்துள தென்று
நம்பியே அதனுடன் நான்பிணக் குற்றென்
அன்பு காடுவதே அக்ரம மென்றேன்.

இந்தியா விற்கும் இங்கிலாந் திற்கும்
சந்ததம் நன்மையை நாடியே நானும்
ஒத்துழை யாமையே உயர்ந்த வழியென
ஒன்றிய சுகங்கள் உயர்ந்தஇந் நாட்டில்
மனை தொறும் இருந்து மானம் காத்ததாம்.

நினைவரி தாகிய ராட்டினத் தொழிலை
அழித்தனர் முற்றும் அறிந்தே யென்றிங்
கெழுதினார் தெரிந்த இங்கிலீஷ் காரரே.
காரண மிதமால் கணக்கிலா ஜனங்கள்
சோறுண வழியும் துணியுமில் லாமல்.

நடைப்பிணம் போல நாள்கழிப் பதனைத்
தடைசொல யார்க்கும் தைரியம் வருமோ?
பட்டணக் கரையில் பகட்டியே யலைந்து
சட்டவட் டம்பல ஜம்பமாய்ப் பேசி
வீடுகள் கட்டியே விளக்குகள் ஏற்றிப்

பாடுப டாமலே பசப்பிய வாழ்த்து
நாட்டுப் புறங்களில் நலிந்திடும் ஏழைகள்
பாட்டைப் பிடுங்கியோ பிறருடன் கூடிப்
பங்குகொண் டுண்ணும் பாவமாம் வாழ்க்கையைத்
தகர்த்திட எண்ணார் தரகராய் வாழ்வார்.

ஏழையின் பணத்தை எளிதினிற் பறிக்கவே
ஆளுமிந் நாட்டின் ஆட்சியின் முறைமை
உதவியாய் நிற்பதென் றுணரார் அவரும்
உதவியாய் நிற்பதால் உண்மையை அறியார்.
வித்தைகள் ஜாலமும் வேணது செய்தே.

எத்தனை கணக்குகள் எடுத்துரைத் தாலும்
உண்மையாம் இதனை ஒளித்திட முடியுமோ?
திண்மையாய் நானும் செப்புவ துண்டாம்.
உலகக் கதைகளில் உவமையொன் றில்லாப்
பலமிகு மிகப்பெரும் பாவத் திற்கே.

ஈசனென் றொருவன் இருப்பதும் உண்மையேல்
இத்தரை யெல்லாம் இயம்பினேன் அறிய,
கடமையை யுணரும் ஒவ்வொரு குடியும்
திடமுடன் கொண்டு செய்திட வென்றும்
சட்டப் படிக்குத் தவறெனத் தெரிந்தும்

திட்டமாய் நானும் தெரிந்தே செய்தேன்
ஆகையால் துரையே! அறைகுவன் முடிவாய்
ஆகிய இந்த அரசியல் முறைமை
சரிவல வென்றும் சத்தியத் தில்நான்
நிரப ராதியே என்பதும் நினைத்தால்



ஒருவழி ஒன்றே உங்களுக் குண்டு
மருமிகும் இந்த மார்க்கத் திருப்பது
சாலவும் தவறெனத் தகுதியி லுணர்ந்தால்
வேலையை விட்டு விலங்கிடல் வேண்டும்.
அன்றேல் இந்த அரசியல் முறைமை

நன்றே நானும் நாட்டிற் கிடைஞ்சல்
செய்தவ னென்றே தெளிந்திடு வீரேல்
நொய்தில் விடாமல் நூலில் இதற்குள
தண்டனை முழுவதும் தந்திடல் வேணும்
கொண்டஇந் நாட்டின் குறைதவிர்ந் திடவே.

## *181. நாட்டுக் கும்மி*

கும்மியடி பெண்கள் கும்மியடி யுங்கள்
கொத்துச் சரப்பளி சத்தமிட
நம்மையெ லாம்பெற்ற இந்திய நாட்டின்
நன்மையைக் கோரி யடியுங்கடி! 1

### கடவுள் வணக்கம்

புத்தனென் றும்மஹ மத்தனென் றும்ஏசு
நாதனென் றும்மது சூதனென்றும்
நித்த முதித்தருள் நீதி யளித்திடும்
நிர்மல ஜோதியைப் போற்றுங்கடி! 2

### பிரமன் துதி

நீதி நிலைக்க நினைந்தவ னாம்அருள்
ஜோதி யுருக்கொண்ட மேனிய னாம்
ஆதி யறத்தை அளித்திடு வான்எங்கள்
அரவிந்த நாதனைப் போற்றுங்கடி. 3

## சிவபிரான் துதி

ஆலமுண் டாலும் அசையா நான்பர
காலன் அடிகுண சீலனடி
பாலை முனிந்த பணிமொழி யாள்பதி
பாலகங் காதரன் பாடுங்கடி. 4

## கோபாலன் துதி

தீதுசெய் வேந்தரைச் சீர்திருத் தம்செய்யத்
தூதுந டத்திடும் தூயனடி
கோதில் கணத்தவன் கோகுலத் தில்வந்த
கோபால கிருஷ்ணனைப் பாடுங்கடி. 5

## வழிபடு கந்தன் துதி

கந்தம லரொரு மேலவர்க்கும் ஞானக்
கைப்பலம் காட்டிய கந்தனடி
கந்தம ணக்கின்ற ஜோதிய டிபுகழ்
காந்திய டிவெகு சாந்தனடி. 6

## தற்கால நிலைமை

கிட்டுங்க டிமலர் கொட்டுங்க டிகையைத்
தட்டுங்கடி கண்ணீர் சொட்டுங்கடி
மட்டில் புகழ்கொண்ட இந்திய தேவியின்
மாட்சிமை கெட்டதைக் கேளுங்கடி! 7

கெட்டோம டிகுடி கெட்டோம டிநாம்
பட்டோம டிவெகு கஷ்டமடி
முட்டத் தரித்திரம் கிட்டி முறைக்குது
மூதேவி நம்மை முறைமை கொண்டாள். 8

கஞ்சியற் றோம்பழங் கந்தையற் றோம்குல
வஞ்சிய ரேஎன்ன வஞ்சமடி
கெஞ்சுகின் றோம்மிக அஞ்சுகின் றோம்என்ன
காலம டிவந்த கோலமடி. 9



மானமி ழந்தும தியிழந் துபுகழ்
தானமி ழந்துத வமிழந்து
ஞானமி ழந்துந லமிழந்து நாமும்
போன கதியினைப் பாருங்கடி! 10

காசு பணத்தைக்கை விட்டா லுங்கதிர்
வீசும் புகழை விடலாமோ?
வீசும் புகழையும் விட்டுவிட் டோம்சற்றும்
வெட்கமு மின்றி வெளியில் வந்தோம். 11

நல்ல குடியிற் பிறந்தோமடி நாமும்!
நல்ல நிலையி ருந்தோமடி
தொல்லைப் பிறப்பும் புகழும் மறந்துநாம்
தொண்டுசெய் தொண்டரின் தொண்டரானோம் 12

பேரும் புகழும் பெருமையுங் கொண்டவர்
போரின் போரின் போரடி
சீரும் சிறப்பையும் விற்றுவிட்டுநாமும்
சின்னத் தனத்தினைத் தேடிக்கொண்டோம். 13

உத்தம ஜாதியின் மனிதர டிநாமும்
உத்தம மான குலத்தரடி!
பத்தினி ஜாதியின் பாவையே நாமிப்போ
பஞ்சப் பனாதிக ளானோமடி! 14

வீரர் குடித்தன வீரர டிநாமும்
வீரருள் வீரரின் போரடி!
சூரர் குடித்தனச் சூரர டியிப்போ
சோற்றுக்கும் நீருக்கும் சோருதடி! 15

வேந்தர் குடிவந்த மாந்தர டிவெகு
வெற்றி யடிநாம் பெற்றதடி!
சோர்ந்து சுழன்று சுழித்துத் திரிகின்றோம்
சொக்கு தடிமனம் வெட்குதடி! 16

அன்னிய ரெத்தனை வந்தா லும்மிக்க
அன்புடன் கொண்டு விருந்த ளிக்கும்
கண்ணிய மான குடியிற் பிறந்து நாம்
கஞ்சியு மற்றுக் கதறுகின்றோம்! 17

அன்னக் கொடிகள் பறந்து விருந்திடும்
ஆசார வாசலின் வீதியடி!
பின்னக் கழுதையும் பேயும் குடிகொள்ளப்
பெண்மணி யேஎன்ன காலமடி! 18

வெண்ணெயும் பாலும் பெருகி வழிந்திடும்
பண்ணைய மெங்களின் பண்ணையடி!
தண்ணீரு மின்றித் தயங்கத் தரித்திரம்
தங்குத டிமனம் பொங்குதடி! 19

நெல்லுங் குலமணிக் கல்லு முதிர்ந்திடும்
கொல்லைய டியெங்கள் கொல்லையடி!
கல்லுங் காட்டொடு காடுமே டாயிப்போ
காணுத டிமனம் நாணுதடி! 20

கோடானு கோடி குடித்தனக் காரரின்
கூட்டமடி யெங்கள் கூட்டமடி!
நாடோடி யாகி நடுத்தெரு வில்நின்று
நாமும் புலம்பிடும் ஞாய மென்ன? 21

கண்ணும் மனமும் கருத்துங்கொண் டமட்டும்
காணும டியெங்கள் காணியடி
கண்ணும் மனமும் கருத்துஞ் சுழன்றிடக்
கஞ்சியற் றோமடி வஞ்சியரே! 22

மன்னருள் மன்னரும் வந்து வணங்கிடும்
மன்னவர் மன்னரின் மைந்தரடி!
சின்னஞ்சி றுவரும் நின்று சிரித்திடச்
செய்வினை என்னடி சேடியரே! 23



நீதியும் நல்ல நெறிமுறை யுங்கொண்ட
ஜாதியடி எங்கள் ஜாதியடி!
நீதியும் நின்ற நெறிமுறை யுங்கெட்ட
நிந்தனை யென்னடி சுந்தரியே! 24

மானம் பெரிதென்று பிராணனை விட்டுயர்
மாட்சிமை கொண்டவர் மைந்தரடி!
மானத்தை விற்று வயிற்றை வளர்த்திடும்
மாயமு மென்னடி சேயிழையே! 25

வெள்ளியும் பொன்னும் விரிந்து கிடந்தொளி
வீசுமடி எங்கள் வாசலிலே!
கள்ளியும் முள்ளும் கலந்து முளைத்திப்போ
காட்டுத டிமனம் வாட்டுதடி! 26

முத்தும் பவளமும் சிந்திக் கிடந்திட்ட
முற்றமடி யெங்கள் முற்றமடி!
சொத்தைப் பணத்திற்கும் செல்லாத காசுக்கும்
சோருதடி மனங் கோருதடி. 27

போரொடு நின்று புகழோ டிறந்திட்ட
தீரர் வழிவந்த தீரரடி!
தேரொடு நின்று தெருவோ டிலைந்திடத்
தேற்றமு மென்னடிக் கோற்றொடியே. 28

இல்லையென் றோர்களுக்(கு) அள்ளிக் கொடுத்திட்ட
வள்ளல் வழிவந்த வள்ளலடி
இல்லையில் லையில்லை யில்லையில் லையென்று
பல்லை இளிக்கிறோம் பாருங்கடி! 29

பார்த்த திசையெங்கும் பச்சைப்ப சேலென்று
பார்க்கும டியெங்கள் பாளையத்தில்
பார்த்த திசையெங்கும் நீத்துக் கிடக்குது
பாவமு மென்னடி பூவையரே! 30

பட்டும்பட் டாடையும் கட்டிக் கழித்திட்ட
பட்டையக் காரனின் பந்தலிலே
கட்டக்கை யகலக் கந்தையு மின்றிநாம்
கத்துவ தென்னடி சித்திரமே! 31

மிஞ்சுவ ளங்கள் நிறைந்து சுகங்கள்
மிதந்து கிடந்திட்ட தேசத்திலே
பஞ்சமும் கொள்ளைப் பலவகை நோய்களும்
மிஞ்சுவ தென்னடி ரஞ்சிதமே! 32

பாலுந் தினுசுப் பழவகை யும்மூன்று
வேளையும் தின்று வெறுத்தவர்நாம்
பாழும் வயிற்றுக்கும் கூழுமின் றியிப்போ
பற்றுத டிவயிறு வற்றுதடி! 33

வேதமொ டுகுறள் நீதி முறைகளும்
ஓது மடியெங்கள் வீதியிலே
வாது வழக்கொடு வஞ்சனை மோசமும்
வஞ்சிய சேயிப்போ மிஞ்சுதடி! 34

புத்தம் புதியவ ரானா லும்உயிர்
தத்தம் அவருக்குத் தந்தவர்கள்
ஒத்துப் பிறந்தவர் செத்துக் கிடந்தாலும்
ஒத்தி நடந்திடக் கற்றோமடி! 35

கட்டுக் கடங்காத கஷ்டங்கள் வந்தாலும்
விட்டுப் பிரியாத கட்டுடையோம்
விட்டுத் தனித்தனி எட்டிய தாலிந்த
வேதனை வந்தது மாதரசே! 36

கூடப் பிறந்த சகோதரர் கள்மிக
வாடியிருந்து வருந்துகையில்
மோடி யிருந்து தனித்தனிச் சுகித்தால்
மோசம் போனோமடி மொய்குழலே! 37



வாசம டிபுகழ் வீசுமடி எங்கள்
தேசம டிவந்த மோசமடி!
நாசம டிவெகு நாசம டிமனங்
கூசுத டிபழி யேசுதடி! 38

பொங்குத டிமனம் பொங்குத டிஉடல்
பொங்குத டிதுயர் தங்குதடி!
மங்குத டிமதி மங்குத டிமட
மங்கைய ரேயென்ன பங்கமடி! 39

எண்ணவெண் ணமனங் குன்றுத டிவினை
என்னென்று சொல்லுவேன் கன்னியரே!
பண்ணிய தொல்லைப் பழவினை யோவென்ன
பாவம டிஎவர் சாபமடி! 40

## ஏன் இக்கதி யடைந்தோம்?

பாவமல் லவருஞ் சாபமல் லமுனி
கோபமுஞ் சாமியின் குற்றமல்ல;
தாபம டிபெற்ற தாயைம றந்ததால்!
தாழ்வடைந் தோமடி தையலரே! 41

மாதாவின் பெற்ற வயிறெரிய நாமும்
மகேஸ்வர பூசையைச் செய்தமடி
ஆதலி னாலிந்த வேதனை வந்ததும்
ஆச்சரி யமல்ல ஆச்சியரே! 42

## அந்தத் தாய் யார்?

தேசம டிஇந்து தேசம டிதம்மைப்
பாசமு டன்பெற்றுப் பாலித்தவள்
தேசம டிஇந்து தேசம டிஎங்கள்
தேவிய டியெங்கள் ஆவியடி! 43

தேவிய டிஇந்து தேவிய டியெங்கள்
ஆவிய டிஉங்கள் ஆவியடி!
பாவிய டிவெகு பாவிய டிபடு
பாதக ரெங்களைப் பெற்றதனால்! 44

பெற்றவ ளிந்தியத் தேவிய டிபெயர்
இட்டவ ளிந்தியத் தேவியடி!
உற்றவன் இந்தியத் தேவிய டிபால்
ஊட்டி வளர்த்தவ ளும்அவளே. 45

மாதமும் மாரிபொழிந்து செழித்திட்ட
மாநிலத் துயர்ந்த தேவியடி!
போதமும் வேதமும் முந்தி யுரைத்திட்ட
புண்ணிய ஞானக் கிழவியடி! 46

முப்பத்து முக்கோடி மக்கள டிஇந்த
மூப்புடை இந்தியத் தேவிபெற்றாள்
முப்பத்து முக்கோடி மக்களுந் தானுமாய்
முச்சத்தி வீதியில் சுத்துகின்றாள். 47

மூப்புடை இந்தியத் தேவியடி நம்மை
முன்னம் பயந்து வளர்த்தெடுத்தாள்
மூப்புடை இந்தியத் தேவிய டிநம்மை
இன்னும் பரந்து முகம்துடைப்பாள். 48

இந்தியத் தேவிநம் மைபயந் தாள்கலை
இந்திய தேவிந மக்களித்தாள்
இந்திய தேவிந மைப்புரந் தாள்அந்த
இந்தியத் தேவியை நாம்மறந்தோம். 49

எத்தனை காலஞ் சுமந்திருந் தாள்நமக்
கெத்தனை கஷ்ட மனுபவித்தாள்!
அத்தனை கஷ்டமும் நாமறந் தோமவள்
அத்தனை குற்றமு மேபொறுத் தாள்! 50

கோடானு கோடி பகைவர டிமுன்னம்
கொள்ளை யடித்திட வந்தவர்கள்
கோடானு கோடியும் தான்சகித் துத்தன்
குஞ்சு குழந்தையை ஆதரித்தாள். 51



எண்ணிக்கை யற்ற அரசர டிஇந்த
ஏந்திழைச் செல்வத்தில் ஆசைகொண்டார்
எண்ணிக்கை யற்ற பகைவரடி அந்த
ஏந்திழை யென்று நம்மைப் புரந்தாள். 52

அத்தனை கஷ்டமும் தான்சகித் துநம்மை
ஆதரித் திருந்த தேவியின்ன
மத்தரைப் போல மறந்தத னாலிந்த
மாநிலத் தேமிக ஈனமுற்றோம். 53

அற்புத மான பொறுமைய டிஅவள்
அற்புத ஞானப் பெருமையடி!
அற்புத மான சிறுமைய டிஇப்போ
அற்பத் தனத்தினால் தேடிவைத்தோம். 54

பெற்ற வயிறுமெ ரியாதோ அவள்
பேதை மனமும் வருந்தாதோ?
பெற்ற குழந்தைகள் தன்னை மறந்ததைப்
பெண்ணு மொருத்தி சகிப்பாளோ? 55

பெற்ற மனமுங் கசிந்தழு தேஅந்தப்
பேதை உகுத்திடும் கண்ணீரால்
பெற்ற தனமும் புகழு மிழந்துநாம்
பேதை களானது பெண்ணரசே! 56

தாயை மறந்த குழந்தைக ளெப்படித்
தாரணி தன்னில் செழிக்குமடி?
தாயை இகழ்ந்த குழந்தைக ளையிந்தத்
தாரணி நின்று பழிக்குமடி! 57

அன்னையும் தந்தையும் தெய்வமென்று முன்னம்
சொன்ன கிழவியின் வார்த்தையைப் போல்
அன்னையும் தந்தையும் அத்தையும் மாமனும்
அத்தனை யும்இந்து தேசமடி! 58

**அந்தத் தேசத்தின் எல்லையும் சிறப்பும்**

வெள்ளி மலையும் வடக்கா கவிரி
வெற்புடைச் சிங்களம் தெற்காகப்
பள்ளக் கடலடி வங்களம் குண
பாரிச மேற்கி லரபிக் கடல். 59

பரந்து கிடக்கின்ற தேசமடி எம்மைப்
பாலிக்கும் இந்தியத் தேவியடி!
சிறந்து விளங்கிய தேசம டிஅவள்
சீரும் சிறப்பையும் கேளுங்கடி. 60

வேத முதித்தது மிந்நாடே அருள்
வேதிகை நின்றது மிந்நாடே.
போத முதித்தது மிந்நாடே மிக்க
புண்ணிய பூமியென் றாடுங்கடி! 61

ஞான முதித்தது மிந்நா டேஅருள்
ஞானிகள் நின்றது மிந்நாடே.
மோன மறிந்த முதல்நா டேவெகு
முத்த ரிருந்தது மிந்நாடே. 62

புத்தர் பிறந்தது மிந்நா டேஅவர்
போதம் வளர்த்தது மிந்நாடே.
சித்த ரிருந்தது மிந்நா டேவெகு
சித்திகள் பெற்றது மிந்நாடே. 63

சீதை பிறந்தது மிந்நா டேஅவள்
சீர்த்தி விளங்கிய திந்நாடே.
கீதை பிறந்தது மிந்நா டேவெகு
கீர்த்திகள் பெற்றது மிந்நாடே. 64

சீருடை யத்தம யந்தியோ டுபுகழ்
சிலம்புடைக் கண்ணகி தேவியையும்
பேருடை யாள்சா வித்திரி தேவியைப்
பெற்று வளர்த்தது மிந்நாடே. 65



ராம னிருந்தது மிந்நா டேஅந்த
பீம னிருந்தது மிந்நாடே.
சோம னொடுபுகழ் சூரியன் மரபும்
ஜோதி மொழிந்தது மிந்நாடே. 66

கண்ணன் பிறந்தது மிந்நா டேகொடை
கர்ண னிருந்தது மிந்நாடே
அண்ண லடியரிச் சந்திர னும்மவன்
அன்புடைத் தேவியு மிந்நாடே. 67

முன்னுமில் லைஇனிப் பின்னுமில் லையென
முந்திய நீதியின் மூவேந்தர்
மன்ன ரடிசேர சோழரும் பாண்டியர்
மாட்சிமை கொண்டது மிந்நாடே. 68

ஏட்டி லடக்க முடியா துமனம்
எண்ணி எழுதவும் போதாது;
பாட்டி லடக்க முடியா தபுகழ்ப்
பாவையும் மிந்தக் கதியானாள். 69

**இனி நாம் செய்ய வேண்டுவதென்ன?**

போனது போகட்டும் கண்மணியே! இனி
யாகிலும் புத்தியு டனிருப்போம்.
மாநிலத் தாயை வணங்கிநின் றாலினி
மாநிலத் தேமிக நாமுயர்வோம். 70

இந்தியத் தேவியைப் பூஜைசெய் யுமந்த
இந்திய ரெல்லொரும் ஒன்றடியே
எந்த மதத்திற்கும் எந்தக் குலத்திற்கும்
சொந்தம டியவள் தொந்தமடி! 71

ஏழையு மெங்களுக் கண்ணனடி செல்வப்
பேழையு மெங்களின் தம்பியடி
கோழையு மெங்கள் குலத்த னடிகுடி
காரனுங் கூடப் பிறந்தவனே. 72

நல்லவர் கெட்டவ ரென்பதன்றி மற்றும்
நாலு வருணமு மொன்றடியே
தொல்லைச் சுருதியின் சொல்லடி யேஇதைத்
தோகையே நீயும் மறக்காதே. 73

பறையரு மெங்கள் குலத்தர டிசுத்தப்
பார்ப்பன ருமெங்கள் பந்துவடி!
அரையனு மெங்களுக் கானவ னேயன்றி
அல்லவ னும்வெகு நல்லவனே. 74

அன்னிய ரானாலும் இந்திய நாட்டை
அடைந்தவர் எங்களுக் கண்ணாடி!
மன்னவ ரானாலும் இந்திய நாட்டை
மறந்தவர் தங்களை நாமறப்போம். 75

எந்தக் குலத்தில் பிறந்தா லும்அவர்
எந்த நிலையி லிருந்தாலும்
இந்து நிலத்தில் பிறந்தவ ரெல்லோரும்
இந்தியத் தேவியின் மக்களடி! 76

முப்பத்து முக்கோடி மக்களடி நாங்கள்
முப்பத்து முக்கோடி சோதரர்கள்.
முப்பத்து முக்கோடி பேரு மொருமிக்க
முப்பொழு தும்அவள் பூஜை செய்வோம். 77

பூஜையென் றால்வெறும் பூஜையல்ல செல்வப்
புண்ணிய பூமியின் பிள்ளைகளே
ஆசையு டனவள் கைத்தொழில் வித்தையை
ஆதரஞ் செய்யுங் கடமையடி. 78

எண்ணிக்கை யற்ற தொழிலடி யேஇந்தப்
புண்ணிய பூமியும் கண்டதடி!
எண்ணிக்கை யற்றவர் இந்தியர் தொழிலை
அந்நிய தேசங்கள் ஆளுதடி. 79



கைத்தொழில் கெட்டுக்க லங்குத டிதேசம்
கைத்தொழி லின்றிப் புலம்புதடி!
கைத்தொழில் தம்மை விருத்திசெய் தாலந்தக்
கண்ணுடைத் தேவியும் கண்விழிப்பாள். 80

ஆயிரம் ஆயிரம் வித்தையடி இங்கே
ஆதரிப் பாரின்றிச் செத்ததடி
ஆயிரம் ஆயிரம் கைத்தொழி லாளிகள்
ஆதர வின்றி உயிர்துறந்தார். 81

இந்தியத் தேவியின் கைத்தொழிலை நாமும்
ஏற்றுப் புகழக் கடமைப்பட்டோம்.
இந்தியத் தேவியின் வித்தைகளை நாமும்
எந்த விதத்திலும் ஆதரிப்போம்! 82

இந்திய தேசத்தில் உண்டா னபொருள்
எந்த விதத்திலு முத்தமமே!
இந்திய தேசத்தொ ழிலாளிநமக்
கெந்த விதத்திலும் சொந்தமதால். 83

அன்னியர் சரக்கைத் தீண்டோமே நாமும்
அன்னியர் தயவை வேண்டோமே
அன்னியர் பொருளைத் தீண்டுந்தோ றும்அந்த
அன்னை வயிற்றி லடிப்பதுபோல். 84

**பயன்**

என்று நினைந்து மனங்கசிந் துநாமும்
இந்தியத் தேவியைப் போற்றிசெய்தால்
நின்ற துயரம் மறையுமடி இங்கே
நீடிய பஞ்சம் பறக்குமடி. 85

கண்டுகொண் டோமடி கண்மணியேஇனி
காரண மின்னதெ னத்தெரிந்தோம்.
பண்டைச் சிறப்பினை நாமடை யஇந்துப்
பாவை பதத்தினைப் பூஜைசெய்வோம். 86

கேளுங்க டிஇனிக் கேளுங்க டிவந்து
வீழுங்க டிஅவள் பாதத்தினில்
வாழுங்க டிஇனி வாழுங்க டிஅவள்
வாழ்த்தி யிருந்து வரங்கொடுப்பாள். 87

கிட்டுங்க டிகையைத் தட்டுங்க டிமலர்
கொட்டுங்க டிஅவள் பாதத்தினில்
விட்டத டிசனி விட்டத டிபழி
விட்டத டிதுயர் விட்டதடி. 88

பஞ்சமும் நோயும் பறக்குமடி அந்தப்
பத்தினி தேவியை நாம்நினைந்தால்
பஞ்சமும் நோயும் பற்றுமடி அந்தப்
பத்தினி தேவியை நாம்மறந்தால். 89

இல்லையில் லையென்று பல்லை யிளிப்பதும்
இல்லைய டிஇனி இல்லையடி!
இல்லைய டிபசி இல்லைய டிநோயும்
இந்தியத் தேவியை நாம்நினைந்தால். 90

உத்தம மாகிய ராஜாங் கம்இனி
ஒப்பில தாகி உயருமடி
நித்திய மாக நிலைக்கும டிநல்ல
நீதியும் வேத நெறிமுறையும். 91

பொங்கும டிபால் பொங்கும டியினி
புண்ணிய பூமி மனைதோறும்
மங்கும டிவினை மங்கும டிஇந்த
மங்கையை நாமும் மனதில்வைத்தால். 92

ராச்சியம் பொங்கித் தழைத்தோங் கநாமும்
ராச்சியம் வேண்டி உழைத்திடுவோம்.
ஓச்சிய கோலு முயிர்த்தோங் கநாமும். 93
நீதி நிலைக்க நினைத்து வருகின்ற
நிர்மல மாகிய ராஜாங்கம்



ஆதி அரசின் வழிமுறை யேநின்றிங்
காதித்தன் போல விளங்குமடி! 94

**வாழி**

வாழி மழைபொழி வானமொடு வரு
மேழி யுழவர் வழிவாழி
வாழிய கைத்தொழில் வாணிபம் தம்மொடு
வாழ்விக்க நின்றிடும் ராஜாங்கம்! 95

வாழி முனிவர்கள் தேடி யளித்திட்ட
வேத வழிவரும் நீதியெல்லாம்!
வாழியர் ஞான முணர்ந்தோர் கள்வழி!
வாழிய இந்த உலகமெலாம்! 96

இந்தியத் தேவி தனக்கா கத்தங்கள்
சொந்த சுகத்தைத் துறந்தவர்கள்
எந்த மதத்திலும் எந்தக் குலத்திலும்
வந்தவர் வந்த வழிவாழி! 97

## *182. விடுதலைக்கு விதை விதைத்த வீரர் கூட்டம்*

இப்போது நூறாண்டு களுக்கு முன்னால்
இந்தியத்தாய் சுதந்தரமே எண்ண மாக
அப்போதே இந்நாட்டை அடக்கி யாண்ட
ஆங்கிலரை அகற்றநின்ற ஆர்வம் தன்னைச்
சிப்பாய்கள் கலகமென்ற நாமம் சூட்டிச்
சிந்தித்துப் புத்தகத்தில் எழுதி னாலும்
தப்பாமல் அதன்பெருமை நினைவு கூர்ந்து
தலைவணங்கித் தாய்நாட்டைத் தாங்கி நிற்போம்! 1

எங்கிருந்தோ எப்போதிங் கெவர்வந் தாலும்
எதிர்கொண்டு வரவேற்று இனிதே பேசிப்
பங்கிருந்தே உண்டுடுக்கப் பலவும் செய்யும்
பரிவுடைய தமிழ்நாட்டுப் பண்பிற் கேற்பத்

தங்குதற்கிங் கிடம்கேட்ட ஆங்கி லர்க்குத்
தயவாகச் சென்னையிலே இடந்தந் தார்கள்
அங்கிருந்து மெள்ளமெள்ள இந்த நாட்டின்
ஆட்சிதனை அபகரித்தார் சூழ்ச்சி யாலே. 2

சமயமுற்ற போதெல்லாம் சதிகள் செய்தார்;
இந்நாட்டு மன்னரிடை சண்டை மூட்டித்
தமையடுத்த அரசருக்கும் உதவி போலத்
தந்திரமாய் அவர்களைத்தம் அடிமை யாக்கி
இமயமுதல் குமரிமுனை இறுதி யாக
இப்பெரிய திருநாட்டைப் பற்றிக் கொண்டார்.
சுமைசுமையாய் இங்கிருந்த செல்வம் தன்னைச்
சூரைகொண்டு சீமைக்குத் தூக்கிச் சென்றார். 3

நாகரிக அரசாட்சி நடத்தி இங்கே
நன்மைசெய்ய வந்தவர்போல் தோன்றினாலும்
போகமிகும் பதவியெல்லாம் வெள்ளை யர்க்கே;
புழுக்கைகளின் வேலைகளே இந்தியர்க்காம்;
சோகமுற்று இதைக்கண்ட சுதேச மக்கள்
சுதந்தரத்தின் சிறப்புணரத் தொடங்கி னார்கள்;
வேகமுடன் எண்ணிமனம் வெந்து நொந்து
வீறுகொண்டு விடுதலைக்கே துணிந்திட் டார்கள். 4

'இந்துமதக் கொள்கைகளில் தலையிட்டார்கள்;
இஸ்லாம்கள் மதத்தினையும் இகழ்ந்திட் டார்கள்;
சொந்தமதம் கிறிஸ்தவத்தைப் பரப்பு தற்கே
சூழ்ச்சியுடன் ஆட்சிசெய்யத் தொடங்கியுள்ளார்;
இந்தவிதம் மதத்தினைநாம் இழக்க லாமா?'
என்றுபல காரணங்கள் இணைத்துக் கூறிப்
பந்தமற வெள்ளையரை வெறுக்கும் பேச்சே
பட்டாளத் தார்களிடைப் பரப்பி னார்கள். 5

குறிப்புரை:- வீறு - வேகம், வெற்றி.



**சுதந்தரத்தில் பேரார்வம்**

சுதந்தரத்தில் பேரார்வம் உச்சிக் கேறிச்
சூழ்நிலைக்கே காத்திருந்த மக்க ளுக்குள்
மதங்கெடுக்க வெள்ளையர்கள் வந்தார் என்ற
மாற்றமது மந்திரம்போல் சீற்ற மூட்ட
முதன்முதலாய்ச் சிப்பாய்கள் பரிஹும் பூரில்
வெள்ளையர்க்குக் கீழ்ப்படிய முடியா தென்றார்;
அதன்பயனாய் அவர்களுக்கு விலங்கு பூட்டி
அடைத்திட்டார் சிறைக்குள்ளே ஆங்கி லேயர். 6

அதிலிருந்தே சுதந்தரப்போர் ஆரம் பந்தான்;
ஆயிரத்தெண் ணூற்றைம்பத் தேழா மாண்டில்
மதிகணக்கில் மேமாதம் பத்தாம் தேதி
மருவியநாள் ஞாயிற்றுக் கிழமை மாலை
பதிசிறந்த மீரத்துப் பட்டி னத்தின்
பாங்கிருந்த சிப்பாய்கள் படைகள் மூன்றும்
கொதிமிகுந்து வெள்ளையரைச் சுட்டுக் கொன்று
கொடிதூக்கிச் சுதந்தரப்போர்க் கோலங்கொண்டார். 7

உடைத்தார்கள் சிறைச்சாலைக் கதவை யெல்லாம்
உள்ளிருந்த யாவரையும் விடுவித் தார்கள்;
படையெடுத்துத் தில்லியைப்போய்ப் பற்றிக் கொண்டு
பகதூர்ஷா மன்னனெனப் பறைசாற் றிட்டார்;
அடைவாக அங்கிருந்த பட்டாளங்கள்
அவைமூன்றும் இவர்களுடன் சேர்ந்து கொண்டு
தடையிலராய்த் தம்முடைய பட்டா ளத்தின்
தலைவர்களாம் வெள்ளரைச் சுட்டுக் கொன்றார். 8

அன்னியர் கொட்டத்தை அடக்கி விட்டோம்
ஆங்கிலர்கள் இனிநம்மை ஆள வொட்டோம்.
என்னுமொரு நம்பிக்கை எழுந்து பொங்க
எங்கெங்கும் வெள்ளையருக்(கு) எதிர்ப்புண் டாகி

மன்னுமந்த வடமேற்கு மாகா ணத்தில்
மத்தியமா காணத்தில் அயோத்தி தன்னில்
மின்னனைய வேகத்தில் சிப்பாய் மார்கள்
மிடுக்காக விடுதலைப்போர் தொடுக்க லானார். 9

### எழுச்சிகொண்ட புரட்சி

முடியிழந்த மன்னர்பலர் முகம்ம லர்ந்தார்;
முன்னிருந்த பெருமைவர முடியும் என்றே
துடிதுடித்துச் சிப்பாய்க்குத் துணைவ ரானார்;
துணைபுரிய மக்களையும் தூண்டி விட்டார்;
வடிவமைந்த வீரர்பெண் ஜான்ஸி ராணி,
வல்லமைசேர் தாண்டியா தோப்பி யோடும்,
படியிழந்த பேஷ்வாவாம் நானா சாகிப்,
பந்துவாம் ராவ்சாகிப், அஸிமுல் லாதான். 10

குடும்பத்தின் சொத்திழந்த குன்வார் சிங்கும்,
குலமுறையில் மொகலாயன் பிரோஸ் ஷாவும்,
கடும்பத்தன் வெள்ளையர்பால் 'பென்ஷன்' வாங்கும்
கதியடைந்த கான்பகதூர் கான்என் பானும்,
இடம்போன இப்படிப்பேர் பலரும் சேர்ந்தே
எழுச்சி கொண்ட புரட்சிதனை இயக்க லானார்;
படம்கொண்ட நாகம்போல் சீறிப் பாய்ந்து
பாமரரும் வெள்ளையரைப் பலியிட் டார்கள். 11

முட்டமுட்ட மூவைந்து மாத காலம்
மும்முரமாய்ச் சுதந்தரப்போர் முழங்கிற் றப்பால்
திட்டமிட்ட போர்முறைகள் வருந்தி டாமல்,
திடமிருந்தும் ஒத்துழைக்கச் சேர்ந்தி டாமல்,
கிட்டிவிட்ட வெற்றிகளைக் கட்டிக் காத்துக்
கெட்டிபண்ணும் கிரியைகளைச் செய்தி டாமல்
தொட்டெடுத்த சிப்பாய்கள் தோற்றிட் டாலும்
சுதந்தரத்தின் உதயமதைத் தோன்றச் செய்தார். 12



எப்படியோ வெள்ளையர்கள் எதிர்த்து நின்றார்
இந்தியரின் துணைகொண்டே இதனை வென்றார்.
அப்படியாய் எழுச்சிகளை அடக்கும் போதும்
ஆங்கிலர்கள் செய்திட்ட அநியா யங்கள்
எப்பொழுதும் அவரினத்தை நாணச் செய்யும்;
எங்கெங்கும் நாகரிகம் ஏசிக் கூசும்;
தப்பறியாப் பெண்களையும் தூக்கி லிட்டார்
தாயோடு சிசுக்களையும் தகித்துக் கொன்றார். 13

குடுகுடுத்த கிழவரையும் குத்திக் கொன்றார்;
குற்றமற்ற பேர்களையும் சுட்டுத் தள்ளிப்
பிடிகிடைத்த வீரர்களைப் பிணைத்துக் கட்டிப்
பீரங்கி வாயில்வைத்துப் பிளந்திட் டார்கள்;
கடுகடுத்திங் கிதற்கீடாய்க் கான்பூர் தன்னில்
காப்பளிக்கப் பட்டவெள்ளைக் காரப் பெண்கள்
நடுநடுங்கச் சிசுக்களுடன் நசுக்கப் பட்டார்
நாணாவின் ஆட்களினால் நாணம் எஞ்ச 14

அதன்பிறகும் ஆங்கிலர்கள் வெறிகொண் டார்கள்;
அரக்கரினும் கொடுமைகளை அதிகம் செய்தார்;
மதங்கொண்ட யானையைப்போல் சுற்றிச் சுற்றி
மக்கள்தமைக் கண்டபடி வதைத்திட் டார்கள்;
அதம்செய்தும் ஊர்களுக்கு அளவிட் டார்கள்.
அபயமென்ற பேர்களையும் அழித்திட் டார்கள்;
இதம்கண்டார் துரைத்தனத்தார் இங்கி லாந்தில்
எப்படிச்செய் தாலும்சரி என்றிட் டார்கள். 15

### வித்தகி அப்பெண்ணரசி

வீரருக்குள் வீரர்களும் வியந்து போற்றும்
வித்தகிஅப் பெண்ணரசி ஜான்சி ராணி
போரகத்துக் குதிரையின்மேல் போகும் போது
புல்லியர்தம் குண்டுபட்டு மாண்டு போனாள்;

ஆரணங்கு பதியிழந்த அயோத்தி பீகம்;
அவளுடனே பிரேஸ்ஷாவும், நானா சாகிப்,
ஊரிலுள்ள ஒருவருக்கும் தெரியா வண்ணம்
ஓடிவிட்டார் நாட்டைவிட்டே உயிருக் காக. 16

போனசொத்து மறுபடியும் தருவா ரென்றும்
புரட்சிகளில் சேர்ந்ததனைப் பொறுப்பா ரென்றும்,
மானமற்ற துரோகிஒரு மான்சிங் கென்பான்
மனமாரத் தன்னைநம்பி மறைந்து வாழத்
தானனைத்த தாண்டியா தோப்பி தன்னைத்
தந்திரமாய் வெள்ளையர்க்குக் காட்டித் தந்தான்;
ஈனமிக்க உதவிசெய்த இவனைக் கூட
இரக்கமின்றித் தூக்கிலிட்டார் இங்கி லீஷார். 17

அப்படியவ் விடுதலைப்போர் அடங்கி னாலும்
அதிலுதித்த சுதந்தரத்தின் ஆர்வந் தானே
எப்பொழுதும் குறையாமல் இருந்தே வந்திங்
கிந்தியரின் தேசபக்தி இறுகச் செய்தும்
ஒப்பரிய காந்திமகான் சாந்தப் போரில்
உறுதியுடன் ஒத்துழைக்க ஊக்கம் தந்தும்
இப்பொழுதும் இங்கிருக்கும் சுதந்த ரத்தின்
இன்பத்தை நாமடையச் செய்த தென்போம். 18

ஆகையினால் சுதந்தரத்தில் ஆர்வம் பொங்க
ஆயிரத்தெண் நூற்றைம்பத் தேழா மாண்டில்
வேகமுடன் வெள்ளையரை எதிர்த்தெ ழுந்து
விடுதலைக்கு விதைவிதைத்த வீரர்க் கெல்லாம்
வாகையுடன் புகழ்மாலை வணங்கிச் சூட்டி,
வாயார இந்தியத்தாய் வாழ்த்துப் பாடி
ஓகையுடன் இந்நாட்டு மக்க ளுக்குள்
ஒற்றுமையே உறுதிபெற உழைப்போம் வாரீர். 19

அப்பெரிய மகிழ்ச்சியிடை மறந்தி டாமல்
அதற்கு முன்னால் ஆயிரத்தெண் ணூற்றா றாண்டில்



வெப்பமுடன் வெள்ளையரை விரட்ட வென்றே
வேலூரில் விரைந்தெழுந்து புரட்சி செய்து,
செப்பரிய துணிவுடைய செயல்க ளாற்றித்
தியாகத்தில் உயிர்துறந்த சிப்பாய் கட்கும்
இப்பெரிய திருநாளில் வணக்கம் செய்வோம்
இந்தவிழாச் சிறப்பினுக்குத் தகுந்த தாகும். 20

பதினான்கு வருடங்கள் அதற்கும் முன்னால்
பாஞ்சாலங் குறிச்சி, தமிழ்ப்பா ளையத்தில்
அதிவீரப் போர்புரிந்த அஞ்சா நெஞ்சன்
ஆங்கிலரை ஆட்டிவைத்த கட்ட பொம்மன்
சதிகார வெள்ளையரால் தூக்கில் மாண்ட
சரித்திரமே விடுதலைக்குத் தலைப்போ ராகும்;
அதனோடு மருதிருவர் ஊமைத் துரையாம்
அவர்களுக்கே அஞ்சலிமுன் செலுத்த வேண்டும். 21

பொன்னனைய சுதந்தரத்தை இழந்து விட்டுப்
பொழுதெல்லாம் நொந்துமனம் புழுங்கி நின்றாள்
அன்னியர்க்கிங் கடிமையென அவதி யுற்றநன்
அன்னையிந்த பாரதத்தாய் அவலம் நீங்கிப்
பின்னுமவள் தன்னாசைப் பெறுமா றெண்ணிப்
பேராண்மை யோடுபல தியாகம் செய்து
முன்னமிங்கே உயிர்துறந்த யாரா னாலும்
முடிவணங்கி அவர்பெருமை முழங்கச் செய்வோம். 22

இச்சைபோல் சுதந்தரமாய் இயங்கும் ஆசை
ஈஎறும்பு புழுக்களுக்கும் இருப்ப துண்மை;
பிச்சைகேட் டுடல்வளர்க்கும் ஏழை கூடப்
பிறர்க்கடிமை என்றிருக்கப் பிணங்கு மன்றோ.
அச்சத்தால் அடிமைசெய்யும் கோழைகூட
அந்நிலையை அகற்றிடவே ஆசை கொள்வான்,
மெச்சத்தான் தக்கதிந்த சுதந்த ரத்தின்
மேன்மைதனை நன்குணர்ந்து மிகவும் காப்போம். 23

முந்தியிந்த உலகத்தில் எவருங் காணா
முற்றுமொரு சன்மார்க்க முறையைத் தந்த
தந்தையெங்கள் காந்தியண்ணல் தலைமை யின்கீழ்
தரணிமெச்சும் சாந்தநெறி நின்ற தாலே
வந்தஇந்த சுதந்தரத்தை வணங்கிக் காத்து,
வையமெங்கும் அமைதிவரும் வழியே நாடி,
எந்தஒரு நாட்டோடும் பகையில் லாமல்
எவ்வெவர்க்கும் நலங்கருதி இனிது வாழ்வோம். 24

## 183. காந்தி சரித்திர நொண்டிச் சிந்து

காந்தியின் சரிதம்சொல்வேன் - நல்லோர்
காதுக் கினிப்ப(து) அதைக் காட்டிலும் முண்டோ?
மாந்தர்க்குயர் தர்மமெல்லாம் - காந்தி
மாத்மாவின் வாழ்க்கையிலே மலிந்திருக்கும்.
புண்ணியக் கதைஇதுவே - கேட்டால்
பூதலத்தில் மூர்க்கருக்கும் பொறுமை வரும்.
கண்ணியம் கனதையென்று - பழைய
கதைகளில் முன்புநாம் கேட்டன வெல்லாம்
சத்தியம் வடிவெடுத்து - வேதம்
சாந்தி சாந்தியென்ற சாந்தத்துடனே.

இக்கரையிற் கண்டுகளிக்க - இன்னும்
இருந்தே அறந்தருமோர் பெருந்தகையார்
கூர்ஜா வடநாட்டில் - நல்ல
குணமிகும் போர்பந்தர் சமஸ்தானம்
தார்முடி மன்னர்க்கு - ராஜ
தந்திர முரைக்குந்திறல் மந்திரிகளாய்
வாழ்ந்தவர் பரம்பரையில் - குஜராத்
வாணிய குலத்துக்கோர் ஆணியெனலாம்
கரம்சந்த் என்பவரின் - மனைவி
கற்பில் அருந் ததியென்னும் பொற்புடையவர்.



புத்திர வதியாரின் - மூன்றாம்
புத்திரரா கப்பிறந்தார் உத்தமர் காந்தி
அன்னையும் தந்தையுமே - நாம்
அறிந்த கடவுளென்று நடந்திடுவார்.
பள்ளிப் பருவத்திலும் - சிறு
பையன்களின் துடுக்குகள் செய்யமாட்டார்.
எவ்வளவும் பொய்பேசார் - மற்ற
எவரொடும் தவறுகள் எதுவும் செய்யார்.
ஆசான் மார்களுங்கூடக் - கண்டே
ஆச்சரியப் படும்படி நடந்து கொள்வார்.

பன்னிரண்டு வயதினிலே - கஸ்தூரி
பாய்என்னும் உத்தமியை மணமுடித்தார்.
தாயார் பெருங்குணமும் - கொண்ட
தாரந்தனக் கேற்றபடி வாய்ந்த நலமும்
ஓயாப் புகழுடனே - காந்தி
உலகினுக் குழைப்பதற் குதவியென்பார்.
பெண்ணின் பெருமையன்றோ - நாட்டின்
பெருமைகள் யாவினுக்கும் பிறப்பிடமாம்?
பத்தொன் பதுவயதில் சீமை
பாரிஸ்டர் பரிக்ஷைக்குப் போய்ப்படிக்க

ஆசைகொண் டார்காந்தி - கேட்ட
அறிந்தவர் பந்துமித்ரர் அனைவருமாய்ச்
சீமைக்குப் போனாலே - ஒழுக்கம்
சீர்கெட்டு நம்ஆசாரம் போய்விடுமென்று
தடுத்தார் பலபேர்கள் - பெற்ற
தாயாரும் சம்மதிக்கத் தயங்கிநின்றார்.
காந்தியின் பிடிவாதம் - கண்டு
கடைசியில் அன்னையொரு விதந்தேறி
"மூன்றுவிதச் சபதங்கள் - செய்து
மற்றுமவை காப்பேனென்று சத்தியஞ்செய்தால்

தருவேன் விடை"யென்று - பெற்ற
தாயுரைத்த வாசகத்தைத் தலைவணங்கி
"அருள்வீர் என்னசபதம்" - என்றார்
அன்னையவள் தன்மகனை யணைந்துச்சொல்வாள்;
"மாமிசம் மதுவுண்ணல் - பர
மாதர்களைக் காமுறுதல் இவை மூன்றும்
செய்யேன் என்றெனக்கே - சத்தியம்
செய்தபின்னர்ச் சீமைக்குச் செல்லுக" என்றாள்
"செய்வேன் அப்படியே - அந்தச்
சீமையிலே மட்டுமல்ல சென்மமுழுதும்

செய்வேன்" என்று சொல்லி - ஒரு
சிறந்த சமணசந் யாசியின் முன்னால்
சத்தியம் செய்து கொடுத்தார் - தாய்
சந்தோஷ மாகவிடை கொடுத்தனுப்பச்
சீமைக்குச் சென்றங்கே - தாய்க்குச்
செய்துவந்த சத்தியங்கள் பிசகாமல்
பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் - திரும்பப்
பம்பாய் நகரில்தொழில் செய்யும்போது
தென்னாப்பி ரிக்காவிலே - சில
தெரிந்த மகமதிய வியாபாரிகள்

வக்கீல் தொழிலாக - ஒரு
வழக்கை நடத்த அங்கு வரக்கேட்டார்.
போனார் காந்தியங்கே - முன்னால்
போயிருக்கும் இந்தியர்கள் படும்பாட்டைப்
பார்த்தார் பரிதவித்தார் - மீண்டும்
பம்பாய் திரும்பமனம் படியாமல்
இந்தியரின் உரிமைக்காக - அங்கே
இருபது வருஷங்கள் இருந்துழைத்தார்.
விண்ணப்பம் செய்துபார்த்தார் - லண்டனில்
வேண்டிய துரைகளைக் கெஞ்சிக் கேட்டார்.



கண்டபலன் ஒன்றுமின்றிக் - கடைசியில்
தன்கையே தனக்குதவி என்றுதுணிந்தார்.
அநியாயச் சட்டங்களைச் - சிறிதும்
அஞ்சாமல் சாந்தமுடன் எதிர்ப்பதென்றே
இந்தியரை ஒன்று திரட்டிக் - கேட்க
எல்லாரும் சரியென்றே ஒப்புக்கொள்ளவே
தொடுத்தார் அறப்போரை - இந்தத்
தொல்லுலகம் முன்னறிந்த தில்லையெனலாம்.
சாந்தமும் சந்தியமும் - நம்பும்
சர்வேசன் கருணையும் படையாகக்

காந்தியும் போர்தொ டுத்தார் - தாமே
கைவிரற் பதிவுசெய்யும் சட்டமறுத்தார்.
தண்டனை யிரண்டுமாதம் - பெற்றுச்
சந்தோஷ மாகச்சிறை முதலில்சென்றார்.
ஆயிரக் கணக்காக - இந்தியரும்
அங்கிருந்த சீனர்களும் சிறைக்குவந்தார்.
இந்தவிதம் எட்டுவருடம் - அங்கே
இடைவிடாம லேயுழைத்தார் இடர்பொறுத்தார்.
பலமுறை சிறைபுகுந்தார் - மக்கள்
பத்தினியுங் கூடச்சிறைப் பயத்தைவிட்டார்.

கல்லுடைத்துச் செக்கிழுத்தார் - சிறையின்
கக்கூசில் மலஜலம் வாரியெடுத்தார்.
வீதியில் விலங்குடனே - சர்க்கார்
வேண்டுமென்று நடத்தவும் சகித்திருந்தார்.
இத்தனை துயரும் சகித்தே - அங்கே
இந்தியரின் கண்ணியத்தைக் காத்து வைத்தார்.
கைரேகைப் பதிவு செய்தல் - இந்தியரைக்
கட்டாயக் கூலி செய்யக் கப்பலேற்றல்
தலைவரி கொடுப்பதிலை - சர்க்கார்
தள்ளிவிடச் சம்மதிக்க வெற்றியடைந்தார்.

இந்தியா திரும்பி வந்தார் - சொந்த
இந்நாட்டின் விடுதலைக் குழைத்திடவே
சபர்மதி ஆசிரமத்தை - ஏற்படுத்தி
சத்யாக்ர கப்பயிரை வளர்த்துவந்தார்.
சம்பரான் ஜில்லாவினிலே - அவுரிச்
சாகுபடி கூலிகளைத் தாங்கி யுழைத்தார்.
கெய்ரா ஜில்லாவினிலே - விளைவு
கெட்டவர்க்கு நிலவரி விட்டிடச் செய்தார்.
ஜெர்மன் சண்டைவரக் - காந்தி
சேனையும்பண மும்மிகச் சொர்த்துக் கொடுத்தார்.

நன்றியை நினைப்பார்கள் - இந்த
நாட்டுக்கொரு நல்லவழி பிறக்கு மென்றே
நம்பியிருந் தார்காந்தி - ரௌலட்
சட்டங்களால் இந்தியரை நசுக்க எண்ணம்
கொண்டதைக் கண்டபின்னர் - இதுவரை
கொண்டிருந்த நம்பிக்கை முற்றுந் துறந்தார்.
சாத்வீகப் போர்தொடுக்க - ஜனங்களைச்
சத்திய மெடுத்துக்கொள்ளப் புத்தி புகன்றார்.
பற்பல இடங்களிலே - வெகு
பரபரப் புடன்மக்கள் பதைத்தெழுந்தார்.

நாடெங்கும் கூக்குரலும் - பஞ்சாப்
நாட்டிற்சில பேர்புரிந்த பதற்றங்களும்
'டய'ரென் றொருபாவி - அன்று
ஜலியன்வா லாவிற்சுட்ட சங்கதியும்
ராணுவச் சட்ட அமலும் - இந்த
நாட்டிற் பிறந்தவர்கள் மறப்பாரோ?
கிலாபாத் விஷயத்திலும் - ஆங்கிலரால்
கிடைத்திருந்த வாக்குறுதி தவறியதால்
ஒத்துழைப் பினிமேலே - சிறிதும்
உதவா தென்றுமனம் உறுதிகொண்டார்.



கல்கத்தா விற்கூடிய - விசேஷக்
காங்கிரசின் ஒத்துழையாத் தீர்மானம்
நாட்டுக்கொரு புத்துணர்ச்சி - தந்து
நல்லபல வேலைகளும் நடக்கையிலே
சௌரிசாரா வென்னுமிடத்தில் - வெறிகொண்ட
ஜனம்சிலர் போலீசுக் கச்சேரிக்குத்
தீயிட்டுக் கொளுத்தியதில் - உள்ளே
சிக்கிய இருபத்தொரு பேரும்மாண்டார்.
கேட்டார் இதைக் காந்தி - இயக்கம்
கெட்டுவிட்ட தென்றுகண்டு சட்டமறுப்பைத்

தாமே நிறுத்தி விட்டார் - அந்தத்
தகைமையை உலகுஎங்கும் புகழும் அன்றோ?
சிலநாள் சென்றதன்பின் - காந்தியைச்
சிறைபிடித்தார் குற்றப் பொறுப்பையெல்லாம்
தம்மேல் ஒப்புக்கொண்டே - அதற்குத்
தண்டனையா றுவருடம் கொண்டுசிறையில்
இரண்டு வருடமிருந்தார் - குடலில்
ஏற்பட்ட நோயினுக்குச் சிகிச்சைசெய்து
விடுதலை செய்தார்கள் - பிறகு
வெகுநாள் நிர்மாண வேலைகள் செய்தே

காங்கிரசைப் பலப்படுத்திக் குடிசைக்
கைராட்டைத் தொழில்எங்கும் பரவச் செய்தார்.
முகம்மது அலியின் வீட்டில்-இந்து
முஸ்லிம்களின் ஒற்றுமைக்குப் பட்டினிகொண்டார்.
ஆறுவருடம் பொறுத்தார் - நாட்டின்
அடிமைத் தனங்குறைய ஆள்வோர்க்கே
எண்ணமில்லை யென்று கண்டு - வைசிராய்
இர்வினுக்குத் தம்முடைய எண்ணமெழுதிச்
சத்தியப் போர்தொடுத்தார் - உப்புச்
சட்டத்தை மறுத்திடுவ(து) என்று 'டாண்டி'க்குப்

புறப்பட் டார்காந்தி - அந்தப்
போதுஎழுந்த உணர்ச்சியை ஏதுசொல்லுவோம்!
ஆச்சரியம்! ஆச்சரியம்! - அதை
ஆராலும் முடியச் சொல்ல முடியாது.
டாண்டியில் சட்ட மறுத்தார் - ஒருநாள்
ஜாமத்தில் வந்து சர்க்கார் கைதுசெய்தார்.
நாட்டில்எந்த மூலை முடுக்கும் - சண்டை
நடந்ததில் லட்சம்பேர் சிறை புகுந்தார்.
சாத்வீகம் தவறாமல் - ஜனங்கள்
சந்தோஷ மாகப்பல ஹிம்சை சகித்தார்.

இந்தவிதம் பத்துமாதம் - சண்டை
இடைவிடா மல்எங்கும் நடந்திடவே
காந்தியை வெளியில் விட்டுச் - சர்க்கார்
காந்தி - இர்வின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.
இரண்டாம் வட்டமேஜைக் - கூட்டத்(து)
இந்தியக் காங்கிரசின் பிரதிநிதியாய்
வீரமொழி கள்புகன்றார் - ஏழைகள்
விடுதலை விட்டுஎதுவும் வேண்டாம்என்றே
இந்தியா வருமுன்னால் - சர்க்கார்
இர்வின் உடன்படிக்கை மீறிவிட்டதால்.

வில்லிங்டன் வைசிராயைப் - பார்க்க
விடைவர வேணுமென்று சேதிவிடுத்தார்.
வைசிராய் மறுத்துவிட்டார் - வேறு
வழியின்றிக் காந்தியும் கைதியானார்.
சிறையில் இருக்கும்போதே - அங்கே
சீமையின் மந்திரி திட்டம் ஒன்றினால்
தாழ்த்தப்பட்ட இந்துக்களைத் - தேர்தல்
தனித்தனித் தொகுதியிற் பிரித்து வைத்தார்.
காதில் விழுந்த உடனே - காந்தி
கட்டாயம் பட்டினியிற் சாவேன் என்றார்.



எங்கும் பரபரப்பாய்ப் - பூனா
எரவாடா ஒப்பந்தமும் நிறைவேறி,
சிறையில் இருந்தபடியே - அரிஜன
சேவை செய்ய வசதிகள் செய்துகொடுத்தார்.
சிலநாள் சென்றதன்பின் - இந்துக்கள்
தீண்டாமை விஷயத்தில் மனமிரங்கத்
தாம்ஒரு மூன்றுவாரம் - பட்டினித்
தவஞ்செய்யக் கடவுளின் ஆணையெவரும்
தடைசொல்லக் கூடாதென்றும் - காந்தி
தாமெடுத்த விரதத்தைச் சார்க்கா ரஞ்சி

விடுதலை செய்து விட்டார் - உடனே
சட்டமறுப் பைச்சிறிது நிறுத்தச் சொல்லிப்
பட்டினியை வென்று முடித்தார் - கிழவர்
பயந்தவர் யாவரும் வியந்திடவே
தலைவர்க ளோடுகலந்து - முடிந்தால்
சண்டையை முடித்தேஒரு ராஜிசெய்யவே
வைசிராய் வில்லிங்டனைத் - தாம்
வந்துகாணச் சம்மதிக்கத் தந்திகொடுத்தார்.
பதில்தந்தி மறுத்திடவே - முதலில்
பாடுபட்டுத் தாம்வளர்த்த பயிரான

சபர்மதி ஆச்சிரமத்தை - மூடித்
தாமும்சில சீடர்களும் சிறைபுகுந்தார்.
சிறையினில் முன்போல - அரிஜன
சேவைக்கு வசதி சர்க்கார் குறைத்ததனால்
வசதிகள் அவைபோனால் - இனித்தாம்
வாழ்வதன் லட்சியம் போனதென்றே,
பட்டினியிற் சாகத்துணிந்தார் - உலகம்
பயந்து நடுநடுங்கிப் பரதவிக்கத்
தெய்வச்செய லேபோல - காந்தியைத்
திரும்பவும் சர்க்கார் விட்டுவிடவே

செய்வதுதான் இன்னதென்று - தமக்குத்
தெளிய விளங்கவில்லை அதனாலே
'கிச்சிக் கிச்சித் தம்பளம்' போல் - சர்க்கார்
பிடிக்கவும் விடுக்கவும் செய்ய நடத்தல்
கண்ணியக் குறைவென்று - தண்டனைக்
காலம் ஒருவருடம் கழியுமட்டும்
அரிஜன சேவை ஒன்றே - அதன்பின்
ஆண்டவன் விட்டவழி விடட்டும் என்றே
ஏழைகளுக்(கு) உழைப்பதற்கே - தவம்
ஏந்தும் காந்திபுகழ் என்றும் வாழ்கவே!

குறிப்புரை:- *சரிதம் - வரலாறு; மலிந்திருக்கும் - மிகுதியாக இருக்கும்; பூதலத்தில் - உலகில்; கனதையென்று - பெருமை என்று; உத்தமர் - மேலானவர்; உத்தமி - பெண்பால்; ஆசாரம் - ஒழுக்கம்; வாசகத்தை - சொல்லை; காமுறுதல் - விரும்புதல்; சீமை - அயல்நாடு; தன்கையே தனக்குதவி - பிறர் உதவியை நாடாமல் தனக்கு வேண்டிய செயல்களைத் தானே செய்து கொள்ளுதல்; சாந்தமுடன் - அமைதியுடன், சர்வேசன் - எங்கும் நிறைந்த இறைவன்; இடர் - துன்பம்; சகித்து - பொறுத்து; சேவை - தொண்டு; கண்ணியம் - மேன்மை.*

# VIII. சமுதாயப் பாடல்கள்

## *184. புதிய சமுதாயம்*

பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்;
பணம்என்ற மோகத்தின் விசைதீர வேண்டும்;
கூட்டாளி வர்க்கங்கள் குணமாற வேண்டும்;
குற்றேவல் தொழில்என்ற மனம்மாற வேண்டும்;
வீட்டோடு தான்மட்டும் சுகமாக உண்டும்
வேறுள்ளோர் துன்பங்கள் கண்ணாரக் கண்டும்
நாட்டோடு சேராத தனிபோக உரிமை
நடவாதுஇங்(கு) இனியென்று நாம்அறிதல் பெருமை. 1

உடலத்தின் வடிவத்தில் பேதங்கள் உண்டு;
உள்ளத்தின் எண்ணத்தில் வித்தியாசம் உண்டு;
சடலத்தை ஆள்கின்ற பசிதாகம் எல்லாம்
சகலர்க்கும் உலகத்தில் சமமானது அன்றோ!
கடல்ஒத்த தொழிலாளர் வெகுபாடு பட்டும்
கஞ்சிக்கு வழியின்றிக் கண்ணீரைக் கொட்டும்
மடமிக்க நிலைமைக்கு மாற்றில்லை யானால்
மனிதர்க்குஇங்(கு) அறிவுள்ள ஏற்றங்கள் ஏனோ? 2

பசைமிக்க தொழில்செய்து பலன்முற்றும் யாரோ
பரிவற்ற முதலாளி பறிகொண்டு போக
பசிமிக்கு மிகநொந்த தொழிலாளர் எல்லாம்
பகையென்று நமையெண்ணிப் பழிகொள்ளு முன்னால்
வசைமிக்க நிலைமாற வழியொன்று சூழ்வோம்
வறுமைக்கே இடமற்ற சமுதாய வாழ்வை
இசைமிக்க முறைகண்டு ஏற்பாடு செய்வோம்
எல்லாரும் குறைவற்ற நலமெய்தி உய்வோம். 3

குறிப்புரை:- *சகலர்க்கும் - எல்லார்க்கும்; வசை - குற்றம், பழிப்பு, இகழ்ச்சிச் சொல்.*

## 185. பூமிதானப் பயணம்

பூமி தானம் செய்வதே
புண்ணியத்திற் புண்ணியம்
புனித மான முறையில் நாட்டின்
வறுமை போகப் பண்ணிடும்;
சாமி சாட்சி யாக எங்கும்
சண்டை கள்கு றைந்திடும்;
சரிநி கர்ச மான வாழ்வு
சத்தி யம்நி றைந்திடும். 1

ஏழை யென்றும் செல்வர் என்றும்
ஏற்றத் தாழ்வு போய்விடும்;
எங்கும் யாரும் பகைமை யின்றிப்
பங்கு கொள்வ தாய்விடும்;
கோழை யின்பொ றாமை தூண்டும்
குற்றம் யாவும் நீங்கிடும்;
கொடுமை யான பஞ்சம் விட்டுக்
குணந லங்கள் ஓங்கிடும். 2

உடலு ழைத்தே உணவு முற்றும்
உண்டு பண்ணும் உழவர்கள்
உரிமை சொல்ல நிலமி லாமல்
உள்ளம் வெந்துஇங்(கு) அழுவதா?
உடல் சுகித்துஇங்(கு) உலகி னுக்கே
உதவி யற்ற ஒருசிலர்
ஊரி லுள்ள பூமி முற்றும்
உரிமை கொண்டு திரிவதா? 3

உலகி லுள்ள நிலம னைத்தும்
உலக நாதன் உடைமையே;
ஊரி லுள்ள விளைநி லங்கள்
ஊர்ப்பொ துவாம் கடமையே.



கலக மின்றிச் சட்ட திட்டக்
கட்டுப் பாடும் இன்றியே
கவலை யற்ற சமர சத்தின்
காட்சி காண நன்றிதே. 4

காந்தி தர்ம நெறியைக் காக்கக்
கடவு ளிட்ட கட்டளை
கருணை யோடு பூமி தானம்
செய்யக் கோரும் திட்டமே;
ஆய்ந்து பார்க்கின் உலகில் எங்கும்
அமைதி யற்ற காரணம்
அவர வர்க்கு நிலமி லாத
ஆத்தி ரத்தின் பேரில்தான். 5

தான தர்ம ஆசை யேநம்
தமிழ கத்தின் கல்வியாம்;
தந்து வக்கும் இன்ப மேநம்
தலைசி றந்த செல்வமாம்;
தீனருக்குப் பூமி கொஞ்சம்
தான மாகத் தருவதால்
தேச மெங்கும் அமைதி பெற்றுத்
திருவி லாசம் பெருகுமே. 6

கும்பி வேகும் பசிமி குந்த
கோப தாபம் எண்ணவே
கொடுமை சேர்பு ரட்சி வந்து
கொள்ளை போகு முன்னமே
அன்பி னோடு பூமி தானம்
ஆன மட்டும் செய்வதே
அச்ச மின்றி நாட்டில் எங்கும்
அமைதி பெற்றே உய்வதாம். 7

விளைவு முற்றும் சொந்த மாகும்
விளைநி லங்கள் தந்திடில்

வேலை யற்ற கோடி மக்கள்
விளைச்சல் செய்ய முந்துவார்.
களைவி ழுந்து தரிசு பட்ட
கோடி கோடி காணிகள்
களிசி றக்கச் செழுமை பெற்றுக்
கதிர்கள் முற்றும் காணலாம். 8

காந்தி சொன்ன ராம ராஜ்யம்
காண வல்ல தலைவனாய்க்
கர்ம பக்தி, ஞான யோகம்
கருதும் புத்தி நிலையனாய்ச்
சாந்த சத்தி யாக்ர கத்தின்
சாட்சி யாம்நம் வினோபா
சாற்று கின்ற பூமி தானம்
சோற்றுப் பஞ்சம் மாற்றுமே. 9

விரத மாகக் காந்தி யண்ணல்
விட்டுப் போன வேலையை
விட்டி டாமல் கட்டிக் காக்கும்
வீறு கொண்ட சீலனால்
பரத நாட்டின் தர்ம சக்தி
பாரில் எங்கும் சூழவே
பகையில் லாமல் யுத்தம் என்ற
பயமில் லாமல் வாழலாம். 10

தெய்வ ஜோதி காந்தி யண்ணல்
தேர்ந்தெ டுத்த சீடனாம்
திருவி னோபா பாவே நமது
தேச நன்மை நாட்டினார்.
வையம் எங்கும் பெருமை பெற்ற
வண்மை மிக்க தமிழகம்
வந்து பூமி தானம் வாங்க
வரவு சொல்லி வாழ்த்துவோம். 11



கருணை வாழ்வின் அருண னான
காந்தி சீடர் வருகிறார்.
கால் நடந்தே ஊர்கள் தோறும்
கைகு விக்கப் பெறுகிறார்
தருண மீது தமிழ கத்தின்
தனிமை யாகும் வண்மையைத்
தாங்கிப் பூமி தானம் ஈந்து
தர்ம வேள்வி பண்ணுவோம். 12

வாழ்க வாழ்க காந்தி நாமம்
என்றும் நின்று வாழ்கவே!
வந்து தித்த நம்வி னோபா
வாய்மை யாளன் வாழ்கவே!
வாழ்க பூமி தானம் செய்யும்
வண்மை போற்றும் யாவரும்
வாழ்க சாந்த சத்தியத்தில்
வந்த நம்சு தந்தரம். 13

### *186. தீண்டாமை நீங்க*

தீண்டாமை என்கிற தீய வழக்கம்
தீரத் தொலைந்திட நல்லநா ளாச்சு!
ஆண்டவன் பொதுவென்று நம்பின யாரும்
அந்தப் பழியை அகற்றிட வாரும். 1

இந்த வழக்கம் நாளுக்கு நாளாய்
இந்து மதத்தின் வெட்டுது வாளாய்;
நிந்தை மிகுந்து அழிந்திடு முன்னே
நீங்கிட யாரும் எழுந்திடும் இன்னே! 2

வேதத்தி லில்லை கீதையில் இல்லை
வேறுள சாத்திரம் யாருக்கினி.
சாதித்து யாரையும் சண்டாளன் என்றிடும்
சாத்திரம் சத்தியச் சம்மதமோ? 3

நால்வர் உரைத்த தேவாரத்தில் இல்லை
நந்தன் குலத்துக்கு நிந்தைசொலல்;
பால்வரும் ஆழ்வார் பரசுரத்து இல்லை
பாணர் வளர்ந்ததைக் கோணலெனல். 4

சங்கரர் காசியில் அங்குஎன்ன சொன்னார்?
சண்டாள பக்தனும் தங்குரு வென்றார்;
எங்கள்ரா மானுஜர் நம்பலம் என்றே
யாரையும் கொண்டுடன் கோயிலுட் சென்றார். 5

காட்டொரு வேடனைத் தம்பியென்று எய்திக்
கழுகினைத் தந்தையே னக்கடன் செய்து
சேட்டைக் குரங்கையும் தன்னுடன் சேர்த்துச்
சீதாபி ராமனும் செய்ததைப் பார்த்தோம். 6

கண்ணப்பன் எச்சிலை முக்கண்ணன் உண்டார்;
கண்ணபி ரான்கடை நீரையுங் கொண்டார்;
எண்ணிய பக்தருக்கு எளியது தெய்வம்
என்பது வேநல்ல இந்துவின் தர்மம். 7

குறிப்புரை:- முக்கண்ணன் - மூன்று கண்களை உடைய சிவபெருமான்; பக்தருக்கு - அன்பர்க்கு. பாடல் 4இல் தேவாரம் மூவரால் எழுதப்பட்டது. எதுகை நோக்கி நால்வர் எனக் குறிக்கப்பட்டுள்ளது.)

## 187. ஓட்டடடா

ஓட்டடா! ஓட்டடா!
நாட்டைவிட்டே ஓட்டடா
தீட்டடா மனிதருக்குள்
தீண்டல்என்ற தீமையே. 1

தொத்து நோய்கள் மெத்தவும்
தொடர்ந்து விட்ட பேரையும்
தொட்டுக் கிட்டிச் சொஸ்தமாக்கல்
தர்மம் என்று சொல்லுவார்.



சுத்த மேனும் ஜாதியால்
தொடப்ப டாதிங்கு என்றிடில்
தொத்து நோயைக் காட்டிலும்
கொடியர் என்று சொல்வதோ? 2

நாய்கு ரங்கு பூனையை
நத்தி முத்த மிடுகிறோம்
நரகல் உண்ணும் பன்றியும்
நம்மைத் தீண்ட ஒப்புவோம்;
ஆயும் நல்ல அறிவுடை
ஆன்ம ஞான மனிதனை
அருகி லேவ ரப்பொறாமை
அறிவி லேபொருந்துமோ? 3

செடிம ரங்கள் கொடிகளும்
ஜீவர் என்ற உண்மையை
ஜெகம் றிந்து கொள்ளமுன்பு
செய்தது இந்த நாடடா?
முடிவு அறிந்த உண்மை ஞானம்
முற்றி நின்ற நாட்டிலே
மூடரும் சிரிக்கும் இந்த
முறையி லாவ ழக்கமேன்? 4

உயிரி ருக்கும் புழுவையும்
ஈச னுக்காம் உறையுளாய்
உணரு கின்ற உண்மைஞானம்
உலகி னுக்கு ரைத்த நாம்
உயருகின்ற ஜீவருக்குள்
நம்மொடு ஒத்த மனிதனை
ஒத்திப் போகச் சொல்லுகின்ற(து)
ஒத்துக் கொள்ள லாகுமோ? 5

அமல னாகி அங்குமிங்கும்
எங்கு மான கடவுளை
ஆல யத்துள் தெய்வமென்றே
அங்கி ருந்தே எண்ணுவோம்;

விமல னான கடவுள்சக்தி
மனிதன் கிட்டி விலகினால்
வேறு ஜீவன் யாவும்அந்த
விமலன் என்பது எப்படி? 6

ஞாய மல்ல ஞாயமல்ல
ஞாய மல்ல கொஞ்சமும்
நாடு கின்ற பேர்களை
நாமி டைத்த டுப்பது;
பாயு மந்த ஆற்றிலே
பருகி வெப்பம் ஆறிடும்
பறவை யோடு மிருகமிந்தப்
பாரி லார்த்த டுக்கிறார்? 7

*குறிப்புரை:- அமலன் - குற்றமில்லாதவன்; விமலன் - மேலானவன்.*

## *188. விட்டது சனியன்*

விட்டது சனியன் விட்டது சனியன்
விட்டது நம்மை விட்டதடா!
கொட்டுக முரசு கொம்பெடுத்து ஊது
கொடும்பாவி கள்ளைக் கொளுத்தி விட்டோம். (விட்) 1

செத்தது கள்பேய் இத்தினம்; இதைஇனி
தீபா வளிபோல் கொண்டாடு;
பத்திரம் கள்மேல் சித்தம்வா ராவிதம்
பார்ப்பதும் காப்பதும் உன்பாரம். (விட்) 2

ஈசுவர வருடம் புரட்டா சியிலே
இங்கிலீஷ் ஒன்றுபத்து முப்பத்தேழில்
சாசுவதம் போலவே நம்மைப்பிடித்து ஆட்டிய
சனியன் கள்கடை சாத்திவிட்டார்! (விட்) 3

கூலியைத் தொலைப்பதும் தாலியை இழுப்பதும்
கூசிட ஏசிடப் பேசுவதும்
சாலையில் உருண்டொரு சவமெனக் கிடப்பதும்
சந்தி சிரிப்பதும் இனியில்லை! (விட்) 4



அழுதிடும் மக்களும் தொழுதிடும் மனைவியும்
ஐயா! பசியுடன் காத்திருக்க.
பொழுதுக்கும் உழைத்தது முழுவதும் கூலியைப்
போதையில் இழப்பதும் இனியில்லை. (விட்) 5

பெற்றதன் குழந்தைகள் சுற்றி நடுங்கப்
பேயெனும் உருவொடு வாய்குறை
உற்றவர் உறவினர் காறி உமிழ்ந்திட
ஊரார் நகைப்பதும் ஒழிந்ததினி. (விட்) 6

விடிகிற வரையிலும் அடிதடி ரகளை
வீதியில் மாதர்கள் ரோதனமும்
குடிவெறி யால்வரும் கொடுமைகள் யாவையும்
கூண்டோ(டு) ஒழிந்தன இனிமேலே! (விட்) 7

எல்லா விதத்திலும் கள்ளால் வரும்பணம்
ஏளனத் துக்கே இடமாகும்;
நல்லார் சரியெனக் கொள்ளா வரியிதில்
நம்மர சுஅடைந்திட்ட பழிநீங்கும். (விட்) 8

போதையைத் தந்தபின் நீதியை ஓதுதல்
புத்தி யுடைஓர் அரசர்ஆமோ?
பேதைக ளாக்கிப்பின் பிழைபுரிந் தாயெனல்
பேச்சுக் காகிலும் ஏச்சன்றோ? (விட்) 9

காந்தியின் அருந்தவம் சாந்தமும் பலித்தது;
காங்கிரசு ஆட்சியும் ஓங்கிடுமே;
போந்தது புதுயுகம்; தீர்ந்தது கலிபலம்;
பூமிக் கேஒரு புதுமையிது! (விட்) 10

சக்கர வர்த்திநம் ராஜா ஜீக்கொரு
சன்மா னம்நாம் தந்திடுவோம்;
அக்கரை யோடவர் ஆணைப் படிகள்ளில்
ஆசை புகாவிதம் காத்திடுவோம். (விட்) 11

பாழுங் கள்ளால் பட்டதை நினைந்தால்
பதைக்குது நெஞ்சம் கொதிக்குதடா!
வாழும் நாடுஇனி; ஏழை கள்இல்லை;
வானவர் வணங்கிட வாழ்ந்திடுவோம்! (விட்) 12

## *189. எது வேண்டும்?*

எது உனக்கு வேண்டு மென்று
எண்ணிப் பார்த்துச் சொல்லடா!
மதிமி குந்த மனித ஜன்ம
மகிமை காத்து நில்லடா! 1

ஞானமுள்ள நாடுஇது என்று
போர்நி லைத்தல் வேண்டுமா?
சேனை கொண்டு சென்றுகொன்று
சீர்கு லைத்தல் வேண்டுமா? 2

தந்தி ரத்தை வெல்லும்தூய்மை
தாங்கி நிற்க வேண்டுமா?
எந்திரத்தின் அடிமையாகி
ஏங்கி நிற்க வேண்டுமா? 3

அறிவு கொண்டு மக்களுக்கே
அன்பு செய்தல் வேண்டுமா?
செறிவு கொண்ட சக்திபெற்றுச்
சேதம் செய்தல் வேண்டுமா? 4

வெள்ளை யாகத் தீமையை
எதிர்த்து வெல்ல வேண்டுமா?
கள்ளமாய் மறைந்து செய்யும்
காரி யங்கள் வேண்டுமா? 5

அன்பு சொல்லித் தீமையை
அடக்கி யாள வேண்டுமா?
வன்பு பேசித் தீமையை
வளர்த்து வைக்க வேண்டுமா? 6



சத்தி யத்தின் பற்றுக்கொண்ட
சாந்த வாழ்வு வேண்டுமா?
மற்ற செய்து மனிதமேன்மை
மாய்ந்து போக வேண்டுமா? 7

தீர மாகப் பொறுமை காட்டும்
திறம டுக்க வேண்டுமா?
வீர மென்று கோப மூட்டும்
வெறிபி டிக்க வேண்டுமா? 8

ஆசை யற்ற சேவைசெய்யும்
நேச வேலை வேண்டுமா?
தேச பக்தி மாசுகொள்ளும்
நாசவேலை வேண்டுமா? 9

தெய்வம் உண்மை என்றுநம்பும்
தேச பக்தி வேண்டுமா?
பொய்யும் போரும் புனிதமென்று
பேசும் புத்தி வேண்டுமா? 10

வலியப் பூமி தானம் செய்து
வாழ்த்துக் கொள்ள வேண்டுமா?
வலிமை வந்து தம்மைத்தாக்கி
வீழ்த்திக் கொல்ல வேண்டுமா? 11

## *190. கூட்டுறவில் சேருங்கள்*

கூட்டுறவில் சேருங்கள்
கூடி வாழப் பாருங்கள்
நாட்டில் மிக்க ஏழையும்
நன்மை பெற்று வாழலாம். (கூட்) 1

சேர்ந்து வாழும் நிலைமையே
சீர்சிறந்த வலிமையாம்
சோர்ந்து போன மக்களும்
சுகங்கள் நாடத் தக்கது. (கூட்) 2

குடிசை வாழும் எளியரும்
குறைகள் தீர வழிஇது
கடிசி லாத கைத்தொழில்
கவலை நீக்கி வைத்திடும். (கூட்) 3

பட்டிக் காடும் சீர்பெறும்
பண்ட மாற்றல் நேர்பெறும்
குட்டிப் பண்ணைக் காரரும்
கூட்டுறவால் பேர்பெறும். (கூட்) 4

கைத் தறிக்கு நூல்வரும்
கழனி ஏற்றச் சால்பெறும்
வைத்தி ருக்கும் விளைபொருள்
வாங்க நல்ல விலைவரும். (கூட்) 5

தொழில் நடத்த வசதிகள்
துணை இலாத அசதியால்
பழுது பட்ட மாந்தரை
பாது காக்க வாய்ந்ததாம். (கூட்). 6

## 191. கூட்டுறவு இல்லாத நாடு

கூட்டுற வில்லா ஒருநாடு
குறைவற வாழ்வது வெகுபாடு;
மேட்டிமை பேசும் நாடெல்லாம்
மேன்மை பெற்றது கூட்டுறவால். 1

கல்வி சிறந்திடும் கூட்டுறவால்
கலைகள் நிறைந்திடும் கூட்டுறவால்
செல்வம் வலுத்திடும் கூட்டுறவால்
சேமம் நிலைத்திடும் கூட்டுறவால். 2

சோம்பலை ஒழித்திடும் கூட்டுறவு
சுறுசுறுப் பளித்திடும் கூட்டுறவு



தேம்பிடும் கைத்தறி நெசவாளர்
திடமுறச் செய்திடும் கூட்டுறவு. 3

வாணிபம் பெருகிடும் கூட்டுறவால்
வளப்பம் மிகுந்திடும் விவசாயம்
நாணய நடத்தைகள் அதிகரிக்கும்
நம்பிக்கை வளர்ந்திடும் கூட்டுறவால். 4

பண்டக சாலைகள் நிறைவாகும்;
பணமுடை என்பது குறைவாகும்;
கொண்டுள, காரியம் எதுவெனினும்
கூட்டுற விருந்தால் அதுமுடியும். 5

அன்பு புலப்படும் கூட்டுறவால்
ஆட்சி பலப்படும் கூட்டுறவால்
தென்பு மிகுந்திடும் யாருக்கும்
தேசம் உயர்த்திடும் பாருக்குள். 6

கூட்டுற வென்னும் கொள்கையினைக்
குற்றமில் லாமல் மேற்கொண்டால்
நாட்டில் தரித்திரம் நீங்கிவிடும்
நம்முடை சுதந்தரம் ஓங்கிவிடும். 7

## 192. யார் தொண்டன்?

தொண்டு செய்யக் கற்றவன்
துயரம் போக்கும் உற்றவன்
சண்டைப் போடும் மக்களைச்
சரச மாக்கி வைக்கவே. (தொண்) 1

தீர வாழ்வு சொல்லுவான்
தீமை யாவும் வெல்லுவான்
ஈர மற்ற செய்கைகள்
வீர மென்றல் பொய்யென. (தொண்) 2

சேவை செய்யும் நல்லவன்
செம்மை கண்ட வல்லவன்
தேவை யுள்ள யாரையும்
தேடிச் சென்று சேருவான். (தொண்) 3

அன்பி னைப்பெ ருக்குவான்
ஆசை யைச்சு ருக்குவான்
துன்ப முற்ற எவரொடும்
துணையி ருக்கத் தவறிடான். (தொண்) 4

பணிவு மிக்க தொண்டனே
பரம ஞானம் கண்டவன்
தணிவு மிக்க சொல்லினால்
தரணி எங்கும் வெல்லுவான். (தொண்) 5

கூவி டாமல் ஓடுவான்
குறைகள் தீர்க்க நாடுவான்
ஏவி டாத தொண்டனே
எதிலும் வெற்றி கொண்டவன். (தொண்) 6

கடவுள் என்ற சக்தியைக்
கருதி டாத பித்தரின்
மடமை நீக்கும் சேவைதான்
மனிதர்க்கு இன்று தேவையாம். (தொண்) 7

பூமி தான போதகன்
பூஜி தன்வி நோபாவின்
புதுமை மிக்க தொண்டுதான்
போற்ற வேண்டும் இன்றுநாம். (தொண்) 8

## *193. குடிப்பதைத் தடுப்போம்*

குடிப்பதைத் தடுப்பதே
கோடிகோடி புண்ணியம்
அடிப்பினும் பொறுத்துநாம்
அன்புகொண்டு வெல்லுவோம்! (குடி) 1



மக்களை வதைத்திடும்
மனைவியை உதைத்திடும்
துக்கமான கள்ளினைத்
தொலைப்பதே துரைத்தனம். (குடி) 2

பித்தராகி ஏழைகள்
பேய்பிடித்த கோலமாய்ப்
புத்திகெட்டுச் சத்தியற்றுப்
போனதுஇந்தக் கள்ளினால் (குடி) 3

பாடுபட்ட கூலியைப்
பறிக்கும்இந்தக் கள்ளினை
வீடுவிட்டு நாடுவிட்டு
வெளியிலே விரட்டுவோம்! (குடி) 4

கஞ்சியின்றி மனைவிமக்கள்
காத்திருக்க வீட்டிலே
வஞ்சமாகக் கூலிமுற்றும்
வழிபறிக்கும் கள்ளினை (குடி) 5

மெய்தளர்ந்து மேனிகெட்டுப்
போனதுஇந்தக் கள்ளினால்;
கைநடுக்கங் கால்நடுக்கங்
கண்டதுஇந்தக் கள்ளினால். (குடி) 6

தேசமெங்கும் தீமைகள்
மலிந்ததுஇந்தக் கள்ளினால்;
நாசமுற்று நாட்டினர்
நலிந்ததுஇந்தக் கள்ளினால். (குடி) 7

குற்றமற்ற பேர்களும்
கொலைஞராவர் கள்ளினால்;
கத்திகுத்துச் சண்டைவேண
கள்ளினால் விளைந்துவே. (குடி) 8

குற்றம்என்று யாருமே
கூறும்இந்தக் கள்ளினை
விற்கவிட்டுத் தீமையை
விதைப்பதென்ன விந்தையே! (குடி) 9

## 194. கர்ப்பிணிக்குப் பூ முடித்தல்

கல்லி னுட்சிறு தேரை யோடு
கருவி லேவளர் யாவையும்
எல்லை யில்பல ஜீவ கோடியை
எங்கு மாய்நின்று காத்திடும்
வல்ல வெம்பெரு மான்அருள்தனால்
வஞ்சி யேபிள்ளை யாண்டானை
நல்ல பூமுகை சூட்டு வோம்அந்த
நாதன் உன்றனைக் காக்கவே. 1

மல்லிகை நல்லமுல்லை யாதிய
வெள்ளை யாமலர் சூட்டுவோம்;
சொல்லும் அன்னவை வெண்மை போலநீ
சுத்த மாயிரு நித்தமும்;
பல்லு முன்றன்ப டுக்கை யோடின்னும்
பாவை யேஉன்றன் யாவையும்
நல்ல வெள்ளை யெனச் சொல்லும்படி
நாளும் வைத்திட வேண்டியே. 2

வாடி னாலும் வதங்கி னாலும்தம்
வாடை வீசுதல் வாடிடா
நாடி யேமரு காம ருக்கொழுந்
தோடு நன்மகிழ் சூட்டுவோம்;
பாடு நீமிகப் பட்ட போதிலும்
பக்தி யோடிரு நித்தமும்;
தேடி யேஉனைத் தேவன் வந்தருள்
செய்கு வான்பய மில்லையே. 3



தொட்ட போதிலும் சற்று வாடிடும்
சொல்லொ ணாமிக மெல்லிது
இட்ட மாகவே யாரும் ஆசைகொள்
இன்ப ரோஜா இம்மலர்
கஷ்ட மாகிய வேலை யொன்றையும்
கட்டி நீசெயல் விட்டிடு;
நுட்ப மாகிய உன்றன் மேனியும்
நொந்தி டில்துயர் தந்திடும். 4

நீளுமா மலர்த் தாழை யோடு
நிறைந்த மாமலச் சண்பகம்
சூழும் நல்ல மணமி குந்தவை
சுத்த ரிக்கிவை சூட்டுவோம்
வாழும் அந்த வனமு ழுவதும்
வாடை யோடியு லாவல்போல்
நாளும் நீஉன்தன் வீடி(து) எங்கும்
நடந்து லாவுதல் வேண்டியே. 5

சேற்றில் நின்று வளர்ந்து நீரினிற்
சேர்ந்தி ருப்பினும் தாமரை
சாற்றும் ஓரள வுக்கு மீறிடத்
தான்அ ருந்துமோ நீரினை?
சோற்றின் மூழ்கி யிருந்த போதிலும்
சொற்ப மாகவே சுத்தமாய்ப்
போற்றி யுண்ணுதல் வேண்டு மென்றுஅந்தப்
பூமு டித்தனள் பூவையே. 6

## 195. மக்கட் செல்வம்

பெற்றிடும் செல்வத்(து) எல்லாம்
பெரியது மக்கட் செல்வம்;
உற்றிடும் இன்பத்(து) எல்லாம்
உயர்ந்தது மக்கள் இன்பம்;

மற்றிதை உலகில் எந்த
மனிதனும் மறுக்க ஒணாது;
சற்றிதை மதித்து நாமும்
சரிவர நடப்போ மாக. 1

சிறந்திடும் இன்ப மான
சிசுவது நமக்கு வந்து
பிறந்திடு முன்னும் பின்னும்
நாம்செய்யும் பிழைக ளாலே
அருந்தவக் குழந்தை இன்பம்
அனுபவிப் பதற்கு முன்னால்
இறந்திடும் அதனைப் போல
இன்னொரு துன்பம் உண்டோ? 2

உருவினில் குறைந்த(து) என்றும்
உடல்மிக மெலிந்த(து) என்றும்
அறிவினில் குறைந்த(து) என்றும்
அழகினை இழந்த(து) என்றும்
பிறவியின் குறைகள் எல்லாம்
பெற்றவர் குற்றத் தாலே
கருவினில் அமைந்த(து) அல்லால்
கடவுளின் குற்ற முண்டோ? 3

விதிவிலக்கு அறிந்து வாழ்ந்து
விமலனை மனத்துள் எண்ணி
மதியினைக் கொண்டு சுத்த
மார்க்கத்தில் நின்று நாமும்
புதல்வரைப் பெற்று மற்றும்
புத்தியாய் வளர்ப்போ மானால்
இதமுற வந்த மக்கள்
இளமையில் இறப்ப துண்டோ? 4

வித்தினைப் போற்றித் தூவும்
விளைநிலம் பழுது பார்த்துச்



சுற்றிடும் மிருக வாசை
துடைத்திடா வேலி சுற்றிப்
பத்தியில் காத்துப் பண்ணைப்
பயிரது செய்து விட்டால்
சொத்தையாய்ச் சோகை யாகத்
தோன்றுமோ செந்நெல் சொல்வாய்? 5

*குறிப்புரை:- மதி - அறிவு; புத்தி - அறிவு; சோகை - ஒருவகை நோய். இரத்தக் குறைவால் முகம் வெளுத்துக் காணப்படுவது.*

## *196. ஒரு மருந்து*

தெய்வத் தனம்மிக்க மானிட சென்மம்
தீமை வளர்த்துத் திகைப்பதும் என்னே!
கையில் கடுங்கொலைக் கருவிகள் கொண்டு
கண்ணில் வெறிகொண்ட பார்வை மருண்டு
வெய்யில் புழுவென்ன வேதுடி துடிப்போம்
வேதனை பொங்கும் மனம்படும் பாடும்
வையத்தில் எங்கும் மனிதர்கள் யாரும்
வாழ்க்கையின் இன்பம் இழந்தனர் பாரும். 1

அன்பிற்கென் றேவந்த மனிதப் பிறப்பே
ஆறறி வுள்ளதென் பார்கள் சிறப்பே
துன்பத்துக் கேமுற்றும் அறிவைச் செலுத்திச்
சுட்டு மடிக்கிறார் ஊரைக் கொளுத்தி.
இன்பம் அடைந்தவர் யாரையும் காணோம்
ஏதுக்கு மக்களைக் கொல்லுவர் வீணே!'
என்பத்தை மாற்ற மருந்தென்ன வென்றே
ஏங்குவர் யாரும் அறிஞர்கள் இன்றே. 2

கொஞ்சிக் குலாவுதல் மக்கள்ம றந்தார்
கூடிப் பழகுதல் கூடக்கு றைத்தார்
அஞ்சிந டுங்கிஒ துங்குகின் றார்கள்
ஆகாயம் பார்த்துப் பதுங்குகின்றார்கள்.

வஞ்சனை யற்ற வலிமையில் லாமல்
வானத்தில் வந்தே எதிர்க்கநில் லாமல்
குஞ்சுகு ழந்தைகள் பெண்களைக் கொல்வார்
கோரத்தை வீரத்தின் போரென்று சொல்வார்கள். 3

வாளுக்கு வாளாம் வில்லுக்கு வில்லாம்.
வகைமிக்க ஆயுதம் தீர்ந்திடில் மல்லாம்!
ஆளுக்கே ஆள்நின்று நேருக்கு நேராம்
ஆண்மையும் ஆற்றலும் செய்வது போராம்!
நாளுக்கு நாள்வந்து நள்ளிருள் தன்னில்
நரிபோலும் குறிதேடும் கள்ளர்கள் என்னப்
பாலுக்கு வாய்வைக்கும் பாலரைக் கொல்வார்
பாவத்தை நாகரீ கம்மெனச் சொல்வார்! 4

எந்திர வித்தைகள் வேணது கற்றோம்!
என்னென்ன மோபல புதுமைகள் பெற்றோம்!
சந்திரன் செவ்வாய் மண்டலத் தோடும்
சங்கதி பேச வழிகளைத் தேடும்
அந்தமில் லாபல சக்திகள் உற்றும்
அடிதடி சண்டையை விட்டிட மட்டும்
தந்திரம் ஒன்று படித்திலம் ஐயோ!
தரணியில் மக்கள் தவிப்பது பொய்யோ? 5

இத்தனை தீமைக்கும் ஏற்ற மருந்து,
இந்திய ஞானிகள் கண்ட மருந்து;
உத்தமர் யாரும் உவக்கும் மருந்து
உலகத்தில் துன்பம் ஒழிக்கும் மருந்து;
சத்தியம் சாந்தம் இரண்டு சரக்கைச்
சமனிடை அன்பெனும் தேனில் குழைத்துப்
பத்தியம் தெய்வ நினைப்பொடும் உண்டால்
பாருக்குள் பேருக்கும் போரிலை கண்டாய். 6



### 197. சுதந்தரம் யாது?

அச்சம் விட்டது சுதந்தரம்
அன்பு விடாதது சுதந்தரம்;
இச்சைப் படிசெயல் சுதந்தரம்;
இடர்செய் யாதது சுதந்தரம்;
பிச்சை கொள்ள விரும்பாது
பிறருக் கீய வருந்தாது
கொச்சை மொழிகளைச் சொல்லாது
கோணல் வழிகளில் செல்லாது. 1

மடமை விட்டது சுதந்தரம்
மானம் விடாதது சுதந்தரம்;
கடமை உற்றது சுதந்தரம்;
கபடம் அற்றது சுதந்தரம்
கொடுமை கண்டு பொறுக்காது
கொடியர் தமையும் வெறுக்காது
அடிமை செய்து சுகிக்காது
யாரையும் அடிமை வகிக்காது. 2

கொல்லக் கூசும் சுதந்தரம்
கொள்கைக்கு உயிர்தரும் சுதந்தரம்
எல்லை விட்டு நடக்காது
எதிரியை ஒண்டி மடக்காது
வெல்லற் கேனும் பொய்யாது
வேற்றுமைக் காரரை வையாது
பல்லைக் கெஞ்சிப் பிழைக்காது
பட்டதன் தோல்வி ஒளிக்காது. 3

தன்சோ றுண்பது சுதந்தரம்
தன்துணி யணிவது சுதந்தரம்
என்னே வறுமை வந்தாலும்
எத்தனை வறுமை வந்தாலும்

தன்னேர் செம்மை பிரியாது
தன்குறை சொல்லித் திரியாது
பொன்சேர் போகம் மதிக்காது
பொய்ப்புகழ் பாடித் துதிக்காது. 4

தாழ உரைப்பது சுதந்தரம்;
தன்மதிப் புள்ளது சுதந்தரம்;
ஏழை செல்வன்என்(று) எண்ணாது
எவருக் கும்குறை பண்ணாது
ஊழிய னாகப் பணிசெய்யும்
உலகுக்கு எல்லாம் அணிசெய்யும்
வாழிய மக்கள் எல்லோரும்
வாழிய வென்றே அதுகோரும். 5

குறிப்புரை:- கடமை - கடப்பாடு, 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்பது அப்பர் வாக்கு.

## 198. கிளியும் வழியும்

ஆதிசு தந்தரத்தைக் கிளியே அடைய வழிதேடு;
நீரதன் திருவடியைக் கிளியே நாடி செயம்பாடு. 1

இந்தப் பெருநிலத்தில் கிளியே இச்சைப் படிப்பறக்க
சொந்தம் உனக்கிலையோ கிளியே செல்லடி வாய்திறந்து. 2

காட்டினி லேபிறந்தாய் கிளியே காற்றென வேபறந்தாய்
கூட்டினி லேகிடக்க கிளியே கூசலை யோஉனக்கு. 3

தங்க மணிக்கூண்டில் கிளியே தங்கி இருந்தாலும்
அங்குச் சுதந்தரத்தின் கிளியே ஆனந்தம் ஏதுனக்கு? 4

சொந்தம் எலாம்மறந்து கிளியே சுற்றமெல் லாம்துறந்தே
இந்தப் படியிருக்கக் கிளியே இச்சைகொண் டாயோநீ! 5

பச்சை மரக்கிளைமேல் கிளியே பாடுதல் நீமறந்தாய்
இச்சை உயிர்மேலே கிளியே இன்னும் எதற்காக? 6



ஓடி இரைதேடிக் கிளியே உண்பது நீமறந்தாய்
நாடிப் பிறர்கொடுக்கக் கிளியே நாணமின் றிப்புசித்தாய். 7

காட்டுப் பழவகையைக் கிளியே காணுதல் நீமறந்தாய்
போட்டதை உண்டிருக்க கிளியே புத்தி மகிழ்ந்தாயே. 8

சொந்த மொழிமறந்தாய் கிளியே சொன்னது சொல்லுகின்றாய்
இந்த விதம்வாழும் கிளியே இன்பம் உனக்கேது? 9

உன்குலத் தைப்பழிக்கக் கிளியே உத்தர வானாலும்
அங்கது செய்துயிரைக் கிளியே ஆசையு டன்வசித்தாய். 10

எண்ணம் உனக்கிருந்தால் கிளியே எத்தனை நேரமடி
கண்ணைத் திறக்கு முன்னே கிளியே காட்சி சுதந்தரமாம். 11

நல்ல வழிசொல்லுவேன் கிளியே நாடித் தெரிந்துகொள்நீ
அல்லல் வழிவிடுத்துக் கிளியே அன்பின் வழிதேடு. 12

கூட்டை உடைத்து வரக்கிளியே கூடாது உன்னாலே
சேட்டை வழிகளைநீ கிளியே செய்திடும் சாதியல்ல. 13

சொன்னதைச் சொல்லாதே கிளியே சோறிட உண்ணாதே
என்ன அழைத்தாலும் கிளியே ஏனென்று கேளாதே. 14

ரங்கரங் காவென்று கிளியே இங்கிதம் பேசாதே
எங்கேயெங் கேயென்று கிளியே ஏளனம் சொல்லாதே. 15

கொஞ்சி மகிழாதே கிளியே கெஞ்சிப் புகழாதே
அஞ்சி நடுங்காதே கிளியே ஆடி நடக்காதே. 16

கொண்ட எசமானன் கிளியே கோபித்துக் கொண்டாலும்
அண்டி உயிர்வாழக் கிளியே ஆகா தென்றுசொல்வாய். 17

கொல்லுவன் என்றாலும் கிளியே கொஞ்சமும் அஞ்சாதே
மெல்லுவன் என்றாலும் கிளியே மேனி நடுங்காதே. 18

வெட்டுவன் என்றாலும் கிளியே வெற்றுரை என்றிருப்பாய்
சுட்டிட வந்தாலும் கிளியே சோதனை என்றிருப்பாய். 19

சோதனைக் காலமடி கிளியே சோர்ந்திடு வாயோநீ
வேதனை யைப்பொறுத்தால் கிளியே வெற்றி யுனதாகும். 20

இந்தப் படிகிடக்க கிளியே இயலாது என்பதனை
உன்றன் எசமானன் கிளியே உணரும்படி நடப்பாய். 21

இப்படி நீநடந்தால் கிளியே எண்ணியெண் ணிப்பார்த்தே
ஒப்பி எசமானன் கிளியே யோசனை செய்வாண்டி. 22

காரியம் உன்னாலே கிளியே காசளவு இல்லையென்று
வீரியம் பேசாமல் கிளியே விட்டிடு வான்உனையே. 23

கோதிச் சிறகுலர்த்திக் கிளியே கூசா மல்விரித்து
நாதன் புகழ்பாடிக் கிளியே நாற்றிசை யும்பறப் பாய். 24

நீண்ட பெருவானம் கிளியே நியதி லேபறந்து
ஆண்டவன் சன்னிதியைக் கிளியே அண்டிச்
சுகமடைவாய். 25

*குறிப்புரை:- வீரியம் - தைரியம்; காரியம் - செயல்.*

## *199. பெண் மனம்*

ஏனைய நாடுகள் எப்படி யாயினும்
தமிழ்நாடு) அதனில் தானமும் தருமமும்
புண்ணியம், விரதம், தெய்வம், பூசனை
ஆகிய இவற்றை ஆடவர் மறப்பினும்
பெண்களே இன்னமும் பெரிதும் காப்பவர்.

இன்றும் தினந்தினம் இத்தமிழ் நாட்டில்
பிச்சைக் காரர்கள் பிரியத் துடனே
குறைகளைச் சொல்லிக் கூவும் போது
'அம்மா' 'தாயே', 'ஆத்தா', 'ஆச்சி'
என்பன கூவி இரப்பதே சாட்சி.



ஐயா மறுப்பினும் அம்மா மறுத்திடாள்.
ஒருபிடி அன்னமோ உப்பிட்ட கஞ்சியோ
ஐயமிட் டுண்பதே அருந்தமிழ்ப் பெண்மை
அதனால் தானோ என்னமோ அறியோம்
தமிழன் இல்லறம் தனிச்சிறப் புடையதாய்.

வறுமையும் அடிமையும் வருத்திடும் நாளிலும்
கொடுமைகள் குறைந்து குலவிடச் செய்வது.
வாழிய தமிழ்தரும் வண்மைசேர் பெண்மை!

*குறிப்புரை:- பெண்மை - அமைதித் தன்மை; பூசனை - வழிபாடு.*

## *200. பெண்மை*

அன்பும் ஆர்வமும் அடக்கமும் சேர்ந்தும்
உண்மைத் தன்மையும் உறுதியும் மிகுந்தும்
தன்னல மறுப்பும் சகிப்புத் தன்மையும்
இயல்பாய் அமைந்தும் இன்பச் சொரூபமாய்த்
தாயாய் நின்று தரணியைத் தாங்கும்;

தாரமாய் வந்து தளர்வைப் போக்கும்;
உடன்பிறப் பாகி உறுதுணை புரியும்;
மகளாய்ப் பிறந்து சேவையில் மகிழும்;
அயலார் தமக்கும் அன்பே செய்யும்;
நாணம் கெடாமல் நட்புகொண் டாடும்;

சினேகம் இன்றியும் சிரித்துப் பேசும்;
காமமில் லாமலும் கொஞ்சிக் களிக்கும்;
பெருமை மிக்கது பெண்ணியல் பாகும்;
அந்தப் பெருமையை அறியா ஆடவர்
அன்புப் பேச்சை ஆசையென்று அயிர்த்துச்

சிரித்து விட்டதில் சிற்றின்பம் எண்ணி,
களிப்பைக் காமமாய்க் கற்பனை செய்தே
அவமதிப் படைவதும் அடிக்கடி உண்டு.

இப்படிப் பலபேர் ஏமாந்து போவதால்
பெண்மனம் என்பதைப் பிழைபடப் பேசிப்

'புதிர்' என்று சொல்வது புரியாத் தனமே;
'வஞ்சனை' என்பர் வஞ்சகம் உடையோர்.

குறிப்புரை:- வஞ்சனை - பொய், மாயம்.

## *201. குறத்தியர் பாட்டு*

இமயம்முதல் குமரிவரை எங்களுடை நாடு
இடையிலுள்ள தேசமெல்லாம் எங்களுக்கு வாசம்
தமிழ் முனிவன் பொதிகைமலை தன்னில்எங்கள் வீடு
தரணியெல்லாம் சுற்றிடுவோம் தைரியம்தான் ஜோடு. 1

ஜாதியில்லை மதமுமில்லை சண்டையில்லை அதனால்
சாமியென்றும் நேமம்என்றும் சடங்குகளும் இல்லை;
நீதிஎன்ற ஒன்றுமட்டும் நெஞ்சிலுண்டு பின்னே
நீசர்என்று எங்களையார் பேசினாலும் என்னே? 2

பட்டமில்லை பதவியில்லை பகையுமில்லை ஐயே!
பணமுமில்லை திருடர்என்ற பயமுமில்லை மெய்யே.
கஷ்டமில்லை நஷ்டமில்லை கவலையில்லை அம்மா!
காணியில்லை பூமியில்லை கடனுமில்லை சும்மா! 3

மலையினிலே குடிசைகட்டி மரநிழலில் வாழ்வோம்
மான்மயிரும் தேன்முதலாய் மக்களுக்கு விற்போம்;
தலையினிலே இடிவரினும் தைரியமாய் ஏற்போம்
தஞ்சமற்ற யாரையுமே அஞ்சிடாமல் காப்போம். 4

எந்தபாஷை எந்த நாட்டில் என்னபேச்சு எனினும்
எங்களுக்குப் பேதமில்லை எதையும்பேசத் துணிவோம்
சொந்த பாஷைப் பெருமைக்காக நூறு சொல்ல மாட்டோம்
சுற்றிச்சுற்றி எங்கும்சென்று சுகமுரைத்துக் கேட்போம். 5



வீடுவாசல் மாடிகூடம் எங்களுக்கு வேண்டாம்
வீதிதிண்ணை சத்திரங்கள் வேணதுண்டு ஆண்டே!
பாடுபட்டு ஓடியாடிப் பசியெடுத்தே உண்போம்.
பயமுறுத்தும் நோய்கள்எங்கள் பக்கம்இல்லை
என்போம். 6

பச்சைகுத்திக் குறிகள் சொல்லிப் பாடியாடித் திரிவோம்;
பாசிஊசி பலவும் விற்றுக் காசுவாங்கி வருவோம்;
இச்சையான உணவைத் தேர்ந்த இடத்திலாக்கித் தின்போம்;
இங்கும் அங்கும் எங்கும்தூங்கி இன்பவாழ்க்கை
என்போம். 7

பச்சையென்றால் ஒருநிறமாம் பச்சைமட்டும் அல்ல;
பலநிறமும் நேர்த்தியாகப் பதியவைப்போம்; நல்ல
இச்சையான உருவம்எல்லாம் எழுதிடுவோம் மெய்யே;
இப்பொழுதே காட்டுகிறோம் என்னவேண்டும் ஐயே! 8

காதலனோ காதலியோ கண்காணாப் பொழுதில்
கண்டுகளி கொண்டுமனக் கவலை கொஞ்சம் ஒழிய
ஆதரவாய்க் கைதனிலே அலர்வடிவும் பேரும்
அழகாகப் பச்சைகுத்தி அமைந்திடுவோம் பாரும். 9

குறிதவறாக் குறியுரைப்போம் குறைகள் எல்லாம் தீர
குற்றம் எல்லாம் நீங்கிவிடக் கோளாறும் கூறி
நெறிமுறையாய் நீங்கள் எல்லாம் நெடுநாளும் வாழ
நினைந்திடுவோம் எங்கள்குலத் தெய்வமெலாம் சூழ. 10

நாள்கிழமை நட்சத்திரம் பார்ப்பதில்லை நாங்கள்
நல்லநல்ல சோசியங்கள் சொல்லிடுவோம் பாங்கே;
ஆள்வடிவம் பேச்சுநடை அவைகளையே கொண்டு;
அத்தோடு கைரேகை அதையும் பார்ப்ப துண்டு. 11

காசுபணம் பேசிவரும் சோசியரைப் போலக்
காகிதமும் பென்சிலுமாய்க் கணக்குப்போட வேண்டாம்
ஆசையுடன் பகவதியின் அருள்வாக்கி னாலே
அச்சமற்றுக் குறியுரைப்போம் பச்சைக் குத்தல் போல.12

*(என்பன பாடி இருகரம் கூப்பி,*
*"எது வேணும் சாமி! என்ன வேணும் அம்மா?*
*பச்சை குத்தவா? பாசிஊசி வேணுமா?*
*குறிகேட்க ஆசையா?" என்றனர் குறத்தியர்*
*சந்தோஷ மடைந்த சங்கர லிங்கம்*
*"குறிசொல்லு பார்ப்போம் பணம்இன்னும் கூட்டித்*
*தருகிறேன் என்றான்" தயங்கா(து) அவர்கள்)*

ராணியுடன் ராஜனைப்போல் நல்ல ஜோடி நீங்கள்;
ராமனுடன் சீதையைப்போல் ரஞ்சிதமாய் வாழ்வீர்.
ஆணையிட்டுச் சொல்லுகிறோம் ஐயமில்லை ராஜா
அம்மாளும் நீங்களுமே ஆசைமிக்க நேசம். 13

கண்மணிபோல் பெண்ணிவளைக் கலியாணம் பண்ணிக்
கப்பலேறி சீமைசென்று காசுபணம் சேர்ப்பீர்.
பெண்மணியும் ஒருகணமும் பிரிந்திருக்க மாட்டாள்
பேசுவதேன் உங்களுக்கு ஈசன்முடி போட்டான். 14

பொல்லாத வேளைகொஞ்சம் புலப்படுத்தே பின்னால்
பொன்னான வாழ்க்கையிலே சின்னதுன்பம் மன்னா
நில்லாது சீக்கிரமே நீங்கிவிடும் ஆண்டே
நெஞ்சமதில் கொஞ்சங்கூட அஞ்சிடுதல் வேண்டாம். 15

அம்மாளைப் பெற்றவருக்(கு) அதிகபணம் இல்லை;
ஐயாவின் வீட்டினிலே அளவிலாச் செல்வம்;
கொம்மாளம் போட்டே உங்கள் குடிவிளங்க வேணும்
குத்துவிளக் கேபோலப் புத்திரரும் தோணும். 16

பாருக்குள் எத்தனையோ பாதகரும் உண்டு
பழிபேசித் தூற்றிடுவார் பயமில்லை ஒன்றும்;
போருக்குள் ஆண்சிங்கம் போலஜயம் பெறுவீர்
பொன்னான பெண்ணிவளைப் போற்றிநலம் உறுவீர். 17

கோபமில்லாக் குணமுடனே குடித்தனமே செய்வீர்
குறைச்சலில்லா யோகமெல்லாம் கூடிவரும் மெய்தான்
சோபனமே சோபனமே சேபனமே நீங்கள்
சுகமுடனே வாழ்ந்திடுவீர் குறியுரைத்தோம் நாங்கள். 18



வயிரமதைத் தங்கத்திலே வைத்திழைத்தாற் போல
வடிவழகா உன்றனுடன் சுந்தரியைக் கண்டே
துயரம்எல்லாம் விட்டுவிட்டோம் துணிமணியும் சோறும்
துரைமகனே! எங்களுக்குத் துட்டுக்கூடத் தாரும். 19

குள்ளநரிக் கொம்பிதுதான் கூடக்கொண்டு போனால்
கூட்டமாகப் பகைவரினும் ஓட்டமாகும் தானே;
கள்ளமில்லை இதனுக்கொன்றும் காசுபணம் வேண்டாம்
கனவானே தந்திடுவோம் கைக்கொள்வீர் ஆண்டே! 20

## *202. அன்னையின் மகிழ்ச்சி*

பெற்றிட விரும்பும் பேறுகள் யாவினும்
மக்களைப் பெறுவதே மாபெரும் பேறென
உலகம் மகிழ்வது கண்கண்ட உண்மை.
குறைகளில் எல்லாம் மிகப்பெரும் குறையென,
குழந்தை இல்லாததைக் குறிப்பதும் வழக்கம்.

உணவுப் பொருள்கள் உற்பத்தி குறைந்து,
பற்பல நாட்டிலும் பஞ்சம் மிகுந்திட
ஜனத்தொகை மிகுவது சங்கடம் தருமெனக்
குழந்தைப் பெறுவதைக் குறைத்திட வேண்டிக்
கருப்பத் தடைகளைக் கருதும்இந் நாளிலும்

குழந்தை இல்லாமல் குறைபடுவோர் பலர்.
கூனோ, முடமோ, குருடோ, செவிடோ,
ஆணோ, பெண்ணோ, அழகோ, அசிங்கமோ
தான்பெற்ற மகவோ தனிச்சிறப் புளதாய்
உணரச் செய்வதே உடம்பின் இயல்பு.

குணமிலாக் குரூபக் குழந்தை பெறினும்
அப்படி இன்பம் அடைவர் என்றால்
அறிவுடன் அழகும் அமைந்த மக்களைப்
பெற்றவர் அடையும் பெருமித மகிழ்வை
எழுதவும் முடியுமோ? ஏடுதான் அடங்குமோ?

பெற்றோர் இருவருள் பெற்றவள் ஆகிய
அன்னையின் மகிழ்ச்சி அளவுக்கு அடங்குமா?

## 203. அவனும் அவளும் விரும்பிய நாடு

மன்னவன் என்ற மனிதனில்லை - அங்கே
மந்திரி தந்திரி யாருமில்லை.
சின்னவர் என்றும் எவருமில்லை - பட்டம்
தேடி அலைந்திடும் மக்களில்லை. 1

ஊருக்குப் பத்துப்பேர் நல்லவர்கள் - பொது
யோசனை செய்திட வல்லவர்கள்
ஆருக்கும் எதிலும் ஓரங்கள் செய்யாமல்
அப்பப்போ தீர்ப்புகள் செப்பிடுவர். 2

நல்லவர் கெட்டவர் என்பதெல்லாம் - அங்கே
ராஜாங்கம் பட்டம்ப தவியல்ல
சொல்லில் நடத்தையில் சூரத்தில் தீரத்தில்
சுத்தரென் றுபலர் நத்துவதே. 3

கச்சேரி என்றுஒரு கட்டிடமும் - அதைக்
கண்டு நடுங்குதல் அங்கிலையே
அச்சம்இல் லாமலே யாரும் பொறுப்புடன்
அங்கங்கே நீதிந டத்திடுவார். 4

வீதிக்கு வீதியோர் நீதிஸ்தலம் - பத்து
வீட்டுக்கு அங்கொரு பள்ளிக் கூடம்.
நீதிக்கே ஓடி அலைந்து செலவிட்டு
நிலைகெட்டுப் போகிற நிந்தையில்லை. 5

பள்ளிப் படிப்புக்குச் சம்பளம் - இன்னும்
பரீட்சைக்குக் கட்டப் பணமெனவும்
பிள்ளைகள் பந்தாடப் பின்னும் பணம்என்று
பிச்சிப் பிடுங்குதல் அங்கில்லையே. 6



வேலையில் லாதவர் யாருமில்லை - முற்றும்
வீணருக்(கு) அங்கே வேலையில்லை
கூலியில் லாதவர் யாருமில்லை - சும்மா
கும்பிட்டுத் தின்கின்ற கும்பலில்லை. 7

கூனும் குருடனும் நொண்டி முடங்களும்
கொஞ்சம்; அவருக்கும் பஞ்சமில்லை.
தானம் கொடுப்பதுஎன்(று) இல்லாமல் - பொது
தர்மம் என்றே வைத்துத் தாங்கிடுவார். 8

ஒப்பி மனங்களித்(து) எல்லோரும் - அங்கே
உண்டு உடுத்துக்க ளித்திடுவார்
தப்பிதம் செய்திடத் தோன்றாதே - அதன்
தண்டனை தந்திட வேண்டாது. 9

வாது வழக்குக்கு நேரமில்லை - அங்கே
வஞ்சித்து வாழமு டியாது
சூதுசெய் பந்தயம் ஏதுமில்லை முற்றும்
சோம்பிச் சகிக்க வழியுமில்லை. 10

கள்ளைக் குடிப்பது கூடாது - அங்கே
காமக் கலகங்கள் கண்டதில்லை.
கொள்ளை அடித்திடத் தேவையில்லை - என்றும்
கொஞ்சமும் யாருக்கும் பஞ்சமில்லை. 11

காவிரி நீர்வற்றிப் போவதில்லை - ஒரு
கால்வாய் மேஸ்திரி எங்குமில்லை;
காவலும் கட்டுகள் ஏதுக்குஅங்(கு) எப்போதும்
கள்ளர் பயம்என்ற சள்ளையில்லை. 12

பண்ணையக் காரர்கள் எல்லாரும் - எங்கும்
பட்டினி என்கிற சொல்லேது?
கண்ணியம் அற்றவர் யாருமில்லை - ஒரு
காலித்தனம் பண்ண ஏலாது. 13

கண்டதும் கேட்டதும் எப்படிப் போனாலும்
கச்சேரி வந்துபொய் சொன்னது மெய்
கண்டவர் உண்மையைச் சொல்லவும் வாய்பொத்திக்
கைகட்டி நின்றிடும் கஷ்டமில்லை 14

கொடுத்த பணத்தையும் வாங்குதற்கு - நித்தம்
கோர்ட்டு வாசலில் காத்திருந்தும்
அடுத்த பிறவிக்குப் போகுமட்டும் நொந்தே
அல்லல் அடைகின்ற தொல்லையில்லை. 15

துக்கத்தைச் சொல்லி அழுவதற்கும் - வெகு
தூரம் நடந்துபி ராதுசொல்லிப்
பக்கத்தில் நின்றவர் ஏன்என்று கேட்கவும்
பற்றற்றுப் போவதும் சற்றும் இல்லை. 16

தீண்டப் படாதுஎன்று சொன்னாலும் - அங்கே
தீண்டுதல் வேண்டித் திரிவதில்லை
வேண்டிய சுகங்கள் யாவும் பிறரைப்போல்
வேணமட்டும் உண்டு வேறுஎதற்கு? 17

கோயில் குளங்களும் வேணதுண்டு - ஆனால்
கும்பிடப் போவதில் சண்டையில்லை;
வாயில் ஜெபதபம் வஞ்சனை நெஞ்சத்தில்
வைத்துப் பிழைத்திடத் தேவையில்லை. 18

வட்டிக்குப் போடப் பணமும் இல்லை - அங்கே
வட்டிக்கு வட்டிசெய் சட்டம் இல்லை.
பெட்டிக்குச் சாவியும் இல்லாமல் - வெறும்
பேச்சில் புரண்டிடும் நாணயங்கள். 19

தானியம் தவசம் அல்லாமல் - அங்கே
தங்கமும் வெள்ளியும் செல்வமல்ல;
நாணய மாற்றுஎன்ற நாடக ஜாலங்கள்
நாகரி கப்பித்த லாட்டமில்லை. 20



சின்னக் குழந்தைக்குத் தாலிகட்டி - வெகு
சீக்கிரம் தாலி அறுத்தாலும்
வன்னம் கெடுத்தவள் வாழ்வைக் குலைத்திடும்
வண்ட வழக்கங்கள் கண்டதில்லை. 21

நாட்டுக்குப் பகைவர் யாரும்இல்லை - பிறர்
நாட்டின்மேல் ஆசையில் லாததனால்
சூட்டுக்குச் சூடும் கொடுத்திடுவார் - பகை
துட்டர் வந்தாலும்து ரத்திடுவார். 22

## *204. தாலாட்டு*

***(காவிரியில் கிடைத்த குழந்தையை
ஒரு படகோட்டியின் மனைவி தாலாட்டுதல்)***

ஆராரோ! ஆராரோ!
அம்மா நீ கண்ணுறங்கு
பேரேதோ! ஊரெதுவோ!
பெற்றவர்கள் யாரெவரோ!
சீராரும் காவிரித்
தேவி திருவருளால்
வாராமல் வந்துதித்த
மாமணியே கண்ணுரங்கு. (ஆரா) 1

ஆழக் கரைபுரளும்
காவேரி ஆற்றருகே
ஏழைப் படகோட்டி
என்கணவன், ஆனாலும்
கூழைக் குடித்துறங்கும்
குடித்தனந்தான் என்றாலும்
கோழைகள் அல்லவம்மா
குறைச்சல்உனக்(கு) ஏதுமில்லை. (ஆரா) 2

நாளை கணக்கெண்ணி
நல்லநல்ல சம்பளத்தில்

ஆளை மிரட்டுகின்ற
அதிகாரம் இல்லையம்மா!
வேளைப்பொழு(து) இல்லாமல்
வேலைசெய்யும் சீவனந்தான்
காளி குலதெய்வம்
காத்திடுவாள் கண்ணுறங்காய். (ஆரா) 3

அதிகாரம் என்றுசொல்லி
அநியாயம் செய்தறியோம்
சதிகாரத் தந்திரத்தால்
சம்பாதித்(து) உண்பதில்லை
துதிபாடிப் பொய்பேசிச்
சுகித்திருக்கும் சூதறியோம்
கதிகேடு வந்துவிடக்
காரணங்கள் இல்லையம்மா. (ஆரா) 4

வாது வழக்கறியோம்;
வம்புதும்பு செய்தறியோம்;
சூது புரிந்தறியோம்
பொய்ச்சாட்சி சொன்னதில்லை;
நீதி நெறிதவறி
நிந்தைசொல்ல நின்றதில்லை;
ஏதும் ஒருகெடுதி
இங்குவர ஞாயம்இல்லை. (ஆரா) 5

வேலையின்றிக் கூலிகொள்ளும்
வித்தைகளைக் கற்றறியோம்.
கூலியின்றி வேலைகொள்ளும்
கொடும்பாவம் செய்தறியோம்
காலையென்றும் மாலையென்றும்
காலமின்றிப் பாடுபட்டு
நாலுபணம் வந்தாலும்
நல்லசுகம் செய்துவைப்போம். (ஆரா) 6



தேடிப் புதைத்துவைத்து
வயிறாரத் தின்னாமல்
வாடிப் பசித்து நொந்து
வந்தவரை நிந்தைசொல்லி
ஓடி ஒளிந்துகொள்ளும்
உலுத்தரல்ல நாங்கள்அம்மா!
நாடி ஒருதீம்புவர
ஞாயம்இல்லை இவ்விடத்தே. (ஆரா) 7

கோவம் மிகுந்தாலும்
குத்துச்சண்டை வந்தாலும்
பாவம் பழிகளுக்குப்
பயந்து ஒதுங்கும் எங்களுக்குச்
சீவன் இருக்குமட்டும்
தேகம் உதவும் அம்மா
தேவி துணையிருப்பாள்
தெள்ளமுதே! கண்ணுறங்கு. (ஆரா) 8

பள்ளிப் படிப்பறியோம்
பட்டணத்துப் பேச்சறியோம்
வெள்ளைத் துணியறியோம்
வீண்பிலுக்குச் செய்தறியோம்.
கள்ளப் பிழைப்பு அறியோம்
காவேரி சாட்சிஅம்மா.
உள்ளபடி இங்குனக்கே
ஒருகுறையும் இல்லையம்மா! (ஆரா) 9

## *205. சுதந்தர மக்களின் சமதர்மம்*

வானவெளி ஆராய்ச்சி மிகுந்து மேலும்
வகைவகையாய் விஞ்ஞானம் வளர்ந்தே அந்தப்
பானுவையே தொட்டுவரும் பாணம் ஏவிப்
பயணத்தில் முழுவெற்றி பலித்திட் டாலும்

ஆனஉயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்
ஆகும்என்ற மெய்யுணர்வை அளிக்க வல்ல
ஞானஒளி காணாத மனித வாழ்க்கை
நரகம்என்று சொல்லுவதே ஞாய மாகும். 1

மற்றுஎவரும் கண்டறியாச் சன்மார்க் கத்தால்
மாறுபட்ட அன்னியரின் மனத்தை மாற்றிச்
சுற்றியுள்ள தேசமெல்லாம் வியந்து வாழ்த்தச்
சுதந்தரத்தை நாமடைந்த சூட்சு மத்தை
உற்றுணர்ந்தால் 'தெய்வபக்தி' ஒன்றால் அன்றோ
உயர்வுபெற்றோம் என்றமுழு உண்மை காண்போம்
சற்றுஇதனை அனுதினமும் மனத்திற் கொண்டால்
சமதர்மம் மக்களிடை எங்கும் தங்கும். 2

திட்டமிட்டே அரசாட்சி செய்திட் டாலும்
தீவிரமாய்ச் செல்வங்கள் திரண்டிட் டாலும்
கட்டுதிட்டம் காவல்,படை கனத்திட் டாலும்
'கருணை' என்ற ஓர்உணச்சி கலக்கா விட்டால்
சுட்டெரிக்கும் தீஉடலிற் பட்டால் என்னச்
சுதந்தரத்தின் இன்பமெல்லாம் சுருங்கிப் போகும்;
அட்டியென்ன? கருணைஅன்புஇங்(கு) என்ப எல்லாம்
ஆண்டவன்பால் 'பக்தி'என்ற அதுதான் நல்கும். 3

அரும்புகின்ற தெய்வபக்தி அணுவா னாலும்
அகங்காரம் குறைவதற்கும் அதுவே வித்தாம்;
தரும்பயனாம் அன்பறங்கள் தழைக்கும் என்றே
தவம்மிகுந்த தமிழ்நாட்டின் நமது முன்னோர்
திரும்புகின்ற பக்கமெல்லாம் தெய்வம் தோன்றத்
திருக்கோயில் கோபுரங்கள் திகழச் செய்தார்;
பரம்பரையாம் பக்தியைநாம் பாது காத்தால்
பழுதற்ற சமதர்மம் பரவி வாழ்வோம். 4



## 206. தமிழ்ப் பண்பைக் காப்போம்!

இசைமலிந்த பலகலையும் உலகுக்கு ஈந்தார்;
'இனிமை'எனும் தமிழ்மொழியின் உரிமைபூண்டார்;
திசைமொழிகள் எங்கெங்கும் வணங்கி வாழ்த்தும்
திருக்குறளாம் அறிவளித்த தமிழர் முன்னாள்
பசைமிகுந்த ஊக்கமுடன் கடலும் தாண்டிப்
பலநாட்டில் நம்பெருமை பரவச் செய்தோம்;
வசைகூறும் கட்சிகளாய்ப் பிரிந்தோம் இன்று
வறுமையுற்றுப் பெருமைகெட்டு வாழ்தல் காணீர். 1

அறம்வளர்த்த தமிழ்த்தாயைப் பொதுவாய்க் கொண்டும்
அன்றிருந்த மூவேந்தர் அவர்கள் கூட
மறம்வளர்த்துச் சண்டையிட்ட மடமை யாலே
மாற்றார்கள் தமிழ்நாட்டை மடக்கி ஆண்டார்;
உரம்இருந்தும் உறவிருந்தும் தமிழர் தம்முள்
ஒற்றுமைதான் இல்லாமல் ஒடுங்கிப் போனோம்;
திறந்தெரிந்தோம் ஒன்றுபட்டே இனிமே லேனும்
தேசநலப் பொதுப்பணிகள் செய்வோம் வாரீர்! 2

அயல்நாட்டை அபகரிக்கும் ஆசைக்கு அல்ல;
பிறமொழியை அவமதிக்கும் அகந்தைக்கு அல்ல;
இயல்பான உரிமைகளை இழந்தி டாமல்
இனப்பெருமை நற்குணத்தை இகழ்ந்தி டாமல்
செயலாலும் சொல்லாலும் சிந்தை யாலும்
செய்யதமிழ்த் திருநாட்டின் நலமே பேணி
உயர்வான தமிழ்ப்பண்பைக் காப்போம் ஆனால்
உலகநலம் காப்பதற்கும் உதவி யாகும். 3

## 207. இடந்தடுமாற்றம்

அறிவுக் கேற்ற அலுவல் கிடைப்பதோ
படிப்புக்(கு) உகந்த காரியம் பார்ப்பதோ
விரும்பிய படிக்குஒரு வேலையில் சேர்வதோ
தகுதியைப் பற்றிய தன்மை யுள்ளதாய்
உத்தியோகம் அடைவதோ ஊதியம் பெறுவதோ

இந்திய நாட்டில் இப்போது இல்லை
இலக்கிய ஞானம் இணையிலா ஒருவன்
கல்வியே வேண்டாக் காரியம் செய்வதும்,
கணித சாத்திரம் கைதேர்ந்த ஒருவன்
எண்ணிக்கை வேண்டா வேலையில் இருப்பதும்,

ரசாயனத்திலே ரசனை மிகுந்தவன்
கச்சேரி மேசையில் கவிழ்ந்து கிடப்பதும்
சங்கீத வித்தையில் சமன்இலாக் கலைஞன்
தபால் ஆபீஸ் தந்திய டிப்பதும்,
சித்திரக் கலையில் கைத்திறம் சிறந்து

'பத்திரம், ரிஜிஸ்டர்' பதிவு செய்வதும்,
சத்தியம் தவறா உத்தம குணவான்
வக்கீல் தொழிலில் வருத்தப் படுவதும்,
கொல்லா விரதமே கொண்டுள ஒருவன்
பட்டாள வீரனாய்ப் பதிந்து கொள்வதும்,

விஞ்ஞா னங்களில் விருப்புள இளைஞன்
'டிக்கட் கலெக்டராய்'த் திண்டாட நேர்வதும்,
புத்தகம் படிப்பதில் பித்துள்ள புலவன்
'புக்கிங் கிளார்க்'காய்ப் புழுங்கு கின்றதும்,
உருட்டி மருட்டத் தெரியா ஒருவன்

போலீஸ் காரனாய்ப் பொழுதுபோக் குவதும்,
திட்டிப் பேசவும் தெரியா நல்லவன்
அமீனா வேலையில் அடிபட்டு வருவதும்,
கள்ளுச் சாராயம் கடுந்திடும் கருத்தன்
கலால் வேலையில் 'டிகிரி' கணிப்பதும்,

மாமிச உணவை மறுக்கும் மனத்தன்
ஆட்டுக் கறியையும் மாட்டுக் கறியையும்,
சுத்தம் பார்த்தலில் முத்திரை குத்தலும்,
இப்படிப் பற்பலர் இடந்தடு மாறுவர்.



## 208. நோயற்ற வாழ்வு

உலகினில் சிறந்த தென்றும்
உருவினில் பரந்த(து) என்றும்
உயர்தவ யோக சித்தர்
ஒப்பிலார் இருந்த(து) என்றும்
பலவளம் நிறைந்த(து) என்றும்
பகுத்தறி வுயர்ந்த(து) என்றும்
படித்தனம் கேட்டோம் அந்தப்
பாரத தேச மக்கள்
புலபுல வென்று நித்தம்
புதுப்புது நோய்க ளாலே
புழுக்கள்போல் விழுந்து மாண்டு
போவதைக் கண்டும் ஐயோ
விலகிட வழிதே டாமல்
விலங்கினம் போல வாழ்ந்து
விதியென வாதம் பேசி
வீணராய் இருத்தல் நன்றோ? 1

கற்பமும் அறிந்து காய
சித்தியும் கற்க மேலோர்
பற்பலர் இருந்த இந்தப்
பாரத தேச மக்கள்
அற்பமாய் ஆயுள் குன்றி
ஆழ்ந்திடல் ஏனோ வென்று
சொற்பனந் தன்னிற் கூட
எண்ணிடத் துணிந்தோம் இல்லை. 2

உடல்வலி மிகுந்து நல்ல
ஊக்கமும் உறுதி பொங்க
உலகினில் இன்பம் எல்லாம்
உயர்வழி அனுப வித்த
திடமுள தீர வீரர்
திகழ்ந்தஇச் சிறந்த நாட்டில்

சிறியதோர் நோய்வந் தாலும்
தாங்கிடத் திறன்இல் லாமல்
நடைபிணம் போல நாமும்
நாள்கழித் திருந்தோம் ஐயோ
நாடிலோம் இதனை மாற்ற
நல்வழி என்ன வென்று
மடமையோ மதியோ அன்று
விதியெனும் மயக்கந் தானோ
மாற்றநாம் அல்ல என்றால்
மதியினால் பயன்தான் என்ன? 3

முற்றிய ஒழுக்கத் தாலும்
முறைதெரி வாழ்க்கை யாலும்
பெற்றவர் காண முன்னாள்
பிள்ளைகள் இறந்தது இல்லை;
கற்றவர் பெரியோர் நித்தம்
கதைகளிற் சொல்லக் கேட்டோம்
இற்றைநாள் கோடி கோடி
பிறக்குமுன் இறப்பது ஏனோ? 4

மணத்தையே விரும்பி யோடி
மலரினைக் காக்கு வார்போல்
பணத்தையே பெரிதென்று எண்ணிச்
சுகத்தினைப் பழித்து வாழ்ந்து
குணத்தையே விலைக்கு விற்றுக்
குரங்கினைக் கொண்டார் போல
இனத்தையே பிணிகள் வாட்ட
இருந்தனம் அறிவு இருந்தும். 5

உண்டியில் ஆசை வைத்தோம்
ஒழுக்கமே மறந்து போனோம்
பெண்டுகள் மக்கள் தம்மை
வளர்த்திடும் முறைமை பேணார்



மண்டையில் எழுத்துஇது என்று
மயங்கினோம் கர்மந் தன்னை
மண்டின நோய்கள் க்ஷாமம்
மலிந்திட நலிந்தோம் ஐயோ! 6

பிணியிலே பிறந்து நித்தம்
பிணியையே அருந்திப் பொல்லாப்
பிணியிலே வளர்ந்தும் அந்தப்
பிணியினால் சாகக் கண்டும்
அணியிலே ஆடை யாலே
அலங்கரித் தோமே அன்றி
அறிவிலே ஆசா ரத்தால்
அழகுஎதும் செய்தோம் இல்லை.
பணியிலும் பணத்தி லேயும்
சுகம்எலாம் இருந்தாற் போலப்
பழகினோம் நாமே அன்றிப்
பழக்கினோம் மக்கள் தம்மை
துணிவுஇலோம் தூய்மை இல்லோம்
சுசிகர நடத்தை இல்லோம்
துவக்குவோம் இனிமே லேனும்
நோய்களைத் துடைக்கும் வாழ்க்கை. 7

## *209. தமிழ்க் கலை*

வியப்புற இன்பம் விருப்புற விளைக்கும்
காரியத் திறமையே 'கலை' எனப் படுவது;
இன்பம் தருகிற எல்லாச் செய்கையும்
கலையின் இனமாய்க் கருதத் தக்கதே;
இன்பம் என்பதில் இரண்டு விதங்கள்;

இயற்கை இன்பமும் செயற்கை இன்பமும்
இயற்கை இன்பம் ஈடற்றது எனினும்
செயற்கை இன்பமே சிறப்புஎன எண்ணி

மகிழ்வது மாநில மக்களின் இயல்பு
கண்ணாற் காணும் இயற்கைக் காட்சியைச்

சித்திரம் வரைந்து சிறப்பென எண்ணுவர்
உயிருடன் பார்க்கும் ஒருவரின் உருவைச்
சிற்பச் சிலையில் சீராட்டு வார்கள்.
ஊக்கமும் உணர்ச்சியும் ஊட்டும் சொற்களைப்
பாட்டாய்க் கேட்கவே பலரும் விரும்புவர்.

மணமிக்க மலர்கள் மடியில் இருப்பினும்
அவற்றின் அத்தரின் ஆசையே அதிகம்;
எலுமிச் சம்பழம், இளநீர், கரும்பைத்
தனித்தனி அவற்றின் தன்மை கெடினும்
மூன்றும் கலந்தால் முதிர்சுவை என்பர்.

இன்பம் தருகிற இயற்கை நிகழ்ச்சிகள்
அநேகம் உள்ளன. ஆயினும், அவைதாம்
வேண்டிய போதுநாம் விரும்பும் விதத்தில்
அகப்பட மாட்டா, அதற்கோர் உதாரணம்;
காதில் விழுந்ததும் களிக்கச் செய்கிற

ஓசைகள் அநேகம் இயற்கையில் உண்டு;
ஆனால் அவைகள் நேர்வது அருமை
அதனால் அல்லவா அப்படி ஓசையை
வாய்பாட்(டு) என்றும் வாத்திய மாகவும்,
சமைத்துக் கொடுக்கும் சங்கீதத்தைஓர்

உயர்ந்த கலையென உலகம் கொள்வது?
இப்படி யேபிற எல்லா இன்பமும்
செய்யத் தெரிந்த திறமையே 'கலை'யாம்.
கலைகளின் இன்பம் புலன்களைக் கவரும்;
ஒழுக்கக் கேட்டையும் உண்டாக்கும். அதனால்

தமிழன் கலையெனத் தந்தன யாவும்
அறங்களைப் போற்றும் அறிவையே நாடும்
வேடிக்கை என்றும், விநோதம் என்றும்



அநேகக் கலைகளைத் தமிழன் அறிவான்;
ஆயினும், அவைகளும் அறத்தையே அடுக்கும்.

நூல்களை எழுதும் கலையின் நோக்கமும்,
கற்பனைக் கதையின் கலையும் அறமே.
தருமம் பேசாத் தமிழ்நூல் கலையை
இலக்கிய மாகவே எண்ணான் தமிழன்.
கலைகளின் வழியே கருணையைப் புகட்டல்

எளிதாம் எனநம் முன்னோர் எண்ணியே
கண்ணுங் கருத்துமாய்க் கலைகளைக் காத்தனர்.
இயல்என எழுதியும் இசைஎனப் பாடியும்,
கற்பனை நிறைந்த கவிதைகள் செய்தும்,
நாட்டியம் பயின்றும், நாடகம் நடித்தும்.

குளங்களை வெட்டியும் கோபுரம் கட்டியும்,
சிலைகளைச் செதுக்கிச் சித்திரம் வரைந்தும்,
மலைகளைக் குடைந்து மண்டபம் ஆக்கியும்,
கலைகளை வளர்த்த காரணம் எல்லாம்,
செயற்கை இன்பமும் இயற்கையில் சேர்ந்துடன்

அறிவைத் துலக்கி, அன்பைப் பெருக்கிச்
சச்சரவு இல்லாச் சமுதாய வாழ்வை
உண்டாக்கி வைத்தல் ஒன்றே நோக்கம்.
புலன்களுக்கு எட்டாப் பொருளாம் இறைவனைப்
புலன்களுக்கு இன்பம் புகட்டவே புரியும்

கலைகளின் மூலமாய்க் கருதலாம் என்றே
கடவுளின் நினைப்பே கலைகளில் கலந்திடப்
பழகிய பெருமையே தமிழ்க்கலைப் பண்பு.

# IX. தேசியப் பாடல்கள்

### *210. கத்தியின்றி ரத்தமின்றி*

கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்தம் ஒன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர்! (கத்தி) 1

ஒண்டி அண்டிக் குண்டு விட்டிங்(கு)
உயிர்ப்ப றித்தல் இன்றியே
மண்ட லத்தில் கண்டி லாத
சண்டை யொன்று புதுமையே! (கத்தி) 2

குதிரை இல்லை யானை இல்லை
கொல்லும் ஆசை இல்லையே
எதிரியென்று யாரும் இல்லை
எற்றும் ஆசை இல்லதாய். (கத்தி) 3

கோபம் இல்லை தாபம் இல்லை
சாபங் கூறல் இல்லையே
பாப மான செய்கை யொன்றும்
பண்ணும் ஆசை இன்றியே (கத்தி) 4

கண்டது இல்லை கேட்டது இல்லை
சண்டை இந்த மாதிரி
பண்டு செய்த புண்ணி யந்தான்
பலித்த தேநாம் பார்த்திட! (கத்தி) 5

காந்தி என்ற சாந்த மூர்த்தி
தேர்ந்து காட்டும் செந்நெறி
மாந்த ருக்குள் தீமை குன்ற
வாய்ந்த தெய்வ மார்க்கமே. (கத்தி) 6

குறிப்புரை:- இந்தப் பாடல்தான் நாமக்கல் கவிஞரைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தது. இதனுடன் இணைந்து இருக்கும் வரலாறு எல்லோருக்கும் நன்கு தெரிந்த செய்தியாகும். எதிரி - பகைவர்; மார்க்கம் - வழி.



### *211. என்னுடை நாடு*

"இந்திய நாடிது என்னுடை நாடே"
என்று தினந்தினம் நீயதைப் பாடு;
சொந்தமில் லாதவர் வந்தவர் ஆள
தூங்கிக் கிடந்தது போனது மாள;
வந்தவர் போனவர் யாரையும் நம்பி
வாடின காலங்கள் ஓடின தம்பி!
இந்தத் தினம்முதல் "இந்திய நாடு
என்னுடை நாடென்ற எண்ணத்தைக் கூடு. 1

கன்னி இமயக் கடலிடை நாடு
கடவுள் எமக்கெனக் கட்டிய வீடு;
என்ன முறையி(து) ஏனிதை வேறு
இன்னொரு நாட்டினர் ஆள்வது கூறு;
சொன்னவர் கேட்டவர் யாரையும் நம்பிச்
சோர்ந்து கிடந்தது தீர்ந்தது தம்பி!
என்னுடை நாட்டினை நானிருந்து ஆள்
இந்தத் தினம்முதல் எண்ணுவன் மீள. 2

தன்னுடை வேலையைத் தான்செய்வ தாலே
தப்புவந் தாலும் சுதந்தரம் மேலே;
இன்னொரு யாருக்கும் இதிலென்ன கோபம்?
என்றன் உரிமைசொன் னால்என்ன பாபம்?
அன்னியர் ஆள்வதில் நன்மை வந்தாலும்
அடிமையின் வாழ்வது நரகம்எந் நாளும்;
என்னுடை வீட்டுக்கு நான்அதி காரி
என்பது நான்சுய ராச்சிய பேரி. 3

பாரத நாடுஎன்றன் பாட்டன்றன் சொத்து;
பட்டயத் துக்குஎன்ன வீண்பஞ்சா யத்து?
யாரிதை வேறோர் அன்னியர் ஆள?
அருகில் கிடைத்தது போனது மாள;

'வாரவர் போறவர்' யாரையும் நம்பி
வாடின காலங்கள் ஓடின தம்பி!
வீரமும் தீரமும் வெற்றுரை யாமோ?
விடுதலை வேண்டுதல் விட்டிடப் போமோ? 4

முத்தமிழ் நாடுஎன்றன் முன்னையர் நாடு;
முற்றிலும் சொந்தம் எனக்கெனப் பாடு;
சற்றும் உரிமையில் லாதவர் ஆளச்
சரிசரி யென்றது போனது மாள;
பக்தியின் அன்பினில் பணிபல செய்வோம்;
பயப்பட்டு யாருக்கும் பணிந்திடல் செய்யோம்;
சத்தியம் சாந்தத்தில் முற்றிலும் நின்றே
சடுதியில் விடுதலை அடைவது நன்றே. 5

## *212. வாழ்க நம் நாடு*

நம்நாடு செழிக்க வேண்டும்
நாமெலாம் களிக்க வேண்டும்
நம்நாடு மட்டும் வாழப்
பிறர்நாட்டைத் தவிக்கச் செய்யும்
வெம்நாடு களுக்கே வரமோர்
விழுமிய ஞான மார்க்கம்
எம்நாடு தந்தது என்றே
இந்தியன் மகிழ வேண்டும். 1

கண்டவர் மகிழ வேண்டும்
கேட்டவர் புகழ வேண்டும்
கொண்டவர் குலவ வேண்டும்
குறைந்தவர் நிறைந்து மெச்ச
அண்டின எவரும் அச்சம்
அடிமையை அகற்று மாறு
தண்டமிழ் அலைகள் வீசி
நம்நாடு தழைக்க வேண்டும். 2



இலக்கண உயர்வில் சொல்லின்
இனிமையில் பொருளில் வாழ்வின்
விலக்குகள் விதிகள் வைக்கும்
விதத்தினில் விநயம் தன்னில்,
கலைக்கொடு தனிமை காட்டும்
கவிதையின் கனிவில் கற்றோர்
தலைகொளும் தமிழைப் போற்றி
நம்நாடு புதுமை தாங்கும். 3

எந்தநாட் டெவர்வந் தாலும்
எம்மொழி பேசி னாலும்
சொந்தநாட் டவர்போ லிங்குச்
சுகித்துநிம் மதியாய் வாழத்
தந்தநாடுலகில் இந்தத்
தமிழகம் போல்ஒன்(று) உண்டோ?
அந்தநம் புகழைக் காத்து
நம்நாடு அன்பே ஆற்றும். 4

அன்பினால் கலந்து வாழ்ந்தே
'ஆரியன்' 'அயலான்' என்னும்
வன்புஎலாம் வரும்முன் னாலே
வள்ளளார் வளர்த்த வாய்மை
என்பெருந் தமிழால் இந்த
இருநில மக்கட்கு எல்லாம்
இன்பமே தருவ தாக
நம்நாடே இசைக்க வேண்டும். 5

அன்னியம் அறிவிற்கு இல்லை
அன்பிற்கும் அளவே இல்லை
என்னவே உலகில் மற்ற
எவரெவர் மொழியும் ஆய்ந்து

தன்னொடும் வாழ வைத்த
தமிழ்மொழி பெருமை தாங்கி
நன்னெறி விளக்காய் நின்று
நம்நாடு நலமே நல்கும். 6

புதுத்துறை அறிவைத் தேடிப்
போய்அலைந்(து) உழன்று நாடி
விதப்பல விஞ்ஞா னத்தை
விரித்திடும் மெய்ஞ்ஞா னத்தால்
பொதுப்படக் கலைகள் எல்லாம்
தமிழிலே புதுமை பூண
மதிப்பொடே எவரும் போற்ற
நம்நாடு மணக்க வேண்டும். 7

## *213. இந்தியத் தாய் புலம்பல்*

காலக் கதியடியோ
கைவிரித்து நான்புலம்ப
ஆலம் விதையெனவே
அளவிறந்த மக்கள்போற்றும்
ஞாலத்தில் என்னைப்போல்
தவித்தால் ஒருத்தியுண்டோ?
நீலக் கடலுலகில்
நீடித்தும் பிள்ளைகளால்
கோலம் இழந்துநிலை
குலைந்துருகி வாடுகின்றேன்! 1

மெத்தப் பகட்டுடையாள்
மேற்கத்திப் பெண்ணொருத்தி
'அத்தை'யெனக் கூவியென்றன்
ஆசார வாசலிலே
தத்தித் தடுமாறித்
தலைவணங்கி நின்றிருந்தாள்.



"புத்தம் புதியபெண்ணே
போந்தகுறை என்னசொல்லு
சித்தம் கலங்காதே
சின்னவளே" என்று சொன்னேன். 2

வெள்ளைத் துகிலுடுத்து
வெட்டிருந்த பட்டணிந்து
கள்ளக் குறிசிறிதும்
காட்டா முகத்தினளாய்
அள்ளிச் செருகிவிட்ட
அழகான கூந்தலுடன்
பிள்ளை மொழிவதெனப்
பின்னுகின்ற சொற்பேசி
மெள்ளத் தலைகுனிந்தே
மெல்லியளாள் நின்றிருந்தாள். 3

"எங்கிருந்தே இங்குவந்தாய்?
என்னகுறை பெண்மணியே?
சங்கிருந்த வெண்ணிறத்தாய்!
சஞ்சலத்தால் வந்ததுண்டோ?
இங்கிருந்தே உள்ளதைநீ
என்னுடைய மக்களுடன்
பங்கிருந்து கொள்வாய் நீ
பலமொழிவாய்" என்றுசொல்லி
இங்கிதம்நான் சொன்னவுடன்
இருதாளும் மண்டியிட்டு 4

குன்றி உரைகுழறிக்
குளிரால் நடுங்கினாள்போல்
சின்னஞ் சிறுகுரலால்
சிந்தைமிக நொந்த வளாய்
"உன்னுட னேபிறந்தோன்.
ஊரைவிட்ட ஆரியனாம்

முன்னம் உனைப்பிரிந்து
மேல்நாடு மேவினவன்
அன்னவன் புத்திரிநான்
அத்தைநீ சித்தம்" என்றாள். 5

"நெஞ்சம் கலங்காதே
நீயெதற்கும் அஞ்சாதே
தஞ்சம் உனக்கிருப்பேன்
தையலே மெய்யிதுகாண்;
கொஞ்சம் இளமையினில்
குறையுனக்கு வந்ததென்ன?
பஞ்சை எனத்தனியே
பட்டணத்தை விட்டுவந்தாய்
வஞ்சி இளங்கொடியே
வந்துபசி யாறுகஎன்"றேன். 6

சற்றுத் தலைநிமர்ந்தாள்
தையலவள் புன்சிரிப்பை
உற்ற முகத்தினொடும்
உள்ளம் குளிர்ந்தவள்போல்
சுற்றி அயல்பார்த்துச்
சொன்னபடி என்னுடனே
முற்றம் அதனைவிட்டு
முன்கட்டில் வந்துநின்று
தத்தியதன் மேல்நடக்கத்
தயங்கினவள் போலநின்றாள். 7

"தாவில்லை உள்ளேநீ
தாராள மாய்வரலாம்
வா"என்று சொன்னவுடன்
வல்லியவள் மெல்லவந்தாள்;
தூவெள்ளை யானஅவள்
துணியும் அணியிழந்தும்



தாவள்ய மானஅந்தத்
தையலவள் மெய்யழகில்
கோவென்று கூட்டமிட்(டு)என்
குழந்தைமார் கூடிவிட்டார். 8

ஆனபடி என்னுடனே
அன்னம் அந்தக் கன்னிவர
மேனியவள் ஆடையெல்லாம்
வாடையொன்று வீசியது.
"ஏனிஃது இளங்கொடியே!
என்ன?" என்று கேட்டதற்கு
"மீனுணவும் ஊனுணவும்
மெத்தஉண்ட தந்தையரே
தேனுங் கனிகாய்என்
தேசத்தில் கொஞ்சம்" என்றாள். 9

சொல்லி முகஞ்சுளித்தாள்
சோக மதைமாற்றி
கொல்லைச் சிறுவீட்டில்
கொண்டுவளைச் சென்றிருத்தி
மல்லிகை முல்லைமலர்
மணமிகுந்த நன்னீரால்
அல்லி நிறந்தவளை
அங்கம்எல்லாம் நீராட்டி
மெல்லத் துவட்டிவிட்டு
மெய்யழகு செய்துவைத்து. 10

தக்க உடைகொடுத்து
டாக்காவின் சல்லாவால்
மிக்க விலையுயர்ந்து
மிகமெலிந்த ஆடையினால்
ஒக்க அவளைமிக
ஒய்யாரம் செய்துவிட்டுப்

பக்கம் உடனிருத்திப்
பரிந்தே விருந்துமிட்டேன்
துக்கம்மிக ஆறியவள்
துதித்தாள் மிகவும் என்னை. 11

என்னுடைய மக்களுடன்
என்வீட்டுத் தாதியரும்
இன்னும் பணியாட்கள்
எல்லோரும் பக்தியுடன்
என்ன சிறுகுறையும்
ஏதும்அவட்(கு) இல்லாமல்
சொன்னபடி எல்லாரும்
சோடாச உபசாரம்
பண்ணியந்தப் பெண்மணியைப்
பார்த்து வந்தார் நேர்த்தியுடன். 12

அஞ்சி அடக்கமுடன்
அத்தையென்ற பக்தியுடன்
வஞ்சி இளங்கொடியாள்
வாழ்ந்திருந்தாள் வீட்டில்என்றன்
குஞ்சு குழந்தையெல்லாம்
கோதையவள் தன்னிடத்தில்
கொஞ்சி விளையாடிக்
குலவி மகிழ்ந்திருந்தார்.
நெஞ்சம் மிகக்களித்து
நிம்மதியாய் நானிருந்தேன். 13

இந்தவிதம் என்வீட்டில்
என்னுடைய மக்களினும்
சொந்தம்மிகக் கொண்டாடிச்
சொன்னபடி கேட்டுவந்தாள்
வந்திருக்கும் நாளையிலே
ஒருநாள் அருகில்வந்து



"எந்தனுடை ஊரின்மேல்
ஏக்கமின்றி வந்ததனால்
உன்னுடை உத்தரவில்
ஓலைவிட ஆசை"என்றாள். 14

"என்ன தடைஇதற்கே?
எழுதுவாய்" என்றுசொன்னேன்.
சொன்னவுடன் என்றனக்குத்
தோன்றா மொழிகளிலே
கன்னியவள் தன்னவர்க்குக்
காகிதமும் போட்டுவிட்டாள்.
பின்னைச் சிலநாளில்
பெண்ணவளின் தன்னினத்தார்
அண்ணன்என்றும் தம்பியென்றும்
அக்கமென்றும் பக்கமென்றும் 15

வந்தார் பலபேர்கள்
வந்தவரைச் சொந்தமுடன்
தந்தேன் இடமவர்க்கும்
தக்க விருந்தும் இட்டேன்
சந்தேகம் தானவர்மேல்
சற்றும் நினைக்காமல்
அந்தோ! இருந்துவிட்டேன்
அந்தஒரு காரணத்தால்
நொந்தேன் நிலைதவறி
நோவேன் விதியினையே. 16

அன்னவர்கள் கொண்டுவந்த
அழகாம் பலபொருள்கள்
மின்னுகின்ற கண்ணாடி
மினுக்குகின்ற பொம்மைகளும்
இன்னும் மயக்குகின்ற
என்னென்ன வோபொருள்கள்

என்னுடைய மக்களுக்கே
எடுத்துக் கொடுத்தவளாய்க்
கன்னி யவள்சிரிக்கக்
களித்துவிட்டார் மக்கள்எல்லாம். 17

நாளுக்கு நாள்அதன்மேல்
நலிந்தபடி என்வீடு
மேலுக்கு மேலாக
மிகவும் பயந்தவன்போல்
'பாலுக்குங் காவலொடு
பூனைக்கும் தோழன்'என்றே
தோல்நிற்க உள்ளிருந்த
சுளைமறைந்த கொள்கையெனக்
கோல்செய்த என் வாழ் வைக்
குலைத்துவிட்டாள் மெல்லமெல்ல. 18

என்ன உரைத்தாளோ!
ஏதுமருந் திட்டாளோ!
அன்னை தந்தை தெய்வம்என்றே
ஆரா தனைபுரிந்த
என்னுடைய மக்கள்என்னை
ஏறெடுத்தும் பார்ப்பதில்லை;
சொன்னபடி கேட்பதில்லை;
'தூ'வென்றும் 'போ' வென்றும்
கன்னியவள் மோகத்தால்
காலால் எனை உதைப்பார். 19

கொண்ட சமயம்விட்டார்
குலதெய்வப் பூசைவிட்டார்
பண்டைப் பெருமையுள்ள
பக்திகளும் விட்டு ஒழிந்தார்;
கண்டபடி உண்டுடுத்துக்
கண்டபடி யாய்க்களித்துப்



பெண்டுஒருத்தி தன்மயக்கில்
பெற்றஎன்னை யும்இகழ்ந்து
சண்டையிட்டுத் திரிவார் நான்
தவங்கிடந்த மக்கள்எல்லாம். 20

## 214. நாட்டை மறந்தனை மனமே!

நாட்டை மறந்தனை மனமே
நாளும்இங்(கு) எளியவர் வருந்தும்
பாட்டை நினைந்திலை சிறிதும்
படித்தனை அதன்பயன் இதுவோ?
பூட்டிய விலங்குடன் புலம்பும்
பெற்றபொன் னாட்டினைப் போற்றாய்
ஏட்டிற் படித்தனை அறநூல்
ஏதும்உன் செய்கையில் இல்லை. 1

வேதம்வே தாந்தங்கள் வளர்ந்து
வேண்டிய வளம்முற்றும் பொருந்திப்
பூதங்கள் விபத்துகள் குறைந்து
பூமியில் இணையற்ற நாட்டில்
சாதமும் வயற்றிற்கில் லாமல்
சாகாதும் பிணமெனத் தளர்ந்தோம்
ஏத்தன் காரணம் என்றே
எண்ணவும் மாட்டனை நெஞ்சே! 2

தன்னுயிர் போற்பிற உயிரைத்
தாங்கிய பெரியவர் வாழ்ந்து
பொன்னொளி வீசிய நாட்டின்
புகழ்அறம் நீபிறந்து அழித்தாய்
அன்னியர்க்(கு) உளவுகள் சொல்லி
அவர்தந்த எச்சிலை அருந்தி
உன்னுடன் பிறந்தவர் வருந்த
உடல்சுகித் திருந்தனை மனமே! 3

மாற்றலர்க்கு இடங்கொடுத்(து) ஏழை
மக்களைப் பிழிந்துடல் வளர்த்தாய்
கூற்றுவன் கணக்கிடும் நாளில்
கூறுவை பதில்என்ன மனமே!
வீற்றிருந்து ஆண்டஉன் அரசை
விற்றுடல் சோம்பினை இனிமேல்
ஆற்றுவை இப்பழி அகற்ற
அன்னையின் விடுதலைக்கறமே. 4

சொந்த சுதந்தரம் மறந்தாய்
சோற்றினுக்கு உடல்சுமந்து இருந்தாய்.
பந்தம் கன்றிட நினையாய்
பாரதத் தாயினைப் பாடாய்
அந்தமி லாதவன் செல்வம்
அன்னியர்க்(கு) இழந்தனை குடிகள்
கந்தையும் கஞ்சியும் அற்றார்
காரணம் நீயெனக் கருதாய். 5

அடிமையிற் பழகினைப் பொழுதும்
ஆண்மையை மறந்தனை முழுதும்
குடிமுறை குறைந்தனை சிறிதும்
குலமுறை நினைந்திலை பெரிதும்
மிடிமையிற் கிடந்ததுன் நாடு
மேன்மையை இழந்ததுன் வீடு
மடமையில் மயங்கியிப் பிறப்பின்
மகிமையை மறந்தனை மனமே! 6

கொண்டவள் குலக்கொடி வாடக்
கூத்தியர் மையலிற் குறையும்
வண்டர்கள் எனவல்ல முன்னோர்
வழக்க ஒழுக்கத்தை மறந்து
கண்டவர் சிரித்திடக் களித்து
கற்றவர் மொழிகளைப் பழித்தாய்
அண்டிய அயலவர் மயக்கால்
அழித்தனை மனையறம் அறிவோ? 7



ஜாதியை மதத்தினைப் பழித்துச்
சண்டையில் உவந்தனை மனமே
வாதுகள் மிகுந்தன நாட்டில்
வறியவர் வரிகளால் வருந்த
ஏதுஇனி விடுதலை எனவே
யாவரும் ஏங்கினர் நல்லோர்
ஓதிய ஒற்றுமைக்(கு) உழைத்தே
ஒப்புற ஒழுகுவை உயர்வாய் 8

தேனுள்ள தாமரை மேலே
தினமுள்ள தவளையைப் போலே
நானுள்ள இப்பெரும் நாட்டின்
ஞாலம்எல் லாம்திரண் டாற்போல்
ஊனுள்ள தேகத்தி னோடும்
உன்முன்னே காந்தியோன் றுற்றும்
ஏனென்ன என்றிலை மனமே
இருந்தென்ன போயென்ன நீயே! 9

ஆண்டவன் உனக்கென்ற நாட்டில்
அன்னியர்க்கு அரசளித்து அடிமை
பூண்டுடல் வளர்த்தனை நெஞ்சே!
புண்ணியம் உனக்கிலை; நரகே.
மீண்டும்உன் நாட்டினை மீட்க
மெய்ப்பொருள் ஆவியும் ஈந்தே
ஆண்டுதொழில் புரிகுவை யாயின்
ஆன்ம சுதந்தரம் அடைவாய். 10

*குறிப்புரை:- பூதங்கள் - பூதங்கள் ஐந்து: நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்; சாதம் - சோறு; கூற்றுவன் - எமன்; ஆவி - உயிர்; தேகம் - உடல்; மிடிமை - வறுமை; ஏத்தன் - புகழ்வோன் (இறைவன்); ஞாலம் - உலகம்; வண்டர்கள் - மங்கலப் பாடகர்கள்; வாதுகள் - வழக்குகள்; கன்றிட - மிகுந்திட, முதிர்ந்திட.*

## 215. சுதந்தரம் வேண்டும்

கண்ணொளி இன்றி மற்றக்
கட்டழகு இருந்தால் என்னப்
பண்ணளி இனிமை யூட்டாப்
பாட்டுகள் கேட்பது என்னப்
புண்ணியப் புகழொன்(று) இல்லாப்
பொற்பொதி யுடையார் போலும்
திண்ணிய சுதந்தரத்தின்
தெரிசனம் இல்லா வாழ்க்கை. 1

உண்டிகள் பலவும் செய்தே
உப்பிலா(து) உண்ணல் போலும்
கண்டொரு கனிவு சொல்லக்
கனிவுஇலான் விருந்து போலும்
பெண்தரும் அழகு மிக்காள்.
பிரியம்இல் லாமை ஒக்கும்.
தொண்டுசெய்(து) உரிமை இன்றிச்
சுகித்துஉடல் வளர்க்கும் வாழ்க்கை. 2

அன்புஅறம் வளர்ந்தி டாமல்
ஆற்றலும் அறிவும் குன்றும்
வன்புகள் சூதும் வாதும்
வழக்குகள் வளரும் வாழ்வின்
இன்பமும் ஊக்கம் ஆன்ம
எழுச்சியும் இன்றி என்றும்
துன்பமும் சோம்பல் சூழும்
சுதந்தரம் இல்லா நாட்டில். 3

கல்வியும் கலைகள் யாவும்
களைமிகும் பயிர்க ளாகும்
செல்வமும் புகழும் தேயும்
செருக்கவர் தருக்கி வாழ



நல்லவர் வருந்தி வாட
நடுநிலை ஞாயம் கெட்டுத்
தொல்லைகள் கட்சி கட்டும்
சுதந்தரம் இழந்த நாட்டில். 4

இச்சைபோல் இருந்து வாழ
ஈப்புழு எறும்பும் கோரும்;
உச்சமாம் மனித சென்மம்
சுதந்தர உணர்ச்சி இன்றி
நச்செனும் அடிமை வாழ்வை
நயத்திட ஞாயம் உண்டோ?
நிச்சய சபதம் பூண்டு
சுதந்தரம் நிலைக்கச் செய்வோம். 5

உலகினுக்கு அறிவு தந்த
உண்மைகள் மிகுந்து ஞானக்
கலைகளைக் கணித்து சீவக்
கருணைசேர் நமது நாடு
பலபல கொடுமை முற்றிப்
பதைத்திடும் பிறநாட்டார்க்கு
நலம்எடுத்(து) உரைக்க வேண்டும்
சுதந்தரம் நமக்கு வேண்டும். 6

குறிப்புரை:- இச்சை - விருப்பம்; நச்சு - விடம். 'கனிவு இலான் விருந்து' என்பது, உள்ளத்திலே அன்பு இல்லாமல் இடும் உணவுப் பொருட்கள் ஆகும்; 'மோப்பக் குழையும் அனிச்சம் முகந் திரிந்து நோக்கக் குழையும் விருந்து' என்பது குறள்; 'ஒப்புடன் முகம்மலர்ந்தே உபசரித்து உண்மை பேசி உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமிழ்தமாகும்; அப்ப முப்பழமொடு முகங்கடுத்து இடுவாராயின் கப்பிய பசியோடு கடும்பசியாகும்' என ஔவையார் நவில்கிறார்.

## 216. சுதந்தரமில்லா ஒரு நாடு

சுதந்தரத் திருநாள் தொழுவோம்நாம்
துன்பம் தொலைத்துஇனி எழுவோம்ஆம்
நிதந்தரும் தரித்திரம் நீங்கிடுவோம்
நீதியும் அறங்களும் ஓங்கிடுவோம். (சுதந்) 1

கோயில் குளங்களை இடித்தெறியும்
குழந்தைகள் பெண்களைக் கொலைபுரியும்
பேயின் கூத்தினைத் தடுத்திடவே
பெரிதும் சுதந்தரம் தொடுத்திடுவோம். (சுதந்) 2

மூர்க்கர்கள் உலகினை ஆள்வதையும்
முற்றிலும் தருமம் தாழ்வதையும்
போக்கிடச் சுதந்தரம் வேண்டுவோம்
புண்ணிய முறைகளில் ஆண்டிடுவோம். (சுதந்) 3

பகைவர்கள் தங்களுக்கு உபசாரம்
பக்தரைச் சிறையிடும் அபசாரம்
நகைமிகும் அரசியல் முறைமாற
நம்முடைச் சுதந்தரம் நிறைவேற. (சுதந்) 4

சுதந்தரம் இல்லா ஒருநாடு
சூழ்புலி பேய்மிகும் பெருங்காடு;
எதிர்ந்திடும் துயர்களைச் சகித்திடுவோம்;
எம்முடைச் சுதந்தரம் வகித்திடுவோம். (சுதந்) 5

பொதுஜன நாயக முறைகாணும்
பூரண சுதந்தரம் பெறவேணும்;
எதுதடை நேரினும் அஞ்சாமல்
எவரையும் அதற்கு இனிக் கெஞ்சாமல். (சுதந்) 6

குறிப்புரை:- நிதம் - நாள்தோறும்; மூர்க்கர்கள் - கொடியவர்கள், பிடிவாதம் பிடிப்பவர்கள்; துயர் - துன்பம்; சகித்திடு - பொறுத்துக்கொள்.



## 217. சுதந்தரத் தேவி

சுதந்தரத் தேவியைத் தொழுவோம் வாரீர்
சுகம்பெற அதுதான் வழியாம் பாரீர்
பதந்தரும் மானிடப் பண்புகள் வளரும்
பரமனை உணர்ந்திடப் பக்தியும் கிளரும். 1

விடுதலை அடைந்தது சுதந்தரம் இல்லை
வெற்றிகள் என்பதும் வெறிதரும் தொல்லை
கெடுதலை நீக்கிடக் கிருபைகள் செய்யும்
கேண்மையின் வடிவே சுதந்தரத் தெய்வம். 2

அன்னிய உதவியை அவசியம் நீக்கும்;
அதுதான் சுதந்தர ஆற்றலைக் காக்கும்;
பொன்னிலும் உயர்ந்தது சுதந்தரச் சிறப்பு;
பொறுமையும் வாய்மையும் அதற்குள் பொறுப்பு. 3

ஆயுத வெறிகளை அப்புறம் ஒதுக்கி,
அன்பின் நெறிகளில் அரசியல் புதுக்கி,
சாய்கிற வரையிலும் சமரசம் பரப்பி,
சண்டைகள் விலக்குதல் சுதந்தரப் பொறுப்பு. 4

அற்புதன் காந்தியின் அறநெறி கொண்டோம்;
அடிமை விலங்குகள் அகன்றன கண்டோம்;
கற்பெனக் காந்தியின் நன்னெறி காப்போம்.
கருணையும் ஆற்றலும் கலந்திட நோற்போம். 5

குறிப்புரை:- பரமன் - மேலானவனான இறைவன்; அறநெறி - தருமவழி; கருணை - அருள்; ஆற்றல் - சக்தி; சமரசம் - இருவரையும் ஒப்புநோக்கிச் சமம் செய்தல்.

## 218. நம் சுதந்தரம்

சுதந்தரம் அடைந்தோம் என்ற
சுகங்களை அடையு முன்னால்
எதிர்த்தன எதிர்பா ராத
இடர்பல சகித்து வென்றோம்
முதிர்ந்துள யுத்த வேகம்
முற்றிலும் மறைந்து போகும்
விதந்தனில் நமது நாட்டின்
சுதந்தரம் உதவ வேண்டும். 1

அரும்பெரும் காந்தி அண்ணல்
அற்புத அறிவு சேர்ந்த
பெருந்திறல் காங்கி ரசுதன்
பெருமையிற் குறைந்து போகக்
குறும்புகள் வளர்ந்தி டாத
குறியுடன் கொள்கை காத்து
விரும்பிடும் ராம ராஜ்ய
சுதந்தரம் விளங்க வேண்டும். 2

அதிகார மோக மின்றி
ஆதிக்க தாக மின்றிச்
சதிகார எண்ணம் சேராச்
சமதர்ம உணர்ச்சி யோடு
துதிபாடி நாட்டை வாழ்த்தும்
தொண்டர்கள் சூழ்ந்து நிற்கும்
நிதியாக காங்கிரஸ் நின்று
சுதந்தரம் நிரக்க வேண்டும். 3

காந்தியை மறந்தி டாமல்
கருணையைத் துறந்தி டாமல்
சாந்தியிற் குறைந்தி டாமல்
சத்தியம் இரிந்தி டாமல்



மாந்தருக்கு அறிவு காட்டும்
மாபெரும் சோதி யாக
தேர்ந்துள நமது நாட்டின்
சுதந்தரம் நிலைக்க வேண்டும். 4

பாரினில் ஒருநா டேனும்
நம்மிடம் பகைகொள் ளாமல்
சீரிய முறையில் ராச
நீதியின் செம்மை காத்துப்
போரிட நினைப்பார் உண்டேல்
புலிகண்ட மான்போல் அஞ்சத்
தீரமாய் நமது நாட்டின்
சுதந்தரம் திகழ வேண்டும். 5

ஆயுத வெறிகள் மிஞ்சி
அழிவுக்கே முனைந்து நிற்கும்
தீயன குறிகள் கண்டே
உலகெலாம் திகைக்கும் துன்பை
நாயகன் காந்தி தந்த
நன்னெறி தன்னைக் காட்டும்
தாயகம் நமது நாட்டின்
சுதந்தரம் தடுக்க வேண்டும். 6

## 219. சுதந்தரச் சபதம்

அன்னியர்கள் நமை ஆண்ட அவதி நீங்கி
அரசுரிமை முழுவதையும் அடைந்தோம் நாமே
என்னினும்ஏன்? சுதந்தரத்தின் இன்பம் காண
எவ்வளவோ மனமாற்றம் இன்னும் வேண்டும்;
தன்னலமே பெரிதாகக் கருதி டாமல்
பொதுநலமே தன்னலமாய்த் தரிக்க வேண்டும்;
பொன்னின்உயர் சுதந்தரத்தைப் பாதுகாக்கப்
பொறுப்புணர்ந்து கடமைகளைப் புரிய வேண்டும். 1

உயிர்க்கொலையை அஞ்சிஅஞ்சி ஒதுக்க வேண்டும்;
உயிர்கொடுக்க அஞ்சாத உறுதி வேண்டும்;
பயிர்ச்சியுடன் அன்புநெறி பழக வேண்டும்;
பல்லுயிரும் நல்லுறவாம் பரிவு வேண்டும்;
முயற்சியில் உணவளிக்கும் தொழில்கள் எல்லாம்
முன்னேறப் புதுமுறையில் முனைதல் வேண்டும்;
உயர்ச்சியென்றும் தாழ்ச்சியென்றும் பேதமின்றி
உழைப்புகளில் சமமான ஊக்கம் வேண்டும். 2

அஞ்ஞானச் சூழ்நிலையை அதிக மாக்கி
அருள்மறந்த செயல்களுக்கே ஆசை மூட்டும்
விஞ்ஞான வெறிமறைய வேண்டும் என்ற
வித்தகமாய்ச் சத்தியத்தின் விளக்கமாய் நிற்கும்
இஞ்ஞாலம் இதுவரைக்கும் காணாத் தூயன்
எம்மான்அக் காந்திமகான் ஏந்திச் செய்த
மெய்ஞ்ஞானத் தவநெறியால் நமது தேசம்
மேவியநல் சுதந்தரத்தின் மேன்மை காப்போம். 3

குறிப்புரை:- *அவதி - துன்பம்; பரிவு - இரக்கம்; பேதம் - வேறுபாடு; அஞ்ஞானம் - அறியாமை; இதன் எதிர்ச்சொல் மெய்ஞ்ஞானம் (உண்மை அறிவு); மேவிய - பொருந்திய; வித்தகம் - பெருமை, நன்மை, சின்முத்திரை, பேரறிவு, ஞானம்.*

## 220. காந்தி தந்த குடியரசு

எண்ணரிய தியாகிகளை எழும்ப வைத்த
எழுதரிய காந்திமகான் தவத்தி னாலே
மண்ணுலகம் இதுவரையில் அறியா நல்ல
மார்க்கத்தில் அடிமைமனம் மறையச் செய்து
கண்ணனைய சுதந்தரத்தின் காட்சி மேவக்
கருதரிய குடியரசு தொடங்கக் கண்டோம்
திண்ணமுடன் காந்திவழி நிற்போம் ஆனால்
தீராத குறைகள் எல்லாம் தீர்ந்து போகும். 1



புண்படுத்தல் எதற்குஎனினும் தீதே என்றும்
பொதுவான நல்லறிவை மிகவும் போற்றி
உண்பதற்கும் உடுப்பதற்கும் மட்டும் இன்றி
உயிர்களுக்கும் சமதர்ம உணர்ச்சி காட்டும்
பண்புடைய மனப்பான்மை பலிக்க வேண்டி
பக்தியுடன் காந்தி வழி பயில்வோ மானால்
மண்புகழும் குடியரசு நமதே ஆகும்;
மனிதருக்குள் சண்டைகளை மறையச் செய்வோம். 2

சட்டதிட்டச் சிறப்புமட்டும் சரிசெய் யாது
சைந்நியத்தின் மிகுதிமட்டும் சாதிக் காது
கட்டுதிட்ட உணர்ச்சியுடன் குடிகள் எல்லாம்
கடமையெனப் பொறுப்புகளைக் கருத வேண்டும்.
திட்டமிட்டுக் காத்திருந்து சேவை செய்யும்
தியாகபுத்தி குடியரசின் தேவை ஆகும்.
வட்டமிட்டு நம் அறிவைப் பாது காக்க
வள்ளல்அந்தக் காந்தியைநாம் வணங்க வேண்டும். 3

பிறநாட்டு வழிகளைநாம் பின்பற் றாமல்
பிற்போக்கு வெறிகளுக்கும் இடங்கொ டாமல்
திறம்காட்டி மெய்யறிவின் தெளிவும் சேர்ந்த
சீலர்களைத் தேர்ந்தெடுக்கத் தெரிந்து கொண்டால்
உறங்காமல் காந்திமகான் உபதே சத்தை
ஊரூராய்ப் பரப்புவதில் ஊக்கம் கொள்வோம்;
அறங்காட்டும் புதுமுறையில் ஆட்சி செய்வோம்;
அதற்கென்றே அவதரித்தார் அண்ணல் காந்தி. 4

எந்திரங்கள் தந்தவெறி குறைய வேண்டும்;
எங்கெங்கும் கைத்தொழில்கள் நிறைய வேண்டும்;
தந்திரங்கள் பணம் பறித்தல் தடுக்க வேண்டும்;
தன்னலங்கள் தலையெடுப்பை ஒடுக்க வேண்டும்;

சிந்தனையில் தெய்வபயம் சேர வேண்டும்;
செய்கையெல்லாம் பொதுநலத்தைக் கோர வேண்டும்;
மந்திரமாய்க் காந்திமகான் திருநா மத்தை
மக்கள்எல்லாம் மறவாமல் செபிக்க வேண்டும். 5

குறிப்புரை:- வள்ளல் - வரையாது கொடுப்பவர்; செபிக்க - மந்திரம் ஓதுதல், வேண்டுதல்.

### 221. கற்பகச் செடி

சுதந்தரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகந்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழ்அன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்தரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின்று எதிர்த்திட. 1

சோறும் துணிமணி சுகங்களைக் காட்டிலும்
சுதந்தர உணர்வே மேலாகும்
கூறும் நலங்களை விலைகொத்(து) ஆயினும்
கொள்ளத் தகுந்தது சுதந்தரமே.
வீறும், கருணையும், வித்தக ஞானமும்
விளைவது சுதந்தர விருப்பத்தால்
தேறும் பொழுதினில் சுதந்தரம் தொழத்தகும்
தெய்வம் என்பது தெளிவாகும். 2

உத்தமன் காந்தியின் மெய்த்தவ பலத்தால்
உலகம் இதுவரை கண்டறியாச்
சுத்தநல் வழிகளில் சுதந்தரம் அடைந்தோம்
சொல்லரும் பாக்கியம் நமதாகும்;
கைத்தலம் கிடைத்துள கற்பகச் செடிஇதைக்
காயவும் கருகவும் விடமாட்டோம்
சத்திய சபதம் பக்தியில் காப்போம்
சர்வே சன்துணை புரிந்திடுவான். 3



### 222. தேசீய வாரம்

தேசீய வாரத்தைச் சிந்திப்போம் - இந்தத்
தேசத்தில் தந்தையை வந்திப்போம்
மாசற்ற காந்தியின் நாமமே - என்றும்
மனிதர் குலத்துக்குச் சேமமாம். 1

சேவைகள் காரியம் வெல்லுமா - அன்றிச்
செல்வச் செருக்குகள் செல்லுமா
தேவை நமக்கின்று சேவைதான் - அது
தெய்வக் கருணையை மேவுமால். 2

சத்தியம் நம்மிற் குறைந்ததால் - பல
சங்கடம் வந்து நிறைந்ததே.
பத்தியம் விட்டுப் பிரிந்திடில் - என்ன
பயனுள வாகும் மருந்துகள்? 3

நீரில் குளித்திடும் ஆசையால் - சேற்றை
நிறையத்தன் மேனியில் பூசல்போல்
ஊரைத் திருத்திட எண்ணினோம் - சொந்த
ஊழல் மிகுந்திடப் பண்ணினோம். 4

ஒற்றுமை சேரப் புகுந்தவர் - தம்முள்
ஒருவரை ஒருவர் இகழ்ந்தனர்!
குற்றம் நிறைந்தது நாட்டிலே - உண்ணக்
கூழும்கு றைந்தது வீட்டிலே. 5

### 223. இலங்கைச் சுதந்தர கீதம்

வீர கேசரி என்ன நின்றுநம்
வெற்றி ஓசை முழக்குவோம்
விட்டு ஒழிந்தது கெட்ட காலமும்
வீழ்ந்து அழிந்தன தீமைகள்

தூரம் ஓடின சூது வாதுகள்
சூழ்ந்தி ருந்தன யாவையும்
சூடு பட்டன கேடு கெட்டன
சூழ்ச்சி வஞ்சனை ஆட்சிகள்!
கோர மாகிய அடிமை வாழ்வுஎனும்
கொடுமை தந்தன மடமைகள்
குற்றம் முற்றிலும் பற்று விட்டன
கூடி விட்டது விடுதலை
ஈர மிக்க இலங்கை நாடுஇனி
இன்பம் ஓங்கி இலங்கவே
இன்று தொட்டுச் சுதந்த ரம்தரும்
இனிய வாழ்வு துவக்கினோம். 1

ஏசு நாதனைப் புத்த தேவனை
ஏற்ற முள்ள மகம்மதை
இணையி லாதநம் காந்தி அண்ணலை
ஈன்று மெய்ப்புகழ் ஏந்திடும்
ஆசி யாவினில் பகுதி யாகிய
அழகு சொட்டும் இலங்கையில்
ஆதி வந்தவர் பாதி வந்தவர்
யாவர் ஆயினும் இவ்விடம்
வாச மாயுள மக்கள் யாவரும்
நேச மாய்இனி வாழவே
வம்பு துன்புகள் வாதபேதமும்
வந்தி டாவகை ஆளுவோம்.
ஈசன் உண்மையை எண்ணு புண்ணிய
இந்த நாட்டு நினைப்புடன்
எதிரி என்றிட எவரும் இன்றியே
சுதந்த ரக்கொடி ஏற்றுவோம். 2

மலைவ ளத்திலும் நதிவ ளத்திலும்
மாவ ளத்திலும் மிக்குளோம்
மதிவ ளர்த்துஇனி நிதிவ ளர்த்திடும்
மார்க்கம் முற்றிலும் தீர்க்கமாம்;



கலைவ ளர்த்துஒரு நிலைகொ டுத்திடும்
கருணை வாழ்வு நடத்துவோம்
கடமை செய்தபின் உரிமை எய்திடும்
கதிய றிந்த கருத்துடன்
கொலைவ ளர்த்திடும் மதவெ றித்திமிர்
கொடுமை முற்றிலும் அற்றதாய்க்
குவல யத்தவர் கவலையற்றிடக்
கூடு மானதைச் செய்யவே
அலைக டல்நடு அரண்அ மைந்துள
அழகு கொஞ்சும் இலங்கையில்
அச்ச மற்ற சுதந்த ரத்துடன்
ஆண்மை ஓடுஅர சாளுவோம். 3

சேர சோழரின் பாண்டி மன்னரின்
செந்த மிழ்த்திரு நாட்டுடன்
சேர்ந்தி ருந்திட நேர்ந்தி டும்படி
செய்து வைத்தது தெய்வமே!
தீர யோசனை செய்யில் இந்தநம்
தீயின் நன்மைகள் யாவையும்
திட்ட மாகவும் ஓட்டி நிற்பது
தேவி இந்தியத் தாயுடன்
தூர மாகிய தேச மக்களின்
தொடர்பு வேண்டியது என்னினும்
தொன்று தொட்டுளம் ஒன்று பட்டுள
தொலைவு இலாத சரித்திரம்
வாரம் மிக்குள இந்தி யாவுடன்
தாரம் மிக்குள நட்புடன்
வந்த இந்த சுதந்த ரத்தினை
எந்த நாளிலும் வாழ்த்துவோம். 4

புத்த தேவரின் போத நன்னெறி
போற்றும் சிங்கள மக்களும்
பூர ணத்தமிழ் ஞானம் என்பதைப்
பூசை செய்திடும் தமிழரும்

ஒத்து வாழ்வது மெத்த வும்நல்
பத்தி லாவது உண்மையால்
உள்ள வேறுஇனி என்ன வேற்றுமை?
ஒன்று மேயிலை என்னலாம்.
சத்தி யத்தினும் சாத்வி கத்தினும்
சார மாகிய காந்தியின்
சமர சத்தனி சங்க நாதம்
முழக்கு கின்றஇச் சமயமே
யுத்தம் என்கிற பித்தை வெட்டிட
உலகி னுக்குஒரு உதவியாய்
ஊழி யம்செய ஈழ நாடுதன்
உரிமை பெற்றதை வாழ்த்துவோம். 5

## 224. ஆயுத பலத்தை நம்பாதே

ஆயுத பலத்தை நம்பாதே
ஐரோப்பியர்போல் வெம்பாதே
ஞாயமும் அன்பும் நமதுதுணை
நமக்கார் உலகில் வேறுஇணை? 1

எந்திர சக்திகள் ஏய்த்துவிடும்
எண்தவர் தமையும் மாய்த்துவிடும்
தந்திர உத்தியும் சதமல்ல
தாரணி மதிப்பது அதையல்ல. 2

சாகிற துணிச்சல் போதாது
சற்குணம் இலையேல் தீதாகும்.
வேகிற நெருப்பால் சமைத்திடலாம்
வெறுந்தணல் உணவாய் அமைந்திடுமோ? 3

தைரியம் எத்துணை இருந்தாலும்
தர்மமும் கருணையும் பொருந்தாமல்
செய்கிறது எல்லாம் சிறுமை தரும்
செம்மையும் நன்மையும் வறுமையுறும். 4



வீரரும் சேனையும் வேண்டியதே
வெல்லவும் கொல்லவும் தூண்டிடவா!
ஈரமும் இரக்கமும் கெடுத்தவரை
இடித்துரைத்து அறவழி நடத்திடவே. 5

விஞ்ஞா னத்தால் கொல்லுவதை
வீரர்கள் போரெனச் சொல்லுவதோ?
அஞ்ஞா னத்தின் வடிவுஅன்றோ
அணுகுண்டு ஆகிய வெடிகுண்டு? 6

கண்டுபி டித்தவர் நடுங்குகின்றார்?
காணா தவர்கள் ஒடுங்குகிறார்!
மண்டலத்து அறிஞர்கள் மயங்குகிறார்
மறைத்திட முயற்சியில் தியங்குகிறார். 7

கொல்லும் வித்தைகள் பெருகுவதா!
கொஞ்சிடும் வாழ்வுஇனி அருகுவதா!
சொல்லும் வல்லவர் சொல்லுங்கள்
சுதந்தரம் இதற்கா சொல்லுங்கள்? 8

இதுதான் தருணம் அடுத்துளது
இம்சையின் தீமையை எடுத்துரைக்க.
பொதுவாய் உலகினில் போர்வெறியை
போக்கிடப் புகல்வோம் ஓர்நெறியை. 9

உத்தமன் காந்திசொல் கடைப்பிடித்தால்
உண்மையில் போர்களைத் தடைப்படுத்தும்
சத்தியம் சாந்தமும் வளராமல்
சண்டையின் மோகமும் தளராது. 10

இந்திய மக்களின் பொதுச்சிறப்பாம்
இம்சை வழிகளில் அதிவெறுப்பே;
வந்தனை புரிவது வாய்மைகளை
வணங்குதல் வாழ்க்கையின் தூய்மையரை. 11

கொலைவழி மறுப்பவர் தமிழ்மக்கள்
கொள்கையில் சிறப்பவர் தமிழ்மக்கள்
நிலைதரும் வள்ளுவன் மொழிகற்போர்
நிச்சயம் காந்தியின் வழிநிற்பார். 12

*குறிப்புரை:- தணல் - நெருப்பு; சற்குணம் - நல்ல குணம்; இம்சை வழி - துன்ப வழி.*

## 225. புரட்சி வேண்டும்

புரட்சி வேண்டும் புரட்சி வேண்டும்
புரட்சி வேண்டுமடா!
புரட்சி என்னும் சொல்லின் பொருளினும்
புரட்சி வேண்டுமடா! 1

புத்தம் புதிதென நத்தப் படுவதைப்
புரட்சி என்றிடலாம்;
நித்தம் கண்டுள சொத்தை வழிகளில்
புரட்சி நின்றிடுமோ! 2

மருட்சி தந்திடும் முரட்டு வார்த்தையில்
புரட்சி வந்திடுமோ?
திரட்சி யாகிய மகிழ்ச்சி வாழ்க்கையைத்
தீயன தந்திடுமோ! 3

பொதுநலம் வந்திடப் புதுவழி தந்தால்
புரட்சி அதுவாகும்;
சதிபல செய்திடும் வழிகளில் விழுவதும்
புரட்சி மதியாமோ? 4

வேதனை யேதரும் தீதுள நெறிபல
புரண்டு வீழ்ந்திடும்ஓர்
போதனை தந்திடும் நூதன வழிகளில்
புரட்சி சூழ்ந்திடுவோம். 5



சூதுகள் அரசியல் நீதிகள் என்றிடும்
சுத்தப் பொய்யுரையை
வீதியில் சந்தியில் விழிக்க விட்டுஒரு
புரட்சி செய்திடுவோம். 6

கொன்று குவிப்பதைவென்றி எனச்சொலும்
கொச்சை எண்ணமெலாம்
சென்று மறைந்தன என்று சொலும்ஒரு
புரட்சி பண்ணிடுவோம். 7

சண்டையும் கொலைகளும் பண்டைய நாள்முதல்
கண்டு களித்ததடா!
வண்டர்கள் வழிகளைக் கொண்ட புரட்சியில்
நன்மை பலித்திடுமோ? 8

தீமையி னால்ஏதும் நன்மைகள் வரினும்
தேய்ந்தவை மாய்ந்துவிடும்.
வாய்மையின் அன்பால் வருகிற நலமே
புரட்சி வாய்ந்ததுவாம். 9

உத்தமன் காந்தியின் உபதே சம்தான்
புரட்சி போதனையாம்;
சத்திய நெறிதரும் சாத்விக முறையே
புரட்சி சாதனையாம். 10

*குறிப்புரை:- சூது - வஞ்சனை; வேதனை - துன்பம்; வண்டலர்கள் - மங்கல பாடகர்கள்.*

## 226. மன்னவன் நானே

மன்னவன் நானே மந்திரி என்சொல்
மற்றவர் யாருக்குச் சுற்றமிது?
என்னுடை நாடு என்னுடை வீடு
யாரிதில் என்னை மிரட்டுவது

அன்னியர் இங்கே உள்ளவர் யாரும்
அண்டிப் பிழைத்திட வந்தவரே!
என்னுடை ஏவல் சொன்னதைச் செய்தோர்
என்னை அடக்குதல் இன்னுமுண்டோ? 1

என்னுடைக் காடு என்னுடைப் பாடு
என்றன்வெள் ளாமையை யார் அறுக்க?
மன்னவன் நானே மந்திரி என்ஆள்
மற்றவர் யாரிதை ஒத்துக்கொள்ள!
சொன்னதைச் செய்து பண்ணையைக் காக்கச்
சோற்றுக்கு வந்தவன் மாற்றியதேன்?
இன்னமும் இந்தச் சின்னத் தனத்தில்
ஏங்கிக் கிடந்திடத் தூங்குவனோ! 2

என்னுடைப் பெட்டி என்னுடைத் துட்டு
யாரிடம் சாவி இருத்தல்சரி?
பொன்னையும் வெள்ளிச் செம்புஎன் றாலும்
பூட்டவும் நீட்டவும் என்பொறுப்பு;
சின்னப் பயலோ நான் சித்தம்கெட் டேனோ
சீச்சீ! ஏன்இந்த ஏச்செனக்கு?
மன்னவன் நானே மந்திரி வைப்பேன்
மற்றவர் யாருடைச் சித்தம்அது? 3

மந்திரி நானே மன்னவன் ஆவேன்
மற்றவர் யாருக்குக் குற்றம்இதில்?
இந்திய நாட்டில் நொந்தவர் இன்றி
இன்அர சாக்குவேன் என்னரசை!
அந்தமி லாதான் ஆண்டவன் தந்தான்
ஆரிய நாடுஎன்றன் ஆட்சியன்றோ!
சிந்திய செல்வம் சேகரம் செய்து
சீக்கிரம் பாக்கியம் ஆக்கிவைப்பேன்! 4

குறிப்புரை:- சித்தம் - அறிவு; நொந்தவர் - வருந்தியவர்; அந்தமிலான் - முடிவு இலான்; மன்னவன் - அரசன்; சீக்கிரம் - விரைந்து; பாக்கியம் - செல்வம்; மற்றவர் - அயலவர்.



## 227. புது வழி

எத்திசையில் எம்மொழியில் எவர்வாய்ச் சொல்லில்
எப்படியாய் வரும்கதைகள் எதுவா னாலும்,
சத்தியத்தின் வழிகாட்டும் அறிவை எல்லாம்
தமதாக்கிக் கலைவளர்த்த தமிழர் நாட்டில்,
இத்தினத்தே கூட்டியுள்ளோம் இனிதே எண்ண
இந்தியத்தாய் சுதந்தரத்தை எய்தும் மார்க்கம்
நித்தியமாம் அறங்களையே நினைவில் வைத்து
நிந்தையில்லாச் செயல்முறைகள் நிறுவ வேண்டும். 1

மன்னவரைச் சதிபுரிந்து வெட்டி மாய்த்தும்,
மாறுபட்ட கருத்துடைய வார்த்தை ஒன்றைச்
சொன்னவரைச் சுட்டெரித்தும் துன்மார்க் கத்தால்
அயல்நாட்டைப் படையெடுத்துத் துன்பம் செய்தும்,
இன்னபல கொடுமைசெயும் பிறநாட் டாரை
இந்நாட்டின் விடுதலைக்கும் பின்பற் றாமல்
முன்னையநம் நாகரிகம் முரண்ப டாமல்
முடிவுசெய்வீர் சுதந்தரப்போர் முறைகள் எல்லாம். 2

அடிமைகொளும் நம்விலங்கை அகற்ற வேண்டும்;
அதையும்உயர் அன்பின்வழி அகற்ற வேண்டும்;
கொடுமைசெயும் வழக்கமெல்லாம் கொளுத்த வேண்டும்;
ஒருவருக்கும் கொடுமையின்றிக் கொளுத்த வேண்டும்;
'முடியுமெனில் அப்படியே முடிப்போம்; இன்றேல்
முயற்சியொடு நாமெல்லாம் முடிவோம்' என்னும்
திடமதுதான் தீரமொடு வீர மாகும்;
தெரிந்துரைகள் அதற்குதவச் செப்பு வீரே. 3

ஒருபதியில் ஒருசாதி ஒரும தத்தார்
ஒன்றாகச் சேர்ந்திருந்தார் உறவாய் என்னும்
மருவாத பழங்கால நிலைமை எல்லாம்
மலையேறிப் போனதுகாண்; மண்மேல் இந்நாள்

ஒருநாட்டில் பலமதங்கள் பலநாட் டாரும்
ஒன்றாகச் சேர்ந்திருக்கும் உறவே வேண்டும்;
பெருந்தி இதைமனத்தில் பிரதி டாமல்
பேசிடுவோம் விடுதலையின் பேச்சை எல்லாம் 4

வள்ளுவர் வாழ்க்கைதனை நினைப்பு மூட்டி
வான்புகழும் திருக்குறளை நடந்து காட்டும்
கள்ளமிலாக் காந்திமுனி காட்டித் தந்த
கருணையொடு சத்தியத்தின் வீரம் சேர்ந்த
தெள்ளியநல் புதுவழியே உலகுக்கு இன்று
தேவையென் தெரிந்தவர்கள் செப்பு கின்றார்
தள்ளரிய அப்பெரிய தவத்தைத் தாங்கத்
தமிழர்கள்நாம் மிகமிகவும் தகுதி ஆவோம். 5

## *228. தமிழ்வழி அரசு*

தமிழ்மொழி வளர்த்த ஞானம்
தரணியில் பரவி எங்கும்
தமிழ்வழி அரசு நீதி
தழைத்திட முடியும் ஆனால்
குமிழ்தர உலகை வாட்டும்
கொடுமைகள் குறையும், உண்மை,
அமிழ்தினை உண்டால் என்ன
அனைவரும் சுகித்து வாழ்வோம். 1

சிலம்பினைக் காட்டிக் கேட்ட
கண்ணகி சீற்றம் கண்டு
குலம்பழி கொண்ட(து) என்று
குமுறிய துயரால் நொந்து
நலம்பிழைத்(து) அறத்தைக் கொன்ற
நாணத்தால் உயிரை விட்ட
தலம்புகழ் மன்னன் காதை
தமிழுக்கே சொந்த மாகும். 2

கன்றினை மைந்தன் கொல்லக்
கதறிய பசுவைப் பார்த்தான்



'இன்றுனக்கு உற்ற துன்பம்
எனக்குறச் செய்வேன்' என்று
தன்மகன் உயிரைக் கன்றின்
உயிருக்கே ஈடாய்த் தந்து
வென்றிகொள் நீதி மன்னன்
வேறுஎந்த மொழியில் உண்டு? 3

கொண்டவன் அயலூர் போகக்
குலமகள் தனித்த வீட்டை
அண்டினர் கதவைத் தட்டில்
கரத்தினை அறுப்போம் என்று
விண்டதை மறந்து செய்த
குற்றத்தால் விதித்த வாறே
தண்டனை தனக்கே தந்த
மன்னனும் தமிழ னாகும். 4

திடமிகும் தெய்வ பக்தன்
தீவிர தேச பக்தன்
கடமையும் தீர வீரக்
கருணைசேர் கட்ட பொம்மன்
'அடிமையாய் வாழ மாட்டேன்
அன்னியர்க்கு அஞ்சேன்' என்று
கொடுமையை எதிர்த்து நின்ற
கொள்கையும் தமிழன் கூற்றாம். 5

உள்ளமும் உடலும் கூம்ப
உலகெலாம் வணங்கும்சோதி
வள்ளல்அக் காந்தி செய்த
அறந்தரு வாழ்க்கை முற்ற
தள்ளரும் அறங்க ளாகத்
தமிழ்த்திருக் குறளில் முன்பே
வள்ளுவன் வாழ்ந்து சொன்ன
கொலைதவிர் வாய்மை ஆகும். 6

குறிப்புரை:- சுகித்து - இன்பமாய், மகிழ்ந்து. 'கண்ணகி சீற்றங்கண்டு குலம்பழி கொண்டது' என்னும் தொடர், சிலப்பதி காரத்தில் கண்ணகியின் வரலாற்றை நினைவுகூருகிறது. பாண்டியன், 'கெடுக என் ஆயுள்' எனத் தலை குனிந்தான். அறம் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பது உண்மை எனத் தெரியவருகிறது; 'இன்றுனக்கு உற்ற துன்பம் எனக்குறச் செய்வேன்' என்னும் தொடர், பெரியபுராணத்தில் மனுநீதிச் சோழன் வரலாற்றினைக் குறிப்பிடுகின்றது. நீதி தவறாத மன்னனானவன், 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்னும் கோட்பாட்டினை உடையவன்; அண்டினர் கதவைத் தட்டில் கரத்தினை அறுப்போம்' என்னும் தொடர், பொற்கைப் பாண்டியன் வரலாற்றை நினைவு கூரு கிறது. கீரந்தை என்னும் புலவனுக்காகத் தன், கையைக் குறைத்துக் கொண்டான். பொன் கையாக வளர்ந்தது; 'அடிமையாய் வாழ மாட்டேன் அன்னியர்க்கு அஞ்சேன்' என்னும் தொடர், கட்டபொம்மனின் தீர வீரச் செயலும் கடமை உணர்ச்சியையும் புலப்படுத்திக் காட்டியுள்ளது; 'கொலை தவிர் வாய்மை' என்னும் தொடர், வள்ளுவர் திருக்குறளில் கூறும் கொல்லாமை, வாய்மை என்னும் அதிகாரத்தைச் சுட்டிக் காட்டுகிறது. காந்திமகான் வாய்மையையே குறிக்கோளாகக் கொண்டு அறந்தரும் வாழ்க்கையை நம்முன்னால் வாழ்ந்து காட்டினார். அத்தகைய பெருமைக்கு உரியது நமது தமிழ் நாடு.

## *229. சாந்தி தரும் கொடி*

கற்புடைப் பெண்கட்கு எல்லாம்
　　கணவனே தெய்வம் என்பார்;
சொற்பொருள் அறிந்தோர்க்கு எல்லாம்
　　சொன்னசொல் தெய்வம் என்பார்;
மற்பெரும் வீரர்க்கு எல்லாம்
　　மானமே தெய்வ மாகும்;
நற்பெயர் நாட்டிற்கு ஆக்கம்
　　நமக்குஇந்தக் கொடியே தெய்வம். 1

அன்னிய கொடிகள் எல்லாம்
　　அரசியல் ஒன்றே பேசிப்



பொன்னியல் போக வாழ்வின்
　　பொதுநலம் தனையே கோரும்;
என்னுடைப் பரத நாட்டின்
　　இக்கொடி இந்த வாழ்வின்
பின்னையும் அறிவு தேடும்
　　பேரின்பம் தனையும் பேசும். 2

பிறநாட்டுக் கொடிகள் எல்லாம்
　　பிறநாட்டைப் பிடிக்க எண்ணி
மறம்நாட்டி மக்கள் தம்மைச்
　　சண்டையில் மடியச் செய்யும்;
அறம்நாட்டி உலகை ஆண்ட
　　அரியநம் கொடியோ, மூன்று
நிறம்காட்டி நிலையாய் உள்ள
　　நீதியே ஓத நிற்கும். 3

பச்சையாம் நிறத்தி னாலே
　　பசுமையாம் அன்பை யூட்டும்;
நிச்சயம் வெள்ளை அந்த
　　நிமலமாம் உண்மை நீட்டும்;
துச்சம்இவ் வுலகம் என்னும்
　　துறவினைக் காவி சொல்லும்;
அச்சம்இல் குடிசைக் கூலி
　　அதில்ஒரு ராட்டை காட்டும். 4

தருமமே குறியாக் கொண்டு
　　தனக்கென்று எதையும் வேண்டாக்
கருமமே கடன்என்று ஓதிக்
　　கருணையின் வழியே காட்டி
வருமமும் வஞ்சம் நீக்கும்
　　வாழ்க்கையை வகுத்துப் பேசும்
பெருமைநம் கொடியைப் போலப்
　　பிறிதொரு கொடியும் உண்டோ! 5

இந்திய மகனே! இந்த
　　இணையிலாக் கொடியைக் காத்தல்

முந்தியுன் முன்னோர் தந்த
அறமெலாம் முடிப்ப தாகும்
எந்தஓர் நாட்டிற் கேனும்
எதிரியாய் எடுத்த நல்ல
சந்ததம் உலகுக்கு எல்லாம்
சாந்தியைத் தரவே ஆகும். 6

குறிப்புரை:- நம்நாட்டுக் கொடி நீதியையே உணர்த்தி நிற்பதாகும். பச்சை - அன்பை உணர்த்தும்; வெள்ளை - உண்மையை உணர்த்தும்; காவி - துறவினை உணர்த்தும்; ராட்டை - குடிசைக் கூலியை உணர்த்தும்.

## 230. இளைஞரின் உறுதிப்பாடு

'எந்தத் தேசம் எந்தக் குண்டை
எந்த நாட்டிற் போடுமோ'
என்று மக்கள் உலகில் எங்கும்
எங்கும் இந்த நாளிலே
இந்த நாடு பெற்று எடுத்த
இளைஞர் யாரும் கூடுவோம்!
இன்ப மாக மனிதர் வாழ
ஏற்ற மார்க்கம் நாடுவோம்;
சொந்த ஞானத் தெளிவு கொண்டு
வந்த நம்சு தந்தரம்
சுத்த மாக நின்று காத்த
சத்தி யத்தைக் காக்கவே
தந்து போன இந்த நாட்டின்
தந்தை யாகும் காந்தியைத்
தாழ்ந்து போற்றி உலக முற்றும்
வாழ்ந்தி ருக்கப் பண்ணுவோம். 1

இமயம் தொட்டுக் குமரி மட்டும்
இங்கிருக்கும் யாரும்
இந்தி யாவின் மக்கள் என்ற
சொந்தங் காணச் செய்குவோம்.



சமயம் என்றும் சாதி என்றும்
சண்டை யற்று வாழவும்
சமதை யாக மொழிகள் யாவும்
சலுகை பெற்று வளரவும்
அமைதி யாக தேச சேவை
அச்சம் இன்றி ஆற்றுவோம்;
அவதி மிக்க ஏழை மக்கள்
வறுமை போக மாற்றுவோம்;
நமது நாடு உலகி னுக்கு
நல்ல மார்க்கம் காட்டவே
நாங்கள் என்றும் பணிபு ரிந்து
வெற்றி மாலை சூட்டுவோம். 2

முன்னி ருந்த நமது நாட்டின்
முனிவர் கண்ட ஞானமே
முற்றும் இந்த உலகி னுக்கும்
உற்ற நன்மை யானது.
என்ன துன்பம் எந்த வேளை
எங்கு அடுத்த போதிலும்
எந்தை காந்தி தந்த சாந்த
மந்தி ரத்தை ஓதுவோம்;
தன்ன லம்மற ந்து நாட்டின்
தன்ன லத்தைத் தாங்கவும்
தரணி தன்னில் யுத்தம் என்ற
இரணப் பேச்சு நீங்கவும்
மன்னன் இந்த பரத நாட்டின்
மகிமை காக்கும் ஜவகர்லால்
மாசி லாத சேவை செய்து
பேசும் நீதி தவறிடோம். 3

குறிப்புரை:- அவதி - துன்பம்; தரணி - உலகம்; மாசு - குற்றம்.

## 231. தேசபக்தர் திருக்கூட்டம்

தேச பக்தர்திருக் கூட்டம் - தேச
சேவை செய்வதுஎங்கள் நாட்டம்;
பாச பந்தம் எல்லாம் ஓடி - விடப்
பாரதப் பெருமை பாடி (தேச) 1

பிச்சை எடுக்கவந்தது அல்ல - வேறு
பிழைக்க வழியிலை என்று அல்ல
இச்சை வந்துமிகத் துள்ள - தேசம்
இருக்கும் நிலைமைதனைச் சொல்ல. (தேச) 2

தூங்கித் தூங்கிவிழும் தமிழா! - உன்
தூக்கம் போக்கவந்தோம் தமிழா!
ஏங்கிப் படுத்திருக்கும் தமிழா! - உன்னை
எழுப்ப வந்தசக்தி தமிழா! (தேச) 3

எழுந்து நின்றுகண்ணைத் துடைத்தே - உன்
இருகை யாலும்கொடி பிடித்தே
அழுந்திக் கீழிருந்து வாடும் - அன்னை
அடிமை நீக்கவழி தேடும். (தேச) 4

வெட்டி வெட்டியெறிந் தாலும் - எமை
வேறு இம்சைபுரிந் தாலும்
கட்டி ரத்தம் சொரிந்தாலும் - நாங்கள்
தூய்மை மாறிடோம் நாளும். (தேச) 5

சாந்த மூர்த்தியந்தக் காந்தி - சொன்ன
சத்தி யந்தனையே ஏந்தி
மாந்தர் யாரும்இனி உய்ய - உயர்
மார்க்க போதனைகள் செய்ய. (தேச) 6

தேவி சக்திதுணை கொண்டு - இந்தத்
தேசம் சுற்றிவர வென்று
கூலிக் கூலியெங்கள் தொண்டு - செய்யக்
குறைகள் தீரும்இனி நன்று. (தேச) 7

குறிப்புரை:- இச்சை - விருப்பம்; மாந்தர் - மக்கள்.



## 232. சத்தியச் சங்கூதுவோம்

'சத்தியம் நிலைக்கும்' என்று சங்கூதுவோம்!
'சாந்தமே ஜெயிக்கும்' என்று சங்கூதுவோம்!
'நித்தியம் கடவுள்' என்று சங்கூதுவோம்!
'நீர்க்குமிழாம் வாழ்க்கை' என்று சங்கூதுவோம்! 1

'நீதியே நிலைக்கும்' என்று சங்கூதுவோம்!
'நியாயமே கெலிக்கும்' என்று சங்கூதுவோம்!
'வாதுசூது பொய்மையாவும் ஒன்றோ டொன்றாய்
வம்புகொண்டு மறையும்' என்று சங்கூதுவோம்! 2

'புண்ணியம் பலிக்கும்' என்று சங்கூதுவோம்!
'பொறுமையே கெலிக்கும்' என்று சங்கூதுவோம்!
'மண்ணிற்செய்த நன்மைதீமை அல்லாமலே
மற்றதொன்றும் மிச்சமில்லை' என்றுஊதுவோம்! 3

'தருமமே நிலைக்கும்' என்று சங்கூதுவோம்!
'தானமே தழைக்கும்' என்று சங்கூதுவோம்!
'கருமமே சிறக்கும்' என்று சங்கூதுவோம்!
'கடவுளுண்மை வடிவம்' என்று சங்கூதுவோம்! 4

'உண்மையைக் கடைப்பிடித்து உயர்ந்தவர்களை
உலகமோசம் என்ன செய்யும்' என்றூதுவோம்!
'தண்மையான சாந்திபெற்ற தக்கோர் முன்னே
சஞ்சலங்கள் ஓடும்' என்று சங்கூதுவோம்! 5

'கோபமற்றுக் குணமிகுந்த நல்லோர் முன்னால்
கூர்மழுங்கும் ஆயுதங்கள்'என் றூதுவோம்!
'பாபமற்ற வாழ்க்கையுள்ள பண்பாளரைப்
பயமுறுத்த ஒன்றுமில்லை' என்றூதுவோம்! 6

'அன்புகொண்டு ஆசையற்ற நல்லார்களை
அரசனும் வணங்கும்' என்று சங்கூதுவோம்!
'வன்புதுன்பம் வஞ்சமாயம் எல்லாம்இதோ
வழிகொடுத்து விலகும்' என்று சங்கூதுவோம்! 7

'கொல்லுகின்றது இல்லையென்ற நல்லோர்கள்பேர்
குவலயத்தில் வாழும்' என்று சங்கூதுவோம்!
'வெல்லுகின்ற போதுமாசை விட்டார்களே
வீரர்தீரர் சூரர்' என்று சங்கூதுவோம்! 8

'ஆன்மசக்தி கண்டுகொண்ட அன்பாளரை
அடிமையாக்க யாரும்'இல்லை என்றூதுவோம்!
தான்மறந்(து) அகந்தைவிட்ட தக்காரையே
தலைவணங்கும் உலகமென்று சங்கூதுவோம்! 9

சாந்திசாந்தி காந்தியென்று சங்கூதுவோம்!
'சாத்திரங்கள் முடிவு'இது என்று சங்கூதுவோம்!
காந்திகாந்தி காந்தியென்று நம்நாட்டிலே
கால்நடக்கும் வேதம்என்று சங்கூதுவோம்! 10

குறிப்புரை:- 'தான்மறந்து அகந்தை விட்டதக்கார்' என்னும் தொடரில், சித்தாந்தக் கருத்து பரிமளிப்பதைக் காணலாம். யான் என்ற அகங்காரமும் எனது என்ற மமங்காரமும் விட்ட இடத்தில் இறைவன் குடிகொள்வான் என்பது கருத்து; 'யான் எனது என்று அற்ற இடமே திருவடியாம்' என்கின்றார் கந்தர் கலிவெண்பாவில் குமரகுருபரர்; 'யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கும் உயர்ந்த உலகம் புகும்' என்கின்றார் திருக்குறளில் திருவள்ளுவர்; வேதம் - மறை. சாந்திரங்கள் - பதினான்கு. சாத்திரங்களின் முடிவு என்பதாகும். 1. திருஉத்தியார், 2. திருக்களிற்றுப்படியார், 3. சிவஞானபோதம், 4. சிவஞான சித்தியார், 5. இருபா இருபது, 6. உண்மை விளக்கம், 7. சிவப்பிரகாசம், 8. திருவருட் பயன், 9. வினாவெண்பா, 10. போற்றிப்பஃறொடை, 11. கொடிக்கவி, 12. நெஞ்சுவிடு தூது, 13. உண்மை நெறி விளக்கம், 14. சங்கற்ப நிராகரணம்.

## 233. சங்கொலி

சங்கொலி எழுந்தது சங்கடம் அழிந்தது
தைரியம் கொள்வாய் தமிழ் மகனே! 1

கங்குலும் கழிந்திடும் கதிரொளி பொழிந்திடும்
கவலையெ லாம்விடு தமிழ்மகனே! 2



கூரிருள் மறைந்திடும் குளிர்வது குறைந்திடும்
குறுகிப் படுத்திடல் இனிவேண்டா! 3

பேரருள் சுரந்திடும் பெருவழி திறந்திடும்
பேதமை விடுவாய் தமிழ்மகனே! 4

திருட்டுகள் நீங்கிடும் தீயன நடுங்கிடும்
தீனர்க்கு அபயக்குரல் சங்கோசை! 5

இருட்டினில் செய்திடும் யாவையும் மறைந்திடும்
எழுந்து கடன்முடி தமிழ்மகனே! 6

சூதரும் குடியரும் சுருக்கெனப் பயப்படும்
சுதந்தரச் சங்கொலி கேட்குதடா! 7

வேதமும் கலைகளும் வித்தைகள் விளங்கிட
விடிந்திடும் சஞ்சலம் விட்டிடுவாய்! 8

மங்களச் சங்கொலி மகிழ்தரக் கேட்குது
மயக்கம்விட்(டு) எழுந்துஇனி மறைபாடு! 9

எங்NGணும் யாவினும் இருந்தருள் கடவுளும்
இருக்குது பயமிலை எழுந்திரடா! 10

குறிப்புரை:- தீனர் - யாசிப்பவர், இரப்போர். 'இரந்து உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக இவ்வுலகு இயற்றியான்' என்று வள்ளுவப் பெருந்தகையார் கூறிப் போந்துள்ளார். 'தனியொருவனுக்கு உணவிலை எனில் சகத்தினை அழித்திடுவோம்' என்கின்றார் பாரதியார்; சூதர் - சூதாடுவார்; வித்தை - கல்வி; கூரிருள் - செறிந்த இருள்.

## 234. இணையிலாக் கொடி

இந்திய நாட்டில் இணையிலாக் கொடியே
இலங்குவாய் என்றும் வயங்கொலி பரப்பி
தந்திரம் மோசம் தன்னலம் கருதா
சத்தியம் நிறைந்த உத்தம வாழ்வின்

எந்திரப் பேயின் இறுமாப்பு அழிந்து
ஏழ்மையும் தாழ்மையும் இல்லாது ஒழித்துச்
சந்திர சூரியர் வந்துபோம் வரையிலும்
தன்னர சாட்சியின் சின்னமாய் நிற்பாய்! 1

பாரத நாட்டின் பகையிலாக் கொடியே!
பன்னலம் மிகுந்த உன்னுடை நிழலில்
ஊரெலாம் செழித்து உயிரெலாம் களித்து
யாரொடும் எவரும் அன்பே அறமென
பாரிடைக் கடவுள் படைத்ததன் பொருள்கள்
பங்கிட மூளும் பகைத்தி றம்குன்றி
நேரிய வாழ்வில் நியாயம் நிலவிடும்
நீதிசேர் அரசின் சோதியாய் நிற்பாய்! 2

ஆருயிர் நாட்டின் அரசியற் கொடியே!
ஐம்புலன் வென்று செம்பொருள்கண்ட
வீரிய ஞான வித்தகர் தங்கி
வேதம் வளர்த்த இமய மலையின்
ஊரிய மனிதன் உளம்மிக மகிழ
உன்னதச் சிகரத் துச்சியில் நின்று
பாருள யாரும் பணிந்திடு மாறு
பற்பல ஊழி பறந்திடு வாயே! 3

குறிப்புரை:- இலங்குவாய் - விளங்குவாய், திகழ்வாய்; சத்தியம் - உண்மை, வாய்மை; இறுமாப்பு - கர்வம், செருக்கு; பார் - உலகம். ஐம்புலன் - மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றால் உணரும் உணர்வு.

## *235. கொடி வணக்கம்*

கொடிவ ணக்கமது செய்வோம் - நாட்டின்
குறைகள் நீங்கியினி உய்வோம்
முடிவ ணங்கியதைப் பற்றி - அதன்
மூன்று நிறக்குறிகள் சாற்றி (கொடி) 1



புதுமை யானகொடி பாரீர் - வேறு
பூத லத்திலிலை தேரீர்
முதுமை யாய்எவர்க்கும் பொதுவாம் - வாழ்வின்
முறையைக் காட்டுவதும் இதுவாம். (கொடி) 2

பச்சை யானஒரு தோற்றம் - நமக்குப்
பக்தி வேண்டுமெனச் சாற்றும்;
இச்சை யானபொருள் கூடப் - பக்தி
இருக்க வேணும்அதை நாட. (கொடி) 3

துய்ய வெள்ளைநிறக் காட்சி - உண்மை
துலங்கும் என்பதற்குச் சாட்சி
மைய மாகநிற்கும் மர்மம் - சத்தியம்
மதங்கள் யாவினுக்கும் தர்மம். (கொடி) 4

துறவின் வர்ணம்அந்தக் காவி - உலகின்
துக்கப் பூட்டினுக்குச் சாவி;
சிறையும் வீடும்அதற்கு ஒன்றே - என்னும்
சேதி ஓதுவதற்கு என்றே. (கொடி) 5

நடுவில் சாட்டையொன்று பார்ப்போம் - அதில்
நலிந்த பேர்க்குக்கஞ்சி வார்ப்போம்
வடுவி லாததொழில் நூற்றல் - குடிசை
வாழும் ஏழைக்குஎன்று சாற்றல். (கொடி) 6

பக்தி, சத்தியம், தியாகம் - இவற்றின்
பண்பே வாழ்க்கையின் யூகம்
நித்தம் நித்தமிந்த நீதி - தம்மை
நீட்டும் இக்கொடியின் சோதி (கொடி) 7

ஜாதி பேதம்அதில் இல்லை - மற்றும்
சமய பேதம்அதில் இல்லை
நீதி யானபல முறைகள் - நமக்கு
நிலைய மாகும் அதன் குறிகள். (கொடி) 8

என்ன புதுமையிது பாரும் - கொடி
ஏதிது போலென்று கூறும்.
அன்னைக் கொடியிதனைப் பாடு - அதன்
அடியில் நின்றுபுகழ் கூடி. (கொடி) 9

ஏழை எளியவர்கள் யார்க்கும் - பயம்
இல்லை யென்னஅறங் காக்கும்
வாழி நமதுகொடி வாழி - புது
வாழ்வு தந்துஇனிது ஊழி. (கொடி) 10

குறிப்புரை:- பூதலத்தில் - உலகில்; மூன்று நிறம் - பச்சை, வெள்ளை, காவி; மையம் - நடுவு.

## *236. 'ஜேய் ஹிந்த்'*

'ஜேய் ஹிந்த்' என்கிற
ஜீவநன் னாதம்
தேசத்தில் ஒற்றுமை
சேர்க்கின்ற கீதம்
பேய்கொண்டது என்ன
நமைப்பிடித்(து) ஆட்டும்
பேத உணர்ச்சியை
நாட்டை விட்டு ஓட்டும். (ஜேய்) 1

அச்சத்தைப் போக்கி நல்
ஆண்மையைப் போற்றி
அடிமைக் குணங்களை
அடியோடு மாற்றி
துச்சம் உயிர்எனத்
தொண்டுகள் செய்யத்
தூண்டிடும் சக்திகள்
ஆண்டிடும் துய்ய (ஜேய்) 2



விடுதலை ஆர்வத்தில்
வேகத்தை மூட்டி
வீரத் தனங்களில்
ஆசையை ஊட்டி
துடிதுடிப் போடிந்தத்
தேசத்தில் எங்கும்
சொல்லித் தராமலும்
சொல்லி முழங்கும். (ஜேய்) 3

'வந்தே மாதரம்'
பாடி வணங்கி
வாழ்த்திநம் அன்னையின்
வெற்றி முழங்கி
'தந்தோம் உன்றன்
சுதந்தரம்' என்றே
தைரியம் சொல்வது
'ஜேய் ஹிந்த்' அன்றோ! (ஜேய்) 4

வாலிபர் நெஞ்சின்
வசீகர மாரன்
வரையற்ற தியாகி
சுபாஷ் சந்தர வீரன்
கோலிய சேனையின்
விடுதலை கோஷம்
குறையாது ஜேய் ஹிந்த்
மேலுள்ள பாசம். (ஜேய்) 5

குறிப்புரை:- நாதம் - ஒலி, ஓசை; பேதம் வேறுபாடு; அச்சம் - பயம்; துச்சம் - கீழ்மை, இழிவு.

# X. காந்தியடிகள் பெருமை

## *237. காந்தி அஞ்சலி*

சமன்இ லாத இந்த நாட்டின்
ஞான வாழ்வின் சக்தியைச்
சரிச மான மாக மற்ற
உயிரை என்னும் சாந்தியை
அமர னாகி நம்மைக் காக்கும்
அண்ணல் காந்தி ஐயனை
அஞ்ச லிக்கும் யாவருக்கும்
சஞ்ச லங்கள் தீருமே.

## *238. மகாத்மா*

இத்தனைநாள் உலகமெல்லாம் இருந்து அறிந்த
பெரியவர்கள் இசைத்த ஞானம்
அத்தனையும் ஓர்உருவாய்த் திரண்டது எனக்
கலியுகத்தே அவத ரித்தோன்
சத்தியமே மந்திரமாம் சாந்தம் ஒன்றே
தந்திரமாம் சமயம் தந்த
உத்தமனாம் காந்திமுனி உச்சரித்த
சாத்வீகத்தை உறுதி கொள்வோம்.

## *239. கண்கண்ட தெய்வம்*

காந்திக்கு நிகர்வேறு உண்டோ - மக்கள்
கண்கண்ட ஒருதெய்வம் அன்றோ?
சாந்திக்கும் புகழ்தந்த சாந்தன் - உலகில்
சன்மார்க்க வாழ்க்கைக்கு வேந்தன். 1

மரணத்தை இனிதாக்கும் ஐயன் - என்றும்
மனதுள்ளும் சினமற்ற மெய்யன்
இரணத்தை எய்யாத வீரன் - காந்தி
இணையற்ற மெய்ஞ்ஞான தீரன். 2



உயிருள்ள உடலங்கள் எல்லாம் - ஈசன்
உறைவுஎன்று பணிகின்ற நல்லோன்
துயருற்ற எவருக்கும் துணையாம் - காந்தி
தொடர்புஇன்றி எதுவாழ்வின் புணையாம். 3

வையத்தை வாழ்விக்க வந்தான் - மக்கள்
வானத்தின் சக்திபெறத் தந்தான்
தெய்வத்தின் பெயர்தியாக ராசன் - என்று
தெரிவிக்க உயிர்தந்த நேசன். 4

பகவானைத் தரிசிக்க என்று - நாமும்
பலவான ஊர்தேடிச் சென்று
மிகவாக வாடுதல் வேண்டாம் - காந்தி
மெய்வாழ்வு பாடுதல் பூண்டால். 5

தானங்கள் வெவ்வேறு செய்து - நல்ல
தவமென்றே ஆகுதி பெய்து
மோனங்கள் தருகின்ற யாவும் - காந்தி
முறைதந்த வழிவாழ மேவும். 6

*குறிப்புரை:-* இணையற்ற - ஒப்பில்லாத; மெய்ஞ்ஞானம் - உண்மை அறிவு; பகவான் - இறைவன்; வாடுதல் - தளர்வுறுதல்; ஆகுதி - வேள்வி; வையம் - உலகம்.

## *240. கடவுளைக் காட்டும் காந்தி*

ஒப்புடன் 'உண்மைக் காக
உயிர்தர வேண்டும் என்றே
எப்படி விரும்பி'னாரோ
அப்படி இறந்தார் காந்தி.
இப்படி உயிரை ஈந்தோர்
உலகினில் எவரும் இல்லை
தப்புற நினைக்க வேண்டாம்
தர்க்கமும் தருமம் அல்ல. 1

அற்புதப் பிறவி காந்தி
அற்புத மரணம் உற்றார்;
கற்பனை கடந்த சாந்தன்
கடவுளிற் கலந்து கொண்டார்;
பற்பல நினைந்து பேசிப்
புலம்புதல் பயித்தி யந்தான்!
நற்குணச் சீலன் காந்தி
சொற்படி நடப்போம் வாரீர். 2

உடலொடு வந்து போகும்
உருவினில் தெரிவது அன்றிக்
கடவுளை உலகில் யாரும்
நேருறக் காண்பது இல்லை;
அடைவரும் கருணை அந்தக்
கடவுளின் அன்பு தன்னை
நடைமுறை வாழ்விற் செய்த
காந்தியே நமது தெய்வம்! 3

எத்தவம் முயலு வோர்க்கும்
இருந்திட வேண்டும் என்னும்
சத்தியத் தூய வாழ்வின்
சற்குணப் பாறை போன்று
நித்தமும் நமக்கு முன்னால்
நின்றுகொண்டு அறிவு சொல்லும்
உத்தமன் காந்தி எம்மான்
உடலுக்கா உளைந்து போவோம்? 4

நோன்புடன் மறைந்த காந்தி
நுண்ணிய உடலின் சாரம்
சாம்பலில் கரைந்து இன்று
நதிகளில் கலந்து சத்தமாய்த்
தேம்பிடும் உலகம் தேறத்
திரைகடல் மூலம் சென்று
ஏம்பலைப் போக்கி ஞான
எழுச்சியைக் கொடுக்கும் எங்கும். 5



சூரியன் இறப்பான்; காணும்
சந்திரன் சூன்ய மாவான்;
பாரொடு விண்ணில் மின்னப்
பார்க்கிற யாவும் மாயும்.
நேரிய அறிவு கூறும்
தெய்விக மெய்மை காட்ட
நேரிய காந்தி ஞானம்
நிரந்தரம் நிலைத்து வாழும். 6

*குறிப்புரை:- ஏம்பல் - ஏக்கம் அடைதல், கலங்கல், வருத்தம்.*

## *241. தூய்மை சோதி*

நீறு பூசு வோர்களும்
நெற்றி நாமப் பேர்களும்
வேறு பொட்டு சந்தனம்
வேண்டு கின்ற மைந்தரும்
கூறும் சின்னம் இன்றியும்
கொள்கை யோடு நின்றிடும்
மாறு கொள்ளும் யாவரும்
மகிழும் காந்தி தேவராம். 1

அமிழ்தம் ஒத்த அறிவினில்
அழிவி லாத நெறிதரும்
தமிழ்அ றிந்த சத்தியம்
காந்தி வாழ்ந்த தத்துவம்
தமைய றிந்த முனிவரும்
தம்ம டங்கும் அனைவரும்
அமைதி தேடும் சாந்தியே
ஐயன் எங்கள் காந்தியாம். 2

மூச்சுஅ டக்கும் யோகமும்
முறைபு ரிந்த யாகமும்,
பேச்சுஅ டக்கும் மோனமும்
பேசும் தர்க்க ஞானமும்,

கூச்சம் அற்ற பக்தியும்
குணந லத்தின் சக்தியும்
தேர்ச்சி கொள்ளும் கருணையே
காந்தி வாழ்ந்த அருள்நெறி. 3

வீரம் பேசும் வெறியரும்
வெற்றி நாடும் குறியரும்
ஈரம் அற்ற நெஞ்சரும்
இழிவு கற்ற வஞ்சரும்
ஓரம் சொல்லு வோர்களும்
உண்மை அஞ்சும் பேர்களும்
தூரம் ஓடக் காய்ந்திடும்
தூய்மை சோதி காந்தியாம்! 4

*குறிப்புரை:- ஐயன் - தலைவன்; மோனம் - மௌனம்; ஓரம் - ஒரு பக்கம்.*

## *242. இணையிலா எம்மான் காந்தி*

பிறப்பினும் பெரியவர் பெம்மான் காந்தி
இறப்பிலும் இணையிலர் எம்மான் காந்தி
துறப்பிலும் நிகரிலர் தூயோன் காந்தி
மறப்பதும் நமக்கது மாபெரும் பாவம். 1

அறிவினில் ஆழியன் அரும்பெரும் காந்தி
நிறைகுண நலங்களில் நேரிலன் காந்தி
குறிசொலும் அனுபவக் குன்றாம் காந்தி
நெறிதரக் காந்தியின் நேர்எவர் உலகில். 2

மேழியின் சிறப்பினை மீட்டவர் காந்தி
ஏழையின் பெருந்துணை எமதரும் காந்தி
கோழையும் திடம்பெறக் கொடுத்தவர் காந்தி
வாழிய காந்தியின் வழிகொடு வாழ்வோம். 3



கள்ளினை ஒழித்தவர் கடனறி காந்தி
கதருடை தந்தவர் கணக்கறி காந்தி
வெள்ளையர் தாமே விருப்புடன் ஆட்சி
விட்டிடச் செய்தது காந்தியின் விநயம். 4

அன்பினை அறிந்தவன் அருள்தரும் காந்தி
துன்பினை மறந்திடத் துணைதரும் எவர்க்கும்
இன்பினை அல்ல(து) எண்ணாப் பெரியோன்
செம்பொருள் உரைத்தவர் யாரினும் சிறந்தோன். 5

சோர்ந்துழல் ஏழைகள் சுகம்பெற வேண்டின்
சோம்பிடும் செல்வம் சூதுகள் நீங்க
மாந்தருக் குள்ளே மதவெறி போகக்
காந்தியை மறந்தால் கதிநமக்கு ஏது? 6

*குறிப்புரை:- ஆழியான் - சூரியன்; சூது - வஞ்சனை; கதி - நிலைமை.*

## *243. அன்பின் உருவம்*

அன்பின் உருவம் காந்திமகான்
அருளின் சிகரம் மாந்தருக்கு
தென்பின் நிலையம் திருவுள்ளம்
தெளிவாம் அறிவின் பெருவெள்ளம்
துன்பம் நேர்ந்திட வருமாகில்
துயரம் தீர்ந்திடத் திருநாமம்
முன்புஇவ் வுலகம் கண்டறியா
முற்றிலும் அதிசயத் தொண்டர்பிரான் (அன்) 1

இந்திய நாட்டின் அருள்ஞானம்
இதுவெனக் காட்டிய பெருமானாம்
தந்தையும் தாயாம் தனித்தலைவன்
தாரணி நலமுற சனித்த இவன்

சிந்தையும் சொல்லும் செயல்யாவும்
சீலமும் சத்திய இயல்பாகும்
விந்தையின் விந்தை காந்தியரின்
விடுதலை நாட்டிய சாந்த வழி! (அன்) 2

புண்ணியத் திருநாள் இதில்கூடி
புதினன் காந்தியின் துதிபாடின்
எண்ணிய காரியம் செயமாகும்
எமனைக் காணிலும் பயம்ஏது?
மண்ணிடை மதவெறி மடிந்துவிடும்
மாந்தருள் சமரசம் படிந்துவிடும்
கண்ணியம் மிகுந்திட வாழ்ந்திடுவோம்
கல்வியும் கலைகளும் சூழ்ந்திடவே. (அன்) 3

*வேறு*

கொல்லுகின்றது இல்லையென்ற நல்லோர்கள்பேர்
குவலயத்தில் வாழும்என்று சங்கூதுவோம்!
வெல்லுகின்ற போதும்ஆசை விட்டார்களே
வீரர் தீரர் சூரர் என்று சங்கூதுவோம்! 4

சாந்திசாந்தி சாந்தியென்று சங்கூதுவோம்
சாத்திரங்கள் முடிவுஇதுஎன்று சங்கூதுவோம்
காந்திகாந்தி காந்தியென்று நம்நாட்டிலே
கால்நடக்கும் வேதம்என்று சங்கூதுவோம். 5

*வேறு*

நேய மற்ற மதவெ றிக்கு
நிலைய மான தேசமாம்
பேயும் கூட நடுநடுங்கிப்
பேதலித்துக் கூசுமாம்
நாய்ந ரிக்கும் அச்ச மூட்டும்
நவக ளிக்கும் காந்திதான்
போய்ந டத்தும் யாத்தி ரைக்குள்
புனித அன்பு சேர்ந்ததாம். 6



தெய்வம் என்று உலகம் நித்தம்
தேடு கின்ற ஒன்றுதான்
வைய கத்தில் 'அன்பு' என்ற
வார்த்தை யாக நின்றதே!
ஐயன் எங்கள் காந்தி வாழ்க்கை
அற்பு தத்தை நாடினால்
மெய்யு ணர்ந்தே அன்பு சொல்லும்
மேன்மை யாவும் கூடுவோம். 7

குறிப்புரை:- சனித்த - பிறந்த; தாரணி - உலகம்.

### 244. *எவர் சாதித்தார்?*

கருணையின் பெருமையைப் போதித்தார்
காந்தியைப் போல்எவர் சாதித்தார்?
மரணமும் அவரிடம் அன்புபெறும்
மற்றது எதுதான் துன்பமுறும்? 1

சத்திய நெறிதரும் சாந்திரமாம்
சாத்விக வாழ்க்கையின் சூத்திரமாம்
உத்தமன் காந்தியை மறந்துவிடின்
உண்மைச் சுதந்தரம் மறைந்துவிடும். 2

புலையும் கொலையும் புரியாமல்
புண்ணிய எண்ணம் புரியாமல்
உலகம் இதுவரை கண்டறியா
உயர்வழி விடுதலை கொண்டுவந்தான். 3

அணுகுண் டாலும் துன்பமுறா
ஆன்ம பலத்துடன் அன்புதரும்
இணைகண்டு அறியாச் சக்திதனை
எம்மிடைப் புகுத்திய சிந்தன்இவன். 4

இந்திய நாட்டின் மெய்யறிவு
இதுவெனக் காட்டிடும் ஐயன் இவன்
நிந்தையும் புகழ்ச்சியும் கலைக்காத
நிம்மதிக் கேஅவன் இலக்காவான். 5

யுத்தம் வருமோ எனஒடுங்கி
ஒவ்வொரு நாடும் மனநடுங்கிச்
சித்தம் திகைக்கிற இப்போதில்
சிறப்புறும் காந்தியின் மெய்ப்போதம். 6

அன்னிய அறிஞர்கள் அனைவருமே
ஆசையின் காந்தியை நினைவுறநீ
என்ன பயித்தியம் உன்றனக்கே
ஏன்பிற நினைப்புகள் இந்தியனே! 7

சாந்தியை அறிந்தது நம்நாடு!
சத்தியம் காத்தது நம்நாடு!
காந்தியைத் தந்தது நம்நாடு!
கருணையின் வழியே நீர்நாடு! 8

## *245. உத்தமன் காந்தி*

உள்ளம் உருகுது கள்ளம் கருகுது
உத்தமன் காந்தியை நினைத்துவிட்டால்
வெள்ளம் பெருகிடக் கண்ணீர் வருகுது
வேர்க்குது இன்பம் தேக்குதடா! 1

சித்தம் குளிர்ந்துள பித்தம் வெளிந்திடும்
சீரியன் காந்தியின் பேர்சொன்னால்
புத்தம் புதியன முற்றும் இனியன
பொங்கிடும் உணர்ச்சிகள் எங்கிருந்தோ! 2

கிளர்ச்சிகொண் டான்மா பளிச்சென மின்னுது
கிழவன் காந்தியின் பழமை சொன்னால்!
தளர்ச்சிகள் நீங்கிய வளர்ச்சியில் ஓங்கிய
தாட்டிகம் உடலில் கூட்டுதடா! 3

சோற்றையும் வெறுக்குது காற்றையும் மறக்குது
சுத்தனக் காந்தியின் சக்திசொன்னால்!
கூற்றையும் வெருட்டிடும் ஆற்றலைத் திரட்டிடக்
கூடுத டாமனம் தேடுதடா! 4



தூக்கமும் கலைந்தது ஏக்கமும் கலைந்தது
துன்பக் கனவும் தொலைந்ததடா!
வாழ்க்கையும் திருந்திட நோக்கமும் விரிந்தது
வள்ளல்அக் காந்தியின் நினைப்பாலே! 5

வஞ்சனை நடுங்கிடும் வெஞ்சினம் அடங்கிடும்
வாய்மையன் காந்தியின் தூய்மை சொன்னால்
அஞ்சின மனிதரும் கெஞ்சுதல் இனியிலை
ஆண்மையும் அன்பும் அருளுமடா! 6

ஜீவர்கள் உலகுள யாவரும் சமமெனச்
செய்கையில் காட்டிய காந்தியடா!
பாவமும் பழிகளும் தீவினை வழிகளும்
பதுங்கும டாகண்டுள் ஒடுங்குமடா! 7

எழுபதும் ஐந்தும் குழகுழ வயசினில்
என்னே காந்தியின் இளமையடா!
முழுவதும் அதிசயப் பழுதறு வாழ்க்கையின்
முத்தன டாபெரும் சித்தனடா! 8

காந்தியின் தவக்கனல் சூழ்ந்ததுஇவ் வுலகினைக்
காம தகனம்போல் எரிக்குதுபார்!
தீய்ந்தன சூதுகள் ஓய்ந்தன வாதுகள்
திக்குத் திசையெலாம் திகைத்திடவே! 9

ஏழைகள் எளியரின் தோழன்அக் காந்தியை
எப்படிப் புகழினும் போதாதே!
வாழிய அவன்பெயர் ஊழியின் காலமும்
வையகம் முழுவதும் வாழ்ந்திடவே 10

*குறிப்புரை:- தாட்டிகம் - பலம்; அகந்தை; சூது - வஞ்சனை; வாது - வழக்கு.*

## *246. வையகம் வாழ்த்தும் காந்தி*

அடிமையின் அச்சம் போக்கி
அச்சத்தை அடிமை யாக்கிக்

குடிகளைக் கோன்க ளாக்கிக்
கோன்களைக் குடிக ளாக்கி
மடமையை மதியாய் மாற்றி
மதிக்கும் ஓர் புதுமை கூட்டித்
திடமுறச் செய்த காந்தி
திருக்கதை மறக்க லாமோ? 1

மேழியைச் செங்கோ லாக்கிச்
செங்கோலை மேழி யாக்கி
ஏழையின் துயரம் நீக்கித்
துயரத்தை ஏழை யாக்கிக்
கோழையை வீர னாக்கி
வீரத்தின் கொலைகள் நீக்கும்
வாழிய காந்தி நாமம்
வையகம் உளவ ரைக்கும். 2

தூய்மையின் துணிவுண் டாக்கித்
துணிவினைத் தூய்மை யாக்கி
வாய்மையின் வறுமை போக்கி
வறுமையும் வாய்மை காக்கத்
தீமையைத் தீமை யாலே
தீர்த்திட முடியா தென்று
தாய்மையே செய்த காந்தி
தவம் செய்த தவமாம் அன்றோ? 3

உள்ளத்தைக் கோயி லாக்கி
உண்மையைத் தெய்வ மாக்கிக்
கள்ளத்தைக் கடிந்து நீக்கிக்
கருணையின் காட்சி கண்டான்
எள்ளொத்த ஆசை யின்றி
'என்கடன் பணியே' என்ற
தெள்ளூற்ற தியாகி காந்தி
கண்கண்ட தெய்வ மன்றோ? 4



அன்பினைத் தகழி யாக்கி
அறிவினை நெய்யாய் வார்த்து
வன்புலக் காம மாதி
வர்க்கத்தைத் திரியாய் வைத்துச்
செம்பொருள் காணும் தூய்மைச்
செழுங்கனல் பற்றச் செய்தே
இன்பருள் கருணை சோதி
ஏந்திடும் காந்தி நாமம். 5

வஞ்சமும் பகையும் போகும்
வையகம் முழுதும் ஓங்கிப்
பஞ்சமும் பசியும் நோயும்
படுத்திடும் கொடுமை நீங்கத்
தஞ்சமொன் றுண்டோ காந்தி
தந்துள வழியை விட்டால்?
அஞ்சலி செய்வோம் காந்தி
அண்ணலின் அருளைப் போற்றி. 6

காந்தியை மறந்து விட்டால்
கதிநமக் கில்லை கண்டீர்
சாந்தியை இழப்போம் மக்கள்
சமரச வாழ்வு குன்றும்;
சேர்ந்திடும் தீமை யாவும்;
திரும்பவும் அடிமை வாழ்வு
சேர்ந்திடல் ஆரும் உண்மை
நித்தமும் நினைக்க வேண்டும். 7

*குறிப்புரை:- தஞ்சம் - அடைக்கலம்; கனல் - நெருப்பு.*

## 247. அற்புதன் காந்தி

ஜயஜய காந்தியின் திருப்புகழ் பாடி;
தெய்வம் தொழுவோம் அனைவரும் கூடி
பயனுற காந்தியின் புதுநெறி பயின்று
பாரத நாட்டினர் பலம்பெற வேண்டும். (ஜெய) 1

காந்தியின் வாழ்வே கடவுளைக் காட்டும்
கல்விகள் தேடிடும் கருணையை ஊட்டும்
சாந்தியைப் புகட்டிடும் சாத்திரம் அதுவே
சத்திய நெறிதரும் சூத்திரம் அதுவே (ஜெய) 2

இந்திய மக்களின் சுதந்தரக் கீதம்
எம்மான் காந்தியின் இணையறு போதம்
சிந்தனை செய்வார் வந்தனை புரியும்
தெய்விக மந்திரம் அதுவெனத் தெரியும் (ஜெய) 3

இல்லறம் துறவறம் இரண்டிலும் சிறந்தே
இந்திய விடுதலைக்கு அருந்தவம் புரிந்து
சொல்லறம் முழுவதும் சுதந்தர தேவி
தூமலர்ப் பதங்களில் தொழுதனன் தூவி, (ஜெய) 4

நால்வகை யோகமும் நடத்திய ஞானி
நாட்டின் பெருமையைக் காத்தநல் மானி
தோல்வியும் வெற்றியும் தொடமுடி யாது
துலைபோல் சமரச நிலைபிரி யாத (ஜெய) 5

அரசியல் சூதுகள் அனைத்தையும் அகற்றி
அன்பின் வழிவரும் ஆற்றலைப் புகுத்தி
உரைசெயல் அரிதெனும் உறுதியைக் கொடுத்தான்.
உலகினில் புதிதுஎனும் அறப்போர்
தொடுத்தான். (ஜெய) 6

மண்டலம் முழுவதும் சண்டைகள் மலிய
மாந்தர்கள் பெருந்துயர் சேர்ந்துளம் நலிய
கண்டுள பின்னரும் காந்தியை நினையார்
கல்லையும் மண்ணையும் கட்டையும்
அணையார் (ஜெய) 7

யுத்தக் கொடுமைகள் உலகினில் ஒழிய
உதித்தநம் காந்தியின் உயர்ந்தநல் வழியை
இத்தரை எங்ஙனும் பரப்பிடும் கடமை
இந்திய மக்களின் பரம்பரை உடைமை. (ஜெய) 8



காந்தியின் அருந்தவம் பலித்திடும் காலம்
கண்முன் இருப்பதை அறிந்திலம் போலும்
ஒய்ந்திடும் சண்டையின் ஒவ்வொரு நாடும்
ஒப்பரும் காந்தியின் உரைகளைத் தேடும். (ஜெய) 9

இமயமும் குமரியும் இருக்கிற வரைக்கும்
இப்பெரும் உலகினில் அவன்பெயர் சிறக்கும்!
சமயமும் நிறங்களும் சமமெனக் கருதும்
சகலரும் காந்தியை வணங்குவர் பெரிதும்! (ஜெய) 10

மன்னரும் வீரரும் மந்திரி மார்கள்
மண்ணொடு மண்ணாய் மறைந்திடு வார்கள்
உன்னரும் காந்தியின் பெரும்பெயர் ஒன்றே
உலகினில் நிரந்தரம் ஒளிதரும் அன்றோ? (ஜெய) 11

இன்னொரு தம்பதி இவர்களைப் போல
எங்குளர் எனமனம் களித்திடும் சீலம்
அன்னைகஸ் தூரியின் அரும்புகழ் சூழும்
அற்புதன் காந்தியின் பெரும்பெயர் வாழும். (ஜெய) 12

*குறிப்புரை:- சகலரும் - யாவரும்; சீலம் - ஒழுக்கம்.*

### *248. சத்தியமூர்த்தி நம் காந்தி*

சாந்தியே உருவாய் வந்த
சத்திய மூர்த்தி யான
காந்தியே உம்மைக் காணக்
கணக்கிலா ஜனங்கள் எங்கும்
காந்தம்என்(று) அணுக ஓடும்
ஊசிகள் காட்சி போலப்
போந்ததும் தரிச னத்தால்
பொறுமையைக் கற்க வேண்டி. 1

மூவுலகு ஒருங்கே ஆண்டு
முடிவுஇலாச் செல்வம் எய்தி
ஏவலில் மமதை கொண்ட
இரணியன் உய்யு மாறு
தாவிய தரணி என்று
தனியுருத் தாங்கி வந்த
சேவகன் மெச்சு கின்ற
சிறுவனே யன்ன சீலர். 2

பகையினால் கொன்று வென்று
பயம்பட வாழ்ந்து வந்த
வகையிலார் சாதி யோரை
வழிபடச் செய்ய வேண்டி
மிகமிகத் துன்ப முற்றும்
மென்மையால் வென்று கொண்ட
மகமது நபியே என்று
மதியுளார் சொல்வார் உன்னை. 3

அன்புஒரு வடிவாய் வந்தாய்
அற்புதச் செயல்கள் காட்டித்
துன்பமே சூழ்ந்த தெய்வத்
துரோகிகள் செய்கை யாலே
வன்பெரும் சிலுவை தன்னில்
வைத்தவர் அறைந்த போதும்
இன்பமே நுகர்ந்த தேவன்
ஏசுவே என்பார் உன்னை. 4

கனவில் பிணிமூப் போடு
சாவினைக் கண்ட பின்னர்
இனியிதன் ரகசி யத்தை
இன்னதென்று அறிவோம் என்று
கனதன ராச போகக்
கட்டுஎலாம் விட்டு ஒழித்த
புனிதன்அப் பௌத்தன் என்று
போற்றுவார் உன்னை யாரும். 5



அடிதடி வாழ்க்கை கொண்டும்
அன்பினை மறந்து நாளும்
கொடியதாம் பணப்பே யாலே
குவலயம் அயர்ந்து நொந்து
முடிவதற்கு எங்கேகு என்று
முரண்படு கின்ற காலை
விடிவது பொழுது போல
வீசியது உன்றன் காந்தி. 6

குண்டுபீ ரங்கி யாலும்
கோடியந் திரங்க ளாலும்
மண்டிய செல்வத் தாலும்
மயக்கிடும் பொருள்க ளாலும்
சண்டைகள் சயத்தி னாலும்
சலிப்புஇன்றிச் சுகம்எங்கு என்று
மண்டலம் இருண்ட போது
மதியெனத் தோன்றி னாய்நீ. 7

சாந்தம் ஒன்று இல்லை என்றால்
சௌக்கியம் இல்லை என்றே
ஆய்ந்தவர் சொன்னது எல்லாம்
அகந்தையால் மறந்து விட்டு
மாந்தினர் கள்ளே என்ன
மயக்கமுற்(று) இருந்த காலை
காந்தியென்(று) ஒருவன் தோன்றிக்
காத்தனன் உலகை என்ப. 8

சத்தியன் என்பார் உன்னைச்
சாந்தமே என்று சொல்வார்
பித்தனே யாவான் என்பார்
பேடியென்று ஒருசார் சொல்லும்
சுத்தனே என்பார் இல்லை
துரோகியென் பாரும் உண்டு
இத்தனை பெயரும் தாங்கும்
இதுவன்றோ பெரியார் செய்கை? 9

நம்மையும் புனித ராக்கி
நம்மையாண்டு அடிமை செய்தார்
தம்மையும் புனித ராக்கித்
தரணியில் தரும நீதி
மும்மையும் உயிர்க்கச் சாந்த
மூலமந் திரத்தைக் காட்டும்
செம்மைசேர் ராட்டி னத்தின்
திகிரியைச் சுழற்றி விட்டாய். 10

உனைவிடப் பெரியார் இந்த
உலகினில் இல்லை என்று
நினைவினில் பெரியார் உன்னை
நிரந்தரம் போற்று கின்றார்
இனியவுன் பெருமை எல்லாம்
இந்திய மாதா பெற்றாள்
அனையவள் பெற்ற கீர்த்தி
அடியமும் பெற்ற தன்றோ? 11

ஆண்டவன் ஆணை தாங்கி
அன்பினை நாட்ட என்று
பூண்டஉன் கொள்கை எங்கும்
பூமிவேர் ஊன்று மட்டும்
நீண்டஉன் வழிசி றக்க
நிமலனாம் கடவுள் மாட்டு
வேண்டுவோம் என்று சொல்லல்
வெற்றுரை ஆகும் அன்றே. 12

*குறிப்புரை:- திகிரி - சக்கரம்; சுத்தன் - தூய்மையானவன்; மூவுலகு - மண் உலகம், மேல் உலகம். பாதாளம்.*



## *249. சுத்தன் எங்கள் காந்திமகான்*

மதபேதம் ஆச்சரியம் மறைய வேண்டும்;
மனிதரெலாம் ஒருகுலமாய் வாழ வேண்டும்
விதம்வேறு நிறம்வேறு வினைகள் வேறாம்
விகற்பம்எலாம் ஒருகடவுள் விளையாட்(டு) என்ற
நிதமான மெய்யறிவின் நிலைய மாகி
நிறைவான பெருங்கருணை சோதி காட்டும்
பதியாரும் மோகனதாஸ கரம்சந்த் காந்தி
திருநாமம் என்றென்றும் பாரில் வாழ்க! 1

ஆயுதங்கள் மிகச்சிறந்த இட்லர் எங்கே?
அவன்துணைவன் முஸலோனி அகந்தை எங்கே?
மாயமிகும் போர்புரிந்த டோஜோ எங்கே?
மாநிலத்தைச் சீர்குலைத்து மறைந்தார் அன்றோ?
பேய்புகுந்த பிணக்காடாய் உலகைக் கண்டும்
பின்னும் அந்தப் போர்வெறியைப் பேச லாமோ?
தாயறிந்த அன்பினையே உருவாய்த் தாங்கும்
தவசிஎங்கள் காந்திசொலும் சாந்தி கொள்வோம். 2

இன்பதுன்பம் எவ்வுயிர்க்கும் ஒன்றே என்றே
ஈ,எறும்பு, புழுக்களுக்கும் இரக்கம் காட்டி
அன்புவழி வாழ்ந்தவர்கள் தமிழர் தாமே
அருள்மிகுந்த ஒருநாடு தமிழ்நா டாகும்
முன்பு இருந்த தமிழறிஞர் சேர்த்து வைத்த
மூதறிவே மோகனதாஸ் கரம்சந்த் காந்தி
நம்பன்இவன் சரித்திரமே உலகைக் காக்க
நாமெல்லாம் கடவுளிடம் நயந்து கேட்போம். 3

கொல்லாமை பொய்யாமை இரண்டும் சேர்ந்த
கூட்டுறவே மெய்ஞ்ஞானக் குணமாம் என்ற
நல்லாண்மை அறம் வளர்த்த தமிழ்நா டொன்றே
நானிலத்தில் அமைதிமிக்க நாடாம் என்றும்

வல்லாண்மை நமக்குவர வாழ்ந்து சென்ற
வள்ளுவனே மறுபடியும் வந்தான் என்னச்
சொல்லாண்மை புகழவொண்ணாக் கருணை சோதி
சுத்தன்எங்கள் காந்திமகான் நாமம் வாழ்க. 4

அணுகுண்டு வித்தைகளும் அணுக ஒண்ணா
அப்பாலுக்கு அப்பாலாம் அறிவாய் நிற்கும்
இணையற்ற பெருங்கருணை எல்லாம் வல்ல
இறைவனையே மூச்சாக இழுத்துப் பேசித்
துணைகொண்டு அவனருளைத் தொடர்ந்த காந்தித்
தூயவனே இந்தியத்தாய் சோதியாகும்
அணைகண்டு மதவெறியை அடக்கத் தேக்க
அவன்வழியே மக்களுக்கு அமைதல் வேண்டும். 5

சாந்தவழி உலகமெலாம் போற்ற வேண்டும்;
சத்தியத்தை அரியணையில் ஏற்ற வேண்டும்;
மாந்தருக்குள் போர்வெறிகள் மறைய வேண்டும்;
மக்களிடம் அன்புஅறங்கள் நிறைய வேண்டும்;
சோர்ந்துழலும் ஏழையெலாம் சுகிக்க வேண்டும்;
சுத்தர்களே அரசாட்சி வகிக்க வேண்டும்;
காந்திமகான் திருநாமம் வாழ வேண்டும்;
கடவுள்என்ற பெருங்கருணை காக்க வேண்டும். 6

## 250. சத்குருவான காந்தி

துறந்தவர் மிகுந்த நாட்டைத்
துறந்திடும் துன்பம் எல்லாம்
துறந்தவர் குறைந்த நாட்டைத்
தொடர்ந்திடும் துன்பம் எல்லாம்
அறிந்தவர் மொழிக ளாலும்
அனுபவ அறிவி னாலும்
அறிந்தனம் அதனை இந்தத்
தேசமும் மறந்தது அந்தோ! 1



வான்முறை மழைபெய் யாது
மாநிலம் வளமை குன்றும்
கோன்முறை கோணும் மற்றும்
குடிவளம் குறைந்து வாடும்
சாண்வயி(று) அதற்குக் கூடச்
சரிவரக் கிடைக்காது ஊணும்
தான்எனும் அகந்தை நீத்த
தவசிகள் குறைந்த நாட்டில். 2

அன்னஅத் துறவு பூண்டோர்
அரிதுஎனப் போன தாலோ
சொன்னவர் துறவி என்றோர்
தூய்மையில் குறைந்த தாலோ
முன்னைய வளங்கள் குன்றி
முதுமறைப் பெருமை விட்டுக்
குன்றிய வாழ்க்கை வந்து
குறைந்ததுஇப் பரத நாடு. 3

அக்குறை நீங்க வென்றே
ஆண்டவன் அனுப்ப வந்தோன்
இக்கணம் இந்த நாட்டின்
இருள்மிகும் அடிமை நீங்க
முக்குணம் அவற்றுள் போற்றும்
முதற்குணம் வழியே காட்டும்
சத்குரு வான காந்தி
சத்திய சீலன் தானே. 4

தாங்கண்ட இன்பம் இந்தத்
தரணியோர் பெறுமாறு எண்ணி
ஆங்குஎன்றும் ஈங்குஎன்று ஓடி
அறப்பறை அடிக்கும் காந்தி
தீங்குஎன உலகம் சொல்லும்
செய்கையோர் சிறிதும் இல்லார்
நாங்கொண்ட பெருமை எங்கும்
நல்லவர் யாருங் கொள்வார். 5

மனிதர்கள் கடவுள் ஆகார்
கடவுளர் மனிதர் ஆவார்
புனிதமும் பொறுமை யாவும்
பொய்யிலா வாழ்வும் பற்றிக்
கனதையும் கருணை பொங்கும்
காந்திபோல் வாரை விட்டு
இனியொரு கடவுள் என்பார்
எங்குளார்? எங்கு ளாரே? 6

கடவுளே பொய்யென் றாலும்
கண்டவர் இலையென் றாலும்
உடனுல குயிர்ஒன் றிற்கும்
ஒருசிறு தீங்கும் எண்ணார்.
கடனறி சாந்தக் குன்றாம்
காந்திபோல் வாரை அன்றி
உடலுயிர் உள்ளார் தம்மில்
உவப்பது யாரை? யாரை? 7

நம்பின பேருக் கேனும்
நம்புதல் அற்றோர்க் கேனும்
அம்புவி ஏழைக் காக
அருந்துயர் அனைத்தும் தாங்கி
வெம்பிய செய்தா ருக்கும்
வெருவுள எண்ணான் சொல்லான்
இம்பரின் காந்தி வாழ்வை
இலையென மறுக்கப் போமோ? 8

ஈரமும் இரக்கம் மட்டும்
இருப்பவர் யாரும் எங்கும்
ஓரமும் பொய்யும் நீக்கி
உயர்குணம் யாவும் காத்து
யாரொரு சிறியர்க் கேனும்
யாதொரு தீங்கும் ஒப்பான்
சீரியன் காந்தி வாழ்வைச்
சிறப்பியா(து) இருப்பது எங்கன்? 9



ஒன்றினை ஒன்று மாய்த்தே
ஒருவரை ஒருவர் வாட்டித்
தின்றுடல் சுகிக்கும் இந்தத்
தீமைசூழ் உலகந் தன்னில்
தன்துணைச் சுகங்கள் விட்டுத்
தளர்ந்தவர்க்(கு) உடலை ஈந்து
நின்றிடும் காந்தி வாழ்வை
மறப்பதோ, நினைப்ப தோதான்? 10

தன்னுயிர் போவ தேனும்
பிறர்துயர் சகிக்க மாட்டான்
பொன்னுயிர் பொதுமைக்கு ஈந்துப்
பொறுப்பதே மானம் அஃதே
இன்னுயிர் மனித வாழ்வின்
ரகசிய மாகும் என்றே
உன்னிய காந்தி வாழ்க்கை
தாழ்ந்ததோ உயர்ந்த தோதான்? 11

"வாழ்ந்தவர் வாழ்ந்த வாழ்வின்
வழியிழி வழக்கத் தாலே
'தாழ்ந்தவர்' என்பார் தம்மைப்
பிரிகிலேன், பிரித்து வைத்தால்
வீழ்ந்துயிர் விடுவேன்" என்ற
காந்தியின் விரத வார்த்தை
போழ்ந்துளங் கலங்கி டாதார்
பூமியில் உண்டோ மக்கள்? 12

'சத்தியம்' 'சாந்தம்' என்னச்
சலிப்புறக் கேட்ட வெல்லாம்
பொத்திய உடைஒன் றோடு
புறத்துஒரு அழகும் இன்றி
நித்தமும் தன்பாற் குற்றம்
நெருப்புஎனக் காய்ந்து நீக்கிச்
சுத்தமாம் காந்தி யாகத்
தோன்றிடக் கண்டோம் இன்று. 13

'சாந்தம்' என்று அதுதான் இன்று
சபர்மதிச் சாலை நீங்கி
ஏந்திய கொள்கைக் காக
ஏரவாடா சிறையில் தங்கிப்
பாந்தவர் தாழ்ந்த வர்க்காய்ப்
பட்டினி இருப்பேன் என்றே
ஆய்ந்தவர் அறிவில் என்றும்
காந்தியாய் அரசு கொள்ளும். 14

சத்தியம் வெல்லும் என்றால்
தவம்அது பலிக்கும் ஆனால்
உத்தமன் கடவுள் என்ற
ஒருபொருள் உண்மை யானால்
இத்துறை எங்கள் காந்தி
இடர்உறா வண்ணம் காத்து
வைத்திட வேண்டும் இந்த
வையகம் வாழ்த்தும் என்றும். 15

*குறிப்புரை:- முக்குணம் - சாத்வீகம், ராசசம், தாமசம். அவற்றுள் முதற் குணமாகிய சாத்வீகம் சாதுக்கு உகந்தவை.*

## *251. தவமே தவம்*

கதைகளில் கேட்டது உண்டு
கடவுளின் கருணை தன்னைக்
கவிதையில் படித்தது உண்டு
கருணையின் பெருமை தன்னை
வதைபெற உடலை வாட்டி
வரும்பல துன்பம் தாங்கி
வையகம் துயரம் தீர
வைப்பது தவந்தான் என்றும்
விதம்விதம் பாடி னாலும்
விளங்கினது இல்லை முன்னே



வித்தையின் வித்தை போல
விந்தையின் விந்தை காட்டிச்
சிதைவுற வெறிகள் மிஞ்சி
சீர்குலைந்(து) இருண்ட நாட்டில்
சிந்தனை சோதி காந்தி
தவத்தினால் தெரியக் கண்டோம். 1

கல்லையும் கனியச் செய்து
நெருப்பையும் தணித்துப் பொல்லாக்
கயவர்தம் மனத்தைக் கூட
நயமுறச் செய்து காட்டும்
எல்லையில் லாத நன்மை
தவத்தினால் இயலும் என்றே
ஏட்டினில் படித்த போதும்
ஏளனம் செய்தோம் அன்றோ?
சொல்லரும் ஞான வாழ்வின்
சுடர்எனும் காந்தி எம்மான்
சூறையும் கொலையு மாக
மதவெறி சூழக் கண்டு
தில்லியில் தவமேற் கொண்டு
திருத்திய திறத்தைக் கண்டால்
தெய்வமே நம்முன் வந்து
தெரிசனம் கொடுத்தது அன்றோ! 2

செந்தமிழ் அறிவில் எங்கும்
செறிந்துள போத மாகிச்
சிறந்தநம் கலைகள் எல்லாம்
தினந்தினம் தெரியக் காட்டும்
இந்தியர் போற்றி வந்த
இப்பெரும் ஞான வாழ்வை
இழந்தனம் அழிவே செய்யும்
எந்திர மோகம் மிஞ்சி

நொந்துநொந்து அறிஞர் வாடும்
உலகுடை நோய்கள் தீர
நோன்பிருந்து அறங்கள் ஊட்டும்
காந்தியின் நோக்கம் ஒன்றே
வெந்துயர் போக்கும் சாதி
வெறிகளை விலக்கச் செய்யும்
வேறெது நம்மைச் செய்த
விமலனைக் காட்டும் மார்க்கம்? 3

வாய்மையும் அன்பும் சேர்ந்த
வடிவமே கடவுள் என்று
வாய்ப்பறை சாற்று கின்றோம்
வாதித்து எழுது கின்றோம்
தீமையே செய்த பேர்க்கும்
நன்மையே செய்வோம் என்று
தினம்தினம் மதத்தின் பேரால்
செபமணி உருட்டு கின்றோம்
நாம்ஒரு சகிப்புக் காட்ட
நேர்ந்திடும் நாளில் மட்டும்
நல்லதைத் தீயது என்போம்
தீயதை நல்லது என்போம்
வாய்மையின் வைப்பாம் காந்தி
வள்ளலார் வழியே போற்றி
வையக மாந்தர் எல்லாம்
நலமுற வாழ வேண்டும். 4

தரணியோர் பாபம் எல்லாம்
தன்பிழை எனமேற் கொண்டு
தனியொரு மனித னாகத்
தவமிருந்து உலகம் ஏங்க
மரணம்என் பதுவும் கூட
மருண்டு அயல் புரண்டு போக



மாநிலத்து அறிஞர் எல்லாம்
வியந்துடன் மகிழ்ந்து வாழ்ந்த
புரணியும் பொய்கள் கூட்டம்
புகலிடம் தேடி ஓடப்
புண்ணிய எண்ணம் நம்மைப்
பிரிந்தவை புகுந்து கொள்ளக்
கருணையின் பெருமை தன்னைக்
கைக்கனி என்னக் காட்டும்
காந்தியின் பெருமை தன்னால்
கடவுளின் பெருமை கண்டோம்! 5

## 252. தவமுனி காந்தியவர்

இந்திய நாடு சுதந்தரம் எய்தநல்
தந்திரம் தந்தவர் யார்? - சிறு
கந்தை 'பக்கீர்'என்று தந்துஒரு வன்சொன்ன
காந்தி என்னும் பெரியார். 1

அஞ்சிக் கிடந்தநம் நெஞ்சத்து துணிந்திட
ஆண்மை எழுப்பினது ஆர்? - ஒரு
வஞ்சம் இலாதவர் வாய்மையின் தூய்மையின்
வாழ்க்கையர் காந்தியவர். 2

ஆயுதம் இன்றியும் யாரும் வணங்கிடும்
அன்பைப் பெருக்கினது ஆர்? - சற்றும்
சாயுதல் செய்திடாச் சத்திய மூர்த்திநம்
தவமுனி காந்தியவர். 3

நாட்டினுக் காஉயிர் கேட்பினும் தந்திட
நான்என்று முன்வருவோர் - பலர்
போட்டியிட் டேவர வீரம் புகுத்தினர்
புண்ணியர் காந்தியவர். 4

அடிபட்டு மாளவும் சிறைபட்டு வாழவும்
அச்சம் அகற்றினது ஆர்? - உண்மை
குடிகொண்டு கோபத்தைக் குறைவற நீங்கிய
குணமுயர் காந்தியவர். 5

பேதையர் என்றுநாம் பேசிய பெண்களும்
வீதியில் நம்மிலுமே - இங்கு
நீதியில் லாமுறை அரசை எதிர்த்துடன்
நின்றிடக் காந்தி செய்தார். 6

சின்னஞ்சிறிய குழந்தைக ளும்இன்று
செயசெய வென்றுசொல்லி - எங்கும்
நன்னெஞ்சு உருகிடத் தேசத்தி னைத்தொழக்
காந்திஜி செய்துவிட்டார். 7

தீண்டப்ப டாதுஎன்று மனிதரைச் சொல்வது
தீமையில் தீமையென்றே - அதைப்
பூண்டொடும் போக்கநாம் விரதம் புனைந்தது
புண்ணியர் காந்தியினால். 8

'தன்னை வதைப்பவர் தங்களுக்கும் அன்பைத்
தாங்குவ தேதவமாம்' - என்று
முன்னைஇந் நாட்டினில் சொன்னவர் சொற்களை
முற்றுவித் தார்காந்தியார். 9

'உடலினும் உயிரினும் உள்ளிருக் கும்ஒன்(று)
உயர்ந்தது காணும்' என்றே - இந்தக்
கடலுல கத்தினில் கண்ணுக்கு முன்னாகக்
காட்டிவிட் டார்காந்தியார். 10

காந்தி யெனும்பெயர் சாந்தம் எனும் சொல்லின்
காட்சியின் காட்சியென்றே - இனி
மாந்தர்கள் எங்குமே ஏந்தி அதன்வழி
மங்களம் எய்திடுவார். 11

*குறிப்புரை:- மாந்தர் - மக்கள்; வதைப்பவர் - வருத்துபவர்.*



## 253. மாந்தருக்குள் மாமணி

காந்தியெனும் பேரொளியே!
கருணைபொழி வான்முகிலே!
சாந்திநிறை பாத்திரமே!
சன்மார்க்க சாத்திரமே!
மாந்தருக்குள் மாமணியே!
மாநிலத்தின் அற்புதமே!
ஏந்துபுகழ் மோகனமே!
என்சொல்லி அஞ்சலிப்போம். 1

இதமுரைக்கும் வானொலியே!
இருள்கிழிக்கும் மின்விளக்கே!
பதமறிந்த பேச்சாளா!
பயனறிந்த எழுத்தாளா!
மதவெறிக்கே பலிபுகுந்த
மாயாப் பெரும்புகழே!
துதிஉரைக்கச் சொல்லறியோம்
தொழுகின்றோம் துணைபுரிவாய்; 2

அன்பெடுத்த திருவுருவே!
அருள்அமரும் ஆசனமே!
துன்பமுற்றோர் துணைக்கரமே!
துயர்நீக்கும் தூதுவனே!
இன்பமெலாம் பிறர்க்குதவி
இன்னல்எலாம் தாங்கிநிற்கும்;
தென்புஇருக்கும் தேசிகமே!
திருவடிக்கே அஞ்சலித்தோம்! 3

இல்லறத்தின் சிறப்பிடமே!
துறவறத்தின் இருப்பிடமே!
நல்லறங்கள் யாவினுக்கும்
நடுவான நன்னெறியே!

தொல்லறத்தின் புதுப்பதிப்பே!
தோல்வியிலாச் சால்புடையாய்!
சொல்லுரைக்கப் போதாத
சுசிகரமே! தொழுகின்றோம். 4

சாதிமத பேதமிலாச்
சமதர்ம சந்நிதியே!
நீதிநெறி பிசகாமல்
நிறுத்(து)அளக்கும் துலாக்கோலே!
வாதுபுரி வம்புகளின்
வாயடக்கும் வல்லமையே!
ஏதுபுகழ் சொல்லியுனை
அஞ்சலிப்போம் எம்மானே! 5

வலிமைதரும் சூரியனே!
வழிகாட்டும் தாரகையே!
குலவவரும் சந்திரனே!
குளிர்ச்சிதரும் பொன்காற்றே!
புலமைதரும் பொன்மொழியே!
புதுமைதரும் நன்மருந்தே!
தலமறிந்த தனித்தலைவ!
தாள்பணிந்தோம்; அஞ்சலித்தோம்! 6

மதிகலங்கா மந்திரியே!
மாசுபடாத் தந்திரியே!
சுதிகலங்கா யாழிசையே!
சுவைகுறையாச் சொல்லடுக்கே!
நிதிமயக்கா மனநிறைவே!
நிலைகலங்கா நிம்மதியே!
கதிகலங்காச் சாரதியே!
அஞ்சலித்தோம் காத்தருள்வாய். 7

தேடரிய செல்வமே!
தெவிட்டாத தெள்ளமுதே!
ஏடறியா ஞானமே!
எழுத்தறியா வித்தகமே!



பாடறியா உழைப்பே!
பயன்கருதாத் திருப்பணியே!
ஈடறியா உத்தமனே!
என்சொல்லி அஞ்சலிப்போம்! 8

மண்கண்ட மாதவமே!
மறைகண்ட சாதகமே!
கண்கண்ட தெய்வமே!
கலைகண்ட நல்லுணர்வே!
பண்கொண்ட இன்சொல்லே!
பணிகொள்ளும் நன்னயமே!
எண்கொள்ளா மேதையே!
என்சொல்லி அஞ்சலிப்போம்! 9

கல்விதரும் நல்லறிவே!
கவிதைதரும் கற்பனையே!
செல்வம்எனும் பொருள்எல்லாம்
சேர்ந்திருக்கும் பொக்கிஷமே!
நல்வினைக்கு நாயகமே!
நடுநிலைக்குத் தாயகமே!
சொல்வதற்கு வேறறியோம்!
காந்தியரே! தொழுகின்றோம்! 10

பகைமைபுகா அரண்மனையே!
படைதொடுக்கா ராணுவமே!
புகையறியாச் சுடர்விளக்கே!
புண்படுத்தாத தவக்கனலே!
வகையறியா மானிடர்க்கு
வரமளிக்கும் நல்வாழ்வே!
தொகையறியாப் பொற்குவையே!
தொழுகின்றோம் துணைபுரிவாய்! 11

கொலைமறுத்த போர்வீரா!
குடிஒழித்த பேராளா!
நிலைஇழிந்த அரிசனங்கள்
நிமிர்ந்துலவும் முதுகெலும்பே!

கலைமறந்த குடிசைகளைக்
காக்கவந்த கைத்தொழிலே!
அலைமறந்த குணக்கடலே!
காந்தியரே! அஞ்சலித்தோம்! 12

மரணம்எனும் பெரும்பயத்தை
மாற்றிவிட்ட மந்திரமே!
திரணமென மதித்துயிரை
ஈடுவைக்கும் பெரும்தீரா!
தருணமதில் வந்துதவி
வெற்றிதரும் தைரியமே!
கரணமெலாம் உன்வசமாய்க்
கைகுவித்தோம் காத்தருள்வாய்! 13

ஏழைகளின் பெருந்துணையே!
எளியவரின் நல்லுணர்வே!
மேழியரின் மெய்க்காப்பே!
மெலிந்தவரின் புகலிடமே!
ஊழியரின் ஊழியனாய்
உலகைவென்ற ஒப்புரவே!
வாழியநின் திருநாமம்
வையம்எங்கும் வாழ்வுதரும். 14

## *254. காந்திவழி வாழ வேண்டும்*

கல்லாலும் செம்பாலும் கடவு ளாக்கிக்
கற்பூரம் காட்டிவிட்டால் போதும் என்றே
எல்லாரும் நினைத்துவிடச் செய்து நித்தம்
தெய்வத்தை ஏமாற்றி வாழ்ந்தோம் என்று
சொல்லாலும் செயலாலும் எண்ணத் தாலும்
சுத்தமுள்ள பக்திநெறி சொல்லித் தந்து
கல்லாத எளியவர்க்கும் கடவுள் தன்மை
கண்ணாரக் காட்டும்எங்கள் காந்தி வாழ்க்கை. 1

எந்திரங்கள் பெருகிமட்டும் என்ன நன்மை?
ஏராளச் சரக்குகளைக் குவித்தும் என்ன?



தந்திரங்கள் மிகப்பயின்றும் தருவது என்ன?
தரணியெங்கும் பல்கலைகள் தழைத்தும் என்ன?
சிந்தனையில் கருணைமட்டும் இல்லை யானால்
சீரழியும் உலகம்என்ற சேதிக்கு என்றே
வந்துதித்துத் திருவருளை வாழ்ந்து காட்டும்
வள்ளல் எங்கள் காந்திவழி வாழ வேண்டும். 2

மந்திரிகள் தந்திரிகள் மலிந்தால் என்ன?
மண்டலத்தை ஒருகொடிக்கீழ் ஆண்டால் என்ன?
அந்தரத்தில் தோன்றுகின்ற அனைத்தும் வென்ற
அண்டம்எலாம் நமதுஆட்சி ஆனால் என்ன?
எந்தஒரு உயிரிடத்தும் கருணை காட்டும்
இரக்கம்ஒன்றே இவ்வுலகை வாழ வைக்கும்
அந்தஒரு அறிவினுக்கே உடலம் கொண்டோன்
ஐயன்எங்கள் காந்திநாமம் வாழ்க! வாழ்க! 3

விஞ்ஞானச் சக்திகளால் வென்றால் என்ன?
விதம்விதமாய்ச் சுகப்பொருள்கள் விரிந்தால் என்ன?
இஞ்ஞாலத்(து) உயிர்கள் எல்லாம் மகிழ்ந்து வாழ
இம்சையற்ற சமுதாயம் வேண்டு மானால்
பொய்ஞ்ஞான மதவெறிகள் போக வேண்டும்
பொறுமைதரும் கருணைஒன்றே பொருளாம் என்ற
மெய்ஞ்ஞானம் நமக்குவர வாழ்ந்து சென்ற
மேதையெங்கள் காந்திமகான் நாமம் வாழ்க! 4

எண்ணரிய தேசபக்தர் உயிரை ஈந்தே
எத்தனையோ துன்பம் எல்லாம் சகித்த தாலே
மண்ணுலகில் வேறுஎவரும் அறியா நல்ல
மார்க்கத்தால் விடுதலையை மலரச் செய்தோம்;
புண்ணியநல் அறநெறிசேர் அரசு நாட்டிப்
புவியெங்கும் சாந்தவழி போதம் காட்ட
அண்ணல் எங்கள் காந்திமகான் திருநா மத்தை
அனுதினமும் போற்றிசெய்ய அருள்வாய் தேவா! 5

*குறிப்புரை:- இஞ்ஞாலம் - இவ்வுலகம்; அறநெறி - தர்மவழி; சீரழியும் - கெடும்; மார்க்கம் - வழி; அனுதினமும் - நாள்தோறும்.*

## *255. காந்தி வாழ்க*

காந்தி நாமம் வாழ்க வென்று
கைகு வித்துக் கும்பிடு
சாந்த மாக உலகம் எங்கும்
சண்டை இன்றி இன்புறும். 1

அருளி(து) என்ற பொருள் அறிந்த
அந்த ணர்க்குள் அந்தணன்
தெருள டைந்த மனித வர்க்கம்
தீமை தீர வந்தவன். 2

கொலைம றுத்துப் பொய்த விர்த்துக்
கொடுமை நீங்கப் பண்ணினான்
தலைசி றந்த காந்தி சேவை
விலைம திக்க ஒண்ணுமோ? 3

யுத்தம் என்றே உலக முற்றும்
மெத்த நொந்த இந்தநாள்
சத்தம் இன்றி அன்பு செய்யும்
சாந்த மார்க்கம் தந்துளான். 4

எந்த நாடும் விடுத லைக்கா
எண்ணில் துன்பம் எய்திட
இந்த நாட்டின் சொந்த ஆட்சி
எளிதில் கூடச் செய்தவன். 5

தீமை செய்து நன்மை சேரத்
தேவ ராலும் ஒல்லுமோ?
வாய்மை தன்னை வற்பு றுத்தி
வாழ்ந்து காட்டும் வல்லவன். 6

எண்ணிறந்த ஞான வான்கள்
இந்தப் பூமி கண்டது
மண்ணில் எங்கள் காந்தி போல
மற்றுஒ ருத்தர் உண்டுகொல்! 7



மாந்தர் எங்கும் கலகம் இன்றி
மருவி வாழக் கோரினால்
காந்தி மார்க்கம் ஒன்றை அன்றிக்
கதிந மக்கு வேறிலை. 8

இந்தியாவின் பெருமை முற்றும்
இந்தக் காந்தி மார்க்கமே
அந்த ஞான உரிமை தன்னை
அழிவி லாது காக்கவே! 9

கட்டி நின்று காந்தி செய்யும்
கருணை வாழ்வை ஒட்டியே
கிட்டி விட்ட சொந்த ஆட்சி
கெட்டுப் போக விட்டிடோம். 10

## *256. சஞ்சலத்தை நீக்குவாய்*

அமர னாகி எம்மைக் காக்கும்
அண்ணல் காந்தி ஐயனே!
அஞ்ச லித்து நிற்கும் எங்கள்
சஞ்ச லத்தை நீக்குவாய்!
சமனி லாத சாந்த ஞான
சத்தி யத்தின் நிலையமே!
சரிச மான மாக மற்ற
உயிரை எண்ணும் தலைவனே!
நமது நாடு உலகி னுக்கு
ஞான சேவை பண்ணவே
நானி லத்தில் இவ்வி டத்தை
நாடி வந்த விண்ணவா!
அமைதி மிக்க அறிவி னோடும்
அன்பு மிக்க ஆற்றலும்
அருள வேணும் அப்ப னேஉன்
அடிப ணிந்து போற்றினோம். 1

நீபி றந்த போது தேசம்
நிலைகு லைந்து நின்றது
நிந்தை மிக்க அடிமை வாழ்வில்
நொந்து நொந்து வாடினோம்!
தாய்சி றந்த அன்பி னோடு
துன்ப முற்றும் தாங்கினாய்
தனியிருந்து தவம் இயற்றித்
தைரி யத்தை ஊட்டினாய்!
வாய்மை அன்பு வெல்லு கின்ற
வழிந டந்து காட்டினாய்!
வையம் என்றும் கண்டி லாத
வலிமை எம்முன் கூட்டினாய்!
போய்ம றைந்த ஞான வாழ்வு
புதுமை கொள்ளச் செய்தனை!
புண்ணி யத்தில் முன்னி லாத
கண்ணி யத்தைப் பெய்தனை! 2

தண்டு மிண்டு தலையெ டுத்துத்
தாறு மாறு மிஞ்சவும்,
தரும நீதி தெய்வ பக்தி
தலைவ ணங்கிக் கெஞ்சவும்,
மண்ட லத்தில் எந்த நாடும்
அமைதி யின்றி மருளவும்,
மக்கள் யாரும் யுத்தம் என்று
நடுந டுங்கி வெருளவும்,
கண்டு நொந்து அறிஞர் யாரும்
கவலை கொண்டு ஏங்கினார்
காந்தி தேவ! நீந டந்த
கருணை மார்க்கம் ஓங்கவே
தொண்டு செய்துஇவ் வுலகில் உள்ள
துயரம் போக்க எண்ணினோம்
துணையி ருக்க வேண்டும் என்றே
அஞ்ச லித்து நிற்கிறோம்! 3



## *257. காந்தியே வாழ்க! வாழ்க!*

ஏட்டளவு இருந்த வேதம்
இதுவென எடுத்துக் காட்டி
எழுத்தளவு இருந்த கீதம்
செய்கையில் ஏந்தி நின்று
வீட்டளவு இருந்த காதல்
விருந்தொடு விரியச் செய்து
விருந்தளவு இருந்த நேசம்
வியன்பெரு நாட்டிற்கு ஆக்கி
நாட்டளவு இருந்த அன்பை
நானிலம் முழுதும் நீட்டி
நானிலத்து எவர்க்கும் அன்பே
நாதனைக் காண்பது என்று
காட்டினை! சொல்லால் அல்ல
ஒழுக்கத்தால் கருணை வாழ்வின்
காந்தியே வீசும் சாந்தக்
காந்தியே வாழ்க! வாழ்க! 1

பக்தியென்று ஆடு கின்றோம்
பஜனையாம் பாடு கின்றோம்
பாகவ தம்மென்(று) இங்குப்
படிக்கின்றோம் பலநூல் நித்தம்
முக்தியென்று ஓது கின்றோம்
மேட்சமே பேச்சில் எல்லாம்
மோனமும் ஞானம் என்ன
மொழிகிறோம் முற்றும் நாளும்
சத்தினைப் போக விட்டுச்
சக்கையைப் பற்றி வாழ்ந்தோம்
சாத்திர சாரந் தன்னைச்
சால்புடன் உணர்ந்த தக்கோர்

கத்துவது என்றும் மாறா
ஒழுக்கத்தின் கருணை வாழ்வின்
காந்தியே வீசும் சாந்தக்
காந்தியே வாழ்க! வாழ்க! 2

நெற்றியில் நீறு நாமம்
நிறைந்திடப் பூசி யென்ன?
நியமும் நிஷ்டை யென்று
நீண்டதால் நேர்வது என்ன?
பற்றிய ஜெபம் செய்மாலைப்
பகல்இரவு இருந்தும் என்ன?
பார்த்தவர் மருளும் யோக
ஆசனம் பழகி யென்ன?
சுற்றிய எவரும் நம்மால்
துன்புறாத் தூய வாழ்வும்
தோன்றிய ஜீவர் எல்லாம்
துணையெனக் கருதும் அன்பும்
கற்றனை வாழ்வில் என்றும்
காட்டினை கருணை வாழ்வின்
காந்தியே வீசும் சாந்தக்
காந்தியே வாழ்க! வாழ்க! 3

திடமொடும் உதித்த ஞானத்
திருவுருவு அடைந்த பேரும்,
தெளிந்தவர் மொழிந்த வற்றைத்
திளைந்ததில் தெளிந்த பேரும்,
அடவியில் இருந்து நாளும்
அருந்தவம் புரிந்த பேரும்,
அடைக்கலம் குருவை நாடி
அருள்வழி அறிந்த பேரும்,
இடம்நிறம் காலம் என்னும்
இவைகளில் எதில் வந்தாரும்
இவ்வுலகு உதித்த பின்னர்
இந்தநா ளளவும் யாரும்



கடவுளின் இருக்கை கண்டோர்
காட்டிய கருணை வாழ்வின்
காந்தியே வீசும் சாந்தக்
காந்தியே வாழ்க! வாழ்க! 4

முனிவரர் கோடி கோடி
முயற்சியால் சிறந்த நாட்டை
மூடவெம் மதியி னாலே
முயக்கினோம் அடிமை வாழ்வில்
தனிவரும் துயரில், நோயில்,
தரித்திரத் தாலே வாடித்
தளர்ந்திடும் ஏழை மக்கள்
துயரத்தைத் தாங்கி நின்றாய்
இனிவரும் அணித்தே என்ன
எண்ணவும் முடியா மேன்மை
இப்பெரும் உன்னைப் பெற்றும்
சோம்பினோம் இகழ்ந்து நின்றோம்.
கனிபெரும் தூய வாழ்வின்
கண்ணெனும் கருணை வாழ்வின்
காந்தியே வீசும் சாந்தக்
காந்தியே வாழ்க! வாழ்க! 5

என்கடன் பணிகள் செய்து
கிடப்பதே என்று முற்றும்
ஏழைக்கட் காக வாழ்ந்தோர்
எண்ணிலார் இருந்த நாட்டைத்
துன்புடை அடிமை வாழ்வின்
துயரிடை அழுத்தி விட்டோம்
தூயவர் சொல்லை எல்லாம்
தூற்றினோம் காற்றில் ஐயோ!
வன்பெரும் மிடியால் வாடும்
வறியவர்க்(கு) உழைத்தால் அன்றி
வாழ்விலை நமக்கே என்று
வகுத்தனை! உணர்ந்தோம் ஐயா!

கன்மனம் உடையோர் ஏனும்
கனிந்திடும் கருணை வாழ்வின்
காந்தியே வீசும் சாந்தக்
காந்தியே வாழ்க! வாழ்க! 6

## 258. பூனா வெடிகுண்டு

விந்தையில் விந்தை! காந்தியின் மேலும்
வெடிகுண்டை யாரோ வீசினராம்!
இந்தும தத்தில் வந்தவர் யாரும்
இப்படி யும்செய ஓம்புவரோ
நிந்தையில் நிந்தை இதைவிட வேறும்
இந்திய நாட்டிற்கு வந்திடுமோ!
இந்தவி பத்தில் காந்தியைக் காத்தது
எந்தப் பொருளதைச் சிந்தை செய்வோம். 1

சத்தியம் மெய்யே சாந்தமும் மெய்யே
சாதித்(து) உயர்ந்திட்ட சாதுக்கள்மெய்
நித்தமும் நின்று நம்மை நிறுத்து
நீதி செலுத்திடும் ஜோதியும்மெய்
பொய்த்திடும் பொய்யே போனது ஐயம்
புண்ணியம் என்பது உண்மைஅதை
உத்தமர் காந்தியின் மெய்த்தவ வாழ்வினில்
உண்டு வெடித்திட்ட குண்டுசொலும். 2

மடமையி னாலே செய்தனர் என்றே
மன்னித்து வாழ்த்திய பொன்னுரையால்
அடவியிற் சென்றே ஐம்புலன் வென்றார்
அந்தணர் முந்துரை தந்தவெலாம்
நடைமுறை தன்னில் தினசரி வாழ்வில்
நாட்டிடைக் காந்திஜி காட்டி விட்டார்
கடவுளும் உண்மை கருணையும் உண்மை;
காத்திடும் என்பது பார்த்துவிட்டோம். 3



தாழ்ந்தவ ரேனும் வாழ்ந்தவ ரேனும்
சத்தியம் நாடிய பத்தரலால்
வேந்தரும் காணா வேதியர் காணா
வேறுஒரு சக்தியின் பேரருளால்
மாந்தருள் தெய்வம் நம்பின வாக்கு
மனத்துறை இன்பம் எனத்தகுமோர்
காந்தியும் தப்பிக் கருணையும் தப்பிக்
கடவுளும் தப்பிப் பிழைத்தனரே! 4

பொங்கிய 'போலி'ச் சதான கோபம்
பூனாவில் அன்று வெடித்ததுவோ!
அங்குஒரு தீங்கும் யாருக்கும் இன்றி
அன்புருக் காந்தியும் துன்பமிலார்
சங்கெடுத்து ஊது! மங்களம் பாடு!
சாந்தி உலகுக்குக் காந்தியினால்
எங்ஙனும் சாந்தி யாவர்க்கும் சாந்தி
என்ற முதுமறை நிற்றதுபார். 5

*குறிப்புரை:- மடமை - அறியாமை; பேரருளால் - பெருங்கருணையால்; நித்தம் - நாள்தோறும்.*

## 259. ஜோதி மறைந்து கொண்டதே!

சத்தியத்தின் ஓயாத சங்க நாதம்
சாந் தித்தரச் சலியாத வேத கீதம்
நித்தியதன் வெறியறிவை நீட்டும் சப்தம்
நிரந்தரமாம் மெய்ஞ்ஞானக் குழலின் ஓசை
மெய்த்தவத்தை நினைப்பூட்ட மீட்டும் வீணை
மேலான குணங்களையே மேவும் பாடல்
உத்தமருள் உத்தமனாம் காந்தி என்ற
தேனொழுகும் வானொலியும் ஓய்ந்து போச்சே! 1

முத்திவழி காட்டுகின்ற மோன தீபம்
மூடமன இருளகற்றும் முழுவெண் திங்கள்

வித்தைகளின் நித்தியவி வேக பானு
விடியிருளில் தடைவிலக்கும் வெள்ளி விண்மீன்
எத்திசையும் மாலுமிக்கும் இடம்கண்(டு) ஏற
இமயம்என இலங்குகலங் கரைவி ளக்காம்
உத்தமருள் உத்தமனாம் காந்தி என்னும்
ஒப்பரிய செகச்சோதி ஒளிந்தது ஐயோ! 2

சூரியனும் சந்திரனும் தொலைந்தார் என்ன,
சுற்றியுள்ள மீன்களிலும் இருளே சூழ,
காரிருளில் கடியஇருள் கவிந்து யாரும்
கண்ணிழந்து புண்ணிழந்து கலங்கி ஏங்க,
நேருகின்ற பொழுதில் எல்லாம் கவலை நீங்க
நிச்சயம்தன் உள்ளிருந்தே ஒளியை நீட்டும்
யாரும்இந்த உலகில்இது வரையிற் காணா
அற்புதமின் சாரசக்தி அறுந்து போச்சே! 3

எப்படித்தம் உடல்வளர்த்தும் எதுசெய் தாலும்
என்னென்ன காயகற்பம் இழைத்துஉண் டாலும்
தப்பிடவே முடியாது தடையில் லாமல்
தலைசிறந்த மனிதர்களும் சாக வேண்டும்.
முப்பொழுதும் உலகநலம் மூச்சாய்க் கொண்டு
முறைதவறாத் தவவாழ்வே முடித்த காந்தி
இப்படித்தம் உயிர்கொடுத்த பெருமை அன்றோ
என்றென்றும் நின்றுஒளிரும் இரவி யாகும். 4

உலகறிந்த அறிவையெலாம் ஒன்றாய்ச் சேர்த்தே
ஒருசிறிய காந்தி என்ற உடலில் வைத்தார்
அலகில்பல அற்புதங்கள் நடத்தி வைக்கும்
ஆண்டவனின் திருவுளத்தை அறிவார் யாரோ!
இலகும்ஒரு காந்தியிடம் இருந்த சத்தை
இவ்வுலகில் பலபேர்கள் பகிர்ந்து கொண்டு
கலகம்வரின் அங்கங்கே கருணை காட்டிக்
காக்கவென்றே இறைவன்இதைக் கருதி னானோ? 5



மதவெறிகள் மாச்சரியம் மறைந்தால் அன்றி
மாநிலத்தில் உயிர்வாழ மாட்டேன் என்னும்
இதயமுறும் சத்தியத்தை இசைத்தார் காந்தி
இஷ்டம்போல் உயிர்அதற்கே ஈந்தார் எம்மான்.
உதயமுற நம்மனத்தில் உணர்ச்சி உண்டேல்
உலகமெல்லாம் கலகம்இலா(து) உய்ய வேண்டின்,
மதவெறியும் இனவெறியும் மறைய வேண்டும்
மற்றும்ஒன்று மொழிவெறியும் மாற வேண்டும். 6

உடலமென்ற சிறுகூண்டில் மொழிந்தால் என்ன?
உள்ளிருந்த ஒருபொருளும் கழிவும் உண்டோ?
கடவுள்என்ற ஒருமகிமை இருந்தால் அன்றோ
காந்திஎன்ற பெரும்பெயரும் இறந்த தாகும்?
திடமுறுவோம் தீரமுடன் நம்மைச் சூழ்ந்த
தீமைகளைத் தீரமுடன் தீர்க்கா விட்டால்
'அடிமை அச்சம்' நமைவந்தே அமுத்திக் கொள்ளும்
அண்ணலையும் அவமதித்த அதமர் ஆவோம். 7

வள்ளுவரின் வழிவளர்ந்த தமிழா! நீதான்
வாய்மையுடன் தாய்மைஅறம் வளர்த்த வள்ளல்
தெள்ளுதமிழ் நூல்கள்எல்லாம் தெளிவாய்ச் சொல்லும்
தெய்வபெருங் கருணையையே செய்தார் காந்தி.
கொள்ளைகளும் கொலைவெறியும் குமுற வாடும்
குவலயத்தில் கொடுமைகளைக் குறைக்க நீதான்
அள்ளியெங்கும் தமிழ்மொழியின் அறிவை வீசி
ஐயன்எங்கள் காந்திவழி அகிம்சை காப்பாய். 8

மாந்தர்என இவ்வுலகில் பிறந்த பேருள்
காந்தியைப்போல் மற்றுஒருவர் வந்தது இல்லை.
சாந்தமுழு சைதன்ய மூர்த்தி என்னும்
சர்வேசன் சகலகலா சக்தி தன்னைத்
தேர்ந்தவருள் காந்தியினும் தெளிந்தார் இல்லை
தெரிந்திருந்தும் மரணம்இதில் தேடிப்பார்த்தால்
காந்தியையும் கடந்தஒரு பொருள் உண்டுஎன்று
கட்டாயம் நாம் அறியக் கடவோம் அன்றோ? 9

கோழைகள்போல் குலைவதனால் பயன்ஒன்று இல்லை
கொலைவழிகள் கூண்டோடு மறையச் செய்தே
ஏழைகளோ கொடுமைகளோ எங்கும் இன்றி
இந்தியத்தாய் நாடுஇதனை இலங்கச் செய்வோம்
ஊழிதொறும் அவன்நினைவு உதவ வேண்டி
உத்தமனைக் குலகுருவாய் பஜனை செய்து
வாழிஜெய வாழிஜெய வாழி காந்தி
வள்ளலார் திருநாமம் வாழ்க என்போம். 10

குறிப்புரை:- வள்ளலார் - ஈண்டு காந்தி மகானைக் குறிக்கும்; இலங்க - விளங்க.

## *260. அமரர் காந்தி அண்ணல் வருகை*

ஞானம் என்று சொல்லு கின்ற
நல்ல சக்தி யாவையும்
நானி லத்தில் காந்தி என்று
மேனி பெற்று வந்தன.
ஈன மிக்க அடிமை வாழ்வின்
இடர்மி குந்து நொந்தநம்
இந்தி யாவின் விடுத லைக்கு
விந்தை மிக்க நன்னெறி
தான்ந டந்து வெற்றி தந்து
தரணி முற்றும் வாழ்ந்திட
தனது சொந்த உடலைக் கூட
தத்த மாகத் தந்துபின்
வானகத்து இருந்து நம்மை
வாழ்த்தும் காந்தி தேவதை
வையகத்தில் மீண்டும் நம்மை
வந்து பார்க்கும் நாளிது. 1



தெய்வ மேனியோடு காந்தி
திகழ நம்முன் நிற்கிறார்!
திருவடிக்கு மாலை சூட்டி
தியான பூசை செய்குவோம்.
வையம் வாழ நல்வ ரங்கள்
வாங்கிக் கொள்ள நல்லநாள்
வஞ்ச மற்ற நெஞ்சி னோடு
அஞ்ச லித்து நின்றுநாம்
ஐயன் காந்தி காட்டு கின்ற
அன்புவாய்மை போற்றினால்
அச்சம் ஏது? பிச்சை கேட்கும்
அவதி ஏது அவனியில்?
உய்ய வேறு மார்க்கம் இல்லை
காந்தி பக்தி ஒன்றுதான்
உலகில் இன்று குமுறு கின்ற
கலகம் தீர நன்றுகாண். 2

உணவி லாமல் ஏழை மக்கள்
உடல் பதைத்து வாடலும்
உணர்வி லாத தன்ன லங்கள்
பதுக்கி வைத்து மூடலும்
குணமி லாத செல்வம் செய்யும்
கோடி கோடி துன்பமும்
கொடுமை செய்துஇவ் வுலகை ஆளக்
கோரு கின்ற வம்புகள்
பணமி லாத ஒன்றுக் காகப்
பாத கங்கள் புரிவதும்
பாவ புண்ணியங்கள் என்ற
பயம்இ லாது திரிவதும்
அணுபி ளக்கும் குண்டு செய்துஇவ்
வகில நாசம் எண்ணலும்
அத்த னைக்கும் மாற்று நல்கும்
அமரன் காந்தி அண்ணல்தான். 3

## *261. காந்தி சொல்லை ஏந்தி நிற்போம்*

அடிமைத் தனத்தை விட்டோம் - ஆனால்
அன்பை மறந்து கெட்டோம்
மடமைத் தனத்தை வென்றோம் - ஆனால்
மமதை நிறைந்து நின்றோம்
கொடுமை எதிர்த்து வந்தோம் - இன்று
கொள்கை உதிர்ந்து நொந்தோம்
உடைமை அடையப் பெற்றோம் - ஆனால்
உண்மைப் பிடிகள் அற்றோம். 1

பதவியை ஏசி வந்தோம் - இன்று
பதவிக்கே ஆசை தந்தோம்
உதவிகள் தேடிச் செய்தோம் - இந்நாள்
உதவியை நாடி வைதோம்
மதவெறி தீமை என்றோம் - நாமும்
மாறிப் பொறாமை கொண்டோம்
இதுவும் சுதந்தரந் தானோ? - இனி
என்ன இதந் தருமோதான்? 2

ஒற்றுமை வேண்டும் என்றோம் - இந்நாள்
உறவறத் தூண்டு கின்றோம்
வெற்றுரை விட்டு உழைத்தோம் - இன்று
வேற்றுமைப் பட்டு இளைத்தோம்
பெற்றசு தந்திரத்தை - நாம்
பேணி இதம் பெறத்தான்
நற்றவன் காந்தி சொல்லே - எந்த
நாளிலும் ஏந்தி நிற்போம். 3

குறிப்புரை:- மமதை - எனது என்கின்ற செருக்கு.

## *262. காந்தீயமே உலகைக் காக்கும்*

ஜயஜய காந்தியின் திருப்புகழ் பாடு
சகத்தினுக்(கு) அரும்பணி வேறிலை ஈடு



நயமிக மாந்தருள் நட்புகள் வளரும்
நகைமுகம் இனியசொல் எங்கணும் ஒளிரும்
தயவொடு தருமமும் தானமும் ஓங்கும்
தரித்திரக் கொடுமைகள் யாவையும் நீங்கும்
பயமற உலகினில் பற்பல நாடும்
பகையற வாழ்ந்திடல் அதனாற் கூடும். 1

இத்தரை மீதினில் இதுவரை தோன்றி
இகபரம் இரண்டிலும் சிந்தனை ஊன்றி
முத்தரும் யோகரும் முனிவரும் யாரும்
முற்றிய அறிவென முடிவுறக் கூறும்
சத்திய சாந்தச் சமரசம் மேவும்
சாதனை என்கிற போதனை யாவும்
புத்துயிர் பெற்றிடக் காந்தியும் பிறந்தார்
பூமியில் இந்தியத் தாய்மிகச் சிறந்தாள். 2

அன்புஅறம் பெருகிட அதுதுணை புரியும்
அரசியல் முறையிலும் அதன்பொருள் விரியும்
துன்பமுற் றவர்களின் துயர்களைக் குறைக்கும்
தூய்மையும் வன்மையும் தொழில்களில் நிறைக்கும்
இன்பமும் செல்வமும் பொதுப்பொருள் ஆகும்
இரப்பவர் என்பதும் இல்லாது போகும்
வம்பரும் வணங்கிடும் காந்தியின் போதம்
வளர்ப்பது வேதம் வாழ்க்கையின் கீதம். 3

குறிப்புரை:- வம்பரும் - பகைவரும், அயலாரும்; போதம் - அறிவு, ஞானம்; போதனை - தூண்டுகை.

## *263. எச்சரிக்கை*

எச்ச ரிக்கை எச்ச ரிக்கை
எச்ச ரிக்கை கொள்ளு வோம்
அச்ச மற்ற வாழ்வு காண
இச்சை யுற்ற யாவரும் (எச்) 1

கலக மற்று மனிதர் வாழக்
காந்தி மார்க்கம் ஒன்றுதான்
உலகினுக்குத் தேவை என்ற
உண்மை கண்டு கொண்டபின் (எச்) 2

காந்தி போதச் சேவை செய்யக்
கங்க ணத்தைப் பூண்ட நாம்
தேர்ந்த வாறு பேசிக் கொண்டு
நிலைகு லைந்து நிற்கிறோம். (எச்) 3

காந்தி காந்தி காந்தி என்று
காத டைக்கக் கூவினோம்
காந்தி சொன்ன சாந்தி மட்டும்
காதில் ஏற வில்லையே! (எச்) 4

சத்தியத்தை வாழ்ந்து காட்டும்
சாந்த மூர்த்தி காந்தியை
நித்தம் நித்தம் வாழ்த்தி விட்டு
நெஞ்சில் உண்மை பெற்றிலோம் (எச்) 5

கோப மற்ற காந்தி யாரைத்
தலைவ ராகக் கொண்ட நாம்
தாப மற்ற வார்த்தை பேசத்
தண்மை கூடப் பெற்றிலோம். (எச்) 6

பதவி யற்ற சேவை செய்யப்
பாடம் சொல்லித் தந்தநாம்
பதவி பற்றி உதவி யற்ற
பலவும் பேசித் திரிகிறோம். (எச்) 7

பூசை யோடு கோயி லுக்குள்
பூட்டி வைக்கும் சாமிபோல்
ஓசை யோடு காந்தி பொம்மை
ஊர்வ லங்கள் செய்கிறோம். (எச்) 8



பகைவருக்கும் நன்மை செய்யப்
பரிவு கற்றுக் கொண்ட நாம்
மிகவும் நல்ல நண்ப ரோ:டும்
பகைமை கொள்ள மிஞ்சினோம். (எச்) 9

அணுவை யும்பி எந்து அழிக்கும்
ஆயு தங்கள் வந்தபின்
முணுமு ணுத்துக் கனவிற் கூட
மூர்க்கப் பேச்சு செல்லுமோ? (எச்) 10

இந்த நாட்டின் ஞான மார்க்கம்
என்ற ஒன்றை விட்டுநாம்
எந்தக் குண்டைக் கொண்டு மற்ற
எவரை வெல்லப் போகிறோம்? (எச்) 11

*குறிப்புரை:- ஞானமார்க்கம் - அறிவுவழி; நித்தம் - நாள்தோறும்.*

## *264. காந்தி வழி*

கொல்லா(து) இருப்பது ஒன்றேதான்
கூறும் அகிம்சை என்றல்ல
எல்லாச் செயலிலும் நன்னோக்கம்
இணைந்த(து) அகிம்சை தன்னாக்கம்
பொல்லா தவர்க்கும் தீங்குஎண்ணாப்
புனிதம் அதனுடைப் பாங்குஎன்ன
சொல்லாற் சொன்னதைச் செய்தவனாம்
சொல்லரும் காந்திநம் மெய்த்தவனே. 1

புண்உண் டாக்கிப் போகாமல்
புரைதரும் எழுத்தால் ஏசாமல்
பண்ணும் காரியம் அனைத்திலுமே
பழுதற அருள்நெறி நினைந்தவனாம்.
அண்ணல் காந்தியின் புகழேதான்
அகிம்சை என்பதன் அகராதி

எண்ணில் அகிம்சை அறநெறியை
இவன்போல் நடத்திய பிறர் அறியோம். 2

கோபம் எதிலும் கொள்ளாது
கொண்டவர் தமையும் எள்ளாது
பாபம் என்றதைப் புரியாது
பகவான் சிந்தனை புரியாமல்
தீபம் போல்அருள் ஒளிவீசும்
திருந்திட வேநன் மொழிபேசும்
சாபம் நீக்கிய காந்திமகான்
சத்தியச் சுதந்தரச் சாந்தநெறி. 3

அச்சம் என்பதை அறியாது
ஆசை எதிலும் குறியாது
துச்சம் தனதுயிர் எனவெண்ணித்
துன்பம் நீக்கிடத் துணைபண்ணும்
பச்சைக் குழந்தையின் களிப்போடும்
பழுத்தநற் கிழவரின் விழிப்போடும்
விச்சை புரிந்தது காந்திமகான்
விடுதலை தரவரும் சாந்தவழி. 4

கோழைத் தனம்அதில் கிடையாது
கொள்கையில் சோர்வு அடையாது
வாழைக் கனியினும் மென்மையது
வயிரம் உருக்கெனும் வன்மையது
கூழைக் கும்பிடு போடாது
கொச்சை வெற்றிகள் நாடாது
ஏழை எளியவர் குறைநீக்கும்
எண்ணம் ஒன்றே அதன்நோக்கம். 5

விஞ்ஞா னத்தின் வேகத்தால்
விரிந்துள எந்திர மோகத்தால்
அஞ்ஞா னங்கள் மிதமிஞ்சி
அழித்திடு மோதமை என அஞ்சும்.



இஞ்ஞா லத்தின் துயர்நீக்க
இந்தியத் தாயின் பெயர்காக்க
மெய்ஞ்ஞா னத்தின் உருவேபோல்
மேவிய காந்தியின் வரவாலே 6

ஆயுத பலங்களில் மதிப்பிழந்தோம்;
ஆன்ம பலத்தின் துதிப்பறிந்தோம்;
தீயன போர்வெறி இழுக்குகளைத்
திக்குகள் யாவினும் முழக்கிடுவோம்.
தாயினும் இனியவன் இந்நாட்டின்
தந்தைநம் காந்தியின் வழிகாட்டும்
தூயநல் லருள்நெறி சூழ்ந்திடுவோம்;
துன்பம்இல் லாமல் வாழ்ந்திடுவோம். 7

*குறிப்புரை:- மேவிய - பொருந்திய; திக்குகள் - திசைகள்*

## *265. காந்தீயமும் தமிழனும்*

பரதேசி என்றுவந்தோர் யாரா னாலும்
பரிவோடே உபசரித்துப் பங்கும் தந்த
ஒருதேசம் உலகத்தில் இருக்கு மானால்
உண்மையது தமிழ்நாடு ஒன்றே ஆகும்;
வருதேச காலத்தின் வர்த்த மானம்
வகைவேறு காட்டுகின்ற வருத்தம் ஒன்றும்
கருதாமல் நமதுகுணம் கலைந்தி டாமல்
கருணையொன்றே பின்பற்றிக் கடமை செய்வோம். 1

தமிழ்நாட்டின் சரித்திரத்தை மனத்தில் வைத்துத்
தாராளத் தமிழர்களின் தன்மை காத்தே
அமிழ்தான தமிழ்மொழியில் அடங்கி யுள்ள
அகிலத்தின் நல்லறிவாம் அனைத்துங் கண்டு
நமதாகும் மிகச்சிறந்த நாக ரீகம்
நானிலத்துக்(கு) இப்போது நன்மை காட்ட
எமதாகும் மிகப்பெரிய கடமை யென்றே
எண்ணியெண்ணித் தீர்மானம் பண்ண வேண்டும். 2

பலபலவாம் தீர்மானம் படிக்க வேண்டா;
பகட்டாகப் பேசிமட்டும் பயன்வா ராதே;
உலகினுக்கு வேண்டுவதும் ஒன்றே ஒன்றாகும்;
உத்தமனார் காந்திவழி உபதே சந்தான்
கலகமின்றி மனிதர்எல்லாம் கலந்து வாழ்க
கருணைவழி காட்டஒரு கட்சி வேண்டும்;
இலகும் இந்தத் திருப்பணியை உலகுக்கு ஆற்ற
இந்தியரே மிகமிகவும் ஏற்ற மாவார். 3

*குறிப்புரை:- கடமை - கட்டுப்பாடு; இலகும் - விளங்கும்.*

## 266. சொன்னபடி செய்வோம்

வானிருந்து ஒருதேவன் வலிய வந்து
வகைகெட்ட மனிதருக்கு வழியைக் காட்டி,
தானிருந்து நமக்காகத் தவங்கள் ஆற்றித்
தருக்கான தூஷணைகள் பலவுந் தாங்கி
மோனநெறி தவறாத காந்தி யாக
முன்னிருந்து காரியங்கள் முயலும்வேளை
ஏனிருந்து நாம்பலவும் எண்ண வேண்டும்
என்னசொன்னார் காந்தியதைப் பண்ணு வோமே. 1

காந்தியர்க்குக் கைபோல உதவி நின்று
கடல்கடந்த ஆப்பிரிக்காக் கண்டந் தொட்டுச்
சேர்ந்திருந்து பாடுபட்டு செயமும் பெற்ற
சிறப்பெல்லாம் தமிழருக்கே மிகவும் சேரும்
நேர்ந்திருக்கும் நெருக்கடியை வெல்ல இன்றும்
தமிழர்துணை காந்தியவர் நினைப்பார் உண்மை
சோர்ந்துவிடக் கூடாது தமிழா! காந்தி
சொன்னபடி செய்வதுதான் உன்றன் ஜோலி. 2

## 267. காந்தீய சேவை

சாந்தி சாந்தி சாந்தி யென்று
சங்கு கொண்டே ஊதுவோம்;



சோர்ந்தி ருக்கும் உலகினுக்குச்
சுகமெ டுத்தே ஓதுவோம்.
மாந்த ருக்குள் கோப தாப
வாது சூது மாறவே
காந்தி சொன்ன மார்க்கம் இன்றிக்
கதிந மக்கு வேறிலை. 1

தமிழ ருக்குக் கருணை எண்ணம்
தாயின் பாலில் தந்தது
குமிழை யொத்த உயிரை நல்ல
கொள்கைக்கு ஈய முந்திடும்
அமுதம் ஒத்த காந்தி மார்க்கம்
தமிழ கத்தின் செல்வமாம்
நமது சேவை அதனை ஏந்தி
நாட்டில் எங்கும் சொல்வதாம். 2

## 268. தமிழா மறக்காதே!

காந்தியை மறக்காதே - தெய்வக்
கருணையைத் துறக்காதே!
சாந்தியை இழக்காதே - என்றும்
சத்தியம் அழிக்காதே. (காந்தி) 1

வள்ளுவன் திருக்குறளைத் - தந்து
வான்புகழ் பெருக்கடைந்த
தெள்ளிய அமிழ்தமெனும் - மொழியாம்
தெய்வத் தமிழ்மகனே! (காந்தி) 2

திருக்குறள் அறிவுஎல்லாம் - ஒன்றாய்த்
திரண்டுள நெறியெனவாம்
உருக்குறள் காந்திமகான் - தந்துள
ஒப்பரும் சாந்த வழி. (காந்தி) 3

அவ்வழி பற்றி நின்றோம் - உலகின்
அற்புத வெற்றி கண்டோம்.

எவ்வித இடைஞ்சலையும் - அதனால்
எளிதில் கடந்திடலாம். (காந்தி) 4

போர்வெறிக் கெடுபிடியால் - அஞ்சிப்
பூதலம் நடுநடுங்க
நேர்ந்துள சமயம்இதில் - காந்தியின்
நினைப்பே அமைதிதரும். (காந்தி) 5

ஒவ்வொரு காரியமும் - பகவான்
உணர்வொடு கோருவதாய்த்
தெய்விக பக்தியுடன் - தேசத்
திருப்பணி சக்திதரும். (காந்தி) 6

பிரார்த்தனை செய்யாமல் - காந்தி
பெயர்த்தடி வைப்பாரோ?
பார்த்தோம் கண்ணார - அதனால்
பயன்பெற எண்ணோமா? (காந்தி) 7

பக்தியில் குறைந்துவிட்டோம் - மோகம்
பதவியில் நிறைந்துவிட்டோம்
சத்திய சாந்தத்தில் - மிகவும்
சலிப்பெனச் சோர்ந்துவிட்டோம். (காந்தி) 8

வேறுள பேச்செல்லாம் - சற்றே
விலக்கிநம் மூச்செல்லாம்
தேறிய காந்திவழி - மீண்டும்
திட்முற ஆய்ந்திடுவோம். (காந்தி) 9

காந்தியம் நம்உடைமை - அதனைக்
காப்பது நம்கடமை
காந்தியம் வாழ்ந்துஒளிர - தெய்வக்
கருணையைச் சூழ்ந்திடுவோம். (காந்தி) 10



## *269. படிப்பினை*

காந்தியைப்போல் அதிகாலை விழிக்க வேண்டும்
கடவுள் என்ற கருணையைநாம் கருத வேண்டும்
காந்தியைப்போல் காற்றாட உலவ வேண்டும்
களைதீரக் குளிர்நீரில் முழுக வேண்டும்.
காந்தியைப்போல் அளவாகப் புசிக்க வேண்டும்
கண்டதெலாம் தின்னாமை காக்க வேண்டும்
காந்தியைப்போல் ஒழுங்காகத் திட்டம் போட்டுக்
காரியங்கள் செய்முறையில் கடமை வேண்டும். 1

சொன்னசொல்லை காந்தியைப்போல் காக்க வேண்டும்
சோம்பலதைக் காந்தியைப்போல் துறக்க வேண்டும்
மன்னவனோ பின்னெவனோ காந்தியைப் போல்
மனிதர்எல்லாம் சமம்என்று மதிக்க வேண்டும்
சின்னவரோ கிழவர்களோ எவரை யேனும்
சிறுமையின்றிக் காந்தியைப்போல் சிறப்புத் தந்தே
'என்னகுறை? எங்கு வந்தீர்?' எனக்கேட்டும்
இன்முகமாய்க் குலவுகின்ற எளிமை வேண்டும். 2

குற்றம்ஒன்று நாம்செயினும் காந்தி யைப்போல்
கூசாமல் மன்னிப்புக் கோர வேண்டும்;
மற்றவர்கள் பெருந்தவறு செய்திட்டாலும்
மன்னித்துக் காந்தியைப்போல் மறக்க வேண்டும்;
உற்றவர்கள் பிழையெனினும் ஒளித்தி டாமல்
ஓரம்இன்றிக் காந்தியைப்போல் உண்மை காட்டிச்
சற்றுமவர் துன்பமுறாச் சலுகை பேசிச்
சரிப்படுத்தும் காந்தியைப்போல் சகிப்பு வேண்டும். 3

எத்தனைநாள் கடிதங்கள் வந்திட் டாலும்
காந்தியைப்போல் சகிப்புஇன்றி எல்லோருக்கும்
நித்தம்நித்தம் தவறாத கடமை யாக
நிச்சயமாய்ப் பதில்எழுதும் நியமம் வேண்டும்

புத்திகெட்ட கேள்விசிலர் கேட்டிட் டாலும்
பொறுத்துவிடை காந்தியைப்போல் புகலவேண்டும்
பத்தியம்போல் பதற்றமுள்ள பாஷை நீக்கிப்
பரிவாகப் பணிமொழிகள் பதிக்க வேண்டும். 4

புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் சமமாய் எண்ணிக்
காந்தியைப்போல் பொதுநோக்கும் பொறுமை வேண்டும்
மகிழ்ச்சியிலே மதிமயங்கித் தடுமா றாமல்
காந்தியைப்போல் மனதுஅடக்கப் பயில வேண்டும்
வெருட்சிதனை வேரோடு களைந்து நீக்கக்
காந்தியைப்போல் விரதங்கள் பழக வேண்டும்
நிகட்சிகளைக் காந்தியைப்போல் நிறுத்துப் பார்த்து
நேர்மையுடன் குற்றம் எல்லாம் நீக்க வேண்டும். 5

வருகின்ற யாவருக்கும் எளிய னாகக்
காந்தியைப்போல் வரவேற்கும் வழக்கம் வேண்டும்
தருகின்ற சந்தேகம் எதுவா னாலும்
காந்தியைப்போல் தணிவாகத் தர்க்கம் செய்து
திரிகின்ற மயக்கத்தைத் தீர்த்து வைத்து.
திடமறிந்த வழிகாட்டும் தெளிவு வேண்டும்.
புரிகின்ற புத்திமதி எதுசொன் னாலும்
புண்ணின்றிக் காந்தியைப்போல் புகட்ட வேண்டும். 6

எத்தொழிலைச் செய்தாலும் காந்தியைப் போல்
எசமானர் கடவுளென எண்ண வேண்டும்
சத்தியத்தைக் கருணையுடன் சாதித் திட்டால்
சரியாக மற்றது எல்லாம் சாயும் என்ற
பத்தியத்தைக் காந்தியைப்போல் பார்த்துக் கொண்டால்
பாதகமோ சாதகமோ பலன்கள் எல்லாம்
நித்தியனாம் சர்வேசன் கடமை என்ற
நிசபக்தி காந்தியைப்போல் நினைக்க வேண்டும். 7

உழைப்பின்றிச் சுகம் விரும்பல் ஊனம் என்று
காந்தியைப்போல் எல்லோரும் உணர வேண்டும்



அழைப்பின்றித் துன்பமுற்றோர் அருகில் ஓடி
காந்தியைப்போல் அவர்க்குதவும் அன்பு வேண்டும்
பிழைப்பு இன்றிப் பரதவிக்கும் ஏழைமக்கள்
பின்பற்றிக் கைத்தொழிலின் பெருமை கொண்டு
களைப்பின்றிப் பசிதீரும் வழியைக் காட்டக்
காந்தியைப்போல் கைராட்டை நூற்க வேண்டும். 8

மனிதர்எல்லாம் ஒருகடவுள் மக்கள் என்று
காந்தியைப்போல் மனமார மதிக்க வேண்டும்
புனிதமுள்ள பரம்பொருளின் பெயரைச் சொல்லிப்
போர்மூட்டும் மதவெறியைப் போக்க வென்றே
அனுதினமும் தவங்கிடந்த காந்தி அண்ணல்
அனுஷ்டித்த சமரசத்தில் ஆர்வம் வேண்டும்
தனதுமதம் தனதுஇனம் மேல்என்(று) எண்ணும்
தருக்குகளைக் காந்தியைப் போல்தணிக்க வேண்டும். 9

சிறுதுளியும் வீண்போகாச் செலவு செய்யும்
காந்தியைப்போல் சிக்கனங்கள்பழக வேண்டும்
பிறிதுஒருவர் பாடுபட்டுத் தான்சு கிக்கும்
பேதைமையைக் காந்தியைப்போல் பிரிக்க வேண்டும்
நெறிதவறி வருகிறது சொர்க்க மேனும்
நீக்கிவிட காந்தியைப்போல் நேர்மை வேண்டும்
குறிதவறிப் போகாமல் ஒழுக்கம் காத்துக்
குணநலத்தின் காந்தியைப்போல் கொள்கை
வேண்டும். 10

வீரமென்றும் வெற்றியென்றும் கோப மூட்டி
வெறிகொடுக்கும் பேச்சையெல்லாம் விலக்கி எங்கும்
ஈரமுள்ள வார்த்தைகளை எவர்க்கும் சொல்லி
இனிமைதரும் காந்தியைப்போல்-இரக்கம் வேண்டும்
காரமுள்ள கடும்சொல்லைக் கேட்டிட் டாலும்
காந்தியைப்போல் கலகலத்துச் சிரித்துத் தள்ளிப்
பாரமற்ற மனநிலையைப் பாதுகாத்துப்
பகைமையெண்ணாக் காந்திமுறை பயில வேண்டும். 11

பொதுநலத்தைக் காந்தியைப்போல் பொழுதும் எண்ணிப்
பொறுப்புணர்ந்து சேவைகளைப் புரிய வேண்டும்
பொதுப்பணத்தைக் கண்போலப் போற்றி எந்தப்
பொழுதும் அதன் கணக்குகளைப் பொறித்து நீட்டித்
துதிப்பதற்கோ தூற்றுதற்கோ கொடுத்தி டாமல்
தூய்மையுள்ள அறங்களுக்குத் துணைமை யாக்கும்
மதிநலத்தை காந்தியைப்போல் மனதிற் காத்து
மக்களுக்குத் தொண்டுசெய்வோர் மலிய வேண்டும். 12

மதம்எனும்ஓர் வார்த்தையையே மறந்து வாழ்ந்தான்
மாசறியா அன்பினையே வளர்த்த வள்ளல்
சதம்எனும்ஓர் சத்தியத்தைச் சார்ந்தி டாத
சடங்குகளை விட்டுஒழிக்கச் சக்திதந்தான்
விதவிதமாய் உடைநடைகள் விரிந்திட்டாலும்
வேற்றுமையுள் ஒற்றுமையே விளக்கி வைத்தான்
இதம்மிகுந்த காந்திஎம்மான் சரித்தி ரம்தான்
இந்நாட்டில் வேதம்என இசைக்க வேண்டும். 13

ஜாதிகுலம் பிறப்புஎண்ணும் சபலம் விட்டோன்
சமதர்ம சன்மார்க்கம் சாதித் திட்டோன்
நீதிநெறி ஒழுக்கம்என்ற நிறைகள் அன்றி
நேர்மையற்ற தேர்வுகளை நீக்கி நின்றோன்
ஆதிபரம் பொருளான கடவுட்கு அல்லால்
அகிலத்தில் வேறுஎதற்கும் அஞ்சாச் சுத்தன்
சோதிபெருங் கருணைவள்ளல் காந்தி சொல்லே
சுருதியென மக்கள்எல்லாம் தொழுதல் வேண்டும். 14

மந்திரங்கள் ஏவாமல் மயங்க வைத்தான்!
மாயங்கள் புரியாமல் மலைக்கச் செய்தான்!
தந்திரங்கள் இல்லாமல் தலைவன் ஆனான்!
தண்டனைகள் பேசாமல் தணியச் செய்தான்!
அந்தரங்கம் ஒற்றர்இல்லா அரசன் ஆனான்!
அண்ணல்எங்கள் காந்திசெய்த அற்பு தங்கள்
எந்தஒரு சக்தியினால் இயன்றது என்றே
எல்லோரும் கூர்ந்தறிய எண்ண வேண்டும். 15



போனவிடம் எங்கெங்கும் புதுமை கொள்ளும்
புகுந்தமனை ஒவ்வொன்றும் பூரிப் பாகும்
கானகமும் கடிமனைபோல் களிப்புச் செய்யும்
கல்லணையும் மெல்லணையாய்க் கனிவு காட்டும்
ஈனர்களும் தரிசனத்தால் எழுச்சி கொள்வார்
இமையவரும் அதிசயித்தே இமைத்து நிற்பார்
தீனர்எல்லாம் பயம்ஒழிவார் தீரன் காந்தி
திருக்கதையே தெருக்கள்எலாம் திகழ வேண்டும். 16

பாடம்எல்லாம் காந்திமயம் படிக்க வேண்டும்
பள்ளியெல்லாம் காந்திவழி பழக வேண்டும்
நாடகங்கள் காந்திகதை நடிக்க வேண்டும்
நாட்டியத்தில் காந்திஅபி நயங்கள் வேண்டும்
மாடம்எல்லாம் காந்திசிலை மலிய வேண்டும்
மனைகள்எல்லாம் காந்திபுகழ் மகிழ வேண்டும்
கூடும்எல்லா வழிகளிலும் காந்தி அன்புக்
கொள்கைகளே போதனையாய்க் கொடுக்க வேண்டும். 17

கல்வியெல்லாம் காந்திமணம் கமழவேண்டும்
கலைகள்எல்லாம் காந்திகுணம் காட்ட வேண்டும்
சொல்வதுஎல்லாம் காந்திஅறம் சொல்ல வேண்டும்
சூத்திரமாய்க் காந்தியுரை துலங்க வேண்டும்
வெல்வதுஎல்லாம் காந்திவழி விழைய வேண்டும்
வேள்வியென்றே அவர்திருநாள் விளங்க வேண்டும்.
நல்வழிகள் யாவினுக்கும் நடுவாய் நின்ற
நாயகனாம் காந்திசொன்ன நடத்தை வேண்டும். 18

குண்டுபட்டும் திடுக்கடைந்து குலுங்கிடாமல்
கொள்கைதரும் ராமஜெபம் ஒன்றே கூறிக்
கொண்டமனச் சாந்திநிலை குறைந்தி டாமல்
கோணலுற்ற வாய்வெறித்துக் குளவி டாமல்
அண்டைஅயல் துணைதேடி அலண்டி டாமல்
அமைதியுடன் பரமபதம் அடைந்தார் காந்தி
கண்டதுண்டோ கேட்டதுண்டோ கதைதான் உண்டோ
கற்பனையாய் இப்படிஓர் கவிதான் உண்டோ? 19

காடுமலை குகைகளிலே தவங்கள் செய்து
காலன்வர அஞ்சாத கலைகள் உண்டு
மேடைகளில் உயிர்கொடுப்பேன் என்று சொல்லும்
மெலுக்கான வாய்வீரர் வெகுபேர் உண்டு
நாடுகெடும் மதவெறியை மாற்ற வேண்டிக்
குண்டுபட்டே நான்சாக வேண்டும் என்றார்.
ஈடுசொல்ல முடியாத தியாகம் செய்ய
இப்படியார் காந்தியைப்போல் உயிரை ஈந்தோர்? 20

சத்தியமே தம்முடைய தெய்வ மாகச்
சாந்தநிலை குறையாநல் தவசி காந்தி
இத்தகைய மரணமுற்றது ஏனோ என்றே
இறைவனுக்குச் சாபமிட்டுஇங்(கு) ஏங்கு கின்றோம்.
பக்தர்கள்தாம் கோருகின்ற படியே முத்தி
பாலிப்பது அன்றோஅப் பகவான் வேலை?
அத்தகைய சாவேதான் அடைய வேண்டி
ஆசைசொன்னார் காந்தியதை அமலன் ஈந்தான். 21

கூழும்இன்றிப் பரதவிக்கும் ஏழை மக்கள்
குறைதீர்த்துப் பொய்சூது கொலைகள் நீக்கி
வாழுமுறை இன்னதுஎன வாழ்ந்து காட்டி
வானுறையும் தெய்வமென எவரும் வாழ்த்த
மாளும்முறை இதுவெனவே மனிதர்போற்ற
மாநிலத்தில் கண்டறியா மரணம் ஏற்றான்
நாளும் அவன் பெரும்புகழை நயந்து போற்றி
நானிலத்தோர் நல்வாழ்வு நாட வேண்டும். 22

*குறிப்புரை:- வானுறையும் தெய்வம் - தேவர்கள்; காலன் - எமன்; அகிலத்தில் - உலகத்தில்; சபலம் - நிலையற்ற உள்ளம்; தீனர் - இரப்போர்.*

## *270. உலகம் வாழ்க!*

கவிபாடிப் பெருமைசெய்யக் கம்பன் இல்லை
கற்பனைக்குஇங்(கு) இலை அந்தக் காளிதாசன்



செவிநாடும் கீர்த்தனைக்குத் தியாகர் இல்லை
தேசீய பாரதியின் திறமும் இல்லை
புவிசூடும் அறிவினுக்கோர் புதுமை தந்து
புண்ணியமும் கண்ணியமும் புகழும் சேர்த்த
உவமானம் வேறுஎவரும் உரைக்க ஒண்ணா
உத்தமராம் காந்தியரை உவந்து பேச. 1

சொல்லுவது எல்லார்க்கும் சுலப மாகும்
சொன்னபடி நடப்பவர்கள் மிகவும் சொற்பம்
எல்லையின்றி நீதிகளை எழுது வார்கள்
எழுதியது பிறருக்கே தமக்குஎன்(று) எண்ணார்
தொல்லுலகில் நாமறிந்த தலைவர் தம்முள்
சொன்னதுபோல் செயல்முயன்றார் இவரைப் போல
இல்லையெனும் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி
இந்தியத்தாய் உலகினுக்கே ஈந்த செல்வம். 2

கொலைகளவு பொய்சூது வஞ்சம் ஆதிக்
கொடுமைகளே வித்தைகளாய் வளர்த்துக் கொண்டு
தலைசிறந்த பிறவியென்னும் மனித வர்க்கம்
சண்டையிட்டு மடிவதனைத் தடுக்க வேண்டி
உலகிலுள்ள மனிதர்எல்லாம் கலந்து வாழ
ஒருவராய்த் தவம்புரிய உவந்த காந்தி
விலைமதிக்க முடியாத செல்வம் அன்றோ?
வேறுஎன்ன நாட்டிற்குப் பெருமை வேண்டும்? 3

புத்தர்பிரான் பெருந்துறவைப் படிக்கும் போதும்
போதிமர நிழல் ஞானம் நினைக்கும் போதும்
கர்த்தர்பிரான் ஏசுமுன்னாள் சிலுவை தன்னில்
களிப்போடே உயிர்கொடுத்த கதையைக் கேட்டும்
சத்துருவாய்ச் சொல்லவந்தோர் தமையும் காத்த
தயைமிகுந்த நபிகளின்பேர் சாற்றும் போதும்
உத்தமரைக் கண்டோமா என்னும் ஏக்கம்
ஒவ்வொருநாள் நமக்குஎல்லாம் உதிப்பது உண்டே! 4

"குத்தூட்டி ஒருபுறத்தில் குத்த வேண்டும்
கோடாரி ஒருபுறத்தைப் பிளக்க வேண்டும்
ரத்தம்வரத் தடியால் ரணமுண் டாக்கி
நாற்புறமும் பலர்உதைத்து நலியத்திட்ட
அத்தனையும் நான்பொறுத்தே அகிம்சை காத்தும்
அனைவரையும் அதைப்போல நடக்கச் சொல்லி
ஒத்துமுகம் மலர்ந்(து) உதட்டில் சிரிப்பி னோடும்
உயிர்துறந்தால் அதுவேஎன் உயர்ந்த ஆசை" 5

என்றுரைத்த காந்தியைநாம் எண்ணிப் பார்த்தால்
எலும்புஎல்லாம் நெக்குநெக்காய் இளகும் அன்றோ?
நின்றுரைக்கும் சரித்திரங்கள் கதைகள் தம்மில்
நினைப்பதற்கும் இச்சொல்லை நிகர்வ துண்டோ?
கன்றினுக்குத் தாய்போல உயிர்கட் காகக்
கரைந்துருகும் காந்தியைநாம் நேரில் கண்டோம்
இன்றுலகில் துயர்நீக்கச் சிறந்த மார்க்கம்
எடுத்துரைக்கக் கொடுத்துவைத்தோம் இருந்து கேட்க. 6

கவிராசர் கற்பனைக்கும் எட்டாத தீரம்
கடல்என்றால் குறைவாகும் கருணை வெள்ளம்
புவிராசர் தலைவணங்கும் புனித வாழ்க்கை
பொறுமைஎனும் பெருமைக்குப் போற்றும் தெய்வம்
தவராச யோகியர்கள் தேடும் சாந்தி
தளர்வாகும் எழுபதுடன் ஒன்பது ஆண்டில்
யுவராச வாலிபர்க்கும் இல்ல ஊக்கம்
ஒப்புஅரிய காந்தியரால் உலகம் வாழ்க! 7

## *271. சங்கநாதம் கேட்குது*

சாந்த காந்தி சத்தி யத்தின்
சங்க நாதம் கேட்குது!
ஆய்ந்து பார்க்கத் தேவை யில்லை
அதிலிருக்கும் நன்மையை



மாந்த ருக்குள் சமுக வாழ்வு
மாறும் இந்தப் பொழுதிலே
சோர்ந்தி டாமல் நமது நாட்டை
துயில்எ ழுப்பும் ஓசையாம். 1

இடிஇ டித்து மின்னல் மின்னி
இருள் கவிந்தே எங்கணும்
கிடுகிடுத்து உலகம் எங்கும்
கிலிபி டித்த வேளையில்
குடுகு டுத்த கிழவர் காந்தி
குமரர் நாணக் கூவினார்
துடிது டித்து உண்மை போற்றும்
தொண்டர் யாரும் கூடுவோம். 2

வீடு பற்றி வேகும் போது
வீணை மீட்டும் வீணர்போல்
நாடு முற்றும் புதிய வாழ்வை
நாடு கின்ற நாளிலே
பாடு மிக்க சேவை விட்டுப்
பதவி மோகம் பற்றினால்
கேடு என்ற எச்ச ரிக்கை
கிழவர் காந்தி கூக்குரல். 3

கடல்க லங்கப் புயல்அ டித்துத்
தத்த ளிக்கும் கப்பலின்
திடமி குந்த தெளிவு கொண்ட
திசைய றிந்த மாலுமி
இடம றிந்து காலங் கற்ற
இந்த நாட்டின் மந்திரி
கடன றிந்த காந்தி போதம்
கவலை போக்கும் மந்திரம். 4

கர்ம வீரன் காந்தி என்னும்
காள மேகக் கர்ஜனை

தர்ம மான மழைபொ ழிந்து
தரணி முற்றும் குளிரவே.
வர்ம மான வார்த்தை யாவும்
வாது சூது செய்திடும்
மர்ம மான எதையும் விட்ட
ராச மார்க்க மதிதரும். 5

வீரம் என்றும் சூரம் என்றும்
வெறிகொ டுக்கும் பேச்சினால்
காரம் உள்ள வார்த்தை யாவும்
யாரை என்ன செய்திடும்?
தீரர் ஞான காந்தி சங்கம்
திசைமு ழங்கக் கேட்குது
சேர வாரும் மனித வாழ்க்கை
சீர்தி ருத்த வேண்டுவோர். 6

குறிப்புரை:- மாலுமி - கப்பலை இயக்குபவன்; பாடு - துன்பம்; புயல் - காற்று; நாடுமுற்றும் - நாடுதழீஇய; கவலை - மனத்துயர்.

# XI. பல்சுவைப் பாடல்கள்

## *272. பகவத் கீதையின் சிறப்பு*

பகவத் கீதையைப் படித்திடுவோம்
பகவான் அருள்பெறத் துடித்திடுவோம்.
மிகவும் நல்லறி வுண்டாகும்
மீறிய ஆசைகள் துண்டாகும். 1

நால்வகை யோகமும் ஆய்ந்திடலாம்
நமக்குளது சரியெனத் தேர்ந்திடலாம்
நூல்களின் எல்லையும் அதுவேயாம்
நுண்ணறிவு என்பதும் இதுவேயாம். 2

'நான்' எனும் அகந்தையைப் போக்கி விடும்'
'நமன்'எனும் பயத்தையும் நீக்கிவிடும்
'ஏன்? எது? என்கிற விவஸ்தையும்
'எப்படி' என்பதன் அவஸ்தைஅறும். 3

கவலையை மாற்றிட மந்திரமாம்
கடமையை உணர்ந்திடத் தந்திரமாம்
அவலமும் அச்சமும் அணுகாவாம்
அஞ்ஞா னங்களும் முணுகாவாம். 4

சத்தியம் அறிந்திட வழிகாட்டும்
சாந்தியும் நிறைந்திட ஒளிகூட்டும்
நித்தியப் பொருளதன் நிலைதெரியும்
நிம்மதி அடைகிற கலைபுரியும். 5

ஐயமும் திரிபும் மறைந்துஒழியும்
ஆசையும் வெறுப்பும் குறைந்துஅழியும்
வையமும் வானமும் நமதாகும்
வறுமையும் செல்வமும் சமமாகும். 6

புலன்களை ஆண்டிடச் சக்திவரும்
பொய்களைத் தாண்டிடப் புத்திதரும்
நலன்களைத் தனக்கே கோராது
நாட்டினுக்கு உழைத்திடச் சோராது. 7

தேவைகள் யாவும் சுருங்கிவிடும்
தெய்வ சிந்தனை நெருங்கிவரும்
சேவைகள் செய்திடப் பணிவுதரும்
சினம்முதல் தீமைகள் துணிவுபெறும். 8

வேலைகள் செய்திடத் தயங்காது
வீணர்கள் சுகம்பெற மயங்காது
கூலியைப் பெரிதென நாடாது
குறைந்திட நேரினும் வாடாது. 9

துன்பமும் இன்பமும் மருட்டாது
தூரமும் காலமும் வெருட்டாது
அன்புடை வாழ்வே குறியாகும்
அருளை அறிந்திட நெறியாகும். 10

எல்லா உயிர்களும் சுகம்பெறவே
எண்ணுதல் ஒன்றே அகம்பெறுவோம்
வல்லான் நினைவே சூழ்ந்துவிடும்
வாய்ந்திடும் பணிசெய்து வாழ்ந்திடுவோம். 11

## *273. பெரியோர்*

மடங்கிய பயிர்கள் எல்லாம்
மழைவர நிமிர்ந்து நீளும்;
மருண்டிடும் குழந்தை பெற்ற
மாதினைக் கண்டு தேறும்;
ஒடுங்கிய தேகம் தக்க
உணவினால் உறுதி கொள்ளும்;
ஒளிந்திடும் நாகம் நல்ல
ஓசையால் வெளிவந்(து) ஆடும்;



அடங்கிடுந் தேகந் தன்னில்
அவித்தையில் அழுந்தும் ஆன்மா
அன்பின்நல் லுருவ மாய
அறிஞரைக் கண்ட போது
முடங்கிய மயக்கம் நீங்கி
முன்னைய உணர்ச்சி ஓங்க
மொய்சுடர்க் கொழுந்து போல
முடுகிடும் மேலே அன்றோ? 1

அருமறையும் பலகலையும் உலகுக்(கு) ஈந்தும்
அறுசமயப் பலவழியை அடக்கி யாண்ட
உரிமையுடன் பிறநாட்டார் உவந்து போற்ற
ஊழிதொறும் புதிதாகும் உயர்வு தாங்கும்
பெருமைநமைப் பெற்றெடுத்த இந்த நாடு
பெற்றதுஎன நாமடைந்த பெரியபேறு
மருவகற்றி அருள்சுரக்கும் ஞானந் தோன்றி
மனத்துறவு பூண்டவர்கள் மகிமையேயாம். 2

## *274. உலகம் வாழ்த்தும் வெள்ளிவிழா*

அமரரும் அறிந்தி டாத
அன்பையே அறமாய்க் கொண்டு
அருள்எனும் பொருளை நாடும்
அறிவையே நிறையப் பேசிச்
சமரசம் உணரும் சாந்த
சத்திய நெறியே காட்டிச்
சச்சர(வு) இல்லா இன்பச்
சமுதாயம் வளரச் செய்யும்
தமிழ்மொழிப் பண்பைக் காக்கும்
தன்மையாற் சிறப்புற்(று) ஓங்கித்
தக்கவர் புகழும் 'ஈழ
கேசரி' தனைநாம் மெச்சி

விமலனைப் பணிந்து வெள்ளி
விழாவினுக்கு ஆசி கூறி
வீறுடன் என்றும் நின்று
விளங்கிடு வாழ்த்து வோமே. 1

கொள்கையிற் குறைந்தி டாமல்
குணங்களைப் புகழ்ந்து கூறிக்
குற்றங்கள் யார்செய் தாலுங்
கடிந்திடக் கூசி டாமல்
வெள்கிடத் தக்க(து) என்னும்
எதனையும் வெளியி டாமல்
விருப்பொடு வெறுப்புக் காக
வீணுரை விரித்து இடாமல்
தெள்ளிய சொற்கள் சேர்த்துத்
தெளிந்துரை தீட்டி நாட்டின்
சேமமே கருதும் 'ஈழ
கேசரி' திறத்தை யாரும்
உள்ளுற புகழ்ந்து பேசி
உவப்புறத் தகுந்த தாக
உற்றதாம் இந்த வெள்ளி
விழாவினை உலகம் வாழ்த்தும். 2

*குறிப்புரை:- 'ஈழகேசரி' - இலங்கையிலிருந்து வெளிவரும் இதழ்; வெள்கி - வெட்கப்படத்தக்க.*

## *275. கவிஞன் கனவு*

கவிபாடிக் கவிபாடிக்
காலம் கழிப்பேன்
கவலைகள் யாவையும்
விட்டே ஒழிப்பேன்
புவிநாடும் இன்பத்தில்
நிம்மதி இல்லை
பூமியினுக்(கு) அப்பாலுள்ள
இன்பங்கள் சொல்லும். 1



கண்ணுக்குத் தெரியாத
காட்சிகள் காண்பேன்
காதுக்குக் கேளாத
கீதங்கள் கேட்பேன்
எண்ணிக்கை இல்லாத
இன்பங்கள் நுகர்வேன்
எல்லாரும் இன்புற
எங்கெங்கும் பகர்வேன். 2

மூக்குஎன்றும் முகராத
வாசங்கள் போப்பேன்
முன்னென்றும் தெரியாத
நன்னயம் பூப்பேன்
நாக்குஎன்றும் அறியாத
நற்சுவை புசிப்பேன்
நலிசெய்யும் பசியற்ற
நாட்டிடை வசிப்பேன். 3

உடலத்தில் புதுப்புதிதாய்
உணர்ச்சிகள் பொங்கும்
உள்ளத்தில் உண்மையும்
ஞானமும் தங்கும்
சடலத்தைப் பெரிதென்னும்
உலகத்தை மறப்பேன்
சத்திய நித்திய
வானத்தில் பறப்பேன். 4

ஆயிரம் ஆயிரம்
ஆண்டுகள் முன்னே
அப்படி யேபல
ஆண்டுகள் பின்னே
போயின வருவன
காட்சிகள் தெரியும்
புதுமையிற் குறையாமல்
என்முன்னே விரியும். 5

தூரமும் காலமும்
துச்சங்கள் ஆகும்
துன்பமும் இன்பமும்
தொண்டுசெய்து ஏகும்
நேரமும் கிரகம்என்
நினைவின் படிக்கே
நின்றுஎன்றன் ஏவலைச்
செய்து முடிக்கும். 6

## *276. தமிழ்நாட்டின் வரவேற்பு*

### ஜவஹர்லால் நேரு

ஒன்றாக நல்லகுணம் கொலைசெய் யாமை
ஒத்தடுத்த மற்றொன்று பொய்சொல் லாமை
என்றுஓதும் தமிழ்வேதம் இசைத்த ஞானம்
என்றென்றும் எவ்வெவர்க்கும் எதற்கா னாலும்
நன்றாகும் என்பதற்கே நடந்து காட்டி
நாயகனாம் காந்திமகான் நயந்த மார்க்கம்
குன்றாமல் காத்துவரும் ஜவஹர் லாலைக்
குதூகலமாய் வரவேற்போம் வாழ்த்துக் கூறி. 1

### இராசேந்திர பிரசாத்

பதவிதரும் சிறப்புகளில் மயங்கி டாமல்
பகட்டான சுகவாழ்வில் முயங்கி டாமல்
நிதநிதமும் காந்திமகான் நினைவே பேசி
நீதிநெறி தவறாத நிலைமை காக்க
உதவிவரும் நல்லறிவின் உருவம் போல்வான்
உத்தமனாம் ராசேந்திரப் பிரசாத் எங்கள்
இதயமுறும் திருநாட்டின் அதிபன் தன்னை
இன்பமுடன் வரவேற்போம் இசைகள் பாடி. 2



### தேபார்

சொந்தநலம் பலகாலும் துறந்து நாட்டின்
சுதந்தரப்போர் காந்திவழி தொடர்ந்த தூயன்
இந்தியத்தாய் பெருமைபெறும் பணிகளுக்கே
எப்போதும் ஓசையின்றி உழைக்கும் தொண்டன்
எந்தஒரு காரியமும் எங்கா னாலும்
ஏழை மக்கள் பொது நலமே எண்ணிச் செய்வோன்
அந்தப் பெருங் குணமிகுந்த அதனால் காங்கிரசு
அரியனையில் அமரவரும் தேபார் வாழ்க. 3

குறிப்புரை:- *அரியணை - சிங்காசனம். மேலே கூறிய பாடல்கள் 1956இல் சென்னையைச் சார்ந்த ஆவடியில் கூடிய காங்கிரஸ் மகா சபைக்கு வந்த தலைவர்களுக்கு அளித்த வரவேற்புப் பாடல்கள். குதூகலமாய் - மகிழ்ச்சியாய்.*

## *277. காதலே கடவுள்*

விடிதல் என்று சொலும் காலம் - கீழ்
வெளிச்சம் காணுவது போலும்
அடவி என்ற சொல்லாலே - மர
அடர்த்தி தோன்றுவது போலே
புடைவை என்று சொலும் போது - மனம்
புகுந்து நிற்கும்ஒரு மாது
கடவுள் என்ற பெயர் சொன்னால் - அதில்
காதல் சக்தி வரும் முன்னால். 1

காதல் இன்றி உலகில்லை - இதைக்
கண்டு கொள்ளஏன் தொல்லை
தீது செய்துழலும் காமம் - காதல்
தெய்வசக்தி தரும் நாமம்.
வாது பேசுவது மடமை - அதன்
வாய்மை கண்டறிதல் கடமை

ஏது துன்பம்துய ரேனும் - காதல்
இசைந்த எல்லைவர நாணும். 2

கணுவி னோடுகணுக் காதல் - ஒரு
கரும்பு நல்ல சுவை ஆதல்
கணவ னோடுபெண் காதல் - வீடு
கலக மற்றதென ஓதல்
அணுவி னோடுஅணுக் காதல் - தான்இவ்
வகில லோகநிலை ஆதல்
பணிவி னோடு அதைப் பார்க்கின் - அதில்
பரமன் அருள்விளங்கும் யார்க்கும். 3

## *278. திக்குத் தெரியவில்லை*

திக்குத் தெரியவில்லை - என்ன
தீவினை செய்தேனோ!
மக்கள் படுந்துயரைச் - சற்றும்
மாற்ற வகையறியேன்! 1

கூவும் கருங்குயிலே! - ஒரு
குறிசொல்ல மாட்டாயா?
தேவன் அருள்வருமா? - சுற்றும்
தீமைகள் தீர்ந்திடவே! 2

பாடும் பசுங்கிளியே! - என்றன்
சாதகம் பார்த்துச் சொல்லு!
நாடும் சுதந்தரத்தை - எந்த
நாளில் அடைந்திடுவேன்? 3

செய்கை சுறுசுறுப்பாம் - சிறு
சிட்டுக் குருவிகளே!
வைவதை விட்டுவிட்டு - ஒரு
வாழ்த்துரை சொல்வீரோ? 4



காதலை இன்னதென்று - செய்து
காட்டும் புறாமணியே
வேதனைப் புல்லடிமை - விட்டு
விடுதலை விடிவது எப்போ? 5

கூடும்கட் டத்தெரியீர் - ஆனால்
கொஞ்சுங் குரங்குகளே!
நீடும் அறிவிருந்தும் - உங்கள்
நிம்மதி பெற்றிலன் நான். 6

ஆடும் களிமயிலே! - ஒரு
ஆரூடம் சொல்லுவையோ?
தேடும் உரிமைகளை - இந்தத்
தேசம் அடைந்திடுமா? 7

காகம் வழிவிடுமா? - நல்ல
கருடன் வலம் வருமா?
நாகம் சகுனமுண்டா? - ஒரு
நரியேனும் முன்வருமா? 8

என்று மனந்தளர்ந்தே - நான்
ஏங்கித் தவித்து நின்றேன்
வென்றி தருந்துணைபோல் - ஒரு
விண்ணொலி பெண்குரலாய்; 9

ஞானக் குலத்தில் வந்தாய் - பல
நற்றவம் உற்றவன்நீ
ஏன்உனக் கிந்தமதி? - விட்டே
எழுந்திரு என்மகனே! 10

வெள்ளைத் திரைமேலே - படம்
வீசும் நிழல்போலே
துள்ளிய துன்பம்எல்லாம் - கணம்
தோன்றி மறைவ(து) அன்றோ? 11

இன்னும் துயர்வரினும் - உன்றன்
இனமுறை மாறாதே!
சின்னத் தனங்களிலே - என்றும்
சிக்கிக்கொள் ளாதேநீ. 12

இம்சை புரிந்தவர்கள் - அந்த
இம்சையி னால்அழிவார்!
வம்ச குணம்உனதாம் - சாந்த
வாய்மை மறவாதே. 13

சண்டைகள் விட்டுஒழியும் - பல
சச்சர வும்போகும்!
அண்டி உனைவணங்கிப் - பலர்
அமைதி அறிந்திடுவார். 14

அந்தக் குரல் அறிந்தேன்; - அதுவே
அன்னையின் பொன்மொழிதான்!
சிந்தை தெளிந்துவிட்டேன் - தெய்வ
சிந்தனை செய்திருப்பேன். 15

## 279. சண்டமாருதம்

சண்ட மாருதம் வருகுதடா!
சமரச உணர்ச்சிகள் பெருகுதடா!
கண்டு மாநிலம் கலங்கிடினும்
கற்றவர் உள்ளம் துலங்கிடுமே. 1

பேரைக் கேட்டால் பயமாகும்!
பெறுகிற நன்மைகள் நயமாகும்!
ஊரைக் கேட்டால் தெரியாது!
உள்ளம் சொல்லும் சரியாக. 2

காற்றோடு மழையும் இடியிடிக்கும்!
கடும்போர் நடந்திடும் வெடிவெடிக்கும்!
மாற்றிடும் உலகின் வாழ்வுகளை!
மறைத்திடும் ஏற்றத் தாழ்வுகளை. 3



பள்ளமும் மேடும் சமனாகும்!
பாபங் களுக்கும் எமனாகும்!
கள்ளமும் சூழ்ச்சியும் கரைந்தோடும்!
கருணையின் வெள்ளம் நிறைந்தோடும். 4

கலைகளும் கவிதையும் புதுமைபெறும்!
கஷ்டமும் சுகங்களும் பொதுமையுறும்!
நிலமிசை நீதியை நிலைநாட்டும்!
நெறிமுறை புதுப்புல் தலைநீட்டும். 5

சரித்திர வெள்ளித் திரைமேலே
சமுத்திர அலைகள் திரள்போலே
விரித்திடும் புதுப்புதுக் காட்சிகளை
விளக்கிடும் இயற்கையின் ஆட்சியினை. 6

மலைகளும் மரங்களும் சாய்ந்து விடும்!
மனிதருள் பிணக்குகள் ஓய்ந்துவிடும்!
தலைவிரித்(து) ஆடிய அகந்தையெலாம்
தரையொடு மண்ணில் புகுந்து ஒழியும். 7

சக்திக் கடவுளின் பெருமூச்சே
சண்டமாருதம் எனலாச்சே
பக்திக்குரியவர் அஞ்சாரே!
பாதகர் யாரும் மிஞ்சாரே. 8

## 280. புத்தாண்டு வரம்

**(வேலூர்ச் சிறையில் கவிஞர் ஆங்கில வருடப் பிறப்பன்று பாடியது)**

எண்ணிலா ஆண்டு கண்டுஇங்கு
இருந்தவள் எனினும் இன்னும்
கண்ணினுக்(கு) இனிய தூய
கன்னியாய் என்றும் நின்று
தண்ணொளி அழகு காட்டும்
தமிழகத் தாயே! இன்றுன்

புண்ணியம் நிறைந்த வாழ்வில்
புதியதோர் ஆண்டு பூண்டாய். 1

காங்கிரஸ் காரர் யாரும்
காந்தியெம் அடிகள் ஆதி
ஆங்கிலர் சிறையுற் றுள்ள
அருந்தவம் கிடக்கும் இந்நாள்
ஆங்கி ரசமென்று ஓதும்
ஆண்டினைப் பூண்டு வந்தாய்
பாங்கியே! இந்தக் கோலம்
பார்த்திலம் முன்னம் நாங்கள்! 2

புதியஇவ் வாண்டில் மிக்க
புதியதோர் அழகு பூண்டாய்!
நிதியமும் இழந்தது எல்லாம்
நீயடைந் திட்டாய் போல
விதியினைக் கடந்த ஞான
வித்தகர் தெளிவு பூண்டாய்
புதியது புதியது அம்மா
புகுந்தஉன் கோலம் இன்று! 3

வாடினை இருந்த மேனி
வளமிகும் வடிவு காட்டிக்
கூடின புருவம் இன்று
குளிர்ந்தன களிக்கக் கண்டோம்!
பாடின இனிய கீதம்
பற்பல ஆண்டுக்(கு) இப்பால்
ஆடினை அடையா ளத்தை
அறிந்திலம் முதலில் நாங்கள். 4

முன்னம்நீ எம்பாற் கொண்ட
முணுமுணுப்பு இன்று காணோம்!
அன்னைநீ முன்னம் காட்டும்
அருவருப்பு இன்று காணோம்!



பின்னும்நீ எம்பாற் பேசும்
பிணக்கினைக் காணோம் இந்நாள்
என்னவோ புதுமை யாக
இருக்கிறது எங்கள் தாயே! 5

வீட்டினில் இருந்த போது
வெகுண்டுஎமை மருண்டு பார்ப்பாய்!
கூட்டினிற் கிடக்கும் இந்நாள்
குளிர்ந்தனை சிரித்து வந்தாய்!
நீட்டினை முடங்கி நொந்த
நின்னுடை அங்கம் பூத்துக்
காட்டினை என்றுங் காணாக்
கட்டழ குடனே வந்தாய். 6

எண்ணெயும் மறந்த உன்றன்
இருண்டிடை சுருண்ட கூந்தல்
வண்ணமாய் வாரி மிக்க
வாசனை மலருஞ் சூடித்
திண்ணமாய்ச் சத்திக் கான
திலகமும் தீட்டி யுன்றன்
கண்ணியல் மையினோடு
கலவையின் மையுந் தீட்டி. 7

பற்பல ஆண்டின் முன்னே
வெறுத்தஉன் பணிகள் எல்லாம்
அற்புத உன்றன் மேனி
அழகுற அணிந்தாய் இன்று;
கற்பனை கடந்த வேலை
கதிர்விரி உடையும் பூண்டாய்;
நிற்பது கண்டோம்; என்ன
நினைந்துஇவை புனைந்தது அம்மா! 8

புத்தொளி புனைந்தே எம்முன்
புத்துயிர் அளிக்க வந்தாய்;

இத்தினம் உன்றன் ஆண்டு
விழாவினில் எங்கள் தாயே!
பத்தியுன் பாதம் போற்றிப்
பணிந்துனை வேண்டுகின்றோம்
உத்தமீ எங்கட்கு இந்நாள்
ஒருவரம் தருதல் வேண்டும்: 9

அடிமையின் வாழ்வு நீங்க
ஆண்மையும் அறிவும் வந்து
குடிமையின் முறையும் சொந்தக்
கோல்நெறி அரசும் கொண்டு
படிமிசை எவர்க்கும் அஞ்சிப்
பணிந்திடாப் பலமும் பற்றி
விடுதலை அடையத் தேசம்
வழிவிட வேண்டும் தாயே. 10

சோறிலை என்பார் இன்றித்
துணியிலை என்றும் உண்ணும்
நீரிலை என்றும் நிற்கும்
நிழலிலை என்றும் சுற்றத்
தாரிலை என்பா ரோடுந்
தாழ்ந்தவர் என்பார் இன்றிப்
பாரினில் எவர்க்கும் நாங்கள்
பகையிலை என்றும் வாழ்வில். 11

ஏழையென்று எவரும் இன்றி
எளியர்என் பாரும் இன்றிக்
கோழைஎன்(று) உரைக்க ஆண்மை
குறைந்தவர் ஒருவர் இன்றி
மேழியும் தொழிலும் தந்த
மேதினிப் பொருள்கள் யாவும்
வாழிய எவர்க்கும் கிட்டி
வருந்துவார் எவரும் இன்றி. 12



எண்ணெழுத்து இரண்டும் கல்லார்
இல்லைஇந் நாட்டில் என்னப்
பெண்ணினோ(டு) ஆணும் ஒத்துப்
பிணக்கிலாத் தம்தம் வாழ்வை
எண்ணிய இறைவன் ஆணைக்(கு)
இடர்இலா ஒழுங்கில் ஏந்தும்
புண்ணிய வாழ்விற்கு ஆசி
புரிந்திடல் வேண்டுந் தாயே! 13

என்னுடை நாடுஇந் நாடாம்
என்றுஇதில் பிறந்த யாரும்
தன்னுடை அறத்தைச் செய்யத்
தடுப்பவர் யாரும் இன்றி
'மன்னவன் நானே' என்று
மனங்களித்து இனிது வாழ
இன்னவை வரமே வேண்டி
இணையடி பணிந்தோம் தாயே! 14

குறிப்புரை:- மேதினிப்பொருள் - உலகப் பொருள்; பாரினில் - உலகினில்; வெகுண்டு - கோபித்து; புருவம் - நெற்றிப் புருவம்.

## *281. தாய் வரம் கொடுத்தல்*

தந்தனன் இவ்வரம்
தந்தனன் இவ்வரம்
தந்தனன் என்மகனே!
வந்தது வாழ்வு இனி
வெந்தது தீவினை
வாழ்ந்தனை உன்செயலால்! 1

நாட்டைஇவ் வடிமையின்
மீட்டிடு வேன்என்று
நாட்டினை தவக்கொடியே;

கேட்டு மகிழ்ந்(து) உனைப்
பார்த்துப் புகழ்ந்திடக்
கிட்டினன் இங்கு வந்தேன். 2

தருமம் உணர்ந்தனை
கருமம் அறிந்தனை
தாயென நீநினைந்தாய்;
பெருமை அளித்தனை
சிறுமை ஒழித்தனை
பெற்ற மனங்களித்தேன். 3

அச்சம் அகற்றினை
ஆண்மை பெருக்கினை
ஆனந்தம் பொங்குதடா!
இச்சை அதன்படி
யாவும் உனக்குஇனி
இல்லறம் தங்குமடா! 4

தீயவை விட்டனை
தூயவைத் தொட்டனை
தெளிவடைந் தாய்மகனே!
போயின என்னுடை
மனக்குறை யாவையும்
புத்தொளி பூண்டு விட்டேன்! 5

உன்னை உணர்ந்தனை
என்னை உவந்தனை
உண்மை அறிந்துவிட்டாய்!
இன்னும் எனக்குஇனி
என்ன மனக்குறை?
இன்னல் மறந்துவிட்டேன்! 6

என்னுடை நாடெனச்
சொன்னஉன் சொற்களில்
என்மனம் குளிர்ந்த தடா!



பின்னிய துயர்விடப்
பொன்னொளி அணிமணி
பூண்டு மகிழ்ந்த தடா! 7

சத்தியம் உன்னுடைச்
சித்தம் உதித்தது
சஞ்சலம் ஏன்மகனே?
பொய்த்தவர் வஞ்சமும்
புகுந்தவர் மோசமும்
போவது காண்மகனே! 8

சாந்தி பிறந்துயர்
காந்தி விரிக்குது
சங்கடம் தீர்ந்ததடா!
போந்தது புத்துயிர்
புகுந்தது தைரியம்
புதுவரு டத்தோடே. 9

திங்கள்முன் மாரியில்
பொங்கிடும் பால்இனி
தேசம் செழிக்குமடா!
மங்களம் மங்களம்
மங்களம் உனக்கு இனி
மகனே எழுந்திரடா! 10

*குறிப்புரை:-* இன்னல் - துன்பம்; பூண்டு - அணிந்து; சாந்தி - அமைதி; மங்களம் - அழகு; உவந்தனை - மகிழ்ந்தனை; இச்சை - விருப்பம்.

## *282. அவள்*

**('அவளும் அவனும்' என்னும் நூலினின்று தொகுக்கப்பெற்றது)**

'மான்'என அவளைச் சொன்னால்
மருளுதல் அவளுக்கு இல்லை.

'மீன்விழி உடையாள்' என்றால்
மீனிலே கருமை இல்லை
'தேன்மொழிக்(கு) உவமை' சொன்னால்
தெவிட்டுதல் தேனுக்கு உண்டு;
'கூன்பிறை நெற்றி' என்றால்
குறைமுகம் இருண்டு போகும். 1

'மயிலெனும் சாயல்' என்றால்
தோகைபெண் மயிலுக்கு இல்லை
'குயிலெனும் குரலாள்' என்றால்
ஏழிசை குயிலுக்கு இல்லை.
'வெயில்ஒளி மேனி' என்றால்
வெயிலிலே வெப்பம் உண்டாம்.
'அயிலெனும் பார்வை' என்றால்
அழிவின்றி ஆக்கம் இல்லை. 2

'சந்திர வதனம்' என்றால்
சந்திரன் மறுநாள் தேய்வான்.
'அந்தரப் பெண்போல்' என்றால்
அவளைநாம் பார்த்தது இல்லை
'செந்திரு மகள்போல்' என்றால்
திருவினைக் கண்டார் யாரே!
சுந்தர வடிவென் றாலும்
சொல்லிலே வலிமை இல்லை. 3

'கூந்தலை மேகம்' என்றால்
மேகத்தில் கருமை, கொஞ்சம்
'காந்தனைக் கைபோ'ல் என்றால்
கேட்டதே கண்டது இல்லை.
போந்ததும் வாடிப் போகும்
முல்லைதான் பல்லுக்கு ஈடோ?
'ஏந்திழை' என்றுஇட் டாலும்
இயற்கையின் எழிலைப் போக்கும். 4



'விரல்களைப் பவளம்' என்றால்
வீணையை மீட்ட லாமோ?
'குரல்வளை சங்கம்' என்றால்
சங்குஒலி குமுறிக் கூவும்
'கரம்அதைக் கமலம்' என்றால்
மாலையில் கமலம் கூம்பும்
'ஒருமரம் மூங்கில் தோளுக்(கு)
உவமை'என் றுரைக்க லாமோ? 5

'குமிழ்என மூக்கைச்' சொன்னால்
கூர்மையும் நேர்மை இல்லை.
'அமிழ்துஅவள் பாடல்' என்றால்
தேவரே அமுதம் உண்டார்.
'தமிழ்'எனும் இனிமை என்றால்
தனித்தமிழ் இப்போது இல்லை.
'கமழ்மணம் தேசம் என்றால்
கன்னியின் தாயே காண்பாள். 6

பற்பல உவமை சொல்லிப்
பண்டிதர் களுக்கும் கூடக்
கற்பனை புரிந்தி டாத
கட்டுரை பின்னிக் காட்டும்;
சொற்பல அடுக்க வேண்டாம்;
சுருக்கமாய்ச் சொல்லப் போனால்
அற்புத அழகு முற்றும்
இயற்கையில் அமைந்த நங்கை. 7

கண்டவர் மறக்க மாட்டார்;
கேட்டவர் காணப் போவார்;
அண்டையில் பழகி னோர்கள்
அவளைவிட்டு அகல மாட்டார்.
பெண்டுகள் வந்து வந்து
பேசுதற்(கு) ஆசை கொள்வார்.
சண்டையும் சலிப்பும் எல்லாம்
சாந்தமாம் அவளைச் சார்ந்தால். 8

தன்னினும் அறிந்தார் முன்னே
தான்தனி மடமை தாங்கும்
நன்னயம் இல்லாச் சொல்லைக்
கேட்கவும் நாணம் கொள்வாள்
அன்னியர்க் கேனும் தீமை
ஆற்றிட அச்சம் கொள்வாள்
மன்னவர் தவறி னாலும்
மதித்திடாப் பயிர்ப்பு மண்டும். 9

தனக்குறும் தந்தை தாயர்
தருக்கிடும் குழந்தை யாக
மனக்குறை ஒன்றும் இன்றி
மருட்டுவார் எவரும் இன்றி
இனக்குறை இல்லார் தம்மோடு
இச்சைபோல் ஓடி யாடி
வனக்கிளி போலக் கொஞ்சி
வளர்த்தவள் வறுமை இன்றி. 10

இயற்கையின் நலமும், நல்லோர்
இணைப்பினால் நேர்ந்த பண்பும்;
செயற்கையாம் பகுப்பும் மிக்க
செம்மையாய்ச் சேர்ந்த தாலே
மயக்கிலா அறிவும், நல்லோர்
மதித்திடும் பொறுப்பும் வாய்ந்து
வியப்பொடும் எவரும் கண்டு
விருப்புற விளங்கி நின்றாள். 11

மிதந்திடும் செல்வம் மிக்க
மேட்டிமை சிறிதும் இல்லை.
அதிர்ந்துஒரு வார்த்தை பேசும்
அகத்தையும் அறிய மாட்டாள்.
சுதந்தர இயல்பி னோடு
சுதந்தரப் பழக்கம் சேர்ந்தும்
இகந்தரக் குலவிப் பேசி
எவரையும் சமமாய் எண்ணும் 12



பள்ளியிற் பெண்கட் கான
பல்கலைக் கழகந் தன்னில்
ஒள்ளிய முறையில் கற்றே
உயர்தரப் பட்டம் பெற்றாள்;
வெள்ளையர் நாக ரீக
விதங்களும் விரும்பிக் கற்றுக்
கள்ளமும் கபடும் இன்றிக்
களையிலாப் பயிர்போல் நின்றாள். 13

உடைகளில் சுத்தம் பார்ப்பாள்;
உணவிலே சுத்தம் பார்ப்பாள்;
கடைகளில் வாங்கும் பண்டம்
காய்கறி சுத்தம் பார்ப்பாள்;
நடைமுறை ஒழுக்கம் காப்பாள்;
நாவுரை நலத்தைக் காப்பாள்;
தடையுற நொந்த பேரைத்
தாயெனத் தாங்கும் தக்காள். 14

குழலொடு வீணை நாதம்
குரலொடும் இசையக் கூட்டிப்
பழுதறப் பாடிக் கேட்போர்
பரவசம் அடையச் செய்வாள்
விழலுறப் பொழுது போக்கும்
வீண்சுகம் விரும்ப மாட்டாள்;
எழிலுடைப் பெண்மைக் குற்ற
இருப்பிட மாவாள் என்போம். 15

மாதர்கள் சங்கம் கூட்டி
மகளிர்தம் உரிமை காக்க
ஆதரம் தேடும் பேச்சே
அடிக்கடி நடக்கச் செய்வாள்.
தீதுறும் வழக்கம் எல்லாம்
தீர்ந்திட வேண்டும் என்றே
ஓதரும் ஊக்கத் தோடும்
உழைத்திடும் ஒன்றே ஆசை. 16

"பெண்களை இகழ்ந்து முற்றும்
பேதைகள் என்று பேசிப்
புண்கொள எழுதி வைத்துப்
புரைகொளச் செய்து வாழ்வின்
கண்களில் ஒன்றைக் குத்திக்
கரித்திடச் செய்தார்" என்ன
எண்கொள எண்ணி யெண்ணி
ஏங்குவாள் அதுவே ஏக்கம். 17

"மறுமணம் மாதர்க்(கு) இல்லை
மதலையை விதவை யாக்கி
நறுமணப் பூவும் இன்றி
நல்லஓர் துணியும் இன்றி
உறுமணல் தேரை போல
ஒளிந்திருந்து ஒடுங்கச் செய்யும்
சிறுமனப் பான்மை யேநம்
தேசத்தின் நாசம்" என்பான். 18

"கற்பெனப் பேசு வார்கள்;
கற்பினைப் பெண்ணே காக்கப்
பற்பல பெண்ணை நாடிப்
பசப்பலாம் ஆண்கள் மட்டும்;
அற்புதம் ஆன தாகும்
அநியாயம் இந்த நாட்டின்
நற்பதம் கெடுத்தது' என்று
நாள்எலாம் நைவாள் நங்கை. 19

நாட்டியம் ஆடச் செய்தும்
நாடகம் நடிக்கச் செய்தும்
பாட்டையும் பாடச் செய்தும்
பரத்தையர் குலமும் பண்ணி
ஆட்டிய கதைகள் எல்லாம்
ஆடவர்க் கான இன்ப



வேட்டையே பெண்கள் என்ற
விருப்பையே விளக்கும்" என்பாள். 20

அவள்பெயர் கமலம் எல்லாச்
செல்வமும் அமைந்த வீட்டில்
தவம்எனப் பெற்றோ ருக்குத்
தனியொரு குழந்தை யாவாள்
நவநவ நாக ரீக
நடையுடை இருப தாண்டு
யுவதியாய் உலகில் நல்ல
கவிதைபோல் உயர்ந்து நின்றாள். 21

## 283. அவன்

*('அவளும் அவனும்' என்னும் நூலினின்று தொகுக்கப்பெற்றது)*

நீண்டன கைகள்; ஆழ்ந்து
நிமிர்ந்தது அகன்ற மார்பு;
தீண்டிடக் கல்லைப் போலத்
திரண்டன இரண்டு தோளும்;
தூண்எனத் தோன்றும் கால்கள்;
துணைதர நடக்கும் பாதம்
ஆண்தகை மற்றும் தக்க
அளவொடும் அமையப் பெற்றோன். 1

அறிவொளி வீசும் கண்கள்;
அறவுரை பேசும் நாக்கு;
செறிதரும் சிகையை வெட்டித்
திகழ்தரச் சீவி விட்டுச்
சிறிதல பெரிதும் அல்ல
சீரெனும் மூக்கி னோடும்
குறிகளும் நெறிகள் யாவும்
குணமுளான் என்றே கூறும். 2

கண்டவர் களிக்கும் தோற்றம்;
கேட்டவர் மதிக்கும் ஆற்றல்
அண்டையில் பழக்கம் இல்லார்
அடக்கமாய் அணுகு வார்கள்;
சண்டைகள் ஒடுங்கும் கண்டால்
சலிப்புகள் சளைப்புக் கொள்ளும்;
தொண்டுசெய் ஏவ லாளர்
துணுக்கொடு வணக்கம் செய்வார். 3

படிப்பினில் பட்டம் பெற்றான்;
பந்துகள் கையால் காலால்
அடிப்பதில் பதக்கம் பெற்றான்;
அரங்கினில் வேடம் பூண்டு
நடிப்பதில் பரிசு பெற்றான்;
நாடிய எதையும் நன்றாய்
முடிப்பதில் முயற்சி மிக்கான்
முற்றிலும் விரும்பத் தக்கான். 4

செல்வரில் செல்வன் என்ற
சிறப்புள பிறப்பு வாய்ந்தான்;
கல்வியில் ஆசை மிக்கான்;
கவிதையில் நேசம் மிக்கான்;
பல்விதக் கலைகள் வேண்டிப்
பயிற்சியும் முயற்சி செய்வான்;
நல்வழி என்னத் தக்க
நடைநொடி யுடைய நண்பன். 5

அழகுள எதையும் கண்டே
அளவிலா ஆசை கொள்வான்;
பழகிடும் எதிலும் உள்ள
அழகையே கண்டு பேசும்
எழுதிடும் எழுத்தில் எல்லாம்
அழகையே ஏற்றிப் போற்றித்
தொழுதிடும் தெய்வ மாக
அழகையே தூக்கி வைப்பான். 6



உடைகளில் அழகு பார்ப்பான்
உண்கலம் அழகு பார்ப்பான்
குடைதடி படுக்கை மேசை
குரிச்சியில் அழகு பார்ப்பான்.
கடைகளில் அழகாய்த் தோன்றக்
கண்டதை எல்லாம் வாங்கி
அடைவுற வீட்டில் எங்கும்
அலங்கரித்து அழகு பார்ப்பான். 7

காலையின் அழகில் பூத்துக்
காய்கனி நிறைந்து காட்டும்
சோலையின் அழகைச் சொல்வான்;
சூரியன் சிவந்து தோன்றும்
மாலையின் அழகைப் போற்றி
மலைகளில் படிந்த மேகச்
சீலையின் அழகைப் போற்றிச்
சித்திரக் கோலைத் தீட்டும். 8

கைச்சிறு 'காமிரா'வில்
கண்டதை எல்லாம் 'போட்டோ'
இச்சைபோல் எடுத்து வந்தே
இருட்டறை கழுவிப் பார்ப்பான்;
அச்சிறு படத்தில் எல்லாம்
அழகையே பொருளாய்ப் பேசி
மெச்சிடும் நண்ப ரோடு
மிகமிகப் பொழுது போக்கும். 9

நாடகப் பிரியன்; நல்ல
நாட்டியக் கலையில் ஆசை
கேடயம் கத்தி யோடு
'கொடிகள்' பழக ஆசை
நீடிய நேரம் நீரில்
நீந்திட நிறைந்த ஆசை.
ஓடமும் தானே ஓட்டி
உலவிட உவப்பான் உள்ளம். 10

வீரர்கள் கதையைப் போற்றும்.
வெற்றியை வியந்து வாழ்த்தும்
தீரர்கள் முன்னே வாழ்ந்தோர்
திறமையின் சிறப்பைப் பேசி,
சூரர்கள் பலபேர் சொன்ன
சுதந்தர உரைகள் சொல்லி
ஆரொரு மனிதற் கேனும்
ஆண்மையே அழகாம் என்பான். 11

'காதலே தெய்வம்' என்பான்;
'கடவுளே காதல்' என்பான்;
பூதல வாழ்வு முற்றும்
காதலில் பொருந்தும் என்பான்;
ஆதலால் காதல் என்னும்
அப்பொருள் அடைந்து இலாதார்
சாதலே மேலாம் என்று
சாற்றுவான் சலிப்பில் லாமல். 12

பெண்களை அழகுத் 'தெய்வப்
பிறிதொரு பிரதி' என்பான்;
பண்கொளப் பாடி ஆடிப்
பல்கலைப் பயிற்சியோடும்
கண்கொளும் உடைகள் பூண்டு
களிதரும் காட்சி யாக
எண்கொளும் இனிமைக்கு எல்லாம்
இருப்பிட மாக எண்ணும். 13

பற்பல வழியில் நாட்டின்
பொதுநலம் பரிந்து பேசிச்
சொற்பொழி வாற்ற லுள்ளான்;
சுதந்தர ஆசை யூட்டும்
அற்புதத் திறமை யோடும்
அறிவுடன் அமைவ தான
கற்பனை மிகுந்த நல்ல
கதைகளும் காட்டிச் சொல்வான். 14



ஊரெலாம் செழிக்க வேண்டும்;
உயிரெலாம் களிக்க வேண்டும்;
நேரிலாப் புதுமை மிக்க
சமுதாயம் நிறுவ வேண்டும்.
பாரெலாம் நமது நாட்டின்
பெரும்புகழ் பரப்பி, மக்கள்
போரெலாம் ஒடுங்க வேண்டும்
என்பதே பொழுதும் பேச்சாம். 15

"அடிமைகள் இல்லா நாடும்
அன்புஅறம் அரசு செய்யக்
கடிதரும் சாதி பேதக்
கட்சிகள் இல்லா நாடும்
குடிகொலை களவின் அச்சம்
கொஞ்சமும் இல்லா நாடும்
விடிவதும் எப்போது" என்ற
பேச்சையே விரும்பிப் பேசும். 16

வாய்மையும் கருணை சேர்ந்த
வாழ்க்கையே வகுத்துக் கூறித்
தூய்மையைப் புகட்டல் ஒன்றே
இலக்கியத் துறையாய்க் கொண்ட
தாய்மொழித் தமிழைப் போற்றல்
தனியறம் என்றே நல்ல
ஆய்வுடை அறிஞர் தம்மை
அடிக்கடிக் கூட்டிப் பேசும். 17

"புதியநல் எண்ணம் வேண்டும்;
வாழ்க்கையிற் புதுமை வேண்டும்;
மதிப்புடன் நம்மைக் கண்டு
மற்றநாட் டவர்கள் எல்லாம்
துடிப்புடன் தொடர எல்லாத்
துறையிலும் புதுமை தோன்ற
விதிப்பயன் என்ற பேச்சை
விட்டிட வேண்டும்" என்பான். 18

"பிறந்தவர் சாவது உண்மை
பெற்றபொன் நாட்டிற் காக
அறந்தரும் சிந்தை யோடே
அன்புசேர் பணிகள் ஆற்றி
இறந்தவர் அன்றோ என்றும்
இருப்பவர் ஆவார்" என்று
சிறந்திடும் தேச பக்தி
முறைகளே சிந்தை செய்வான். 19

மாதவன் அவன்பே ராகும்
மாபெரும் செல்வர் மைந்தன்
ஓதரும் கல்வி கற்ற
உயர்தரப் பட்டம் பெற்றோன்;
தீதரும் அறிவிற் காகத்
தேசயாத் திரையும் செய்தோன்
ஏதோரு குறையும் இன்றி
இருபத்து ஏழாண்டு உள்ளோன். 20

பணத்தின்மேல் ஆசை வைத்துப்
படிப்பையும் எண்ணிப் பார்த்துக்
குணத்தையும் கொஞ்சம் போற்றிக்
குலத்தையே கருதி டாமல்
மணத்தினால் அவனைத் தங்கள்
மருமகன் ஆங்கிக் கொள்ளக்
கணக்கிலாத் தந்தை தாயர்
காத்திருந் தார்கள் கண்டீர். 21

## *284. காவேரித் தெய்வம்*

ஆடிப் பதினெட்டுப் பண்டிகைக் காவேரி
ஆற்றினைப் பூசித்துப் போற்றிடுவோம்;
கூடிப் பணிந்து குலதெய்வம் காத்திடக்
கும்பிடு வோம்இனித் துன்பம்இல்லை. 1



கடவுளை நேரில் கண்டதில்லை; அவரைக்
கண்டவர் என்றவர் விண்டதில்லை.
அடைவரும் அந்தக் கடவுளும் காவேரி
ஆற்றின் பெருமையில் தோற்றதுபார். 2

வெள்ளப் பெருக்கினைப் பார்க்கையிலும், அதன்
வேகத்தின் சித்தத்தைக் கேட்கையிலும்,
உள்ளம் திகைத்தோர் உண்மை அறிவினை
ஊட்டுது; தெய்வத்தைக் காட்டுதுபார். 3

ஆலம ரத்தையும் வேர்பறித்தே, அதை
ஆட்டி உருட்டி அடித்துக்கொண்டு
காலனும் கண்டால் நடுங்க வருகின்ற
காட்சியும் யாருடைச் சூழ்ச்சியினால்? 4

காடும் மலையும் கிடுகிடுக்க, அந்தக்
காட்டு மிருகங்கள் ஓட்டமிட
ஓடும் நதியிலே அத்தனை தண்ணீரை
ஊற்றுவ தார்?என்ற மாற்றம் வரும். 5

ஆனை சிறுத்தைகள் அஞ்சிப் பதுங்கிட
ஆட்டையும் மாட்டை அடித்துக்கொண்டு
சேனை யிலும்கடு வேகத்துடன் வரும்
சீக்கிரம் யாருடை ஆக்கினையோ! 6

மேட்டில் அணையென்று போட்ட சுவர்களில்
மெள்ளமெள்ள அதன் கல்லரைக்கும்
ஓட்டத்து டன்வரும் ஊட்டத்தைக் கண்டுநம்
உள்ளத்தில் எண்ணங்கள் துள்ளுதுபார். 7

நேற்று நடந்திட்ட மக்களின் பாதங்கள்
நீற்று நெருப்பெழக் கொப்புளித்த
ஆற்றிலே இன்றைக்கும் அத்தனை தண்ணீர்
அப்படி வந்ததும் எப்படியோ! 8

நீரின்றி மக்கள் நிலையுமுண்டோ? அந்த
நீரைத் தருவதும் ஆறல்லவோ!
ஆறென்ற நீருக்கும் மேகங்கள் ஆதாரம்
ஆகாயம் மேகத்துக்கு ஆதரவு. 9

ஆனதி னால்அந்த வானத்தி லேஒரு
அற்புத சக்தி இருக்கும் என்றே
வானத்தையே தெய்வம் வாழும் இடம்என்று
வையகம் சொல்வதும் பொய்யல்லவே. 10

ஆனைகட் டியர சாண்டா லும்பல
ஆயிரம் வித்தைகள் கற்றாலும்
சேனைகட் டிப்பகை வென்றாலும்அவர்
தின்னக் கொடுப்பவள் காவேரி. 11

அன்னம் அளிப்பவள் காவேரி; நல்ல
ஆடை கொடுப்பவள் காவேரி;
இன்னும் மனிதர்க்கு வேண்டிய இன்பங்கள்
யாவையும் காவேரி யேதருவாள். 12

விண்கொண்ட தெய்வத்தை நாமறியோம், சொல்லும்
வேதம் புராணங்கள் பார்த்துஅறிவோம்.
கண்கண்ட தெய்வம் காவேரி, நம்மைக்
காத்திடுவாள் கஞ்சி வார்த்திடுவாள். 13

தாய்மொழி தெய்வத் தமிழ்மொழியாம் அதைத்
தந்த அகத்திய மாமுனிவன்
தூய்மைக் கமண்டல நீர்என்று காவேரிச்
சுத்தத்தைச் சொல்லித் துதித்திடுவார். 14

குறிப்புரை:- ஆதாரம் - *அடிப்படை, தாங்குதல்;* காவேரி - தென்னக ஆற்றிலே பெரியது. ஆடிமாதம் பதினெட்டாம் தேதியை ஆடிப்பெருக்கு என்பர். அன்று காவேரி ஆற்றங்கரையில் பொங்கலிட்டுக் காவேரியைக் குலதெய்வமாகக் கருதிப் பூசித்து வழிபடுவர்.



## 285. தென்றல்

தென்றல் குலவிவரும் - நல்ல
தென்மொழி தேனைத் தரும்
நன்றுள சேதிகளே - சொல்ல
நம்மிடைத் தூதுவரும். 1

உள்ளம் கிளர்ச்சிபெறும் - படி
உடலம் குளிர்ச்சியுறும்
கள்ளமனக் குறும்பும் - சற்றுக்
கவலையறத் திரும்பும். 2

காதலைக் கொண்டுவரும் - இன்பக்
கதைளை மொண்டுதரும்
நோதலைப் போக்கிவிடும் - நம்மை
நூதனம் ஆக்கிவிடும். 3

வேகங்கள் மாறிவிடும் - ஏதும்
வெஞ்சினம் ஆறிவிடும்
தாகம் தணிந்ததுபோல் - உள்ளம்
தண்மை அணிந்திடுமே. 4

நற்குணம் பேசிவரும் - ஞான
நறுமணம் வீசிவரும்
பற்பல நாட்டவரின் - உயர்
பண்புகள் கூட்டிவரும். 5

பகைமை மறந்திடவும் - அன்பின்
பற்று நிறைந்திடவும்
தகைமை மிகுந்ததுவாம் - தென்றல்
தன்னை உகந்திடுவோம். 6

கவிதை நிறைந்துளதாய் - ஆழக்
கல்வி சிறந்ததுவாய்ச்
செவியில் முணுமுணுக்கும் - அதில்
செம்மை கிணுகிணுக்கும். 7

நாடுகள் சுற்றுவதால் - பல
நல்லன கற்றுவரும்.
கேடுள வண்டல்களை - விட்டுக்
கேண்மையைக் கொண்டுவரும். 8

மானிட வர்க்கம்எலாம் - ஒரு
மாதாவின் மக்கள்என்ற
ஞான உபதேசம் - தென்றல்
நம்மிடை யேபேசும். 9

என்றும் இருந்துலவி - புவி
எங்கும் திரிந்திட லால்
தென்றல் வருந்தோறும் - நம்முள்
தெய்வ நினைப்பூறும். 10

## 286. இளமை

கற்பனை மிகுந்ததும் இளைஞர்மனம்
கவிதைக்(கு) உகந்ததும் இளைஞர்மனம்
அற்புத உணர்ச்சிகள் அலைபுரளும்
ஆனந்தம் வாலிப நிலைதருமே. 1

துள்ளி மகிழ்வதும் இளம்பருவம்
துடிதுடிப் புடையதும் இளம்பருவம்
அள்ளித் தருவதும் அதன்பெருமை
ஆர்வமும் ஆற்றலும் அதன்உரிமை. 2

இன்பம் குளிப்பதும் இளம்பருவம்
ஈகையிற் களிப்பதும் இளம்பருவம்
துன்பம் நேரினும் மலைக்காது
துக்கம் அதனிடை நிலைக்காது. 3

வளர்ச்சியைத் தரிப்பது வாலிபமாம்
வல்லமை வரிப்பதும் வாலிபமாம்
தளர்ச்சியை மறப்பதும் வாலிபமே
தைரியம் சிறப்பதும் வாலிபமே. 4



கஞ்சத் தனங்களை அறியாது;
காசு பணம்தர மறையாது;
தஞ்சம் உதவிடத் தாவிவரும்;
தருணம் வாய்ந்திடில் ஆவிதரும். 5

சோம்பலை ஒழிப்பதும் வாலிபமாம்
சோர்வினைப் பழிப்பதும் வாலிபமாம்
நோன்பென நித்தமும் நூல்படிக்கும்
நுண்ணறி வாகிய பால்குடிக்கும். 6

புதுமையை விரும்புதல் அதன்உடைமை
புரட்சிகள் அரும்புதல் அதனிடையே
முதுமையின் பெருமையை எள்ளாது
மூடப் பழக்கமும் கொள்ளாது. 7

கேலியும் சிரிப்பும் பரபரப்பும்
கிளர்ச்சியும் காரியத் துருதுருப்பும்
வாலிப உள்ளம் வாடாமல்
வாழ்ந்திடும் நாடே நாடாகும். 8

மாணவ இளைஞரின் சிறந்ததனம்
மாசுகள் படியாக் குழந்தைமனம்
ஆணவம் புகுந்ததைக் கெடுக்காமல்
ஆண்டவன் அருளை வேண்டிடுவோம். 9

*குறிப்புரை:- வாலிபம் - இளமை; அரும்புதல் - தோன்றுதல்; முதுமை - இளமைக்கு மாறானது.*

## 287. பூஞ்சோலை

மான்சேர மயில்ஆடக் குயில்பாட மலர்கள்
தேன்சேர மகரந்தம் திசைதோறும் சிதற
மீன்சேரும் சிற்றோடை மெல்லோசை தவழும்
பூஞ்சோலை அதிலுற்றுப் புளகித்து மகிழ்வோம். 1

பலகற்றும் அறிவென்ற பயனற்று நித்தம்
கலகத்தை விளைவித்துக் கவலைக்குள் கத்தும்
உலகத்தை ஒருசற்றுப் பொழுதேனும் விட்டு
விலகற்கும் அமைதிக்கும் வெகுநல்ல இடமே. 2

அன்புஒத்த சுகமூட்டும் அதிலுள்ள பசுமை,
இன்பத்தின் களிகூட்டும் பலபட்சி இசைகள்;
தென்புற்ற அறிவுஒக்கும் தெளிவான தண்ணீர்;
துன்பத்தை மறைவிக்கத் துணையாகும் என்னே! 3

கோபங்கள் மிதமிஞ்சிக் கொதிகொண்டு வெந்து
பாபங்கள் புரிகின்ற பழுதுற்று நொந்து
தாபங்கள் வெகுவாகத் தணிவுற்றே அறிவும்
சோபிக்க இடம்இந்தப் பூஞ்சோலை செய்யும். 4

மண்ஒன்று, நீர்ஒன்று, மழையென்பது ஒன்றே
பண்ணைக்குச் செய்நேர்த்தி பாட்டாளி ஒன்றே
எண்ணற்ற நிறபேதம் எதிலுற்றது என்றே
கண்ணுற்ற பூஞ்சோலை கதைசொல்ல நின்றேன். 5

யார்செய்வது இதுவென்றே அதிவிந்தை எய்திப்
போர்செய்த பலஎண்ணம் புந்திக்குள் செய்து
நேர்செய்த அறிவுற்று நினைவுற்ற பொழுதே
ஓர்தெய்வம் உளது என்னும் உணர்வுற்றுத்
தொழுதேன். 6

*குறிப்புரை:- தென்பு - மகிழ்ச்சி; விலகல் - நீங்கல்; மிதமிஞ்சி - அளவுக்கு மீறி; நிறபேதம் - இனவேறுபாடு.*

## *288. கதிரொளி*

கதிரொளி வந்தது
களிப்பினைத் தந்தது.
மதிதெளி வுற்றது
மயக்கமும் அற்றது.



புதியன பலப்பல
உணர்வுகள் புலப்பட
அதிசயம் மிக்கென
அறிவுகள் புக்கன. 1

காலையின் அழகுகள்
கதிரொளி வரவால்
மாலையின் மயக்கமும்
கதிரொளி மறைவால்.
சோலையின் பசுமையும்
கதிரொளி வசமே;
லீலைகள் எண்ணில்
கதிரொளி நீசமே. 2

உடல்நல முறுவது
கதிரொளி உறவால்
கடல்சலம் மழைதரல்
கதிரொளித் திறமே
செடிகொடி மலர்எழில்
கதிரொளிச் செயலே
கடவுளை உலகினில்
காட்டுவது அதுவே. 3

ஏழையும் செல்வனும்
இருவரும் சமமே.
கோழையும் கொடியரும்
கூடத்தன் தமராய்
ஆழியை நடத்திடும்
கதிரொளி அரசன்
வாழிய வாழ்த்திநல்
வாழ்வுகள் பெறுவோம். 4

## 289. கண்டிலேன்

ஐயம் இல்லை தெய்வம் உண்டுஎனப்
பையப் பைய என்னைப் பழக்கி
அன்னை என்னுடைச் சின்ன வயதில்
சொன்னது மட்டும் இன்னும் மறந்திலேன்;
'உண்டு' என்பதைக் கண்டிலேன் தெளியப்

பண்டைநம் முன்னோர் பகர்ந்ததை எல்லாம்
படித்துப் பார்த்தேன்; பாடமும் கேட்டேன்;
ஒடித்துப் பிரித்தும் ஊன்றி எண்ணினேன்;
"நீறு பூசினால் நேர்ந்திடும்" என்றார்;
நீறு பூசியெந் நேரமும் கழித்தேன்;

"கண்டிகை தரித்தால் காணலாம்" என்றார்;
கண்டிகை கனத்தும் கண்டிலேன் பொருளை;
"நாமம் தரித்தால் நாடலாம்" என்றார்;
நாமம் புனைவதில் நாள்பல கழித்தேன்;
"துளசி மாலையும் துணைசெயும்" என்றார்;

துளசியும் தொடுத்தேன்; மணிகளும் சுமந்தேன்;
"பஜனை செய்தால் பலித்திடும்" என்றார்;
பஜனை கோஷ்டியில் பாடினேன் பலநாள்;
"ஊனும் உயிரும் அவனே" என்றார்.
ஊனினும் காணேன்; உயிரினும் காணேன்;

"கோயிலிலும் குளமும் குடியிருப்பு" என்றார்;
கோயிலில் தேடினேன்; குளத்திலும் முழுகினேன்;
"வேத நூல்களில் விளங்கிடும்" என்றார்;
வேதமும் கேட்டேன், விளங்கவே இல்லை;
"மந்திரம் கற்றால் வந்திடும்" என்றார்;

மந்திரம் செபித்தேன் தந்திரம் பலித்திலேன்;
'பட்டினி இருந்தால் பார்க்கலாம்" என்றார்;
பட்டினி விரதம் பழகியும் பார்த்தேன்;



"மூச்சை அடக்கினால் முன்வரும்" என்றார்;
மூச்சைப் பிடித்து முயன்று பார்த்தேன்;

கண்டிலேன் அந்தக் கடவுளை; அதனால்
"பண்டை வழிகளில் பயனிலை போலும்!
எந்தையர் சொன்ன இந்து மதத்திலே
இந்த ரகசியம் இல்லையோ?" என்று
மதங்கள் என்று மற்றவர் சொன்ன.

விதங்களை எல்லாம் விரித்திடும் நூல்கள்
புத்தகம் பற்பல புரியப் படித்தேன்;
வித்தகர் சொன்ன விளக்கமுங் கேட்டேன்;
புதுப்புது வழிகளில் புகுந்து புகுந்து
மதிப்புள எல்லா மார்க்கமும் போனேன்;

செல்லா வழியென எண்ணிநான் சென்ற
எல்லா வழிகளும் என்னைக் கொண்டுபோய்
முன்னே இருந்த மூலையே சேர்ந்தன.
என்னே! தெய்வம் எங்கோ! எதுவோ
இருந்த இடத்தில் இல்லையென்(று) எண்ணித்

திரிந்த இடத்திலும் செறிந்திட வில்லையே!
இல்லையென் றுரைக்கத் தைரியம் இல்லை;
தொல்லையென்(று) அதனைத் துறக்கவும்
துணிவிலை;
இல்லையே ஆனால் தொல்லையே இல்லை
நல்லதே நம்மைக் கேட்பார் இல்லை;

இருப்பதும் உண்மைதான் என்றால் என்ன?
பொறுப்பதும் அவர்க்கே; காத்தருள் புரியும்.

குறிப்புரை:- வித்தகர் - மேலானவர்.

## *290. காந்தி வழி பழசா?*

சாந்தவழி சத்தியத்தில் சலித்தாய் நெஞ்சே!
சன்மார்க்கப் பழக்கம் இல்லாச் சகவா சத்தால்
காந்திவழி பழசாகப் போன தென்று
கதிமாற மதிமாறிக் கருது கின்றாய்;
மாந்தருக்குள் காந்தியைப்போல் புதுமை வாழ்க்கை
மற்றுஒருவர் நடத்தினரா? மனமே! சொல்வாய்;
ஆய்ந்தறிந்த அவன்தொடர்பை இகழ்வாய் ஆனால்
யாரும்இனி மீட்கவொண்ணா அடிமை யேநீ. 1

'பெற்றெடுத்த தாய்மிகவும் பழசாய்ப் போனாள்
பிறிதொருதாய் வேண்டும்' என்று பேசுவார்போல்
நற்றவத்தால் நமக்குஅடுத்த தலைவன் காந்தி
நானிலத்தில் உயிர்க்கெல்லாம் தாயாம் நண்பன்
கற்றதை சரித்திரங்கள் காணாச் சுத்தன்
கருணையென்ப(து) இன்னதுஎனக் காட்டும் தீரன்
உற்றதுணை காந்திவழி பழசாம் என்றால்
உய்வதற்கு வேறுகதி உண்டோ நெஞ்சே! 2

சந்திரனும் சூரியனும் பழசாய்ப் போனார்;
சலித்துவிட்டோம் தினந்தினமும் அவரைப் பார்த்து;
விந்தையுள்ள வேறிருவர் வேண்டும் என்று
விரும்புவதை ஒக்கும் அன்றோ விளம்பாய் நெஞ்சே!
இந்நிலம் இதுவரையில் அறிந்த உண்மை
இதைவிடமேல் இல்லையென நடந்து காட்டிச்
சந்ததமும் மாறாத அறத்தைக் காக்கும்
சாந்தன்அந்தக் காந்தியைநீ சலித்த தன்மை! 3

'நித்தம் ஒரு காற்றினையே மூச்சு வாங்கி
நீர்நெருப்பு நிலம்வானில் புதிசும் இன்றி
மெத்தவும்நாம் சலித்துவிட்டோம்' என்பாய் ஆனால்
மேதினியில் வேறுவழி உண்டோ நெஞ்சே!



சத்தியஞ்சேர் சாந்தவழி அதையே நித்தம்
சாதிப்பான் காந்தியென்று சலிப்பாய் ஆனால்
பத்தியத்தைப் பாதியிலே முறித்தாற் போலப்
பாடுபட்டும் பயனடையாப் பதரே ஆவாய். 4

மாறுகின்ற சிறுபொருள்கள் மயக்கத்தாலே
மாறாத உண்மைகளை மறந்தாய் நெஞ்சே
கூறுபல மாற்சரியம் குறைய நம்முள்
குற்றமற்ற காந்திவழி வேண்டும் என்றே
வேறுபல துன்பவழி எல்லாம் விட்டு
வெகுபுதிய காந்திவழி விரும்பிக் கொண்டாய்
சேறுபட்ட உலகநடை மீட்டும் சேர்ந்து
செய்தஅருந் தவப்பயனைச் சிதறு கின்றாய். 5

கலகமெலாம் கைகோத்துக் களிக்கூத் தாடக்
கரடிபுலி சிங்கமென மனிதர் சீற
அலகைபற்றி ஆட்டுதல்போல் அகிலம் அஞ்ச
அடிதடியும் கொலைகளவும் அறம்போல் ஓங்க
உலகமெலாங் காந்தியையே உற்றுப் பார்த்தே
உய்வதற்கோர் புதியவழி உரைத்தான் என்று
பலகலையின் அறிஞரெல்லாம் புகழப் பார்த்தும்
பரிகசித்தாய் நீஅவனைப் பாவி நெஞ்சே! 6

அச்சமிக்க இருட்டறையில் அடைப்பட்(டு) அங்கே
அழுவதற்கும் சீவனற்றுக் கிடந்த உன்னை
மிச்சமுள்ள மூச்சுமற்றும் போகு முன்னால்
மீட்டணைத்து மேனிசெய்து விட்டான் காந்தி!
இச்சகத்தில் அறிவறிந்தோர் என்றும் வாழ்த்தி
இன்பமிகும் காந்திவழி பழசாம் என்றால்
பச்சையிளங் காய்புதியது என்று கொண்டு
பழத்தபழம் பழசென்னும் பான்மை ஆகும். 7

## 291. திட்டம் எங்கே? திறமையும் எங்கே?

தன்னுடைப் பலமும் தன்னை எதிர்க்கும்
எதிரியின் பலமும் இவ்வளவு என்று
கணக்குப் போட்டுக் கூட்டிக் கழித்துப்
பெருக்கி வகுத்து, வகுத்துப் பெருக்கித்
தேர்ந்து தெளிந்து திட்டம் போட்டுப்

பற்பல நாட்டைப் படையெடுத் துப்போய்
அடித்துப் பிடித்தே அங்குள்ள மக்களைச்
சுட்டுக் கொன்று சூறை யாடிய
வெற்றி மாலை கழுத்தில் விழுமுன்
வெட்டுக் கத்தியே கழுத்தில் விழுந்திட,

தன்னுடைப் படையே தன்னைக் கொல்ல,
மாண்டு மறைந்த வீரரும் மன்னரும்
போட்ட திட்டம் போனது எங்கே?
அந்நிய நாட்டை அடிமைப் படுத்தி
அங்குள மக்கள் சோற்றுக்(கு) அலைய

தம்முடை நாடும் தாமும் தமர்களும்,
தின்று கொழுத்துச் சுகமாய்த் திரிய
அடிமைப் படுத்திய அங்குள மக்களை
ஒன்று சேரவும் ஒட்டா விதமாய்த்
தனித்தனிக் கும்பலைத் தட்டிக் கொடுத்து,

கொழுத்த சம்பளக் கூலி கொடுத்து,
நாட்டை விற்று நல்லசோ றுண்ணக்
காட்டிக் கொடுக்கிற கயவரின் துணையால்,
குற்றங் காட்டி அடித்துக் கூறி
அறவழி காட்டும் அந்த ணாளரை,

சத்தியம் பேசும் சாது மக்களை,
சீறி அடக்கியும் சிறையில் தள்ளியும்
உலகமும் தாங்களும் உள்ள வரையிலும்



பரம்பரை யாகப் பாத்தியம் கூறிச்
சுகித்து வாழும் சூழ்ச்சிகள் எண்ணி,

அரசியல் தந்திரம் அனைத்தையும் சேர்த்துத்
திட்டம் போடும் திறமை மிகுந்த
எத்தனை யோபல ஏகாதி பத்தியம்
மண்ணிற் புதைந்து மறைந்து போவதைப்
படித்தும் கேட்டும் பார்த்தும் வருகிறோம்.

திட்டம் எங்கே? திறமையும் எங்கே?

* * *

குடும்பச் சொத்துகள் குறையா திருக்கக்
கோயில் சத்திரம் குளங்களுக் காகத்
தருமம் என்று சாசனம் செய்து,
தன்னுடைப் பரம்பரை தன்னிலே பிறக்கும்.

அவர்களே என்றும் ஆண்டு வரும்படி,
பத்திர மாகப் பத்திரம் எழுதி
முத்திரை யோடு முடித்து வைத்தும்,
தருமம் என்பதும் தாறுமா றாகிக்
கள்ளிலும் சூதிலும் காம வெறியிலும்

கட்சிச் சண்டைகள் கண்ட வழக்கிலும்
அழிவதைக் கண்டே அதிகா ரத்தினை
மற்றுள ஊரார் மாற்றி விடுவதும்,
அல்லது அந்தச் சொத்தினை ஆளவும்
அந்தச் சந்ததி மைந்தனில் லாமல்

வேறே யாரோ விவகா ரங்களைத்
தொடுத்துச் சொத்தினைத் தொடர்வதும் உண்டு,
அன்றியும் அதனை அரசாங் கத்தார்
பறிமுதல் செய்வதும் பார்த்தோம் அதனால்
முத்திரை போட்ட பத்திரம் எங்கே?
திறம்பட வகுத்த திட்டமும் எங்கே

* * *

விஞ்ஞா னத்தின் விரிந்த அறிவுடன்
இயற்கையின் விதிகளை முற்றும் இணைத்தும்
சக்தி சாத்திரம் சரியாய்ச் சேர்த்தும்,
அணுவணு வாக அளந்து செய்தும்

கொஞ்சம் கூடக் குற்றம்இல் லாமல்,
குறித்த வேளையில் குறிதவ றாமல்,
எண்ணிய படியே எதையும் செய்யப்
பாடுபட்டுப் பண்ணி முடித்து,
பரிட்சை பலமுறை செய்தும் பார்த்த

எத்திரப் பொறிகளில் ஏறிக் கொண்டு,
எதிரியை மிகவும் எளிதிலே கொல்லத்
திறமை வாய்ந்த திட்டத் துடனே
வீரம் கூறிச் சென்றிடும் வீரன்
இடையிலே தன்னுடை யந்திரம் கெட்டுத்

தந்திரம் விழுந்து தானும் மடிந்து,
விழுந்த இடத்தையும் வேறே யாரும்
கண்டு பிடிப்பதும் கஷ்டமாய் விடுகிற
நிகழ்ச்சிகள் எத்தனை நித்தமும் பார்த்தோம்!
மந்திரம் எங்கே? தந்திரம் எங்கே?

திறமை மிகுந்த திட்டமும் எங்கே?
வருடக் கணக்கில் வருந்தி எண்ணித்
தீர்த்து முடித்துத் திட்டம் செய்யினும்
எண்ணுவது ஒன்றே மனித இட்டமாய்க்
காரியம் முடிக்கக் கர்த்தா அல்லவே.



## *292. ஔவையார் நாடகத்துக்கு வாழ்த்து*

**(கீழ்வரும் பாடல் 1943ஆம் ஆண்டு இறுதியில் நாடகக் கலைஞர்கள் டி.கே.எஸ். சகோதரர்களின் 'ஔவையார்' நாடக நூலுக்கு அளித்த மதிப்புரை)**

கல்வி நிறைந்தும் கலைகளில் சிறந்தும்
உலகுக்கு எல்லாம் ஞானம் ஊட்டிய
முத்தமிழ் வளர்த்த இத்திரு நாட்டில்
நாடகக் கலைமிக நலிவுற்றது என்ன
ஊக்கமூட் டாத உரைகளைப் பேசி,

உணர்ச்சி கூட்டாத ஓசைகள் பாடி,
நயமில் லாத நடிப்புகள் செய்து,
கொச்சை மிகுந்த நாட்கள் கூட்டி,
கண்ணைக் கரித்தும் கருத்திற் பதியா
நிகழ்ச்சிகள் பற்பல நிரம்பின தாக,

பொழுதும் பணமும் போனதைத் தவிர
அறிவை வளர்க்க அனுகூல மின்றி
உயிரில் லாமல் ஓடும் நிழலாய்,
"அரங்கின் பெருமை அழியுமோ!" என்று
நல்லோர் ஏக்குறும் இந்த நாளிலும்.

உண்மையும் ஒழுக்கமும் உறுதுணை யாக
அறங்களைப் புகட்டலே அறமெனக் கொண்டு
பழைய கதைகளின் பண்பு கெடாமல்
புதியநல் ஒளிகளில் பொலிவுறப் பொருந்திக்
கண்ணெனக் கலையின் கண்ணியம் காத்து

நல்ல முறையில் நாடகம் நடத்தும்
அரிய 'டி.கே.எஸ். அண்ணன் தம்பிகள்'
அழகுற நடிக்கும் 'ஔவையார்' நாடகம்
புத்தக ரூபமாய்ப் போந்தது கண்டு
பெரிதும் மகிழ்ந்து பெரும்மிதம் கொண்டேன்.

மன்னவர் செல்வமும் மதியா ளாகி
ஏழை எளியவர் உறவே இன்பமாய்க்
குடிசையில் வசித்துக் கூழையே ருசித்துப்
பண்டிதர் வியந்து பணிந்திடும் படித்தாய்ப்
பாமர மக்கள் பயன்பெற வென்றே

எவருக்கும் புரிவதாம் எளிய நடையில்
நீதிகள் பாடிய நிகரிலாச் சிறப்புள
தீரக் கிழவியின் திவ்விய சரிதையை
அழகிய சிற்சில கற்பனை அமைத்தும்
உருவிலாக் கதையை உருப்படி ஆக்கியும்

நூதன நாடக நூலாய்ச் செய்தது
தமிழன் னைக்குஒரு தனித்திருப் பணியாம்.
இப்படி நூல்கள் பற்பல இயற்றி
மங்களம் பெருகி 'மதுரைஸ்ரீ பால
சண்முகா னந்த சபையார் வாழ்க!'

## 293. பிள்ளையார் சுழியும் இஷ்ட தெய்வமும்

'ஓம்'எனும்அப் பிரணவத்தின் உண்மை காட்டித்
தூய்மை தரும் 'பிள்ளையார் சுழி'யைப் போட்டே
நாம்எதையும் எழுதுவதே நன்மை சேர்க்கும்;
தீமைஎதும் தீண்டாமல் நம்மைக் காக்கும். 1

ஹயவதனன் அவனருளால் துன்பம் நீங்கும்;
பயமகற்றும் திருமகளால் இன்பம் ஓங்கும்;
மயலகற்றிச் சாந்தநிலை மலரச் செய்யத்
தயவருளும் தட்சணா மூர்த்தித் தெய்வம். 2

சிவனருளே ஆசைகளை எரிக்கச் செய்யும்;
சிவகாமி தேகபலம் சிறக்கச் செய்யும்
பவகுகனே பகையுளதேல் ஒடுக்கி வெல்லும்;
நவசக்தி நாமகளும் நமக்கு நல்கும். 3



குறிப்புரை:- 'ஓம்' என்ற பிரணவம் சிவபெருமான் எழுந்தருளி இருக்கும் பீடமாக இருப்பது; மற்றைய தேவர்கட்கு எல்லாம் பிறப்பிடமாக இருப்பது; எல்லா மந்திரங்களுக்கும் வேதங்களுக்கும் மூலமாக இருப்பது, காசியில் இறப்பவர்கட்கு இறைவன் உபதேசிக்கும் தாரகப் பிரமமாய் விளங்குவது.

## 294. சீட்டுக் கவி

சென்னிமலை முருகனிடம் தீராத பக்தனாய்
செகமெச்ச வாழ்ந்த செல்வன்;
திருராச லிங்கனார் தருராச குருநாத
சீலமிகு நண்ப ருக்குக்
கன்னிமுதல் வேங்கடத் தமிழ்நாடு முழுவதும்
காந்தீய சேவை செய்யக்
களைதீரும் சத்தியச் சாந்தநெறி பாடிடும்
கவிராம லிங்கன் நிருபம்
அன்னையினும் அன்புடைய அவதார மூர்த்தியாம்
அருள்சீல காந்தி யாரின்
ஆணையொடு நீயறப் போர்தரப் போவதை
அறிந்துளம் பூரித்தேன் நான்
நின்னைநம் ஜில்லாவில் பெற்றதொரு பாக்கியம்
நிகரிலா தாகும் உண்மை
ஓயாத செல்வமுடன் மாயாத புகழுடன்
ஓங்கிநீ வாழ்க! வாழ்க!

## 295. பொன்விழா வாழ்த்து

**(கீழ்வரும் பாடல் சென்னை செங்கல்வராயன் அறநிலையங்களின் பொன் விழாவினைக் குறித்துப் பாடியது)**

இத்தரையில் மானிடராய்ப் பிறந்து வாழ்ந்தே
இன்பசுக போகங்கள் எல்லாம் கண்ட
எத்தனையோ கோடானு கோடிச் செல்வர்
இருந்தஇடம் தெரியாமல் மறைந்து போனார்

பத்தியுடன் மாணவர்க்குப் படிப்பும் தந்து
பலவிதமாம் தொழில்கல்வி பயிலச் செய்யச்
சித்தமுடன் செல்வமெல்லாம் தானம் செய்த
செங்கல்வ ராயனைநாம் மறப்ப துண்டோ? 1

பாடங்கள் உருப்போட்டுப் பட்டம் வாங்கும்
படிப்புமட்டும் வாழ்க்கைக்குப் பயன்படாது
நாடெங்கும் பரவியுள்ள வறுமை நீங்கி
நல்வாழ்வு நாமடைய வேண்டு மானால்
வீடெங்கும் தொழிற்கல்வி விளங்க வேண்டும்
விஞ்ஞானக் கலைவிரிய வேண்டும் என்றே
ஈடெங்கும் இல்லாத எண்ணங் கொண்ட
ஈகையே செங்கல்வராயன் ஏற்றம். 2

பார்த்தனுக்குத் தேரோட்டிப் பகவத் கீதை
பகர்ந்தபெரும் கண்ணபிரான் பயிலும் தெய்வத்
தீர்த்தமெனும் திருவல்லிக் கேணி கோயில்
திருமாலின் திருவடியே தினமும் போற்றி
ஆர்த்துமனம் ஆலயத்தின் வழிபாட் டிற்கும்
அழியாத சாசனத்தால் அறங்கள் நாட்டிப்
பேர்த்தும்ஒரு பெரும்பூதூர் உடைய வர்க்கும்
பெரியபக்த னாய்வாழ்ந்த பெருமை யுள்ளோன். 3

மெய்யான தெய்வபக்தி இதுதான் என்ன
மேதினியில் பிறர்நலமே மிகவும் எண்ணி;
பொய்யாமல் தன்னலத்தைப் புறக்கணித்துப்
பொதுநலமே நோக்காகப் பொழுதும் வாழ்ந்து
செய்யாத புதுமுறையில் தருமம் செய்யச்
சேர்ந்திருந்த செல்வமெலாம் தானம் செய்தே
எய்யாமல் பெரும்புகழை ஏந்திக் கொண்டான்;
என்றென்றும் நம்மிடையே இருப்பதானான். 4

ஆதரிப்பார் இல்லாமல் அனாதையாக
அலைந்துகெடும் இளைஞருக்(கு)இங்(கு) அபயம்தந்து



போதனையும் போசனமும் புகட்டிக் காக்கும்
பொறுப்புள்ள ஆச்சிரமம் பொலியத் தந்தான்;
காதலனை இழந்த இளம் கைம்பெண் யாரும்
கல்விகற்கப் பொருளுதவி கருணை செய்தான்;
வாதனைசெய் நோய்தீர்க்கும் ஆயுர் வேத
வைத்தியங்கள் இலவசமாய் வழங்கச் செய்தான். 5

அன்னைதந்தை தெய்வமென ஆராதித்தே
அறங்களினும் அவர்பெயரை அமைத்து வைத்துச்
சென்னைநகர்க் கீர்த்திவிளங்கும் திகழச் செய்த
செங்கல்வ ராயனுடைச் சிறப்பைப் போற்றும்
பொன்னனைய திருநாள் இப்பொன்வி ழாவில்
பொருள்நலமும் அருள்நலமும் புதுமை பெற்று
மன்னும்இந்த அறநிலையம் மலைபோல் ஓங்க
மனமார மகிழ்ச்சிபொங்க வாழ்த்துகின்றோம்.

## *296. அறுபதாம் ஆண்டு நிறைவு விழா வாழ்த்து*

**(பரதநாட்டிய நிபுணர் E. கிருஷ்ணய்யர் அவர்கள்**
**அறுபதாம் ஆண்டு நிறைவு எய்தியமை குறித்துப் பாடியது)**

விடுதலைப்போர் முன்னணியில் நின்ற வீரன்
வீறுதரும் பாரதியின் பாட்டைப் பாடி
சடுதியில்ஓர் பெருங்கூட்டம் கூடச் செய்து
சத்தியப்போர் சாந்தநெறி சரியாய்ப் பேசி
அடிமைமனம் விட்டொழிய அச்சம் நீங்கி
அனைவருக்கும் சுதந்தரத்தில் ஆர்வம் பொங்கி
இடியொலிபோல் காந்திமகான் பெயரைக் கூவி
எழுச்சிகொளச் செய்தவனும் இவனேயாவான். 1

நிதிநலத்தில் மிகக் குறைவை நினைத்தி டாமல்
நீதிமன்ற வக்கீலாம் தொழிலை நீத்தான்
மதிநலத்தில் யாரென்ன குறைசொன் னாலும்
மறுபடியும் தொழில்நடத்த மறுத்து விட்டான்;

பொதுநலமே பூஷணமாய்ப் பூண்டு நின்றான்
பொறுமையுடன் வறுமையையும் போற்ற லானான்.
துதிபெறும்ஓர் ஆசையில்லாக் கர்ம யோகத்
தூயமனத் தொண்டனெனத் துலங்கு கின்றான். 2

மங்கிநின்ற சங்கீதம் மணக்கச் செய்தான்
மறைந்துநின்ற நாட்டியத்தை விளங்க வைத்தான்;
பங்குகொண்டு நாடகத்தில் வேடந் தாங்கிய
பரிமளிக்கச் செய்துவைத்தான் அரங்கம் தன்னைச்
சங்கமெனப் பலகலைக்கும் சபைகள் கூட்டிச்
சாத்திரத்தை விளக்குகின்ற சர்ச்சை செய்தான்;
எங்கும்இந்நாள் இளம்பெண்கள் ஆடிப் பாடி
இன்பளித்தல் இவனுழைப் பயனே காண்போம். 3

அலைகொள்ளும் மனக்குரங்கை அடங்கச் செய்து இங்(கு)
ஆனந்த மேலீட்டின் அமைதி கூட்டி
நிலையின்பத் தெய்வத்தை நினைக்கத் தூண்டும்
நீர்மையுள்ள சங்கீதம், நிருத்தம் என்னும்
கலையின்பம் தருகின்ற களிப்பை அல்லால்
மற்றெதையும் இன்பமெனக் கருத மாட்டேன்.
விலையென்று தனக்கெதையும் விரும்பிடாத
விழுமியனும் ஈகிருஷ்ணஐயன் மெய்யே. 4

அன்புவழி இன்னதென அறிந்த நல்லோன்;
அருள்சேர்ந்த செயல்களுக்கே ஆர்வ முள்ளோன்;
துன்பமுற நேர்ந்தவர்கள் எவர்க்கு ஆனாலும்
துணைபுரியத் துடிதுடிக்கும் தூய நெஞ்சன்;
இன்பமும் மாறாத இனிய சொல்லன்;
ஈகிருஷ்ண ஐயரெனும் எங்கள் நண்பன்;
தென்புடனே கலையறிவைத் திகழச் செய்யும்
திருப்பணிக்காய் நீடூழி வாழ வேண்டும். 5



## *297. கலைமன்றம் வாழ்க!*

**(இம்மன்றம் ஹௌராசிப்பூர் வாழும் தமிழர்களின் மன்றம்)**

எம்மொழி எதையும் வாழ்த்தி
எவரொடும் நட்பே பூண்டு
தம்மொழிக்(கு) ஆக்கம் தேடும்
தமிழ்மனப் பண்பைக் காத்தே
இம்மையும் மறுமை ஞானம்
இசைத்திடும் வள்ளு வன்பேர்
செம்மையிற் பூண்ட சிப்பூர்
கலைமன்றம் செழித்து வாழ்க. 1

ஒன்றாக உயர்ந்த ஞானம்
உயிர்க்கொலை புரிந்தி டாமை
நன்றாகும் அதன்பின் ஏதும்
நலங்கெடப் பொய்சொல் லாமை
என்றுஓதும் அறிவே நல்கும்
இணையிலா வள்ளு வன்பால்
குன்றாத பக்தி கூட்டும்
கலைமன்றம் குலவி வாழ்க. 2

நிலைகொண்டு மக்கள் எங்கும்
நிரந்தரம் குலவி வாழத்
தலைநின்ற அறிவே காட்டும்
தமிழன்னை பாதம் போற்றிக்
கலைமன்றச் சேவை செய்யக்
களிப்புடன் கடமை பூண்ட
தலம்ஒன்றும் ஹௌரா சிப்பூர்
தமிழன்பர் பலரும் வாழ்க. 3

## 298. தமிழ்நாடு வாழ்க!

வீரத்தில் நிறைவான
தமிழ்நாடு வாழ்க!
வித்தைக்கும் உறைவான
தமிழ்நாடு வாழ்க!
சூரத்தின் துணையான
தமிழ்நாடு வாழ்க!
துட்டர்க்குப் பணியாத
தமிழ்நாடு வாழ்க. 1

வாள்கொண்டு நேர்நின்று
போர்தந்த போதும்
வஞ்சங்கள் புரியாத
தமிழ்நாடு வாழ்க!
கோள்கொண்டு பொய்ச்சொல்லிக்
குற்றேவல் செய்யாக்
குணமிக்க சனமிக்க
தமிழ்நாடு வாழ்க! 2

கொல்லாமை உயர்வுஎன்னும்
தமிழ்நாடு வாழ்க!
கொடைவள்ளல் பலர்நின்ற
தமிழ்நாடு வாழ்க!
இல்லாமை அறியாத
தமிழ்நாடு வாழ்க!
இரவாமை அறம்என்னும்
தமிழ்நாடு வாழ்க! 3

படையாமல் உண்ணாத
தமிழ்நாடு வாழ்க!
பகையாரும் எண்ணாத
தமிழ்நாடு வாழ்க!



அடையாத துன்பங்கள்
அவைவந்த போதும்
அநியாயம் எண்ணாத
தமிழ்நாடு வாழ்க! 4

## 299. தீண்டாமையை விலக்குவதற்கு எதிர்ப்பா!

தீண்டாமை போவ(து) என்றால் தின்பதும் உண்ப(து) அல்ல
தீண்டாமை தீர்வ(து) என்றால் தீண்டியே ஆவ(து) அல்ல
தீண்டாமை விலக்க(ல்) என்றால் திருமணம் புரிவ(து) அல்ல
தீண்டாத(து) என்றோர் சாதி இல்லையெனத் தெளிவதேயாம். 1

தாழ்ந்தவர் உயர்வ(து) என்றால் உயர்ந்தவர் தாழ்வ(து) அல்ல
வீழ்ந்தவர் எழுவ(து) என்றால் நின்றவர் விழுவ(து) அல்ல
ஆழ்ந்தவர் உயிர்ப்ப(து) என்றால் மற்றுளோர் ஆழ்வ(து) அல்ல
வாழ்ந்திட வேண்டும் எல்லா மனிதரும் என்ப தேயாம். 2

அசுத்தர்கள் சுத்த மானால் மற்றவர்க்(கு) அசுத்தம் என்ன?
பசுத்தவர் சோறு தின்றால் பட்டினி பிறருக்(கு) ஆமோ?
கசிந்தவர் களிப்(பு) அடைந்தால் களித்தவர் அழுவ(து)
ஏனோ?
ஒசிந்தது இசைந்து விட்டால் நல்லது ஒடிந்து போமோ? 3

## 300. இந்தியக் காங்கிரஸ்

### (காங்கிரஸ் பொன்விழாவின்போது பாடியது)

இந்திய மக்களின் உரிமையைக் காப்பது
இந்தியக் காங்கிரசே
அந்தநம் காங்கிரஸ் ஐம்பது ஆண்டுகள்
அடைந்தது இன்றோடே 1

அன்னையின் விடுதலைக்(கு) ஐம்பது ஆண்டுகள்
அசரா(து) உழைத்ததனால்
பொன்முடி புனைந்(து)இனி புதுப்புது வழிகளில்
பொலிந்திடும் காங்கிரசே. 2

தாதாபாயும் ஏ.ஓ.ஹ்யூமும்
தம்பொடு வெடர்பானும்
மாதா இந்திய நாட்டுக்(கு) உதவிய
மலையரண் காங்கிரசே. 3

அன்றவர் ஊன்றிய ஆலினும் சிறுவிதை
அடர்ந்துயர் மரமாகி
இன்றுநம் நாட்டினில் யாவரும் நிழல்பெற
இலங்கிடும் காங்கிரசே. 4

ஏழை எளியவர்க்(கு) என்றும் உழைப்பதும்
இந்திய காங்கிரசே
கோழைத் தனமது நம்மைவிட்(டு) ஓடிடக்
கொடுத்தது காங்கிரசே. 5

நிலவளம் நீர்வளம் சிறந்தது உலகினில்
நிகர்சொல்ல முடியாத
பலவள நாட்டினில் பஞ்சம் ஏன்எனப்
பதைப்பது காங்கிரசே. 6

அறநெறி வகைகளும் அரசியல் முறைகளும்
அன்னியர்(கு) உதவினநாம்
பிறநெறி மயக்கினில் பேதுறல் ஏன்?எனப்
பேசிடும் காங்கிரசே. 7

வீரரும் தீரரும் விளங்கிய நாட்டினில்
வீணர்கள் ஆவோமோ!
ஓரமும் வஞ்சமும் ஒழிந்திட எழுந்ததும்
உழைப்பதும் காங்கிரசே. 8

ஜாதியும் மதங்களும் சமரசம் எய்திடத்
தரிப்பது காங்கிரசே.
நீதியும் சுகங்களும் யாவரும் அடைந்திட
நினைப்பது காங்கிரசே. 9



மங்களம் மங்களம் மங்களம் காங்கிரஸ்
மாபெரும் புகழ் வாழி
இங்குள யாவரும் எல்லா மனிதரும்
இன்புற வாழியவே! 10

### *301. உண்ணாவிரதம் உணர்த்திய உண்மை*

**(8.2.33இல் காந்தியடிகள் 'தீண்டாமை' ஒழிப்புக்காக உண்ணாவிரதம் மேற்கொண்டதை அறிந்து பாடியது)**

'காடுமலைக் குகைகளிலே திரிந்து வாழ்ந்து
கடுகளவும் தேகசுகம் கருதி டாமல்
தேடுஅரிய மெய்ஞ்ஞானக் கருணை வாழ்வின்
தெளிவடைந்த மகரிஷிகள் தெரிந்து சொன்ன
ஈடுஅறியா இந்துமதப் பெருமை தன்னை
ஈடழித்தார் தீண்டாமை புகுத்தி! என்று
ஊடல்வரத் தவங்கிடக்கத் துணிந்த காந்தி
உண்மையினை மேற்கொண்டார் உலகோர் அஞ்ச 1

காற்று, மழை வெயில்இவற்றின் கடுமை காணார்
கல்லணையும் புல்லணையும் கனிவாய்க் கொண்டு
சோற்றுருசி அறியாத தூய மோனத்
துறவிகளும் முனிவரரும் வாழ்ந்து சொன்ன
ஏற்றமிகும் இந்துமதப் பெருமை யெல்லாம்
இழித்துவிட்டோம் தீண்டாமை வழக்கால் என்று
சாற்றுஅரிய பெருங்குணத்தார் எங்கள் காந்தி
தவங்கிடக்க உண்ணாமை தாம்மேற் கொண்டார். 2

ஊனமிகும் உடல்சுகத்தை உதறித் தள்ளி
உலகநடைச் சுழல்களிலே உழன்றி டாமல்
மோனமிகும் 'சாந்தி' நெறி முறையில் நின்ற
முனிவர்களின் அனுபவமே முடிவாய்க் கண்ட
ஞானமிகும் இந்துமதம் இந்த நாளில்
நகைப்புக்கே இடமாகி நலிந்த(து) என்று

மானமிகக் காந்தி செய்யும் தவத்தி னாலே
இந்நாட்டின் தீண்டாமை மறைந்து போகும். 3

சத்தியமே கடவுள் என்ற உண்மை கண்ட
சாந்தநெறி நூல்கள்மிக்க தமிழா! சொல்வாய்
உத்தமராய்த் தமிழ்நாட்டுக் கோயில் எல்லாம்
உள்ளிருந்து பூசைகொள்ளும் மேலோர் என்னும்
சித்தர்களாம் அறுபத்து மூவர் தம்முள்
திருமொழியார் பனிரண்டு ஆழ்வார் தம்முள்
எத்தனைபேர் இழிகுலத்தார்! எண்ணிப் பார்க்கின்
இன்னுமிங்குத் தீண்டாமை இருக்க லாமா? 4

## *302. காங்கிரஸ் பொன் விழா*

### கும்மி

தேர்அல்ல கார்த்திகைத் தீபம்அல்ல - அந்தத்
தீபாவ ளிதானும் இன்றுஅல்லவே
ஊர்எல்லாம் என்ன வெளிச்சம்என் பீர்இந்த
ஒப்பற்ற கொண்டாட்டம் ஏதுக்கென்பீர். 1

காங்கிரஸ் என்றுஒரு சங்கமுண்டு - அது
காதிற் படாதவர் யாருமில்லை
ஈங்கதற்(கு) ஐம்பதாம் ஆண்டுகள் ஆனதால்
இந்திய மக்களின் கொண்டாட்டம். 2

தங்கி இருக்க இடம்கொடுத்தோம் - அதைத்
தங்கள் இடமெனச் செய்துகொண்டார்
இங்(கு)இருந் தேயவர் மெல்லமெல்ல - இந்த
இந்திய நாட்டை அடிமைகொண்டார். 3

அந்த அடிமைத் தனம்போக - நம்
அன்னையும் ஆட்சியும் மீட்சிபெற
இந்தத் தினம்வரை இந்தியர் மானத்தை
ஏந்தி உழைப்பது காங்கிரசே. 4

கெஞ்சிக்கெஞ் சிப்பல நாள்கேட்டும் - அதைக்
கேட்பவர் யாரும்இல் லாததனால்



அஞ்சிக்கை யாவையும் விட்டொழிய - நமக்(கு)
ஆண்மை கொடுத்தது காங்கிரசே. 5

சத்தியம் என்ற கொடிபிடித்தே - உயிர்
சாந்தத் தியாகப் படைதொடுத்தே
உத்தமர் காந்தி உரைப்படி காங்கிரஸ்
உலகம் வியந்திடும் போர்நடத்தி, 6

அடிமைக் குணத்தை அழித்து விடுதலை
ஆனந்தத் தில்நமக்(கு) ஆசை தந்து
கொடுமை சகித்திடும் அன்பின் வலிமை
கொடுத்ததும் நம்முடைக் காங்கிரசே. 7

ஒளியறி யாத விழிபோலும் - ஓர்
ஓசைப்ப டாத செவிபோலும்
களியறி யாதநம் அடிமையை மாற்றிக்
களிப்புறச் செய்திடும் காங்கிரசே. 8

'காங்கிரஸ்' என்பது இந்திய நாட்டின்
கண்ணியம், கவசம், கேடயமாம்,
காங்கிரஸ் தன்னை இந்தியர் தம்இரு
கண்ணின் மணியெனக் காத்திடுவோம். 9

பொன்முடி சூட்டி வணங்கிடுவோம் - இன்னும்
புத்துணர் வோடு பணிபுரிவோம்
நன்மைகள் யாவையும் காங்கிர சால்வரும்
நாடு செழித்திட நாம் வாழ்வோம். 10

## *303. தமிழரசுக் கழகத்துக்கு வாழ்த்து*

**(திருத்தணிகை தமிழ்நாட்டவர்க்கு மீண்டபோது மகிழ்ந்து பாடியது)**

தமிழர்களின் தனித்தெய்வம் முருகன் கோயில்
தலமாகும் திருத்தணியைத் தமிழ்நாட் டார்கள்
அமைதிகெட ஆந்திரத்தில் சேர்த்தார் என்ற
அநியாயம் அதைஎதிர்த்தே அறப்போர் செய்து
நமதுடைமை திருத்தணியை நமக்கே மீட்ட
நற்பணியால் பெரும்புகழுக் குரிய ராகும்

தமிழரசுக் கழகத்துத் தொண்ட ரோடும்
தலைவர்சிவ ஞானமவர் தழைத்து வாழ்க. 1

ஓலமிடும் கடலலைசேர் குமரி யோடும்
ஒட்டவைத்துத் தமிழ்நாஞ்சில் நாட்டை மீட்டோம்.
வேலவனின் திருத்தணியை மீட்டோம் இன்னும்
வேங்கடவன் திருப்பதியும் மீட்டோம் என்று
காலமெல்லாம் முழங்கிவரும் தமிழரசுக்
கழகத்தின் விருப்பம்கை கூடு மானால்
ஞாலமெல்லாம் வியக்கும்ஒரு வெற்றி காண்போம்;
நம்முடைய ஞாயபலம் சிறக்க வாழ்வோம். 2

"அறம்மிகுந்த தமிழ்மொழியின் சிறப்பைப் போற்றி
அதுவழங்கும் திருநாட்டின் நலத்தைப் பேணி
மறம்கடந்த தமிழினத்தின் மாண்பைக் காத்து
மாநிலத்தில் யாவரொடும் மருவி வாழத்
திறமளிக்கும் சன்மார்க்கம் திசைதப் பாமல்
தீமைகளைத் தியாகத்தால் வெல்வோம்" என்னும்
அறஞ்சிறந்த கொள்கைகளே தாங்கி நிற்கும்
தமிழரசுக் கழகத்தின் தனிமை வெல்க. 3

## *304. கன்னித் தமிழ்*

குமரிமலர் கொண்டு வந்தனள் - பல
கொத்துக் கொத்தாய் இன்பம் தந்தனள்
அமரநிலை கொண்டு துள்ளுவேன் - அந்த
ஆனந்தம் என்னென்று சொல்லுவேன்! 1

பொன்னும் மணியும் குறைந்தனள் - என்ற
போதும் அழகு நிறைந்தனள்
சின்னஞ் சிறிய சிரிப்பினாள் - என்றன்
சிந்தையில் இன்பம் நிரப்பினாள். 2



வட்ட வடிவத் திலகமும் - புது
வண்ணம் கொடுத்த மலர்களும்
பட்டு சரிகையும் இன்றியும் - தங்கப்
பாவை எனும்படி நின்றனள். 3

கன்னி அழகினைக் கண்டுநான் - சொக்கிக்
கட்டி அணைத்திட அண்டினேன்
அன்னையெனக் கண்டு நாணினேன் - அவள்
அடியில் விழுந்துடல் கோணினேன். 4

'அன்னிய எண்ணம் நிறைந்ததால் - பெற்ற
அன்னையை முற்றும் மறந்துநான்
என்னமதி கெட்டுப் போயினேன்' என்று
ஏங்கித் தவித்திடல் ஆயினேன். 5

தேனினும் தித்திக்கும் சொல்லினால் - என்னைத்
தேற்றி மகன்எனப் புல்லினாள்;
வானில் உயர்ந்து பறந்தவன் - போல்
வந்த வருத்தம் மறந்தனன். 6

பாமர சொற்களில் பேசினாள் - வெறும்
பண்டித வார்த்தைகள் கூசினாள்;
ஏமுறும் ஏழையை வாழ்த்தினாள் - செல்வர்
இந்திர மோகத்தைத் தாழ்த்தினாள். 7

தெய்வத் தமிழ்மொழிப் பெண்ணவள் - இந்தத்
தேசப் பெருமைக்குக் கண்ணவள்;
வையம் முழுதையும் வாழ்த்துவாள் - பிறர்
வாழ்த்திடத் தன்சுகம் தாழ்த்துவாள். 8

பற்பல ஆயிரம் ஆண்டுகள் - இந்தப்
பாரில் இருந்தறம் பூண்டவள்;
அற்புதம் இன்னமும் கன்னியே! - புது
அழகுத ரும்தமிழ் அன்னையே. 9

### *305. வாழ்க! வாழ்க!*

வாழ்க வாழ்க உலகெலாம்
வாழ்க எங்கள் தேசமும்
வாழ்க எங்கள் தமிழகம்
வாழ்க எங்கள் மனையறம்
வாழ்க மேழிச் செல்வமே
வளர்க நாட்டுக் கைத்தொழில்
வாழ்க எங்கள் வாணிபம்
வாழ்க நல்ல அரசியல். 1

அன்பு கொண்டு யாவரும்
அச்சம் இன்றி வாழ்கவே
துன்ப மான அடிமையின்
துக்கம் யாவும் நீங்கியே
இன்ப மான யாவுமெய்தி
இந்த நாட்டில் எங்கணும்
தென்பி னோடு தெளிவு பெற்றுத்
தேவர் போற்ற வாழ்கவே. 2

### 306. HEALTH IS WEALTH

Health is Wealth: mere
Wealth is Filth

Have this, boy! yow enjoy!
Chafe this, boy! then annoy!
Hark it – Mark it take it to heart:
Own it Boon it you are the sort. 1

None but those who care these
Can find ease or that peace
Know it, do it, never too late
Throw it, push it, Life yow hate. 2



### 307. HEAVEN'S GATE

(Different Metre)

Oh! the gate of Heaven is strong
Opens only for the strong
Ah! the weaklings though they throng
Angels throw them out as wrong. 1

Aye! the gate of Heaven is meek.
Yet it opens not for the weak.
Sure it closes; saints do speak
Wealth as passport if yow seek. 2

Healthy body means one thing;
Heathy thoughts to them do cling;
'Health is wealth; so you sing;
Heaven gates then open fling. 3

குறிப்புரை:- *1925இல் அரசியலார் நடத்திய சுகாதார வாரக் கொண்டாட்டத்தில் தலைமை வகித்த தமிழறியாத ஆங்கிலேய (ஜில்லா கலெக்டர்) மாவட்ட ஆட்சியாளர் மகிழுமாறு மாணவர்கள் இசையோடு பாடுவதற்காக இயற்றிய ஆங்கிலப் பாடல்கள்.*

★★★

## பாடல் முதற்குறிப்பு அகராதி

(எண்கள் பாட்டு எண்களைக் குறிக்கும்)


| செய்யுள் | பாட்டு எண் |
|---|---|
| **அ** | |
| அசதியைக் கிள்ளி | 30 |
| அச்ச மிகும் | 26 |
| அச்சமில்லாமை | 149 |
| அச்சம் எனும் பிணி | 120 |
| அச்சம் விட்டது | 197 |
| அச்சிட்டுப் புத்தகத்தில் | 88 |
| அஞ்சாத நிலையே | 147 |
| அடிமை கொடுத்த | 72 |
| அடிமைத் தனத்தை | 261 |
| அடிமையின் அச்சம் | 246 |
| அடிமை விலங்குகள் | 162 |
| அதிகாரம் செலுத்தி | 70 |
| அந்தமில் இறைவ | 104 |
| அமரரும் அறிந் | 274 |
| அமரனாகி எம்மை | 256 |
| அமிழ்த மென்று | 33 |
| அமிழ்தம் எங்கள் | 17 |
| அமிழ்த மூறும் | 133 |
| அரக்கரின் கதை | 114 |
| அரசியல்சுதந் | 109 |
| அறிவுக் கேற்ற | 207 |
| அறிவே மக்களின் | 151 |
| அன்பினுக் கன்பாய் | 3 |
| அன்பினை விட்டொரு | 118 |
| அன்பின் உருவம் | 243 |
| அன்பு என்ற ஒன்றை | 152 |
| அன்பும் ஆர்வமும் | 200 |
| அன்னியர்கள் நமை | 219 |

| செய்யுள் | பாட்டு எண் |
|---|---|
| **ஆ** | |
| ஆங்கில அரசியல் | 180 |
| ஆடிப் பதினெட்டு | 284 |
| ஆண்மை உருக்கொண்ட | 41 |
| ஆண்மை மறந்த | 77 |
| ஆதி சுதந்தரத்தை | 198 |
| ஆயுத பலத்தை | 224 |
| ஆயுதம் தாங்கி | 156 |
| ஆராரே ஆராரிரோ | 204 |
| ஆற்றல்கள் அனைத்தும் | 15 |
| **இ** | |
| இசை எனல் | 28 |
| இசை மலிந்த | 206 |
| இடியது விழுந்த | 43 |
| இத்தரையில் மானிடராய் | 295 |
| இத்தனை நாள் | 238 |
| இந்தியத்தாய்க் குடியரசு | 173 |
| இந்திய நாடிது | 211 |
| இந்திய நாடு | 252 |
| இந்திய நாட்டினில் | 108 |
| இந்திய நாட்டில் இணை | 234 |
| இந்திய நாட்டின் சுதந்தர | 172 |
| இந்திய மக்களின் உரிமை | 300 |
| இந்நிலத் துயரெல்லாம் | 98 |
| இப்போது நூறாண்டு | 182 |
| இமயம் முதல் குமரி | 201 |
| இல்லாத காந்திமகான் | 55 |
| இல்லாத கால மில்லை | 2 |
| இல்லையென்று | 4 |





| செய்யுள் | பாட்டு எண் |
|---|---|
| இளந்தமிழா | 20 |
| இறுகிக் கிடக்கும் | 103 |
| **உ** | |
| உடல் பொருள் | 69 |
| உணவும் உடையும் | 116 |
| உயிரைப் பணையம் | 107 |
| உலகப் போக்கை | 142 |
| உலகினிற் சிறந்த | 208 |
| உலகெலாம் படைத்து | 1 |
| உலகெலாம் காக்கும் | 14 |
| உவமை தனக்கென | 117 |
| உழுது பயிரிடா | 73 |
| உள்ளம் உருகுது | 245 |
| உன்னும் பொழுதி | 83 |
| **எ** | |
| எச்சரிக்கை | 263 |
| எண்ணரிய தியாகிகளை | 220 |
| எண்ணரிய நெடுங்காலம் | 16 |
| எண்ணி எண்ணித் | 36 |
| எண்ணிலா ஆண்டு | 280 |
| எது உனக்கு | 189 |
| எத்திசையில் | 227 |
| எந்தக் கடவுளை | 137 |
| எந்தத்தேசம் எந்த | 230 |
| எம்மொழி எதையும் | 297 |
| எல்லா மதங்களுக்கும் | 101 |
| எல்லா மதத்தினரும் | 39 |
| என் மகனே | 136 |
| **ஏ** | |
| ஏ! ராம | 150 |
| ஏட்டளவு இருந்த | 257 |
| ஏர் தரும் விளைபொருள் | 164 |

| செய்யுள் | பாட்டு எண் |
|---|---|
| ஏழைகள் குடிசை | 111 |
| ஏழைகள் நூற்றது | 132 |
| ஏனைய நாடுகள் | 199 |
| **ஐ** | |
| ஐயமில்லை | 289 |
| **ஒ** | |
| ஒப்புடன் உண்மை | 240 |
| ஒருவருக்கும் | 62 |
| ஒன்றாக நல்ல குணம் | 276 |
| ஒன்றாய் நல்லது கொல் | 84 |
| **ஓ** | |
| ஓட்டடா! ஓட்டடா! | 187 |
| ஓம் எனுமப் | 293 |
| **க** | |
| கடமை உயர்ந்தவனே | 112 |
| கடன் பட்டே | 141 |
| கடியும் புலி | 78 |
| கண்ணன் உறவை | 9 |
| கண்ணன் என்ற | 8 |
| கண்ணன் பக்தி | 7 |
| கண்ணன் வருகிற | 10 |
| கண்ணொளியின்றி | 215 |
| கதிரொளிவந்தது | 228 |
| கதைகளில் கேட்டது | 251 |
| கத்தியவார் | 174 |
| கத்தியின்றி | 210 |
| கம்பன் திருநாள் | 175 |
| கரையறியா | 37 |
| கருணையின் பெருமை | 224 |
| கலைமகள் கண்ணீர் | 47 |
| கல்லாலும் செம்பாலும் | 254 |
| கல்வினுட் சிறு | 194 |

| செய்யுள் | பாட்டு எண் |
|---|---|
| கல்வி நிறைந்த | 102 |
| கல்வி நிறைந்தும் | 292 |
| கல்விபெறும் | 137 |
| கவிபாடிக் கவிபாடி | 275 |
| கவிபாடிப் பெருமை | 270 |
| கள்ளுக்கடை | 131 |
| கற்பனை மிகுந்ததும் | 286 |
| கற்புடைப் பெண் | 229 |
| **கா** | |
| காடுமலைக் குகைகளிலே திரிந்து | 301 |
| காட்டில் தனித்திருந்து | 89 |
| காந்திக்கு நிகர் | 239 |
| காந்தி நாமம் வாழ்க | 255 |
| காந்தியின் சரிதம் | 183 |
| காந்தி யெனும் பேரொளியே | 253 |
| காந்தியைப்போல் அதிகாலை | 269 |
| காந்தியைப் போல் தலைவர் | 122 |
| காந்தியை மறக்காதே | 268 |
| காலக்கதி | 213 |
| **கு** | |
| குடிப்பதைத் தடுப்பதே | 193 |
| குமரி மலர் | 304 |
| கும்மியடி பெண்கள் | 181 |
| கும்மியடி பெண்ணே | 76 |
| **கூ** | |
| கூட்டுறவில் சேருங்கள் | 190 |
| கூட்டுற வில்லா | 191 |

| செய்யுள் | பாட்டு எண் |
|---|---|
| **கை** | |
| கைத்தொழில் ஒன்றை | 143 |
| கைத்தொழில்களை | 145 |
| **கொ** | |
| கொஞ்சும் மொழிகள் | 126 |
| கொடி வணக்கமது | 235 |
| கொல்லா திருப்பது | 264 |
| கொல்லா விரதமும் | 99 |
| **கோ** | |
| கோபத்தை அடக்கவும் | 110 |
| கோபமும் கொதிப்பும் | 24 |
| கோவா விளங்க | 179 |
| **ச** | |
| சக்தி தரும் | 168 |
| சங்கொலி | 233 |
| சண்டமாருதம் | 279 |
| சத்தியத்தின் ஓயாத | 259 |
| சத்தியம் தெய்வம் | 100 |
| சத்தியம் நிலைக்கும் | 232 |
| சத்திய விரதம் | 144 |
| சமனிலாத | 237 |
| சலியாத சேவையும் | 57 |
| **சா** | |
| சாதிமதச் சழக்குகளைக் கடந்து | 61 |
| சாந்த காந்தி | 271 |
| சாந்தத்தின் சாகரம் | 91 |
| சாந்தத்தின் பலன் | 119 |
| சாந்தவழி சத்தியத்தில் | 290 |
| சாந்தியே உருவாய் | 248 |

| செய்யுள் | பாட்டு எண் |
|---|---|
| **சி** | |
| சிதம்பரம் பிள்ளை | 49 |
| சித்தர்களும் | 40 |
| சித்திரைமாதத்தில் | 157 |
| சிறை கிடந்து | 129 |
| **சீ** | |
| சீர்சிறந்த | 34 |
| **சு** | |
| சுதந்தரத் திருநாள் | 216 |
| சுதந்தரத் தேவி | 217 |
| சுதந்தரம் அடைந்தோம் | 218 |
| சுதந்தரம் இல்லாமல் | 125 |
| சுதந்தரம் தருகிற | 221 |
| சுப்பிரமணிய பாரதிக்கு | 52 |
| சுப்பிரமண்ய பாரதியை | 53 |
| **சூ** | |
| சூரியன் வருவது | 5 |
| **செ** | |
| செம்பொருளும் | 176 |
| சென்னிமலை | 294 |
| **சோ** | |
| சோர்ந்திடும் பொழு | 106 |
| **ஞா** | |
| ஞானமென்று | 260 |
| **த** | |
| தந்தன னிவ்வரம் | 281 |
| தமிழர்களின் | 303 |
| தமிழன் என்றோர் | 19 |
| தமிழன் குரல் | 21 |
| தமிழன்னை திருப்பணி | 27 |
| தமிழா! உனக்கிது | 22 |

| செய்யுள் | பாட்டு எண் |
|---|---|
| தமிழென்று தருகின்ற | 18 |
| தமிழ்நாட்டின் தனிப்பெரும் | 160 |
| தமிழ் நாட்டின் மனைதோறும் | 134 |
| தமிழ் மொழியின் | 46 |
| தமிழ் மொழி வளர்த்த | 228 |
| தன்குஞ்சு | 29 |
| தன்நாட்டுத் தாய் | 32 |
| தன் பலம் | 113 |
| தன்னுடைப் பலமும் | 291 |
| **தா** | |
| தாயென அன்பு | 140 |
| தாயை யிகழ்ந்தவன் | 130 |
| **தி** | |
| திக்குத் தெரியவில்லை | 278 |
| **தீ** | |
| தீண்டாமை என்கிற | 186 |
| தீண்டாமை போவதென்றால் | 299 |
| தீபாவளி எனும் | 171 |
| தீபாவளிப் பெரிய | 170 |
| **து** | |
| துறந்தவர் மிகுந்த | 250 |
| துறவிக்கு மட்டுமா | 154 |
| துன்பம் எனும் | 146 |
| **தூ** | |
| தூய ஞானதேவன் | 42 |
| **தெ** | |
| தெய்வத்தனம் | 196 |
| தென்றல் குலவி | 285 |

| செய்யுள் | பாட்டு எண் |
|---|---|
| **தே** | |
| தேச பக்தர் | 231 |
| தேசிக விநாயகத்தின் | 48 |
| தேசிய வாரத்தை | 222 |
| தேரல்ல கார்த்திகைத் | 302 |
| **தொ** | |
| தொண்டு செய்யக் | 192 |
| **ந** | |
| நம்நாடு செழிக்க | 212 |
| **நா** | |
| நாகரீக மென்று | 158 |
| நாட்டைத் துற | 125 |
| நாட்டை மறந்தனை | 214 |
| **நி** | |
| நித்திய அறங்கள் | 59 |
| நிலவளம் நீர்வளம் நிறைந்தது | 67 |
| நிலைபெற்ற | 25 |
| நினைத்திடும் பொழுதே | 96 |
| நினைவுறும் போதே | 94 |
| **நீ** | |
| நீண்டன கைகள் | 283 |
| நீறு பூசுவோர்களும் | 241 |
| **நூ** | |
| நூலுரை கல்வி | 86 |
| நூறு என்று மனிதர்க்கு | 6 |
| **நே** | |
| நேருவை நினைத்த | 64 |
| நேற்றுதித்த | 44 |
| **நோ** | |
| நோய்களைத் தடுத்திட | 65 |
| நோய்கள் மிகு | 75 |

| செய்யுள் | பாட்டு எண் |
|---|---|
| **ப** | |
| பகவத் கீதையை | 272 |
| பசியால் பாடின | 68 |
| பஞ்சக் கொடுமை | 79 |
| பஞ்சமும் பட்டினியும் | 97 |
| படிப்பெனும் கடலை | 45 |
| பண்டிதர் என்றால் | 58 |
| பண்டைக் கதை | 80 |
| பயிரைக்காக்கும் | 139 |
| பரத நாட்டின் | 127 |
| பரதேசி என்று | 265 |
| பழையன கழிய | 169 |
| பள்ளியில் மாணவனாய் | 60 |
| **பா** | |
| பாட்டாளி மக்களது | 184 |
| பாபம் குறையுமென்று | 124 |
| பாரதி எனும் பெயரை | 54 |
| பாரதி மெய்ப் | 121 |
| பாஷைகளெல்லாம் | 31 |
| **பி** | |
| பிறப்பிலும் பெரியவர் | 242 |
| பிறருடைத் துன்பம் | 128 |
| **பு** | |
| புகுந்தது நம்ப வாழ்வில் | 159 |
| புரட்சி வேண்டும் | 225 |
| **பூ** | |
| பூமிதானம் செய்வதே | 185 |
| **பெ** | |
| பெருந்தவத்தோர் | 95 |
| பெற்றவளை இகழ் | 74 |
| பெற்றிட விரும்பும் | 202 |





| செய்யுள் | பாட்டு எண் |
|---|---|
| பெற்றிடும் செல்வ | 195 |
| பெற்றெடுத்த தமிழ் | 51 |
| **பே** | |
| பேச்சழிந்து போனால் | 148 |
| பேச்செல்லாம் தமிழ் | 56 |
| **பொ** | |
| பொங்கல் எனும் | 161 |
| பொங்குக பொங்கல் பொங்குகவே பொங்குக | 163 |
| பொங்குக பொங்கல் பொங்குகவே புதுவளம் | 165 |
| பொறுக்கி எடுத்த | 90 |
| **போ** | |
| போகம் மிக்க | 153 |
| **ம** | |
| மடங்கிய பயிர் | 273 |
| மடமையதோ | 50 |
| மதபேத மாச்சரியம் | 249 |
| மனிதப் பிறவி | 82 |
| மனிதர் யாவரும் | 166 |
| மன்னவன் என்ற | 203 |
| மன்னவன் நானே | 226 |
| மன்னுயிரைப் போர் | 63 |
| **மா** | |
| மானிடப் பிறவி | 105 |
| மான் என அவளை | 282 |
| மான்சேர மயிலாட | 287 |
| **மு** | |
| முத்தமிழும் தித்திக்க | 35 |
| முத்தமிழ்ப் பண்பெனும் | 167 |
| முருகனென்ற சிறுவன் | 12 |

| செய்யுள் | பாட்டு எண் |
|---|---|
| முருகனென்ற பெயர் | 13 |
| முன்னையோர் நமது | 38 |
| **மூ** | |
| மூப்பெனும் காந்தி | 87 |
| **மோ** | |
| மோகம் வெறி | 92 |
| மோட்டார் ஓட்டுகிற | 138 |
| **ரா** | |
| ராகமும் தாளமும் | 93 |
| **வ** | |
| வலைவீச ஆசைதரும் | 23 |
| வள்ளுவர் வாழ்க்கை | 71 |
| வனமகோத்ஸவ | 177 |
| **வா** | |
| வா வா! முருகா | 11 |
| வாழி கோவிந்தன் | 178 |
| வாழ்க வாழ்க உலகெலாம் | 305 |
| வானமும் வையமும் | 81 |
| வானவெளி ஆராய்ச்சி | 205 |
| வானிருந்து ஒருதேவன் | 266 |
| **வி** | |
| விடிதல் என்று | 277 |
| விடியும் முன் விழி | 66 |
| விடுதலைப் போர் | 296 |
| விட்டது சனியன் | 188 |
| விந்தையில் விந்தை | 258 |
| வியப்புற இன்பம் | 209 |
| **வீ** | |
| வீரகேசரி என்ன | 223 |
| வீரத்தில் நிறைவான | 298 |

| செய்யுள் | பாட்டு எண் |
|---|---|
| **வெ** | |
| வெட்டி வெட்டிக்கொல் | 155 |
| **வே** | |
| வேதமும் சாத்திரமும் | 115 |
| **ஜ** | |
| ஜயஜய காந்தியின் திருப்புகழ் பாடி | 247 |
| ஜயஜய காந்தியின் திருப்புகழ் பாடு | 262 |
| **ஜா** | |
| ஜாதியில் எவரையும் | 85 |
| **ஜே** | |
| ஜேய் ஹிந்த் என்கிற | 236 |


★ ★



## பாரதி வழியில்...

நாரத கீதமென்ன
நயந்திகழ் பாடலாலே
பாரத நாட்டை என்றும்
பணிந்திடும் சுப்ரமண்ய
பாரதி பாட்டைக் கண்ட
பழைய இத் தமிழர்நாட்டில்
'யாரது' என்று கேட்க
யானுமிக் கவிகள்சொன்னேன்

வெ. இராமலிங்கம்

★★★

நாமக்கல் கவிஞர் ஓர் அரிய கலைஞர்; தலை சிறந்த தேசபக்தர்; தேசத்துக்காகத் தியாகம் பல செய்தவர்; சிறைவாசம் புரிந்தவர்; ஒழுக்கத்தில் உயர்ந்தவர்; நண்பர்களின் அன்பைக் கவர்ந்தவர்; கள்ளங்கபடம் அற்ற உள்ளத்தினர்; புகழுக்கும் பொருளுக்கும் ஆசைப்படாதவர்; ஆடம்பரத்தை அடியோடு வெறுத்தவர்; "ஆடு ராட்டே சுழன்று ஆடு ராட்டே!" என்று பாடித் தமிழ் நாட்டையே சுழன்று ஆடச் செய்தவர்.

1953ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி முதல் கூட்டத்தில் நாமக்கல் கவிஞரை நேருவுக்கு அறிமுகப்படுத்தியபோது:

— டாக்டர் எஸ். இராதாகிருட்டிணன்

**பூம்புகார் பதிப்பகம்**
63, பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.
தொலைபேசி : 5267543